மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் தெரிவித்தது, தாசில்தார் அவர்களிடம் தெரிவித்ததையெல்லாம் ஏன் சொல்கிறீர்கள்.*

திரு. A.K. செல்வராஜ்: *அப்போதுதான் இதற்கு விடை கிடைக்கும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் என்ன வேண்டுமென்று கேளுங்கள்.*

திரு. A.K. செல்வராஜ்: *அதைத்தான் சொல்ல வருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மேட்டுப்பாளையத்திலிருந்து வருவதற்கு நேரமாகும்.*

2023 அக்டோபர் 11]

திரு. A.K. செல்வராஜ்: *மாவட்ட ஆட்சித் தலைவர், குடிநீர் வடிகால் வாரியத் துறையின் அதிகாரிகள், பொதுப் பணித் துறை அதிகாரிகள் ஆகியோரை அழைத்து வந்து, நேரடியாக ஆய்வு செய்து, அந்த* intake well*-ஐ வேறு இடத்தில் மாற்றித் தருவதாகக் கூறியிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்படி* intake well*-ஐ மேட்டுப்பாளையத்தின் மேற்பகுதியில் உள்ள விளாம்பரத்தூர் பகுதியில் அமைக்க நிதி ஒதுக்கித் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை, ஏற்கெனவே ஒன்றிய அரசினுடைய தரக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் ஆய்வு செய்து, குடிநீர், மக்கள் அருந்துவதற்கு உரிய தரத்துடன் இருக்கிறது என்று சொல்லி இருக்கிற காரணத்தால், அதை மாற்றத் தேவையில்லை என்று அதிகாரிகள் பதில் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இன்றைக்கு தண்ணீர் மிகவும் மாசடைந்துள்ளது என்று சொல்லி இருக்கிற காரணத்தால், மீண்டும் அதிகாரிகளை அனுப்புகிறோம். இல்லையென்றால் நாங்களே நேரடியாக வந்து பார்த்து அப்படி மாற்றித்தான் அமைத்துத்தர வேண்டுமென்றால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று, அதற்குரிய ஏற்பாடுகளை நிச்சயமாகச் செய்யலாம். ஏனென்றால் மக்களுக்கு குடிப்பதற்குத் தண்ணீர் உகந்ததாக இருக்க வேண்டும். அதைச் செய்யலாம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. A.K. செல்வராஜ் அவர்கள்.*

திரு. A.K. செல்வராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையம் தொகுதியில், கூடலூர் நகராட்சி புதிதாக உருவாக்கப்பட்டிருக்கிற நகராட்சி. இந்தக் கூடலூர் நகராட்சிக்கு, பில்லூர் குடிநீர் திட்டத்தின் மூலமாக குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. நகராட்சியாகத் தரம் உயர்த்தப்பட்ட காரணத்தாலே அப்பகுதியிலே இருக்கக்கூடிய மக்களுக்கு 110 லிட்டர் குடிநீர் வழங்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆக, மேட்டுப்பாளையம் நகராட்சி, பெரியநாயக்கன்பாளையம்*

[*2023 அக்டோபர் 11*

பேரூராட்சி, பிலிச்சி ஊராட்சி, நாயக்கன்பாளையம் ஊராட்சி அதேபோல, வீரபாண்டி பேரூராட்சி ஆகிய பகுதிகளுக்கு பில்லூர் குடிநீர் திட்டத்தின் மூலமாக வழங்கக்கூடிய குடிநீர் அளவு மிகக் குறைவாக இருக்கிறது. ஆகவே, இப்பகுதிகளை இணைத்து ஒரு புதிய குடிநீர் திட்டம் வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பில்லூர்-1, பில்லூர்-2 சிறுவாணி ஆகிய நீர் ஆதாரங்களிலிருந்து ஒன்றுபட்ட கோவை மாவட்டத்தினுடைய அனைத்துத் தொகுதிகளுக்கும் தினந்தோறும் 304* MLD *தண்ணீர் கொடுக்கப்பட்டு வருகிறது. இதிலே 191* MLD *மாநகராட்சிக்கு மட்டும் வழங்கப்பட்டு வருகிறது. வழியில் வருகிற கிராமங்களுக்கு 113* MLD *கொடுக்கப்பட்டு வருகிறது. இன்றுவரை தண்ணீர் வழங்கப்பட்டு வருகிற அளவு அதுதான். ஆனால், இன்னும் 20 நாட்களுக்குள்ளாக பில்லூர்-3 ஆவது திட்டம் துவங்கப்படவுள்ளது. அதன்மூலம் 178* MLD *புதிதாக வர இருக்கிறது. ஆனால், கோவை மாநகராட்சிக்குத் தேவையான அளவு, இன்னும் ஒரு 155* MLD*; அதுவும் 24X7 தண்ணீர் கொடுக்கக்கூடிய அளவுக்கு இருக்கிறது. மீதம் இருக்கக்கூடிய 23* MLD *தண்ணீரை அருகில் இருக்கின்ற பேரூராட்சி, நகராட்சிகளுக்கு கொடுப்பதற்காக திட்டம் தீட்டப்பட்டு இருக்கின்றது. மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு ஒப்புதல் கேட்டு அனுப்பி அனுமதியைப் பெற்று, அந்தப் பேரூராட்சி, நகராட்சிகளுக்கு தண்ணீர் வழங்கும் பணி துவங்கப்பட இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே, மேட்டுப்பாளையம், காரமடைப் பகுதியில் தண்ணீர் பற்றாக்குறை இருக்கிறது என்பது தெரியும். எனவே, அங்கு தண்ணீர் கொண்டுவர தேவையான அனைத்து ஏற்பாடுகளும் நிச்சயமாக செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம் அவர்கள்.*

2023 அக்டோபர் 11]

திரு. எஸ். சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாதவரம் தொகுதியில், புழல் ஏரியும், சோழவரம் ஏரியும் உருவாகி சென்னை மாநகருக்குக் குடிநீர் ஆதாரமாகத் திகழ்ந்துகொண்டு இருக்கின்றன. அதிலே, 4 TMC தண்ணீர் தேக்கி வைக்கப்படுகின்றது. ஆனால், பெருகிவரும் மக்கள் தொகையின் காரணமாக அங்கே வசிக்கின்ற மக்களுக்கு போதுமான அளவு, பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்கப்பெறவில்லை. ஆகவே, ஒரு கூட்டுக் குடிநீர் திட்டத்தை உருவாக்கித் தர முடியுமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டத்திலிருந்துதான் 3, 4 ஏரிகளிலிருந்து முழுமையாக சென்னைக்குக் குடிநீர் எடுத்துக்கொண்டு இருக்கிறோம். ஆனால், அங்கு சென்றபோது, திருவள்ளூர் மாவட்ட மக்கள், 'இங்கிருந்து குடிநீர் செல்கிறது. ஆகவே, எங்களுக்குக் கூட்டுக் குடிநீர் திட்டம் தேவை' என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்குத்தான் நேற்று பதில் சொல்கிறபோதே சொன்னேன். இன்னும் 7, 8 மாதங்களில் செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து கூடுதலாக 250 MLD எடுக்கக்கூடிய வாய்ப்பு கிடைக்கும். அப்படி கிடைக்கின்றபோது, ஒரு பகுதி pipeline மட்டும்தான் போட வேண்டியிருக்கும். புது குடிநீர் திட்டம் தேவையில்லை. Pipeline connection கொடுத்தாலே திருவள்ளூர் மாவட்டத்தில் இருக்கக்கூடிய பெரும்பாலான பகுதிகளுக்கு, தண்ணீர் வசதி கிடைக்கும். அதற்கான ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. அப்துல் சமது அவர்கள்.

முற்பகல் 10–20

திரு. ப. அப்துல் சமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின்கீழ் எனது கோரிக்கையை ஏற்று, என்னுடைய மணப்பாறை தொகுதிக்கு சாலைகள், மருத்துவமனை கட்டடம், மழைநீர் வடிகால் உள்ளிட்ட பணிகளுக்காக 50 கோடி ரூபாய் நிதி

[*2023 அக்டோபர் 11*

ஒதுக்கியதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய மணப்பாறை தொகுதி, காவிரி பாயக்கூடிய திருச்சி மாவட்டத்தில் இருந்தாலும் வெள்ளப்பெருக்கு காலத்தில்கூட காவிரி நீர் வராத ஒரு மேட்டுப் பகுதியாக மணப்பாறை தொகுதி இருக்கிறது. அந்தப் பகுதிக்குக் குடிநீர் இல்லாமல் மக்கள் அவதிப்பட்ட காலத்தில் 1996-ல், மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான் அந்த மக்களுக்குக் குடிநீரை வழங்கினார்கள். அதை இந்த நேரத்தில் நான் நன்றியோடு தெரிவித்துக்கொள்கின்றேன். 27 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் அவர் போட்டுக் கொடுத்த அந்தக் குழாய்களில் உடைப்பு ஏற்பட்டு இன்றைக்குக் குடிநீர் கிடைக்காமல் அந்தப் பகுதி மக்கள் அவதிப்படக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. மணப்பாறை நகரத்திற்கு மட்டும் 17 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புனரமைப்புப் பணிகள், மறுசீரமைப்புப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. மருங்காபுரி, வையம்பட்டி, மணப்பாறை ஒன்றியம், பொன்னம்பட்டி பேரூராட்சிப் பகுதிகளுக்குக் குடிநீர்த் தட்டுப்பாடு இருக்கிற காரணத்தால் மிகப் பெரிய பிரச்சினை இருக்கிறது. எனவே, என்னைவிட எனது தொகுதியைப்பற்றி நன்கறிந்த மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க இதைச் சீர்செய்து தருவார்களா என்று கேட்டு நிறைவு செய்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் சமது அவர்கள் சொன்னது, ஏற்கெனவே தலைவர் கலைஞர் அவர்கள் 1996 ஆம் ஆண்டு இருந்தபோது 10.10 கோடி ரூபாய் செலவிலே, மணப்பாறை நகரம், மணப்பாறை பகுதி முழுவதற்கும் குடிநீரைத் தந்தார்கள். மற்ற தொகுதிகளைக் காட்டிலும் 900* hamlets *இருக்கின்ற பகுதி அது. 900 குக்கிராமங்கள் அடங்கிய பகுதி. அன்றைக்கு மருங்காபுரி தொகுதி என்று பெயர் இருந்தது. அந்த அனைத்துப் பகுதிகளுக்குமே குடிநீரைக் கொண்டுவந்து மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அன்றைக்குத் தந்தார்கள். தற்போது 27 ஆண்டுகாலம் ஆகிவிட்ட காரணத்தால், ஆங்காங்கே பழுதுகள்,* road extension

2023 அக்டோபர் 11]

செய்யும்போது பல இடங்களிலே pipeline உடைந்திருக்கின்றன. எனவே, அவற்றை மாற்றியமைக்க வேண்டுமென்பதற்காகத்தான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு 17.8 கோடி ரூபாய் அதற்காக நிதியொதுக்கி பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே, retrofitting மூலமாக அனைத்துக் குழாய்களும் மாற்றப்பட இருக்கின்றன. நீங்கள் ரோடுக்குப் போனீர்களென்றாலே தெரியும். குழாய்களெல்லாம் அங்கே கிடப்பதைப் பார்த்தீர்களென்றால் தெரியும்; வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. விரைவிலே அந்தப் பணிகளை முடித்து குடிநீர் தருகிற பணியை நாங்கள் செய்யவிருக்கிறோம். இதனுடைய வரலாறு என்னவென்று சொன்னால், முதலில் எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்தபோது ஒரு திட்டம் கொண்டு வந்தார்கள். அந்தத் திட்டம் கொண்டுவந்தபோது மணப்பாறைக்கு குழாய்கள் போடப்பட்டன. ஆனால், அந்தக் குழாய்கள் முழுவதும் உடைந்துவிட்டன. மீண்டும் கலைஞர் அவர்கள் வந்துதான் மணப்பாறை நகரத்திற்கே புதிய குழாய்களைப் போட்டுக் கொடுத்தார்கள். அன்றைக்குக் கலைஞர் தந்தார். இன்றைக்கு நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 17.8 கோடி ரூபாயிலே குழாய்கள் மாற்றப்பட்டு வருகின்றன. விரைவிலே அவை சீர் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. ராமலிங்கம் அவர்கள்.

திரு. பெ. ராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மோகனூர் ஒன்றியம், நாமக்கல் ஒன்றியம் மற்றும் சேந்தமங்கலம், எருமப்பட்டி, பரமத்தி, கபிலர்மலை ஆகிய ஒன்றியங்களை உள்ளடக்கிய மோகனூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு ஜல் ஜீவன் திட்டத்தின்மூலமாக estimate தயார் செய்யப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது. இந்தப் பகுதிகளிலே அதிகளவில் குடிநீர்த் தட்டுப்பாடு நிலவுவதால், இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டால் ஒட்டுமொத்த மாவட்ட மக்களின் குடிநீர்த் தேவையும் பூர்த்தியாகிவிடும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தை இந்த ஆண்டே நிறைவேற்றித் தருவதற்கு ஆவன செய்வார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

[*2023 அக்டோபர் 11*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுதான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 1,400 கோடி ரூபாய் செலவில் 'ராசிபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம்' ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. ஆலம்பாளையம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு அந்தத் திட்டம் மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுவிட்டது. மோகனூர் பகுதி, திருச்சியை ஒட்டிய பகுதிகள் என அத்தனை இடங்களுக்கும் குடிநீர் தருவதற்காக DPR தயாரிக்கப்பட்டு, நிதித் துறையின் அனுமதிக்காக காத்திருக்கிறோம். விரைவிலே நிதி கிடைத்தவுடன் இத்திட்டம் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ஜெயக்குமார் அவர்கள்.*

திரு. S. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதிக்குட்பட்ட பெருந்துறை SIPCOT 2,700 ஏக்கர் பரப்பளவில் இயங்கி வருகிறது. இங்கே அதிகளவில் dyeing factories உள்ளன. அதனைச் சுற்றியுள்ள கிராமங்கள் ஈங்கூர், வரப்பாளையம், பணியம்பள்ளி, கம்பளியம்பட்டி, வாய்ப்பாடி, பொன்முடி, பெருந்துறை பேரூராட்சி ஆகிய பகுதிகளில் நீர் மாதிரி சேகரிக்கப்பட்டு, குறிப்பாக, வாய்ப்பாடி ஊராட்சியில், குடிநீர் மக்கள் பயன்பாட்டிற்கு உகந்ததல்ல என்று மாவட்ட குடிநீர் வழங்கல் அலுவலகம் சான்றளித்துள்ளது. TDS அளவு சுமார் 3,000 முதல் 7,000 அளவுகளில் உள்ளது. இப்பகுதி மக்கள் பெரும்பாலானோர் கால்நடை வளர்ப்பு மற்றும் பால் உற்பத்தி செய்வதை தங்களுடைய வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளனர்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ஜெயக்குமார், உங்களுக்கு என்ன வேண்டும்? பால் வேண்டுமா, தண்ணீர் வேண்டுமா? (குறுக்கீடு) தண்ணீரைச் சொல்லுங்கள்.*

திரு. S. ஜெயக்குமார்: *தற்போது வழங்கப்படுகின்ற தண்ணீர் பற்றாக்குறையாக இருப்பதால் கால்நடைகள் பெரிதும் பாதிப்படைகின்றன. இப்பகுதி மக்கள் வாழ்வாதாரத்தைக் காப்பாற்ற சுற்றியுள்ள கிராம மக்களுக்கு அதிகப்படியான சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்க அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.*

2023 அக்டோபர் 11]

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கே இது தெரியும், பெருந்துறையில் ரூ.224 கோடி செலவில், கொடிவேரி அணையிலிருந்து பெருந்துறைக்கு மட்டும் 27* MLD *நீர் வழங்கிக் கொண்டிருக்கிறோம். இந்தத் திட்டம் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கால்நடைகளுக்கு தண்ணீர் வேண்டும் என்கிறார்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மனிதர்களுக்கு தண்ணீர் தருகிறோம் என்று சொல்கிறேன். (சிரிப்பு) 27* MLD *நீர் வந்து கொண்டிருக்கிறது. அதை இன்னும் கொஞ்சம் அதிகப்படுத்தவும் வாய்ப்புள்ளது. புதிய திட்டம் இப்போதுதான் தொடங்கப்பட்டிருக்கிறது. எனவே, அதை அதிகப்படுத்தி மற்ற கிராமங்களுக்கும் நீர் செல்லும் வகையில் புதிய திட்டம் மாற்றியமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 222, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். காந்தி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

222—

மாணவர் விடுதி

***75408—திரு. எம்.ஆர். காந்தி:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகர்கோவில் தொகுதி, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மாணவர் தங்கும் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

[*2023 அக்டோபர் 11*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர்கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

நாகர்கோவில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மாணவர் தங்கும் விடுதி கட்டடம் கட்டுவது குறித்து ஆய்வு செய்து, தேவை/முன்னுரிமை அடிப்படையில் பெருந்தலைவர் காமராஜர் கல்லூரி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். காந்தி அவர்கள்.*

திரு. எம்.ஆர். காந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகர்கோவில் மாநகரத்தில், கோணம் பகுதியில் இயங்கி வருகின்ற அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் படிப்பதற்கு, அருகில் உள்ள பிற மாவட்டங்களிலிருந்தும் மாணவர்கள் வருகிறார்கள். நாகர்கோவிலில் இருந்து 40, 50 கி.மீ. தூரத்திலிருந்து கன்னியாகுமரி மாவட்ட எல்லைப் பகுதிகளிலிருந்தும் மாணவர்கள் படிக்க வருகிறார்கள். பேருந்துகளில் கல்லூரிக்கு வருவதற்கும், வீடுகளுக்குத் திரும்பிச் செல்வதற்கும், மாணவர்களுக்கு சிரமம் ஏற்படுவதால், மாணவர்களின் நலன் கருதி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மாணவர்கள் தங்கும் விடுதி கட்டித் தரும்படி அரசை வலியுறுத்தி அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோரும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயிலும் மாணவ மாணவியர்களின் தேவைக்கேற்ப அக்கல்லூரிக்கு அருகில் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் ஆதி திராவிடர் நலத் துறை சார்ந்த விடுதிகள் உள்ளன. ஆகவே, அந்த விடுதிகளிலே மாணவர்கள் தங்கிப் படிக்கலாம். அதுமட்டுமின்றி, அங்கே பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட பள்ளி மாணவர்களுக்கான விடுதியும் உள்ளது. அந்த விடுதியிலும், அரசுக் கல்லூரி மாணவர்களைச் சேர்ப்பதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களும் மேற்கொண்டு வருகிறார்கள். ஆகவே, அந்த விடுதியை, இந்த*

2023 அக்டோபர் 11]

அரசுக் கலைக் கல்லூரியின் விடுதியாகச் சேர்ப்பதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். காந்தி அவர்கள்.*

திரு. எம்.ஆர். காந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரிக்கு வருகின்ற மாணவர்கள் தங்குவதற்கு உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டால், அதற்கு என் நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகர்கோவில் பகுதியில் இருக்கும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, 2016 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. தற்பொழுது, 11 இளங்கலை பாடப் பிரிவுகள் அக்கல்லூரியில் மட்டுமே உள்ளன. இளங்கலை பாடப் பிரிவுகள் மட்டுமே அக்கல்லூரியில் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன. ஏறத்தாழ, 1,800 மாணவர்கள் அந்தக் கல்லூரியில் பயின்று வருகிறார்கள். மாணவர்கள் படிப்பதற்குப் போதுமான கட்டட வசதி இல்லாமல் உள்ளது என்பதையும் அரசுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே கல்லூரிக்குத் தேவையான கட்டடங்களையும், auditorium போன்ற உட்கட்டமைப்பு வசதிகளையும், உடனடியாக ஏற்படுத்தித் தரவேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

கல்லூரியில் கணினி பிரிவில் பயிலும் மாணவர்களுக்கு கணினிகளை வாங்கிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, நூலக வசதி மற்றும் அனைத்துப் பாடப் பிரிவு மாணவர்களுக்குத் தேவையான ஆய்வக வசதிகளையும் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன். ஏழை மாணவர்கள் உயர் கல்வி பயில கல்லூரியில் முதுகலை பாடப் பிரிவுகளான M.A., M.Com., M.Sc. போன்ற பாடப் பிரிவுகளை உடனே தொடங்க வேண்டுமென்று அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். அதன் பக்கத்தில் இருக்கின்ற அரசு பொறியியல் கல்லூரி. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) போதுமே! சரி, கேட்டுவிடுங்கள்.*

திரு. எம்.ஆர். காந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பொறியியல் கல்லூரியில் போதிய*

[*2023 அக்டோபர் 11*

உட்கட்டமைப்பு வசதிகளைச் செய்து தரவேண்டுமென்றும், தேவையான ஆசிரியர்களை நியமிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். நன்றி. ஜெய்ஹிந்த்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–30

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விடுதியைப் பற்றிக் கேட்டார். அந்தக் கல்லூரியைப் பொறுத்தவரையில், அவர் குறிப்பிட்டதைப்போல, 1,794 மாணவர்கள் அங்கே படிக்கிறார்கள். அதில் 1,549 மாணவர்கள் உள்ளூர் மற்றும் வெளியூர்களிலிருந்து பேருந்துகளின்மூலம் வந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அங்கே விடுதியிலே தங்கியிருப்பவர்கள் 245 பேர் மட்டும்தான். அதுகூட, நான் ஏற்கெனவே சொன்னதைப்போன்று,* BC students hostels, SC students hostels *எல்லாம் இருக்கின்றன. அங்கேயும் மாணவர்கள் இன்னும் சேருவதற்கு தேவை இருக்குமானால் பள்ளி மாணவர்கள் சேருகிற அந்த விடுதியும்* BC, MBC & Minorities Welfare Department*-ன் மூலமாக இயங்குகின்ற விடுதியாக மாற்றப்படும். நீங்கள் அங்கே கட்டட வசதிகள், கல்லூரி வசதிகள், உயர் படிப்பு வசதி பற்றியெல்லாம் கேள்வி கேட்டிருக்கிறீர்கள். இவ்வரசு பொறுப்பேற்றவுடன் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் கல்லூரிகளினுடைய உட்கட்டமைப்புகளை மேம்படுத்த, பெருந்தலைவர் காமராஜர் பெயரில் அடுத்துவரும் ஐந்தாண்டுகளுக்கு ரூ.1,000/- கோடி செலவில் ஒரு சிறப்புத் திட்டம் வகுக்கப்பட்டு, அறிவித்திருப்பதை நீங்கள் அறிவீர்கள். ஆகவே, உயர் கல்வியினுடைய வளர்ச்சிக்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் எடுத்திருக்கிற பல்வேறு நடவடிக்கைகளிலே பெருந்தலைவர் காமராஜர் பெயரிலே அமைந்திருக்கிற திட்டமும் ஒன்றாகும்.*

தற்போது 26 பாலிடெக்னிக் கல்லூரிகள் மற்றும் 55 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்குத் தேவையான ஆய்வகங்கள், வகுப்பறைகள், விடுதிகள், கழிப்பறைகள் மற்றும் இதர வசதிகள் உள்ளிட்ட உட்கட்டமைப்புகளை மேற்கொள்ள 2023–2024 ஆம் நிதியாண்டில் ரூ.262 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கியிருக்கிற தொகை

2023 அக்டோபர் 11]

மொத்தம் ரூபாய் ஆயிரம் கோடி; அதிலே ரூ.262 கோடி இந்த ஆண்டு ஒதுக்கப்பட்டிருக்கிறது. படிப்படியாக அந்தந்த கல்லூரிகளினுடைய தேவைகளுக்கேற்ப, அங்கே பயில்கின்ற எல்லா மாணவர்களுடைய கோரிக்கைகளுக்கேற்ப செய்து தரப்படும். இன்னும் கேட்டீர்களென்றால், அங்கே உள்ள கல்லூரிகளில் இடவசதிகூட இல்லாமல் இருக்கிறது. அதையும் நாங்கள் கோரியிருக்கிறோம். ஆகவே, அவையெல்லாம், வருங்காலங்களிலே முறையாக, படிப்படியாக, நிதிநிலைமைக்கேற்ப சரி செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பெருந்தலைவர் காமராஜர் பெயரில் கட்டடங்கள் கட்டுவதற்கு கல்லூரிகளுக்கு ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். அதை யாரும் வரவேற்றது போன்று தெரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. முருகேசன் அவர்கள்.*

திரு. செ. முருகேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு வணக்கம். சுதந்திரப் போராட்ட வீரர் இம்மானுவேல் சேகரனார் அவர்களுக்கு நூறாவது பிறந்த நாள் கொண்டாடப்பட்ட இந்த வேளையில், தியாகி இம்மானுவேல் சேகரன் அவர்களுக்கு பரமக்குடியில் அரசு சார்பில் முழு உருவ வெண்கல சிலை. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர். . (குறுக்கீடு) நன்றி சொல்கிறீர்களா?*

திரு. செ. முருகேசன்: *நன்றி, நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதைச் சொல்லி முடித்துவிடுங்கள். நன்றியைச் சொல்லி முடித்துவிடுங்கள்.*

திரு. செ. முருகேசன்: *வெண்கல சிலையுடன்கூடிய மணிமண்டபம் அமைக்க ஆணையிட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

என்னுடைய பரமக்குடி தொகுதியில் Agriculture college ஒன்று நிறுவிட மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். பரமக்குடியில் காட்டு கருவேல மரங்கள் அதிகம்.—இராமநாதபுரம் மாவட்டம், வறட்சியான மாவட்டம். அங்கே ஒரு Agriculture college அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமும், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமும் கேட்டுக்கொள்கிறேன்.

[*2023 அக்டோபர் 11*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்தும் மறையாமலும் நம் உள்ளங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிற கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் விவசாயத்திற்கென்று கோயம்புத்தூரிலே* Agriculture University*—தனி பல்கலைக்கழகமே உருவாக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பல்கலைக்கழகத்தின் மூலமாக பல்வேறு கல்லூரிகளும் செயல்படுவதற்கு வழிவகுத்தது கலைஞர் அவர்களுடைய ஆட்சிதான். இப்போது விவசாயப் பல்கலைக்கழகம், தனியாக நம்முடைய மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களுடைய பார்வையிலே இருக்கிறது. இப்போது அண்ணாமலை பல்கலைக்கழகத்திலேயும் நம்முடைய உயர் கல்வித் துறையின் சார்பிலே விவசாயத் துறை செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே, இந்தக் கல்லூரிகளெல்லாம் கூடுமான அளவிற்கு விவசாய மாணவர்களுக்கான பயிற்சியையும் அளித்து, படிப்பறிவையும் ஊட்டுகின்ற விதமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.*

உங்கள் மாவட்டம் வறட்சியான மாவட்டம் என்று சொன்னீர்கள். வறட்சியான மாவட்டத்தில் Agriculture college *என்பது தேவையில்லாத ஒன்று என்று நான் கருதுகிறேன். இருந்தாலும் உங்களுடைய கோரிக்கையை ஏற்று, அந்தப் பகுதி மக்களினுடைய தேவைகளின் அடிப்படையிலே நானும், வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்களும் பரிந்துரை செய்து, அங்கே தேவை ஏற்படின் நிதி நிலைமைக்கேற்ப வருங்காலங்களிலே அதுகுறித்து பரிசீலிக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 223, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் த. இனிகோ இருதயராஜ், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

2023 அக்டோபர் 11]

223—

ரவுண்டானா

***14335—முனைவர் த. இனிகோ இருதயராஜ்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி (கிழக்கு) தொகுதிக்குட்பட்ட திருச்சிராப்பள்ளி–காரைக்குடி தேசிய நெடுஞ்சாலை மற்றும் வடுகப்பட்டி–எல்.ஐ.சி. காலனி சாலை சந்திக்கும் இடத்தில் ரவுண்டானா அமைக்க அரசு முன்வருமா?

முற்பகல் 10–35

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருச்சி புறவழிச்சாலை என்பது தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திற்குச் சொந்தமான சாலையாகும். அதில், கி.மீ. 131/100–ன்கீழே ரவுண்டானா ஒன்று அமைக்க வேண்டுமென்று நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். தற்போதைய போக்குவரத்து செறிவின்படி ரவுண்டானா அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் மிகக் குறைவாக இருக்கின்றன. இருப்பினும் திருச்சியினுடைய புறவழிச் சாலைப் பணிகள் 99 சதவீதம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அது முழுமையடைந்த பின்னர்தான், அந்தச் சாலையை பயன்பாட்டிற்குக் கொண்டுவர முடியும். அவ்வாறு பயன்பாட்டிற்குக் கொண்டுவருகிறபொழுது, போக்குவரத்துச் செறிவு அதிகமாகும் என்பதால், போக்குவரத்துச் செறிவினை ஆய்வு செய்து, அந்த அடிப்படையிலே roundtana *அமைப்பதாக இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் துறைக்குத் தெரிவித்திருக்கிறது. எனவே, போக்குவரத்துச் செறிவினைப் பொறுத்துதான்* roundtana *கட்டுவது குறித்த முடிவு செய்யப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் த. இனிகோ இருதயராஜ் அவர்கள்.*

முனைவர் த. இனிகோ இருதயராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி கிழக்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கே. சாத்தனூர், வடுகப்பட்டி பகுதிகளிலே*

[*2023 அக்டோபர் 11*

சுமார் 2 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இப்பகுதிகளிலிருந்து 2 கிலோ மீட்டர் தூரத்தில், பஞ்சப்பூர் பகுதியில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் திருச்சிக்கு 349 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி பிரம்மாண்டமான புதிய மத்திய பேருந்து நிலையம் அமைத்துத் தந்துள்ளார்கள். இப்பகுதி வளர்ந்து வருகிற பகுதி.

திருச்சி–காரைக்குடி தேசிய நெடுஞ்சாலை என்பது NHAI*–க்கு சொந்தமானதாக இருக்கிறது.* Roundtana *அமைப்பதற்கான இடமும் அந்தப் பகுதியிலே* NHAI*–க்கு சொந்தமாகவே உள்ளது. கே.சாத்தனூர், LIC காலனி, வடுகப்பட்டி இந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய மக்கள் தங்கள் அன்றாடப் பணிகளை மேற்கொள்ள திருச்சி–காரைக்குடி தேசிய நெடுஞ்சாலையைத்தான் கடந்து செல்ல வேண்டி இருக்கின்ற காரணத்தினால், அங்கு அடிக்கடி* accidents *நடக்கின்றன. இப்போதுதான் நாங்கள் அங்கு வேகத்தடையையும்,* light*–ஐயும் போட்டு ஓரளவிற்கு* accidents *நிகழாமல் தடுத்திருக்கிறோம்.* NHAI *அதிகாரிகளைக் கேட்டால், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் பரிந்துரை செய்தால் நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும் என்று சொல்லி உள்ளார்கள். நானும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குக் கடிதம் கொடுத்திருக்கிறேன். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணைகூர்ந்து, அப்பகுதி மக்கள் சாலையைக் கடக்க ஏதுவாக* roundtana *அமைத்து, அப்பகுதி மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றித்தர வேண்டுமென்று தங்களின் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் த. இனிகோ இருதயராஜ் அவர்கள் கொடுத்த கடிதத்தின் அடிப்படையிலே, சம்பந்தப்பட்ட நெடுஞ்சாலைத் துறையினுடைய மண்டல அதிகாரியை நான் அழைத்துப் பேசிய அடிப்படையிலேதான், நான் கூறிய இந்த விவரங்களை எனக்கு கொடுத்திருக்கிறார்கள். அந்தப் புறவழிச் சாலை முழுமையடைந்தவுடனேயே, அங்குள்ள போக்குவரத்துச் செறிவைப் பொறுத்து, இந்த* roundtana *அமைக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் முனைவர் த. இனிகோ இருதயராஜ்*

2023 அக்டோபர் 11]

அவர்கள் சொன்னதன் அடிப்படையிலே, நெடுஞ்சாலைத் துறையினுடைய மண்டல அதிகாரி அவர்களுக்கு அழுத்தம் கொடுக்கிற அளவிற்கு நான் அவர்களிடம் மீண்டும் கடிதத் தொடர்புகொள்வேன் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் த. இனிகோ இருதயராஜ் அவர்கள்.*

முனைவர் த. இனிகோ இருதயராஜ்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோலவே, என்னுடைய தொகுதிக்குட்பட்ட மேலசிந்தாமணி, பழைய கரூர் ரோட்டில், சிதம்பரம் மஹால் அருகில் ஒரு கார் மட்டுமே செல்லக்கூடிய வகையில் ஒரு குறுகிய பாலம், அதாவது சுமார் 100 ஆண்டுகள் பழமை வாய்ந்த வாய்க்கால் பாலம் உள்ளது. அந்தப் பாலத்தை அகலப்படுத்தி சிந்தாமணிப் பகுதியிலே ஏற்படுகின்ற போக்குவரத்து நெரிசலைச் சீர்செய்ய வேண்டுமென்று சட்டமன்றத்திலே கோரிக்கை வைத்தேன், கடிதமும் எழுதியிருந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் நிறைவேற்றித் தருவதாக பதில் கூறினார்கள். எனவே, பழைய கரூர் ரோட்டிலே உள்ள அந்த ஆக்கிரமிப்புகள் எல்லாம் அகற்றப்பட்டு எப்போது அந்தப் பாலம் கட்டப்பட்டு அகலமான பாதை கிடைக்குமென்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறையினுடைய அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே இதுசம்பந்தமாக என்னிடத்தில் சொல்லியிருக்கிறார்கள். சம்பந்தப்பட்ட கண்காணிப்புப் பொறியாளரிடம் இதைத் தெரிவித்து, இதற்கு முழுமையான ஒரு திட்ட அறிக்கை தேவை என்பதைச் சொல்லியிருக்கிறேன். அந்தப் பணியிலே அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அது முழுமையடைந்தால், அடுத்த நிதியாண்டிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியோடு, இந்தப் பணியைச் சேர்ப்பதற்கு எங்கள் துறையின் சார்பாக ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

[*2023 அக்டோபர் 11*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.*

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுவது குறித்து, 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' திட்டத்தின்கீழ் ஒரு கோரிக்கை வைத்தேன். அதை ஏற்றுக்கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ரூபாய் 250 கோடி மதிப்பீட்டில் பாலம் கட்டப்படும் என்ற ஒரு மகத்தான அறிவிப்பை வெளியிட்டார்கள். அதற்காக பொதுமக்களின் சார்பில் நான் அப்பொழுதே நன்றியைத் தெரிவித்துக்கொண்டேன். இந்தப் பாலம் என்பது தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம், ஈரோடு, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களை இணைப்பது என்பது உண்மை. அதேநேரத்தில் கொச்சின் துறைமுகத்திலிருந்து பாலக்காடு, கோயம்புத்தூர் மாவட்டம், ஈரோடு மாவட்டம், கொளத்தூர் வழியாக ஆற்றைக் கடந்து பெண்ணாகரம், பாலக்கோடு, ஓசூர், பெங்களூரு, மும்பையை இணைக்கக்கூடிய தேசிய நெடுஞ்சாலைகளோடு இணைத்துவிட்டால், அது போக்குவரத்திற்கு மிக எளிதாக இருப்பதோடு, போக்குவரத்து நேரமும் குறையும், எரிபொருளும் சிக்கனமாகும் மற்றும் தொழில் வளர்ச்சிக்கு ஏதுவாகவும் இருக்கும்; இந்த அடிப்படையில் இது ஒரு நல்ல திட்டம். இதை அரசு நிறைவேற்ற வேண்டும் என்ற வேண்டுகோளை வைக்கிற அதேநேரத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிற இந்தத் திட்டத்தை, நல்ல மனம் படைத்த, எதையும் எப்படியும் செய்யும் ஆற்றல்மிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைந்து செய்து முடிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் மாண்புமிகு தளபதியார் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடனேயே உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமென்று கூறினார்கள். தரைப் பாலங்களைப் பொறுத்தவரையில், வெள்ளப்பெருக்கு ஏற்படுகின்ற காலங்களில்,*

2023 அக்டோபர் 11]

அதன் வழியாக மக்கள் ஓர் ஊரிலிருந்து மற்றோர் ஊருக்குச் செல்லவே முடியாத நிலை ஒருகாலத்தில் இருந்தது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடனே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், 1,281 தரைப் பாலங்களை உயர்மட்டப் பாலங்களாக தரமுயர்த்த வேண்டும் என்று ஆணை பிறப்பித்தார்கள். அந்த அடிப்படையில், 2021–2022 ஆம் ஆண்டில் 693 பாலங்கள், 2022–2023 ஆம் ஆண்டில் 66 பாலங்கள், 2023–2024 ஆம் ஆண்டில் 277 பாலங்கள் என இந்த 3 நிதியாண்டுகளில் ஏறத்தாழ 1,036 பாலங்களைக் கட்ட இந்த அரசின் சார்பாக முடிவு செய்யப்பட்டது. நிதி நிலைமை எப்படியிருக்கிறது என்பது பற்றி மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும் தெரியும். இருந்தாலும், பாலம் கட்ட வேண்டும் என்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆணையை ஏற்று, துறையின் சார்பாக அதற்கான திட்ட மதிப்பீடுகளெல்லாம் தயாரிக்கப்பட்டு, டெண்டர் விடப்பட்டு, 667 பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியிருக்கிற 409 பாலங்களைக் கட்டும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இந்நிலையில், அடுத்த ஆண்டு 248 பாலங்கள் கட்டுவதற்கு திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு வருகின்றன. இந்த அடிப்படையில்தான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தருமபுரிக்குச் சென்றபோது, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய அந்தப் பாலம் கட்டப்படும் என்று அறிவித்தார்கள்.

அந்தப் பாலம், சேலம் மாவட்டத்தையும், தருமபுரி மாவட்டத்தையும் இணைக்கிற ஒரு பாலம் ஆகும்; அது தேவையானதும்கூட. சேலம் மாவட்டம் கோட்டையூரையும், தருமபுரி மாவட்டத்திலுள்ள ஒட்டனூரையும் இணைக்கின்ற பாலம் ஆகும். ஒட்டனூர் என்ற ஊர் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிந்த ஊர். அதற்குப் பக்கத்தில்தான் அவருடைய சொந்த ஊர் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்த இரண்டு ஊர்களையும் இணைக்கின்ற வகையில் பாலம் அமைக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அந்தப் பாலம் கட்டப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தவுடனேயே, துறையின் சார்பாக அதற்கான ஏற்பாடுகளைச் செய்யலாம் என்று முடிவு செய்யப்பட்டு, விரிவான திட்ட அறிக்கை தயார் செய்வதற்காக

[*2023 அக்டோபர் 11*

டெண்டர் விடப்பட்டு, 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அந்தப் பாலம் முழுக்க முழுக்க ஆற்றைக் கடந்து செல்கின்ற பாலம் ஆகும். எனவே, அந்தப் பாலத்தை அமைக்க வேண்டும் என்று சொன்னால், நீர்வளத் துறையிடமிருந்தும், வனத் துறையிடமிருந்தும் NOC-தடையில்லா சான்று பெற வேண்டும். மேற்படி துறைகளிடமிருந்து NOC பெற வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டு, அத்துறைகளுக்கு உரிய கருத்துருக்கள் அனுப்பப்பட்டுள்ளன; அவையும் வரவிருக்கின்றன. திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டவுடனேயே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த பாலம் என்கிற அடிப்படையில், அதற்கு முன்னுரிமை அளித்து, அவரிடத்தில் அனுமதி பெற்று, வரவிருக்கும் நிதியாண்டில் அப்பாலத்தை கட்டுவதற்கு துறையின் சார்பாக முயற்சி எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வை. முத்துராஜா அவர்கள்.

டாக்டர் வை. முத்துராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை நகராட்சி பழைய பேருந்து நிலையம்–அறந்தாங்கி சாலையை நான்கு வழிச் சாலையாகத் தரமுயர்த்திக் கொடுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலிருந்து பிருந்தாவனம், அண்ணா சாலை, TVS corner வழியாக மாலையீடு வரை செல்லும் சாலை, நகரத்தின் மையப் பகுதியில் உள்ளது. காலை மற்றும் மாலை நேரங்களில் பணிக்குச் செல்லும் அரசு ஊழியர்கள், பொதுமக்கள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் அதிகளவில் இந்த சாலையைப் பயன்படுத்துகிற சூழ்நிலை உள்ளது. ஆகவே, போக்குவரத்து நெரிசல் அதிகமாக ஏற்படுகிறது. இதைத் தவிர்க்கும் விதமாக, மருத்துவக் கல்லூரிக்கு செல்லும் ஆம்புலன்ஸ் மற்றும் பொதுமக்களின் வாகனங்கள், எந்தவித தடையுமின்றி செல்ல ஏதுவாக, மேற்கண்ட சாலையை நான்குவழிச் சாலையாக தரமுயர்த்தித் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

2023 அக்டோபர் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக தேசிய நெடுஞ்சாலைகள் என்று சொல்லப்படுகின்ற சாலைகளெல்லாம், 7 மீட்டர் மாநிலச் சாலைகளை எடுத்து, 10 மீட்டர் சாலைகளாக்கப்பட்டு,* tollgate *போடுவதையெல்லாம் நாம் பார்க்கிறோம்.* Tollgate*-ஐ எடுத்துவிட வேண்டும் என்று இந்த அரசு பலமுறை கடிதம் எழுதியிருக்கிறது.*

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், தமிழ்நாட்டில் இருக்கிற சாலைகளையெல்லாம் நான்கு வழிச் சாலையாகத் தரமுயர்த்துவதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று கூறினார்கள். இந்த அரசு புதிதாக ஆட்சிப் பொறுப்பேற்றவுடனேயே, முதலமைச்சர் சாலை மேம்பாட்டுத் திட்டம் என்கிற திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அந்த அடிப்படையில்தான், நம்முடைய மாநில நெடுஞ்சாலைகளெல்லாம் நான்கு வழிச் சாலைகளாகத் தரமுயர்த்தப்படுகின்றன; அங்கு tollgate *எல்லாம் போடுவதில்லை. அதுபோன்றுதான், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் முத்துராஜா அவர்களின் தொகுதியிலுள்ள சாலையை நான்கு வழிச் சாலையாகத் தரமுயர்த்திக் கொடுத்ததற்கு நன்றி தெரிவித்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்தச் சாலை பள்ளி, கல்லூரி மாணாக்கர்கள் செல்லும் சாலை என்று கூறினார்கள். பொதுவாக, நகரப் பகுதிகளில் இரண்டுவிதமான சாலைகள் உள்ளன. ஒன்று, நகராட்சிக்குச் சொந்தமான நகராட்சிச் சாலைகளாகும்; மற்றொன்று மாநிலச் சாலைகளாகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற அந்தச் சாலை எந்தச் சாலை என்பதை ஆய்வு செய்து, போக்குவரத்துச் செறிவு இருக்குமேயானால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியுடன், அடுத்து வருகின்ற நிதியாண்டில் துறையின் சார்பாக பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஆர். ஜெயராம் அவர்கள்.*

[*2023 அக்டோபர் 11*

திரு. கே.ஆர். ஜெயராம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மாவட்டம், சிங்காநல்லூர் தொகுதி, திருச்சி சாலையில்* Stock Exchange *முதல் ஒண்டிபுதூர் வரையில் ஒரு பாலமும், அதேபோல் கவுண்டம்பாளையம் தொகுதிக்குட்பட்ட சக்தி சாலையில்* GKS *நகர் முதல் துடியலூர் சந்திப்பு வரையில் மற்றொரு பாலமும் அதேபோல், கோவை வடக்கு தொகுதியிலுள்ள மேட்டுப்பாளையம் சாலை, சாய்பாபா காலனி சந்திப்பிலும் ஓர் உயர் மட்ட பாலமும் அமைப்பதற்காக, கடந்த 2022 ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, இதுவரையிலும் பணிகள் துவங்கப்படவில்லை. இந்தப் பகுதியில் மேற்படி மூன்று சாலைகளிலும்* Metro Rail *திட்டம் வருவதற்கான ஆய்வுப் பணிகள் நடைபெறுவதாகத் தெரிய வருகிறது. இந்த மூன்று மேம்பாலப் பணிகளும் கைவிடப்படுவதாக பொது மக்கள் மத்தியில் அச்சம் நிலவி வருகிறது. இதுசம்பந்தமாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், மாவட்டத்தினுடைய பொறுப்பு அமைச்சர் அவர்களும் ஆய்வுக் கூட்டம் நடத்தினார்கள். ஆகவே, மூன்று சாலைகளிலுள்ள கடுமையான போக்குவரத்து நெரிசலைக் குறைக்க மூன்று பாலங்களையும் கட்ட இந்த அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே உரிய அனுமதி பெற்று, தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் மூலமாக கட்டப்பட வேண்டுமென்று* tender *விடுகிற நிலையில், தமிழ்நாடு அரசின் சார்பாக* Metro train *விடுவது என்று ஓர் அறிவிப்பு வெளியிடப்பட்டது. அந்த அடிப்படையில் இரண்டு துறைகளின் பொறியாளர்களை அழைத்துப் பேசுகிறபோது,* 'Metro train*–தான் வேண்டும்' என்று ஒரு சிலரும், 'இல்லை, இல்லை ஏற்கெனவே திட்டமிடப்பட்ட பாலங்கள் கட்டப்பட வேண்டும்' என்று ஒரு சிலரும், இரு வேறு கருத்துகளைச் சொன்னார்கள். அந்த அடிப்படையில்தான் அரசின் சார்பாக, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்தில் 'பொது மக்களுடைய எண்ணங்கள், கோரிக்கைகள் என்னவென்பதைக் கேளுங்கள்' என்று சொல்லியிருக்கிறோம். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பல்வேறு தரப்பினரை அழைத்துப் பேசியபோது,*

2023 அக்டோபர் 11]

பெரும்பான்மையானவர்கள் Metro train வருகிறபோது வரட்டும்; அந்தப் பாலத்தை கட்ட வேண்டுமென்று சொல்கிறார்கள். அதனடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அந்தக் கருத்துருவை இங்கே அனுப்பினார்கள். அதற்குப் பின்னால், ஒன்றிய அரசாங்கத்திற்கு நாங்கள் தொடர்ந்து கடிதம் எழுதியதன் அடிப்படையில், 2 பாலங்களுக்கு அனுமதி தந்து, சென்ற வாரம்தான் tender விடப்பட்டிருக்கிறது. Tender முடிந்தவுடனேயே, ஒப்பந்தம் போடப்பட்டு, அந்த இரண்டு பாலங்கள் கட்டப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற நிதியாண்டில் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் நான்கு வழிச் சாலைகள் குறித்து கேட்டேன். ஈரோட்டிலிருந்து கோபிசெட்டிப்பாளையம் வரை பணிகள் நிறைவடைந்திருக்கின்றன. கோபி நகரத்தைப் பொறுத்தவரையிலும் குறுகிய சாலைகளாக இருக்கின்றன. வணிக மையங்கள், அரசு அலுவலகங்கள், பள்ளிக் கட்டடங்கள், நீதிமன்றங்கள் இருக்கின்ற காரணத்தின் அடிப்படையில், ஏற்கெனவே இருக்கின்ற சாலையை விரிவுபடுத்த இயலாத சூழலில், புறவழிச் சாலை ஒன்றை அமைப்பதற்கு மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் எடப்பாடியார் அவர்கள் இருந்தபோது ஆய்வுப் பணிகள் நடைபெற்றன. ஆகவே, அந்தப் பணிகளை இந்த ஆண்டு நிறைவு செய்து, புறவழிச் சாலை அமைப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற கோபிசெட்டிப்பாளையத்தைப் பொறுத்தளவிற்கு, நானும் அதிகம் அறிந்தவன்தான். ஏனென்றால், தமிழ்நாட்டிலிருக்கிற பெரும்பான்மையான திரைப்படத் தயாரிப்பாளர்கள் கோபிசெட்டிப்பாளையத்தை மையமாக வைத்து திரைப்படம் தயாரிப்பது அதிகமுண்டு. அந்தப் பகுதியில்

[*2023 அக்டோபர் 11*

அதிகமான கூட்ட நெரிசல்களும் உண்டு. எனக்கும் திரைப்படத் துறையில் அதிகம் அனுபவம் இருக்கின்ற காரணத்தினால், அதனை நான் அறிந்தவன்தான். அதனால்தான் ஒரு புறவழிச் சாலை அமைக்க வேண்டுமென்ற அடிப்படையில், இந்த அரசாங்கம் வந்தவுடனேயே ஈரோட்டையும், சத்தியமங்கலத்தையும் இணைக்கிற புறவழிச் சாலைக்கு, ஏறத்தாழ 8.6 கிலோ மீட்டர் தூரம் சாலை அமைப்பதற்காக தற்போது சாத்தியக்கூறு இருக்கிறதா என்ற அடிப்படையில் DPR தயார் செய்வதற்காக ரூ.70 இலட்சம் நிதியொதுக்கப்பட்டு, அந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அது முழுமையடைந்தவுடனேயே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு, அந்தப் புறவழிச் சாலையை இந்த அரசாங்கம் கட்டாயம் அமைக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைர் தலைவர்: *வினா வரிசை எண் 224, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ.மா. மான்ராஜ், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

224—

நியாய விலைக் கடை

***21172—திரு. இ.மா. மான்ராஜ்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, பிள்ளையார்நத்தம் கிராமத்தில் முழுநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் சட்டமன்றத் தொகுதி, பிள்ளையார்நத்தம் ஊராட்சியில் Spspl 32 பூவாணி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின்கீழ் ஏற்கெனவே பிள்ளையார்நத்தம் முழுநேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. ஆகவே, புதிதாக மேலும் ஒரு முழுநேர நியாய விலைக் கடை அமைக்க அவசியம் எழவில்லை.

2023 அக்டோபர் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இ.மா. மான்ராஜ் அவர்கள்.*

திரு. இ.மா. மான்ராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தமிழர் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். ஸ்ரீவில்லிபுத்தூர் ஊராட்சி ஒன்றியம், பிள்ளையார்நத்தம் ஊராட்சி, மேலத்தொட்டிபட்டி, கம்பத்துபட்டி, காதிபோர்டு ஆகிய கிராமங்களில் 600-க்கும் மேற்பட்ட குடும்ப அட்டைகள் உள்ளதால், பிள்ளையார்நத்தம் முழுநேரக் கடையினைப் பிரித்து, அந்தக் கிராமங்களுக்கு பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற பிள்ளையார்நத்தத்தில் செயல்படுகின்ற பூவாணி தொடக்க வேளாண் கூட்டுறவுச் சங்க நியாய விலைக் கடை 1,217 குடும்ப அட்டைகளுடன், முழு நேரக் கடையாகச் செயல்பட்டு வருகிறது. அரசின் சொந்தக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. ஆகவே, இந்த முழு நேரக் கடையில் பிள்ளையார்நத்தம் கிராமத்தைச் சேர்ந்த 597 குடும்ப அட்டைகளும், காதிபோர்டைச் சேர்ந்த 80 குடும்ப அட்டைகளும், கம்பத்துப்பட்டியைச் சேர்ந்த 450 குடும்ப அட்டைகளும் அடங்கும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பதைப்போல, பிள்ளையார்நத்தம் கிராமத்தில் மேலும் ஒரு முழு நேர நியாய விலைக் கடை அமைவதற்கான சாத்தியங்கள் இல்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இ.மா. மான்ராஜ் அவர்கள்.*

திரு. இ.மா. மான்ராஜ்: *மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் நான் பகுதி நேர கடைதான் கேட்டேன். சின்னத்தூர் தாலுகா, சொக்கலாம்பட்டி, பெருமாள்தேவன்பட்டி ஆகிய கிராமங்களுக்கு முழு நேர நியாய விலைக் கடை செயல்படுகிறது. இந்தக் கடையின்*

[*2023 அக்டோபர் 11*

கட்டடம் இடிந்து, முற்றிலும் செயல்பட முடியாத நிலையில் உள்ளது. எனவே, உடனடியாக கட்டடம் கட்டித் தர இந்த அரசு முன்வருமா என தங்கள் வாயிலாக கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன்: *மேற்கண்ட பகுதிகளில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டடத்தை அமைத்துக் கொடுத்தால், பகுதி நேரக் கடைகள் இயங்குவதற்கு அரசின் சார்பிலே ஏற்பாடு செய்யப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி அவர்கள்.*

திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு.வி.க. நகர் தொகுதி,* ward *எண் 71, மேட்டுப்பாளையம், அருந்ததி நகரில் 16 தெருக்கள் உள்ளன. அந்த 16 தெருக்களிலும் சுமார் 750 குடும்ப அட்டைதாரர்கள் இருக்கின்றனர். அந்த 750 குடும்ப அட்டைதாரர்களும் உணவுப் பொருட்களைப் பெறுவதற்கு நீண்ட தூரம் பயணித்து, ஜமாலியா பகுதியிலே உணவுப் பொருட்களை பெறவேண்டிய சூழ்நிலை உள்ளது. எனவே, அவர்களின் சிரமத்தைப் போக்குகின்ற வகையில் அந்தப் பகுதியில் இராஜீவ் காந்தி பூங்காவிற்கு அருகில் இருக்கின்ற காலி மைதானத்தில் நியாய விலைக் கடை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன்: *மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், 16 தெருக்கள் அடங்கிய தன்னுடைய தொகுதியில் இருக்கக்கூடிய பகுதிக்கு 750 குடும்ப அட்டைகள்தான் இருப்பதாக குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக, நகரப் பகுதிகளில் 2,000 குடும்ப அட்டைகள் இருப்பதற்குக்கூட சாத்தியங்கள் உண்டு. ஆகவே, 750 என்பது ஒரு கூடுதலான*

2023 அக்டோபர் 11]

எண்ணிக்கையாக தெரியவில்லை. ஏனென்றால் நகரப் பகுதியில் 1000-க்கு மேல் அதாவது, 1,200 cards *இருக்க வேண்டும். கிராமப் பகுதிகள் என்றால் 800* cards *இருந்தால் போதும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது, நகரப் பகுதியில், 750 குடும்ப அட்டைகள் தான். எனவே, மெயின் கடையில் இருந்து பிரித்தால் தாய் கடை தனது தகுதியை இழந்துவிடும். ஆகவே, சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு, தேவைப்பட்டால் நானும் அங்கே சென்று, பார்வையிட்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார் அவர்கள்.*

திரு. கி. அசோக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதி, கிருஷ்ணகிரி ஒன்றியம், அகசிபள்ளி ஊராட்சி, வேட்டியம்பட்டி நியாய விலைக் கடையில் 1,050 குடும்ப அட்டைகள் உள்ளன. இந்தக் கடையிலிருந்து 350 குடும்ப அட்டைகளைப் பிரித்து ராயக்கோட்டை கிராமத்தில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைத்துத் தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன்: *மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 1,050 குடும்ப அட்டைகள் இருப்பதாக சொல்கின்ற அந்தப் பகுதி, கிராமப் பகுதியாக இருக்கின்ற காரணத்தால், ஏற்கெனவே நான் அளித்த பதிலின் அடிப்படையில், அவரும் அந்தப் பகுதி நேரக் கடை அமைவதற்கான இட வசதிகளை செய்து தந்தால், அதுகுறித்து உரிய ஏற்பாடுகள் செய்யப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 225, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை, மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

225—

கால்நடை மருத்துவமனை

***75603—திரு. கு. செல்வபெருந்தகை:**

மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, திருமுடிவாக்கம் ஊராட்சி, வழுதலம்பேடு பகுதியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, திருமுடிவாக்கம் ஊராட்சி, வழுதலம்பேடு பகுதியில் புதியதாக கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள்.*

திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குன்றத்தூர் பகுதி, கால்நடைகள் மிகவும் மிகுந்த பகுதி. மாட்டினம் 32,935, செம்மறியாடுகள் 6,203, வெள்ளாடுகள் 14,995, கோழியினங்கள் 24,091. இப்படி நிறைய கால்நடைகள் இருக்கின்ற பகுதியில் கால்நடை மருத்துவமனை அவசியம் தேவைப்படுகிறது. மீண்டும், பரிசீலிக்குமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

2023 அக்டோபர் 11]

முற்பகல் 10–55

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியுள்ள ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, திருமுடிவாக்கம் ஊராட்சி, வழுதலம்பேடு பகுதியில் 498 மாட்டின அலகுகளும், 29 ஆட்டின அலகுகளும், மொத்தம் 527 கால்நடை அலகுகள் மட்டுமே உள்ளன. மேலும், 3 கிலோ மீட்டர் தொலைவில் குன்றத்தூர் கால்நடை மருந்தகம், 3.5 கிலோ மீட்டர் தொலைவில் திருமுடிவாக்கம் கால்நடை கிளை நிலையம் மற்றும் 5 கிலோ மீட்டர் தொலைவில் திருநீர்மலை கால்நடை கிளை நிலையம் ஆகியன செயல்பட்டு வருவதால், புதிய கால்நடை கிளை நிலையம் துவக்கிட சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள்.*

திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் படப்பையிலே கால்நடை பன்முக மருத்துவமனை 1975 ஆம் ஆண்டு துவக்கி வைக்கப்பட்டது. 1 acre, 27 cent இடம் இருக்கிறது. அது பன்னிரெண்டு கோடி ரூபாய் மதிப்புள்ள நிலம். அந்த நிலம் காலியாக இருக்கிறது. எங்கள் கோரிக்கையை ஏற்று, 2021 ஆம் ஆண்டு கடித எண் 906 மூலம் கால்நடை பாலிகிளினிக் அமைக்க தங்களுடைய அனுமதிக்காக வந்திருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய நூற்றாண்டு விழாவிலே அதற்கு அடிக்கல் நாட்டுவதற்கு இசைவு தருவாரா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் படப்பையிலே பன்முக மருத்துவமனை அமைக்க வேண்டும்; அதற்கு அடிக்கல் நாட்டுவதற்கான வழிவகைகள் உண்டா என்று கேட்டிருக்கின்றார்கள். எங்களுடைய துறையினுடைய*

[*2023 அக்டோபர் 11*

அலுவலர்களை ஆய்வுக்கு அனுப்பி, தேவையானால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, நிதிநிலைக்கேற்றாற்போல் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க.சொ.க. கண்ணன் அவர்கள்.*

திரு. க.சொ.க. கண்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது ஜெயங்கொண்டம் தொகுதியிலுள்ள வரதராஜன்பேட்டை பேரூராட்சி முற்றிலும் விவசாயம் நிறைந்த பகுதியாகும். இங்கு ஏராளமான கால்நடைகள் உள்ளன. இங்குள்ள கால்நடைகளுக்கு சிகிச்சை மேற்கொள்ள வேண்டுமென்றால், 10 கிலோ மீட்டர் தூரமுள்ள ஆண்டிமடம் பகுதிக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. எனவே, நீண்டகாலக் கோரிக்கையை நிறைவேற்றும் விதத்தில் வரதராஜன்பேட்டை பேரூராட்சிக்கு ஒரு கால்நடை மருத்துவமனை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்தப் பகுதி கால்நடைகள் அதிகமுள்ள விவசாய நிலப் பகுதி என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். பல்வேறு உறுப்பினர்கள் தங்கள் தொகுதிகளில் கால்நடை கிளை நிலையங்கள், கால்நடை மருந்தகங்கள் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கைகளை விடுத்தவண்ணமாக உள்ளனர். அவர்களுடைய கோரிக்கைகள் அனைத்தும் துறை அலுவலர்கள் மூலமாக ஆய்வு செய்யப்படும். அரசு வகுத்துள்ள வரையறைக்குட்பட்டிருப்பின், அரசின் நிதிநிலையைக் கருத்தில்கொண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுசென்று, வருங்காலங்களில் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

2023 அக்டோபர் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. V.P. கந்தசாமி அவர்கள்.*

திரு. V.P. கந்தசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூலூர் தொகுதிக்குட்பட்ட அப்பநாயக்கன்பட்டி கிராமத்தில் கிட்டத்தட்ட 50,000-க்கும் மேற்பட்ட ஆடுகள், மாடுகள் போன்ற கால்நடைகள் இருக்கின்றன. அந்தப் பகுதியினுடைய மக்கள் பிரதான தொழிலாக ஆடுகளை மேய்த்து வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கு கால்நடை மருத்துவமனை இல்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியிலே கால்நடை மருத்துவமனையை அமைத்துத் தர முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த பதிலிலும் அதைத்தான் சொல்லியிருக்கிறேன். பல்வேறு உறுப்பினர்கள் தங்கள் தொகுதியில் கால்நடை கிளை நிலையங்கள், கால்நடை மருந்தகங்களை அமைக்க கோரிக்கை விடுத்தவண்ணம் உள்ளார்கள். துறையின்மூலம் அவற்றை ஆய்வு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டுசென்று, நிதிநிலைக்கேற்ப அதற்கான நடவடிக்கைகளை துறை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 226, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜோசப் சாமுவேல், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

226—

படகுக் குழாம்

***7868—திரு. ஜோசப் சாமுவேல்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[*2023 அக்டோபர் 11*

அம்பத்தூர் மற்றும் கொரட்டூர் ஏரிகளை தூய்மைப்படுத்தி படகுக் குழாம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அம்பத்தூர் தொகுதிக்குட்பட்ட, அம்பத்தூர் மற்றும் கொரட்டூர் ஏரிகள் சென்னை மாநகர மக்களின் குடிநீர் ஆதாரமாகப் பயன்பட்டு வருகின்றன. இந்த ஏரிகளில் ஆழம் குறைவாக உள்ளது. ஏரிகளின் நீர்மட்டம் ஆண்டு முழுவதும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. ஆகையால், இங்கே படகுக் குழாம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜோசப் சாமுவேல் அவர்கள்.

திரு. ஜோசப் சாமுவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'உங்கள் தொகுதியில் முதல்வர்' திட்டத்தின் மூலமாக அம்பத்தூர் தொழிற்பேட்டை மேனாம்பேடு பகுதிகளில் மின் நிலையம் அமைக்கவும், மேம்படுத்தவும், அதேபோல தொகுதி முழுவதும் புதை மின்வடக் கம்பிகள் அமைக்கவும், அம்பத்தூர் OT பகுதி வரை metro rail போக்குவரத்தை விரிவுபடுத்தவும் மற்றும் சென்னை பாடி முதல் திருநின்றவூர் வரை சாலையை விரிவுபடுத்தவும், இரயில்வே மேம்பாலம் அமைக்கவும், சுமார் 1,824.30 கோடி ரூபாய் ஒதுக்கி, பணிகளை எடுத்துக்கொள்ள உத்தரவிட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பாக மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அம்பத்தூர் ஏரி மற்றும் கொரட்டூர் ஏரிகளைத் தூய்மைப்படுத்தி படகுக் குழாம் அமைக்க மறுபரிசீலனை செய்யுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சென்னை மக்களின் குடிநீர் தேவைக்காக அந்த ஏரியைப் பயன்படுத்துவதாகக் குறிப்பிட்டிருக்கின்றார். குடிநீர் தேவைக்காக அந்தப் பகுதியில் இருக்கின்ற புழல் ஏரியில்தான் நீர் தேக்கப்படுகின்றது. இந்தப் பகுதியில் உள்ள இரண்டு ஏரிகளும் எந்தவித பயன்பாட்டுக்கும் இல்லாத அளவில் இருக்கின்றன. அதேபோல ஏரியின் ஆழம் குறைவாக உள்ளது என்று குறிப்பிட்டிருக்கின்றீர்கள்.

2023 அக்டோபர் 11]

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. கேள்விக்கு வாருங்கள்.*

திரு. ஜோசப் சாமுவேல்: *அரசாணை எண் 290-ன்படி, பொதுப் பணித் துறை 23-11-2020-ல் ரூ.23 கோடிக்கு அந்த ஏரியை ஆழப்படுத்துவதாக அறிவித்துள்ளது. அதன்மூலமாக, ஏரியை ஆழப்படுத்தி, தண்ணீர் நிரப்பி சுற்றுலா சேவை அளிக்க மறுபரிசீலனை செய்ய முடியுமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பத்தூர் தொகுதிக்குட்பட்ட அம்பத்தூர் மற்றும் கொரட்டூர் ஏரிகள் நீர்வளத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளன. இந்த ஏரிகளை மாசுபடாமல் பாதுகாப்பது குறித்து தேசிய பசுமைத் தீர்ப்பாய வழக்குகளின் வழிகாட்டுதலின்படி, நீர்வளத் துறையால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே, அம்பத்தூர் மற்றும் கொரட்டூர் ஏரிகளில் படகுக் குழாம் அமைப்பது குறித்து நீர்வளத் துறையின் தடையின்மைச் சான்று பெறப்படுமாயின், அங்கு படகுக் குழாம் அமைப்பது குறித்து துறை அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

திரு. ஜோசப் சாமுவேல்: *நன்றி. முடியாதபட்சத்தில், இரண்டு ஏரிகளுக்கு நடுவிலே அங்கு பறவைகள் சரணாலயம் அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: *இல்லை. பறவைகள் சரணாலயம் அமைப்பது குறித்து* Forest Department-*ல்தான் முடிவு எடுப்பார்கள். வனத் துறையின் கட்டுப்பாட்டில்தான் அவர்கள் இருப்பார்கள். அது முடிந்தபிறகு, சுற்றுலாத் துறையின்மூலம் உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன்.*

[*2023 அக்டோபர் 11*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. T.K. அமுல் கந்தசாமி அவர்கள்.*

திரு. T.K. அமுல் கந்தசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை வணங்கி எனது வால்பாறை தொகுதி அமைந்துள்ள வால்பாறை மலைப் பகுதியில், அம்மா அவர்களின் கடந்த ஆட்சியிலே படகு இல்லம், தாவரவியல் பூங்கா துவங்கப்பட்டு, நல்லமுறையிலே சுற்றுலாப் பயணிகள் பயன்பெறுகின்ற வகையில் நடைமுறையில் இருந்தது. இப்பொழுது அது பராமரிப்பு இல்லாமல் இருக்கின்றது. ஆகவே, தாவரவியல் பூங்கா மற்றும் படகு இல்லத்தை மேம்படுத்தி மீண்டும் சுற்றுலாப் பயணிகள் பயன்பெறும் வகையில் அமைக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை பகுதி ஒரு சுற்றுலாத்தலம். நிச்சயமாக அந்தப் பகுதியில் அதிகாரிகளை அனுப்பி ஆய்வு செய்து, அப்படி ஏதாவது குறைகள் இருந்தால் அந்தக் குறைகளை எல்லாம் நிவர்த்தி செய்து, மேம்பாடு செய்வதற்கான உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி அவர்கள்.*

திருமதி ம. வரலட்சுமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு தொகுதி, மறைமலைநகர் நகராட்சிப் பகுதியில் நின்னகரை என்று ஒரு பெரிய ஏரி அமைந்துள்ளது. இந்த ஏரி தொழிற்சாலைக் கழிவுகளால் மாசு அடைந்திருக்கின்றது. எனவே, நகரின் மையப் பகுதியில் அமைந்துள்ள இந்த ஏரியைத் தூய்மைப்படுத்தி படகு வசதி மற்றும் பூங்கா அமைத்துத்தர வேண்டுமென தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

2023 அக்டோபர் 11]

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்கின்ற அந்தக் குளத்தை மீண்டும் எங்களது சுற்றுலாத் துறை அதிகாரிகளை வைத்து ஆய்வு செய்து சாத்தியக்கூறுகள் இருந்தால் நிச்சயமாக அவருடைய கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 227, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

227—

பேருந்து வசதி

***37927—திரு. வி.பி. நாகைமாலி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கீழ்வேளூர் தொகுதி, நாகப்பட்டினத்திலிருந்து கீழையூர் வரை நகரப் பேருந்தை இயக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

நாகப்பட்டினத்திலிருந்து கீழ்வேளூர் தொகுதி, கீழையூர் வரை புதிய நகரப் பேருந்தை இயக்குவது குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள். கேள்வி எல்லாம் முன் வரிசையிலே திரு. வி.பி. நாகைமாலிக்கு ஆதரவாகக் கேட்கிறீர்கள்.*

திரு. வி.பி. நாகைமாலி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்வேளூர் தொகுதி, நாகப்பட்டினத்திலிருந்து கீழையூர் வரை நகரப் பேருந்தை இயக்க வேண்டுமென்று நான் ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குக்கூட ஒரு கடிதம் எழுதியிருக்கிறேன். போக்குவரத்துத் துறை அதிகாரிகளுக்கும் ஒரு கடிதம் எழுதியிருக்கிறேன். ஆகவே, நீங்கள் நாகப்பட்டினத்திலிருந்து கீழையூர் வரை ஒரு நகரப் பேருந்து இயக்க வேண்டுமென்று தொகுதி மக்கள் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன்.*

[*2023 அக்டோபர் 11*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11-05

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. நாகைமாலி அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, ஏற்கெனவே நாகப்பட்டினம்–மேலபிடாகை–ஓரத்தூர்–சிக்கல் வழியாக பேருந்து வழித்தடம் 4 கிலோ மீட்டர் வரை நீட்டிப்பு செய்யப்பட்டது. அதேபோல, நாகப்பட்டினத்திலிருந்து எட்டுக்குடி வழித்தடத்தில் ஏ13 என்ற பேருந்து தினசரி 5 நடைகள் இயக்கப்படுகின்றன. மேலும், நாகப்பட்டினம்–சோழவித்தியாபுரம்–மேலபிடாகை வழித்தடத்தில் ஏ5 நகரப் பேருந்து தினசரி 5 நடைகள் இயக்கப்படுகின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையான, நாகப்பட்டினத்திலிருந்து கீழையூருக்குச் செல்கின்ற அந்த வழித்தடத்தில் பகுதி, பகுதியாக பல்வேறு பேருந்துகள் இயங்குகின்றன. அதுமாத்திரமல்லாமல், நாகப்பட்டினத்திலிருந்து திருத்துறைப்பூண்டிக்குச் செல்கின்ற பிரதான வழித்தடத்தில் கீழையூர் அமைந்திருப்பதால், அந்த வழியாக 20 நிமிடங்கள் இடைவெளியில் கழகப் பேருந்துகள் 73 நடைகளும், தனியார் பேருந்துகள் 25 நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன. மேற்கண்ட பேருந்துகள் வசதியே அந்தப் பகுதி மக்களுக்குப் போதுமானதாக இருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதனைக் கவனத்தில்கொள்ள அன்போடு வேண்டுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள்.*

திரு. வி.பி. நாகைமாலி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கூறுவது அனைத்தும் உண்மைதான். இருந்தாலும்கூட, அந்த வழித்தடத்தில் காலை, மாலை ஆகிய இரு வேளைகளில் நெரிசல்மிக்க முறையிலே பயணிகள் பயணம் செய்கிறார்கள். பள்ளிக்கூடத்திற்கு வரக்கூடியவர்கள், கல்லூரிக்கு வரக்கூடியவர்கள், மற்ற பணிக்காக வரக்கூடியவர்கள் எல்லாம் போக்குவரத்து நெரிசலினால் மிகவும் சிரமப்படுகிறார்கள். மேலும், கீழையூர், ஊராட்சி ஒன்றியத்தினுடைய தலைநகராகவும்*

2023 அக்டோபர் 11]

இருக்கிறது. அங்கு பல்வேறு அரசு அலுவலகங்கள் இருக்கின்றன. ஆகவே, இவற்றையெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்தில்கொண்டு, நாகப்பட்டினத்திலிருந்து கீழையூருக்கு ஒரு நகரப் பேருந்தை இயக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. நாகைமாலி அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று, நாகப்பட்டினத்திலிருந்து கூத்தங்குடி-கிள்ளுக்குடி வழியாக ஆத்தங்குடி வரை ஒரு பேருந்து இயக்கப்பட்டு வருகின்றது. அதேபோல, திருவாரூர் முதல் கீழ்வேளூர் வழியாக வடகரை வரை ஒரு பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. நாகப்பட்டினத்திலிருந்து கீழையூர் வரை புதிதாக நகரப் பேருந்து இயக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோருகிறார்கள். எனவே, இதனையும் கருத்தில்கொண்டு, மீண்டும் ஆய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் நா. எழிலன் அவர்கள்.*

டாக்டர் நா. எழிலன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட மாடல் முதல்வர் அவர்கள் ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது உருவாக்கிய பேருந்து வழித்தடம் எண் 41. அதனை மறுபடியும் அப்பாசாமி தெரு வழியாக இயக்கவும், பேருந்து வழித்தடம் எண் 10A-ஐ நுங்கம்பாக்கம் புஷ்பா நகர் வழியாக இயக்கவும் மற்றும் பேருந்து வழித்தடம் எண் 27B-ஐ ஹாரிங்டன் சாலை வழியாக இயக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயிரம் விளக்குதான் நமக்கெல்லாம் ஒளி*

[*2023 அக்டோபர் 11*

தந்த தொகுதி. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, உரிய துறை அதிகாரிகளுடைய பரிசீலனையோடு மீண்டும் மேற்குறிப்பிட்ட வழித்தடத்தில் பேருந்துகளை இயக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. செந்தில்குமார் அவர்கள்.*

திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். கள்ளக்குறிச்சி மாவட்டம், கள்ளக்குறிச்சி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குச் செல்கின்ற வழி 3 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. அந்த மருத்துவமனைக்குக் கிட்டத்தட்ட ஒரு நாளைக்கு 2,000-லிருந்து 2,500 நோயாளிகள் வரை வந்து செல்கின்றார்கள். அதேபோல, கிட்டத்தட்ட 5,000, 6,000, 8,000 பேர் அந்தப் பகுதியிலே வந்து செல்வதால் அங்கு போக்குவரத்து நெரிசல் நிறைய இருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதியில் புதிய பேருந்து, சிற்றுந்து அதாவது, மினி பேருந்து இயக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், புதிய அரசு கலைக் கல்லூரி 3 கிலோ மீட்டர் தொலைவில் கட்டப்பட்டுள்ளது. அந்தக் கல்லூரி இப்போது திறக்கக்கூடிய நிலையில் இருக்கிறது. அங்கும் இதுவரை பேருந்துகள் விடப்படவில்லை. அந்தப் பகுதிக்கும் புதிதாக பேருந்து விட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முக்கியமாக, அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு வரும் நோயாளிகள் மிகப் பெரிய அவதிக்குள்ளாகிறார்கள். அந்த மருத்துவமனைக்கு ஆட்டோவில் சென்று வர வேண்டுமென்றால், ரூ.300/- கொடுத்தால்தான் வருகிறார்கள். இதனால் பெரிய சிக்கல் ஏற்படுகிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், பேருந்து விட வேண்டும் அவ்வளவுதானே!*

திரு. மா. செந்தில்குமார்: *பேருந்து விட வேண்டும். எங்களுடைய மாவட்ட பொறுப்பு அமைச்சர் அவர்களும் இதனைக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *புதிய அரசுக் கலைக் கல்லூரி கட்டி முடிக்கப்பட்டு, திறக்கப்படும்போது அந்தப் பகுதிக்கு பேருந்து*

2023 அக்டோபர் 11]

இயக்க வேண்டும் அல்லவா! மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், பதில் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மாவட்டத்திற்கு பொறுப்பு அமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர், அண்ணன் திரு. எ.வ. வேலு அவர்கள் ஏற்கெனவே அங்கு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை அமைக்கப்பட்டது குறித்தும், அதேபோல மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு வந்து செல்வதற்கு ஏதுவாக பேருந்து வசதிகள் தேவை என்பது குறித்தும், புதிதாக அமைக்கப்பட்டிருக்கின்ற தாலுகாவான வானாபுரம் பகுதிக்கு பேருந்து வசதிகள் தேவை என்றெல்லாம் எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்களும், திரு. வசந்தம் கார்த்திகேயன், மாவட்டச் செயலாளர் அவர்களும் இதுகுறித்து வலியுறுத்தியிருக்கிறார்கள். எனவே, உரிய ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். காந்திராஜன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், பேசுங்கள்; கேள்வி இருந்தால் கேளுங்கள்.*

திரு. எஸ். காந்திராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொரோனா பெருந்தொற்று காரணமாக, அப்போது தமிழ்நாடு முழுவதும் பேருந்துகள் நிறுத்தப்பட்டன. அதற்குப் பின்னால், பெருந்தொற்று முடிவுற்று, மீண்டும் நகரப் பேருந்துகளும், mofussil bus-களும் இயக்கப்பட்டன; பல நகரப் பேருந்துகள் இன்னும் இயக்கப்படாமல் இருக்கின்றன.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பொத்தாம் பொதுவாக வேண்டாம். எந்த இடத்திற்கு புதியதாக பேருந்துகள் வேண்டுமோ அங்கே கேளுங்கள்.*

திரு. எஸ். காந்திராஜன்: *என்னுடைய வேடசந்தூர் தொகுதியில், குறிப்பாக, கொம்பேரிபட்டி மலைப் பகுதிக்கு ஒரே ஒரு அரசுப் பேருந்துதான் போகிறது, தனியார் பேருந்துகள் எதுவும் செல்வதில்லை. அதேபோல, நாகக்கோணனூர் என்கிற*

ஊருக்கும் ஒரே ஒரு அரசு பேருந்துதான் போகிறது. இந்த இரண்டு வழித்தடங்களிலும், கிட்டத்தட்ட 4 கிலோ மீட்டருக்குள் உள்ள பள்ளிக் குழந்தைகள் பள்ளிக்குச் செல்வதற்கு மிகுந்த சிரமப்படுகின்றார்கள். எனவே, அந்தப் பேருந்துகளையெல்லாம் மீண்டும் இயக்குவதற்கு மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களிடத்தில் இரண்டு முறை நேரில் கோரிக்கை வைத்தேன். அவரும் உரிய அதிகாரியிடம் அறிவுறுத்தி இருந்தாலும்கூட அந்தப் பேருந்துகள் பகுதி நேரமாக இன்னும் இயக்கப்படாமல் இருக்கின்றன. அவற்றையெல்லாம் இயக்குவதற்கு மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து நான் ஏற்கெனவே பதில் அளித்திருக்கின்றேன். கடந்த ஆட்சிக் காலத்தில் கொரோனா காலத்தில் நிறுத்தப்பட்ட பேருந்துகள், கொரோனாவால் நிறுத்தப்படவில்லை. போதிய ஓட்டுநர்கள், நடத்துனர்கள் இல்லாத காரணத்தினால்தான் 2,000 வழித்தடங்களில் பேருந்துகளை நிறுத்தினார்கள். மிகக் குறிப்பாக சொல்ல வேண்டுமென்றால், கடந்த 5 ஆண்டுக் காலத்தில் ஒரு புதிய ஓட்டுநர், நடத்துனர்கூட பணி நியமனம் செய்யப்படாத காரணத்தினால் அந்தப் பேருந்துகள் எல்லாம் நிறுத்தப்பட்டன. இப்போது புதிய ஓட்டுநர்கள், நடத்துனர்களை பணி நியமனம் செய்வதற்கான பணி தொடங்கப்பட்டிருக்கிறது. முதற்கட்டமாக, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்திலே 685 பேரை தேர்வு செய்வதற்கு மனுக்கள் பெறப்பட்டுள்ளன. அடுத்தகட்டமாக, தேர்வுகள் நடைபெறவுள்ளன. தேர்வுகள் முடிந்தபிறகு அவர்கள் பணிக்கு வருவார்கள். அதேபோல, மற்ற போக்குவரத்துக் கழகங்களிலும், அடுத்தகட்டமாக பணி நியமனம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எனவே, அவை முடிந்தவுடன், ஏற்கெனவே நிறுத்தப்பட்ட வழித்தடங்களில் எவை முக்கியமானவையோ அந்த வழித்தடங்களில் மீண்டும் பேருந்துகளை இயக்கி நடைமுறைக்குக் கொண்டு வரப்போகின்றோம்.

அதேபோல, பள்ளி, கல்லூரி மாணவர்களுக்காக புதியதாக கூடுதல் பேருந்து வசதிகளைக் கேட்டிருக்கின்றார்கள். பள்ளிகள்,

2023 அக்டோபர் 11]

கல்லூரிகள் உள்ள பகுதிகளுக்கு தேவையான பேருந்து வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே எங்களுக்கு அறிவுரை வழங்கியிருக்கின்றார்கள். அதிலும், மிகக் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மிக முக்கியமான திட்டமான புதுமைப் பெண் திட்டத்திற்குப் பிறகு, அரசுப் பள்ளிகளில் படித்து முடித்து, கல்லூரிப் படிப்பு படிக்கும்போது, மாண்புமிகு முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அரசின் உதவித் தொகை கிடைக்குமென்ற காரணத்தினால், அரசுப் பள்ளிகளில் சேரும் மாணவிகளின் எண்ணிக்கை கூடுதலாகிக் கொண்டிருக்கிறது. எனவே, தற்போது பேருந்துகளின் எண்ணிக்கை, கூடுதலாகத் தேவைப்படுகின்ற வழித்தடங்களை ஆய்வு செய்து பேருந்துகளை இயக்க நடவடிக்கை எடுத்து வருகின்றோம். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த வழித்தடங்களை எழுத்துப்பூர்வமாக அளிக்கின்றபோது, அதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏராளமான மினி பேருந்துகளுக்கு* permit *பெறப்பட்டு இயங்கிக் கொண்டிருந்தன. சிறிய கிராமங்களில் அந்த மினி பேருந்துகளைத்தான் ஓட்ட முடியும். தற்போது அந்த மினி பேருந்துகள் நிறுத்தப்பட்டுள்ளன. இதனால், பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே, அந்தப் பகுதிகளில் புதிய பேருந்துகளை இயக்க, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மினி பேருந்துகள் என்பது முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் கொண்டுவந்த திட்டம். அதைக் கொண்டு வந்ததற்குப் பிறகு, அந்தப் பேருந்துகளில் கட்டண உயர்வு இல்லாமல் இருக்கின்றது என்கிற காரணத்தினால்,*

[*2023 அக்டோபர் 11*

அதன் உரிமையாளர்கள் சில வழித்தடங்களில், சில நேரங்களில் பேருந்துகளை இயக்காமல் இருக்கும் சூழல் இருக்கிறது. அதுகுறித்து அதிகாரிகளைக் கொண்டு ஆய்வு செய்யப்பட்டு, ஓர் அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது. விரைவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று நடவடிக்கை எடுக்கப்படும். அதைப்போல, புதிய பேருந்துகள் விரைவில் வரவிருக்கின்றன. அந்தப் புதிய பேருந்துகள் வருகின்றபோது, புதிய வழித்தடங்களில் பேருந்துகள் இயக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. A.P. நந்தகுமார் அவர்கள்.*

திரு. A.P. நந்தகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய அணைக்கட்டு தொகுதிக்குட்பட்ட பீஞ்சமந்தை மலைக் கிராமத்திற்கு சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து இதுவரை இல்லாமலிருந்த சாலையை அமைத்துத் தந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த பீஞ்சமந்தை மலைக் கிராமத்தில் சற்றேறக்குறைய, 20 ஆயிரத்திற்கும் அதிகமான அளவில் மக்கள் வசிக்கின்றார்கள். அந்த மலைக் கிராமத்திற்கு சாலை போட்டவுடன், பேருந்தை இயக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தபோது,* test drive *செய்தார்கள். பெரிய பேருந்துகள் அந்த வளைவுப் பாதைகளில் செல்ல முடியவில்லை. ஆகவே, அந்த மலைக் கிராமத்தில் வசிக்கும் 20 ஆயிரம் பேரின் நலனைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு முதல்வர் அவர்களின் அரசு, இதுவரை சாலையில்லாத அந்தக் கிராமத்திற்கு எப்படி சாலை அமைத்துத் தந்தார்களோ, அதேபோல், அந்தக் கிராமத்திற்கு மினி பேருந்து வசதியை ஏற்படுத்தித் தர வேண்டுமென தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.*

முற்பகல் 11–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. A.P. நந்தகுமார் அவர்களுடைய தொகுதியான அணைக்கட்டு பகுதியிலே, வேலூர் நாடாளுமன்ற இடைத்தேர்தலின்போது பீஞ்சமந்தைப்*

2023 அக்டோபர் 11]

பகுதியில்தான் பணியாற்றினோம். அங்கே சாலை வசதியும், பேருந்து வசதியும் அவசியம் என்பதை அப்போதே உணர்ந்திருக்கின்றோம். இப்போது மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கருணையோடு அங்கே சாலை வசதி அமைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல, வழக்கமாக ஓடுகின்ற பேருந்துகளை அங்கே இயக்கமுடியாது. Short wheel base என்ற குறுகிய அடித்தளச் சட்டமுள்ள பேருந்துகளைத்தான் இயக்கமுடியும். அந்தப் பேருந்துகள் தற்போது கைவசம் இல்லை. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தருமபுரி மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்தபோது, வத்தல்மலையில் மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்தில் பேருந்து வசதி கேட்டு மக்கள் கோரிக்கை வைத்தார்கள். எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேருந்து வசதி இல்லாத பகுதிகளில் பேருந்து இயக்குவதற்கு உத்தரவிட்டு, அங்கே பேருந்து இயக்கப்பட்டிருக்கிறது. அதேபோல வருங்காலங்களில் புதிய பேருந்துகள் வந்தவுடன் அவருடைய பகுதிக்கும் பேருந்துகள் இயக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 228, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. சம்பத்குமார், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

228—

தங்கும் விடுதி

***15590—திரு. வே. சம்பத்குமார்:**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தீர்த்தமலை அருள்மிகு தீர்த்தகிரீஸ்வரர் திருக்கோயிலுக்கு வருகைதரும் பக்தர்களுக்கு தங்கும் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீர்த்தகிரி மலை என்பது 365 படிகளைக் கொண்டது. அந்த மலைக்கு கடந்த 14-9-2023 அன்று நேரடியாக ஆய்விற்குச் சென்றிருந்தேன். இந்தப் பகுதி என்பது வனச் சரகத்திற்குட்பட்ட,*

[*2023 அக்டோபர் 11*

வனத் துறைக்குச் சொந்தமான இடத்தில் அமைந்திருப்பதால் இந்த இடத்தில் நீங்கள் கோரிய கோரிக்கையான தங்கும் விடுதி கட்டித்தருகின்ற வாய்ப்பு இல்லை என்பதை வருத்தத்தோடு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. சம்பத்குமார் அவர்கள்.*

திரு. வே. சம்பத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். ஏழை மாணவர்களுக்கு மருத்துவக் கல்வியிலே 7.5 சதவிகித இடஒதுக்கீடு தந்த எங்களுடைய கழகத்தினுடைய பொதுச் செயலாளர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தருமபுரி மாவட்டம் கல்வியிலே பின்தங்கிய மாவட்டம் என்ற வார்த்தையை மாற்றி, உயர் கல்வியிலே முன்னேறிய மாவட்டமாக இடம்பெறச் செய்த, பாலக்கோடு சட்டப் பேரவை உறுப்பினர், கழகத்தினுடைய மாவட்டச் செயலாளர், எதிர்க்கட்சிச் செயலாளர் அண்ணன் அவர்களை வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மாதம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருக்கோயிலுக்கு வருகை தந்தார்கள். இதிலுள்ள சிரமம் என்னவென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். 10 ஏக்கர் நிலம் RF–க்கு சொந்தமானது அல்ல, கோயிலுக்குச் சொந்தமானது என்று 1893–ல் British Government *அறிவித்திருக்கிறது. இப்போது நிதி ஒதுக்கி, படிக்கட்டுகள் சீரமைப்புப் பணி, தரைத் தளம் சீரமைப்புப் பணி, கோயில் புனரமைக்கும் பணியில் கொடையாளர்கள் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அங்கே இரவு நேரங்களில் தங்குவதற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். வனத் துறையுடன் கலந்தாலோசித்து ஆணையைப் பிறப்பித்து, தங்கும் விடுதி கட்டித்தர வேண்டும். அதேபோல தாங்கள் அங்கே படி ஏறும்போது சிவபெருமான் எப்படி உங்களை அங்கு அழைத்தாரோ, அதேபோல தார்ச் சாலை அல்லது* winch *வசதி ஏற்படுத்திக் கொடுக்க அன்போடு கேட்டு, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

2023 அக்டோபர் 11]

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 222 இலட்சம் ரூபாய் செலவில் கிட்டத்தட்ட 16 சன்னதிகளை புதுப்பிக்கின்ற திருப்பணி தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதேபோல் அந்த வனப் பகுதியில் தீர்த்தகிரீஸ்வரரை தரிசனம் செய்ய பயன்படுத்துகின்ற 365 படிகளுக்கு பாதுகாப்புச் சுவர், தரைத் தளம் அமைக்கின்ற பணி மற்றும் கருங்கற்களால் படிகள் அமைக்கின்ற பணிகளுக்கு, வனத் துறையிடம் அனுமதி கேட்டு* PARIVESH portal*-ல் விண்ணப்பித்திருக்கின்றோம். வனத் துறை அமைச்சர் அவர்களோடு கலந்து பேசியிருக்கின்றோம். இந்த ஆய்வு முடிந்தபிறகு, வனத் துறையிடமிருந்து கூடியவிரைவில் அனுமதி பெற்றுத் தரப்படும் என்ற உறுதியை அளித்திருக்கின்றார். ஆகவே, அடுத்த மாதத்திற்குள்ளாக கருங்கல்லில் படி அமைக்கின்ற பணி, சுற்றுச்சுவர் அமைக்கின்ற பணி, தரைத் தளம் அமைக்கின்ற பணி என அனைத்துப் பணிகளும் நிறைவேற்றித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. சம்பத்குமார் அவர்கள்.*

திரு. வே. சம்பத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைக்கோயிலின் கீழ்கோயிலில் வருடத்திற்கு 250 திருமணங்கள் நடைபெறுகின்றன. அங்கு திருமணத்திற்கு வருகின்றவர்கள் உணவு அருந்துவதற்கு வசதிகள் இல்லை. அங்கே இடம் இருக்கின்றது, அங்கு சமையலறையுடன்கூடிய உணவுக்கூடம் கட்டித் தரவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

அதேபோல, கீழ்கோயில் இராஜகோபுரம் இடிந்த நிலையில் நீண்ட நாட்களாக இருக்கிறது. புதியதாக ஒரு இராஜகோபுரம் கட்டுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். மீண்டும் அரூர் வரனீஸ்வரர் கோயிலுக்கு திருப்பணி மேற்கொள்வதற்காக soil test *முடிவுகள் இணை ஆணையர் அவர்களுக்குச் சென்றிருக்கிறது; அதற்கு ஆணை வழங்கவேண்டும். கோயில் கட்டுவதற்கு நிதியளிக்க உபயதாரர்கள் தயாராக இருக்கிறார்கள். அதற்கும் கூடியவிரைவில் ஆணை பெற்றுத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

[*2023 அக்டோபர் 11*

முற்பகல் 11–20

அதேபோல், மொரப்பூர் சிங்காரத்தோப்பு முனீஸ்வரர் கோயில் மிகவும் பிரசித்தி பெற்ற கோயில். அங்கே, புதன் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் பக்தகோடிகள் அசைவ விருந்து வைத்து தெருக்களிலே அமர்ந்து உணவருந்தும் நிலை இருக்கின்றது. அதன் மேற்கூரைகள் எல்லாம் இடிந்து இருக்கின்றன. அந்த மேற்கூரைகளைப் புனரமைக்க வேண்டுகிறேன். மொரப்பூர் பேருந்து நிலையத்திற்கு அருகிலுள்ள திருமண மண்டபத்தில் சமையற்கூடம் இல்லை. அந்தத் திருமண மண்டபத்தில் புதிதாக சமையற்கூடம் கட்டித்தரவும், அரூர், மஞ்சவாடி கணவாய் வெள்ளையப்பன் கோயிலில், ஓர் உணவருந்தும் கூடம் கட்டித்தரவும் வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விகளுக்கு பதிலாக சொல்ல விரும்புவது, இந்த ஆட்சி இன்னார் இனியவர் என்று பார்க்காமல், கேட்கின்ற திருமண மண்டபங்கள், தங்கும் விடுதிகளை வாரி வழங்கியிருக்கின்ற அரசு, நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைமையிலிருக்கின்ற இந்த அரசு. 17 திருமண மண்டபங்கள் ரூ.41 கோடி செலவில் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதேபோல், 71 திருமண மண்டபங்கள் ரூ.242 கோடி செலவில் தமிழகம் முழுவதும் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. நீங்கள் கோரிய தீர்த்தகிரீஸ்வரர் மலைக் கோயிலின் கீழ்தளத்தில் இருக்கின்ற இடத்தில், தனியாருக்குச் சொந்தமான இடங்கள்தான் அதிகளவு இருக்கின்றன. ஆயிரம் ஆண்டுகள் பழமைவாய்ந்த அந்தத் திருக்கோயிலுக்கு சுற்றுப் பிரகாரத்தில் யாராவது தானமாகவோ அல்லது விலைக்கோ அந்த இடத்தைத் தர முன்வந்தால் நிச்சயமாக உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று நிறைவேற்றித் தரப்படும்.*

அதேபோல், முனீஸ்வரர் கோயிலுக்கு திருமண மண்டபம் கேட்டிருக்கிறீர்கள். அங்கு ஏற்கெனவே, 2005 ஆம் ஆண்டு கட்டப்பட்ட ஒரு திருமண மண்டபம், 120 பேர் தங்குகின்ற அளவிற்கு

2023 அக்டோபர் 11]

இருக்கின்றது. அங்கு Asbestos sheet போடப்பட்டிருக்கிறது. அதை உடனடியாக concrete தளத்தில் மாற்றி, அந்தத் திருமண மண்டபம் புதுப்பித்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பூண்டி கே. கலைவாணன் அவர்கள்.

திரு. பூண்டி கே. கலைவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்ணின் மைந்தர், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் தனது இளம் பிராயத்திலே துணிச்சலோடு கமலாலயத்தை நீந்திக் கடந்தார்கள். இன்றைய முதல்வர் அவர்கள் கமலாலயத்தைக் கடந்து செல்லும்போதெல்லாம், ஆள், அரவமற்ற ஒரு நிலையைப் பார்த்துச் செல்லும் சூழ்நிலை உள்ளது. அந்தக் கமலாலயக் குளம், திருவாரூருக்கு ஓர் அடையாளமாக உள்ள தேர் சுற்றிவரும் நிலை இருக்கிறது. ஏற்கெனவே, முன்பெல்லாம் சுற்றுலாத் துறையின் சார்பாக அந்தத் தெப்பக் குளத்தில் படகுப் போக்குவரத்து இருந்தது; இப்போது இல்லை. இந்து சமய மற்றும் அறநிலையத் துறையின் சார்பாக கமலாலயத்தில் படகு சவாரி செய்ய ஏற்பாடு செய்வதோடு, மிதவைப் பூங்காவையும் அமைத்துத் தருமாறு தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2022 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பெருமழை வெள்ளத்தின்போது, சுற்றுச்சுவர் படிக்கட்டுகள் இடிந்து விழுந்ததால் சாலைகள் சேதம் அடைந்திருந்தபோது, ஆழித் தேரோட்டத்திற்கு 20 நாட்கள்தான் இருந்தன. மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதன் நிலையை அறிந்து உடனடியாக, நேரடியாகச் சென்று கள ஆய்வு செய்து இந்த ஆண்டு ஆழித்தேர் ஓட வேண்டுமென்று உத்தரவிட்டார். 15 தினங்களிலேயே அந்தச் சாலையை மேம்படுத்தி, ஓடுமா, ஓடாதா என்ற கேள்வியோடு இருந்த ஆழித்தேரோட்டத்தை நடத்திய பெருமை மாண்புமிகு முதல்வர் அவர்களையே சாரும் என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் படகு சவாரி குறித்த கோரிக்கை சுற்றுலாத் துறை தொடர்பாக உள்ளதால்

[*2023 அக்டோபர் 11*

சுற்றுலாத் துறையோடு கலந்துபேசி, வாய்ப்பிருந்தால் சுற்றுலாத் துறையின் மூலமாகவோ அல்லது இந்து சமய அறநிலையத் துறையின் சார்பிலோ உறுப்பினருடைய விருப்பம் நிறைவேற்றித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார் அவர்கள்.*

முற்பகல் 11–25

திரு. ச. சிவகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது மயிலம் சட்டமன்றத் தொகுதி, வல்லம் ஒன்றியத்தில் வீரணாமூர் அகஸ்தீஸ்வரர் கோயில் இடிபாடுகளோடு இருக்கிறது. இக்கோயில் மன்னர் காலத்துக் கோயில். இக்கோயில் புதுப்பிக்கப்பட்டு, குடமுழுக்கு நடத்தப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னோர்கள் நமக்கு விட்டுச் சென்ற இதுபோன்ற பொக்கிஷங்களான 1,000 ஆண்டுகளுக்கு மேற்பட்ட திருக்கோயில்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென்று, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு உத்தரவிட்டதன் அடிப்படையில் ஆய்வு செய்யப்பட்டு, தமிழ்நாடு முழுவதும் 1,000 ஆண்டுகளுக்கு மேற்பட்ட திருக்கோயில்கள் என 714 திருக்கோயில்கள் இருப்பதாக பட்டியலிடப்பட்டிருக்கின்றன. இத்திருக்கோயில்களுக்குத் திருப்பணிகள் செய்வதற்காக போதிய நிதியாதாரங்கள் அத்திருக்கோயில்களில் இல்லாத நிலையை அறிந்து, இதுவரையில் ஆண்ட ஆட்சிகளில், எந்த ஆட்சியிலும் ஒதுக்காத அளவிற்கு 2022–2023 ஆம் ஆண்டு மானியமாக ரூ.100 கோடி நிதியை ஒதுக்கிய பெருமை எங்களுடைய மாண்புமிகு முதல்வரைச் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி)*

2022–2023 ஆம் ஆண்டில் நிதியை ஒதுக்கிவிட்டோம் என்றில்லாமல், 2023–2024 ஆம் ஆண்டில் மீண்டும் ரூ.100 கோடி நிதியை அரசின் சார்பில் ஒதுக்கிய பெருமை எங்களுடைய

2023 அக்டோபர் 11]

மாண்புமிகு முதல்வரைச் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) ரூ.200 கோடி நிதியை ஒதுக்கியதன் விளைவாக, உபயதாரர்கள் மேலும் ரூ.120 கோடி நிதியை திருக்கோயில்களின் திருப்பணிகளுக்கு நன்கொடையாக வழங்கியிருக்கின்றார்கள். இந்த ஒட்டுமொத்த நிதியில் 187 திருக்கோயில்கள் திருப்பணிகள் மேற்கொள்வதற்காக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய அகஸ்தீஸ்வரர் திருக்கோயிலும் அந்தப் பட்டியலில் அடங்கும் என்று கருதுகின்றேன். இல்லையென்றாலும், இந்தத் திருக்கோயிலையும் அந்தப் பட்டியலில் சேர்த்துக்கொண்டு, திருப்பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்கள்.*

திரு. ஐ.பி. செந்தில்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் கட்டுப்பாட்டிலுள்ள, கொடைக்கானல் மேல்மலை, பூம்பாறை கிராமத்தில் அமைத்திருக்கக்கூடிய சித்தர் போகர் அவர்களால் வடிவமைக்கப்பட்ட தசா பாஷான முருகன் சிலை அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க திருக்கோயிலின் இராஜகோபுரத்தை மீண்டும் புதுப்பித்துத் தர வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

அதோடுமட்டுமின்றி, அத்திருக்கோயிலுக்கு, வாரத்திற்கு கிட்டத்தட்ட 20,000, 25,000 பக்தர்கள் வருகின்ற சூழல் உருவாகியிருக்கிறது. மேலும், சுபமுகூர்த்த தினங்களில் நிறைய திருமணங்கள் நடைபெறுகின்றன. ஆகவே, அங்கே ஒரு திருமண மண்டபமும், திருக்கோயிலின் இராஜகோபுரத்தைப் புதுப்பித்துத் தருகிற பணியையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து தருவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூம்பாறையிலுள்ள திருக்கோயில் இராஜகோபுரத்தைக் கட்ட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்திருக்கின்றார். இந்த ஆட்சி ஏற்பட்ட*

[*2023 அக்டோபர் 11*

பிறகு, 9 நிலை, 7 நிலை, 5 நிலை என 36 இராஜகோபுரங்களைக் கட்டுவதற்கு உத்தரவிட்ட ஆட்சி, கம்பீரமான உள்ளம் கொண்ட எங்களுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆட்சி என்பதை இந்த நேரத்தில் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய பூம்பாறை திருக்கோயிலுக்கும் இராஜகோபுரம் கட்டுவதற்குண்டான பணிகள் மேற்கொள்ளப்படும். அந்தக் கோயிலைப் புனரமைப்பதற்குண்டான பணிகளையும் உடனடியாக மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S. பழனி நாடார் அவர்கள்.*

திரு. S. பழனி நாடார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தென்காசி தொகுதி, தென்காசி நகரில் அமைந்துள்ள அருள்மிகு காசி விஸ்வநாதர் திருக்கோயிலுக்கு சுமார் 17 ஆண்டுகளுக்கு முன்பு குடமுழுக்கு விழா நடைபெற்றது. அதனால், இந்த ஆண்டு அருள்மிகு காசி விஸ்வநாதர் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு விழா நடத்த அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. பழனி நாடார் அவர்கள் கோரிய அருள்மிகு காசி விஸ்வநாதர் திருக்கோயிலில், தொல்லியல் துறையின் அனுமதி மற்றும் மாநில வல்லுநர் குழு அனுமதி பெறப்பட்டு, சுமார் 15 பணிகள் ரூ.3.50 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்காமலேயே கூடுதலாக ரூ.1.65 கோடி செலவில் இராஜகோபுரப் பணியும் மேற்கொள்ளப்படவிருக்கின்றது. அடுத்த முகூர்த்தத்தில் நிச்சயமாக அந்தத் திருப்பணிகள் தொடங்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் திரு. S. பழனி நாடார் அவர்களும் அந்தத் திருப்பணியின்போது அழைக்கப்படுவார் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்*

2023 அக்டோபர் 11]

அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.எம்.வி. பிரபாகரராஜா அவர்கள்.

திரு. எ.எம்.வி. பிரபாகரராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கு சட்டமன்றப் பேரவையில், பேரவை விதி 110-ன்கீழ் ஓர் அறிவிப்பை அளித்து, இந்தியாவில் முதல் மாநிலமாக, இலட்சோப இலட்ச வணிகர்களின் வாழ்வில் ஒளிவிளக்கேற்றிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-30

சென்னையின் மையப் பகுதியான கோயம்பேடு பகுதியில் அமைந்துள்ள குறுங்காலீஸ்வரர் திருக்கோயிலுக்கு 5 நிலை இராஜகோபுரம் அமைக்க வேண்டுமென்று கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரின்போது கேட்டோம். அதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். மேலும் அந்தத் திருக்கோயிலுக்கு பங்குனி உத்திரம், மகா சிவராத்திரி போன்ற திருநாட்களில் திருத்தேர் வேண்டுமென்று பக்தகோடிகள் கேட்டிருக்கிறார்கள். அதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தருவாரா என்பதைக் கேட்க விரும்புகிறேன். மேலும், அங்குள்ள தெப்பக்குளத்தையும் சீர்செய்து தருவாரா என்பதையும் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்பேடு குறுங்காலீஸ்வரர் திருக்கோயிலுக்கு ஒரு திருத்தேர் வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடந்த கூட்டத் தொடரிலேயே ஒரு கோரிக்கை வைத்திருந்தார்கள். சுமார் 31 இலட்சம் ரூபாய் செலவில் அக்கோயிலுக்கான திருத்தேர் வழங்குவதற்கு ஒப்புதல் பெறப்பட்டிருக்கின்றது. அதேபோன்று பசு மடம் வேண்டுமென்று கேட்டிருந்தார். அந்தப் பசு மடத்திற்கும் 15 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. மேலும், புதிதாக அன்னதானக் கூடம்

[*2023 அக்டோபர் 11*

வேண்டும் என்றும் கேட்டிருந்தார்கள். அன்னதானக் கூடத்திற்கும் 40 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது.

வருகின்ற 25-10-2023 அன்று காலை 9-00 மணியளவில் இந்தப் பணிகள் அனைத்தும் துவங்குவதற்கான துவக்க விழா நடைபெறவிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் தம்பி திரு. பிரபாகரராஜா அவர்களையும் அழைக்கவிருக்கிறோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டதையும் தருகிறோம்; அவர்கள் கேட்காததையும் தருகிறோம்; உறுப்பினர்கள் கேட்டதையும், கேட்காததையும் தரக்கூடிய அரசு மாண்புமிகு முதல்வர் அவர்களின் அரசு என்பதற்கு இது ஓர் உதாரணம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரபாகரராஜா அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 229, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. இராஜேந்திரன், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

229—

தகவல் தொழில்நுட்பப் பூங்கா

***52429—திரு. வி.ஜி. இராஜேந்திரன்:**

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் தொகுதி, திருவாலங்காடு ஒன்றியம், சின்னம்மாபேட்டை ஊராட்சியில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

2023 அக்டோபர் 11]

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் அருகாமையில் உள்ள சென்னை சோழிங்கநல்லூரில் ELCOT *நிறுவனம் 377.08 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.258.56 கோடி முதலீட்டில்* ELCOSEZ *உருவாக்கியுள்ளது. இதில்* ELCOT *அனைத்து பொது உட்கட்டமைப்பு வசதிகளையும் ஏற்படுத்தி, 6,358 சதுரஅடி பரப்பளவு கொண்ட நிர்வாகக் கட்டடத்தையும் கட்டியுள்ளது.*

இந்த ELCOSEZ*-ல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்குக் குத்தகை அடிப்படையில் நில ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தொழில்நுட்ப நிறுவனங்கள் 1.09 கோடி சதுரஅடி பரப்பளவில் தங்களுடைய கட்டடப் பணிகளை முடித்து, தோராயமாக 67,000 பணியாளர்களுடன் இயங்கி வருகின்றன. இந்தத் தனியார் நிறுவனங்கள் மென்பொருள் உருவாக்கம் (*Software Development*), பராமரிப்பு மற்றும் சோதனை (*Maintenance and Testing*), ஆலோசனை மற்றும் வணிக வெளிப்பணி சேவைகள் (*Business Process Outsourcing*) போன்ற பணிகளை மேற்கொண்டு வருகின்றன.*

*மேலும், ஏற்றுமதி சார்ந்த குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் (*MSME*), தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவை நிறுவனங்களின் இடத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், 2.33 இலட்சம் சதுரஅடி பரப்பளவில், தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தின் கட்டுமானப் பணிகள் ரூ.88.21 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. இதுவரை* ELCOT *ஆல் உருவாக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பப் பூங்காக்களில் இதுவே பெரியதாகும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியவாறு திருவள்ளூர் மாவட்டத்தில் புதிதாக ஒரு தகவல் தொழில்நுட்பப் பூங்கா உருவாக்குவதற்கு தற்போது தேவை எழவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. இராஜேந்திரன் அவர்கள்.*

திரு. வி.ஜி. இராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களை வணங்குகிறேன். திருவள்ளூர் மாவட்டம் தற்போது தொழில் துறையில் வளர்ந்துவரக்கூடிய பகுதியாக உள்ளது. அதிலும் குறிப்பாக என்னுடைய திருவள்ளூர் தொகுதியில் மாண்புமிகு முதல்வர் அவர்களால் மப்பேடு பகுதியில்* Integrated Dry Port and

[*2023 அக்டோபர் 11*

multi-modal logistics hub, *புதிய பேருந்து நிலையம்,* bye-pass *சாலை என்று பல்வேறு கட்டமைப்புகள் உருவாகிக்கொண்டிருக்கின்றன. ஏதோ* IT Park *என்றாலே சோழிங்கநல்லூர் அல்லது* OMR-*க்கு தான் செல்ல வேண்டும் என்ற நிலை இல்லாமல், சென்னைக்கு ஒரு பக்கமாக இருக்கின்ற தெற்குப் பகுதியில் அனைத்து* IT Park-*ம் உருவாகிக் கொண்டிருக்கின்றன. இன்றைக்கு* CMDA limit-*ம்* extend *செய்யப்பட்டுள்ளது.இதுபோன்று வளர்ந்துவரக்கூடிய பகுதியில், தொழில்நுட்பப் பூங்கா அமைந்தால், அங்கிருக்கின்ற தொழில்நுட்பக் கல்லூரியில் பயிலும் மாணவர்கள்,* Computer Science *படித்த மாணவர்கள், இளைஞர்களுக்கு அவர்கள் படிப்பிற்கான வேலைவாய்ப்பு உருவாகும். ஏனென்றால் இன்றைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்களின் முயற்சியால் பரந்தூர் விமான நிலையம் வரவிருக்கிறது. அதுவும் ஸ்ரீபெரும்புதூர் பகுதிக்கு அருகாமையிலேயே வரவிருக்கிறது. அதிலும் என் தொகுதிக்கு அருகாமையிலேயே வரவிருக்கிறது. இங்கிருந்து சோழிங்கநல்லூர் பகுதிக்குச் செல்லவேண்டுமானால் கிட்டத்தட்ட 55 கி.மீ. தூரம் செல்லவேண்டியுள்ளது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைக் கூர்ந்து ஆய்வு செய்து பரிசீலிக்குமாறு தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11-35

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்திருக்கிற கோரிக்கை நியாயமானதாகும். ஒரே இடத்தில் அனைத்துப் பூங்காக்களையும் உருவாக்கக் கூடாது. ஆனால், தமிழக அரசைப் பொறுத்தவரையில், பல்வேறு துறைகள் தொழில்நுட்ப முன்னேற்றத்திற்காக முயன்று வருகின்றன. உதாரணமாக, தொழில் துறை மற்றும் குறு, சிறு தொழில் துறை உள்ளிட்ட பல துறைகள் தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அடித்தளங்கள்,* platforms *உருவாக்குவதிலும், தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் மற்றும் பன்னடுக்கு கட்டடங்கள் கட்டுவதிலும் ஈடுபட்டுள்ளன. குறிப்பாக, சென்னை மாநகருக்கு அருகில் அமைந்துள்ள ஆவடி தாலுகா, பட்டாபிராமில் 11.41 ஏக்கர் நிலப்பரப்பில் தகவல் தொழில்நுட்பப் பூங்காவை* TIDEL Park

2023 அக்டோபர் 11]

நிறுவனம் நிறுவி வருகிறது. இத்திட்டத்தின் முதல் கட்டமாக 5.57 இலட்சம் சதுர அடியில் தரைத்தளம் மற்றும் 21 அடுக்குமாடிகள் கொண்ட கட்டடம் உருவாக்கப்பட்டு வருகிறது. இணைந்து பணியாற்றக்கூடிய இடவசதி, அதாவது co-working space, *வணிக மையங்கள், மாடித் தோட்டம் போன்ற நவீன வசதிகளைக் கொண்டதாக இக்கட்டடம் உருவாக்கப்பட்டு வருகிறது. தற்போது கட்டுமானப் பணிகள் மற்றும் குளிரூட்டி வசதி, தீ பாதுகாப்பு, ஒருங்கிணைந்த கட்டட மேலாண்மை அமைப்பு, மின் தூக்கி முதலான வசதிகளை நிறுவும் பணிகள் தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே, திருவள்ளூர் தொகுதி, திருவாலங்காடு ஒன்றியம், சின்னம்மாபேட்டை ஊராட்சியில் புதிதாக மேலும் ஒரு தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதைத் தங்கள் வாயிலாகக் கூற விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. இராஜேந்திரன் அவர்கள்.*

திரு. வி.ஜி. இராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது வாய்ப்பு இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மறுபரிசீலனை செய்யச் சொல்லுங்கள்.*

திரு. வி.ஜி. இராஜேந்திரன்: *மறுபரிசீலனை செய்வதற்கு முன், கேட்டதும் கொடுப்பவரே கிருஷ்ணா, கிருஷ்ணா என்பது மாதிரி, நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்டதையெல்லாம் தமிழ்நாட்டிற்குக் கொடுத்திருக்கிறார்கள். அதனால், திருவள்ளூர் தொகுதியிலே ஒரு* IT park, *அதாவது தொழில்நுட்பப் பூங்காவையும் அவர் அளிப்பார் என்ற நம்பிக்கையோடு தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு அதிகமாக வேலைவாய்ப்பு உருவாக்கும் துறையாக இந்த தகவல் தொழில்நுட்பத் துறை இருக்கிறது. இன்று மாலை கூட, ஆயிரம்*

[*2023 அக்டோபர் 11*

வேலைவாய்ப்புகளை உருவாக்கும் ஒரு புதிய நிறுவனத்தை துவக்கி வைக்க நான் செல்ல இருக்கிறேன். எனது கணிப்பில் இந்த மாநிலத்தில், ஒரு மாதத்திற்கு பத்தாயிரம் வேலைவாய்ப்புகளை புதியதாக உருவாக்குகிறது இந்தத் துறை. இந்த அடிப்படையில், மாண்புமிகு உறுப்பினர் வைத்த கோரிக்கையினை கவனத்தில் வைத்து வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கு நாங்கள் பல முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம். அதுவும் குறிப்பாக, அந்த மாவட்டத்தில் ஒரு பெரிய நிறுவனமோ அல்லது தொழில் அதிபர்களோ முன் வந்தால் அவர்களுக்கு ஏற்ப ஒரு தொழில்நுட்பப் பூங்கா அல்லது ஒரு கட்டடம் உருவாக்கப்படுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, முயற்சி செய்வோம் என்று உறுதியளிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு)*

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் 23 முதல் 31 வரை) @

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. விதி 110-ன்கீழ் அறிக்கை

தஞ்சாவூர் மாவட்டம், ஈச்சங்கோட்டை வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கு டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் பெயரைச் சூட்டுதல் மற்றும் மாணவர்களுக்கு ஆண்டுதோறும் விருதுகள் வழங்குதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஒரு நிமிடம். விதி 110-ன்கீழ் அறிக்கை இருக்கிறது. அது முடிந்தவுடனே பேசலாம். உட்காருங்கள். பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

@ *215 முதல் 860 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.*

2023 அக்டோபர் 11]

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய ஒன்றியம் உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெறுவதற்கும், இந்திய மக்களின் பட்டினிச் சாவைத் தடுப்பதற்கும் 1960-களில் பசுமைப் புரட்சித் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்தியவரான மறைந்த வேளாண் விஞ்ஞானி டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களின் அளப்பரிய பணிகளை நினைவுகூரும் வகையில் விதி எண் 110-ன்கீழ் அறிவிப்பை வெளியிடுவதில் நான் பெருமைப்படுகிறேன்.

வேட்டைச் சமூகமாக இருந்த மனித இனம் வேளாண் தொழிலைத் தேர்ந்தெடுத்தது என்பது மனித இனத்தின் பரிணாம வளர்ச்சி என்பதுடன் அறிவியல் வளர்ச்சியின் அடையாளமும் ஆகும். வேளாண் அறிவியலை இருபதாம் நூற்றாண்டில் இந்தியாவுக்கு ஏற்றவாறு பயன்படுத்தும் பல்வேறு ஆராய்ச்சிகளை வெற்றிகரமாக நிகழ்த்திக் காட்டி உலகளவில் புகழ் பெற்றவர் டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்கள்.

முற்பகல் 11-40

தமிழ்நாட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சியில் வேளாண் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டு, வேளாண் ஆராய்ச்சி மையங்கள் அதிகளவில் உருவாக்கப்பட்டு, உணவு உற்பத்தியில் புரட்சியும், அதனை அனைவருக்கும் பகிர்ந்தளிப்பதற்கான செயல்முறைத் திட்டமும் மேற்கொள்ளப்பட்டது. இன்றளவிலும் இந்தியாவின் வெற்றிகரமான மாடலாக இருப்பது முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சிக் காலத்து மாடல்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பங்களிப்பில் அறிவியலாளர் டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களின் ஆலோசனைகளும் இணைந்திருக்கின்றன.

இன்று காலநிலை மாற்றம்தான் பெரிய பிரச்சினையாக மாறிக் கொண்டு இருக்கிறது. இதனை முன்கூட்டியே உணர்ந்து, காலநிலை மாற்றம் குறித்து 1969 ஆம் ஆண்டிலேயே இந்திய அறிவியல் மாநாட்டில் பேசி இருக்கிறார். உலகம் அதிகமாக வெப்பமாவதால் கடல் மட்டம் உயரும் என்பது குறித்தும் 1989 ஆம் ஆண்டு டோக்கியோ மாநாட்டில் எச்சரிக்கை விடுத்தார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்மீது அளப்பரிய அன்பு கொண்டவரான திரு. எம்.எஸ். சுவாமிநாதன் அவர்கள், தலைவர் கலைஞர் மறைவின்போது மிக உருக்கமான இரங்கற்குறிப்பையும் பதிவு செய்திருந்தார். தன்னுடைய பெயரிலான

[திரு. மு.க. ஸ்டாலின்] [2023 அக்டோபர் 11

எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளைக்கு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் நிலம் தந்து உதவியதையும், ஜே.ஆர்.டி. டாடா பெயரிலான சுற்றுச்சூழல் தொழில்நுட்ப மையத்தை இந்தியாவின் குடியரசுத் தலைவராக இருந்த திரு. கே.ஆர். நாராயணன் அவர்களுடன் இணைந்து முத்தமிழறிஞர் கலைஞர் திறந்து வைத்ததையும் நன்றிப் பெருக்குடன் பதிவு செய்துள்ளார்.

தமிழ்நாட்டிற்கான உயிரி தொழில்நுட்பக் கொள்கையை உருவாக்கியவரும் முத்தமிழறிஞர் கலைஞர்தான் என்பதைக் குறிப்பிட்டுள்ள திரு. எம்.எஸ். சுவாமிநாதன் அவர்கள், கலைஞரின் ஆட்சி எப்போதும் உழவர்கள் நலன் நாடும் ஆட்சியாகவே இருந்தது என்பதையும், (மேசையைத் தட்டும் ஒலி) விஞ்ஞானிகளின் விஞ்ஞானியாக முத்தமிழறிஞர் கலைஞர் திகழ்ந்தார் என்றும் பாராட்டியுள்ளார்.

2021-ல் எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளை சார்பில் நடந்த பன்னாட்டுக் கருத்தரங்கைத் தொடங்கி வைக்கும் வாய்ப்பு எனக்கு அமைந்தபோது, அவருடைய பணிகளைப் பாராட்டிப் பேசினேன். தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு இன்றைய அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளையும், இந்த அரசை வழிநடத்தும் பொறுப்பை ஏற்றுள்ள முதலமைச்சராகிய என்னையும் அவர் பாராட்டி, வளர்ச்சிக்கான ஆலோசனைகளை வழங்கினார்.

பசுமைப் புரட்சியின் தந்தை எனப் போற்றப்படும் டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்கள் 28-9-2023 அன்று மறைவெய்தியபோது அவரது உடலுக்கு நேரில் அஞ்சலி செலுத்தியதுடன், அரசின் சார்பில் அவருக்கு இறுதி மரியாதை செலுத்தப்பட்டது. தமிழ்நாட்டைச் சேர்ந்த வேளாண் விஞ்ஞானியான டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்கள் இந்திய அளவில் முத்திரை பதித்து, உலகளவில் புகழ் பெற்றவர். பத்மவிபூஷன், ரமோன் மகசசே உள்ளிட்ட உயரிய விருதுகளைப் பெற்றுள்ள அவரது நினைவைப் போற்றுகிற வண்ணம் தமிழ்நாடு அரசின் சார்பில் அறிவிப்பை வெளியிடுகிறேன்.

தஞ்சாவூர் மாவட்டம், ஈச்சங்கோட்டையிலுள்ள வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் இனி டாக்டர். எம்.எஸ். சுவாமிநாதன் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் என்று அழைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

2023 அக்டோபர் 11] [திரு. மு.க. ஸ்டாலின்]

இளம் வேளாண் அறிவியலில் பயிர்ப்பெருக்கம் மற்றும் மரபியல் பாடங்களில் அதிக மதிப்பெண் பெற்று முன்னிலை பெறும் மாணவருக்கு டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்கள் பெயரில் ஆண்டுதோறும் விருது வழங்கப்படும் என்பதை அறிவிப்பதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறேன் என்பதைத் தெரிவித்து அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

3. தஞ்சாவூர் மாவட்டம், ஈச்சங்கோட்டை வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கு டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் பெயரைச் சூட்டுதல் மற்றும் மாணவர்களுக்கு ஆண்டுதோறும் விருது வழங்குதல் குறித்த முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, இல்லை. நன்றி சொல்வார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் விதி 110-ன்கீழ் நன்றி சொல்ல வரும்போது, சுருக்கமாக ஒரு வார்த்தையில் பேசி அமர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். (குறுக்கீடு) இல்லை. இது முடிந்துவிடட்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த மாபெரும் வேளாண் விஞ்ஞானி டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களுக்கு சிறப்பு செய்கின்ற வகையில், விருது வழங்குகின்ற நிகழ்வையும், வரலாற்றில் இடம்பெறக்கூடிய வகையில், வேளாண்மைக் கல்லூரிக்கு அவரது பெயரைச் சூட்டுகின்ற அறிவிப்புகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டுள்ளார்கள். அவர் இறந்தபோது, நேரில் சென்றது மட்டுமல்லாமல், தன் அயராத உழைப்பு, அரசு நிமித்தமான பணிகள், பல்வேறு அரசியல் சூழல்கள் எல்லாவற்றிற்கு மத்தியிலும், யாருடைய மனமும் கோணாதவண்ணம், சாதாரண அடித்தளத்திலிருக்கிற ஏழை பத்திரிகையாளர்களினுடைய குடும்பம் வரையிலும் சென்று, அந்தக் குடும்பங்களுக்கு ஆழ்ந்த இரங்கலைப் பதிவு செய்து, அவர்களோடு 'நான் இருக்கிறேன்' என்கிற உணர்வை ஊட்டுகின்ற முதல்வராக உள்ளார்கள். சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் போன்ற பல்வேறு சமூக மாற்றத்திற்கு உழைக்கின்ற திரு. நிர்மல் போன்றவர்களின் இல்லத்திற்கே சென்று 'நான் இருக்கிறேன், உங்கள் பணி தொடரட்டும்' என்று வாழ்த்துகிற உள்ளமும், இதுபோன்ற வேளாண் விஞ்ஞானிகளின் வீடு தேடி சென்று அவர்களின் குடும்பங்களுக்கு ஆறுதல் சொல்கின்ற ஒரு*

[திரு. தி. வேல்முருகன்] [*2023 அக்டோபர் 11 முதல்வராகவும் திகழ்ந்து, தொடர்ந்து தமிழ் சமூகத்தின் அன்பைப் பெறுகின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வேளாண் விஞ்ஞானி, டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களின் பெயரில் விருதையும், எதிர்காலச் சந்ததிகளுக்கு அவர் ஆற்றிய பணிகளையும் எடுத்துச் சொல்கின்ற நல்வாய்ப்பையும் உருவாக்கித் தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் விதி 110-ன்கீழான அறிவிப்பை வரவேற்று, நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.*

முற்பகல் 11-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்.*

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண் விஞ்ஞானி டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் போன்று இன்னொரு விஞ்ஞானி எவ்வாறு, எப்படி, உருவாகுவார் என்று தெரியாது. தமிழகத்திலே பிறந்து, உலகளவிலே புகழ்பெற்று, காலநிலை மாற்றம் பற்றி வெகு ஆண்டுகளுக்கு முன்பாகவே பேசி, எதிர்காலத்தைக் கணித்துச் சொல்லக்கூடிய ஒரு சிறந்த விஞ்ஞானியாக அவர் வாழ்ந்திருக்கிறார். யாரிடமும், எந்தவிதமான வெறுப்பும் காட்டாமல், அரசியல் சக்திகளோடு ஒரு சரியான உறவை மேம்படுத்தி, வேளாண்மை முன்னேறுவதற்கான பல்வேறு கண்டுபிடிப்புகளை கண்டுபிடித்து, விவசாயிகளை வாழ வைக்கின்ற ஒரு விஞ்ஞானியாக அவர் வாழ்ந்திருக்கிறார். யாரும் எந்தக் கோரிக்கையையுமே வைக்காமல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், விஞ்ஞானி டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களுடைய சிறப்புகளை நினைவுகூர்ந்து இன்றைக்கு விதி 110-ன்கீழ் அறிவித்திருப்பதை கொங்குநாடு மக்கள் தேசியக் கட்சியின் சார்பாக நான் நெஞ்சார வரவேற்று, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் எந்தத் துறையில் சாதனை புரிந்தாலும் அதனை அங்கீகரிக்கக்கூடிய ஒரு மிகப் பெரிய பணியை நமது மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் செய்து வருகிறார்கள். அந்த வகையிலே, அறிவியலாளர் டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களுடைய*

2023 அக்டோபர் 11] [முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா]

பணிகளை அங்கீகரிக்கக்கூடிய வகையிலே, எதிர்கால சந்ததியினரும்கூட அவருடைய ஆய்வுகளைப் பற்றியெல்லாம் அறிந்துகொள்ளக்கூடிய வகையிலே தஞ்சாவூர் மாவட்டம், ஈச்சங்கோட்டையிலே செயல்படக்கூடிய வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் இனி அறிவியலாளர் டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களின் பெயரில் இயங்கும் என்றும், அதேபோல, தமிழ்நாடு விவசாயப் பல்கலைக்கழகத்திலே முதன்மை மதிப்பெண்களைப் பெறக்கூடிய மாணவர்களுக்கு எம்.எஸ். சுவாமிநாதன் அவர்கள் பெயரிலே விருது வழங்கப்படும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110-ன்கீழ் செய்த அறிவிப்புகளை, மனிதநேய மக்கள் கட்சியின் சார்பாக மனதார வரவேற்று, விடைபெறுகிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்.*

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பசுமைப் புரட்சியின் தந்தையும், வேளாண் விஞ்ஞானியுமான, மரியாதைக்குரிய டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களின் பெயரை சிறப்பிப்பதற்கும், அவருக்குப் புகழ்சேர்க்கும்வண்ணமும்தஞ்சையில்இயங்குகின்றவேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையத்தை அவரது பெயரைக் கொண்டு, அவரது பெயரைத் தாங்கி அழைப்பதற்கும், வேளாண் பல்கலைக்கழகத்தில் பயிலுகின்ற மாணவர்களுக்கு அவரது பெயரில் விருது வழங்குவதற்கும், விதி 110-ன்கீழ் அறிவிப்புகளை வெளியிட்டுள்ள மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எனது நெஞ்சார்ந்த நன்றியையும், வரவேற்பையும் தெரிவித்துக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி சொல்லி அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன்.*

திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண் புரட்சிக்கு வித்திட்ட டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களுக்குப் புகழ் சேர்க்கும் வகையில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110-ன்கீழ் தஞ்சாவூர் மாவட்டம், ஈச்சங்கோட்டையிலே இயங்கி வருகின்ற வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையத்திற்கு*

[திரு. ட்டி. இராமச்சந்திரன்] [2023 அக்டோபர் 11 டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களின் பெயரிடப்படும் என்ற அறிவிப்பையும், அதேபோல, வேளாண் பல்கலைக்கழகத்தில் படிக்கின்ற மாணவர்களுக்கு டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களின் பெயரிலே விருதுகள் வழங்கப்படுமென்ற அறிவிப்பையும் அறிவித்து, வேளாண் விஞ்ஞானியைச் சிறப்பித்திருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிவிப்புகளை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வரவேற்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி.

முற்பகல் 11–50

திரு. வி.பி. நாகைமாலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே பிறந்து, உலகளவிலே பாராட்டப்பெற்ற மாபெரும் ஆளுமை டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்கள். உணவு உற்பத்தியில் இந்தியாவில் ஒரு புரட்சியை உருவாக்கியவர். இந்தியாவிலே பட்டினிச் சாவுகளே இருக்கக்கூடாது என்று கனவு கண்டவர். அவர் விவசாய உற்பத்தியைப் பற்றி மட்டும் கவலைப்படவில்லை.விவசாயிகளுடைய விவசாயப்பொருட்களைப் பற்றியும் டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் கவலைப்பட்டார். "விவசாயிகள் உற்பத்தி செய்கிற அந்தப் பொருட்களுக்கு ஒரு கட்டுப்படியான விலையை நிர்ணயம் செய்ய வேண்டும், கட்டுப்படியான விலை வேண்டும்" என்று அவர் சொன்னார். ஆகவே, விவசாயிகள் உற்பத்தி செய்கிற, உற்பத்திச் செலவோடு, 50 சதவிகிதம் தொகையைக் கூட்டி அந்தப் பொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்ய வேண்டுமென்று விவசாயிகளைப் பற்றியும் கவலைப்பட்டவர் டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்கள். அந்தவகையில் அவரைப் போற்றுகிற வகையில், அவருடைய புகழ் பாடுகிற வகையில், நம்முடைய முதல்வர் அவர்கள் தஞ்சை மாவட்டம், ஈச்சங்கோட்டையில் உள்ள விவசாயக் கல்லூரிக்கு அவருடைய பெயரையும், வேளாண்மைக் கல்லூரியில் இளம் வேளாண் அறிவியலில் பயிர்ப்பெருக்கம் மற்றும் மரபியல் பாடங்களில் கூடுதல் மதிப்பெண் பெறும் மாணவர்களுக்கு விருது வழங்கப்படும் என்ற அறிவிப்பையும் அறிவித்து, டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களுக்கு பெருமை சேர்த்திருக்கிற மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மனமார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

2023 அக்டோபர் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன் அவர்கள்.*

திரு. ம. சிந்தனை செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பசுமைப் புரட்சிக்கு வித்திட்ட, பட்டினிச் சாவைத் தடுக்கிற வகையில், விஞ்ஞானப் பணிகளை ஆற்றிய மாபெரும் ஆளுமை, சர்வதேச அளவில் அறியப்பட்டிருக்கிற அறிஞர், அமரர் டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களுக்கு சிறப்பு செய்கிற அளவில் தமிழக அரசு சார்பிலே மாண்பமை முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிற இந்த அறிவிப்பை விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் மனம் நிறைந்து வாழ்த்தவும், வரவேற்கவும் கடமைப்பட்டிருக்கிறோம்.*

இயற்கை மேலாண்மை செய்வதுதான் விஞ்ஞானம் என்று கருதியிருந்த மேலை அறிவியல் பார்வையை முழுவதுமாக மாற்றி, இயற்கையோடு இணைந்து வாழ்ந்து, இயற்கைக்கேற்ற வகையில் நம்மை தகவமைத்துக்கொள்வதுதான் ஆகச் சிறந்த பணி என்பதைச் சுட்டிக்காட்டிய ஒரு மகத்தான ஆளுமை அய்யா எம்.எஸ். சுவாமிநாதன் அவர்கள்.

1980-களின் இறுதியில், 1990-களின் தொடக்கத்திலே இன்று பரப்பரப்பாகப் பேசப்படுகிற பருவநிலை மாற்றம் தொடர்பான கருத்துகளை முன்மொழிந்து, சர்வதேச அளவில் விழிப்புணர்வை உருவாக்கியவர். பட்டினிச் சாவை தடுத்தார் என்ற அளவில் மட்டுமல்ல, நிலவுடைமை, சமூகக் கட்டமைப்பு, சாதிய படிநிலைகளையும் பாதுகாத்தவர். ஆகவே, இயற்கைச் சூழலில் அவர் ஏற்படுத்திய மகத்தான மாற்றங்கள் சமூகத்திலும் ஒரு மாபெரும் மாற்றத்தை உருவாக்கின. ஒடுக்கப்பட்ட, ஏழையெளிய, நிலத்தைச் சார்ந்து வாழ்கிற நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு அது ஒரு மாபெரும் விடுதலை தந்தது என்பதையும் மனம் நிறைந்து இந்த நேரத்தில் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எந்த ஆளுமையையும் அவர் பிறப்பின் அடிப்படையிலே மதிப்பீடு செய்கிற சனாதன பார்வையை மாற்றி, அவர் எந்தச் சமூகத்தைச் சார்ந்தவராக இருந்தாலும், இந்த உலகத்திற்கு, தமிழ்ச் சமூகத்திற்கு அவர் என்ன செய்தார் என்பதை மாத்திரமே பார்த்து, அவரைப் போற்றிக் கொண்டாடுகிற கலைஞர் அவர்களின் சமூக நீதிப் பார்வையை தமிழக அரசு இன்று உள்வாங்கி, வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கு

[திரு. ம. சிந்தனை செல்வன்] [*2023 அக்டோபர் 11*

டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களுடைய பெயரையும், விருதுகள் அளிக்கிற அந்த முன் முயற்சியை முன்னெடுத்திருக்கிற மாண்பமை தமிழக முதல்வர் அவர்களுக்கு மீண்டுமொருமுறை மனம் நிறைந்த நன்றியைப் பதிவு செய்து, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் அவர்கள்.*

திருமதி வானதி சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உணவு பற்றாக்குறை இருக்கின்ற நாடு என்ற பெயரையெல்லாம் தாண்டி, இன்று அரிசி, கோதுமை போன்றவற்றை ஏற்றுமதி செய்கின்ற ஒரு நாடாக மாறியிருக்கிறது என்றால், வேளாண் விஞ்ஞானி, மான்கொம்பு சாம்பசிவம் சுவாமிநாதன் அவர்களுடைய பங்களிப்பை தமிழகத்திற்கு மிகச் சிறந்த பெருமையாக நாங்கள் பார்க்கிறோம். அந்த வகையில் மாநில அரசினுடைய இந்த முயற்சிக்கு பாரதிய ஜனதா கட்சியின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.*

முற்பகல் 11–55

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"தோன்றின் புகழோடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

என்ற வள்ளுவரின் வாய்மொழிக்கேற்ப, தமிழ்நாட்டில், கும்பகோணத்தில் பராம்பரியமிக்க குடும்பத்தில் பிறந்து, தந்தை வேறு வழியில் முயற்சி செய்து அவரை உயர்த்த நினைத்தாலும்கூட, அதையெல்லாம் மறுத்து, வேளாண் துறைக்கே சென்று, உயர்ந்த நோக்கத்திற்காகச் செயலாற்றி, தமிழ்நாட்டிற்கு மட்டும் பெருமை சேர்க்காமல், இந்தியாவையும் கடந்து, உலகளவில் புகழ்பெற்றவரை, அவர் மறைந்தாலும், அவர் பெயர் நிலைத்து நிற்க வேண்டுமென்ற உயர்ந்த நோக்கத்திற்காக, அவர் பெயர் நிலைப்பதற்கு, வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையத்திற்கு அவர் பெயரையும், இளம் விஞ்ஞானிகளுக்கு அவர் பெயரில் விருதையும்

2023 அக்டோபர் 11] [திரு. ஜி.கே. மணி]

வழங்குகின்ற வகையில் இந்த மகத்தான அறிவிப்பைச் செய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு, அவரைப் பற்றி இந்த நாளில் நாம் நினைத்துப் பார்ப்பதை பெருமையாகக் கருதுகிறேன்.

வேளாண் விஞ்ஞானி எம்.எஸ். சுவாமிநாதன் அவர்கள், இந்திய நாட்டில் உணவுப் பற்றாக்குறை ஏற்பட்ட நேரத்தில் குறிப்பாக, அன்னை இந்திரா காந்தி அவர்கள் பிரதம மந்திரியாக இருந்த நேரத்தில், உணவுப் பற்றாக்குறை இருந்தது. அந்த உணவுப் பற்றாக்குறையைப் போக்குவதற்கு மத்திய அரசோடு இணைந்து, நெல் உற்பத்தியைப் பெருக்குவதற்கு எந்த வகையிலெல்லாம் பாடுபட வேண்டுமென்று புதிய ஆராய்ச்சிகளைக் கண்டுபிடித்து, நெல் உற்பத்தியைப் பெருக்கி, ஏற்றுமதிக்கு வழி வகுத்தவர்.

அதுமாதிரி, வடபுலத்தில் கோதுமை உற்பத்தியைப் பெருக்குவதற்கு என்ன வழி என்று ஆராய்ந்து, கோதுமை உற்பத்தியிலும் சாதனை படைத்து, கோதுமையை ஏற்றுமதி செய்து சாதனை படைத்தவர். அப்படிப்பட்ட புகழ் பெற்றவர், ஆராய்ச்சி மையங்களையெல்லாம் நிறுவியவர். அவருடைய மகள்கூட அவர் வழியிலேயே ஐக்கிய நாடுகளின் சபையில் விஞ்ஞானி என்று பெயர் பெற்றவர், சகோதரியார் சௌமியா சுவாமிநாதன் அவர்கள் என்பதை நாம் நன்கு அறிவோம். நம்முடைய முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு நெருங்கியவர் என்பதை நான் அறிவேன். காரணம், எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களுடன் பலமுறை பேசியவன், நேரில் சந்தித்தவன். எங்கள் மருத்துவர் ஐயா அவர்கள், மருத்துவர் அன்புமணி அவர்களுடன் எல்லாம் நெருங்கிப் பேசிய தொடர்புண்டு. அப்படிப்பட்ட உயர்ந்த பெருமானாரின் புகழ் தமிழ்நாட்டில் நிலைத்திருக்க வேண்டும், பெயர் மறைந்து விடக் கூடாது என்ற வகையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உயர்ந்த நோக்கம், பரந்த நோக்கம், பரந்த மனப்பான்மை எடுத்துக்காட்டுகிறது என்பதை நான் அறிவேன். அவருடைய இறுதி ஊர்வலத்திற்கு முன்பு, நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அங்கு சென்று, அவருக்கு புகழ் அஞ்சலி செலுத்திய நேரத்தில், என்னுடைய உடல்நிலைக் குறைவின் நேரத்தில்கூட, நானும் அங்கு சென்று புகழ் அஞ்சலி செலுத்தி வந்தேன். ஆகவே, எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களின் புகழ், ஒரு தமிழன் என்ற உணர்வு இந்திய நாடெங்கும், உலகெங்கும் பரவுகின்ற வகையிலும், தமிழ்நாட்டில் புகழ் நிலைத்திருக்கும்

[திரு. ஜி.கே. மணி] [2023 அக்டோபர் 11 வகையிலும் மகத்தான அறிவிப்புகளை வெளியிட்டிருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்லி, வரவேற்று அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள்.

திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டாக்டர். எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களுக்கு ஓர் அங்கீகாரம் அளித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த தேச மக்களுக்கு யார், என்ன பங்களிப்பு செய்தாலும், அனைவரையும் அங்கீகரிக்கின்ற ஆட்சியாக இந்த ஆட்சி நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. குறிப்பாக, வெண்மைப் புரட்சியை, பசுமைப் புரட்சியை ஏற்படுத்தியவர்கள் தென்னிந்தியர்கள். பசுமைப் புரட்சியை ஏற்படுத்தியவர் ஒரு தமிழர். குறிப்பாக கோதுமை பற்றாக்குறை காலத்தில், அரிசியை பார்க்க முடியாத காலத்தில் IR 8 என்ற நெல்லை அறிமுகப்படுத்தி, அந்த IR 8 கண்டுபிடிப்பை வட ஆற்காடு மாவட்டத்தில் சோதனை மூலமாக வெற்றிகரமாக அறிமுகப்படுத்தினார். அன்றைய பிரதமர் அன்னை இந்திரா காந்தி அவர்களும், மாண்புமிகு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும் தேசிய அளவிலும், மாநில அளவிலும் அவரை அங்கீகரித்து, அவரை ஊக்குவித்து, ஒரு மிகப் பெரிய உலக வெற்றி நாயகனாக அவரை உருவாக்கினார்கள். அந்த அடிப்படையில் அவருக்குக் கொடுத்திருக்கின்ற அங்கீகாரம் வரவேற்கத்தகுந்தது, பாராட்டத்தகுந்தது. அதேபோன்று, அவர் இறந்த நாளன்று, நான் வட வியட்நாமில் Ho Chi Minh-ன் நினைவு தினத்தில், அங்கு ஒரு நிகழ்ச்சியில் கலந்துகொண்டிருந்தேன். அங்கே விளைவிக்கும், அந்த அரிசிக்குப் பெயரே, அந்த வித்திற்குப் பெயரே, அந்த விதைக்குப் பெயரே 'சுவாமிநாதன் வித்து'; அவருடைய மாணவர் Le Minh Hoan என்பவர்தான் இப்போது அங்கே அதிபராக இருக்கின்றார். பேராசிரியர் சுவாமிநாதனிடம் அவர் Ph.D. படித்தவர். வேளாண்மைத் துறை அமைச்சராகவும், உலக அரிசி மையத்தின் தலைவராகவும், இப்போது பிரதமராகவும் இருக்கிறார். இப்படிப்பட்ட உலக அளவில் புகழ்பெற்ற ஒரு வேளாண்மை விஞ்ஞானிக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிறப்பு சேர்த்தது உண்மையிலேயே பெருமைக்குரியது. அதேபோன்று,

2023 அக்டோபர் 11][திரு. கு. செல்வபெருந்தகை]

அவருடைய மகளும் கொரோனா பெருந்தொற்று காலத்தில் ஒரு மிகப் பெரிய பங்களிப்பை உலக சுகாதார நிறுவனத்துடன் சேர்ந்து தமிழ்நாட்டிற்கு அளித்திருக்கிறார். ஆகவே, இந்த அறிவிப்பு என்பது வரவேற்கத்தகுந்தது, பாராட்டத்தகுந்தது. என்னுடைய மனமார்ந்த நன்றியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள்.

நண்பகல் 12-00

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழக விவசாயிகள் மட்டுமல்லாமல், தமிழக மக்கள் அனைவரும் மகிழத்தக்க வகையில் இன்றைக்கு ஒரு சிறப்பான அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார்கள். வேளாண் விஞ்ஞானி டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்கள், பருவகால மாற்றத்தால் உணவு உற்பத்தியில் ஏற்படக்கூடிய பாதிப்புகளை ஆராய்ச்சி செய்து, அதை நிவர்த்தி செய்கின்ற வகையில் நெல் உற்பத்தியாக இருந்தாலும், கோதுமை உற்பத்தியாக இருந்தாலும், இந்தியத் திருநாடு கடந்து உலகளவில் அவருடைய ஆராய்ச்சியைக் கையில் எடுத்துக்கொண்டு, அந்த நாட்டில் உணவுப் பஞ்சமே, உணவுப் பற்றாக்குறையே வராத சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறார் என்பது தமிழ்நாட்டிற்கு மிகப் பெரிய பெருமை என்பதனை நான் இந்த நேரத்திலே தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அவருக்குப் பல நிலைகளில் நின்று உதவிக்கரம் நீட்டியிருக்கிறார்கள். ஆராய்ச்சிக்கு ஊக்கம் அளித்து இருக்கிறார்கள் என்ற செய்தியையும் இந்த நேரத்திலே நான் பதிவு செய்து, உலக அளவில் பெயர் பெற்ற வேளாண் விஞ்ஞானி டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் ஐயா அவர்களுக்கு பெருமை சேர்க்கின்ற வகையில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கு அவர்களுடைய திருப்பெயரையும், ஆராய்ச்சியில் சிறந்து விளங்குகின்ற மாணவர்களுக்கு அவரது பெயரால் விருதுகள் வழங்கப்படுமென்று தெரிவித்து இருப்பது உள்ளபடியே அனைவருக்கும் மகிழ்ச்சி தரக்கூடிய ஒரு நல்ல அறிவிப்பாக நான் கருதுகின்றேன். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்து அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

[*2023 அக்டோபர் 11*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன் அவர்கள்.*

திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண் விஞ்ஞானி டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் ஐயா அவர்கள் சிறந்த உலகளாவிய புகழ் பெற்ற ஒரு விஞ்ஞானியாக திகழ்ந்திருக்கிறார். நாடு ஒரு பக்கம் மக்கள்தொகைப் பெருக்கத்தாலும், இன்னொரு பக்கம் விளை நிலங்கள் குறைந்து வருகிற காரணத்தாலும், இயற்கைச் சீற்றங்களைச் சந்திக்க வேண்டிய நிகழ்வுகள் இருப்பதாலும், வேளாண் விஞ்ஞானி ஐயா டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்கள் வீரிய வித்துக்களை, குறுகிய கால வித்துக்களை, விளைச்சல் அதிகம் தரக்கூடிய வித்துக்களை, நோய் மற்றும் பூச்சித் தாக்குதலைத் தாங்கக்கூடிய வித்துக்களையெல்லாம் கண்டறிந்து, இந்த நாட்டிற்குத் தந்திருப்பதன் விளைவாக, உற்பத்தியைப் பெருக்கி பசி, பஞ்சம், பட்டினி என்ற நிலையிலிருந்து நாம் நம்மைப் பாதுகாத்துக்கொள்ள பெருமளவில் ஐயா வேளாண் விஞ்ஞானி டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்கள் உழைத்திருக்கிறார்கள். காலம் எல்லாம் உழைத்திருக்கிறார்கள். அவர் நினைத்திருந்தால் அவர் பெற்ற பட்டத்தை வைத்து, பதவியை வைத்து, எங்கேயோ புகழ்பெற்ற இடத்தில் பணியாற்றியிருக்கலாம். ஆனால், அவர் நாட்டுக்கு உழைக்க வேண்டும், இந்த மக்களுக்காக உழைக்க வேண்டும், புதிய புதிய கண்டுபிடிப்புகளை உற்பத்தித் துறையில் தரவேண்டும், வேளாண் துறையில் தரவேண்டும் என்பதற்காக, இந்தத் துறையை அவரே தேர்வு செய்திருக்கிறார். தோட்டக் கலை, விவசாயத் துறை ஆகிய இரண்டிலுமே மத்திய அரசு அவருடைய சேவையைப் பாராட்டி, அவருக்குப் பல்வேறு விருதுகளை வழங்கியிருக்கிறது. அப்படிப்பட்ட நம்முடைய ஐயா வேளாண் விஞ்ஞானி டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களுடைய Foundation குத்தகை பாக்கி கொடுக்க வேண்டும் என்ற ஓர் உத்தரவு வந்த நேரத்தில், அந்தத் தொகை எவ்வளவு என்று இந்த நேரத்திலே எனக்குச் சரியாக நினைவில் இல்லை. அந்தப் பெருந்தொகையை அன்றைக்கு முதலமைச்சராக இருந்த அண்ணன் எடப்பாடியார் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இரத்து செய்து அந்த foundation-ஐக் காப்பாற்றுவதற்கு மிகப்பெரிய அளவில் உதவியிருக்கிறார்கள். அந்த அளவில் ஐயா வேளாண் விஞ்ஞானி டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களுடைய புகழ் என்றைக்கும் இருக்கும் அவருடைய புகழ் ஓங்குக என்று சொல்லி, என் உரையை முடிக்கின்றேன். வணக்கம்.*

2023 அக்டோபர் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண் விஞ்ஞானி டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களுடைய திருப்பெயரை அரசினுடைய ஒரு வேளாண் கல்லூரிக்கு சூட்டுகின்ற அறிவிப்பை இந்த மாமன்றத்திலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இந்த அரிய, பெரிய போற்றுதலுக்குரிய ஒரு காரியத்தைச் செய்து இருக்கிறபொழுது வேளாண் விஞ்ஞானி டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களுடைய பெருமைகளை இங்கு இருக்கக்கூடிய மாமன்ற உறுப்பினர்கள் அற்புதமாக எடுத்துச் சொன்னார்கள், அது ஒருபுறம். ஆனால், யாருமே சொல்லாமல், யாருமே இந்தக் கோரிக்கையை எழுப்பாமல் தானாகவே சிந்தித்து, இந்த முடிவுக்கு வந்து வேளாண் விஞ்ஞானி டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் பெயரை, அந்தக் கல்லூரிக்குச் சூட்டி (மேசையைத் தட்டும் ஒலி) அதன்மூலம் இந்த மன்றத்தில் கட்சி மனமாச்சரியங்களுக்கு அப்பாற்பட்டு பாராட்டி இருக்கிறீர்களே, அதுவும் பெருமைக்குரிய ஒரு காரியம்தான்.*

பிற்பகல் 12-05

தமிழ்நாட்டிலே பிறந்த ஒரு விஞ்ஞானியை நாம் புகழாவிட்டால், மரியாதை செலுத்தாவிட்டால் யார் செய்வார் இந்தக் காரியத்தை என்று நினைத்து நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தப் பணியைச் செய்திருக்கிறார்கள். நான்கூட பக்கத்திலே இருந்தேன்; எனக்குக்கூடத் தெரியாது. ஆகவே, இதைச் சொன்னது மகிழ்ச்சிக்குரியது. காரணம், அவருடைய விஞ்ஞானம் மக்களைப்பற்றி அல்ல. இன்றைக்கு அழிவுக்கு பல விஞ்ஞானிகள் பயன்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களைப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். மணிமேகலையில் ஒரு வரி 'பசிப்பிணி மருத்துவன்' என்று வரும். அதாவது, பசியை ஒரு நோய் என்றே சொன்னான் தமிழன்; பசி என்பது ஒரு நோய்; அந்த நோயைத் தீர்த்து யார் சோறு போட்டு அந்தப் பசியை அடக்குகிறார்களோ அவன் மருத்துவன். என்ன அழகாகச் சொல்லியிருக்கிறார்; "பசிப்பிணி மருத்துவன்" என்று உழவர்களைச் சொல்லியிருக்கிறார். எனவே, அந்த உழவர்களுடைய பணியை மேம்படுத்துவதற்காக, அவர் ஆராய்ச்சிமூலம் கண்டுபிடித்தவைகளை உலகம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. ஒரு தமிழனுடைய ஆராய்ச்சியை உலகம்

[திரு. துரைமுருகன்] [2023 அக்டோபர் 11

புகழ்கிறது. அந்தப் புகழ் பெற்றவருக்கு இன்றைக்கு அழியாத ஒரு சின்னமாக வேளாண்மைக் கல்லூரிக்கு அவரது பெயரைச் சூட்டியிருக்கிறார். ஆகவே, இப்படிப்பட்ட பணியைச் செய்திருக்கிற நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நம்முடைய பாராட்டைத் தெரிவித்து அமைகின்றேன். நன்றி, வணக்கம். (குறுக்கீடு)

4. தகவல் கோரல்

(அ) திருச்சி மாவட்டம், முக்கொம்பு, சுற்றுலா சென்ற சிறுமிக்கு பாலியல் தொல்லை செய்தது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு நிமிடம் இருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் இன்று காலையில் நேரமில்லா நேரத்தில், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் முக்கொம்பு பிரச்சினை குறித்து பேசவிருக்கின்றார்கள் என்றார்கள்; வரவேற்கிறேன். அதற்கு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு முழு உரிமையுண்டு. அதை எழுத்துப்பூர்வமாகத் தந்தால் துறைகளுக்கு அனுப்பி, உடனடியாக அதற்குரிய பதில்களைப் பெறுவதற்கு அல்லது அதற்குரிய விளக்கம் பெற வசதியாக இருக்கும். வருங்காலங்களில் அதுபோன்ற நடைமுறையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். இதேபொருள் குறித்து நம்முடைய காங்கிரஸ் கட்சியின் சட்டமன்றத் தலைவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்களும் விதி 55-ன்கீழ் அறிவிப்பு தந்திருக்கின்றார். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம், முக்கொம்பு சுற்றுலாத்தலத்திற்கு 4-10-2023 அன்று, சுற்றுலா சென்ற துவாக்குடியைச் சேர்ந்த அன்சாரி மற்றும் அவருடன் சென்ற பெண்ணை அங்கு வந்த திருச்சி காவல் கண்காணிப்பாளருடைய தனிப்படை காவலர்கள் 4 பேர் மிரட்டி, காரில் அழைத்துச் சென்று, அந்தப் பெண்ணுக்கு பாலியல் தொல்லை தந்திருக்கிறார்கள். இதுதொடர்பாக அன்சாரியும், அந்தப் பெண்ணும் முக்கொம்பிலுள்ள புறக்காவல் நிலையத்திற்குச் சென்று, சம்பவம் குறித்து புகார் தெரிவித்திருக்கின்றனர். மேல்நடவடிக்கை எதுவும் எடுக்காத காரணத்தினால், திருச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் தெரிவிக்கப்பட்டு,

2023 அக்டோபர் 11] [திரு. எடப்பாடி K. பழனிசாமி]

தவறிழைத்த 4 காவலர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன. தமிழகத்தில் வேலியே பயிரை மேய்ந்த கதையாக காவல் துறையைச் சேர்ந்தவர்களே இதுபோன்ற பாலியல் குற்றச் சம்பவங்களில் ஈடுபட்ட நிகழ்வு காவல் துறையின் கட்டுப்பாட்டினைக் கேள்விக்குறியாக்கியுள்ளது. தவறிழைத்த காவலர்கள்மீது கடுமையான, சட்டரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்படிப்பட்ட சம்பவங்கள் பொதுமக்களிடம் மிகுந்த அச்சத்தையும், பயத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இன்றைக்கு தமிழகத்திலே குறிப்பாக பெண்களுக்கு உரிய பாதுகாப்பு இல்லாத சூழ்நிலை நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது. இதுபோன்ற சம்பவங்கள் இனி தமிழகத்தில் நடைபெறாமல் தடுக்க அரசு தனிக் கவனம் செலுத்தி, நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள்.*

திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி முக்கொம்பு பகுதியிலே காதலர்கள் சென்றிருந்தபோது, தனிப்படை காவலர்கள் 4 பேர் அந்தச் சிறுமியை மட்டும் அழைத்துச் சென்று பலாத்காரம் செய்தார்கள் என்று கேள்விப்பட்டு, உடனே அங்கிருக்கின்ற மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. வருண்குமார் அவர்கள் நடவடிக்கை எடுத்து, அந்த 4 பேர்மீதும் வழக்கு தொடர்ந்து POCSO சட்டத்தில் கைது செய்திருக்கிறார்கள். இதுபோன்று தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். கடந்த காலத்தில்கூட, ***

பிற்பகல் 12–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களிடமும் எல்லா விவரங்களும் இருக்கின்றன. நாங்களும் விளக்கமாகப் பேசலாம். (குறுக்கீடுகள்) அதற்குள்ளாக சென்று பேசக்கூடாது என்பதற்காக, நடந்த சம்பவத்தை*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது*

[திரு. எடப்பாடி K. பழனிசாமி] [*2023 அக்டோபர் 11*

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும் என்பதற்காக நான் சுருக்கமாகத் தெரிவித்தேன். (குறுக்கீடுகள்) ஆனால், மாண்புமிகு உறுப்பினர், திட்டமிட்டு இதை திசை திருப்புகிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதல்வர் அவர்கள் பதில் சொல்வார்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முக்கொம்பு பற்றி மட்டும் பேசி அமருங்கள். (குறுக்கீடுகள்) அதாவது, காவல் துறையில் இதுபோன்ற தவறுகள் நடந்துள்ளன என்றுதான் சொன்னார். அதில் ஒன்றும் தவறு இல்லை. நீங்கள் முக்கொம்பு* subject*-ஐ பேசி முடியுங்கள். (குறுக்கீடு)*

திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்ன சொன்னேன் என்றால், இதற்கெல்லாம் ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். இனிவரும் காலங்களில் நடக்கக்கூடாது. ** இதற்கெல்லாம் ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்றுதான் சொல்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) (குறுக்கீடுகள்) பேசவே கூடாது என்றால் எப்படி? (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை, நான் சொல்வதைக் கேளுங்கள். முக்கொம்பு பிரச்சினையை* zero hour*-ல் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்) முக்கொம்பு பற்றி மட்டும் பேசுங்கள். (குறுக்கீடுகள்) தகவல் கோரலாக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் ஆய்வுக்கு எடுத்திருக்கிறார். ஆகவே, முக்கொம்பு பற்றி மட்டும்தான் பேசவேண்டுமே தவிர, வேறு பொருள் குறித்துப் பேசுவது தவறு. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், முக்கொம்பு பற்றி மட்டும் பேசுங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை மட்டும் அனுமதியுங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை, நீங்களும் உட்காருங்கள். நான் சொல்கிறேன். தயவுசெய்து, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது*

2023 அக்டோபர் 11] *[பேரவைத் தலைவர்]*

நான் கேட்டுக்கொள்கிறேன். ஓர் உறுப்பினர் பேசுவதில் மாறுபட்ட கருத்தோ அல்லது அந்தப் பதிவை நீக்கவேண்டும் என்றாலோ அல்லது அதுகுறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றாலோ அல்லது இது தேவையில்லை என்று கருதினாலோ, எதிர்க்கட்சித் தலைவர் எழுந்துநின்று கோரலாம் அல்லது கொறடா எழுந்துநின்று கோரலாம். உடனே, நான் என்னவென்று கேட்கப் போகிறேன். யாராவது ஒருவர் எழுந்து பேச வேண்டுமே தவிர, ஒட்டுமொத்தமாக சபையில் எழுந்து நிற்க வேண்டுமா என்பதுதான் கேள்வி. (குறுக்கீடுகள்) நான் முடித்து விடுகிறேன். என்னைச் சொல்ல விடுங்கள். ஆகவே, இனி வருங்காலங்களில், யாராவது நீங்கள் எழும்பியபின்னர், உங்களுக்குப் பேச அனுமதி மறுக்கப்பட்டால், உங்கள் கட்சியைச் சேர்ந்த அனைவரும் எப்படி எங்கள் எதிர்க்கட்சித் தலைவருக்கு அனுமதி மறுக்கலாம் என்று கேட்கலாம். அதில் ஒரு நியாயம் உள்ளது. (குறுக்கீடுகள்) அது இல்லாமல், நீங்கள் ஒட்டுமொத்தமாக chorus *ஆக எழுந்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. அப்படி இந்தச் சபை நடைபெறவில்லை. (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேச எழுந்த உடனேயே. . . (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை, அவை முன்னவர் சொன்னதுபோல பேசி முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு முறையும் வேண்டுமென்றே திட்டமிட்டு காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் தொடர்ந்து இப்படி பேசி வருகிறார். இது தேவையற்றது. . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தேவையற்றது என்று. . . (குறுக்கீடு) அவை முன்னவரே சொல்லிவிட்டார். (குறுக்கீடு)*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* zero hour*-ல் எழுப்பியுள்ள பிரச்சினை ஒரு முக்கியமான பிரச்சினை. அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம். உங்களுடைய அனுமதியைப் பெற்று, இங்கே நான் பேசுகிறேன். அதுகுறித்துப் பேசினால் பரவாயில்லை. இல்லாவிட்டால், எங்களையும் பேசவிடுங்கள். நாங்களும் நிறைய விவரங்கள் வைத்திருக்கிறோம். என்னென்னவெல்லாம் நடந்தன என்பது குறித்து எங்களிடமும்*

[திரு. எடப்பாடி K. பழனிசாமி] [*2023 அக்டோபர் 11* குறிப்புகள் உள்ளன. எல்லாமே இருக்கிறது. நடைபெற்ற சம்பவத்திற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில்தான் அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிறோம். ஆனால். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவை முன்னவரும் இதுகுறித்து சொல்லிவிட்டார்கள். நானும் சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) முக்கொம்பு மட்டும்தான் அவைப் பதிவில் இருக்கும். உட்காருங்கள். (குறுக்கீடு)

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் தொடர்ந்து இதுபோன்றுதான் கருத்து சொல்லிவருகிறார். நீங்கள் பழைய பதிவுகளை எடுத்துப் பாருங்கள். ஒவ்வொரு முறையும் அப்பொழுது நடைபெற்ற சம்பவத்தை விட்டுவிடுகிறார். இதற்குமுன், 10 ஆண்டுகளுக்கு முன்பாக நடைபெற்றிருக்கலாம். அதற்குமுன், காங்கிரஸ் ஆட்சியில் நடைபெற்ற சம்பவமும் எங்களிடம் உள்ளது. அதையும் நான் சொல்ல முடியும். என்னென்னவெல்லாம் நடந்து கொண்டிருந்தன என்று நான் சொல்ல முடியும். **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. நீங்கள் அப்படிச் சொன்னதையெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை, நீங்கள் அவை முன்னவர் சொன்னபடி பேசி முடியுங்கள்.

திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்ன சொல்கிறேன் என்றால், இனிவரும் காலங்களில் இப்படிப்பட்ட சம்பவம் நடக்கக் கூடாது. **இதெல்லாம் நடந்துள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நாங்கள் இதைப் பதிவு செய்கிறோம். இது தவறு என்றால், பிறகு என்னதான் பேசுவது? என்ன பேசுவது என்று எனக்குத் தெரியவில்லை. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

2023 அக்டோபர் 11]

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்ன பேசுவது என்று இல்லை; முக்கொம்பில் இவ்வாறு நடைபெற்றிருக்கிறது என்று குறிப்பிட்டு அதைப்பற்றித்தான் பேசவேண்டுமே தவிர, மற்ற பொருள் பற்றி நீங்கள் எடுத்துப் பேசினால் அதற்குப் பதில் கருத்து வரும். அதனால் அருள்கூர்ந்து, தயவுசெய்து, தற்போது எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள தகவல் கோரல் குறித்து மட்டும் பேசுங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை, பதிலுரையின்போது முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள். நீங்கள் ஒரே வார்த்தைதான் கேட்கவேண்டும். Zero hour-ல் ஒரு வார்த்தை சொல்லிவிட்டு அமரவேண்டும். அவ்வளவுதான்.*

திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இனிவரும் காலங்களில், நாங்கள் என்ன பேச வேண்டுமென்று எதிர்க்கட்சியை எழுதிக் கொடுக்கச் சொல்லுங்கள். நாங்கள் அப்படியே பேசுகிறோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்களும் எதிர்க்கட்சிதான். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) நன்றி. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

பிற்பகல் 12-15

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 4-10-2023 அன்று மாலை சுமார் 4-00 மணியளவில், திருச்சி மாவட்டம், ஜீயபுரம் காவல் நிலைய சரகம், முக்கொம்பு சுற்றுலா தலத்திற்கு ஜீயபுரம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் சசிகுமார், நவல்பட்டு காவல் நிலைய காவலர் பிரசாத், திருவெறும்பூர் பகுதி நெடுஞ்சாலை ரோந்து பணியில் பணிபுரிந்து வரும் சங்கர் ராஜபாண்டியன் ஆகியோர் அனுமதியோ, விடுப்போ பெறாமலும், உயரதிகாரிகளுக்கு எந்தவிதத் தகவலும் தெரிவிக்காமலும் ஜீயபுரம் போக்குவரத்துக் காவல் நிலையத்தில் பணிபுரிந்து, பல நாட்களாக பணிக்கு வராமல் இருந்த காவலர் சித்தார்த்தன் என்பவருடன் இணைந்து சென்று, சுற்றுலாத் தலத்திற்கு வருகை தந்திருந்த இளைஞர் மற்றும் 17 வயது பெண்ணை மிரட்டி, அந்த இளைஞரைத் தாக்கி, விரட்டி*

[திரு. மு.க. ஸ்டாலின்] [*2023 அக்டோபர் 11*

அனுப்பிவிட்டு, உடனிருந்த பெண்ணை அந்தக் காவலர்கள் தாங்கள் வந்திருந்த தனியார் காரிலே ஏற்றி, அவரிடம் தவறான முறையில் நடந்திருக்கிறார்கள்.

பின்னர், அந்தப் பெண் சத்தம் போட்டதால், அவரைக் காரிலிருந்து இறக்கிவிட்டிருக்கிறார்கள். இதனையடுத்து, அந்தப் பெண் மற்றும் அவருடன் வந்த இளைஞர் இருவரும் முக்கொம்பு புறக்காவல் நிலையத்திற்குச் சென்று புகார் அளித்ததன் பேரில், அங்கு பணியிலிருந்த காவல் துறையினர் உடனடியாக அவ்விடத்திற்குச் சென்று அந்தக் காவலர்களை விசாரித்தபோது, அவர்கள் முறையாகப் பதிலளிக்கவில்லை.

இங்கு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகிறபோது, காவல் நிலையத்தில் புகார் தெரிவித்து நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னார். அது உண்மையல்ல. அந்தக் காவல் நிலையத்தில் புகார் அளித்த உடன், அந்தக் காவல் நிலைய S.I. உடனடியாக S.P.-யுடன் தொடர்பு கொண்டு, அவருடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதுதான் உண்மை.

உடனடியாக மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அளவில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு, சம்பந்தப்பட்ட உதவி ஆய்வாளர் மற்றும் மூன்று காவலர்கள் பணியிடை நீக்கம் செய்யப்பட்டனர். மேலும், அந்தப் பெண் அளித்த புகாரின் பேரில் ஜீயபுரம் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு, உதவி ஆய்வாளர் மற்றும் மூன்று காவலர்கள் அன்றே கைது செய்யப்பட்டு, நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். மேலும், குற்றம் இழைத்த காவலர்கள்மீது கடுமையான தண்டனை வழங்கக்கூடிய பிரிவுகளின்கீழ், துறை ரீதியான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. விரைவில் இதில் விசாரணை முடிக்கப்பட்டு, இறுதி உத்தரவு பிறப்பிக்கப்படும்.

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றச் செயல்களில், குறிப்பாக பாலியல் வன்முறையில் ஈடுபடுவோர் யாராக இருந்தாலும், அவர்கள்மீது பாரபட்சமின்றி, இந்த அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்து அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

2023 அக்டோபர் 11]

5. ஈரோடு நகரம், பட்டாக்கள் வழங்கப்பட்டதற்கு முதலமைச்சருக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இது சம்பந்தப்பட்டதா அல்லது வேறு ஏதாவதா? (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.வெ.கி.ச. இளங்கோவன் அவர்கள் கூறுகின்ற ஓரிரு வார்த்தைகள் என்னவென்று கேட்டுவிடுகிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.வெ.கி.ச. இளங்கோவன் அவர்கள்.*

***திரு. ஈ.வெ.கி.ச. இளங்கோவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிட்டத்தட்ட 75 ஆண்டுக்காலமாக ஈரோடு நகரைச் சார்ந்த மக்கள் போராடி, முன்வைத்த கோரிக்கை, இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் திரு. ஸ்டாலின் அவர்களுடைய காலத்திலே (மேசையைத் தட்டும் ஒலி) நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்று சொல்வதை நான் பெருமையாகக் கருதுகின்றேன். ஈரோட்டிலே இருக்கின்ற கிட்டத்தட்ட 4,000 பேருக்கு இதுவரை பட்டாக்கள் கிடையாது. ஆனால், இவ்வளவு ஆண்டுக்கால போராட்டத்திற்குப் பிறகு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவற்றை வழங்கியிருக்கின்றார்கள் என்று சொன்னால், உண்மையாகவே நான் அவருக்கு ஈரோடு மக்களின் சார்பாக நன்றியைச் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் வாழ்ந்து வருகின்ற பகுதியிலுள்ள 4,000 வீடுகளுக்கு இதுவரை பட்டா இல்லாமல் இருந்தது. இப்போது மாண்புமிகு முதல்வர் அவர்கள் தந்திருக்கிறார்கள். அதற்கு நன்றி சொல்கிறீர்களல்லவா!*

பிற்பகல் 12–20

திரு. ஈ.வெ.கி.ச. இளங்கோவன்: *அதுமட்டுமல்ல, இதில் பெரிய விஷயம் என்னவென்றால், மாண்புமிகு அமைச்சர் திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன் அவர்கள் கடந்த கூட்டத்திலே சொல்லியதைப்போல தந்தை பெரியார் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்கள், முத்தமிழ் காவலர் கலைஞர் அவர்கள் பணியாற்றிய அந்த வீட்டில்தான் இன்றைக்கு நான் இருக்கின்றேன். இதுவரை பயத்தோடுதான் இருந்தேன்; காரணம் பட்டா கிடையாது. ஆனால், இன்றைக்குத்தான் ஈரோட்டிற்கு திரும்பிப் போகும்போது கொஞ்சம் தைரியமாக நான் செல்ல*

[திரு. ஈ.வெ.கி.ச. இளங்கோவன்] [*2023 அக்டோபர் 11*

முடியும் என்பதையும் சொல்லிக்கொண்டு, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பொறுத்தவரையில், வாக்களித்தவர்களுக்கும், வாக்களிக்காதவர்களுக்கும் நாங்கள் கண்டிப்பாக வேறுபாடு இல்லாமல் எல்லாக் காரியங்களையும் செய்வோம். . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவர் பேசி முடித்துவிடட்டும். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *ஒரு விளக்கம் வேண்டும். அப்படியென்றால் ஐயா அவர்கள் பட்டா இல்லாத வீட்டில்தான் இருந்தார்களா? (சிரிப்பு)*

திரு. ஈ.வெ.கி.ச. இளங்கோவன்: *அது என்னைப் பாதிப்பதைவிட உங்களைத்தான் அதிகம் பாதிக்கும். (சிரிப்பு) அதேபோல், கிட்டத்தட்ட 4 ஆயிரம் பேருக்கு இன்றைக்கு பட்டாக்களை அறிவித்திருக்கின்றார்கள். சொன்னதையும் செய்வோம், சொல்லாததையும் செய்வோம் என்று சொன்னவர் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். வாக்களித்தவர்களுக்கும், வாக்களிக்காதவர்களுக்கும் நாங்கள் எல்லாவற்றையும் செய்வோம் என்பதை தேர்தல் முழக்கத்தோடு நிறுத்திவிடவில்லை. இந்த இரண்டரை ஆண்டுக்காலமாக நன்றாக செய்துகொண்டிருக்கின்றார். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, நான் பேசுவதற்கு அதிக நேரம் எடுத்துக்கொண்டால், நீங்கள் அடுத்தமுறை எனக்கு வாய்ப்புத் தரமாட்டீர்கள். ஆகவே, நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்கின்ற அதே நேரத்தில், பாசத்திற்குரிய அமைச்சர் மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதோடு எங்களுடைய அமைச்சர், எங்களுடைய மாவட்டத்தினுடைய அமைச்சர்; இன்னும் சொல்ல வேண்டுமென்று சொன்னால், ஈரோடு மாநகர் மட்டுமல்ல என்னுடைய தொகுதிக்கும் சேர்த்து அவர்தான் M.L.A. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதேநேரத்தில், மாண்புமிகு திரு. எ.வ. வேலு அவர்களிடத்தில் சில கோரிக்கைகளை காலையில் வைத்தேன். அதைச் செய்து கொடுப்பார் என்ற நம்பிக்கையோடு விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.*

2023 அக்டோபர் 11]

4. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

(ஆ) எதிர்க்கட்சித் துணைத் தலைவர் நியமனம் மற்றும் இருக்கை ஒதுக்கீடு குறித்தும், அ.இ.அ.தி.மு.க.–விலிருந்து நீக்கப்பட்டவர்கள் குறித்தும் நடவடிக்கை எடுக்காதது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள். (குறுக்கீடுகள்) இருங்கள், நான் சொல்கிறேன். மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள் சொல்வதைக் கேட்டுக்கொள்வோம்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களிடம் ஏற்கெனவே பலமுறை நாங்கள் கடிதம் கொடுத்திருக்கின்றோம். எதிர்க்கட்சித் தலைவர் நியமனம் குறித்தும், அதேபோல, நீதிமன்றத் தீர்ப்பின்படி, எதிர்க்கட்சித் தலைவர். . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *துணைத் தலைவர். தலைவர் நீங்கள்தான்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *எதிர்க்கட்சித் துணைத் தலைவர் குறித்தும், அதோடு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து நீக்கப்பட்டவர்கள் குறித்தும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்றும் பலமுறை நாங்கள் உங்களிடத்திலே கடிதம் கொடுத்திருக்கின்றோம். கிட்டத்தட்ட 10 முறை கடிதம் கொடுத்திருக்கின்றோம். அதாவது, 19-7-2022 அன்று துணைத் தலைவர் நியமனம் செய்யப்பட வேண்டுமென்றும், அதோடு, 11-10-2022 அன்று நினைவூட்டுக் கடிதம், 14-10-2022 அன்று நினைவூட்டுக் கடிதம், 18-10-2022 அன்று நினைவூட்டுக் கடிதம், 10-1-2023 அன்று நினைவூட்டுக் கடிதம் கொடுத்திருக்கிறோம். அதோடு இதெற்கெல்லாம் தகுந்த* record *வேண்டுமென்று கேட்டீர்கள்; ஆதாரம் வேண்டுமென்று கேட்டீர்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை. நான் கேட்கவில்லை.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *கடிதம் கொடுக்கும்போது நீங்கள் சொன்னீர்கள். நீதிமன்றத்தில் இருக்கிறது, தேர்தல் ஆணையத்தில் இருக்கிறது. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நான் ஒருபோதும் சொல்லவில்லை. நீதிமன்றத்தில் இருக்கிறது, தேர்தல் ஆணையத்தில் இருக்கிறது, அதனால் முடிவு எடுக்கவில்லை என்று*

[பேரவைத் தலைவர்] [*2023 அக்டோபர் 11*

ஒருபோதும் நான் எந்த இடத்திலும் பதிவு செய்யவில்லை. நீங்கள் தந்திருப்பதை நான் மறுக்கவில்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *சட்டமன்றப் பேரவைத் தலைவரினுடைய அறையில் சொல்லுகின்றபொழுது—அதற்குத் தேவையான ஆதாரங்களையும் இணைத்து 23–2–2023 அன்று தங்களிடம் கொடுத்திருக்கின்றோம். 28–3–2023 அன்று சென்னை உயர் நீதிமன்றத்தில் அளித்த தீர்ப்பினுடைய நகலினையும் இணைத்து தங்களிடத்தில் கொடுத்திருக்கின்றோம். அதோடு, 25–8–2023 தேதியிட்ட உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பினையும் இணைத்துக் கொடுத்திருக்கின்றோம். 21–9–2023 அன்று நினைவூட்டுக் கடிதம் கொடுத்திருக்கின்றோம். இரண்டு நாட்களுக்கு முன்னர் எங்கள் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களிடம் வந்து இதுகுறித்து வலியுறுத்தி இருக்கின்றார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இன்று காலையில் கொடுத்திருக்கிறீர்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *இன்று காலையிலும் கொடுத்திருக்கிறோம். என்னுடைய நியாயமான கோரிக்கையை தாங்கள் மறுப்பதற்கு என்ன காரணம், ஏன் என்று தெரியவில்லை. ஏற்கெனவே, மரபின்படி ஒவ்வொரு கட்சியும் எதிர்க்கட்சியாக வருகின்றபோது, அந்தக் கட்சிக்கு தலைவர், துணைத் தலைவர் பதவி வழங்குவது மரபாக இருந்து கொண்டிருக்கிறது. ஆட்சி மாற்றம் ஏற்பட்டாலும், எதிர்க்கட்சியாக வரும்போது, எதிர்க்கட்சித் தலைவர், துணைத் தலைவர் பதவி கொடுப்பது மரபாக இருந்து கொண்டிருக்கின்றது. அதைத் தாங்கள் மறுப்பதற்கு என்ன காரணம் என்று எங்களுக்குத் தெரியவில்லை. அதோடு 3 சட்டமன்ற உறுப்பினர்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து நீக்கப்பட்டதற்குண்டான உயர் நீதிமன்ற* Division Bench *அளித்த தீர்ப்பினுடைய நகலையும் தங்களுக்கு அளித்திருக்கிறோம். ஆனால், அவர்களையும் எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறீர்கள். அதைக் குறைத்து, அவர்கள் நீக்கப்பட்டதாக இதுவரை எந்த அறிவிப்பும் வெளியிடப்படவில்லை.*

2023 அக்டோபர் 11] [திரு. எடப்பாடி K. பழனிசாமி]

பிற்பகல் 12–25

நியாயமான இந்தக் கோரிக்கையை நடுநிலையோடு தாங்கள் எண்ணாததற்கு என்ன காரணம் என்பது எங்களுக்குத் தெரியவில்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்து, நீங்கள் இதற்கு ஒரு நல்ல முடிவை அறிவிப்பீர்கள் என்று நாங்கள் நம்புகிறோம். நாங்கள் தொடர்ந்து இதனை வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். இதனை நீங்கள் ஏன் மறுக்கிறீர்கள் என்ற காரணமும் எங்களுக்குத் தெரியவில்லை. நியாயமான காரணத்தைத்தான் சொல்கிறோம். ஏனென்றால், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சியாக இருந்தபோது, எனக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியையும், மற்றொருவருக்கு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பதவியையும் கொடுத்தீர்கள். தற்போது 3 பேர் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து நீக்கப்பட்டுவிட்டார்கள். உயர் நீதிமன்ற டிவிஷன் பெஞ்ச், 'நீக்கப்பட்டது செல்லும்' என்று தீர்ப்பும் வழங்கியுள்ளது. அந்த ஆணையின் நகலையும் தங்களிடத்தில் கொடுத்திருக்கிறோம். இதையெல்லாம் கொடுத்தும், தாங்கள் இதற்கு நடவடிக்கை எடுக்காததற்கு என்ன காரணம் என்று எங்களுக்குத் தெரியவில்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இது எங்களுக்கு மிக, மிக வேதனையளிக்கிறது. தாங்கள் மரபை ஏன் நிராகரிக்கிறீர்கள் என்ற விவரம் தெரியவில்லை என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டுகிறேன். அதுகுறித்து. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நான் சொல்கிறேன். (குறுக்கீடு) நான் பதில் சொல்கிறேன், எல்லோரும் உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்த அவையில் கூறிய அனைத்தும் உண்மை. நான், 'தேர்தல் ஆணையம் மற்றும் நீதிமன்ற முடிவின்படி நடவடிக்கை எடுப்பேன்' என்று ஒருபோதும் சொல்லவில்லை. இப்போதும், நீங்கள் எதிர்க்கட்சித் தலைவர் என்பதை நாங்கள் மறுக்கவில்லை. நீங்கள், துணைத் தலைவராக திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்களைப் போட்டிருக்கிறீர்கள். அதையும் நாங்கள் மறுக்கவில்லை. ஆனால். . . (குறுக்கீடு) நான் சொல்கிறேன். இருக்கைகள் குறித்து சொல்லும்போது, நம்முடைய மாண்புமிகு முன்னாள் சபாநாயகர் அவர்கள் கூறியதைத்தான் நான் திரும்பச் சொல்ல வேண்டும். 2013 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 6 ஆம் தேதியன்று தற்போதைய கூட்டுறவுத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. பெரியகருப்பன் அவர்கள், இருக்கை விவகாரமாக சில*

[பேரவைத் தலைவர்] [*2023 அக்டோபர் 11*

விஷயங்களைப் பேசினார்கள். அப்போது, மாண்புமிகு சபாநாயகர் அவர்கள், 'சட்டமன்றத்திற்குள், பேரவைக்குள் இருக்கை குறித்து யாரும் கேள்வி எழுப்புவதற்கு அவசியம் இல்லை. உங்களுக்கு உரிமை இல்லை. அது என்னுடைய உரிமை. ஏதேனும் இருந்தால், என்னுடைய அறையில் வந்து சொல்லுங்கள். நான் அதை மனதில் வைத்துக்கொள்கிறேன்' என்று சொல்லியிருக்கிறார்கள். நீங்கள் எதிர்க்கட்சித் தலைவர் என்பதையும், துணைத் தலைவர் என்பதையும், மற்றபடி நீங்களோ, கொறடா, துணைக் கொறடா ஆகியோர் எதை எழுதிக் கொடுத்தாலும் இந்த அவை அங்கீகரித்துக்கொள்கிறது; அதில் மாறுபட்ட கருத்து இல்லை. ஆனால், எதிர்க்கட்சித் தலைவர் மட்டும்தான் பேரவை விதி 2 (1) (ஓ)-ன்படி அனுமதிக்கப்பட்டது, அதிகாரப்பூர்வமானது. மற்ற பதவிகளைப் பொறுத்தவரையில், நீங்கள் சொல்வதை மரபுப்படி நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். அதேபோன்று, இருக்கை விவகாரம் வரும்போது, நான் வேண்டுமென்றோ, தரக்கூடாது என்றோ அல்லது வீம்புக்காகவோ இதைச் சொல்லவில்லை. விதி என்ன சொல்கிறதோ, அதன்படிதான் நான் செயல்படுகிறேன்; சட்டம் என்ன சொல்கிறதோ, அதன்படிதான் நான் செயல்படுகிறேன்.

அதேபோன்று, மாண்புமிகு தலைவர், மறைந்த கலைஞர் அவர்களுக்குக்கூட, தற்போதைய உணவுத் துறை அமைச்சரான மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி அவர்கள் வேறு எதுவுமே கேட்கவில்லை; அவர்கள், முதுமை காரணமாக wheel chair*-ல் வரும்போது, முதல் இருக்கையில் வந்து, செல்வது போன்ற ஒரு வாய்ப்பினைத் தாருங்கள் என்று கேட்டார்கள். அதற்காக அளிக்கப்பட்ட பதிலை நான் படித்துப் பார்த்தேன். 'ஏற்கெனவே இருப்பது போதுமானது' என்றுதான் தீர்ப்பு கொடுத்திருக்கிறீர்கள். அதற்காக நான் இதைச் சொல்லவில்லை. இங்குள்ள மாமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேருடைய மாண்பையும், மரியாதையையும், அன்பையும், அவர்களில் யாருக்கேனும் ஒரு சிறு மனக்குறைகூட வரக்கூடாது என்ற வகையில்தான் இந்த அரசு, இந்த சபையை நடத்திக் கொண்டு வருகிறது. ஏற்கெனவே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ஓ. பன்னீர்செல்வம் உட்பட மூன்று சட்டமன்ற உறுப்பினர்களை நீங்கள் நீக்கியிருக்கிற தபாலை தந்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) ஏற்கெனவே, அந்த தபாலை தந்திருக்கிறீர்கள். இன்றைக்குக் காலையிலும் மாண்புமிகு உறுப்பினர் திரு. முனுசாமி, திரு. வேலுமணி அண்ணன் உட்பட அதைத் தந்திருக்கிறார்கள். அதை நான் பரிசீலிக்கிறேன்.*

2023 அக்டோபர் 11] [பேரவைத் தலைவர்]

ஆனால், ஒன்றை மனதில் வைத்துக்கொள்ளுங்கள். ஓர் உறுப்பினர் எந்த symbol*-ல், எந்தச் சின்னத்தில் வெற்றி பெற்று இந்தச் சட்டமன்றத்திற்கு வந்திருக்கின்றாரோ, அதே* symbol*-ல்தான், அதே கட்சியில்தான், அவரை நான் கடைசி வரை பார்ப்பேன். இன்னும் சொல்லப்போனால், அவர் கட்சி மாறிப்போனால், உங்களுக்குத் தெரியாத விளக்கமல்ல;* 10th Schedule of the Indian Constitution*-ல், ஒரு* symbol*-ல் ஜெயித்து, அந்த* symbol*-க்கு எதிராக* floor test*-ல் ஓட்டுப் போட்டால்,* Constitution*-ன்படி அவர்களை சட்டபூர்வமாக அந்தப் பதவியிலிருந்து நீக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. பன்னீர்செல்வம் உட்பட 11 பேரையும் மாண்புமிகு முன்னாள் சபாநாயகர் திரு. தனபால் அவர்கள் நீக்காமலே இருந்தார்கள். அவர்களை உங்களுடைய வசதிக்காக எதற்காக வைத்தீர்கள் என்று நான் சொல்லமாட்டேன். (குறுக்கீடு) நான் முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு) நான் முடித்துவிடுகிறேன். ஆனால், அதுபோல், உங்களுடைய கட்சியிலோ, வேறு கட்சியிலோ அப்படி ஒரு சம்பவம் நடந்தால்,* 10th Schedule of the Indian Constitution*-ன்படி, பேரவைத் தலைவர் அப்பாவு நடவடிக்கை எடுக்கத் தயங்கமாட்டேன் என்பதையும் நான் கூறி, விதிப்படி, சட்டப்படி முழுமையாக, யாருடைய மனமும் நோகாதபடியும், உங்களுடைய உரிமைகளைப் பறிக்காமலும் இந்த அவை செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. நான், அவர்களிடம் மேற்கொண்டு விஷயங்களைப் பேச அவை முடிந்த பிறகு வாருங்கள், நான் பேசுகிறேன் என்று சொல்லியிருக்கிறேன். நான் அவர்களிடம் பேசிக்கொள்கிறேன். (குறுக்கீடு) இன்று காலையில் மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களிடம் சொல்லியிருக்கிறேன். மீதி விஷயங்களை நான் வந்து பேசுகிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

பிற்பகல் 12-30

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருக்கை ஒதுக்குவது தங்களுடைய அதிகாரத்திற்குட்பட்டது. ஆனால், துணைத் தலைவர் இருக்கை என்பது தலைவருக்கு அருகில்தான் வழங்கப்படும். மரபை எடுத்துப் பாருங்கள். மற்றவர்களுக்கு இருக்கை ஒதுக்குவது மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவருடைய அதிகாரத்திற்குட்பட்டது. நம்முடைய அவை முன்னவருக்கு நன்றாகத் தெரியும்; பல ஆண்டுகளாக, கிட்டத்தட்ட 50 ஆண்டுகளாக இந்தச்*

[திரு. எடப்பாடி K. பழனிசாமி] [*2023 அக்டோபர் 11 சட்டமன்றத்தில் உறுப்பினராக இருந்திருக்கிறார்; மாண்புமிகு அமைச்சராக இருந்திருக்கிறார். அப்பொழுதெல்லாம் சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் எந்தப் பகுதியில் அமர்ந்திருந்தார் என்பது அவருக்கு நன்றாகத் தெரியும். அதைத்தான் நாங்கள் கேட்கிறோம். மற்ற உறுப்பினர்களுக்கு இருக்கை ஒதுக்குவது, தங்களுடைய விருப்பப்படி ஒதுக்கலாம். ஆனால், எதிர்க்கட்சித் துணைத் தலைவர், எதிர்க்கட்சித் தலைவருக்கு அருகில்தான் இதுவரை அமர்ந்திருக்கிறார்கள் என்ற விவரத்தைச் சொல்லிக்கொள்கிறேன். அதைத்தான் நாங்களும் கேட்கிறோம்.*

அதுமட்டுமல்ல, காங்கிரஸ் கட்சிக்கு 18 சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அந்தக் கட்சியினுடைய தலைவருக்கு அருகிலேயே, அந்தக் கட்சியினுடைய துணைத் தலைவருக்கு இருக்கை கொடுத்திருக்கிறீர்கள். ஏன் எங்களுக்குக் கொடுக்க மறுக்கிறீர்கள்? அதுமட்டுமல்ல, 3 பேர் நீக்கப்பட்டது செல்லும் என்று உயர் நீதிமன்ற Division Bench *தீர்ப்பு கொடுத்திருக்கிறது. (குறுக்கீடுகள்) அதற்கும் எந்த* stay*-வும் கிடையாது. அப்படியிருக்கின்றபோது. . . (குறுக்கீடு)*

திரு. பால் மனோஜ் பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. பால் மனோஜ் பாண்டியன், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. பால் மனோஜ் பாண்டியன், நீங்கள் உட்காருங்கள். நீங்கள் பேச முடியாது. (குறுக்கீடு)*

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்று கூச்சலிட்டனர். (திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. பால் மனோஜ் பாண்டியன், திரு. ஆர். வைத்திலிங்கம், திரு. பி. அய்யப்பன் தவிர) புரட்சி பாரதம் கட்சி உறுப்பினர் திரு. மு. ஜெகன் மூர்த்தி அவர்கள் இருக்கையில் அமர்ந்திருந்தார்.)

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *ஆக, மூன்று பேர். . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பேசிக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடு) எல்லோரும் உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்*

2023 அக்டோபர் 11] [*பேரவைத் தலைவர்*]

பேசிக்கொண்டிருக்கிறார். அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. பால் மனோஜ் பாண்டியன், திரு. ஓ.பி.எஸ். ஐயா உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பேசிக்கொண்டிருக்கிறார். மற்றவர்கள் அனைவரும் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்கள் பேசப் போகிறீர்களா அல்லது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசப் போகிறாரா?

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *நான் பேசுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பேசப் போகிறார். மற்றவர்கள் அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. பால் மனோஜ் பாண்டியன் பேசுவது அவைக் குறிப்பில் ஏறாது. உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* Division Bench *தெளிவான தீர்ப்பைக் கொடுத்திருக்கிறது. அந்தத் தீர்ப்பினுடைய நகலையும் தங்களுக்கு வழங்கிவிட்டோம். மூன்று பேர் நீக்கப்பட்டது செல்லும் என்ற தீர்ப்பின் நகலை தங்களிடம் கொடுத்துவிட்டோம். ஆக, 66 என்ற அ.இ.அ.தி.மு.க உறுப்பினர்களின் எண்ணிக்கையிலிருந்து குறைத்து விடுங்கள். நீதிமன்றம் அளித்த தீர்ப்புக்குப் புறம்பாக இருக்கக்கூடாது. நீதிமன்றத் தீர்ப்பை சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள் நிராகரித்தார் என்று பத்திரிகையில் வரக் கூடாது.*

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் மொத்தமாக அனைவரும் எழுந்து நிற்பதைப் பார்த்தால், வேறு ஏதோ முடிவு செய்துவிட்டீர்களா என்று தெரியவில்லை. (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்களுடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுவது தவறு என்ற முறையில் அனைவரும் எழுந்து நிற்கிறீர்களா? (குறுக்கீடுகள்) பிறகு எதற்கு எழுந்து நிற்கிறீர்கள்? யாரும் எந்த இடையூறும் செய்யவில்லை. உங்களுடைய எதிர்க்கட்சித்*

[பேரவைத் தலைவர்] [*2023 அக்டோபர் 11* தலைவர்தான் பேசிக்கொண்டிருக்கிறார். நான் காது கொடுத்து கேட்டுக்கொண்டிருக்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், பேசுங்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடையிடையே நீங்கள் பேசிவிடுகிறீர்கள். அது பத்திரிகையில் வெளியில் வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் பேசவில்லை. மாண்புமிகு உறுப்பினர்கள் எழுந்து நிற்கிறார்களல்லவா!

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய உரிமைகளை தங்களிடம் கோரிக்கையாக வைக்கிறோம். எங்களுடைய கோரிக்கையை பலமுறை தங்களிடம் வைத்துவிட்டோம். பலமுறை கடிதம் கொடுக்கப்பட்டுவிட்டது. இதற்குமேல் என்ன பொறுமையாக இருப்பது? எப்போதுதான் இருக்கை கொடுக்கப்போகிறீர்கள்? இரண்டே முக்கால் வருடங்கள் ஆகிவிட்டன. இன்னும் இரண்டேகால் வருடங்கள்தான் இருக்கிறது. கிட்டத்தட்ட 15 அமாவாசைதான் இருக்கிறது. அதற்குப் பிறகு என்னவிருக்கிறது? அந்தப் பக்கம் நாங்கள் சென்றுவிடுவோம். இந்தப் பக்கம் நீங்கள் வந்துவிடுவீர்கள். அதன்பிறகு நீங்கள் கேள்வி கேட்க வேண்டிய நிலைமை வந்துவிடும். (குறுக்கீடுகள்) அதுதான் நடக்கப்போகிறது. வேறு என்ன நடக்கப்போகிறது? ஆக, மரபை மாற்ற வேண்டாம் என்றுதான் கோரிக்கை வைக்கிறேன். ஆட்சி மாற்றம் ஏற்படும். ஆனால், மரபை மாற்ற வேண்டாம் என்பதுதான் எங்களுடைய கோரிக்கை. நாங்கள் தொடர்ந்து இதனை வலியுறுத்தி வருகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள். நான் பதில் சொல்கிறேன். (குறுக்கீடு)

திரு. எடப்பாடி K. பழனிசாமி: 10 முறை தங்களுக்குக் கடிதம் கொடுக்கப்பட்டும், தங்கள் மனம் இன்னும் இறுகலாக இருப்பது எங்களுக்கு வருத்தமளிக்கிறது. காங்கிரஸ் கட்சிக்கு. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் முன்னாள் முதலமைச்சர், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முதலில் நீங்கள் உட்காருங்கள்; பிறகு நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு

2023 அக்டோபர் 11] [*பேரவைத் தலைவர்*]

எதிர்க்கட்சித் தலைவரைத் தவிர, மற்ற அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்களும், உங்களுடைய கட்சி உறுப்பினர்களும் பேசியதெல்லாம் முறையில்லை என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இனிமேல் உங்களுக்கு மைக் கிடையாது. நீங்கள் கலகம் செய்ய வேண்டுமென்றும், விவகாரம் செய்ய வேண்டுமென்றும் வந்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) கட்சி விவகாரங்களையெல்லாம் அவைக்கு வெளியில் வைத்துக்கொள்ளுங்கள். சட்டப்படி, விதிப்படிதான் இந்த அவை நடக்கிறது. (குறுக்கீடுகள்) உங்களைப்போல், உங்களுக்கு எதிராக ஓட்டுப்போட்டவர்களை நீக்காமல் வைத்ததுபோல், நான் நீக்காமல் வைக்க மாட்டேன். (குறுக்கீடுகள்) தவறு செய்தால், சட்டத்திற்குப் புறம்பாக நடந்தால், அதன்மீது நான் நடவடிக்கை எடுப்பேன். (குறுக்கீடுகள்) நீங்கள் புறக்கணிக்கப் போகிறீர்களா? (குறுக்கீடுகள்) நீங்கள் தேவையில்லாமல் எழுந்து வருகிறீர்கள்.

பிற்பகல் 12–35

சிறப்புக் கவன ஈர்ப்பு. ஒப்பந்த செவிலியர்கள் குறித்த சிறப்புக் கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், டாக்டர் விஜயபாஸ்கர், திரு. கடம்பூர் ராஜூ, திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், திரு. ஆர்.பி. உதயகுமார், திரு. இரா. காமராஜ், திரு. வி.வி. ராஜன் செல்லப்பா, திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. ஆர். வைத்திலிங்கம், திரு. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி. அய்யப்பன், திரு. வி.பி. நாகைமாலி, திரு. மா. சின்னதுரை, திருமதி வானதி சீனிவாசன், திரு. கு. செல்வபெருந்தகை, திரு. ஜி.கே. மணி, திரு. தி. வேல்முருகன். . . (குறுக்கீடுகள்) நீங்கள் இருக்கைக்குச் செல்லுங்கள். அலுவலுக்கு இடையூறு செய்யாதீர்கள். நடவடிக்கை எடுப்பேன். நீங்கள் அரசியல். . . (குறுக்கீடுகள்) நீங்கள் எதிர்க்கட்சி. . . (குறுக்கீடுகள்) நீங்கள். . . (குறுக்கீடுகள்)

(திரு. சு. ரவி, திரு. A.K. செல்வராஜ், திரு. S. சேகர், திரு. ஆ. கோவிந்தசாமி உள்ளிட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பேரவைத் தலைவரின் இருக்கைக்கு முன்னால் வந்து நின்று "காப்பாற்று காப்பாற்று ஜனநாயக மரபைக் காப்பாற்று", "செய்யாதே செய்யாதே அரசியல் செய்யாதே", "செய்யாதே செய்யாதே ஜனநாயகப் படுகொலை

[பேரவைத் தலைவர்] [*2023 அக்டோபர் 11*

செய்யாதே", "வழங்கிடு, வழங்கிடு எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்கு உரிய இருக்கையை வழங்கிடு", "நடந்திடு நடந்திடு நடுநிலையோடு நடந்திடு" என கோஷமிட்டனர்.)

(திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி. அய்யப்பன், திரு. ஆர். வைத்திலிங்கம் மற்றும் புரட்சி பாரதம் கட்சி உறுப்பினர் திரு. மு. ஜெகன் மூர்த்தி ஆகியோர் இருக்கையில் அமர்ந்திருந்தனர்.)

நீங்கள், எதிர்க்கட்சித் தலைவரைத் தவிர மற்ற எல்லோரும் இடத்திற்குச் செல்லுங்கள். எதிர்க்கட்சித் தலைவர் பேசுகிறார்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. (குறுக்கீடுகள்) நீங்கள் தொடர்ந்து அவையில் கலகம் ஏற்படுத்த வேண்டுமென்று வருகிறீர்கள். உங்கள் அரசியலை இங்கே வைத்துக்கொள்ளக்கூடாது. அரசியலை வெளியில் வைத்துக்கொள்ள வேண்டுமே தவிர, இங்கு அவையில் வந்து அரசியல் செய்யக்கூடாது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களை உங்கள் பக்கத்தில் உட்கார வைத்தது நான் அல்ல. நீங்கள்தான் உட்கார வைத்தீர்கள். (குறுக்கீடுகள்) இந்த அவைக்குக் குந்தகம் விளைவிக்கின்ற மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட அனைவரையும் வெளியேற்றும்படி ஆணையிடுகிறேன். (குறுக்கீடுகள்) இல்லை, நீங்கள் வெளியில் சென்றுவிடுங்கள். (குறுக்கீடுகள்) வெளியில் அனுப்பிவிடுங்கள். (குறுக்கீடுகள்) கொஞ்சம் நில்லுங்கள், நீங்கள் வெளியில் செல்கிறீர்களா? (குறுக்கீடுகள்) வெளியில் சென்றுவிடுங்கள். (குறுக்கீடுகள்) காவலர்கள். . . (குறுக்கீடுகள்) ஒரு நிமிடம் நிற்கச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் வெளிநடப்பு செய்யுங்கள். அவ்வளவுதானே! (குறுக்கீடுகள்) எனது அறையில் வந்து கேளுங்கள் என்று சொல்லியிருக்கிறேன். அதற்குள் என்ன? காலையில்தான் தந்துள்ளீர்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)

(திரு. பொன். ஜெயசீலன், திரு. சு. ரவி ஆகியோர் மாண்புமிகு பேரவைத் தலைவரின் இருக்கைக்கு முன்னால் சென்று அமர்ந்தனர்.)

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களை அவைக் காவலர்கள் வெளியேற்றினர்.)

(திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி. அய்யப்பன், திரு. ஆர். வைத்திலிங்கம் ஆகியோர் தவிர)

2023 அக்டோபர் 11] [பேரவைத் தலைவர்]

(புரட்சி பாரதம் கட்சி உறுப்பினர் திரு. மு. ஜெகன் மூர்த்தி அவையில் இருந்தார்.)

3 நாட்கள் நடைபெறும் சட்டமன்றக் கூட்டத்தொடரிலும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் உட்பட மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவருமே கலகம் செய்ய வேண்டும், விவகாரம் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு வந்திருக்கின்றார்கள். அதோடுமட்டுமல்ல, அவர்களுடைய கட்சிப் பிரச்சினைகளை இந்தச் சட்டமன்றத்தில் தீர்த்து வைக்க வேண்டுமென்று அவர்கள் விரும்புகின்றார்கள். ஒரு போதும் இந்தச் சட்டமன்றம், அவர்களுடைய உள்கட்சி விவகாரங்களில், தலையிட்டதும் இல்லை. இனியும் தலையிடப்போவதும் இல்லை.

(புரட்சி பாரதம் கட்சி உறுப்பினர் திரு. மு. ஜெகன் மூர்த்தி அவையிலிருந்து வெளியேறினார்.)

இந்தப் பேரவையில் அப்படிப்பட்ட நிலை ஒருபோதும் வரவேண்டிய அவசியமும் இல்லை. அவர்கள் பலமுறை சொல்லிக்கொண்டே இருக்கின்றார்கள். இருக்கைகள் ஒதுக்குவதைப் பற்றி நான் ஏற்கெனவே சொன்னமாதிரி, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. தனபால் அவர்கள் ஏற்கெனவே தெளிவாகக் குறிப்புரை கொடுத்திருக்கின்றார்கள். அதைப் பற்றி அவையில் பேச வேண்டிய அவசியம் யாருக்கும் இல்லை. யார், யார் எங்கு உட்கார வேண்டும் என்பது குறித்து—முன்னாள் முதலமைச்சர் உட்பட இங்கு இருக்கின்ற அனைத்துக் கட்சி உறுப்பினர்களுக்கும்—ஏற்கெனவே இடம் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. அதைத் திரும்பத் திரும்ப மாற்ற வேண்டும் என்ற அவசியம் எனக்கு ஏற்பட்டால் நான் மாற்றுவேன்.

பிற்பகல் 12–40

என்னுடைய அறையில் வந்து இருக்கைகள் குறித்துப் பேசினார்கள். தகுந்த பதில் சொல்லியிருக்கின்றேன். விதியும் அதற்கு இடம் கொடுக்கவில்லை. இந்த அவை இதுவரை விதிப்படி நடைபெறுகின்றது. சட்டப்படி நடைபெறுகின்றது. ஏற்கெனவே, நாம் பதிவு செய்ததைத்தான் மீண்டும் சொல்கின்றேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. பன்னீர்செல்வம் உட்பட 11 பேர் இந்த அவையில் இரட்டை இலை சின்னத்தில் வெற்றி பெற்று வந்து, இரட்டை இலைக்கு எதிராக Floor test*-ல் ஓட்டுப் போட்டதற்குப் பிறகு,* Tenth Schedule of the Indian Constitution*-படி அவர்களை பதவி நீக்கம் செய்திருக்க வேண்டும். அவர்கள் தேவையென்றால்*

[பேரவைத் தலைவர்] [*2023 அக்டோபர் 11*

வைத்துக்கொள்கின்றார்கள். தேவையில்லையென்று சொன்னால் அவர்கள் இஷ்டத்திற்கு முடிவெடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். ஒரு petition*-ஐக் கொண்டு வந்து கொடுத்ததற்கு 18* MLA*-க்களை பதவி நீக்கம் செய்திருக்கின்றார்கள். ஆனால், எதிர்த்து ஓட்டு போட்டவர்கள்மீது எந்த நடவடிக்கையும் அவர்கள் எடுக்கவில்லை. இப்போது நான் நினைப்பதெல்லாம், இவர்கள்—இப்போது நாங்கள் சண்டையில் இருக்கிறோம் என்று சொன்னார்கள். அது உட்கட்சிப் பிரச்சினை. சண்டை, சமாதானம் இல்லை. இன்னொன்று,* Governor *வந்து இரண்டு பேரையும் அழைத்து சேர்த்து வைத்தால், இந்த அவை அன்றைக்கு யாரை எங்கு கொண்டு வைக்கும் என்று நான் என்ன முடிவு செய்ய முடியும்? விதியில் இருப்பதைத்தான் நான் சொல்ல முடியுமே தவிர, அது அவர்களுடைய உட்கட்சி விவகாரம், அதில் நான் தலையிடவில்லை. அதற்காக நான் அந்தக் கருத்துகளை சொல்லவில்லை. மூன்று நாட்களாக இதே—ஏற்கெனவே எதிர்க்கட்சியில் பல பிரச்சினைகள் இருக்கின்றன. 3, 4 பிரிவுகளாக இருக்கின்றன. திரு.* T.T.V. *தினகரன் அவர்கள் தலைமையில் ஒன்று, ஐயா திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் தலைமையில் ஒன்று, திருமதி சசிகலா அம்மா தலைமையில் ஒன்று, ஐயா திரு. எடப்பாடி அவர்கள் தலைமையில் ஒன்று என இப்படி நான்கு பிரிவுகளாக இருக்கிறார்கள். நான்கு பேருமே ஒரு புள்ளியில் ஒத்த கருத்தாகத்தான் பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஒன்றிய அரசு பிரச்சினையை எடுத்துப் பேசும்போது அதற்கு ஒரு எதிர்க்கருத்து யாரிடமும் இல்லை. எல்லோருமே அதில் ஒத்த கருத்தாகத்தான் இருக்கிறார்கள். நாளைக்கு சேர மாட்டார்கள் என்பது எந்தநிலையிலும் நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. அவர்கள் சேரவே மாட்டார்கள் என்று யாரும் உத்தரவாதம் கொடுக்க முடியாது. முதலாளி கூப்பிட்டு உட்காருங்கள் என்று சொல்லி, நான்கு பேரையும் சேர்த்துவைத்துவிட்டால் நாம் என்ன செய்ய முடியும்? சேர்ந்து இருக்கட்டும், சந்தோஷம் என்றுதான் நாம் சொல்வோமே தவிர, நாம் வேறு ஒன்றும் சொல்லப் போவதில்லை. ஆக, இந்த நிலை. . . (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல முறை இப்படிப்பட்ட நிலையை நாம் இந்த மாமன்றத்திலே சந்தித்திருக்கின்றோம். நான் மட்டுமல்ல, எல்லோரும் சந்தித்திருக்கிறோம். பொதுவாக எப்போது இப்படிப்பட்ட பிரச்சினை விஸ்வரூபம் எடுக்கும் என்றால்,*

2023 அக்டோபர் 11] [திரு. துரைமுருகன்]

பேசுவதற்கு வாய்ப்பு கொடுக்காமல் சபாநாயகர் தடுப்பார். எங்களுக்கு முதலில் பேச வாய்ப்புக் கொடுங்கள், கொடுங்கள் என்பதுதான் பிரச்சினை. இதுவரையில் நான் பார்த்த, வந்த தகராறுகளுக்கெல்லாம் மூலக் காரணம் பேச அனுமதிக்கவில்லை என்பதுதான். ஆனால், இன்று அவருக்கு வேண்டிய அளவுக்கு பேசுவதற்கு நீங்கள் வாய்ப்புக் கொடுத்தீர்கள். அவர்களுடைய உறுப்பினர்கள் எழுந்து பேசுகின்றபோதுகூட சொன்னீர்கள், உங்கள் தலைவர். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதில், ஒரு உட்கருத்து. நான், நேரத்தைக் குறைத்தால்கூட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எழுந்து, பேச அனுமதியுங்கள் என்று சொல்வார்கள். அந்த அளவுக்கு ஜனநாயக முறையில் தாராளமாக நடத்தச் சொல்கிறார்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *அதனால், நீங்கள் அவர்களுடைய உறுப்பினர்களுக்கு சொன்னது என்னவென்றால், உங்கள் தலைவர்தான் பேசிக் கொண்டிருக்கின்றார். அதை நான் மறுக்கவில்லை. ஆகையால், அந்தப் பேச்சை நீங்கள் கேளுங்கள் என்றுகூட திருப்பிச் சொன்னீர்கள். ஆனால், அவர்கள் pre-plan உடன், ஒரு mindset உடன் வந்திருக்கிறார்கள். அதனால் அவர்கள், நீங்கள் பேசுவதற்கு time கிடையாது என்று எப்போது சொல்வீர்கள் என்று பார்த்தார்கள். நீங்கள் சொல்வது மாதிரி தெரியவில்லை. அதனால், வேறு வழியில்லையென்று அவர்களாகப் போனார்கள். இன்றைக்கு அவர்கள் வெளியில் போனதற்குக் காரணம், மாண்புமிகு தலைவர் அல்ல. அவர்களுடைய சொந்த நடவடிக்கைதான் காரணம். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இதை நான் சொல்லி முடித்துவிடுகிறேன். அதற்குப் பிறகு பேசலாம். (குறுக்கீடு) நான், இருக்கின்ற எல்லோரையும் பேச அனுமதிப்பேன். ஆகவே, இவ்வாறு தொடர்ந்து கலகம் செய்து, கலவரம் செய்து இந்தப் பேரவையை நடத்தவிடாமல் இடையூறு செய்த காரணத்தினால் நம்முடைய அவைக் காவலர்களை அழைத்து அவர்களை வெளியேற்றம் செய்திருக்கின்றோம். ஆகவே, இதுபோன்ற நிகழ்வுகள் வருங்காலங்களில் நடைபெற்றால், தக்க நடவடிக்கை எடுக்கப்படும். இது ஜனநாயகத்திற்கும் ஏற்புடையதல்ல. இந்தப் பேரவையில், இந்த அரசு கொண்டு வருகின்ற மிக அருமையான நல்ல திட்டங்களையெல்லாம் மக்கள் நம்பியிருக்கின்றார்கள்.*

[பேரவைத் தலைவர்] [*2023 அக்டோபர் 11*

ஆகவே, எந்தக் குறையும் சொல்ல முடியாத அளவிற்கு இருக்கின்ற காரணத்தினால், இடப் பிரச்சினையையும், அவர்களுடைய உட்கட்சி பிரச்சினையையும் இந்த அவையிலே வந்து முன்னெடுத்து, அதற்காக இந்த அவையைப் பயன்படுத்துவது நியாயம் இல்லை. ஏற்கெனவே, ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தை சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானமாக நான் எடுத்திருக்கின்றேன்.

ஆகவே, அதுகுறித்து மட்டும் மாண்புமிகு உறுப்பினர்கள் சுருக்கமாக தகவல் சொல்லுங்கள். (குறுக்கீடு) இதை முடித்துவிடுவோம். (குறுக்கீடு) இவை எல்லாவற்றையும் முடித்துவிடுவோம். (குறுக்கீடு) இல்லை, கவன ஈர்ப்பு முடியட்டும், உங்களுக்குப் பேச நான் வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) கவன ஈர்ப்பு முடியட்டும், உங்களை நான் பேச அனுமதிக்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் கொடுத்த கவன ஈர்ப்பும் இதில் இருக்கிறது. (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். பின்னர், நான் உங்களுக்குப் பேச வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) ஒப்பந்த செவிலியர்கள் போராட்டம் நடத்துவது குறித்த கவன ஈர்ப்பில் பேசுவதற்கு நான் வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) நான் சொல்கிறேன். பின்னர், வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) நான் சொல்கிறேன். (குறுக்கீடு) இல்லை, பின்னர், நான் உங்களுக்குப் பேச வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) இல்லை, திரு. ஆர். வைத்திலிங்கம், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு)

பிற்பகல் 12–45

(திரு. ஆர். வைத்திலிங்கம் அவர்கள் தான் கொடுத்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் பேசுவதற்கு வாய்ப்புக் கோரி இருக்கையிலிருந்து எழுந்து நின்று தொடர்ந்து ஏதோ பேசிக் கொண்டிருந்தார்.)

இல்லை, திரு. ஆர். வைத்திலிங்கத்தை பேசச் சொல்லுங்கள். (குறுக்கீடு) சரி. (குறுக்கீடு) இதற்குத்தான் நான் அழகாக பதில் சொல்லியிருக்கிறேனே உங்களுக்கு. (குறுக்கீடு) வேறு என்ன பதில் சொல்ல வேண்டுமென்று நீங்கள் நினைக்கிறீர்கள். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள். (குறுக்கீடு)

திரு. ஆர். வைத்திலிங்கம்: *கொடநாடு பிரச்சினையைப் பற்றி பேச வேண்டும்.*

2023 அக்டோபர் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, இல்லை. நீங்கள் உட்காருங்கள். அதுகுறித்து நீங்கள் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) எல்லோரும் பேசுவதற்கு நான் வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள்.*

திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றம் வரலாற்றுச் சிறப்புமிக்க மாமன்றம் ஆகும். இது தனிப்பட்ட நபர்களுடைய அபிலாஷைகளைப் பேசுவதற்கான இடமல்ல. ஒரு கட்சியினுடைய உள்கட்சிப் பிரச்சினையை இங்கே பேச அனுமதித்தது வருந்தத்தக்கது என்பதை நான் இங்கே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். அவற்றையெல்லாம் நீங்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கிறது. உச்ச நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கின்றபோது, கீழ் court-ல் சொன்ன தீர்ப்பை உறுதிப்படுத்துகின்ற அளவில் பேசுவது நியாயம்தானா? தயவுசெய்து, நீங்கள் அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, நீங்கள் உட்காருங்கள், நான் சொல்கிறேன். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) அவர்கள் கலவரம் செய்கிறமாதிரி பேசிய வார்த்தைகளெல்லாம் அவைக் குறிப்பில் இடம்பெறவில்லை. (குறுக்கீடு) இல்லை. ஏற்கெனவே, நீங்கள் மாண்புமிகு முதலமைச்சராக இருந்தவர். (குறுக்கீடு) நீங்கள் ஒரு நிமிடம் உட்காருங்கள். நான் சொல்லி முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு) நீங்கள் ஒரு நிமிடம் உட்காருங்கள், நான் சொல்கிறேன். (குறுக்கீடு) அவர்கள் என்னிடத்தில் கொடுத்த கடிதத்தினுடைய சாராம்சத்தை சொன்னார்கள். (குறுக்கீடு) அது என்னுடைய ஆய்வு, என்னுடைய முடிவே தவிர, அதன்மீது நான் ஏதேனும் ஒரு முடிவெடுத்து, அதில் உங்களுக்கு ஏதாவது பாதிப்பு வந்தால்தான் பேசலாம். (குறுக்கீடு) இல்லை, இல்லை. நான் சொல்கிறேன், நீங்கள் கேளுங்கள் (குறுக்கீடு) அதில் உங்களுக்கு ஏதாவது பாதிப்பு வந்தால் நீங்கள் பேசலாம். அதனால் உங்கள் கட்சி பிரச்சினையை நாம் இதோடு நிறுத்திவிடுவோம். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள். (குறுக்கீடு)* Please. *(குறுக்கீடு) முன்னாள் முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் பேசிவிட்ட பின்னர் நீங்கள் பேசுங்கள்.*

[*2023 அக்டோபர் 11*

திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்குகள் அனைத்துக்கும் நீதிமன்றத்தால் வழங்கப்பட்டுள்ளவை தற்காலிகமான தீர்ப்புகள்தான். இறுதி தீர்ப்பல்ல என்பதை நான் இங்கே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றி.*

திரு. ஓ. பன்னீர்செல்வம்: *அதனுள்ளே சென்று பேசிக் கொண்டிருப்பது தேவையில்லாதது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் இரண்டு பேரும் பேசியது அவைக் குறிப்பில் பதிவாகி இருக்கிறது. (குறுக்கீடு) இந்த அவையில், நீங்கள் இரண்டு பேருமே பேசியது. . . (குறுக்கீடு) உங்களுடைய கட்சி விவகாரத்தை தீர்க்கக்கூடிய இடம் இதுவல்ல. (குறுக்கீடு) இது மக்கள் பிரச்சினைகளைப் பற்றிப் பேசுகின்ற இடமாகும். (குறுக்கீடு) அவர்களுக்குச் சொன்னதைத்தான் நான் உங்களுக்கும் சொல்கிறேன். எனவே, தயவுசெய்து அமருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) ஒப்பந்த செவிலியர்கள் போராட்டம் குறித்து ஒரே வார்த்தையில் பேசி, அரசின் கவனத்தை ஈர்த்து அமருங்கள். (குறுக்கீடு) கொஞ்சம் இருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள்.*

திரு. ஓ. பன்னீர்செல்வம்: *ஏற்கெனவே, நான் முதலமைச்சராக, எதிர்க்கட்சித் தலைவராக, எதிர்க்கட்சித் துணைத் தலைவராக இருந்து பணியாற்றியிருக்கிறேன். ஆக, சபையை மீறியோ, விதியை மீறியோ, சட்டத்தை மீறியோ, ஆசனத்தில் அமர்ந்திருக்கிற மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவரின் வார்த்தையை மீறியோ இதுவரை நான் பேசியது கிடையாது. இதையெல்லாம் நீங்கள் கருத்தில்கொள்ள வேண்டும். என்னையும் உட்கார வைத்துக்கொண்டு, வழக்கின் உள்ளே சென்று பேசுவது எந்தவிதத்தில் நியாயம்? அதை நீங்கள் ஏன் அனுமதித்தீர்கள் என்பதைத்தான் நான் கேட்க விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றி. அதாவது, நீங்கள் சொன்னதும் அவைக் குறிப்பில் பதிவாகி இருக்கிறது. அவர்கள் என்னிடத்தில் கொடுத்த கடிதத்திலுள்ள விஷயங்களைச் சொன்னார்களே தவிர, அது அப்படியே இருக்கிறதே தவிர, வேறு*

2023 அக்டோபர் 11] [பேரவைத் தலைவர்]

ஒன்றும் இல்லை. நீங்கள் சொன்னதற்கும் நான் சொல்கிறேன். இந்த அவை, பேரவை விதிப்படியும், இந்திய அரசமைப்புச் சட்டப்படி மட்டும்தான் நடைபெறும்; நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இனிவருங்காலத்திலும் அவ்வாறுதான் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள். (குறுக்கீடு) போதும். (குறுக்கீடு) இல்லை, please போதும். (குறுக்கீடு) சரி. (குறுக்கீடு) நன்றி, நன்றி. உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை. (குறுக்கீடு) நன்றி, நன்றி. (குறுக்கீடு)

6. சிறப்புக் கவன ஈர்ப்பு

கொரோனா காலத்தில் பணிபுரிந்த எம்.ஆர்.பி. தேர்வு முடித்த ஒப்பந்த செவிலியர்கள் பணி நிரந்தரம் கோரி போராட்டம் செய்வது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள். சிறப்புக் கவன ஈர்ப்பு என்ற முறையில் ஒரு நிமிடம் தருகிறேன்.*

பிற்பகல் 12–50

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, MRB முடித்து, கொரோனா காலத்தில் பணிபுரிந்த ஒப்பந்த செவிலியர்கள் தொடர்ச்சியாக பல்வேறு காலகட்டங்களில் நம்முடைய அரசிடம் கோரிக்கை வைத்தும், தங்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும், சம வேலைக்கு சம ஊதியம், காலமுறை ஊதியம் நிர்ணயம் செய்யப்பட வேண்டுமென்ற கோரிக்கைகளை வலியுறுத்தியும், DMS அலுவலகத்திற்கு முன்பு, இயற்கை உபாதைகளுக்குக்கூட வசதியில்லாமல் தங்களை வருத்திக்கொண்டு, ஜனநாயக ரீதியாக தங்களுடைய கருத்துகளை வலியுறுத்தி வந்திருக்கின்றார்கள். தற்போது, காவல் துறை கைது செய்ய வந்தபோதுகூட இரண்டு நாட்களாக அவர்கள் ஒருவருக்கொருவர், கட்டிப்பிடித்துக்கொண்டு மயக்கமுறுகின்ற நிலையில் போராடி வருகிறார்கள்.*

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், குறிப்பாக, இதுபோன்று மக்களுக்கு சேவை செய்கின்ற மருத்துவர்கள், செவிலியர்கள், ஏனைய ஆசிரியப் பெருமக்கள் என அனைவரையும்

[திரு. தி. வேல்முருகன்] [2023 அக்டோபர் 11

அழைத்து, முறையாக சம்பந்தப்பட்ட அமைச்சர்களை அவ்விடத்திற்கு அனுப்பி வைத்து பேச வைப்பதும், துறைச் செயலாளர்களை அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்த வைப்பதும் என ஒரு சுமூகமான அணுகுமுறையை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும் கடைப்பிடித்து வருகின்றார்கள். அவர்களும் அதை நன்றியோடு உணர்கின்றார்கள். ஆனால், அவர்களின் கோரிக்கைகள் இரண்டே முக்கால் ஆண்டுகளாகியும் நிறைவேறவில்லையே என்கிற ஒரு வலியோடு இருக்கின்றார்கள். ஆதலால், MRB முடித்து கொரோனா காலத்தில் பணிபுரிந்த ஒப்பந்த செவிலியர்களை உடனடியாக தமிழக அரசும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும், அவர்களை கருணையோடு பணி நிரந்தரம் செய்ய வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கின்றேன். இதர இரண்டு பிரிவு செவிலியர்களுக்கும் இதே கோரிக்கைகள் இருக்கின்றன. தயவுசெய்து, மக்கள் உயிரைக் காக்க, தங்களை முழுவதுமாக அர்ப்பணித்துக்கொண்டு சேவை செய்கின்ற இதுபோன்ற பிரிவில் உள்ளவர்களுக்கு இந்த அரசு கருணை காட்ட வேண்டுமென்று அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சிறப்புக் கவன ஈர்ப்பு என்றால் ஒரு நிமிடத்தில் அரசின் கவனத்தை ஈர்த்துவிட்டு அமர வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நண்பர் திரு. வேல்முருகன் அவர்கள் சொன்ன அத்துணை கருத்துகளையும் அப்படியே நான் வழிமொழிகிறேன். செவிலியர்கள் என்று சொன்னால், மக்கள் மத்தியிலே மிகப்பெரிய அனுதாபம் இருக்கிறது. நம் எல்லோருக்கும் அப்படித்தான். கொரோனா காலத்தில் உயிரைப் பணயம் வைத்து எப்படிப் பணியாற்றினார்கள் என்பதை எல்லோருமே அறிவோம். அப்படிப்பட்ட சூழ்நிலையில், சாலைக்கு வந்து போராடாமல், பேச்சுவார்த்தை மூலமாகவே அவர்களின் பிரச்சினையை சாலைக்கு வராமல் தீர்ப்பதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ள வேண்டும். நிச்சயமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களும், தமிழ்நாடு அரசும் கருணை அடிப்படையிலே அவர்களுக்குத் தேவையான விஷயங்களை செய்து, அவர்கள்

2023 அக்டோபர் 11] [திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்]

சுமூகமாக பணியாற்றி, உயிர்களைக் காப்பாற்றுவதற்கு உதவ வேண்டுமென்று அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை அவர்கள்.*

திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவத் துறையில் மிக முக்கியமாகப் பணியாற்றுகின்ற செவிலியர்கள் தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கின்றார்கள். MRB முடித்த செவிலியர்களும், ஒப்பந்த செவிலியர்களாக இருக்கின்றவர்களும், நேற்றையதினம்கூட போராட்டத்தை நடத்தினார்கள். போராட்டம் நடத்துவதற்கு முன்னதாகவே, அமைச்சர்களை அனுப்பி, அரசுத் துறை அதிகாரிகளை அனுப்பி பேச்சுவார்த்தையின்மூலம் தீர்வு கண்டிருக்கலாம். அது பத்திரிகை, ஊடகங்களில் ஒரு பெரிய செய்தியாக மாறுகின்ற அளவிற்கு போக வேண்டிய அவசியம் இல்லை. ஆகவே, தமிழ்நாடு அரசு, செவிலியர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கும் என்கின்ற நம்பிக்கையை உருவாக்கக்கூடிய முறையில், அவர்களைப் பணி நிரந்தரம் செய்து, காலமுறை ஊதியம் வழங்கி, அவர்களுடைய வாழ்வாதாரத்தை பாதுகாக்க முன்வர வேண்டுமென்று அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் அவர்கள்.*

திருமதி வானதி சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்கள் கல்வி கற்க வேண்டும், பெண்கள் வேலைக்கு வர வேண்டும், அதன் வாயிலாக பெண்களுக்கான அதிகாரம் வழங்கப்பட வேண்டுமென அரசு பல்வேறு முயற்சிகளை எடுப்பதாகச் சொல்கின்ற இந்த நேரத்தில், வேலைக்காக பெண்கள் தெருவிலே இறங்கி போராடிக் கொண்டிருப்பதையும், போராட்டக் களத்திலே, பெண்கள் காவல் துறையினரால் தூக்கிச் செல்லப்படுவதையெல்லாம், அவர்கள் பெண்கள் என்கின்ற முறையில், அது ஒரு பெரிய பாதிப்பை ஏற்படுத்துகிறது. அவர்களின் நியாயமான கோரிக்கைகளை அரசு பரிசீலித்து, நடவடிக்கை எடுக்க வேண்டுமென தங்கள் வாயிலாக அரசின் கவனத்தை ஈர்த்து அமைகிறேன்.*

[*2023 அக்டோபர் 11*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள்.*

திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி, பொறுப்பேற்று இரண்டரை ஆண்டுகள் கடக்க இருக்கும் இந்த நிலையில், செவிலியர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை என்றும், செவிலியர்கள் தங்கள் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டுமென்றும் போராடியதால், அவர்களை அரசு கைது செய்திருக்கிறது. மருத்துவத் தேர்வு வாரியத்தால், போட்டித் தேர்வின்மூலம் பணியமர்த்தப்பட்ட 2,500 செவிலியர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டதை எதிர்த்தும், அவர்களுக்கு மீண்டும் பணி வழங்கக் கோரியும், தொகுப்பூதியத்தில் இருந்து காலமுறை ஊதியத்திற்கு மாற்றப்பட்ட செவிலியர்களை பணி வரன்முறை செய்யக் கோரியும், சேவை மனப்பான்மையுடன் மகப்பேறு சேவை வழங்கும் தொகுப்பூதிய செவிலியர்களுக்கு ஊதியத்துடன்கூடிய மகப்பேறு விடுப்பு, மருத்துவ விடுப்பு, அத்தியாவசிய விடுப்பு போன்றவற்றை வழங்க வலியுறுத்தியும், ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், புதியதாக துவங்கப்பட்ட மருத்துவமனைகளிலும் பணியிடங்கள் காலியாக உள்ள நிலையில், மருத்துவத் தேர்வு வாரியம்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட தங்களை காலிப் பணியிடங்களில் அமர்த்த வலியுறுத்தியும், செவிலியர்கள் சென்னை தேனாம்பேட்டையிலுள்ள பொது சுகாதார வளாகத்தில் போராடி வருகின்றனர். போராடும் செவிலியர்களை அழைத்துப் பேசி அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்காமல் அவர்களை கைது செய்யும் நடவடிக்கைகளை தி.மு.க. அரசு எடுத்துள்ளது என்பது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. (மணியடிக்கப்பெற்றது) போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் செவிலியர்களை உடனடியாக அழைத்துப்பேசி அவர்களின் அனைத்துக் கோரிக்கைகளையும் விரைந்து நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

பிற்பகல் 12–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.*

2023 அக்டோபர் 11]

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது செவிலியர்களுடைய போராட்டத்தைப்பற்றி இங்கே பேசிக்கொண்டிருக்கிறோம். ஆகவே, பெண்கள் போராடுகிறார்கள் என்ற உணர்வோடும், அவர்கள் செவிலியர்களாக பணியாற்றக்கூடியவர்கள் என்ற உணர்வோடும், அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்று அன்பு வேண்டுகோளை முன்வைக்கிறேன். அதேபோல ஆசிரியர்கள் போராட்டம் தொடர்ந்து நீடித்துக்கொண்டிருக்கிறது. ஆசிரியர் சங்கங்களின். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இதைமட்டும் பேசி அமருங்கள்.

திரு. ஜி.கே. மணி: ஆசிரியர் சங்கங்களின் கோரிக்கைகளையும் நிறைவேற்ற வேண்டுமென்று அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செவிலியர்கள் போராட்டம் என்பது இந்த அரசே பேசி முடிக்க வேண்டியது. போராடுவது மனிதர்களுடைய உரிமை. இந்த அரசின்மீது நம்பிக்கை வைத்துத்தான் போராடுகிறார்கள். ஏனென்றால், ஏற்கெனவே தேர்தல் அறிக்கையிலே, யாராவது கொரோனா நேரத்தில் பணி செய்த செவிலியர்கள் இருந்தால், அவர்களுடைய பணி நிரந்தரம் செய்யப்படும் என்று நாமே சொல்லியிருக்கிறோம், இந்த அரசே சொல்லியிருக்கிறது. நான் இதை ஏன் வலியுறுத்துகிறேன் என்றால், இன்று சுமார் 700 செவிலியர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் கைது செய்யப்பட்டிருக்கக்கூடாது. இந்தப் பிரச்சினையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்து பேசி உடனடியாக நல்ல முடிவை எடுத்திருக்க வேண்டும். அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும், அவர்களுடைய பணியினை நிரந்தரம் செய்யவும் இனிமேலாவது, உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

[*2023 அக்டோபர் 11*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று காலை தமிழ்நாடு* MRB *செவிலியர்கள் மேம்பாட்டுச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் ஒரு போராட்டம் என்கின்ற வகையில், அத்துமீறி* DPH, DMS *அமைந்திருக்கின்ற வளாகத்திற்குள் 300, 400 பேர் நுழைந்திருக்கிறார்கள். போராட்டம் நடத்துவதற்கு அனைவருக்குமே ஜனநாயக ரீதியாக உரிமை உண்டு. சென்னையில் போராட்டம் நடத்துவதற்குரிய இடங்கள் என்று காவல் துறையினரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்ற இடங்கள் வள்ளுவர் கோட்டம், சேப்பாக்கம், அதேபோல மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம். இங்கே போராட வேண்டுமென்று யார் அனுமதி கேட்டாலும், அங்கே அனுமதி தாராளமாக தரப்படுகிறது.*

இந்த நிலையில் DPH, DMS *போன்ற மருத்துவத் துறை அலுவலகங்கள் இயங்கிக்கொண்டிருக்கின்ற வளாகத்தில் நாங்கள் போராடுவோம் என்கின்ற ரீதியில் அங்கே கூடியிருக்கிறார்கள். மற்றவர்களுடைய பணியும் பாதிக்கும் என்கின்ற நிலையில் உடனடியாக செவிலியர்களை அங்கிருந்து பக்கத்தில் இருக்கின்ற திருமண மண்டபத்திற்கு அழைத்துச் சென்று உட்கார வைத்திருக்கிறார்கள். நேற்றைக்கு சட்டமன்றக் கூட்டத்தொடர் நடைபெற்றுக்கொண்டிருந்தது. இதைக் கேள்விப்பட்டவுடன், நான் உடனடியாக மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கேற்ப, துறையின் செயலாளரை அழைத்து, நான் சட்டமன்றத்திற்குள் இருக்கிறேன், நீங்கள், அவர்களை அழைத்துப்பேசி தீர்வு கண்டு, அவர்களுக்குப் பதில் அளித்து அனுப்பவேண்டுமென்று சொல்லியிருந்தேன். உடனடியாக நம்முடைய துறையின் செயலாளர் அவர்கள், அவர்களில் முக்கியமானவர்களை வரவைத்து, 2 மணிநேரம் இடைவிடாது பேசி, நேற்று இரவே அவர்கள், 'நாங்கள் போராட்டத்தை வாபஸ் பெற்றுக்கொண்டோம்' என்று செய்தியை கொடுத்துவிட்டு, ஊருக்குச் சென்றுவிட்டார்கள்.*

ஆனால், இங்கே பேசிய தலைவர்கள், இன்னமும் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருப்பதைப்போலவே ஒரு பிரமையை ஏற்படுத்தி இருக்கிறார்கள். நேற்று இரவே அந்தப் போராட்டம் முடிவுற்றிருக்கிறது. நேற்றுக் காலை தொடங்கிய போராட்டம், நேற்று மாலை முடிவுற்றிருக்கிறது. அவர்கள்

2023 அக்டோபர் 11][திரு. மா. சுப்பிரமணியன்]

பத்திரிகையில் கொடுத்த செய்தி, இன்று காலை தினமணி போன்ற பத்திரிகைகளிலெல்லாம்கூட 'போராட்டம் வாபஸ்' என்று செய்தியாகப் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அதைப் பார்த்திருக்க வேண்டும். ஆனால், பார்க்காமலே தகவல் கோரலில் சில செய்திகளைச் சொல்லியிருக்கிறார்கள் என்றாலும் வருத்தமில்லை. காரணம், இந்த அரசைப் பொறுத்தவரை, இங்கே பேசியவர்களுக்கு நினைவிருக்கும் என்று நான் கருதுகிறேன். குறிப்பாக, 2-7-2003 அரசு ஊழியர்கள் வரலாற்றில் ஒரு கருப்பு நாள். அந்த நாளை யாரும் மறக்கவே முடியாது. Essential Services Maintenance Act என்று சொல்லக்கூடிய ESMA, Tamil Nadu Essential Services Maintenance Act என்று சொல்லக்கூடிய TESMA. இந்த ESMA-வும், TESMA-வும் 2-7-2003-ல் கொண்டுவரப்பட்டு ஒன்றே முக்கால் இலட்சம் அரசு ஊழியர்கள் வீட்டிற்கு அனுப்பப்பட்டார்கள். 12 ஆயிரம் அரசு ஊழியர்களை வீடுகளுக்கே தேடிச் சென்று காவல் துறையினர் சமூக விரோதிகளைப் பிடிப்பதைப்போல் பிடித்து சிறையில் அடைத்தார்கள். 12 ஆயிரம் பேரை சிறையில் அடைத்ததற்குப் பிறகு, அவர்கள் மேற்கொண்ட இன்னொரு நடவடிக்கை, 12 ஆயிரம் பேருக்குப் பதிலாக, இன்னொரு 12 ஆயிரம் பேரை 4,000 ரூபாய் சம்பளத்திற்கு பணியில் அமர்த்தினார்கள். இந்தத் தேதியை மீண்டும் பதிவு செய்கிறேன், 2-7-2003. தற்போது ஒப்பந்த செவிலியர்கள்மீது அக்கறை காட்டுகிற, இதற்கு முன் தமிழகத்தை ஆட்சி செய்தவர்கள் அன்புகூர்ந்து அந்த நிலையை எண்ணிப்பார்க்க வேண்டும். 12 ஆயிரம் பேருடைய வாழ்க்கை இருண்டே போய்விட்டது. ஒன்றே முக்கால் இலட்சம் பேருடைய வாழ்க்கை கேள்விக்குறியானது; இது அரசு ஊழியர்கள்.

பிற்பகல் 1-00

கடந்த காலத்தில் இதே மக்கள் நல்வாழ்வுத் துறையில் பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்த மருத்துவர்கள், செவிலியர்கள் அவர்களெல்லாம் போராடினால் அவர்களுக்கு கிடைக்கிற பரிசு என்னவாக இருந்ததென்றால், உடனடியாக இடமாற்றம்; உடனடியாக பணியிடை நீக்கம்; உடனடியாக பணியிலிருந்து விலக்குவது; மாவட்டம் விட்டு மாவட்டம் என்று அவர்களைப் பந்தாடுவது; இதைவிட கூடுதல் கொடுமை என்னவென்றால், பணியிலிருந்த மருத்துவர் லஷ்மி நரசிம்மன் என்பவர், போராட்டக் காலத்திலே இறந்து போனார். கடந்த ஆட்சியில் இப்படிப்பட்ட சூழலில் மருத்துவர்களின் நிலை இருந்தது. ஆனால், நம்முடைய தமிழ்நாட்டினுடைய மாண்புமிகு முதலமைச்சர்

[திரு. மா. சுப்பிரமணியன்] [2023 அக்டோபர் 11

அவர்கள், ஒருவர்கூட இந்தத் துறையில் பாதித்துவிடக் கூடாது, செவிலியராக இருந்தாலும், மருத்துவராக இருந்தாலும், மருத்துவத் துறையைச் சார்ந்த களப் பணியாளராக இருந்தாலும், ஒருவர்கூட எந்தவிதமான பாதிப்புக்கும் உள்ளாகக் கூடாது என்றுதான் தொடர்ந்து அறிவுறுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

அந்தவகையில், நேற்று காலை நடைபெறத் தொடங்கிய இந்தப் போராட்டம் குறித்து உடனடியாக எங்களிடத்திலே சொல்லி, நேற்று மாலையிலே அந்தப் போராட்டம் முடிவுக்கு வந்திருக்கிறது. செவிலியர்களிடையே பல்வேறு சங்கங்கள் இருக்கின்றன. 15 நாட்களுக்கு முன்னால் வள்ளுவர் கோட்டம் அருகே வேறொரு தரப்பு செவிலியர்கள், வேறொரு சங்கத்தைச் சேர்ந்தவர்கள் உண்ணாவிரதம் இருந்த நிலையில் தமிழ்நாட்டினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த உண்ணாவிரதத்தை உடனடியாக முடிவுக்கு கொண்டுவர வேண்டுமென்று சொன்னார்கள். உடனடியாக அவர்களை அழைத்து நான் அவர்களுடன் 2 மணி நேரம் பேசி, தமிழ்நாட்டின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஒப்புதலோடு அவர்களுடைய கோரிக்கைகளில் ஒன்றிரண்டை ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு, மிகுந்த சந்தோஷத்துடன் விடைபெற்றுச் சென்றார்கள். அதேபோல, நேற்றைக்கும் துறையின் செயலாளர், அவர்களை அழைத்து பேசியதற்குப் பிறகு, அவர்கள் மகிழ்ச்சியோடு சென்றிருக்கிறார்கள். அதில் 4 பேர், 'குரோம்பேட்டையில் தங்கியிருக்கிறோம்; நாங்கள் இன்று மாலை 4 மணிக்கு வந்து அமைச்சர் அவர்களை சந்திக்கலாமா?' என்று காலையில் கேட்டார்கள். வந்து பார்க்கச் சொல்லியிருக்கிறோம். இந்த நிலையில்தான் இந்தப் போராட்டம் இருந்து கொண்டிருக்கிறது.

இந்தத் துறையைப் பொறுத்தவரை, DME, DMS, DPH, ESI, Indian Medicine, குடும்ப நலத் துறை, District Health Society என்று பல துறைகளின்கீழ் 47,938 செவிலியர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இந்த 47,938 செவிலியர்களில் 12,787 பேர் ஒப்பந்த செவிலியர்கள். இந்த ஒப்பந்த செவிலியர்கள் எப்போது பணியமர்த்தப்பட்டார்கள் என்றால், 2015, 2016, 2017 மற்றும் 2020-க்குள்ளான கால கட்டங்களில் பணிக்கு வந்தவர்கள். நம்முடைய தமிழ்நாட்டின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இவர்களில் ஒருவருக்குக்கூட பணி பாதிப்பு ஏற்படக் கூடாது என்ற வகையில்தான், அந்த ஒப்பந்தக் காலம் முடிவுற்ற உடனே,

2023 அக்டோபர் 11][திரு. மா. சுப்பிரமணியன்]

அவர்களுக்கு மீண்டும் District Health Society-ல், அவர்கள் ஏற்கெனவே வாங்கிக் கொண்டிருந்த சம்பளம் ரூ.14,000/-, NHM-ன் சார்பில் அவர்களுக்கு சம்பளத்தை 18,000 ரூபாயாக உயர்த்தி-அவர்களுடைய சொந்த மாவட்டங்களிலே பணியமர்த்துவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு, இன்றைக்கு பலரும் பணியில் இருந்து கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில், தற்போது நிரந்தர செவிலியர்களுக்கான 499 பணியிடங்கள் காலியாக உள்ளன. மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் அந்த 499 நிரந்தர செவிலியர் பணியிடங்களையும் இவர்களை வைத்தே நிரப்பிட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, அந்தவகையில் இந்தக் காலிப் பணியிடங்களுக்கு வருகிற 13-10-2023 அன்று கலந்தாய்வுமூலம் மூப்புநிலை மற்றும் இனசுழற்சி முறையில் சான்றிதழ்கள் சரிபார்க்கப்பட்டு, தற்போது, MRB ஒப்பந்த செவிலியர்களை காலமுறை ஊதியத்தில் பணியமர்த்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. நாளை மறுநாள் இந்தப் பணி நம்முடைய தமிழ்நாட்டினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு நடைபெறவிருக்கிறது. ஏறத்தாழ 499 பேருக்கு வாழ்வு கிடைக்கவிருக்கிறது.

பிற்பகல் 1-05

அதோடுமட்டுமல்லாமல், தமிழ்நாட்டினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கலைஞர் பன்னோக்கு மருத்துவமனை என்கிற மருத்துவக் கட்டமைப்பை உருவாக்கி, அதிலும் 300 ஒப்பந்த அடிப்படையிலான செவிலியர் பணியிடங்களை புதிதாகத் தோற்றுவித்து, அதிலும் தொகுப்பூதிய செவிலியர்களின் காலிப் பணியிடங்களை தற்காலிக செவிலியர்களைக் கொண்டு நிரப்பிட வேண்டுமென்று அறிவுறுத்தியிருக்கிறார்கள். எனவே, அந்தவகையில் 499 பணியிடங்களுக்குப் பிறகு அந்த 300 பணியிடங்களையும் கருணையுள்ளத்தோடு நிரப்புவதற்கான ஏற்பாட்டை தமிழ்நாட்டினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செய்திருக்கிறார்கள். அவ்வப்போது, MRB மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிற செவிலியர்களை நிரந்தரமாக காலமுறை ஊதியப் பணியிடங்களில் பணியமர்த்தம் செய்யும்போது ஏற்படுகிற தொகுப்பூதிய செவிலியர் காலிப் பணியிடங்களில், படிப்படியாக தற்காலிக செவிலியர்களின் சான்றிதழ்கள் சரிபார்த்து, இன சுழற்சி முறையில் பணி நியமனம் செய்யப்பட வேண்டுமென்று மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர்

[திரு. மா. சுப்பிரமணியன்] [2023 அக்டோபர் 11 அவர்கள் அறிவுறுத்தியிருக்கிறார்கள். அந்த வகையில், தற்போது பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

நேற்றைக்கு நடைபெற்ற ஒப்பந்த செவிலியர்களின் போராட்டத்தில் அவர்கள் வைத்த முக்கியமான கோரிக்கைகள் 11 என்று அவர்கள் சொல்லியிருந்தாலும், அவற்றில் மூன்று கோரிக்கைகள் மிக முக்கியமானவை என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஒன்று, அதிகமான நிரந்தர செவிலியர் பணியிடங்களை உருவாக்க வேண்டுமென்பதாகும். தமிழகத்தில் கூடுதலான செவிலியர் பணியிடங்களைப் புதிதாக உருவாக்க வேண்டுமென்கின்ற ஒரு கோரிக்கையையும் வைத்திருக்கிறார்கள். அதேபோல், நிரந்தர செவிலியர்களுக்குத் தரப்படுகிற மகப்பேறு விடுப்பு மற்றும் அதற்குரிய பணப் பயன்களை தங்களுக்கும் தர வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். மகப்பேறு விடுப்பு மற்றும் பணப் பயன்கள், புதிதாக நிரந்தர செவிலியர் பணியிடங்கள் உருவாக்குவது, ஒப்பந்தப் பணியிலிருந்து நிரந்தரப் பணிக்கு மாற்றம் செய்வது ஆகியவை மூன்று பிரதான கோரிக்கைகளாக இருக்கின்றன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு இந்த மூன்று கோரிக்கைகளும் எடுத்துச் செல்லப்பட்டவுடன், 'நேற்றைக்கு அவர்கள் போராட்டத்தை வாபஸ் பெற்றுக்கொண்டாலும் பரவாயில்லை; கருணையுள்ளத்தோடு, அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றித் தருவதில் நாம் கூடுதலாகக் கவனத்தைச் செலுத்திட வேண்டும்' என்று அறிவுறுத்தியதன் அடிப்படையில், கூடுதல் செவிலியர் பணியிடங்களை துறையில் உருவாக்குவதற்கும், அவ்வப்போது எழுகிற நிரந்தர காலிப் பணியிடங்களில் ஒப்பந்த செவிலியர்களை நியமிப்பதற்கும், நிதித் துறையுடன் கலந்துபேசி, அவர்களுக்கு மகப்பேறு விடுப்பு மற்றும் பணப் பயன்களைப் பெற்றுத் தருவதற்கும், தேசிய நல்வாழ்வுக் குழும வழிகாட்டுதலின்படி, அரசிடம் கலந்தாலோசித்து, ஊதிய உயர்வு குறித்துப் பேசுவதற்கும் முடிவெடுக்கப்பட்டுள்ளது. அதற்கான அறிவிப்புகளை அவர்களிடத்திலேயே சொல்லியிருக்கிறோம்.

தேசிய நல்வாழ்வுக் குழுமத்தின் சார்பில்தான் இந்தத் தொகை வழங்கப்படுகிறது. பாரதிய ஜனதா கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய திருமதி வானதி சீனிவாசன் அவர்கள் சொன்னதைப்போல, ஒப்பந்த ஊழியர்களுக்கு வழங்கப்படுகிற

2023 அக்டோபர் 11][திரு. மா. சுப்பிரமணியன்]

ஊதியமான ரூ.18,000/– இந்தியா முழுமைக்கும் ஒரே மாதிரியாக வரையறுக்கப்பட்ட ஊதியமாகும். குறிப்பாக, தமிழ்நாட்டில் மட்டும் ரூ.18,000/– வழங்கப்படுகிறது. பல்வேறு மாநிலங்களில் அந்த ஊதியம் ரூ.14,000/– ஆகவும், ரூ.13,000/– ஆகவும் இருந்து கொண்டிருக்கிறது என்றாலும்கூட, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ரூ.18,000/– ஊதியத்துடன் சேர்த்து ஒவ்வோர் ஆண்டும் 5 சதவிகிதம் ஊதிய உயர்வு வழங்கப்பட வேண்டுமென்று அறிவுறுத்தியிருக்கிறார்கள். நிச்சயமாக, எதிர்காலத்தில் அவர்களுடைய கோரிக்கை செவிமடுக்கப்படும்.

அதோடுமட்டுமல்ல, ஒரு செவிலியருக்கும் பணி பாதிப்பு இல்லை என்கின்ற ஒரு நிலை உருவாக்கப்படும். யார் எப்பொழுது போராட்டம் நடத்தினாலும், போராட்டம் நடத்துகிற இடத்திற்கே நேரடியாகச் சென்று, அவர்களுடைய போராட்டத்திற்கான காரணங்களைக் கேட்டறிந்து, அந்தப் போராட்டங்களைக் கனிவோடு பரிசீலிக்கிற அரசு, இந்த அரசு; கனிவோடு பரிசீலிக்கும் முதல்வர், தாயுள்ளத்தோடு அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றுகிற முதல்வர், நம்முடைய மாண்புமிகு முதல்வர். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையில், எல்லோருமே மகிழ்ச்சியோடு நேற்றைக்கு போராட்டத்திலிருந்து விலகியிருக்கின்றார்கள் என்கின்ற செய்தியை தகவல் கோரியிருக்கிற மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்து விடைபெறுகிறேன். வணக்கம். (குறுக்கீடு)

4. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

(இ) கொடநாடு கொலை, கொள்ளை வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள்மீது நடவடிக்கை எடுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். வைத்திலிங்கம் அவர்கள், என்னவென்று சொல்லுங்கள். இங்கு வராதீர்கள். அங்கிருந்தே மைக்கில் பேசுங்கள்.*

திரு. ஆர். வைத்திலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான், மக்களுக்காக நான்' என்று தமிழ்நாட்டு மக்களுக்காக வாழ்ந்து மறைந்த முன்னாள் முதல்வர், எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய முகாம் அலுவலகமாக இருந்த கொடநாடு பங்களாவில், 24–4–2017 அன்று. . .*

[*2023 அக்டோபர் 11*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கொடநாடு குறித்து நீங்கள் பேரவை விதி 55-ன்கீழ் கவன ஈர்ப்பு அறிவிப்பு தந்திருக்கிறீர்கள். இதனை தகவல் கோரல் என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.*

திரு. ஆர். வைத்திலிங்கம்: *5 நிமிடங்கள் பேச வாய்ப்பு கொடுங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேசுங்கள். இன்று நிறைய அலுவல்கள் இருக்கின்றன. சீக்கிரம் உரையை முடித்துவிடுங்கள்.*

பிற்பகல் 1-10

திரு. ஆர். வைத்திலிங்கம்: *24-4-2017 அன்று கொலை, கொள்ளை நடந்தேறியிருக்கிறது. 24 மணி நேரமும் மின்சாரம் தட்டுப்பாடு இல்லாத அந்த பங்களாவில் மின்சாரம் நிறுத்தப்பட்டிருக்கிறது.* CCTV camera off *செய்யப்பட்டிருக்கிறது. அங்கே பணியாற்றிய ஓம்பகதூர் என்பவர் கொலை செய்யப்பட்டிருக்கிறார். கிருஷ்ண பகதூர் என்கிற நேபாளத்துக்காரர் படுகாயங்களுடன் தப்பித்துச் சென்றவர் எங்கிருக்கிறார் என்றே தெரியவில்லை. முன்னாள் முதலமைச்சர் வீட்டில் இப்படி 6 கொலைகள் நடைபெற்றிருப்பதற்கு அன்றைக்கு ஆட்சியிலிருந்தவர்கள் ஓர் ஆழ்ந்த இரங்கல்கூட தெரிவிக்கவில்லை. (மணியடிக்கப்பெற்றது)* I.G. *சென்று பார்க்கவில்லை.* Superintendent of Police *சென்று பார்க்கவில்லை.* D.G.P. *சென்று பார்க்கவில்லை. அங்கு இறந்தவர்களுக்கு இரங்கல்கூட தெரிவிக்கவில்லை.*

தமிழ்நாடு காவல் துறை Scotland Yard-*க்கு நிகரானது என்று சொல்கிறார்கள். நாங்கள் ஆட்சிக்கு வந்தால் 90 நாட்களில் குற்றவாளிகளைக் கூண்டில் நிறுத்துவோம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 900 நாட்கள் ஆகிவிட்டன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, தயவுசெய்து உங்களை கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறோம், தமிழ்நாட்டு ஏழை எளிய இதயங்களில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற, எங்களை ஆளாக்கிய புரட்சித் தலைவி அவர்கள் வாழ்ந்த வீட்டினில் கொலை மற்றும் கொள்ளை நடைபெற்றிருக்கின்றது. இதற்கு முன்னால் ஆட்சியில் இருந்தவர்கள் 2½ வருடங்கள், 3 வருடங்கள் ஆகியும் அதுகுறித்து எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. இந்த ஆட்சி வந்து இரண்டரை வருடங்களாகிவிட்டன. இந்த ஆட்சி என்ன*

2023 அக்டோபர் 11][திரு. ஆர். வைத்திலிங்கம்]
செய்துகொண்டிருக்கிறது? மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை சொல்லாததையும் செய்யக்கூடியவர் என்று இந்த அவையில் கூறினார்கள். சொன்னதை நீங்கள் ஏன் செய்யவில்லை? மேதகு Governor*-ஐ சென்று அப்போது சந்தித்தீர்கள். 'கொடநாடு குற்றவாளிகளை கண்டுபிடியுங்கள்' என்று அவர்களிடம் கூறினீர்கள். இன்றைக்கு அந்த இடத்திலிருக்கின்ற நீங்கள் தயவுசெய்து குற்றவாளிகளைக் கண்டுபிடித்து, உண்மைக் குற்றவாளி எத்தகைய உயரமான இடத்திலிருந்தாலும், எங்கள் அம்மா அவர்களின் வீட்டில் நடந்த கொலையில் சம்பந்தப்பட்டவர்களை சொந்தக்காரர்களை கண்டுபிடித்துக் கூண்டில் ஏற்றுங்கள், ஏற்றுங்கள் என்று கூறி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். வைத்திலிங்கம் அவர்கள், கொடநாடு பிரச்சினையைப் பற்றி இங்கே பேசியிருக்கிறார். தற்போது அது சி.பி.சி.ஐ.டி. விசாரணையில் இருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். அந்த சி.பி.சி.ஐ.டி. விசாரணையே நாங்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகுதான் நடைபெறத் தொடங்கியிருக்கிறது. சிறப்புப் புலனாய்வுத் துறையின்மூலம் இந்த விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. விசாரணையின் முன்னேற்றம் மற்றும் தற்போது இருக்கக்கூடிய நிலவரங்களைப் பற்றியெல்லாம் தொடர்புடைய அறிக்கை விரைவிலே நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவிருக்கிறது. எனவே, இந்த வழக்கிலே யார், யார் தவறு செய்திருக்கிறார்கள் என்பது மிக விரைவிலே வெளியே வரப் போகிறது. அவர்கள் எப்படிப்பட்ட இடத்திலே இருந்தாலும், நிச்சயமாக தண்டிக்கப்படுவார்கள் என்பதை நான் உறுதியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)*

(ஈ) உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் அவர்கள் பேசிய பிறகு வாய்ப்பு தருகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் அவர்கள்.*

[*2023 அக்டோபர் 11*

திருமதி வானதி சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், உங்களுக்கு வாய்ப்பு அளிக்கிறேன், நான் சொல்கிறேன், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விதி 55-ன்கீழ் கவன ஈர்ப்புத் தீர்மானம் குறித்துப் பேசுவதற்கு என்னிடத்தில் எழுதிக்கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) நான் பேசிய பிறகு தானே உங்களுக்கு வாய்ப்பு தர முடியும்? மாண்புமிகு உறுப்பினர் நீங்கள் விதி 55-ன்கீழ் பேசுவதற்கு எழுதிக்கொடுத்திருக்கிறீர்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் நேற்று சட்டமன்றப் பேரவையில் ஒரு தீர்மானம் கொண்டுவந்து, அது தற்போது மேதகு* Governor *இடம்தான் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. சட்டத்திற்குட்பட்டு* Justice Authinathan Commission, *நீதியரசர் அவர்களின் தலைமையில் கமிஷன் அமைக்கப்பட்டு, அதில் 6 நபர்களை நியமித்து, அதுதான் மேதகு ஆளுநர் அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதே தவிர, அதை குற்றம் என்று சொல்வதற்கோ அல்லது ** என்று வருவதாக இருந்தால் அதை அரசு பார்த்துக்கொள்ளும். அதனை நான் பதிவு செய்துவிட்டேன். போதும். மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள். (குறுக்கீடு).*

(உ) ஆர்.எஸ்.எஸ். அமைப்பினர் அணிவகுப்பு நடத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.*

(பாரதிய ஜனதா கட்சி உறுப்பினர்கள் அனைவரும் அவையிலிருந்து வெளியேறினர்.)

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் அவர்களும் அறிவித்துள்ள நல்ல அறிவிப்புகளை செவிலியர்களின் காதுகளில் தேன் வந்து பாய்கின்ற அறிவிப்புகளான அவர்களின் சம வேலைக்கு சம ஊதியம், பணி நிரந்தரம் ஆகிய இந்த அறிவிப்புகளை வரவேற்று. . .*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது*

2023 அக்டோபர் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், எது குறித்து?*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி கூறுகிறேன், நன்றி கூறிவிட்டு சொல்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், எது குறித்துப் பேசுகிறீர்கள்?*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொல்கிறேன். செவிலியர்கள் குறித்துப் பேசுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதிக அளவில் கவன ஈர்ப்புத் தீர்மானம் அளித்திருக்கிறீர்கள். தற்போது ஒன்று குறித்து* raise *செய்கிறீர்களே, அது எது என்று கேட்கிறேன். நேற்று நீங்கள் போராடச் சென்றீர்களே, அது குறித்துப் பேசப்போகிறீர்களா?*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் எது குறித்துப் பேச அனுமதி அளித்தாலும் அது குறித்துப் பேசுகிறேன். ஒரு நிமிடத்தில் சொல்லிவிடுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எது குறித்துப் பேசினாலும் ஒரு நிமிடத்தில் உரையாற்றி முடிக்க வேண்டும்.*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பிரச்சினையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர், மாண்புமிகு தளபதி அண்ணன் அவர்களின் ஆட்சியில் தமிழ்நாடு அமைதியாகவும், சமூகநீதிக்காகவும் களத்தில் நின்று போராடுகின்ற அனைத்து மக்களையும் சகோதரத்துவத்துடனும், சமத்துவத்துடனும் பார்க்கின்ற இந்தச் சூழலில் RSS என்கிற ஒரு அமைப்பு. . .*

பிற்பகல் 1–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், ஒரு நிமிடம், ஒரேயொரு நிமிடம் உட்காருங்கள். உங்களுக்கு வாய்ப்புத்*

[பேரவைத் தலைவர்] [*2023 அக்டோபர் 11*

*தருகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் அவர்கள் பேசும்போது, ** அவர்கள் பதிவு செய்தார்கள். அவர்கள் பேசிய அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. நம்முடைய பத்திரிகையாளர்கள், ஊடக நண்பர்கள் உட்பட அனைவரையும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இந்த அவை, இந்த நாட்டில் அமைதியை உருவாக்குகின்ற அவை, மக்களுக்கான அவை, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் சட்டத்தின் ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கின்றார். ஆகவே, தயவுசெய்து அந்தக் குறிப்புகளை யாரும் வெளியிடக்கூடாது. நான் உட்பட, திருமதி வானதி சீனிவாசன் அவர்கள் பேசிய அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் அமைப்பு வருகின்ற நாடாளுமன்ற தேர்தலைக் கருத்தில் வைத்து, தமிழ்நாடு முழுவதும் 100-க்கும் மேற்பட்ட இடங்களில் காக்கிச் சீருடை அணிந்து, கையில் ஆயுதங்களை ஏந்தி தமிழ்நாட்டில் சீருடை அணிவகுப்பு நடத்தப்போகிறோம் என்று நம்முடைய அரசுக்கும் இங்கிருக்கின்ற மதச்சார்பின்மையையும் கேள்விக்குறியாக்குகின்ற நிலையில் பேரணிகளை ஒழுங்கு செய்வதாகச் சொல்லி காவல் நிலையங்களை அணுகி அனுமதி கேட்டுக்கொண்டிருக்கிறது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை முறையாக நடைமுறைப்படுத்த வேண்டும்; இது காந்திய தேசம்; காந்தியை கொன்றவர்களுக்கு இங்கு அனுமதி இல்லை என்ற ஒரு நிலையை உருவாக்க வேண்டும். நாங்கள் சமூக நீதிக்கான ஓர் அமைதிப் பேரணியை நடத்துவதற்கும், காவல் துறையை நாங்கள் அணுகுகின்றபோது, எங்களுக்கு 'அனுமதி இல்லை' என்கிறார்கள். கொடியேற்றுவதற்கு அனுமதியில்லை, கூட்டம் போடுவதற்கு அனுமதியில்லை, மக்கள் பிரச்சினைகள் பற்றிப் பேசுவதற்கு அனுமதியில்லை என்கிறார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை அன்போடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். ஜனநாயகப் போராட்டங்களையே மறுத்து சட்ட-ஒழுங்கைக் காப்பாற்ற நினைக்கின்ற தங்கள் ஆட்சியில், இந்த RSS மதத்தின் பெயரால் மனிதத்தை கூறுபோடுகின்ற இந்தக் கும்பல்களுக்கு தமிழ்நாட்டில் எங்கேயும் பேரணி நடத்தவதற்கு*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது*

2023 அக்டோபர் 11] [திரு. தி. வேல்முருகன்]
நீங்கள் அனுமதி அளிக்கக் கூடாது. (மணியடிக்கப்பெற்றது) அப்படி அவர்களுக்கு கொடுத்தால் சமூக நீதியை நிலைநாட்டுகின்ற எங்களைப் போன்ற இயக்கங்களுக்கும். . .

7. இஸ்ரேல் போர், தமிழகத்தைச் சேர்ந்த பாதிக்கப்பட்டவர்களைக் காப்பாற்ற நடவடிக்கை எடுத்த முதலமைச்சருக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள். (குறுக்கீடு) நீங்கள்தான் நன்றாக பேசிவிட்டீர்களே! நானும் முடித்துவிடுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.*

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இஸ்ரேல் நாட்டிலே நடக்கிற பிரச்சினைகளை எல்லோரும் அறிவோம். ஒரு போர் சூழல். தமிழகத்தைச் சேர்ந்த 7 பேர் அங்கிருந்து என்னை தொலைபேசியிலே தொடர்பு கொண்டார்கள். நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அலுவலகத்திலேயே அந்தக் குறிப்புகளை கொடுத்தேன். அந்த 7 பேரைச் சேர்த்து, மொத்தமாக தமிழகத்தைச் சார்ந்தோர் எத்தனையோ பேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், அவர்களைக் காப்பாற்றுவதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக எடுத்திருக்கிறார். அந்தவகையிலே நான் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.*

8. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல், பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை, பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் அவர்கள்.*

திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2023–2024 ஆம் ஆண்டுக்கான பொதுக் கணக்குக் குழுவின் 106 முதல் 155 வரையிலான 50 அறிக்கைகளை பொதுக் கணக்குக் குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.*

[*2023 அக்டோபர் 11*

(ஆ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள். அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர் அவர்கள்.*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டப்பேரவையின் 2023–2024 ஆம் ஆண்டுக்கான அரசு உறுதிமொழிக் குழுவின் 54 முதல் 63 வரையிலான 10 அறிக்கைகளை அரசு உறுதிமொழிக் குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன். நன்றி.*

(இ) மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன், அரசு தலைமைக் கொறடா, மனுக்கள் குழுவின் தலைவர் அவர்கள்.*

முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எளியவனான என்னை மனுக்கள் குழுவின் தலைவராக நியமித்து, அறிக்கையைச் சமர்ப்பிக்க வாய்ப்பு தந்த முதலமைச்சர்களின் முதல்வர், தளபதி அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டப் பேரவையின் 2023–2024 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் 21–வது மற்றும் 22–வது ஆகிய இரண்டு அறிக்கைகளை மனுக்கள் குழுவின் சார்பாக இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

9. அரசினர் சட்டமுன்வடிவு (திரும்பப் பெறுதல்)

தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2022

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவு (திரும்பப் பெறுதல்). 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2022), மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

2023 அக்டோபர் 11]

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "7–1–2022 ஆம் நாளன்று பேரவையில் நிறைவேற்றப்பெற்ற, 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2022) திரும்பப் பெற வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்டமுன்வடிவை திரும்பப் பெறுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சட்டமுன்வடிவு திரும்பப்பெறப்பட்டது.*

பிற்பகல் 1–20

10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (முறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 2023

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (முறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்தச்*

[பேரவைத் தலைவர்] [2023 அக்டோபர் 11

சட்டமுன்வடிவு. மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (முறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஆ) தமிழ்நாடு பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டல மேம்படுத்துதல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2023

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டல மேம்படுத்துதல் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2023 அக்டோபர் 11] [திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்]

"2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டல மேம்படுத்துதல் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

11. அறிவிப்புகள்

(அ) தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2023 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)–

தொடர்ச்சி

(இ) தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2023

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

[*2023 அக்டோபர் 11*

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

12. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் (முதல்), 2023–2024, விவாதமும் வாக்கெடுப்பும்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2023–2024 ஆம் ஆண்டின் கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகள் (முதல்). வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 9, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள்.*

திரு. இரா. அருள்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீதிமன்றங்களில் நிலுவையிலுள்ள வழக்குகளை விரைந்து முடிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"நீதி நிர்வாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,000/-ல் ரூ.1/- குறைக்க வேண்டும்."

2023 அக்டோபர் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 120, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம்.*

திரு. S. சதாசிவம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீதிமன்றங்களில் நிலுவையிலுள்ள வழக்குகளை விரைந்து முடிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"நீதி நிர்வாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,000/-ல் ரூ.1/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 11, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள்.*

திரு. இரா. அருள்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆதி திராவிடர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களின் உதவித் தொகையை ரூ.3,000/-ஆக உயர்த்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,00,20,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,00,000/-ல் ரூ.1/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 118, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம்.*

30-6-2022 முதல் சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீட்டு முறை முடிவுற்றதன் விளைவாக, தமிழ்நாடு அரசுக்கு பெருமளவிற்கான வருவாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரையில், சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீடாக 9,603 கோடி ரூபாயை ஒன்றிய அரசிடமிருந்து, தமிழ்நாடு அரசு பெற்றிருக்கக்கூடிய நிலையில், நடப்பாண்டில் 3,533 கோடி ரூபாயை மட்டும்தான் நாம் இப்போது பெற்றிருக்கிறோம். இதன்விளைவாக, ஒன்றிய அரசின் உதவி மானியங்கள், 36.59 சதவீத அளவிற்கு நமக்குக் குறைந்திருக்கின்றன. சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீடாக, மேலும் ஆயிரம் கோடி ரூபாய் பெறப்படும் என எதிர்பார்க்கக்கூடிய நிலையில், 2022-2023 ஆம் நிதியாண்டில் தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளை அளித்த பிறகு, இறுதித் தொகைக்கான தீர்வு எய்தப்பட்டுவிடுமென்று நாங்கள் நம்புகிறோம். இழப்பீட்டுத் தொகையை ஒன்றிய அரசிடமிருந்து விரைவாகக் கோருவதற்கு ஏதுவாக, அந்த முதல் காலாண்டிற்குள் வருவாய்களுக்கென தனியாகவே ஒரு தணிக்கையினை ஏற்படுத்தி, அந்த நடைமுறையினுடைய அடிப்படையில் எளிதாக்கித் தர வேண்டுமென்று மாண்புமிகு ஒன்றிய நிதி அமைச்சர் அவர்களை நான் புதுடெல்லியில் சந்தித்தபோது, நேரடியாக கோரிக்கைகளை வைத்திருக்கிறேன்.

செலவினங்களைப் பொறுத்தமட்டில், வளர்ச்சிக்கான நடவடிக்கைகள் ஒருபுறம் இருக்கிறபோது, அதற்கு தொடர்பற்றிருக்கக்கூடிய செலவினங்களைக் குறைப்பதற்கும், உரிய நேரத்திலே அந்த நிதியை நம்முடைய அரசிலிருந்து விடுவிப்பதை உறுதி செய்வதன் வாயிலாக, அந்த செயலினங்களில் இருக்கக்கூடிய செயல்திறனை கொண்டுவருவதற்கும் இந்த அரசு தீவிரமான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. குறிப்பாக, பல திட்டங்களுக்கு கருவூலத்திலிருந்தே நேரடியாக பயனாளிகளுக்கு நிதியை விடுவிக்கும் வழிமுறையை இந்த அரசு புதியதாக

2023 அக்டோபர் 11] [திரு. தங்கம் தென்னரசு]

அறிமுகப்படுத்தியிருக்கிறது. மேலும், தமிழ்நாடு பொது நிதிக் கண்காணிப்பு அமைப்பினையும் இந்த அரசு சிறப்பாக நடைமுறைப்படுத்தி வருகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நூற்றாண்டு கண்ட இந்த சட்டமன்றத்தைப் பொறுத்தமட்டில், இந்த நிதியாண்டு பொன்னெழுத்துகளாலே பொறிக்கப்பட வேண்டிய ஒரு நிதியாண்டு என்றுதான் குறிப்பிட வேண்டும். ஏனென்றால், இந்த நாட்டுக்கே முன்னுதாரணமாக விளங்கக்கூடிய கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம், முதலமைச்சருடைய காலை உணவுத் திட்டம் போன்ற முத்தான திட்டங்களை இந்த அரசு இந்த நிதியாண்டு முதல் நிறைவேற்றி வருகிறது என்பதை நான் பெருமையோடு இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். நாட்டினுடைய பிற மாநிலங்கள் இந்தத் திட்டங்களையெல்லாம் பின்பற்றுகின்ற அளவுக்கு மிகச் செம்மையாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தத் திட்டங்களை வடித்தெடுத்து, நடைமுறைப்படுத்தி வருகிறார்கள்.

காலையிலே நம்முடைய மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் பேசுகின்றபோது, பசிப்பிணி போக்கக்கூடிய மருத்துவரைப் பற்றி குறிப்பிட்டார்கள். புறநானூற்றுப் பாடலிலே அது வருகிறது.

"பசிப்பிணி மருத்துவன் இல்லம்
அணித்தோ? சேய்த்தோ? கூறுமின், எமக்கே"

என்று ஒரு புலவர் கேட்கிறார். பசிப்பிணி நீக்கக்கூடிய அந்த மருத்துவனுடைய வீடு, பக்கத்தில்தான் இருக்கிறதா அல்லது தூரத்தில் இருக்கிறதா என்று ஒரு புலவன் கேட்கிறான் என்று சொன்னால், சங்ககாலத்தைச் சேர்ந்திருக்கக்கூடிய அந்த குறுநில மன்னர் ஒருவர் ஏழை, எளியோருடைய பசியினைப் போக்கியதால், அந்தப் பசியினைப் போக்கிய மருத்துவராகப் பார்க்கப்படுகிறார். அந்தப் பசிப்பிணி போக்கிய மரபினுடைய தொடர்ச்சியாக தமிழ்ச் சமூகத்தை வழிநடத்தியிருக்கக்கூடிய தலைவர்கள் பலரும் காலந்தோறும் வறுமையினை அகற்றிடவும், மாணவர்களுடைய கல்வி நலனைப் பாதுகாத்திடவும் பல முன்னோடித் திட்டங்களை அறிமுகப்படுத்தித் தந்திருக்கிறார்கள். அந்த வகையில் திராவிட பிதாமகர், சர். பிட்டி. தியாகராயர், பெருந்தலைவர் காமராஜர்,

[திரு. தங்கம் தென்னரசு] [2023 அக்டோபர் 11

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்., முத்தமிழறிஞர் கலைஞர் என பசிப்பிணிப் போக்கிய மகத்தான தலைவர்களின் வரிசையில், நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும் இணைந்திருக்கிறார் என்பதை வரலாறு என்றென்றும் நமக்குத் தெரிவித்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

பிற்பகல் 1–30

அதேபோன்று ஆணிற்கு பெண் சரிநிகர் சமானம் என்ற சமுதாயப் பாதையில், நல்லெண்ணத்தோடு நாடே வியந்து பார்க்கும் வகையில், மகளிர் நலன் கருதி புதுமையான பல திட்டங்களை அறிமுகப்படுத்தியிருக்கக்கூடிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பெயரால், மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வடிவமைத்து, நடைமுறைப்படுத்தி வருவதை நாட்டு மக்கள் மனமுவந்து இன்றைக்கு வரவேற்றிருக்கிறார்கள்.

வாழ்க்கையில் எத்தனையோ இடர்பாடுகளைச் சந்தித்தாலும், தன்னுடைய குழந்தைகளின் நலன் கருதி, தன்னை உருக்கி, தன்னுடைய பிள்ளைகளின் கல்வி மற்றும் உடல் நலன்களைக் கருதி, காப்பதுதான் ஓர் தாய்மையின் அடையாளம்.

அதேபோன்று ஒன்றிய அரசினுடைய மாற்றாந்தாய் மனப்பான்மை, உலகளாவிய பொருளாதார வளர்ச்சியில் காணப்படும் மந்தநிலை போன்ற அனைத்துச் சோதனைகளையும் எதிர்கொண்ட போதிலும், தமிழ் மக்களுடைய நலன் காத்திடும் "தாயுமானவராக" (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்த அரசை சிறப்பாக வழிநடத்தி வந்து கொண்டிருக்கின்றார் என்பதை நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசுகிறபோது, மாற்றாந்தாய் மனப்பான்மையோடு ஒன்றிய அரசு நடந்து கொண்டிருக்கிறது என்று குறிப்பிட்டேன். ஏதோ போகிற போக்கில் அதை நான் சொல்ல விரும்பவில்லை. ஆனால், அதற்குரிய தரவுகளையும் இந்த மாமன்றத்தில் எடுத்து வைப்பது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.

2023 அக்டோபர் 11] [திரு. தங்கம் தென்னரசு]

நேரடி வரி வருவாயைப் பொறுத்தமட்டில் ஒன்றிய அரசினுடைய நேரடி வரி விதிப்பில் தமிழ்நாட்டினுடைய பங்களிப்பில் நாம் தொடர்ந்து முன்னிலையில் இருக்கின்றோம். இந்த வரி வருவாயில், நம்முடைய பங்களிப்பு முன்னிலையில் இருக்கிறது. ஆனால், அந்தப் பங்களிப்பிற்கு நிகராக நாம் வரிப் பகிர்வினைப் பெற்றிருக்கிறோமா என்பதைப் பார்க்க வேண்டும். Direct taxes-ல், நம்முடைய contribution-ஐ நாம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், அதற்கு இணையாக இருக்கிற devolution-ல் நமக்குக் கிடைக்கக்கூடிய வரிப் பகிர்வு வந்திருக்கிறதா என்று பார்த்தால் தமிழ்நாடு அதைப் பெறவில்லை.

உதாரணத்திற்கு, ஒன்றிய அரசிற்கு வரி வருவாயாக தமிழ்நாடு செலுத்தக்கூடிய ஒவ்வொரு ஒரு ரூபாய்க்கும்—ஒரு ரூபாய் நாம் கொடுக்கிறோம் என்று சொன்னால், அதற்கு ஈடாக 29 பைசா மட்டுமே நமக்குத் திரும்ப கிடைக்கிறது. மாறாக ஒன்றிய அரசாங்கமான பாரதிய ஜனதா கட்சி ஆளக்கூடிய உத்தரப்பிரதேச மாநிலத்தைப் பார்த்தீர்களென்று சொன்னால், அந்த மாநிலம் செலுத்தக்கூடிய, அவர்கள் கொடுக்கக்கூடிய ஒரு ரூபாய் வரிக்கு, திரும்ப அவர்களுக்கு ஈடாக கிடைப்பதைப் பார்த்தீர்கள் என்றால், 2 ரூபாய் 73 பைசா அவர்களுக்குக் கிடைக்கிறது. நமக்குத் திரும்பக் கிடைப்பது வெறும் 29 பைசா மட்டுமே. ஆனால், அவர்களுக்கு 2 ரூபாய் 73 பைசா கிடைக்கிறது.

நிதியாண்டு 2014-2015 முதல் 2021-2022 வரை ஒன்றிய அரசினுடைய நேரடி வரியில் தமிழ்நாட்டினுடைய பங்களிப்பு மட்டும் ரூபாய் 5.16 இலட்சம் கோடி. அதாவது நம்முடைய பங்களிப்பாக, வரிப் பகிர்வாக நாம் ரூபாய் 5.16 இலட்சம் கோடி கொடுத்திருக்கிறோம். ஆனால், வரிப் பகிர்வாக அந்தக் காலகட்டத்தில் நமக்கு எவ்வளவு திரும்பக் கிடைத்திருக்கிறது என்று சொன்னால், ரூபாய் 2.08 இலட்சம் கோடி மட்டும்தான்.

ஆனால், பாரதிய ஜனதா கட்சி ஆளக்கூடிய மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்த்தால் நிலைமை வேறாக இருக்கிறது. உத்தரப்பிரதேச மாநிலம்-ரூபாய் 2.24 இலட்சம் கோடி மட்டுமே அவர்களுடைய பங்களிப்பு. நம்முடைய பங்களிப்பு ரூபாய் 5.16 இலட்சம் கோடி. ஆனால், நமக்குக் கிடைத்தது ரூபாய் 2.08 இலட்சம் கோடி. அவர்கள் பங்களிப்பு ரூபாய் 2.24 இலட்சம் கோடியாகத்தான் இருக்கிறது. ஆனால், உத்தரப்பிரதேச மாநிலத்திற்கு கிடைத்த வரிப் பகிர்வு என்பது ரூபாய் 9.04 இலட்சம் கோடி என்று

[திரு. தங்கம் தென்னரசு] [2023 அக்டோபர் 11

பார்ப்பீர்களேயானால், அவர்கள் வரிப் பங்களிப்பைவிட, அவர்கள் பெற்றிருக்கின்ற வரிப் பகிர்வானது நான்கு மடங்கு அதிகம். நான்கு மடங்கு அவர்களுக்கு கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னால், இதுதான் ஒரு கண்ணிலே வெண்ணெய்யும், மற்றொரு கண்ணில் சுண்ணாம்பையும் வைக்கக்கூடிய ஒன்றிய அரசின் செயல்பாடு என்பதை நான் இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல. நிதிக் குழு (Finance Commission). இந்தக் கணக்கீடுகளை நீங்கள் எடுத்துக்கொண்டீர்கள் என்றால், மத்திய நிதிக் குழு (Central Finance Commission) ஒதுக்கீட்டில் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், தொடர்ச்சியாக நாம் பெருமளவில் நிதி இழப்பை சந்தித்து வருகிறோம். 15 வருடங்களாக தமிழ்நாட்டினுடைய பங்களிப்பிற்கு நிகராக இருக்கக்கூடிய இந்த நிதி ஒதுக்கீடு, தொடர்ச்சியாக தமிழ்நாட்டிற்கு மறுக்கப்பட்டு வந்திருக்கிறது. அதாவது 12-வது நிதிக் குழுவில் (Twelfth Finance Commission) 5.305 சதவிகிதமாக இருந்த நிதி ஒதுக்கீடு, 15-வது நிதிக் குழுவிற்கு வருகிறபோது (Fifteenth Finance Commission) 4.079 சதவிகிதமாக குறைந்து இருக்கிறது. Twelfth Finance Commission-ல் இருப்பதைவிட Fifteenth Finance Commission-ல் வருகிறபோது, தமிழ்நாட்டிற்கு வரக்கூடிய நிதி ஒதுக்கீடு என்பது குறைந்து கொண்டே வருகிறது.

பிற்பகல் 1-35

மக்கள்தொகைக் கணக்கெடுப்பைப் பார்த்தீர்கள் என்று சொன்னால், இந்தியாவினுடைய மக்கள்தொகையில் 6.124 சதவிகிதமாக இருக்கக்கூடிய தமிழ்நாட்டிற்கு கிடைக்கக்கூடிய சதவிகிதம், நம்முடைய மக்கள்தொகைக்கு இணையாகவோ, நேராகவோ இல்லை. ஆனால், அதைவிடக் குறைவாக 4.079 சதவிகிதமாகத்தான் நிதி ஒதுக்கீடு நமக்கு வந்திருக்கிறது. இது எந்தவகையில் நியாயம் என்ற கேள்வியைத்தான் இந்த மாமன்றத்தில் நான் உங்கள் முன்பு வைக்க விரும்புகின்றேன். இந்த divide, வடமாநிலங்களுக்கும், தென்மாநிலங்களுக்கும் இருக்கின்ற இந்த வேறுபாட்டிற்குக் காரணம், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் மிக நன்றாக அறிவீர்கள். இது வடமாநிலங்களுக்கு சாதகமாக அமைவதற்கு காரணம், நமக்கு இருக்கக்கூடிய census. 1971 ஆம் ஆண்டில் நாம் எடுத்த census. அன்றைக்கு இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் கொண்டு

2023 அக்டோபர் 11] [திரு. தங்கம் தென்னரசு]

வந்ததற்குப் பிறகு, ஏறத்தாழ 25 ஆண்டுகளுக்கு ஒரு சமச்சீர் நிலைமை உருவாகின்றவரை, அது நடைமுறையில் இருக்கும் என்று அவர்கள் தெரிவித்தார்கள்.

தமிழ்நாடு உட்பட்டிருக்கக்கூடிய தென் மாநிலங்கள், குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை மிகப்பெரிய அளவில் நிறைவேற்றியது. குறிப்பாக, தமிழ்நாடு ஒரு progressive-ஆக அதைச் செய்ய வேண்டுமென்பதற்காக, அந்தத் திட்டத்தை நாம் நிறைவேற்றியிருக்கிறோம். 1972-ல் குடும்பக் கட்டுப்பாட்டு முறையை ஏற்றுக்கொண்டதன் காரணமாக, இன்றைக்கு நாம் பழி வாங்கப்படுகிறோம் என்பதுதான் உண்மை. அதற்குப் பின்பு திரு. வாஜ்பாய் அவர்கள் காலத்தில்கூட இந்த சமச்சீர் தன்மையைத் தொடர்ச்சியாக கொண்டு வரவேண்டுமென்று சொன்னார்கள். ஆனால், இன்றைக்கு இருக்கின்ற மக்கள்தொகைக் கணக்கெடுப்பை எடுக்கிறபோது, நிதி ஒதுக்கீட்டில் இது ஒரு மிகப்பெரிய பின்னடைவை நமக்கு இன்றைக்கு ஏற்படுத்தியிருக்கிறது என்று சொல்வேன்.

அதைப்போல, பேரிடர் நிவாரண நிதியை எடுத்துக்கொண்டால்கூட, தமிழ்நாடு கிட்டத்தட்ட 64.65 சதவிகிதத்தை மட்டும்தான் ஒன்றிய அரசிடமிருந்து பெற முடிகிறது. மாறாக, 14-வது நிதிக் குழு காலத்தைவிட, 15-வது நிதிக் குழு காலத்தை நீங்கள் எடுத்துக்கொண்டால், ஓர் ஒப்பீட்டுக்காக நான் சொல்கிறேன். நமக்கு எவ்வளவு கிடைத்திருக்கிறது என்றால், 64.65 சதவிகிதத்தை நாம் பெறுகிறோம். ஆனால், இந்த 15-வது நிதிக் குழு காலகட்டத்தில் உத்தரப்பிரதேசத்திற்கு எவ்வளவு கிடைத்திருக்கிறது என்று பார்த்தால், 214.39 சதவிகிதம். பீகார், 231.23 சதவிகிதத்தைப் பெற்றிருக்கிறது. நாம் பெற்றிருக்கின்ற சதவிகிதம் எங்கே இருக்கிறது? உத்தரப்பிரதேசமும், பீகாரும் பெற்றிருக்கின்ற சதவிகிதம் எங்கே இருக்கிறது? தென் மாநிலங்களின் நிலை என்ன? வட மாநிலங்களின் நிலை என்ன? இதற்கெல்லாம் யார் காரணம் என்று நீங்கள் பார்த்தீர்களென்றால், இந்த என்னுடைய விரல் ஒன்றிய அரசாங்கத்தை நோக்கித்தான் நீளுகிறது என்பதை நான் இந்த மன்றத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

இதற்குப் பிறகு இன்னொரு பெரிய கொடுமை என்னவென்று கேட்டால், சரக்கு மற்றும் சேவை வரி-GST. GST-ஐப் பொறுத்தமட்டில் 2017 ஜூலை 1 ஆம் தேதி GST-ஐ நாம் கொண்டு வந்துவிட்டோம். GST வந்ததற்குப் பிறகு என்ன சொன்னோம்.

[திரு. தங்கம் தென்னரசு] [2023 அக்டோபர் 11

மிகப் பெரிய விஷயம், நம்முடைய நிதி சுயாட்சி மாநிலங்களுக்கு இருக்கக்கூடிய நிதி சுயாட்சி-fiscal autonomy. அதை இழக்கக்கூடிய ஒரு நிலையை நாம் உருவாக்கினோம். மாநில அரசாங்கத்திற்கு இருக்கின்ற அதிகார வரம்புகளான எந்தப் பொருளின்மீது வரி விதிக்கலாம், எந்தளவில் அந்த வரி விகிதங்கள் அமையலாம், அந்த வரியை எப்படி பெறுவது என்பதற்கான நடைமுறைகளையெல்லாம் தீர்மானிக்கக்கூடிய மாநில அரசின் அதிகாரங்கள், அந்த அரசியல் அமைப்பு சட்டத்தினால் நமக்கு கிடைத்த உரிமைகளை, GST-க்குப் பிறகு நாம் இழந்துவிட்டோம். சரி, இழந்துவிட்டோம் என்று சொன்னவுடனே, மாநிலங்களுக்கான வருவாய், பாதுகாக்கப்பட்ட அளவிலே இருக்கும் என்கின்ற உத்தரவாதம் ஒன்றிய அரசால் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஒன்றிய நிதியமைச்சர் என்ன சொன்னார்? 2017-லிருந்து 2022 வரையுள்ள 5 ஆண்டுகளுக்கு GST மூலமாக வரக்கூடிய வருவாய் இழப்புகளுக்காக, 'உங்களுக்கு இழப்பீடுகள் அளிக்கப்படும்' என்று சொன்னார். 5 வருடங்கள் கொடுத்தார்கள். ஆனால், 5 வருடங்கள் அந்த இழப்பீட்டைப் பெற்றதற்குப் பிறகும் உரிய வளர்ச்சியை மாநிலங்கள் பெற்றிருக்கிறதா என்று சொன்னால், மாநிலங்கள் அந்த வருவாயினால் வளர்ச்சியைப் பெறவில்லை.

உண்மையிலேயே சொல்ல வேண்டுமென்றால், 2023-2024-ல் நமக்கென்று இருக்கின்ற இந்த பாதுகாக்கப்பட்ட வருவாயிலிருந்து, தமிழ்நாட்டிற்கு மட்டும் GST-யால் ஏற்பட்டிருக்கின்ற வருவாய் இழப்பு என்பது இருபதாயிரம் கோடி ரூபாயாக இருக்கிறது என்பதை நான் இங்கே உங்களிடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதுமட்டுமல்ல, இந்த இழப்பீடு 2022-ல் முடிந்துவிட்டது. நான் சொன்ன காரணங்களையெல்லாம் ஒன்றிய அரசிற்கு எடுத்துச்சொல்லி, இன்னும் இரண்டு ஆண்டுகளுக்கு இந்த இழப்பீட்டினை நீங்கள் நீட்டித்துத்தர வேண்டுமென்று நான் கேட்டபோது, நம்முடைய கடுமையான நிதிச் சூழ்நிலையை எடுத்துச் சொன்னதற்குப் பிறகும், ஒன்றிய அரசாங்கம் இழப்பீட்டுக் காலத்தை நீட்டித்துத் தரவில்லை என்பதையும் நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

ஒன்றிய அரசின் பல்வேறு திட்டங்கள், Jal Jeevan Mission-லிருந்து நீங்கள் எடுத்துக்கொண்டால்—அதேபோல வீடு கட்டும் திட்டம். பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டம். நகர்ப்புறத்தில் இருக்கும் வீடு கட்டும் திட்டம், கிராமப்புறத்தில் இருக்கும் வீடு

2023 அக்டோபர் 11] [திரு. தங்கம் தென்னரசு]

கட்டும் திட்டம். ஓர் உதாரணத்திற்குச் சொல்கிறேன். இப்போது நகர்ப்புறத்தில் இருக்கின்ற பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டத்தைப் பார்த்தீர்களென்றால், ஒன்றிய அரசாங்கம் கொடுப்பது ஒரு வீட்டிற்கு ரூபாய் 1.5 இலட்சம்தான். 1½ இலட்சம் ரூபாய்தான் ஒன்றிய அரசாங்கம் கொடுக்கின்றது. ஆனால், தமிழ்நாடு அரசாங்கம் குறைந்தபட்சம் ஒவ்வொரு பயனாளிக்கும் 7 இலட்சம் ரூபாய் இன்றைக்கு கொடுக்கின்றது. பெயர் பெத்த பெயர், பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டம். ஆனால், அந்தத் திட்டத்தில் அவர்கள் கொடுப்பது 1½ இலட்சம் ரூபாய். தமிழ்நாடு அரசின்மூலம் 7 இலட்சம் ரூபாயை நாம் கொடுக்கிறோம். ஆனால், பெயர் பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டம்.

அதேபோல, சென்னை மெட்ரோ இரயில் திட்டம். இந்த மெட்ரோ இரயில் திட்டத்தை 2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21 ஆம் தேதி மத்திய உள் துறை அமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு ஒன்றிய நிதியமைச்சர் அவர்கள் 2021–2022 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் நாங்கள் இதற்கு நிதி ஒதுக்கியிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் இந்த இடத்திலே பேசிக் கொண்டு இருக்கக்கூடிய இந்த நொடி வரை மெட்ரோ இரயில் திட்டத்திற்கு எந்த ஒதுக்கீட்டையும் ஒன்றிய அரசு செய்யவில்லை. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் இருக்கக்கூடிய மாநில அரசுதான் (மேசையைத் தட்டும் ஒலி) ஒட்டுமொத்தமான அந்த செலவையும் இன்றைக்கு அதற்காக ஏற்றுக்கொண்டிருக்கிறது.

பிற்பகல் 1–40

அதேபோல் பிரதம மந்திரி கிராமப்புற வீடு கட்டும் திட்டத்தின்கீழ் கிராமத்தில் எப்படி வீடு கட்டுகிறார்கள் என்று நம் அனைவருக்கும் தெரியும். ஒரு பயனாளிக்கு, அவர்கள் எந்த அளவுக்குக் கொடுக்கிறார்கள்? அவர்கள் கொடுக்கும் தொகை வெறும் 72 ஆயிரம் ரூபாய். நம்முடைய மாநில அரசு, 1 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் கொடுக்கிறது. கூடுதலாக, கூரைக்கான செலவையும் சேர்த்துக் கொடுக்கிறோம். இந்தத் திட்டத்தின்கீழ் பயனாளிகளுக்கு வழங்கப்படும் மொத்தத் தொகையில் 70 சதவிகிதமான, ஒரு வீட்டிற்காக 1.68 இலட்சம் ரூபாயை யார் வழங்குகிறார்கள் என்று கேட்டால் தமிழ்நாடு அரசுதான் வழங்குகிறது. மீண்டும் சொல்கிறேன், இந்தத் திட்டத்திற்கு அதிகமான நிதி ஒதுக்கீட்டை வழங்குவது தமிழ்நாடு அரசு.

[திரு. தங்கம் தென்னரசு] [2023 அக்டோபர் 11

அவர்கள் 72 ஆயிரம் ரூபாய் கொடுக்கிறார்கள். நாம் 1 இலட்சத்து 68 ஆயிரம் ரூபாயைக் கொடுக்கிறோம். ஆனால், திட்டத்தின் பெயர் பிரதம மந்திரி கிராமப்புற வீடு கட்டும் திட்டம்.

இதுபோலத்தான் ஜல் ஜீவன் திட்டத்தில் 50:50 percentage. ஆனால், நீங்கள் பார்த்தீர்களென்று சொன்னால், மின்சாரச் செலவு, மற்ற செலவுகளான நடைமுறைச் செலவு, பராமரிப்புச் செலவுகளையெல்லாம் எடுத்துக் கொண்டால் 45 சதவிகிதத்திற்கும் குறைவாகத்தான் ஒன்றிய அரசினுடைய பங்களிப்பு. மீதி இருப்பதையெல்லாம் மாநில அரசு கொடுக்கிறது. இதுபோல, வரிசையாக நான் சொல்ல முடியும். காலத்தினுடைய அருமை கருதி நான் தவிர்க்கின்றேன். ஆக, ஒவ்வொரு காலகட்டத்திலும் மாநில அரசினுடைய நிதி ஆதாரங்களை, ஒன்றிய அரசு தொடர்ச்சியாக வஞ்சித்துக் கொண்டு வருகிறது.

இரயில்வே திட்டங்களை எடுத்துக்கொண்டால், நம்முடைய இரயில்வே திட்டங்களுக்கு இதுவரை நிதி குறைவாகத்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 2023–2024 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் மாநிலத்திற்கான ஒதுக்கீடு, ஒன்றிய அளவில் வெறும் 2.5 சதவிகிதம் மட்டும்தான். கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழ்நாடு அரசிற்கான மொத்த ஒதுக்கீடு 18 ஆயிரம் கோடி ரூபாய். இது 2023 ஆம் ஆண்டில் உத்தரப்பிரதேசத்திற்கு ஒதுக்கிய, அவர்களுடைய ஒரு வருட ஒதுக்கீடான 17,500 கோடி ரூபாயைவிட கொஞ்சம் அதிகம். நமக்கு ஐந்து வருடங்களில் வந்தது, உத்தரப்பிரதேசத்தினுடைய ஒரு வருடத்தைவிட கொஞ்சம்தான் அதிகமாக இருக்கிறது. இதை நான் எதற்கு இவ்வளவு விவரமாகச் சொல்கிறேன் என்று சொன்னால், ஒன்றிய அரசு நிதிப் பகிர்வில், நிதிப் பங்கீட்டில் எந்தளவிற்கு தமிழ்நாட்டை வஞ்சிக்கிறது என்பதற்காகத்தான் சொல்கிறேன்.

நம் வீட்டில் ஒரு பழமொழி சொல்வார்கள். பசு உங்களுக்கு, பால் எங்களுக்கு. பசு மாநில அரசுக்கு; பசுவை வளர்ப்பது, பசுவைப் பராமரிப்பது, பசுவை பார்ப்பது எல்லாம் மாநில அரசு, ஆனால் பால் வாங்கிக்கொள்வது ஒன்றிய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) ஆவி உமக்கு, அமுதுபடி எமக்கு. நைவேத்யம் செய்து, இந்தாருங்கள் என்று காண்பிக்கக்கூடிய ஆவி மாநில அரசுக்கு, ஆனால் அதில் இருக்கக்கூடிய அமுதுபடி ஒன்றிய அரசுக்கு. (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, இதுதான் நடக்கிறதே ஒழிய, இது தொடர்ச்சியாக, நமக்குக் கொடுக்கக்கூடிய நிதிப் பகிர்வில்— "வஞ்சனை செய்வாரடி கிளியே" என்று பாரதியார் பாடிய இந்தப்

2023 அக்டோபர் 11] [திரு. தங்கம் தென்னரசு]

பாடல்களுக்கு எல்லாம் ஓர் உதாரணமாக இருக்கிறது என்று சொன்னால், இன்றைக்கு மத்தியிலே இருக்கக்கூடிய ஒன்றிய அரசு தொடர்ந்து தமிழ்நாட்டை வஞ்சிக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் மற்றும் குழந்தைகளின் எதிர்கால நலன் கருதி ஒவ்வொரு நொடியும் சிந்தித்து வரக்கூடிய சரித்திர நாயகராக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய வழிகாட்டுதலின்படி இந்தத் துணை மதிப்பீடுகளை நான் இந்த மாமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு வாய்ப்பு வழங்கிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நான் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்தத் துணை மானியக் கோரிக்கையின்மீது, மாண்புமிகு உறுப்பினர்கள் மொத்தம் 44 மானியக் கோரிக்கைகளின்மீது 160 வெட்டுத் தீர்மானங்களைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். அவற்றையெல்லாம், நான் கவனத்தோடு பரிசீலித்து இருக்கிறேன். தமிழகத்தில் இருக்கக்கூடிய அனைத்துத் தரப்பு மக்களுடைய ஒட்டுமொத்த வளர்ச்சியைக் கணக்கில் கொண்டு பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்குத் தேவையான நிதிகளை ஒதுக்கி, அவற்றை செயல்படுத்துவதற்கான வழிமுறைகளையும் வகுத்து, தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகளை சீரிய முறையிலே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலோடு, இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது. எனவே, 2023-2024 ஆம் ஆண்டுக்கான முதல் துணை மானியக் கோரிக்கையின்மீது, மாண்புமிகு உறுப்பினர்கள் கொண்டு வந்து இருக்கக்கூடிய வெட்டுத் தீர்மானங்களை விலக்கிக் கொண்டு, இந்தத் துணை மானியக் கோரிக்கையை நீங்கள் நிறைவேற்றித் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த நல்வாய்ப்பினை எனக்கு வழங்கி, சீர்மிகு வழிகாட்டுதல் வழங்கியிருக்கக்கூடிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் துணை மானியக் கோரிக்கையினைத் தயாரிப்பதற்கு உறுதுணையாக இருக்கக்கூடிய நிதித் துறைச் செயலாளர் திரு. உதயச்சந்திரன் I.A.S. அவர்களுக்கும், நிதித் துறை அதிகாரிகள் அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து, என்னுடைய உரையை நிறைவு செய்கின்றேன். நன்றி, வணக்கம்.

[*2023 அக்டோபர் 11*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மாண்புமிகு உறுப்பினர்கள் முன்மொழிந்த வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறுகின்றனவா என்று அறிய விரும்புகின்றேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

பிற்பகல் 1–45

"2023–2024 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் (முதல்) அடங்கிய 9–10–2023 ஆம் தேதியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும், எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 2023–2024 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்களுக்காக அரசுக்கு வழங்கப்பட வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

நிறைவேற்றப்பெற்ற 2023–2024 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் (முதல்)

கோரிக்கை		ரூபாய் ஆயிரத்தில்		
		வருவாய்	மூலதனம்	கடன்
3	நீதி நிருவாகம்	7	–	–
4	ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை	2,00,20	2	22,00

2023 அக்டோபர் 11] [பேரவைத் தலைவர்]

கோரிக்கை		ரூபாய் ஆயிரத்தில்		
		வருவாய்	மூலதனம்	கடன்
5	வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை	33	5	228,30,65
6	கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம், மீன் வளம் மற்றும் மீனவர் நலத் துறை)	20	–	52,19
7	மீன் வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால் வளம், மீன் வளம் மற்றும் மீனவர் நலத் துறை)	1,00,22	2	–
8	பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம், மீன் வளம் மற்றும் மீனவர் நலத் துறை)	9,61,73	175,32,75	75,00,00
9	பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை	42,95	–	–
10	வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)	9	–	–
11	முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)	2,00,05	–	–

கோரிக்கை		ரூபாய் ஆயிரத்தில்		
		வருவாய்	மூலதனம்	கடன்
12	கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)	9	–	–
13	உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)	511,84,75	–	–
14	எரிசக்தித் துறை	1	–	–
16	நிதித் துறை	9	–	–
17	கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை)	5	–	–
18	கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)	2	–	–
19	மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை	32	8,50,04	–
20	உயர் கல்வித் துறை	13	150,00,00	–
21	நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை	2	149,70,42	–

கோரிக்கை		ரூபாய் ஆயிரத்தில்		
		வருவாய்	மூலதனம்	கடன்
22	காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	3,17,13	108,18,52	–
23	தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	9	–	–
24	சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	9	–	–
25	இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	3	–	–
26	வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை	2	1	1
27	தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை	6	58,04,16	39,96
28	செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	8,34,54	–	–
29	சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)	4,71	4,00,03	–

கோரிக்கை		ரூபாய் ஆயிரத்தில்		
		வருவாய்	மூலதனம்	கடன்
30	எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	16	1	–
31	தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை	6	–	–
32	தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை	20	2	–
33	சட்டத் துறை	2	–	1,29,93
34	நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை	3	150,00,07	–
35	மனிதவள மேலாண்மைத் துறை	2	–	–
36	திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை	3	–	–
38	பொதுத் துறை	13	111,29,79	–
39	கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)	2	178,63,89	–
40	நீர்வளத் துறை	17	124,29,25	–
41	வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை	42,25	–	65,00
42	ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை	6	1	–
43	பள்ளிக் கல்வித் துறை	6,30	6	–

2023 அக்டோபர் 11] [பேரவைத் தலைவர்]

கோரிக்கை		ரூபாய் ஆயிரத்தில்		
		வருவாய்	மூலதனம்	கடன்
44	குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை	5	–	–
45	சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை	17,53,41	1	–
46	தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	10	–	–
47	இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)	8	1	–
48	போக்குவரத்துத் துறை	17,15,42	2	8
49	இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை	11,60,50	1	–
50	ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்	3	–	–
51	இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு	617,49,99	–	–
52	மாற்றுத் திறனாளிகள் நலத் துறை	18	–	–
53	சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை	37,77,69	–	–
54	வனம் (சுற்றுச் சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை)	11,31,63	9	–
பெரு மொத்தம்		**1,251,86,52**	**1,217,99,26**	**306,39,82**

11. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2023 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—

தொடர்ச்சி

(ஈ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2023

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

2023 அக்டோபர் 11]

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

13. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2014–2015 மற்றும் 2015–2016, அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2014–2015 மற்றும் 2015–2016* ஆம் ஆண்டுகளுக்குரிய மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அளித்தல். மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள். இரண்டு அறிக்கைகளையும் நீங்களே அளித்துவிடலாம்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *2014–2015* ஆம் ஆண்டில் சில மானியக் கோரிக்கைகளின்கீழ் அந்த ஆண்டிற்கு அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்திற்கும் மிகையாக மேற்கொள்ளப்பட்ட செலவுகளுக்கான மானியக் கோரிக்கைகளை இம்மாமன்றத்தின் முன்வைக்க விழைகிறேன்.

2014–2015 ஆம் ஆண்டு நிதியொதுக்கக் கணக்குகளை பொதுக் கணக்குக் குழு ஆய்வு செய்ததில், சில மானியங்களின்கீழ் அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்திற்கும் மிகையாக செலவு செய்யப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ளது. இந்த மிகைச் செலவினத்திற்கான காரணங்களை ஆராய்ந்த பிறகு, *2014–2015* ஆம் ஆண்டில் ஒவ்வொரு மானியத்தின்கீழும் அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்திற்கும், மிகையாக செய்யப்பட்ட செலவுகளுக்கு ஒப்புதல் பெறுவதற்காக சட்டமன்றப் பேரவையில் மானியக் கோரிக்கைகள் வைக்கப்படலாம் என்று பொதுக் கணக்குக் குழு பரிந்துரைத்திருக்கிறது. அவ்வாறே, *2014–2015* ஆம் ஆண்டில் *78.56* கோடி ரூபாய் மிகைச் செலவுகள் மேற்கொள்ளப்பட்டதற்கான மானியக் கோரிக்கைகள் இம்மாமன்றத்தின் முன் வைக்கப்படுகின்றன.

2014–2015 ஆம் ஆண்டில் பெருமளவிலான மிகைச் செலவு, "பாசனம் (பொதுப் பணித் துறை)" "தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)" மற்றும் "நிதித் துறை" ஆகிய மானியங்களின்கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

[திரு. தங்கம் தென்னரசு] [2023 அக்டோபர் 11

பணியாளரமைப்பு, இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள் குறித்த சதவீதச் செலவுகள் மற்றும் பல்வேறு திட்டங்கள் மற்றும் திட்டப் பணிகள் மீதான விழுக்காட்டுக்கேற்ப வட்டிச் செலவுகளால் கணக்குகளுக்கிடையே மாற்றங்கள் செய்யப்பட்டதால், "பாசனம் (பொதுப் பணித் துறை)" மானியத்தின்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது.

தேர்வு நிலை/சிறப்பு நிலைகளுக்கான பணப் பலன்கள் வழங்கியதாலும், காலிப் பணியிடங்களை நிரப்பியதாலும், ஊதியம் மற்றும் படிகள் செலவினத்தில் ஏற்பட்ட உயர்வினால் "தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)" மானியத்தின்கீழ் முதன்மையாக மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது. அரசுப் பணியாளர்களுக்கான கடன்கள் குறித்த கணக்குகளில் தவறான வகைப்பிரிவு செய்ததால் "நிதித் துறை" மானியத்தின்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது. எனவே, 2014–2015 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளுக்கு இம்மாமன்றம் ஒப்புதல் அளிக்க வேண்டுகிறேன். வணக்கம்.

2014–2015 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

கோரிக்கை		(ரூபாய்) ஆயிரத்தில்		
		வருவாய்	மூலதனம்	கடன்
10	வணிக வரிகள் (வணிக மற்றும் பதிவுத் துறை)	..	..	5,03,400
16	நிதித் துறை	..	..	8,79,44,664
23	தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	14,19,88,154	..	..

2023 அக்டோபர் 11] [திரு. தங்கம் தென்னரசு]

கோரிக்கை		(ரூபாய்) ஆயிரத்தில்		
		வருவாய்	மூலதனம்	கடன்
30	எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	4,29,979	..	..
32	தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை	..	70,15,286	..
35	பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை	..	1,46,86,458	..
36	திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை	..	13,15,474	..
40	பாசனம் (பொதுப் பணித் துறை)	47,22,89,766	..	..
43	பள்ளிக் கல்வித் துறை	3,80,07,474	..	..
45	சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை	..	2,14,33,042	..
	பெருமொத்தம்	**65,27,15,373**	**4,44,50,260**	**8,84,48,064**

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்தது.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2015–2016 ஆம் ஆண்டில் சில மானியக் கோரிக்கைகளின்கீழ் அந்த ஆண்டிற்கு அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்திற்கும் மிகையாக மேற்கொள்ளப்பட்ட செலவுகளுக்கான மானியக்கோரிக்கைகளை இம்மாமன்றத்தின்முன் வைக்க விழைகிறேன்.

2015–2016 ஆம் ஆண்டு நிதியொதுக்கக் கணக்குகளை பொதுக் கணக்குக் குழு ஆய்வு செய்ததில், சில மானியங்களின்கீழ்

[திரு. தங்கம் தென்னரசு] [2023 அக்டோபர் 11

அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்திற்கும் மிகையாக செலவு செய்யப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ளது. இந்த மிகைச் செலவினத்திற்கான காரணங்களை ஆராய்ந்த பிறகு, 2015–2016 ஆம் ஆண்டில் ஒவ்வொரு மானியத்தின்கீழும் அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்திற்கும், மிகையாக செய்யப்பட்ட செலவுகளுக்கு ஒப்புதல் பெறுவதற்காக சட்டமன்றப் பேரவையில் மானியக் கோரிக்கைகள் வைக்கப்படலாம் என்று பொதுக் கணக்குக் குழு பரிந்துரைத்திருக்கிறது. அவ்வாறே, 2015–2016 ஆம் ஆண்டில் 82.16 கோடி ரூபாய் மிகைச் செலவுகள் மேற்கொள்ளப்பட்டதற்கான மானியக் கோரிக்கைகள் இம்மாமன்றத்தின் முன் வைக்கப்படுகின்றன.

பிற்பகல் 1–50

2015–2016 ஆம் ஆண்டில் பெருமளவிலான மிகைச் செலவு, "கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)" "தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)" மற்றும் "மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை" ஆகிய மானியங்களின்கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பணியாளர் அமைப்பு, சாதனங்கள் மற்றும் தளவாடங்கள் போன்றவற்றிற்கான விழுக்காட்டிற்கேற்ற கட்டணங்கள், கணக்குகளுக்கிடையே மாற்றங்கள் செய்யப்பட்டதால் கட்டடங்கள், பொதுப் பணித் துறை மானியத்தின்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது.

அரசுப் பணியாளர்களுக்கான கடன்கள் தவறான வகைப்பிரிவு செய்யப்பட்டதால் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள், உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை மானியத்தின்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது.

அரசு ஹோமியோபதி மருத்துவக் கல்லூரிக்கான கட்டடங்களைக் கட்டுதல், ஆரம்ப சுகாதார நிலையங்களை மேம்படுத்துதல் மற்றும் பொதுப் பணித் துறையின் பணியாளரமைப்புகளுக்கான சதவிகிதச் செலவுகள் கணக்குகளுக்கிடையே மாற்றங்கள் செய்யப்பட்டதால், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை மானியத்தின்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டிருக்கிறது.

எனவே, 2015–2016 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளுக்கு இம்மாமன்றம் ஒப்புதல் அளிக்க வேண்டுகிறேன். வணக்கம்.

2023 அக்டோபர் 11] [திரு. தங்கம் தென்னரசு]

2015–2016 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

கோரிக்கை		(ரூபாய்) ஆயிரத்தில்		
		வருவாய்	மூலதனம்	கடன்
19	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை	..	7,02,23,285	..
23	தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	..	..	7,77,16,600
30	எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	..	1,63,14,035	..
39	கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)	..	65,44,09,811	..
47	இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)	28,78,555	..	..
49	இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை	..	77,761	..
	பெருமொத்தம்	**28,78,555**	**74,10,24,892**	**7,77,16,600**

11. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(இ) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2014-2015, முன்மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2014–2015 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளை பேரவையில் முன்மொழிவது குறித்து மாண்புமிகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:

"In pursuance of Clause *(1)* of Article *205*, read with Clause *(3)* of Article *203*, of the Constitution of India, I, R.N. Ravi, Governor of Tamil Nadu, hereby recommend to the Tamil Nadu Legislative Assembly, to make grants for the Demands in respect of the amount spent on certain services and purposes during the financial year *2014–2015* in excess of the amount authorised or granted for those services and purposes and for that year."

14. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2014–2015, வாக்கெடுப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2014–2015 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2014–2015 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 11-10-2023 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே கோரப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 2014–2015 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்காக அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

2023 அக்டோபர் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
(மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

நிறைவேற்றப்பெற்ற 2014–2015 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

கோரிக்கை		(ரூபாய்) ஆயிரத்தில்		
		வருவாய்	மூலதனம்	கடன்
10	*வணிக வரிகள் (வணிக மற்றும் பதிவுத் துறை)*	..	..	*5,03,400*
16	*நிதித் துறை*	..	..	*8,79,44,664*
23	*தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)*	*14,19,88,154*	..	..
30	*எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)*	*4,29,979*	..	..
32	*தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை*	..	*70,15,286*	..
35	*பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை*	..	*1,46,86,458*	..

கோரிக்கை		(ரூபாய்) ஆயிரத்தில்		
		வருவாய்	மூலதனம்	கடன்
36	திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை	..	13,15,474	..
40	பாசனம் (பொதுப் பணித் துறை)	47,22,89,766	..	..
43	பள்ளிக் கல்வித் துறை	3,80,07,474	..	..
45	சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை	..	2,14,33,042	..
	பெருமொத்தம்	**65,27,15,373**	**4,44,50,260**	**8,84,48,064**

11. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஈ) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2015-2016, முன்மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2015–2016 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து மாண்புமிகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:

"In pursuance of Clause (1) of Article 205, read with Clause (3) of Article 203, of the Constitution of India, I, R.N. Ravi, Governor of Tamil Nadu, hereby recommend to the Tamil Nadu Legislative Assembly, to make grants for the Demands in respect of the amount spent on certain services and purposes during the financial year 2015–2016 in excess of the amount authorised or granted for those services and purposes and for that year."

2023 அக்டோபர் 11]

15. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2015–2016, வாக்கெடுப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2015–2016 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2015–2016 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 11–10–2023 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே கோரப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 2015–2016 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்காக அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

[பேரவைத் தலைவர்] [2023 அக்டோபர் 11

நிறைவேற்றப்பெற்ற 2015–2016 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

கோரிக்கை		(ரூபாய்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
19	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை	..	7,02,23,285	..
23	தியணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	..	..	7,77,16,600
30	எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)	..	1,63,14,035	..
39	கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)	..	65,44,09,811	..
47	இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)	28,78,555	..	..
49	இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை	..	77,761	..
பெருமொத்தம்		**28,78,555**	**74,10,24,892**	**7,77,16,600**

2023 அக்டோபர் 11]

11. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(உ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு, 2023 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—

தொடர்ச்சி

(உ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு, 2023

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

[2023 அக்டோபர் 11

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

பிற்பகல் 1–55

11. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஊ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 5) சட்டமுன்வடிவு, 2023 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 5) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—

தொடர்ச்சி

(ஊ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 5) சட்டமுன்வடிவு, 2023

மாண்புமிகு பேரவைத் தலைவர்: . 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 5) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 5) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

2023 அக்டோபர் 11] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

16. அரசினர் தீர்மானங்கள்

(அ) பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தக் கோரும் அரசினர் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி, பேரவையில் இன்று அறிமுகம் செய்யப்பட்ட 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/2023), 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/2023), 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 5) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/2023), 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (முறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 31/2023), 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டல மேம்படுத்துதல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 32/2023) மற்றும் 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 33/2023) ஆகியவற்றை இன்றே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

[*2023 அக்டோபர் 11*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

17. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

(அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2023

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/2023), மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/2023)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

@ 11-10-2023 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

2023 அக்டோபர் 11] [பேரவைத் தலைவர்]

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/2023) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

[பேரவைத் தலைவர்] [2023 அக்டோபர் 11

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு, 2023

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/2023), மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/2023)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விட்டப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2, 3 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

@ 11-10-2023 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

2023 அக்டோபர் 11] [பேரவைத் தலைவர்]

பிரிவுகள் 2, 3 மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/2023) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

[பேரவைத் தலைவர்] [2023 அக்டோபர் 11 பிற்பகல் 2-00

பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

(இ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 5) சட்டமுன்வடிவு, 2023

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 5) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/2023), மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 5) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/2023)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2, 3 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, 3 மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

@ 11-10-2023 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

2023 அக்டோபர் 11] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1,முகப்புரை,நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 5) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/2023) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

11. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(எ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2023 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் ஆய்வு செய்ய மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

17. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—

தொடர்ச்சி

(ஈ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2023

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 24/2023), மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 24/2023)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

@ 10-10-2023 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

2023 அக்டோபர் 11] [பேரவைத் தலைவர்]

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *இந்தச் சட்டமுன்வடிவு குறித்து பாராட்டிப் பேசமாட்டார்களா? (சிரிப்பு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இருபத்தைந்தாயிரம் ரூபாய், முப்பதாயிரம் ரூபாய் கொடுத்திருக்கிறார்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் எது கொண்டு வந்தாலும் சரியாகத்தான் இருக்கும் என்று அமைதியாக இருக்கிறார்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு சட்டமன்றக் கட்சித் தலைவர்கள் பாராட்டியிருக்க வேண்டாமா! ஏன் சார், இவ்வளவு தொகை கொடுத்திருக்கிறார்; அதுபற்றி பாராட்டியிருக்கக் கூடாதா! (குறுக்கீடு) நேரமில்லையா! (சிரிப்பு) சரி.*

[திரு. துரைமுருகன்] [*2023 அக்டோபர் 11*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 24/2023) நிறைவேற்றப்பெற வேண்டும்*"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 2-05

(உ) தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2023

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/2023), மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"*2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/2023)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்.*"

எனக் கோருகிறேன்.

கோயம்புத்தூர் மாவட்டம், கருமத்தம்பட்டி பகுதியைச் சுற்றி, புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்க, வரையறுக்கப்பட்ட அளவுகோல்களின்படி 2.5 கிலோ மீட்டர் தொலைவிற்குள் நான்கு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் (கிழக்கே 14 கிலோ மீட்டர் தொலைவில் அவினாசி, மேற்கே 21 கிலோ மீட்டர் தொலைவில் பீளமேடு, வடக்கே 17 கிலோ மீட்டர் தொலைவில் அன்னூர், தெற்கே 20 கிலோ மீட்டர் தொலைவில் சூலூர்) உள்ளதால் இப்பகுதியில் ஏற்படும் தீ விபத்து மற்றும் மீட்புப் பணி அழைப்புகளை அருகிலுள்ள தீயணைப்பு நிலையங்களைச் சார்ந்த பணியாளர்கள் மற்றும் ஊர்திகளைக் கொண்டு மேற்கொள்ள இயலும் என்பதால் கருமத்தம்பட்டி பகுதியில் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்கும் நிலை தற்போது எழவில்லை.

திருப்பூர் மாவட்டம், சாமாளபுரம் பகுதியைச் சுற்றி, புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்க, வரையறுக்கப்பட்ட அளவுகோல்களின்படி 2.5 கிலோ மீட்டர் தொலைவிற்குள் நான்கு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் (கிழக்கே 19 கிலோ மீட்டர் தொலைவில் திருப்பூர் (தெற்கு), மேற்கே 14.2 கிலோ மீட்டர் தொலைவில் சூலூர், வடக்கே 22 கிலோ மீட்டர் தொலைவில் அவினாசி, தெற்கே 16.7 கிலோ மீட்டர் தொலைவில் பல்லடம்) உள்ளதால் இப்பகுதியில் ஏற்படும் தீ விபத்து மற்றும் மீட்புப் பணி அழைப்புகளை அருகிலுள்ள சூலூர் தீயணைப்பு நிலையத்தைச் சார்ந்த பணியாளர்கள் மற்றும் ஊர்திகளைக் கொண்டு மேற்கொள்ள இயலும் என்பதால் சாமாளபுரம் பகுதியில் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்கும் நிலை தற்போது எழவில்லை.

2023 அக்டோபர் 11]

22—

பொன்விழா

வினா எண் 3337—திரு. இரா. அருள்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஆசியக் கண்டத்தின் மிக உயரமானதும், நீளமானதுமான மாத்தூர் தொட்டிப்பாலத்தின் 50-வது பொன்விழா ஆண்டை கொண்டாட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

ஆசியக் கண்டத்தின் மிக உயரமானதும் மற்றும் நீளமானதுமான மாத்தூர் தொட்டிப்பாலத்தின் 50-வது பொன்விழா கொண்டாடுவது குறித்து, அப்பாலம் கட்டி முடித்து 2018 உடன் 50 வருடம் முடிந்துவிட்டதாலும், தற்போது 54-வது வருடம் நடப்பதாலும், இதுகுறித்து தற்போது பரிசீலிக்க இயலாது.

23—

கால்வாய் தூர்வாருதல்

வினா எண் 3872—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள குளங்களில் உள்ள வண்டல் மண்ணை எடுக்கவும், தூர்வாரிச் சீர்படுத்தவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை மூலம் மழைப்பொழிவு பெறுகிறது.

இம்மண்டலத்தில் நாகர்கோவில், கோதையாறு வடிநிலக் கோட்ட கட்டுப்பாட்டின்கீழ் 6 அணைகளும் மற்றும் 2,040 கண்மாய்களும் உள்ளன. மழைநீரானது அணைகளில் தேக்கி வைக்கப்பட்டு, கால்வாய்கள்மூலம் குளங்களுக்கும், பாசனத்திற்கும் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. கோதையாறு வடிநிலக் கோட்டத்தில் உள்ள நீர்நிலைகளில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள ஆண்டுதோறும் சுமார் ரூ.4.50 கோடி அளவில் நிதி ஒதுக்கப்பட்டு ஒவ்வொரு பருவ மழைக்கு முன்னரும் கால்வாய் தூர்வாரி பராமரிப்புப் பணிகள் மேற்கொண்டு அணைகளிலிருந்து பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

24—

கால்வாய் சீரமைத்தல்

வினா எண் 3905—திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிள்ளியூர் தொகுதி, நீரோடித்துறை முதல் இறையுமன்துறை வரை செல்லும் AVM கால்வாயை விரிவுபடுத்தி தூர்வாரி சீரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் தொகுதி, ஏ.வி.எம். கால்வாயில், நீரோடி முதல் இறையுமன்துறை வரை தூர்வார நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், தற்போதைய நிலையில் கால்வாய் அகலப்படுத்துவது பொருளாதார ரீதியாக சாத்தியமில்லை.

25—

வறட்சியைப் போக்குதல்

வினா எண் 4247—திரு. ரூபி ஆர். மனோகரன்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2023 அக்டோபர் 11]

(அ) நாங்குநேரி தொகுதி, தாமிரபரணி, கருமேனியாறு, நம்பியாறு, வடக்கு பச்சையாறு நதிநீர் திட்டத்தை விரைவுபடுத்தி, திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டத்தின் வறட்சியைப் போக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாங்குநேரி தொகுதி, தாமிரபரணி ஆற்றின் வெள்ள உபரி நீரை தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் தாமிரபரணி, கருமேனியாறு, நம்பியாறு நதிகளை இணைத்து கன்னடியன் அணைக்கட்டிலிருந்து L.S. 6.50 கிலோ மீட்டர் முதல் வறட்சிப் பகுதியான சாத்தான்குளம் மற்றும் திசையன்விளை வரை வெள்ள நீர்க் கால்வாய் தோண்டும் பணி நான்கு நிலைகளாகப் பிரிக்கப்பட்டு, பணிகள் விரைந்து நடைபெற்று வருகின்றன. மார்ச் 2023-க்குள் அனைத்துப் பணிகளும் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

26—

வராக நதியைச் சீரமைத்தல்

வினா எண் 4378—திரு. கே.எஸ். சரவணக்குமார்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியகுளம் தொகுதி, பெரியகுளத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளான பட்டாளம்மன் கோயில் தெரு மற்றும் பங்களாபட்டி அருகில் உள்ள வராக நதி ஆற்றினைச் சீரமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தேனி மாவட்டம், பெரியகுளம் தொகுதி, பெரியகுளத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளான பட்டாளம்மன் கோயில் தெரு மற்றும் பங்களாபட்டி அருகிலுள்ள

[*2023 அக்டோபர் 11*

வராக நதி ஆற்றினைச் சீரமைக்கும் பணிகளை மேற்கொள்ள ரூ.35.62 கோடி மதிப்பீடு என அரசால் ஆய்வு செய்யப்பட்டு, தற்காலிகமாக கைவிடப்பட்டது. நிதிநிலைமைக்கேற்ப, உரிய நேரத்தில் இத்திட்டம் எடுத்துக்கொள்ளப்படும்.

27—

பக்கச் சுவர்

வினா எண் 4388—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குளச்சல் தொகுதி, குளச்சல் நகராட்சியில் உள்ள வெள்ளியாகுளத்தை தூர்வாரி பக்கச் சுவர் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம்-குளச்சல் தொகுதிக்குட்பட்ட வெள்ளியாகுளம் 2016-2017 ஆம் ஆண்டிற்கான குடிமராமத்து திட்டத்தின்கீழ் 2017-ல் தூர்வாரப்பட்டுள்ளது. மேலும், வெள்ளியாகுளத்தில் பக்கச் சுவர் கட்டுவதற்கான மதிப்பீடு தயாரிக்கும் பணி துறையின் ஆய்வில் உள்ளது.

28—

தார்ச் சாலை சீரமைத்தல்

வினா எண் 4915—திரு. பால் மனோஜ் பாண்டியன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆலங்குளம் தொகுதி, கடையம் ஒன்றியம், கடையத்திலிருந்து ராமநதி அணை வரை செல்லும் தார்ச் சாலையை சீரமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 அக்டோபர் 11]

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி மாவட்டம், மேலகடையம் கிராமத்தில் உள்ள ராமநதி அணைக்கு கடையத்திலிருந்து செல்லக்கூடிய தார்ச் சாலை ஒன்று அமைந்துள்ளது. இச்சாலை ராமநதி அணை திட்டத்தின்கீழ் பராமரிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் ஒதுக்கப்படும் நிதியைக் கொண்டு முன்னுரிமை அடிப்படையில் மராமத்துப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

29—

பாசனத் திட்டம்

வினா எண் 7039—திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செங்கோடு தொகுதி, திருச்செங்கோடு ஒன்றியத்திற்குட்பட்ட மொளசி நீரேற்று பாசனத் திட்டத்தை மல்லசமுத்திரம் ஒன்றியத்திற்குட்பட்ட மங்கலம் வரை நீட்டிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு தொகுதி, திருச்செங்கோடு ஒன்றியத்திற்குட்பட்ட மொளசி நீரேற்று பாசனத் திட்டம் தனியார் கூட்டுறவுச் சங்கத்திற்கு பாத்தியப்பட்டது என்பதால் மேற்கண்ட திட்டத்தை மல்லசமுத்திரம் ஒன்றியத்திற்குட்பட்ட மங்கலம் வரை நீட்டிக்க இயலாது.

30—

ஏரி தூர்வாருதல்

வினா எண் 7234—திரு. இரா. அருள்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாநகர், 3-வது கோட்டம், இஸ்மாயில்கான் ஏரியின் கரையினை அகலப்படுத்தி, தூர்வாரி நடைப் பயிற்சி செல்லும் வகையில் வசதி ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

சேலம் மாநகர், 3-வது கோட்டம், இஸ்மாயில்கான் ஏரியின் கரையினை அகலப்படுத்தி, தூர்வார ரூ.25.00 இலட்சம் நிதி தேவைப்படுகிறது. எனவே, இத்திட்டத்திற்கு நிதிநிலைமைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

31—

கால்வாய் தூர்வாருதல்

வினா எண் 7912—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் நெய்யாறு இடதுகரை கால்வாயை தூர்வாரி தண்ணீர் செல்ல வகை செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், நெய்யாறு இடதுகரை கால்வாய்க்கு தண்ணீர் வழங்குவதனை கேரள அரசு பிப்ரவரி 2004 ஆம் ஆண்டிலிருந்து நிறுத்தியது. அதன்

2023 அக்டோபர் 11]

காரணமாக தமிழக அரசு உச்ச நீதிமன்றம், டெல்லியில் வழக்கு எண் 2/2012-ன்படி வழக்கு தொடர்ந்து தற்போது வரை நடைபெற்று வருகிறது. மழைநீரானது இக்கால்வாய்மூலம் 162 முறை சார்ந்த குளங்களில் நிரப்பப்பட்டு, பாசனத்திற்கு பயன்பட்டு வருகிறது.

32—

மடைகள் மாற்றியமைத்தல்

வினா எண் 10182—திரு. சி. மகேந்திரன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மடத்துக்குளம் தொகுதி, PAP பாசனத் திட்டத்தில் 600 ஏக்கருக்கு ஒரு மடை என்ற விகிதத்தில் மடைகளை மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பரம்பிக்குளம் ஆழியாறு திட்ட ஆயக்கட்டின் (பாலாறு படுகை) பாசன பகுதியில், 600 ஏக்கர் வரை பாசனம் பெறும் கால்வாய்களையும் நான்கு மண்டல பாசன முறைக்கு மாற்றியமைப்பதற்கான கருத்துரு துறையின் பரிசீலனையில் உள்ளது.

33—

கால்வாய் தூர்வாருதல்

வினா எண் 11813—திரு. க. கார்த்திகேயன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ரிஷிவந்தியம் ஒன்றியம், தேவரடியார்குப்பம் ஏரி முதல் நரியப்பட்டு ஏரி வரை உள்ள நீர்வரத்து வாய்க்காலை தூர்வார அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நரியப்பட்டு ஏரி முதல் தேவரடியார்குப்பம் ஏரி வரையுள்ள நீர்வரத்து கால்வாயை தூர்வார 2022-2023 ஆம் நிதியாண்டில் பராமரிப்புப் பணி பட்டியலில் முன்னுரிமை அளித்து, நீர்வரத்துக் கால்வாய் தூர்வாரும் பணி மேற்கொள்ளப்படும்.

34—

தடுப்புச் சுவர்

வினா எண் 12732—திரு. காதர்பாட்ஷா முத்துராமலிங்கம்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) இராமநாதபுரம் தொகுதிக்குட்பட்ட மண்டபம் ஒன்றியம், பாம்பன் வடக்கு கடற்கரை பகுதியில் புயல் சீற்றத்திலிருந்து பாதுகாக்க தடுப்புச் சுவர் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் ஒன்றியம், பாம்பன் வடக்கு கடற்கரைப் பகுதியில் புயல் சீற்றத்திலிருந்து பாதுகாக்க தடுப்புச் சுவர் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்து, சாத்தியக்கூறுகள் இருப்பின் முன்னுரிமை அடிப்படையில் நிதி நிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும்.

35—

தார்ச் சாலை

வினா எண் 12804—திரு. க.சொ.க. கண்ணன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2023 அக்டோபர் 11]

(அ) ஜெயங்கொண்டம் தொகுதி, கொள்ளிட கரைகளை பலப்படுத்தவும், அகலப்படுத்தவும், தார்ச் சலையாக அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டம், ஜெயங்கொண்டம் தொகுதிக்குட்பட்ட கொள்ளிடக் கரையினை அகலப்படுத்துதல், பலப்படுத்துதல் மற்றும் மேற்பரப்பில் தார்ச் சாலைகள் அமைத்துத் தருதல் போன்ற கருத்துரு அரசு மட்டத்தில் தற்போது ஏதுமில்லை.

36—

தடுப்பணை

வினா எண் 12819—திரு. A.P. ஜெயசங்கரன்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆத்தூர் தொகுதி, பைத்தூர் ஊராட்சி, வானபுரம் மற்றும் கல்லுக்கட்டு இரண்டு பகுதிகளில் தடுப்பணை கட்டித் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

ஆத்தூர் தொகுதி, பைத்தூர் ஊராட்சி, வானபுரம் மற்றும் கல்லுக்கட்டு இரண்டு பகுதிகளில் தடுப்பணை அமைக்க புவியியல் ரீதியாகவும், தொழில்நுட்ப ரீதியாகவும் சாத்தியக்கூறுகள் இல்லை.

37—

கூற்றுலாத் தலம்

வினா எண் 12841—திரு. இரா. அருள்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[*2023 அக்டோபர் 11*

திருநெல்வேலி மாவட்டம், மணிமுத்தாறு அணையில் உள்ள பூங்காவை சீர்செய்து சுற்றுலாத் தலமாக மாற்ற அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

திருநெல்வேலி மாவட்டம், மணிமுத்தாறு அணையில் உள்ள பூங்காவை சீர்செய்து சுற்றுலாத் தலமாக மாற்றும் பணியானது, சாத்தியக்கூறுகள் இருப்பின் நிதிநிலைமைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் பரிசீலித்து செயல்படுத்தப்படும்.

38—

நீர்வரத்து அதிகரித்தல்

வினா எண் 12913—திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கந்தர்வகோட்டை தொகுதி, கறம்பக்குடி அக்னி ஆற்றில் தடுப்பணை அமைத்து, விவசாய பாசனத்திற்கு கறம்பக்குடி பெரிய குளத்திற்கு நீர்வரத்தை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை தொகுதி, கறம்பக்குடி கிராமத்தில், அக்னியாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கக் கோரும் பகுதியானது கறம்பக்குடி பெரிய குளத்தின் வலது கரைக்கு அருகில் 200 கி.மீ. தொலைவில் உள்ளதாலும், இப்பகுதியானது குளத்தைக் காட்டிலும் கீழ் மட்டத்தில் உள்ளதாலும், இதன்மூலம் பெரிய குளத்திற்கு நீர் வழங்க நிலவியல் அமைப்பு ரீதியாக சாத்தியக்கூறுகள் ஏதுவாக இல்லை. மேலும், கறம்பக்குடி பெரிய குளத்திற்கு அக்னியாற்றில் உள்ள மாணியவயல் அணைக்கட்டில் இருந்து நீர் அளிக்கப்பட்டு வருகிறது.

2023 அக்டோபர் 11]

39—

தடுப்பணை

வினா எண் 13025—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி தொகுதி, டொக்குபோதனஅள்ளி ஊராட்சி, பூவல்மடுவு மாரப்பன் ஓடையில் தடுப்பணை கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி தொகுதி, டொக்குபோதனஅள்ளி ஊராட்சி, பூவல்மடுவு மாரப்பன் ஓடையில் தடுப்பணை கட்டும் பணி திட்டங்கள் தொடர்பாக திட்டம் மற்றும் வடிவமைப்பு, கோட்டம் (நீர்வளத் துறை) சேலம் அவர்களால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், திட்ட உருவாக்கம் ஆய்வு செய்து தொழில்நுட்ப ஆய்வு அறிக்கையின்படி சாத்தியக்கூறு இருக்கும்பட்சத்தில் நிதி நிலைமைக்கேற்ப உரிய நேரத்தில் இப்பணி செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

40—

தடுப்பணை

வினா எண் 14407—திரு. மு. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், பெருந்தோட்டம் பகுதியில் மணிகர்ணக்கை உப்பனாற்றில் தடுப்பணை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், பெருந்தோட்டம் பகுதியில் உள்ள பெருந்தோட்டம் ஏரியின் வரத்து வாய்க்கால் மணிக்கரணையாகும். இந்த வரத்து வாய்க்காலுக்கு தடுப்பணை தேவையில்லை. மேலும், முல்லையாறு பெருந்தோட்டம் ஏரியின் வடிகாலாகும். இவ்வடிகாலானது வங்காள விரிகுடாவில் கலக்கிறது. அதனால், கடல் நீர் உட்புகுவதைத் தடுக்கும்பொருட்டு புதியதாக நீரொழுங்கி கட்டுமானப் பணிக்கு ரூ.857.00 இலட்சத்திற்கு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, துறையால் பரிசீலிக்கப்பட்டு நிதி நிலைமையை கருத்தில்கொண்டு கைவிடப்பட்டது.

41—

கரைகளை உயர்த்துதல்

வினா எண் 14408—திரு. மு. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், மணிகர்ணயாற்றின் முடிவில் உப்பனாற்றை ஆழப்படுத்தி இருகரைகளையும் உயர்த்தி கடல்நீர் உட்புகுதலை தடுத்து நிறுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், பெருந்தோட்டம் பகுதியில் உள்ள பெருந்தோட்டம் ஏரியின் வரத்து வாய்க்கால் மணிக்கரணையாகும். முல்லையாறு, பெருந்தோட்டம் ஏரியின் வடிகாலாகும். இவ்வடிகாலானது வங்காள விரிகுடாவில் கலக்கிறது. அதனால், கடல் நீர் உட்புகுவதைத் தடுக்கும்பொருட்டு புதியதாக நீரொழுங்கி கட்டுமானப் பணி மற்றும் உப்பனாற்றை ஆழப்படுத்தி இருகரைகளையும் உயர்த்தி பலப்படுத்தும் பணி ஆகியவற்றிற்கு ரூ.857.00 இலட்சத்திற்கு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, துறையால் பரிசீலிக்கப்பட்டு தற்போதைய நிதி நிலைமையைக் கருத்தில்கொண்டு கைவிடப்பட்டது.

2023 அக்டோபர் 11]

42—

தூர்வாருதல்

வினா எண் 15147—திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *போளூர் வட்டம், செண்பகத் தோப்பு அணையை தூர்வார அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டத்திலுள்ள செண்பகத் தோப்பு அணையின் முழுக் கொள்ளளவு 287.20 மி.க.அடி, நீர் மட்ட உயரம் 62.32 அடி ஆகும். கடந்த 2021 நவம்பர் மாதத்தில் பெய்த பருவ மழையின்போது அணையின் நீர்மட்ட கொள்ளளவிற்கு (crest level) தண்ணீர் சேமிக்கப்பட்டது. செண்பகத் தோப்பு அணையிலிருந்து பாசனத்திற்கு ஆற்று மதகு (River Sluice) வாயிலாக மட்டுமே தண்ணீர் திறக்கப்படுவதால், அணையின் நீர்பிடிப்பு பகுதிகளில் வண்டல் மண் படிந்ததற்கான சுவடுகள் இல்லை.

43—

தடுப்பணை

வினா எண் 15149—திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *போளூர் தொகுதி, கரைப் பூண்டியில் தடுப்பணை கட்ட அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், கரைப் பூண்டியில் புதிய தடுப்பணை கட்டுவதற்கு தேவையான ஆய்வுப் பணிகள் மேற்கொண்டு மதிப்பீடு தயாரித்து, அதற்குரிய திட்டம் மற்றும் வடிவமைப்பு ஆய்வு செய்து, சாத்தியக்கூறுகள் இருக்கும்பட்சத்தில் நிதி நிலைமைக்கேற்ப பணிகள் மேற்கொள்ளப்படும்.

44—

ஏரி தூர்வாருதல்

வினா எண் 15367—திரு. இரா. அருள்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வீரபாண்டி தொகுதி, நீர்வளமிக்க பூலாவரி ஏரியை தூர்வாரி கரைகளை பலப்படுத்திட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், வீரபாண்டி தொகுதியிலுள்ள பூலாவரி ஏரி தூர்வாரப்பட்டுள்ளது. மேலும், ஏரியில் தள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு கரையினை பலப்படுத்திட மதிப்பீடு தயாரிக்கும் பணி துறையின் ஆய்வில் உள்ளது.

45—

படகுக் குழாம்

வினா எண் 15368—திரு. இரா. அருள்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வீரபாண்டி தொகுதி, பூலாவரி ஏரியில் படகுக் குழாம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2023 அக்டோபர் 11]

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், வீரபாண்டி தொகுதியிலுள்ள பூலாவரி ஏரியில் படகுக் குழாம் அமைக்க உரிய தள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு சாத்தியக்கூறுகள் இருப்பின் செயலாக்கப்படும்.

46—

ஆகாயத் தாமரை

வினா எண் 15371—திரு. இரா. அருள்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பவானி ஆற்றை முற்றிலும் மூடியுள்ள ஆகாயத் தாமரையை அகற்றிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

பவானி ஆறானது நீலகிரி மாவட்டத்தில் உற்பத்தியாகி நீலகிரி, கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு மாவட்டங்கள் வழியாக மொத்தம் 217.00 கிலோ மீட்டர் சென்று ஈரோடு மாவட்டத்தின் காலிங்கராயன் அணைக்கட்டில் முடிவடைகிறது. வெள்ளப்பெருக்கு காலங்களில் பவானி ஆற்றில் அதிக வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, மேல்புற பகுதியில் உள்ள ஆகாயத் தாமரைகள் அனைத்தும் கடைகோடியில் தேங்கிவிடுகின்றன. பவானி நகரப் பகுதியில் அவ்வாறு தேங்கிய ஆகாயத் தாமரைகள் 214-வது கிலோ மீட்டரிலிருந்து 217-வது கிலோ மீட்டர் வரை கடந்த ஆகஸ்ட் 2022 மற்றும் மார்ச் 2023 மாதங்களில் இத்துறையின் பராமரிப்பு நிதியில் அகற்றப்பட்டன. இனிவருங்காலங்களில் ஆகாயத் தாமரைகள் அதிகமாக பவானி ஆற்றில் படிந்தால் அவற்றை முற்றிலும் அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

47—

தடுப்பணை

வினா எண் 15390—திரு. வே. சம்பத்குமார்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கோட்டப்பட்டி கல்லாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டித்தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், கோட்டப்பட்டி கல்லாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்க தொழில்நுட்ப ரீதியாக சாத்தியமில்லை.

48—

தடுப்பணை

வினா எண் 15392—திரு. வே. சம்பத்குமார்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மத்தியம்பட்டி ஊராட்சிக்குட்பட்ட வாணியாற்றின் குறுக்கே உரல்கள் மடுவு (பெரிய பண்ணைமடுவு) என்ற இடத்தில் தடுப்பணை கட்டித்தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், மத்தியம்பட்டி ஊராட்சிக்குட்பட்ட வாணியாற்றின் குறுக்கே உரல்கள் மடுவு (பெரிய பண்ணைமடுவு) என்ற இடத்தில் தடுப்பணை அமைக்க தொழில்நுட்ப ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் சாத்தியமில்லை.

49—

தூர்வாருதல்

வினா எண் 15417—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளச்சல் தொகுதிக்குட்பட்ட தொட்டிமேடு பெரிய குளத்தை தூர்வார அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 அக்டோபர் 11]

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குளச்சல் தொகுதிக்குட்பட்ட தொட்டிமேடு பெரிய குளத்தினை விவசாயிகள்மூலம் தூர்வாரி சீர்செய்ய ஏதுவாக மாவட்ட அரசிதழில் வெளியிடுவதற்கு பரிந்துரை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

50—

தடுப்பணை

வினா எண் 15449—திரு. சி. மகேந்திரன்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மடத்துக்குளம் தொகுதி, உடுமலை ஊராட்சி ஒன்றியம், இராவணாபுரம் ஊராட்சி வரப்பள்ளம் க.ச. எண் 349-ல் தடுப்பணை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட இராவணாபுரம் கிராமம் க.ச. எண் 349 வரப்பள்ளம் ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைக்க ரூ.2.50 கோடிக்கான மதிப்பீடானது அரசால் ஆய்வு செய்யப்பட்டதில், வரப்பள்ளம் அதிநுகர்வு அபாயகரமான குறுவட்டத்தின்கீழ் இல்லாததால், அப்பகுதியில் தடுப்பணை அமைக்கும் திட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டது.

51—

தூர்வாருதல்

வினா எண் 17615—திரு. இரா. அருள்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[*2023 அக்டோபர் 11*

சேலம் மாவட்டம், அக்ரஹார நாட்டாமங்கலம் ஏரியினை தூர்வாரி, நீர்வழித் தடத்தினை சீர்செய்து, நீர்வள ஆதாரத்தினை உருவாக்கவும், மேம்படுத்தவும் அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், அக்ரஹார நாட்டாமங்கலம் ஏரியை தூர்வாரி, நீர்வழித் தடத்தினை சீர்செய்து நீர்வள ஆதாரத்தினை மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ள சாத்தியக்கூறுகள் இருப்பின் நிதிநிலைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் பரிசீலிக்கப்படும்.

52—

தூர்வாருதல்

வினா எண் 17648—திரு. செ. கிருஷ்ணமுரளி: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கடையநல்லூர் தொகுதி, வேலாயுதபுரம் கருப்பாநதி நீர்த்தேக்கம், 8 நெம்பர் பாசன கால்வாய்க்கு வரும் குத்தலாப்பேரி குளம், இராஜாவின்பத்து குளம், தொண்டைமான் குளம், வடக்கு பொய்கை குளம், தெற்கு பொய்கை குளம் ஆகிய குளங்களை தூர்வாரி ஆழப்படுத்தி கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி மாவட்டம், கடையநல்லூர் வட்டம், வேலாயுதபுரம் கருப்பாநதி நீர்த்தேக்கம், 8 நம்பர் பாசன கால்வாய்க்கு வரும் குத்தாலப்பேரி குளம், இராஜாவின்பத்து குளம், தொண்டைமான் குளம், வடக்கு பொய்கை குளம், தெற்கு பொய்கை குளம் ஆகிய குளங்கள் கடந்த பருவமழையில் முழு கொள்ளளவை அடைந்து விவசாயப் பணிகள் முழுவதும் நல்ல முறையில் நடைபெற்றுள்ளன. நிதிநிலைமைக்கேற்றவாறு மேலும் குளத்தை ஆழப்படுத்த, உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2023 அக்டோபர் 11]

53—

தூய்மைப்படுத்துதல்

வினா எண் 17649—திரு. செ. கிருஷ்ணமுரளி: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கடையநல்லூர் தொகுதி, செங்கோட்டை வட்டம், செங்கோட்டையில் உள்ள அரிகரா நதியை தூய்மைப்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி மாவட்டம், கடையநல்லூர் தொகுதி, செங்கோட்டை வட்டம், புளியரை கிராமத்தின் அருகே மேற்கு தொடர்ச்சி மலையில் அரிகரா நதியானது உற்பத்தியாகின்றது. அரிகரா நதியில் 8 அணைக்கட்டுகள் மற்றும் 11 குளங்கள் உள்ளன. அரிகரா நதியில் மழைக் காலங்களில் நீர்ப்போக்கிற்கு எவ்வித இடையூறும் ஏற்படாத வகையில் நீர்வளத் துறையின்மூலம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு நீர்வழிபோக்கு சீர்செய்யப்பட்டு வருகின்றது.

54—

நீர் மேலாண்மை ஆணையம்

வினா எண் 18239—திரு. S.S. பாலாஜி: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நீர்வழித் தடங்கள், ஏரிகள், குளங்களைச் சீரமைக்கவும் ஆக்கிரமிப்பை தடுக்கவும், அகற்றவும், நீர் மேலாண்மை ஆணையம் (Water Management Authority) அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நீர்வழித் தடங்கள், ஏரிகள், குளங்களைச் சீரமைக்கவும், ஆக்கிரமிப்பைத் தடுக்கவும் மற்றும் அகற்றவும், தமிழ்நாடு ஏரிகள் பாதுகாப்பு மற்றும் ஆக்கிரமிப்பினை அகற்றுதல் சட்டம், 2007 உள்ள நிலையில் தனியாக நீர் மேலாண்மை ஆணையம் (Water Management Authority) அமைப்பது குறித்த அவசியம் எழவில்லை.

55—

தூர்வாருதல்

வினா எண் 18253—திரு. ஆ. அருண்மொழிதேவன்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வீராணம் பாசன வாய்க்கால் பரிபூரணநத்தம் முதல் எடையன்பால் வீதி வரை தூர்வார அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

வீராணம் பாசன வாய்க்கால் பரிபூரணநத்தம் முதல் எடையன்பால் வீதி வரை தூர்வாரும் பணி 2020-2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு பாசன மேலாண்மை நவீனப்படுத்தும் திட்டம் பகுதி-2 சிப்பம் 1-ன்கீழ் செயலாக்கப்பட்டது. வீராணம் பாசன வாய்க்கால், பரிபூரணநத்தம் முதல் எடையன்பால் வீதி வரை 12.300 மீட்டர் நீளத்திற்கு தூர்வாரும் பணிக்கு ரூ.4.92 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு அனைத்துப் பணிகளும் விரைவில் முடிவுற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

56—

படகுக் குழாம்

வினா எண் 18334—திரு. இ. கருணாநிதி: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2023 அக்டோபர் 11]

(அ) பல்லாவரம் தொகுதி, பல்லாவரம் நகராட்சிப் பகுதியிலுள்ள பெரிய ஏரியை தூர்வாரி படகுக் குழாம் அமைத்து அதனை சுற்றுலாத் தலமாக மாற்றியமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டம், பல்லாவரம் வட்டத்தில் உள்ள பல்லாவரம் பெரிய ஏரி மற்றும் கீழ்க்கட்டளை ஏரிகளைச் சீரமைக்க ரூ.14.98 கோடி மதிப்பில் அனுமதி அளிக்கப்பட்டு, பல்லாவரம் பெருநகராட்சி மூலமாக பணிகள் செயலாக்கப்பட்டுள்ளன.

மேலும், பல்லாவரம் பெரிய ஏரியின் நீர் இருப்பு விவரங்களின்படி மழைக் காலங்களில் மட்டுமே இந்த ஏரியில் நீர் இருப்பு இருக்கும். மீதமிருக்கும் காலங்களில் ஏரியின் நீர் இருப்பு 4 அடிக்கு குறைவாக இருப்பதால், படகுக் குழாம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

57—

வடிநிலக் கோட்ட அலுவலகம்

வினா எண் 18925—திரு. பெ. ராமலிங்கம்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் தொகுதி, நாமக்கல்லில் நீர்வள ஆதாரத் துறையின்கீழ் செயல்பட்டு வந்த சரபங்கா வடிநிலக் கோட்ட அலுவலகத்தை மீண்டும் நாமக்கல் மாவட்டத்தில் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாமக்கல்லில் நீர்வளத் துறையின்கீழ் செயல்பட்டு வந்த சரபங்கா வடிநிலக் கோட்ட அலுவலகத்தை மீண்டும் நாமக்கல் மாவட்டத்திற்கு மாற்றம் செய்யும் திட்டமானது அரசின் பரிசீலனையில் இல்லை.

58—

தூர்வாருதல்

வினா எண் 18961—திரு. செ. கிருஷ்ணமுரளி: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடையநல்லூர் தொகுதி, கடையநல்லூர் வட்டம், கீழ்க்குளம், அட்டக்குளத்தில் நான்கு மதகுகளையும் பழுது நீக்கி, குளத்தை தூர்வாரி ஆழப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி மாவட்டம், கடையநல்லூர் வட்டம், கீழ்க்குளம் கடந்த பருவமழையில் முழு கொள்ளளவை அடைந்து, விவசாயப் பணிகள் முழுவதும் நல்ல முறையில் நடைபெற்றுள்ளன. மேற்படி குளங்களை தூர்வாரி, குளங்களிலுள்ள மதகுகள் சீரமைப்பு செய்ய நிதிநிலைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

59—

தூர் வாருதல்

வினா எண் 21098—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, தொன்னகுப்பஅள்ளி ஊராட்சிக்குட்பட்ட மேட்டூரான் கொட்டாய் கிராமத்தில் உள்ள அணையை ஆழப்படுத்தி சீரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் தொகுதி, தொன்னகுப்பஅள்ளி ஊராட்சிக்குட்பட்ட மேட்டூரான்

2023 அக்டோபர் 11]

கொட்டாய் கிராமத்திலுள்ள அணைக்கு (பழைய மத்தளப்பள்ளம் ஏரி) இரண்டு காட்டோடைகளின்மூலம் நீர்வரத்து உள்ளது. இந்த ஏரியில் ஆண்டு முழுவதும் சுமார் 60 முதல் 70 சதவீதம் தண்ணீர் இருப்பு உள்ளது. எனவே, தற்போது இந்த ஏரியை தூர்வார சாத்தியக்கூறு இல்லை.

60—

செயற்பொறியாளர் அலுவலகம்

வினா எண் 21171—திரு. தி. ராமச்சந்திரன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அறந்தாங்கி தொகுதியில் பொதுப் பணித் துறை நீர்வளத் துறை சி.எம்.பி சப்-டிவிஷன் (தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டை, பேராவூரணி சப்-டிவிஷன்களிலிருந்து பிரிந்து புதுக்கோட்டை மாவட்டத்திற்கு என தனி சப்-டிவிஷன்), அறந்தாங்கியில் அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்பொழுது பொதுப் பணித் துறை மற்றும் நீர்வளத் துறை அலுவலகம் அமைந்துள்ள பேராவூரணிக்கும், புதிதாக உதவி செயற்பொறியாளர் அலுவலகம் அமைக்கக் கோரிய அறந்தாங்கிக்கும், விவசாயிகள் சென்று வரக்கூடிய தூரங்களின் வித்தியாசம் அதிகம் இல்லாததால் அறந்தாங்கியில் உதவி செயற்பொறியாளர் அலுவலகம் புதிதாக அமைத்திட சாத்தியக்கூறுகள் இல்லை.

61—

தடுப்பணை

வினா எண் 21209—திரு. டி.ஜெ. கோவிந்தராஜன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கும்மிடிப்பூண்டி தொகுதி, கும்மிடிப்பூண்டி வட்டம், சாணாப்புத்தூரில் சூரியன் கால்வாயில் தடுப்பணை கட்டும் பணி இரத்து செய்யப்பட்டுள்ளது. இதனை மீண்டும் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், கும்மிடிப்பூண்டி தொகுதி, சாணாப்புத்தூரில் சூரியன் கால்வாயில் தடுப்பணை கட்டும் செயற்குறிப்பு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

62—

தடுப்பணை சீரமைத்தல்

வினா எண் 21211—திரு. டி.ஜெ. கோவிந்தராஜன்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்மிடிப்பூண்டி தொகுதி, எல்லாபுரம் ஒன்றியம், திருக்கண்டலம் தடுப்பணை சீரமைக்கும் பணியை துரிதப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை வட்டம், திருக்கண்டலம் கிராமம், கொசஸ்தலையாற்றின் குறுக்கே உள்ள வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட தடுப்பணையை மறுசீரமைத்து மேம்படுத்தும் பணி ரூ.1814.49 இலட்சம் மதிப்பீட்டில் ஜனவரி 2022-ல் செய்து முடிக்கப்பட்டு, தற்போது பயன்பாட்டில் உள்ளது.

63—

படித்துறை

வினா எண் 21420—திரு. N. அசோக்குமார்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2023 அக்டோபர் 11]

(அ) பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஊமத்தநாடு ஊராட்சியில் உள்ள பொதுப் பணித் துறை ஏரியான பெரிய கத்திக்கோட்டை ஏரியை ஆழப்படுத்தவும், மக்கள் குளிக்க படித்துறை கட்டவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஊமத்தநாடு ஊராட்சியில் உள்ள நீர்வளத் துறை ஏரியான பெரிய கத்திக்கோட்டை ஏரியைப் புனரமைக்கும் பணிக்கு ஆசிய உள்கட்டமைப்பு வங்கி நிதியுதவியின்கீழ் கல்லணைக் கால்வாய் நீட்டித்தல், புனரமைத்தல் மற்றும் நவீனமயமாக்குதல் திட்டத்தின் (ERM) மூலம் தொகுப்பு எண் 11-ன் மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ.213.00 கோடியில் ரூ.85.00 இலட்சம் உள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆசிய உள்கட்டமைப்பு வங்கியின் கடனுதவி பெறப்பட்டபின் இப்பணி செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

64—

தடுப்பணை

வினா எண் 21421—திரு. N. அசோக்குமார்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஊமத்தநாடு ஊராட்சியில் உள்ள பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான ஊமத்தநாடு பெரிய கத்திக்கோட்டை ஏரியை ஆழப்படுத்தியும், படித்துறை கட்டியும், மதகுகளைச் சீர் செய்தும், ஆறு இடங்களில் செக்டேம் (பாசன வாய்க்காலை) அமைத்துத்தரவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஊமத்தநாடு ஊராட்சியில் உள்ள நீர்வளத் துறை ஏரியான பெரிய கத்திக்கோட்டை ஏரியைப் புனரமைக்கும் பணிக்கு ஆசிய உள் கட்டமைப்பு வங்கி நிதியுதவியின்கீழ் கல்லணைக் கால்வாய் நீட்டித்தல், புனரமைத்தல் மற்றும் நவீனமயமாக்குதல் திட்டத்தின் (ERM) மூலம் தொகுப்பு எண் 11-ன் மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ.213.00 கோடியில் ரூ.80.00 இலட்சம் உள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆசிய உள் கட்டமைப்பு வங்கியின் கடனுதவி மற்றும் நிர்வாக ஒப்புதலுக்குப்பின் இப்பணி செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

65—

மதகுகள்

வினா எண் 21540—திரு. கி. அசோக்குமார்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணகிரி ஒன்றியம், சோக்காபு ஊராட்சி, நீர்வளத் துறைக்குச் சொந்தமான துடுக்கனஹள்ளி ஏரியைத் தூர்வாரி மதகுகளை சீரமைத்துத் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

கிருஷ்ணகிரி ஒன்றியம், சோக்காபு ஊராட்சி, துடுக்கனஹள்ளி ஏரி குடிமராமத்து திட்டத்தின்கீழ் ரூ.7.25 இலட்சம் மதிப்பீட்டில் தூர்வாரி, அவற்றின் மதகுகளும் வரத்துக் கால்வாய்களும் சீரமைக்கப்பட்டுள்ளன. மேலும், 2021 ஆம் ஆண்டு பெய்த மழையில் இந்த ஏரி முழு கொள்ளளவை எட்டியுள்ளது.

2023 அக்டோபர் 11]

66—

தூர் வாருதல்

வினா எண் 21547—திரு. S.R. இராஜா: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, தாம்பரம் நகராட்சி, 38-வது வார்டு பகுதியிலுள்ள புதுதாங்கல் ஏரியை அரசு அறிவித்துள்ள 583 ஏரிகளை தூர்வாரி ஆழப்படுத்தும் பணிகளில் சேர்த்து, சீரமைத்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் நகராட்சிக்குட்பட்ட தாம்பரம் புதுதாங்கல் ஏரி நீர்வளத் துறையின் பராமரிப்பிலுள்ள ஏரியாகும். இந்த ஏரி புறநகரினை ஒட்டியுள்ளதால், நகரமயமாதலின் விளைவாக பல வருடங்களுக்கு முன்னரே குடியிருப்புப் பகுதிகளாக மாற்றம் அடைந்துவிட்டன. தற்போது இந்த ஏரி நிலத்தடி நீர் மட்டம் காக்க மட்டுமே பயன்பட்டு வருகின்றது. இந்த ஏரியில் எப்பொழுதும் தண்ணீர் தேக்கம் இருப்பதால், ஏரியை தூர்வார சாத்தியக்கூறுகள் இல்லை.

67—

கால்வாய்த் திட்டம்

வினா எண் 21564—திரு. எம்.சி. சண்முகையா: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, கருங்குளம் ஒன்றியம், தாமிரபரணி ஆற்றில், வல்ல நாட்டில் அணைகட்டி நீரேற்று நிலையம்மூலம் வடக்கு காரசேரி-பூவாணி-செக்காரக்குடி-மேல்தட்டப்பாறை-கோரம்பள்ளம்-தெய்வச்செயல்புரம்-வாகைகுளம்-அணையபரநல்லூர்-புதுக்கோட்டை வரை பாசன கால்வாய் திட்டத்தை செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் வட்டம், கலியாவூர் கிராமத்தில் மருதூர் அணைக்கட்டின் மேற்புறம் தாமிரபரணி நதியிலிருந்து வெள்ளநீரை நீரேற்றம் செய்து, தெய்வச்செயல்புரம் பகுதியில் உள்ள குளங்களுக்கு வழங்கிடவும் மற்றும் தூத்துக்குடி வட்டத்திலுள்ள குளங்களுக்கு வழங்கிடவும் மற்றும் தூத்துக்குடி வட்டத்திலுள்ள பேரூரணி அணைக்கட்டை இணைக்கும் திட்டம் தொடர்பாகவும் விரிவான தள ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, தொழில்நுட்ப சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. அந்த சாத்தியக்கூறின் அடிப்படையில், திட்டத்தை நிறைவேற்ற தேவையான நடவடிக்கை விரைவில் எடுக்கப்படும்.

68—

தடுப்பணை

வினா எண் 22956—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, பெரும்பாலை ஊராட்சிக்குட்பட்ட ஆலமரத்தூர் பகுதியில் செல்லும் ஆற்றின் குறுக்கே புதிய தடுப்பணை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், பெரும்பாலை ஊராட்சிக்குட்பட்ட ஆலமரத்தூர் பகுதியில் செல்லும் நாகவரி ஆற்றின் குறுக்கே புதிய தடுப்பணை அமைக்க தொழில்நுட்பரீதியாக சாத்தியமில்லை.

2023 அக்டோபர் 11]

69—

தடுப்பணை

வினா எண் 22957—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, கூக்குட்டமரதஅள்ளி ஊராட்சிக்குட்பட்ட தாசர்குந்தி பகுதியில் புதிய தடுப்பணை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கூக்குட்டமரதஅள்ளி ஊராட்சிக்குட்பட்ட தாசர்குந்தி பகுதியில் புதிய தடுப்பணை அமைக்க தொழில்நுட்பரீதியாக சாத்தியமில்லை.

70—

தடுப்பணை

வினா எண் 22961—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, தித்தியோப்பனஅள்ளி ஊராட்சி, சஞ்சீவபுரம் சிவன் கோயில் அருகே செல்லும் ஓடையில் தடுப்பணை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், தித்தியோப்பனஅள்ளி ஊராட்சி, சஞ்சீவபுரம் சிவன் கோயில் அருகே வரட்டுப்பள்ளம் ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைக்க தொழில்நுட்பரீதியாக சாத்தியமில்லை.

71—

தடுப்பணை

வினா எண் 22962—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, தித்தியோப்பனஅள்ளி ஊராட்சி, ஆலமரத்துப்பட்டி ஆத்துகொட்டாய் அருகே செல்லும் ஓடையில் தடுப்பணை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், தித்தியோப்பனஅள்ளி ஊராட்சி, ஆலமரத்துப்பட்டி ஆத்துகொட்டாய் அருகே செல்லும் வரட்டுப்பள்ளம் ஓடையின் குறுக்கே புதிய தடுப்பணை அமைக்க தொழில்நுட்பரீதியாக சாத்தியமில்லை.

72—

தடுப்பணை

வினா எண் 22964—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, சின்னம்பள்ளி ஊராட்சிக்குட்பட்ட தோளூர் கோம்பை பகுதியில் புதிய தடுப்பணை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 அக்டோபர் 11]

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், சின்னம்பள்ளி ஊராட்சிக்குட்பட்ட தோளூர் கோம்பை பகுதியில் புதிய தடுப்பணை அமைக்க தொழில்நுட்பரீதியாக சாத்தியமில்லை.

73—

தடுப்பணை

வினா எண் 22976—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, மஞ்சநாயக்கனஅள்ளி ஊராட்சிக்குட்பட்ட புதுப்பட்டி கிராமத்தில் பெரியபள்ளம் ஏரி செல்லும் ஓடையின் குறுக்கே தடுப்பணை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், மஞ்சநாயக்கனஅள்ளி ஊராட்சிக்குட்பட்ட புதுப்பட்டி கிராமத்தில் பெரியபள்ளம் ஏரி செல்லும் ஓடையில் 25 ஆண்டுகளுக்கு முன்பு ஏற்கெனவே குட்டை கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. இக்குட்டையின் கீழ்ப்புறத்தில் சுமார் 410 மீ. தொலைவில் ஒரு தடுப்பணை கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. புதுப்பட்டி கிராமத்தில் உள்ள பெரிய பள்ளம் ஓடையில் ஆங்காங்கே தடுப்பணைகள் உள்ளன.

ஆகவே, ஏற்கெனவே உள்ள குட்டையினை மஞ்சநாயக்கனஅள்ளி ஊராட்சி மேம்பாட்டு நிதிமூலம் சீரமைத்தாலே போதுமானதாகும். எனவே, இவ்விடத்தில் மேலும் ஒரு தடுப்பணை அமைக்க தேவை எழவில்லை.

74—

தூர் வாருதல்

வினா எண் 23117—திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வல்லம் ஒன்றியம், நெகனூர் ஊராட்சியில் பெரிய ஏரி நீர்வரத்து 4 வரத்து வாய்க்காலைச் சீரமைத்து ஏரியைத் தூர்வாரி மேம்பாடு செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், வல்லம் ஒன்றியம், நெகனூர் ஊராட்சியில் பெரிய ஏரி நீர்வரத்து 4 வரத்து வாய்க்கால்கள் மொத்தம் 6.50 கி. மீட்டர் நீளமுடையவை. இதனைச் சீரமைத்து ஏரியைத் தூர் வாரி மேம்பாடு செய்ய மற்றும் இதர பணிகளுக்கும் தோராய மதிப்பீட்டுத் தொகை ரூபாய் 4.00 கோடி தேவைப்படும். நிதி நிலைமைக்கேற்ப இப்பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

75—

அணை

வினா எண் 26132—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஒன்றியம், பாளையம்புதூர், ஜெகநாதன் கோம்பை அணைக்கட்டு பள்ளம் பகுதியில் புதியதாக கட்டப்பட்டுள்ள அணையின் உயரத்தை அதிகரித்து அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், பாளையம்புதூர் கிராமம், ஜெகநாதன் கோம்பை

2023 அக்டோபர் 11]

அணைக்கட்டு ரூ.296.45 இலட்சம் மதிப்பீட்டில் சீரமைக்கப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளது. இவ்வணைக்கட்டின் நீரியல் விவரங்களின்படி அணைக்கட்டின் உயரத்தை அதிகரிக்க சாத்தியமில்லை.

76—

தூர் வாருதல்

வினா எண் 26576—திரு. S. சதாசிவம்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மேட்டூர் தொகுதிக்குட்பட்ட மேட்டூர் அணையிலிருந்து மேற்கு கால்வாயிலிருந்து காவேரி பாலம் வரையுள்ள உபரிநீர் கால்வாயைத் தூர் வார அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேட்டூர் அணையின் உயர் மற்றும் கீழ்மட்ட மதகு கால்வாயில் அனுமதிக்கப்பட்ட நீர் மட்டுமே வெளியேற்றப்படுகிறது. மேலும், இதன் அமைப்பானது போதிய அளவு சீரான சாய்வுடன் அமைக்கப்பட்டுள்ளது. இதில் அதிகளவு வண்டல் படிவதில்லை. மேலும், ஆங்காங்கே முளைக்கும் புற்கள், செடிகள் சீரான கால இடைவெளியில் அகற்றப்பட்டு வருகின்றன. எனவே, மேட்டூர் அணை உயர்மட்ட மதகிலிருந்து காவேரி பாலம் வரை உள்ள உபரிநீர் கால்வாயைத் தூர் வார வேண்டிய அவசியம் எழவில்லை.

77—

கால்வாய் திட்டம்

வினா எண் 37735—திரு. ரூபி ஆர். மனோகரன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாங்குநேரி தொகுதியில் தாமிரபரணி வெள்ளநீர்க் கால்வாய்த் திட்டத்தை முழுமையாகச் செயல்படுத்தி முடிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாங்குநேரி தொகுதி, தாமிரபரணி வெள்ளநீர்க் கால்வாய் திட்டம், திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அம்பாசமுத்திரம், ராதாபுரம், பாளையங்கோட்டை, நாங்குநேரி தொகுதிகளிலும் மற்றும் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள சாத்தான்குளம் திருச்செந்தூர் தொகுதிகளிலும் மொத்தம் 75.175 கி.மீ. நீளத்திற்கு பணிகள் நான்கு நிலைகளாகப் பிரிக்கப்பட்டு செயலாக்கப்பட்டு வருகின்றன.

இதில் நிலை 1-ல் 100 சதவிகிதமும், நிலை 2-ல் 99 சதவிகிதமும், நிலை 3-ல் 95 சதவிகிதமும், நிலை 4-ல் 54 சதவிகிதமும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மேற்கூறிய அனைத்து பணிகளும் மார்ச் 2023-க்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

78—

தூர்வாருதல்

வினா எண் 37755—திரு. S. சதாசிவம்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் தொகுதி, மேட்டூர் அணையில் மேற்கு கால்வாயிலிருந்து காவேரி பாலம் வரை உள்ள கரையோரம் வரை தூர்வார அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேட்டூர் அணையின் உயர் மற்றும் கீழ்மட்ட மதகு கால்வாயில் அனுமதிக்கப்பட்ட நீர் மட்டுமே வெளியேற்றப்படுகிறது. மேலும், இதன் அமைப்பானது போதிய

2023 அக்டோபர் 11]

அளவு சீரான சாய்வுடன் அமைக்கப்பட்டுள்ளதால், இதில் அதிகளவு வண்டல் படிவதில்லை. மேலும், ஆங்காங்கே முளைக்கும் புற்கள், செடிகள் சீரான கால இடைவெளியில் அகற்றப்பட்டு வருகின்றன. எனவே, மேட்டூர் அணையின் மேற்கு கரை கால்வாயிலிருந்து காவேரி பாலம் வரை உள்ள கரையோரம் தூர்வார வேண்டிய அவசியம் எழவில்லை.

79—

தடுப்பணை

வினா எண் 39137—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், இண்டூர் ஊராட்சி, சுண்ணாம்புபள்ளம் ஓடை குறுக்கே தடுப்பணை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், இண்டூர் ஊராட்சி, சுண்ணாம்புபள்ளம் ஓடை குறுக்கே தடுப்பணை கட்டக் கோரும் திட்டத்தளம் ஆய்வு செய்யப்பட்டது.

- *இத்திட்டத்தளம், மலைப்பாங்கான பள்ளத்தாக்குப் பகுதியாகும். இப்பகுதி காப்புவனம் என வருவாய்த் துறை பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

- *மேலும், இது இண்டூர் பிர்காவில் அமைந்து நிலத்தடி உறிஞ்சுதல் வகைப்பாட்டில், அதிமிகை நுகர்வுப் பகுதியாக உள்ளது. (*Over Exploited Zone*) எனினும், இத்திட்டத் தளம் நீர் செறிவூட்டும் மண்டலத்தில் குறைவான சாதக மண்டலமாக உள்ளது. (*Moderately Favourable Zone for recharge*).*

- *தடுப்பணை அமைக்கக் கோரும் திட்டத் தளத்தின் மேற்புறத்தில் சுமார் 300 மீ., 850 மீ. மற்றும் 1,300 மீ. தூரத்தில் தடுப்பணைகள் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.*

- எனவே, திட்டத் தளத்தை சுற்றியுள்ள 1 கி.மீ. தூரத்திற்கு நிலம் மலைபாங்கான பள்ளத்தாக்காக உள்ளதாலும், இதனால் மறைமுக பாசன வசதியும் ஏற்படுத்த இயலாது என்பதாலும், ஏற்கெனவே கட்டப்பட்டுள்ள தடுப்பணைகளின் நீர் தாக்க பகுதியிலேயே கோரப்படும் தடுப்பணைத் தளம் அமைவதாலும் தொழில்நுட்பரீதியாக இவ்விடத்தில் தடுப்பணை அமைக்க இயலாது.
- எனினும், தள ஆய்வின்போது சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கோரியதற்கிணங்க இத்திட்டத் தளத்தில் தடுப்பணைக்குப் பதிலாக பெரிய அணை அமைக்கவும் ஆய்வு செய்யப்பட்டது.
- சுண்ணாம்புபள்ளம் ஓடை நாகவதி ஆற்றின் முக்கிய நீர் ஆதாரமாகும். இவ்வோடை, நாகவதி அணையின் நீர்ப்பிடிப்புப் பகுதியில் சுமார் 6 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது.
- நாகவதி அணையிலிருந்து கடந்த 38 வருடங்களில் 10 வருடங்கள் மட்டுமே உபரிநீர் வெளியேறியுள்ளது. எனவே, இதன் நீரியல் நம்பகத்தன்மை 26 சதவிகிதம் ஆகும்.
- ஆகவே, இவ்வோடையில் அணைக்கட்டும்பட்சத்தில், நாகவதி அணைக்கு செல்லும் நீர்வரத்து பாதிக்கப்பட்டு, அதன் பாசனப் பரப்பும் மற்றும் பாசனதாரர்களின் உரிமையும் பாதிக்கப்படும்.
- எனவே, சுண்ணாம்புப் பள்ளம் ஓடையின் குறுக்கே தடுப்பணை அல்லது அணை கட்டுவதற்கு தொழில்நுட்பரீதியாகவும், நீரியல்ரீதியாகவும் சாத்தியமில்லை.

80—

ஆனை மலையாறு-நல்லாறு திட்டம்

வினா எண் 48059—முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், ஆனை மலையாறு-நல்லாறு திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 அக்டோபர் 11]

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) ஆனைமலையாறு-நல்லாறு திட்டத்தை துவக்க, கேரள அரசு இதுவரை ஒப்புதல் அளிக்கவில்லை. எனவே, இப்பொருள் தொடர்பாக கேரள மாநில அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஏதுவாக அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நீர்வளத் துறை மட்டத்திலான குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவிற்கு தொழில்நுட்ப ஆலோசனை வழங்க தமிழக அரசால் தொழில்நுட்ப துணைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவானது கேரள அரசின் நீர்வளத் துறை அதிகாரிகளிடையே கூட்டம் நடத்தி, மேற்காண் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு முனைப்பான நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

(ஆ) கேரள அரசின் ஒப்புதல் கிடைக்கப்பெற்ற பின் ஆனைமலையாறு-நல்லாறு திட்டம் செயல்படுத்தப்படும்.

81—

தடுப்பணை

வினா எண் 48063—முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொள்ளாச்சி வடக்கு ஒன்றியம்-சிக்கராயபுரம் பஞ்சாயத்து, பூசநாயக்கன்தளி, கருமாண்டனூர் கிராமம் ஓடைகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடைகளின் வாயிலாக கேரளாவில் உள்ள கடலில் கலக்கிறது. இதைத் தடுத்து தடுப்பணை கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், பூசநாயக்கன்தளி கிராமம், ஆச்சிபட்டி ஓடையின் குறுக்கே தடுப்பணை கட்டும் பணிக்கான மதிப்பீடு ரூ.1.45 கோடியில் தயாரிக்கப்பட்டுள்ளது. நிதி நிலைமைக்கேற்ப இப்பணியை செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ள ஆவன செய்யப்படும்.

82—

தடுப்பணை

வினா எண் 48594—முனைவர் டி.ஆர்.பி. ராஜா: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் வட்டம், முக்குளம் சாத்தனூர் ஊராட்சிக்கு அருகில் காளகம் ஆற்றில் தடுப்பணைகள் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் வட்டம், காளகம் ஆற்றினை சுற்றியுள்ள முக்குளம் சாத்தனூர் ஊராட்சி பகுதிகள் யாவும் நீடாமங்கலம் குறுவட்டத்தில் வருகின்றன. நீடாமங்கலம் குறுவட்டமானது நிலத்தடி நீர் நுகர்வு மண்டலம் (Ground Water Extraction Category) வகைப்பாட்டின்படி பாதுகாப்பான பகுதியிலும் (Safe Zone) மற்றும் செறிவூட்டு மண்டலம் வகைப்பாட்டின்படி அதிக செறிவூட்டு மண்டலத்தின் (Highly Favourable Recharge Zone) கீழும் வருகிறது. இத்திட்டத்தளம் பாதுகாப்பான (Safe Zone) பகுதியில் அமைவதால் தற்போதைய சூழ்நிலையில் தடுப்பணை அமைக்க முன்னுரிமை அடிப்படையில் எடுத்துக்கொள்ள இயலாது.

83—

உயர் கோபுரம்

வினா எண் 49382—திரு. இரா. அருள்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர் அணையின் அழகைக் கண்டுகளிக்க 16 கண்பாலம் அருகில் உயர்கோபுரம் கட்டவும், அவ்வழியாக சிறிய வாகனங்கள் செல்ல அனுமதி வழங்கவும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

2023 அக்டோபர் 11]

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

மேட்டூர் அணை நீர்தேக்கம், நீர்பரப்பு பகுதி மற்றும் அணையை சுற்றுலா பயணிகள் கண்டு ரசிக்க அணையின் வலதுபுற பகுதியில் பவளவிழா கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், அதன் ஆறாவது மாடியில் கண்ணாடி சட்டங்கள் பொருத்தப்பட்டு சுற்றுலா பயணிகள் கண்டு களிக்க அனுமதிக்கப்பட்டு வருகிறது.

மேலும், மேட்டூர் அணையின் இடதுபுறம் வெள்ள நீர் வெளியேற்றும்போது, 16 கண் மதகின் கீழ்புறம் நெடுஞ்சாலைத் துறையின்மூலம் கட்டப்பட்ட பாலத்தின் மீது நின்று பொதுமக்கள் பார்வையிட்டு வருகிறார்கள். 16 கண் பகுதியில் வெள்ள நீரானது ஒரு சில நாட்கள் மட்டுமே வெளியேற்றப்பட்டு வருகிறது. எனவே, அந்த பகுதியில் உயர் கோபுரம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை. மேலும், மேட்டூர் அணையின் 16 கண் பாலத்தின் உறுதித்தன்மையைக் கருத்தில் கொண்டும், பாதுகாப்பினைக் கருத்திற்கொண்டும் பொது போக்குவரத்து அனுமதிக்கப்படவில்லை. அதற்குப் பதிலாக 16 கண் பாலத்திலிருந்து சுமார் 200 மீட்டர் தொலைவில் நெடுஞ்சாலைத் துறையின்மூலம் 2016 இல் கட்டப்பட்ட பாலத்தில் பொது போக்குவரத்து அனுமதிக்கப்பட்டு வருகிறது.

எனவே, சிறிய வாகனங்கள் மற்றும் பெரிய வாகனங்கள் 16 கண் பாலம் வழியாகச் செல்ல அனுமதிக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

84—

புதிய அணை

வினா எண் 50264—திரு. K. மாரிமுத்து: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை ஒன்றியம், இடும்பாவனம் மரைக்கா கோரையாற்றில் புதிய அணை கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை ஒன்றியம், இடும்பாவனம் மரைக்கா கோரையாறு ஆற்றில் புதிய அணை கட்டுவது தொடர்பாக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதில், மரைக்கா கோரையாறு பாசன காலங்களில் பாசன ஆதாரமாகவும், வெள்ளகாலங்களில் பிரதான வடிகாலாகவும் செயல்படுகிறது. மரைக்கா கோரையாற்றில் கடைமடை பகுதியில் ஆற்றின் படுக்கை சரிவு (bed slope) குறைவாகவே காணப்படுகிறது. எனவே, வெள்ளநீர் வடியும் வேகம் குறைவாக உள்ளது. இவ்வாற்றின் குறுக்கே அணை கட்டப்பட்டால், வெள்ளநீர் வடியாமல் மிகவும் பாதிப்புக்குள்ளாக நேரிடும். மேலும், ஏற்கெனவே இடும்பாவனம் கிராமத்தில் மரைக்கா கோரையாற்றில் கதவணையுடன்கூடிய நீரொழுங்கி அமைந்துள்ளது. தற்பொழுது ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன் எடுத்துக்கொள்ளப்படும் இரண்டாம் கட்ட பணியில் (ADB Phase-II) செய்யப்படும் மேம்பாட்டு திட்டத்தில் இடும்பாவனம் நீரொழுங்கியினைப் புனரமைக்கவும் மற்றும் சுமார் 1.90 கி.மீ. கீழே உப்புநீர் உட்புகுவதைத் தடுக்க புதிதாக கதவணையுடன்கூடிய கடைமடை நீரொழுங்கி (Tail end Regulator) கட்டுவற்கும் வழிவகையும் செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்கூறிய காரணங்கள் அடிப்படையில் இவ்விடத்தில் புதிய அணை கட்ட அவசியமில்லை.

85—

தடுப்பணை

வினா எண் 50510—திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், சின்னகரம் கிராமத்தில், இரண்டு தடுப்பணைகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 அக்டோபர் 11]

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம் சின்னகரம் கிராமத்தில் இரண்டு தடுப்பணைகள் அமைக்க செயற்பொறியாளர், நீர்வளத் துறை திட்டங்கள் மற்றும் வடிவமைப்பு கோட்டம், சேலம் அவர்கள் மூலமாக தள ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். ஆய்வின் முடிவில் சாத்தியக்கூறுகள் இருக்கும்பட்சத்தில் நிதி நிலைமைக்கேற்ப மேற்குறிப்பிட்ட இடத்தில் தடுப்பணைகள் கட்ட பணிகள் மேற்கொள்ளப்படும்.

86—

கால்வாய்

வினா எண் 50533—திரு. மா. சின்னதுரை: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கந்தர்வகோட்டை தொகுதி, சிவப்பட்டி கிராமத்திற்கு காவேரி, வைகை, குண்டாறு இணைப்புத் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காவேரி-வைகை-குண்டாறு வெள்ளநீர் இணைப்புக் கால்வாய் திட்டமானது முதல் கட்டமாக கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் வட்டம், மாயனூர் (கட்டளை) காவிரி குறுக்கே கட்டப்பட்ட கதவணை முதல் தெற்கு வெள்ளாறு (கவிநாடு மேற்கு) வரை 118 கி.மீ. நீளத்திற்கு கால்வாய் அமைக்க ஒப்புதல் வழங்கப்பட்டு நிலமெடுப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன.

அதன் தொடர்ச்சியாக கரூர் மாவட்டத்தில் L.S.0.000 கி.மீ. முதல் L.S.4.100 கி.மீ. வரை திருச்சி மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தில் L.S.54.695 கி.மீ. முதல் L.S.60.050 கி.மீ. வரை பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

87—

குளத்தைச் சீர்செய்தல்

வினா எண் 50621—திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொதுப் பணித் துறை மூலமாக தோவாளை பெரியகுளத்தைச் சீர் செய்ய 2019 ஆம் ஆண்டு ரூ.85 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. மேற்படி பணியின் தற்போதைய நிலையை தெரிவிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை வட்டம், தோவாளை கிராமத்தில் அமைந்துள்ள தோவாளை பெரியகுளத்தில் மதகு மற்றும் நீர்வழிந்தோடி ஆகியவற்றை புனரமைக்கும் பணிக்கு ரூ.83.80 இலட்சம் மதிப்பீட்டிற்கு ஒப்புதல் வழங்கப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மேற்படி பணியானது 15-7-2020 அன்று ஆரம்பிக்கப்பட்டு 13-3-2023 அன்று முடிக்கப்பட்டுள்ளது.

88—

புதிய கால்வாய்

வினா எண் 50723—திரு. எம்.சி. சண்முகையா: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம், உப்பாற்று ஓடையில் மலைப்பட்டி கிராமத்திற்கு வடக்கு பகுதியில் அணைகட்டி சில்லாங்குளம் வரை புதிய வரத்துக் கால்வாய் அமைத்து, ஆரைக்குளம் அணைக்கட்டு ஓடையில் இணைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 அக்டோபர் 11]

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோரம்பள்ளம் ஆற்றில் புதிய பிரிவு கால்வாய் அமைக்கும் பணி மற்றும் கோரம்பள்ளம் ஆற்றினைச் சீரமைக்கும் பணிக்கு ரூ.12.50 கோடிக்கு நிருவாக ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றிய தொகுதிக்கு உட்பட்ட மலைப்பட்டி கிராமத்திற்கு வடக்கு பகுதியில் உப்பாற்றின் குறுக்கே அணைகட்டு கட்டி சில்லாங்குளம் வரை புதிய வரத்துக் கால்வாய் அமைத்து, ஆரைக்குளம் அணைக்கட்டு ஓடையில் இணைக்கும் பணியும் இடம்பெற்றுள்ளது. இத்திட்டப்பணி விரைவில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

89—

தூர்வாருதல்

வினா எண் 50724—திரு. எம்.சி. சண்முகையா: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, ஒட்டப்பிடாரம் ஒன்றியம், ஒட்டப்பிடாரத்தில் உள்ள பெரியகுளம் மற்றும் முறம்பன் கிராமத்திலுள்ள குளம் ஆகியவற்றை தூர்வாரி ஆழப்படுத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் பெரியகுளமும், முறம்பன் குளமும் நீர்வளத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேற்படி குளங்களைத் தூர்வாரி கொள்ளளவினை அதிகப்படுத்தும் நோக்கத்தில் மாவட்ட நிர்வாகத்தின்மூலம் விவசாயிகள் இலவசமாக வண்டல்மண் எடுத்துக்கொள்ளும் வகைக்கு, 5,000

[*2023 அக்டோபர் 11*

கன மீட்டர் ஒட்டப்பிடாரம் பெரியகுளத்திற்கும், 10,000 கன மீட்டர் முறம்பன் குளத்திற்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட பணிகளின் வாயிலாக வண்டல்மண் அள்ளி முடிக்கப்படும்பொழுது குளத்தின் கொள்ளளவு அதிகப்படுத்தப்படும்.

90—

கரைகளைப் பலப்படுத்துதல்

வினா எண் 50759—திரு. S. சதாசிவம்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாவட்டம், மேட்டூர் அணை கிழக்கு, மேற்கு கால்வாய் கரைகளை பலப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், மேட்டூர் கிழக்கு மற்றும் மேற்கு கால்வாய் கரைகளில் நபார்டு மற்றும் நீர்வள நிலவள திட்டம் பகுதி-II ஆகிய திட்டங்களின்மூலம் பக்கச் சுவர்கள் அமைத்து பலப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், மேட்டூர் கால்வாய் பராமரிப்பிற்கு ஒதுக்கப்படும் ஆண்டு நிதியினைக் கொண்டு கரைகள் நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

91—

தடுப்பணை கட்டுதல்

வினா எண் 50761—திரு. S. சதாசிவம்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாவட்டம், மேட்டூர் அணையிலிருந்து உபரிநீர் கடலில் கலப்பதைத் தடுக்க, தடுப்பணை கட்ட அரசு ஆவன செய்யுமா?

2023 அக்டோபர் 11]

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், மேட்டூர் அணையிலிருந்து வெளியேறும் உபரி நீர் கடலில் கலப்பதைத் தடுக்க, காவிரி மற்றும் கொள்ளிடம் போன்ற பெரிய ஆறுகளின் அகலம் அதிகமாக இருப்பதால், தடுப்பணைகள் கட்ட இயலாது, கதவணைகள் மட்டுமே கட்ட இயலும்.

92—

தடுப்பணை கட்டுதல்

வினா எண் 50835—திருமதி கு. மரகதம் குமரவேல்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மதுராந்தகம் தொகுதி, பாலாற்றின் குறுக்கே தடுப்பணைகள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் தொகுதியில் செல்லும் பாலாற்றின் குறுக்கே நீர்வளத் துறையால் ரூ.30.95 கோடி மதிப்பீட்டில் ஈசூர்-வல்லிபுரம் கிராமங்களுக்கு இடையே தடுப்பணை கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. மேலும், படாளம் உதயம்பாக்கம் கிராமங்களுக்கிடையே பாலாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் திட்டப்பணி தற்போது ஒத்திவைக்கப்பட்டுள்ளது. வரும் நிதியாண்டில் நிதிநிலைமைக்கேற்ப அரசால் பரிசீலிக்கப்படும்.

93—

தண்ணீர் வழங்குதல்

வினா எண் 51739—திரு. பி. அய்யப்பன்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டி தொகுதிக்குட்பட்ட 58 ஆம் கிராம கால்வாய் திட்டத்தில் விடுபட்டு போன மேக்கிழார்பட்டி கிழவன் கண்மாய்க்கு புதிய மடை அமைத்து தண்ணீர் நிரப்ப அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதியில் வைகை உபரிநீரைக் கொண்டு உசிலம்பட்டி, ஆண்டிப்பட்டி, நிலக்கோட்டை வட்டங்களில் உள்ள 58 கிராமங்களும் பயன்பெறும் வகையில் 35 கண்மாய்களுக்கு தண்ணீர் வழங்க 58 கிராம கால்வாய் திட்டம் ஒப்பளிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும், மேக்கிழார்பட்டி கிழவன் கண்மாய்க்கு தண்ணீர் வழங்குவதற்கு நீரியல் விவரங்களின் அடிப்படையில் சாத்தியக்கூறு இருப்பின் இதற்கு திட்ட கருத்துரு தயாரித்து நிதிநிலைமைக்கேற்ப பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

94—

தடுப்பணை அமைத்தல்

வினா எண் 52454—திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் தொகுதி, திருமருகல் ஒன்றியம், ஆலடி கட்டளை மதகு அருகில் ஒரு தடுப்பணை அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 அக்டோபர் 11]

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் தொகுதி, திருமருகல் ஒன்றியம், ஆலடி கட்டளை மதகு அருகில் புதிதாக தடுப்பணை கட்ட தொழில்நுட்பரீதியாக சாத்தியக்கூறுகள் இல்லை.

95—

தூர்வாருதல்

வினா எண் 52648—திரு. N. அசோக்குமார்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், திருவதேவன் கிராமத்தில் உள்ள காடையன்குளம் சறுக்கையில் இருந்து ECR ரோடு வரை 1.00 கிலோ மீட்டர் தூரம் வரை வடிகால் வாய்க்காலை தூர்வாரி செப்பனிட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், திருவதேவன் கிராமத்தில் உள்ள காடையன்குளம், சறுக்கையில் இருந்து ECR ரோடு வரை 1.00 கிலோ மீட்டர் தூரம் உள்ள வடிகால் வாரியை வரும் நிதியாண்டில் சிறப்பு தூர்வாரும் திட்டத்தின்கீழ் தூர்வார பரிசீலிக்கப்படும்.

96—

புதிய நீர்த்தேக்கம்

வினா எண் 52688—திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[*2023 அக்டோபர் 11*

வேப்பனஹள்ளி தொகுதி, வேப்பனஹள்ளி ஒன்றியம், ஒட்டுர் கிராமத்தருகே 50 கிராமங்கள் பாசன வசதி பெறும் வகையில் தென்பெண்ணை ஆற்றினை மார்க்கண்டேய நதியின் குறுக்கே இணைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி வட்டம், வேப்பனஹள்ளி தொகுதி, சீக்கலப்பள்ளி கிராமம் வாணிஒட்டு அருகே சாமல்பள்ளம் மற்றும் சூளகிரி சின்னாறு ஆகிய ஆறுகள் தென்பெண்ணையாற்றுடன் கூடும் இடத்தில் ஒரு புதிய நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டத்திற்கு முதல் நிலை சாத்தியக்கூறு அறிக்கை ரூ.778.00 (2020-21) கோடிக்கு தயாரிக்கப்பட்டு துறையின் பரிசீலனையில் உள்ளது. சாத்தியக்கூறுகளுக்குட்பட்டு நிதிநிலைமைக்கேற்ப இத்திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும். அப்பொழுது இத்திட்டத்தின் இடதுபுற கால்வாய்மூலம் தென்பெண்ணை ஆற்றினை மார்க்கண்டேய நதியின் குறுக்கே கட்டப்பட்டுள்ள மாரசந்திரம் அணைக்கட்டுடன் இணைக்கப்படும்.

97—

கால்வாய்

வினா எண் 52691—திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வேப்பனஹள்ளி தொகுதியிலுள்ள தென்பெண்ணை ஆற்றிலிருந்து வரும் நீரை கெலவரப்பள்ளி அணையை ஒட்டி மார்க்கண்டேய நதியில் இணைத்திட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி வட்டம், வேப்பனஹள்ளி தொகுதி, தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள கெலவரப்பள்ளி அணையின் முழு நீர் மட்ட அளவு +831.000 மீ. ஆகும்.

2023 அக்டோபர் 11]

கெலவரப்பள்ளி அணையின் இடதுபுற கால்வாயின் ஆரம்ப மட்ட அளவு +823.000 மீ. ஆகும். கெலவரப்பள்ளி அணையின் இடதுபுறக்கால்வாய் கான்கிரீட் கால்வாயாகவும், கால்வாயின் இருபுறமும் பாசன பகுதிகளாகவும் அமையப்பெற்றுள்ளதால் இக்கால்வாயை அகலப்படுத்தி பெண்ணையாற்றின் நீரை திருப்புதல் சாத்தியமற்றதாக அமைகிறது.

மேலும், புதியதாக கால்வாய் அமைத்தால் அக்கால்வாயானது அதிக நீளமாகவும், பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியை கடக்க வேண்டியுள்ளதாலும், இடைப்பட்ட பகுதிகள் மலைப்பாங்காக மற்றும் கற்குன்றுகளாக இருப்பதாலும், இத்திட்டம் பொருளாதாரரீதியாக சாத்தியமற்றதாக அமைகிறது.

மேலும், தென்பெண்ணையாற்றின் மேற்புறத்தில் உள்ள கெலவரப்பள்ளி அணை அருகே நீரை எடுத்தால், கீழே உள்ள பாசன திட்டங்கள் பாதிப்பு அடையும் என்பதால், நீரியல்ரீதியாகவும் இத்திட்டம் சாத்தியமற்றதாக அமைகிறது.

98—

கால்வாய்

வினா எண் 52692—திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வேப்பனஹள்ளி தொகுதி, சூளகிரி ஒன்றியம், கெலவரப்பள்ளி அணையிலிருந்து வரும் இடதுபுற கால்வாயிலிருந்து முத்தாலி வெங்கடகிரி கோட்டை, அத்திமுகம் செட்டிப்பள்ளி ஏரி கடத்தூர் ஏரிகளுக்கு கால்வாய் அமைத்திட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

வேப்பனஹள்ளி தொகுதி, சூளகிரி ஒன்றியம், கெலவரப்பள்ளி அணையிலிருந்து வரும் இடதுபுற கால்வாயிலிருந்து முத்தாலி வெங்கடகிரி கோட்டை, அத்திமுகம் செட்டிப்பள்ளி ஏரி கடத்தூர் ஏரிகளுக்கு கால்வாய் அமைக்கும் திட்டம் குறித்து தள ஆய்வு செய்ததில் கீழ்க்காணும் விவரங்கள் அறியப்படுகின்றன:-

- கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் வட்டம், தென்பெண்ணையாறு ஆற்றின் குறுக்கே கெலவரப்பள்ளி அணை கட்டப்பட்டுள்ளது.

- அணையின் இடதுபுற கால்வாயின் மட்ட அளவு, முத்தாலி பூதிநத்தம் ஆகிய இடங்களின் அருகே +821.000 மீ. ஆகும்.

- முத்தாலி வெங்கடகிரி கோட்டை ஏரியின் மட்ட அளவு +830.000 மீ. ஆகும். எனவே, கெலவரப்பள்ளி அணையின் இடதுபுற கால்வாயின் மட்ட அளவைவிட 9.00 மீ. உயரமாக அமையப் பெற்றுள்ளது.

- அத்திமுகம் செட்டிப்பள்ளி ஏரியின் மட்ட அளவு சுமார் +753.000 மீ. மற்றும் கடத்தூர் ஏரியின் மட்ட அளவு சுமார் +772.000 மீ. ஆகும். மேற்குறிப்பிட்ட பகுதிகளின் அருகே உள்ள குண்டுகுறுக்கியில் கெலவரப்பள்ளி அணையின் இடது புற கால்வாயின் மட்ட அளவு சுமார் +738.405 மீட்டர் ஆகும்.

மேற்காணும் அத்திமுகம் செட்டிப்பள்ளி ஏரி மற்றும் கடத்தூர் ஏரிகள் கெலவரப்பள்ளி அணையின் இடதுபுற கால்வாயின் மட்ட அளவை விட மேடான பகுதியில் அமையப்பெற்றுள்ளது. இதனால் மேற்குறிப்பிட்டுள்ள ஏரிகளுக்கு புவியியல்ரீதியாக நீர் வழங்க சாத்தியமில்லை.

99—

படகுக் குழாம்

வினா எண் 52809—திரு. ச. அரவிந்த் ரமேஷ்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பக்கிங்காம் கால்வாயை தூர்வாரி படகுக் குழாம் அமைத்து மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பக்கிங்காம் கால்வாய் ஆண்டுதோறும் பருவகால முன்னெச்சரிக்கை பணிகள்மூலம்

2023 அக்டோபர் 11]
தூர்வாரப்பட்டு வருகிறது. பக்கிங்காம் கால்வாயில் படகுக் குழாம் அமைக்க சுற்றுலாத் துறைக்கு பரிந்துரை செய்யப்படும்.

100—

புதிய அணை

வினா எண் 52889—திரு. S. சந்திரன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு வட்டம், கொல்லாலகுப்பம் ஊராட்சியில் ஆற்றின் குறுக்கே புதிய அணை கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு வட்டம், கொல்லாலகுப்பம் ஊராட்சியில் மலை அடிவாரத்தில் புதிய அணை கட்டுவது தொடர்பாக 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' என்ற திட்டத்தின்கீழ் மேற்கொள்ள ஆய்வு செய்யப்பட்டுள்ளது. சாத்தியக்கூறுகள் அடிப்படையிலும் முன்னுரிமை அடிப்படையிலும் மேலும் நிதி நிலைமைக்கேற்பவும் மேற்காண் பணி மேற்கொள்ளப்படும்.

பட்டியல்-24

1—

கரையை வலுப்படுத்துதல்

வினா எண் 52952—திரு. ஐ.பி. செந்தில்குமார்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[*2023 அக்டோபர் 11*

பழனி தொகுதி, பழனி வட்டம், ஆண்டிப்பட்டி ஊராட்சி, பஞ்சதாங்கி குளத்தின் கரையை வலுப்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், ஆண்டிப்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள பஞ்சதாங்கி குளத்தின் கரைகள் 2019-2020 ஆம் ஆண்டு குடிமராமத்து திட்டத்தின்மூலம் ரூ.39.80 இலட்சம் மதிப்பீட்டுத் தொகையில் பலப்படுத்தி முடிக்கப்பட்டுள்ளது.

2—

தடுப்பணை

வினா எண் 54645—திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஈரோடு மாவட்டம், குண்டேரிப்பள்ளம் அணையின் உயரத்தை அதிகப்படுத்தி மேலும் ஒரு தடுப்பணை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், குண்டேரிப்பள்ளம் அணையின் உயரத்தை அதிகப்படுத்துவது தொடர்பாக தள ஆய்வு செய்தபோது அவ்வணையின் இடது பக்கத்தில் உள்ள சுமார் 30 ஏக்கர் நிலம் பட்டா நிலமாக உள்ளதாலும், அணையின் உயரத்தை அதிகரிக்கும்போது வனப் பகுதிகளுக்குள் தண்ணீர் செல்லும் நிலை இருப்பதாலும், வனவிலங்குகள் பாதிப்புக்குள்ளாகும் நிலை உள்ளதாலும், குண்டேரிப்பள்ளம் அணையின் உயரத்தை அதிகப்படுத்தி மேலும் ஒரு தடுப்பணை அமைக்க சாத்தியக்கூறு இல்லாத நிலை உள்ளது.

2023 அக்டோபர் 11]

3—

அணைக்கட்டு

வினா எண் 54647—திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஈரோடு மாவட்டம், கணக்கம்பாளையம், வேதபாறை அணைக்கட்டு பணிகளை துவங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், கணக்கம்பாளையம், வேதபாறை அணைக்கட்டு பணிகளை நிறைவேற்ற வன நிலங்களை கையகப்படுத்த வேண்டியிருந்ததால் மாண்பமை உச்ச நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட மத்திய அதிகாரக் குழு 4-9-2019 அன்று கணக்கம்பாளையம் ஏரித் திட்டத்தை பார்வையிட்டு வன நிலமானது புலிகள் சரணாலயமாக வனத் துறையினரால் அறிவிக்கப்பட்டதாலும், நீர்த்தேக்கப் பகுதியில் 1518 மரங்கள் வெட்ட வேண்டியிருப்பதாலும் இத்திட்டத்தைச் செயல்படுத்துவதினால் வன நிலங்களின் இழப்பு விகிதாச்சாரத்தை ஒப்பிடும்பொழுது பாசன வசதி பெறும் நிலங்களின் அளவு குறைவாக உள்ளது என அறிக்கையினை உச்ச நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளது. மேலும், இத்திட்டத்தைச் செயல்படுத்த அதிகப்படியான மரங்கள் வெட்ட வேண்டியுள்ளதாலும் இம்மரங்களை வெட்ட மத்திய அதிகாரக் குழு மறுப்பு தெரிவித்ததாலும் இத்திட்டம் கைவிடப்பட்டது.

4—

கல்லணை கால்வாய்

வினா எண் 54717—திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, கல்லணை கால்வாயிலிருந்து பிரிந்து வரும் G.A.3 வாய்க்காலின் இரண்டு கரைகளையும் அகலப்படுத்தி உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவையாறு தொகுதி, கல்லணை கால்வாயிலிருந்து பிரிந்து வரும் G.A.3 வாய்க்காலின் இரண்டு கரைகளையும் அகலப்படுத்தி உயர்த்துதல் மற்றும் மறுகட்டுமானப் பணிகள், நடப்பு நிதியாண்டில் பராமரிப்பு நிதியின்கீழ், ரூ.7.41 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது.

5—

நீர்வழிப் புறம்போக்கு நிலம்

வினா எண் 54730—திரு. அ. பண்ணாரி: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரியப்பம்பாளையம் பேரூராட்சி, ஆதி திராவிடர் காலனி அருகே உள்ள பயன்பாடற்ற பொதுப் பணித் துறை காலி இடத்தை மக்கள் பயன்பாட்டிற்கு அனுமதித்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நீர்வழிப் புறம்போக்கு நிலங்களை ஒப்படை உரிமை மாற்றம் செய்வது மற்றும் குத்தகைக்கு விடுவது போன்றவற்றை தவிர்க்க வேண்டும் என வருவாய்த் துறையால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே, அரியப்பம்பாளையம் பேரூராட்சி, ஆதி திராவிடர் காலனி அருகே உள்ள நீர்வளத் துறைக்குச் சொந்தமான காலி இடத்தை மக்கள் பயன்பாட்டிற்கு அனுமதிக்க இயலாது.

2023 அக்டோபர் 11]

6—

கால்வாய்

வினா எண் 54924—திரு. ஆ.மு. முனிரத்தினம்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சோளிங்கர் தொகுதி, கரிக்கல் கிராமத்தில் உள்ள பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான ஏரியில் புலிவலம் சூரை நீர்வரத்துக் கால்வாயினை இணைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ராணிப்பேட்டை வட்டம், சோளிங்கர் தொகுதி, புலிவலம், சூரை நீர்வரத்துக் கால்வாயினை கரிக்கல் கிராமத்தில் உள்ள நீர்வளத் துறைக்குச் சொந்தமான கரிக்கல் ஏரிக்குச் செல்லும் வகையில் இணைப்பு வழங்க இத்திட்ட தளத்தினை ஆய்வு மேற்கொண்டதில் சூரை ஏரியின் முழு கொள்ளளவு மட்டம் FTL – + 141.12 மீ. மற்றும் புலிவலம் ஏரியின் முழு கொள்ளளவு மட்டம் FTL – + 142.49 மீ. ஆக உள்ளது. ஆனால், நீர்வரத்துக் கோரும் கரிக்கல் ஏரியின் முழுக் கொள்ளளவு மட்டம் FTL – + 143.00 மீ. ஆக மேடான பகுதியில் உள்ளது.

எனவே, கரிக்கல் ஏரிக்கு, புலிவலம், சூரை நீர்வரத்துக் கால்வாயிலிருந்து தண்ணீர் கொண்டுவர புவியியல் ரீதியாக சாத்தியக்கூறுகள் இல்லை.

7—

குடிநீர்

வினா எண் 54938—திரு. கோ. செந்தில் குமார்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வாணியம்பாடி தொகுதி, கோவிந்தாபுரம் ஏரியைத் தூர்வாரி கரைகளைப் பலப்படுத்தி, ஏரியின் தண்ணீரை குடிநீராகப் பயன்படுத்த வழிவகை செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம், வாணியம்பாடி தொகுதிக்குட்பட்ட திருப்பத்தூர் கோவிந்தாபுரம் ஏரியைத் தூர்வாரி கரைகளைப் பலப்படுத்த நிதிநிலைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், ஏரியின் தண்ணீரைப் பாசனப் பயன்பாட்டிற்கு மட்டும் பயன்படுத்த பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

8—

படுகை அணை

வினா எண் 54940—திரு. கோ. செந்தில் குமார்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாணியம்பாடி தொகுதி, மண்ணாறும், பாலாறும் சேரும் இடமான திம்மாம்பேட்டை ஆவாரங்குப்பம் இடையே படுகை அணை (Dyke) கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வாணியம்பாடி தொகுதி, மண்ணாறும், பாலாறும் சேரும் இடமான திம்மாம்பேட்டை ஆவாரங்குப்பம் இடையே படுகை அணை (Dyke) அமைக்க தள ஆய்வு செய்ததில், படுகை அணை அமைக்கக் கோரும் இடத்தில், பாலாற்றில் மத்திய நீர் ஆணையத்தின் (Central Water Commission) நீர் அளவிடும் நிலையம் (Palar river gauging station) அமைந்துள்ளது.

மேலும், மத்திய நீர் ஆணையத்தின் நீர் அளவிடும் நிலையத்தின் மேற்புறமும், கீழ்ப்புறமும் குறிப்பிட்ட தூரத்திற்கு எந்த ஒரு கட்டுமானங்களும் அமைக்கக்கூடாது. எனவே, இவ்விடத்தில் படுகை அணை அமைக்க சாத்தியமில்லை.

2023 அக்டோபர் 11]

9—

ஆறுகளை இணைத்தல்

வினா எண் 54941—திரு. கோ. செந்தில் குமார்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வாணியம்பாடி தொகுதி, தும்பேரி ஊராட்சி, புளியமரத்துபெண்டா மாமரத்து கானாற்றை அண்ணாநகர் கக்கன கோண காணாற்றுடன் இணைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வாணியம்பாடி தொகுதி, தும்பேரி ஊராட்சி, புளியமரத்துபெண்டா மாமரத்து கானாற்றை அண்ணாநகர் கக்கன கோண காணாற்றுடன் இணைக்க தள ஆய்வு செய்ததில் தொழில்நுட்பரீதியாகவும், பொருளாதாரரீதியாகவும், இத்திட்டம் சாத்தியமற்றதாகத் தெரிய வருகிறது.

10—

தூர்வாருதல்

வினா எண் 54943—திரு. கோ. செந்தில் குமார்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வாணியம்பாடி தொகுதி, கோவிந்தபுரம் ஏரியை தூர்வாரி கரைகளைப் பலப்படுத்தி ஏரியின் தண்ணீரை குடிநீராகப் பயன்படுத்த வழிவகை செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம், வாணியம்பாடி தொகுதிக்குட்பட்ட கோவிந்தபுரம் ஏரியைத் தூர்வாரி கரைகளைப் பலப்படுத்த சாத்தியக்கூறுகள் இருப்பின் நிதிநிலைமைக்கேற்ப அரசால் பரிசீலிக்கப்படும்.

11—

தடுப்பணை

வினா எண் 57995—திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலம் தொகுதி, மயிலம் ஒன்றியம், ரெட்டணை கிராமத்தில் தடுப்பணை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலம் தொகுதி, மயிலம் ஒன்றியம், ரெட்டணை கிராமத்தில் தொண்டியாற்றின் குறுக்கே ரெட்டணை அணைக்கட்டு அமைந்துள்ளது. அதன்மூலம் 3 ஏரிகள் (அவ்வையார் குப்பம், சின்னநெற்குணம் மற்றும் விளங்கம்பாடி) பாசன வசதி பெறுகின்றன. மேலும், ரெட்டணை கிராம நீர்மட்டம் நல்ல நிலையில் உள்ளது. எனவே, ரெட்டணை கிராமத்தில் மேலும் ஒரு தடுப்பணை அமைப்பதற்கான அவசியம் எழவில்லை.

12—

தடுப்புச் சுவர்

வினா எண் 58303—திரு. ஆ. அருண்மொழிதேவன்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், கீரப்பாளையத்தில் வெள்ளாற்றின் நீர் உட்புகுவதைத் தடுக்க தடுப்புச் சுவர் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், கீரப்பாளையத்தில் வெள்ளாற்றின் நீர் உட்புகுவதைத் தடுக்க தடுப்புச் சுவர் அமைப்பதற்கு கீரப்பாளையம் கிராமத்தின் மேற்புறம்

2023 அக்டோபர் 11]

வெள்ளாற்றின் வலது கரையில் சுமார் 500 மீட்டர் நீளத்திற்கு கான்கிரீட் தடுப்புச் சுவர் அமைக்க மதிப்பீட்டுத் தொகை ரூ.25.00 கோடியும் மற்றும் கீரப்பாளையம் கிராமத்திற்கு கீழ்புறம் வெள்ளாற்றின் வலது கரையில் சுமார் 700 மீட்டர் நீளத்திற்கு கான்கிரீட் தடுப்புச் சுவர் அமைக்க மதிப்பீட்டுத் தொகை ரூ.35.00 கோடியும் செலவாகும் என தோராயமாக மதிப்பிடப்பட்டுள்ளது. நிதி நிலைமைக்கேற்றவாறு, முன்னுரிமை அடிப்படையில் மேற்கண்ட இடத்தில் தடுப்புச் சுவர் அமைத்துத் தர நடவடிக்கை எடுக்கப்படும்.

13—

தடுப்பணை கட்டுதல்

வினா எண் 58306—திரு. ஆ. அருண்மொழிதேவன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கடலூர் மாவட்டம், ஸ்ரீமுஷ்ணம் வட்டம், C.கீரனூரில் வெள்ளாற்றின் குறுக்கே தடுப்பணை கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், ஸ்ரீமுஷ்ணம் வட்டம், C.கீரனூர் கிராமத்தில் தடுப்பணை அமைக்க முதற்கட்ட ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. C.கீரனூர் கிராமத்தின் கீழ்புறத்தில் 3.50 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள கள்ளிப்பாடி கிராமத்தின் அருகே ஒரு தடுப்பணை கட்டப்பட்டு செயல்பாட்டில் உள்ளது. மேலும், கார்மாங்குடி மற்றும் கள்ளிப்பாடி கிராமங்களின் இடையே அமையப் பெற்றுள்ள C.கீரனூர் கிராமம் அருகே வெள்ளாறானது வளைந்து நெளிந்து (Meandering) செல்வதால் இவ்விடத்தில் வெள்ளாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

14—

அணை கட்டுதல்

வினா எண் 58686—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[*2023 அக்டோபர் 11*

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், மிட்டிதின்னஅள்ளி ஊராட்சி, வத்தல்மலை அடிவாரத்தில் பெரிய டேம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், மிட்டிதின்னஅள்ளி ஊராட்சி, வத்தல்மலை அடிவாரத்தில் உள்ள ஓடையில் அணை அமைக்கக்கோரும் தளம், தருமபுரி சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடன் தள ஆய்வு செய்யப்பட்டது.

- *அணை கட்ட கோரும் திட்ட தளம் மலைப் பாங்கான பகுதியிலும் நல்லம்பள்ளி பிர்க்காவிலும் அமைந்து நிலத்தடி நீர் பயன்பாட்டுப்படி அபாயகரமான பகுதியிலும் (*Semi Critical Zone*) மற்றும் மிக சாதகமான நீர்செறிவூட்டு மண்டலத்திலும் (*Moderately Favourable Zone for recharge*) அமையப்பெற்றுள்ளது. மேலும், இப்பகுதி நூலஅள்ளி மற்றும் ரெட்டிஅள்ளி காப்பு வனப் பகுதியில் அமைந்துள்ளது.*

- *மேலும், அணை கட்டக் கோரும் தளத்திலேயே வனத் துறைமூலம் தடுப்பணை ஒன்றும் கட்டப்பட்டுள்ளது. இந்த தடுப்பணை தற்சமயம் சேதமடைந்துள்ளது.*

- *தள ஆய்வின்போது, சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் காப்பு வனப் பகுதியில் ஏற்கெனவே வனத் துறைமூலம் கட்டப்பட்டுள்ள தடுப்பணையைச் சீரமைத்தும், தூர்வாரியும் உயர்த்தியும் கட்டிக் கொடுக்குமாறு கோரினார். தற்போது தடுப்பணையின் நீர் வழிந்தோடும் கலிங்கலின் மேற்புற பகுதி சேதமடைந்தும் மற்றும் கலிங்கல் வரை மண் படிந்தும் உள்ளது.*

- *மேலும், இத்தடுப்பணையின் கீழ்புறத்தில் சுமார் 350 மீட்டர் மற்றும் 775 மீட்டர் தூரத்தில் இரண்டு தடுப்பணைகள் இதே ஓடையில் கட்டப்பட்டு பயன்பாட்டிலும் உள்ளன.*

- *சட்டமன்ற உறுப்பினர் சீரமைக்கக் கோரும் தடுப்பணையானது வனத் துறையின்மூலம்*

2023 அக்டோபர் 11]

கட்டப்பட்டதாலும், நூலஅள்ளி, ரெட்டிஅள்ளி காப்பு வனப் பகுதியில் அமைந்துள்ளதாலும், இத்தடுப்பணையை வனத் துறையின் மூலமாகவே சீரமைக்க இயலும்.

- *மேலும், இவ்வோடையானது குட்டூர் ஏரிக்குச சென்று, இதன் உபரிநீர் அதியமான் கோட்டை ஏரிக்குச் சென்று பின்பு செம்மாண்டகுப்பம் ஆறாக தருமபுரி நகரத்தின் வழியாகச் சென்று கம்பைநல்லூர் அருகே தென்பெண்ணையாற்றில் கலக்கிறது.*
- *புதிய அணை கட்டப்பட்டால் செம்மாண்டகுப்பம் ஆற்றிற்கு செல்லும் நீர்வரத்து பாதிக்கப்படுவதோடு பாதுகாக்கப்பட்ட வனநில ஆர்ஜிதம் தேவைப்படுகிறது.*

மேலும், செம்மாண்டகுப்பம் ஆற்றின்மூலம் ஏற்கெனவே பாசனம் பெறும் பகுதிகளின் அனுபவ பாத்திய உரிமை பாதிக்கப்படும் என்பதாலும் இவ்விடத்தில் அணை கட்ட சாத்தியமில்லை.

15—

மதகு அமைத்தல்

வினா எண் 58689—திரு. பூண்டி கே. கலைவாணன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், மேலராதாநல்லூர் ஊராட்சி, வெள்ளையாற்றில் வேளுக்குடி வாய்க்கால் தலைப்பில் மதகு புதியதாக அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆசிய வளர்ச்சி வங்கி நிதி திட்டம் பகுதி 1-ல் வெள்ளையாறு புனரமைக்கும் பணிகள் நடைபெற்றபோது வேளுக்குடி வாய்க்கால் மதகும் புதிதாகக் கட்டப்பட்டுள்ளது.

16—

உபரிநீர்த் திட்டம்

வினா எண் 58704—திரு. S. சதாசிவம்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர் தொகுதிக்குட்பட்ட உபரிநீர்த் திட்டத்தில் செக்கான் ஏரியைச் சேர்க்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

மேட்டூர் அணையின் வெள்ள உபரிநீரை சேலம் மாவட்டத்திலுள்ள வறண்ட ஏரிகளுக்கு நீரேற்றுமூலம் நீர் வழங்கும் திட்டம் தற்போது முடிவடையும் நிலையிலுள்ளது. இத்திட்டத்திற்கு திருத்திய நிர்வாக ஒப்புதலுக்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அம்மதிப்பீட்டில் செக்கான் ஏரி சேர்க்கப்பட்டுள்ளது.

17—

தடுப்பணை கட்டுதல்

வினா எண் 66218—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஒன்றியம், சாமிசெட்டிப்பட்டி ஊராட்சியில் உள்ள கன்னிமாறு மடுவு என்ற இடத்தில் தடுப்பணை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஒன்றியம், சாமிசெட்டிபட்டி ஊராட்சியில் உள்ள பங்குநத்தம் கொட்டாய் கிராமத்தில் கன்னிமாறு மடுவு பகுதியில் தடுப்பணை அமைக்கக்கோரும் திட்டதளத்தை ஆய்வு செய்ததில் கீழ்க்காணும் விவரங்கள் அறியப்படுகிறது:

2023 அக்டோபர் 11]

- *தடுப்பணை கட்டக்கோரும் திட்டதளம் பாளையம் பிர்க்காவில் அமைந்து அதி மிகை நுகர்வு பகுதியிலும் (*Over Exploited Zone*) மற்றும் நிலத்தடி நீர் செறிவூட்டல்படி மிக சாதகமான நீர்செறிவூட்டு மண்டலத்திலும் (*Moderately Favourable Zone for Recharage*) அமையப்பெறுகிறது.*

- *தடுப்பணை அமைக்கக் கோரும் தளத்திற்குக் கீழ்புறத்தில் சுமார் 100 மீ. தூரத்தில் ஒரு தடுப்பணை கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. மேலும், தொடர்ச்சியாக ஆங்காங்கே தடுப்பணைகள் கட்டப்பட்டும் பயன்பாட்டிலும் உள்ளன.*

- *மேலும், தடுப்பணை கட்டக்கோரும் தளத்தின் மேற்புறத்தில் சுமார் 600 மீ. தூரத்திற்குள் இரு தடுப்பணைகள் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.*

எனவே, மேற்குறிப்பிட்ட தடுப்பணைகளின் நீர் செறிவூட்டும் பகுதிகளிலேயே புதிய தடுப்பணை அமைக்கக் கோரும் திட்டதளம் அமைவதால் இந்த புதிய தடுப்பணை அமைக்க தொழில்நுட்பரீதியிலும் மற்றும் பொருளாதாரரீதியிலும் சாத்தியமில்லை.

18—

தடுப்பணை கட்டுதல்

வினா எண் 66372—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, வட்டுவனஅள்ளி ஊராட்சி, துமுக்கல் பகுதியில் செல்லும் ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, வட்டுவனஅள்ளி ஊராட்சி, துமுக்கல் பகுதியின் அருகே செல்லும்

[*2023 அக்டோபர் 11*

துமுக்கல் ஓடையின் குறுக்கே தடுப்பணை கட்டக்கோரும் தளம் சட்டமன்ற உறுப்பினர் பெண்ணாகரம் அவர்களின் பிரதிநிதியுடன் தள ஆய்வு செய்யப்பட்டது.

*தடுப்பணை கட்டக்கோரும் திட்டத் தளம், பாப்பாரப்பட்டி பிர்க்காவில் அமைந்து அதிமிகை நுகர்வு பகுதியிலும் (*Over Exploited Zone*) மற்றும் மிகவும் குறைந்த சாதகமான நீர் செறிவூட்டு மண்டலத்திலும் (*Poor Zone for recharge*) அமையப்பெறுகிறது.*

மேலும், தடுப்பணை கட்டக்கோரும் தளத்தின் இடது புறம் பெண்ணாகரம் பாதுகாக்கப்பட்ட வன நிலமாகவும் மற்றும் வலதுபுற பகுதிகள் பெரும்பாலும் மலைப்பாங்கான பகுதிகளாகவும் உள்ளன. தடுப்பணை கட்டக்கோரும் தளத்தின் மேல்புறத்தில் சுமார் 200 மீட்டர் தூரத்தில் இவ்வோடையானது சுமார் 9 மீட்டர் உயரத்திலிருந்து நீர்வீழ்ச்சியாக வீழ்கிறது.

மேலும், துமுக்கல் பகுதியின் அருகே செல்லும் ஆற்றின் குறுக்கே புதிதாக தடுப்பணை அமைக்க கோரிய தளத்தின் கீழ்புறத்தில் சுமார் 650 மீட்டர் மற்றும் 900 மீட்டர் தொலைவில் ஏற்கெனவே வட்டுவனஅள்ளி ஊராட்சியால் தடுப்பணைகள் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

ஆகவே, மேற்கூறிய காரணங்களின் அடிப்படையிலும், ஏற்கெனவே உள்ள தடுப்பணைகளின் செறிவூட்டும் மண்டலத்திலேயே இத்திட்டத்தளம் அமைவதால், இத்திட்டத்தளத்தில் தடுப்பணை அமைக்க தொழில்நுட்பரீதியாக சாத்தியமில்லை.

19—

ஆழ்துளைக் கிணறு

வினா எண் 1541—திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பண்ருட்டி தொகுதி, அங்குசெட்டிப்பாளையம் ஊராட்சியில் குடிநீர் ஆழ்துளைக் கிணறு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 அக்டோபர் 11]

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதி, அங்குசெட்டிப்பாளையம் ஊராட்சியில் குடிநீர் ஆழ்துளைக் கிணறு அமைத்திட கோரப்பட்டுள்ளது. மேற்படி அங்குசெட்டிப்பாளையம் கிராமத்தில் *963* குடும்பங்களில் சுமார் *2,345* மக்கள் வசித்து வருகின்றனர். இங்கு வசிக்கும் மக்களின் தேவைக்காக ஏற்கெனவே ஐந்து ஆழ்குழாய்கள் பயன்பாட்டில் உள்ளன. இவற்றின்மூலம் பொதுமக்களுக்கு தங்குதடையின்றி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

தங்குதடையின்றி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருவதால் புதிய ஆழ்துளைக் கிணறு அமைத்திட அவசியம் எழவில்லை.

20—

நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 2272—திரு. க. அன்பழகன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஒன்றியம், கீழப்பழையார் குடியானத் தெருவில் சிறிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஒன்றியம், கீழப்பழையார் ஊராட்சியில் சுமார் *1,780* பேர் வசித்து வருகின்றனர். இவ்வூராட்சியில் குடியான தெரு அருகில் உள்ள அய்யனார் கோவில் தெருவில் கிராம சேவை மையம் அருகே உள்ள *60,000* லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து தங்குதடையின்றி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனவே, இங்கு புதிய சிறிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.

21—

வேலைவாய்ப்பு

வினா எண் 2810—திரு. துரை. சந்திரசேகர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 100 நாட்கள் வேலைவாய்ப்புத் திட்டத்தினை 150 நாட்களாக விரிவுப்படுத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம்-2005 திருத்திய அட்டவணை-1 பத்தி 3(அ)-ன்படி ஒவ்வொரு நிதியாண்டிலும், 37 ஊரக மாவட்டங்களில் உள்ள பகுதிகளில் திறன்சாரா உடல் உழைப்பினை மேற்கொள்ள விருப்பமுள்ள வயது வந்தோர் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஓர் ஆண்டில் 100 நாட்களுக்கு குறையாத வேலைவாய்ப்பினை வழங்க உறுதி செய்கிறது.

இத்திட்டத்தின்கீழ் திறன்சாரா உடல் உழைப்பை மேற்கொள்ளும் தொழிலாளர்களுக்கான (unskilled labour) ஊதியச் செலவு 100 விழுக்காடு ஒன்றிய அரசால் வழங்கப்படுகிறது.

எனவே, தற்போது வழங்கப்பட்டுவரும் 100 நாட்களுக்கான வேலைவாய்ப்பினை 150 நாட்களாக உயர்த்தி வழங்க ஒன்றிய அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

22—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 8239—திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2023 அக்டோபர் 11]

(அ) ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, எடையார்பாக்கம் ஊராட்சியில் *60,000* லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, எடையார்பாக்கம் ஊராட்சியின் மொத்த மக்கள் தொகை *1,789*. குக்கிராமங்களின் எண்ணிக்கை *3*. மொத்தக் குடும்பங்களின் எண்ணிக்கை *342*. மொத்த தெருக்களின் எண்ணிக்கை *6*. எடையார்பாக்கம் ஊராட்சியில் ஏற்கெனவே *3* மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் (எடையார்பாக்கம் கிராமம், பெரிய காலனி மற்றும் மேட்டுக் காலனி முறையே-*30,000* லிட்டர் கொள்ளளவு) உள்ளன. இந்த நீர்த்தேக்கத் தொட்டிகள்மூலம் தற்போது (தனி நபர் ஒருவருக்கு *55* லிட்டர் என்ற கணக்கில்) ஊராட்சி மக்களுக்குப் போதுமான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, இப்பகுதியில் தற்போது மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்பட வேண்டிய தேவை எழவில்லை.

23—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 8295—திரு. எஸ். சுதர்சனம்: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாதவரம் தொகுதி, சோழவரம் ஒன்றியம், கும்மனூர் ஊராட்சி பெருமாள் கோயில் தெரு, அண்ணா நகர் தெரு, அம்பேத்கர் தெரு ஆகிய பகுதிகளில் *60,000* லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், மாதவரம் சட்டமன்ற தொகுதி, சோழவரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கும்மனூர் ஊராட்சியில் மொத்தம் 431 குடும்பங்கள் மற்றும் 2,041 மக்கள் வசித்து வருகின்றனர். இப்பகுதியில் ஏற்கெனவே 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஒன்றும், 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஒன்றும் உள்ளன. போதுமான அளவு பொதுமக்களுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருவதால் புதியதாக 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அவசியம் எழவில்லை.

24—

கட்டடம்

வினா எண் 8590—திரு. துரை. சந்திரசேகர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஒன்றியம், லைட்ஹவுஸ்குப்பம் ஊராட்சி, வைரங்குப்பம் கிராம தொடக்கப் பள்ளிக்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஒன்றியம், லைட்ஹவுஸ்குப்பம் ஊராட்சி, வைரங்குப்பம் கிராம தொடக்கப்பள்ளி கட்டடம் 2022-2023 ஆம் ஆண்டு குழந்தைநேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாடு (CFSIDS) திட்டத்தில் ரூ.28.00 இலட்சம் மதிப்பீட்டில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை உத்தரவு எண் 3425/2022/அ9, நாள் 27-12-2022 அன்று நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு

2023 அக்டோபர் 11]

மீஞ்சூர் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ.) அவர்களால் செயல்முறை உத்தரவு எண் 3498/2020/அ2, நாள் 13-1-2023-ல் வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணி துவங்கப்பட்டுள்ளது.

25—

கட்டடம் சீரமைத்தல்

வினா எண் 8596—திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியம், லைட்ஹவுஸ்குப்பம் ஊராட்சி, திருமலை நகர் தொடக்கப்பள்ளி கட்டடம் சீரமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியம், லைட்ஹவுஸ்குப்பம் ஊராட்சி, திருமலை நகர் தொடக்கப்பள்ளி கட்டடம் 2022-2023 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ் ரூ.19.95 இலட்சம் மதிப்பீட்டில் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை உத்தரவு எண் 236/2022/அ10, நாள் 11-5-2022-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, மீஞ்சூர் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலரின் (வ.ஊ.) செயல்முறை உத்தரவின்படி 8-7-2022 அன்று வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணி நிறைவு பெற்றுள்ளது.

26—

ஸ்மார்ட் போர்டு

வினா எண் 11266—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[*2023 அக்டோபர் 11*

(அ) தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், எர்ரபையனஅள்ளி ஊராட்சி, நெக்குந்தி கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் SMART BOARD வசதி ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், எர்ரபையனஅள்ளி ஊராட்சி, நெக்குந்தி கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் SMART BOARD வசதி ஏற்கெனவே உள்ளது.

27—

கூடுதல் வகுப்பறை

வினா எண் 14901—திரு. மு.பெ. கிரி: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி, மலமஞ்சனூர் தொடக்கப் பள்ளிக்கு தலைமை ஆசிரியர் அறை மற்றும் வகுப்பறை கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் தொகுதி, தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றியம், மலமஞ்சனூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் 89 மாணவர்கள் பயில்கின்றனர். இப்பள்ளியில் 4 வகுப்பறைகள் கொண்ட இரண்டு கட்டடங்கள் போதுமானதாக உள்ளன. எனவே, புதியதாக தலைமை ஆசிரியர் அறை மற்றும் கூடுதல் வகுப்பறை கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

2023 அக்டோபர் 11]

28—

கூடுதல் வகுப்பறை

வினா எண் 43534—திரு. K. மாரிமுத்து: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டி ஒன்றியம், கோமாளப்பேட்டை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கு ஒரு வகுப்பறை கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டாரம், பனையூர் ஊராட்சியின் கோமாளப்பேட்டை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் 2,289 சதுர அடியில் ஐந்து வகுப்பறைகள் கொண்ட இரண்டு பள்ளிக் கட்டடங்கள் உள்ளன. அரசு வழிகாட்டுதல்களின்படி ஒரு மாணவருக்கு தலா 10 சதுர அடி என்ற வீதத்தில் இப்பள்ளியில் தற்போது பயிலும் 108 மாணவ மற்றும் மாணவியர்களுக்கு மொத்தம் 1080 சதுர அடி வகுப்பறை இடவசதி உள்ளது. எனவே, அரசு வழிகாட்டுதல்களின்படி தற்போது இப்பள்ளியில் கூடுதல் வகுப்பறை கட்டுவதற்கு தேவை எழவில்லை.

29—

கூடுதல் வகுப்பறை

வினா எண் 43535—திரு. K. மாரிமுத்து: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டி ஒன்றியம், பழையங்குடி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கு ஒரு வகுப்பறை கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி மற்றும் வட்டாரம், பழையங்குடி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் பயிலும் மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 109 ஆகும். இப்பள்ளியில் 7 வகுப்பறைகள் கொண்ட பள்ளிக் கட்டடம் தற்போது செயல்பாட்டில் உள்ளது. தற்போது இப்பள்ளியில் புதிய பள்ளிக் கட்டடம் கட்டுவதற்கு போதிய இடவசதி இல்லை.

30—

கூடுதல் வகுப்பறை

வினா எண் 45377—திரு. வி.பி. நாகைமாலி: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கீழ்வேளூர் தொகுதி, வடகாலத்தூர் ஊராட்சியில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கு இரண்டு வகுப்பறைகள் கட்டித் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட வடகாலத்தூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் தற்சமயம் 105 மாணவ, மாணவிகள் பயின்று வருகின்றனர். இப்பள்ளி மூன்று பள்ளிக் கட்டடங்களுடன் இயங்கி வருகிறது. மேலும், இப்பள்ளிக் கட்டடங்கள் நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களின் செயல்முறை எண் 1896/2022/சி5, நாள் 1-7-2022-ன்கீழ் 2021-2022 ஆம் ஆண்டிற்கான பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் (SIDS) மூலம் ரூ.2,29,500 மதிப்பீட்டில் முழுவதுமாக பழுதுநீக்கம் செய்யப்பட்டு சீரமைக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி பள்ளிக்கு புதிய கட்டடம் கட்டுவதற்கு அவசியம் எழவில்லை என தலைமையாசிரியர் மற்றும் வட்டார கல்வி அலுவலர் ஆகியோரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2023 அக்டோபர் 11]

31—

பள்ளிக் கட்டடம்

வினா எண் 51631—திரு. வி.ஜி. இராஜேந்திரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவள்ளூர் தொகுதி, கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், நரசிங்கபுரம் ஊராட்சியில் உள்ள தொடக்கப் பள்ளிக்கு புதியதாகக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் தொகுதி, கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், நரசிங்கபுரம் ஊராட்சியில் ஆதி திராவிடர் நல தொடக்கப் பள்ளி உள்ளது. இப்பள்ளியில் 24 மாணவ, மாணவியர்கள் பயின்று வருகின்றனர். இப்பள்ளிக்கு 2004 ஆம் ஆண்டு அனைவருக்கும் கல்வி இயக்கம் (SSA) திட்டத்தின்கீழ் இரண்டு வகுப்பறைகள் கொண்ட கட்டடம் கட்டப்பட்டு நல்ல நிலையில் பயன்பாட்டில் உள்ளது. எனவே, இப்பள்ளிக்கு புதிய கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

32—

தொடக்கப் பள்ளி

வினா எண் 54618—திரு. எம்.சி. சண்முகையா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கருங்குளம் ஊராட்சி ஒன்றியம், ஒட்டப்பிடாரம் தொகுதிக்குட்பட்ட தெய்வச்செயல்புரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியை புதிதாகக் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், கருங்குளம் ஒன்றியம், தெய்வச்செயல்புரம் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் 24 மாணவர்களும், 34 மாணவிகளும் பயின்று வருகின்றனர். இப்பள்ளியில் ஏற்கெனவே இரண்டு கான்கிரீட் கட்டடங்கள் உள்ளன. இக்கட்டடங்கள் நல்ல நிலையில் உள்ளன. எனவே, உடனடியாக புதிய பள்ளி கட்டடம் கட்ட வேண்டிய தேவை எழவில்லை.

33—

பள்ளிக் கட்டடம்

வினா எண் 61371—திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, சந்தவேலூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு புதிதாக கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சந்தவேலூர் ஊராட்சியில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி கூடுதல் கட்டடம் (2 வகுப்பறை) கட்டும் பணிக்கு, மாவட்ட ஆட்சித் தலைவர்/பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, காஞ்சிபுரம் அவர்களின் செயல்முறை எண் 4022/2021/அ3, நாள் 18-7-2022-ன்படி, 2021-2022 ஆம் ஆண்டிற்கான சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின்கீழ் ரூ.19.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

மேலும், மாவட்ட ஆட்சித் தலைவர்/பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, காஞ்சிபுரம் அவர்களின் செயல்முறை எண் 1807/2022/அ10, நாள் 26-12-2022-ன்படி பள்ளி கட்டடங்கள் திட்டத்தின்கீழ், 2022-2023 ஆம் ஆண்டில் ரூ.32.66

2023 அக்டோபர் 11]

இலட்சம் மதிப்பீட்டில் சந்தவேலூர் ஊராட்சி, ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி கூடுதல் கட்டடம் (2 வகுப்பறைகள்) கட்டும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு தற்போது பணி நடைபெற்று வருகிறது.

34—

நூலகம்

வினா எண் 66514—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஊராட்சி ஒன்றியம், குமரங்குடி ஊராட்சியில் பழுதடைந்துள்ள நூலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஊராட்சி ஒன்றியம், குமரங்குடி ஊராட்சியில் சுமார் 1,554 பேர் வசித்து வருகின்றனர். இங்கு ஆறு குக்கிராமங்கள் உள்ளன. குமரங்குடி ஊராட்சியில் உள்ள பழுதடைந்த நூலகக் கட்டடம் 2021-2022 ஆம் ஆண்டிற்கான அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் (நூலகங்கள் புனரமைப்பு) பழுது நீக்கம் செய்ய ரூ.1,89,000/ – மதிப்பீட்டில் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் கடித எண் 3066/2021/அ6, நாள் 19-1-2022-ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் நூலகம் பழுதுநீக்கம் செய்யும் பணி துவங்கி முடிவடையும் தருவாயில் உள்ளது. மேலும், விரைவில் பயன்பாட்டிற்கு வரவுள்ளது.

35—

பொறியியல் கல்லூரி

வினா எண் 3797—திரு. தி. ராமச்சந்திரன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[*2023 அக்டோபர் 11*

(அ) அறந்தாங்கி தொகுதி, அறந்தாங்கியில் பொறியியல் கல்லூரி துவக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அறந்தாங்கி தொகுதி அமைந்துள்ள புதுக்கோட்டை மாவட்டத்தில், 10 சுயநிதி பொறியியல் கல்லூரிகளும், 2 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளும், 21 சுயநிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளும், 5 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், ஓர் அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரியும், 37 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணாக்கர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், அறந்தாங்கி தொகுதி, அறந்தாங்கியில் புதிதாக ஒரு பொறியியல் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

36—

தொழில்நுட்பக் கல்லூரி

வினா எண் 4099—திரு. ஈ. ராஜா: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரன்கோவில் தொகுதியில் புதியதாக பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சங்கரன்கோவில் தொகுதியில் அமைந்துள்ள தென்காசி மாவட்டத்தில் 11 சுயநிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணாக்கர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால் தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில் தொகுதியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

2023 அக்டோபர் 11]

37—

தொழில்நுட்பக் கல்லூரி

வினா எண் 5337—திரு. அ.செ. வில்வநாதன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆம்பூர் தொகுதியில் மகளிர் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம்பூர் தொகுதியில் அமைந்துள்ள திருப்பத்தூர் மாவட்டத்தில், ஓர் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் 10 சுயநிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. மேலும், திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் இருபாலரும் சேர்ந்து பயிலும் வசதி கொண்ட கல்லூரிகளாகும். இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணவியர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூர் தொகுதியில் மகளிர் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

38—

தொழில்நுட்பக் கல்லூரி

வினா எண் 6772—திரு. கா. அண்ணாதுரை: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பட்டுக்கோட்டை தொகுதியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பட்டுக்கோட்டை தொகுதி அமைந்திருக்கும் தஞ்சாவூர் மாவட்டத்தில் ஓர் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி, 2 அரசு உதவி பெறும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் 15 சுயநிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணாக்கர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை தொகுதியில், புதிய பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

39—

கலைக் கல்லூரி

வினா எண் 7383—திரு. K.N. விஜயகுமார்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் வடக்கு தொகுதி, பெருமாநல்லூர் பகுதியில் புதிய கலைக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் வடக்கு தொகுதி அமைந்துள்ள திருப்பூர் மாவட்டத்தில் தற்பொழுது ஆறு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், ஓர் அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரியும் மற்றும் 14 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இதைத் தவிர ஆறு சுயநிதி பொறியியல் கல்லூரிகளும் மற்றும் 10 சுயநிதி தொழில்நுட்பக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணவ/மாணவியர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால் திருப்பூர் வடக்கு தொகுதிக்கு உட்பட்ட பெருமாநல்லூர் பகுதியில் புதியதாக ஒரு கலைக் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

2023 அக்டோபர் 11]

40—

கலைக் கல்லூரி

வினா எண் 7580—திரு. S. பழனி நாடார்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி மாவட்டத்தில் புதிய கலைக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி தொகுதி அமைந்துள்ள தென்காசி மாவட்டத்தில் தற்பொழுது மூன்று அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் மற்றும் 10 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இதைத்தவிர ஐந்து சுயநிதி பொறியியல் கல்லூரிகளும் மற்றும் 11 சுயநிதி தொழில்நுட்பக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணவ/ மாணவியர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், தென்காசி மாவட்டத்தில் புதியதாக ஒரு கலைக் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

41—

கலைக் கல்லூரி

வினா எண் 9658—திரு. ஆ. வெங்கடேசன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டியில் இருபாலர் கலைக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[*2023 அக்டோபர் 11*

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டி அமைந்துள்ள மதுரை மாவட்டத்தில் தற்பொழுது மூன்று அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 17 அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் மற்றும் 21 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இதைத் தவிர ஓர் அரசு உதவி பெறும் பொறியியல் கல்லூரியும், ஒரு பல்கலைக்கழக பொறியியல் கல்லூரியும், ஒன்பது சுயநிதி பொறியியல் கல்லூரிகளும், ஆறு அரசு தொழில்நுட்பக் கல்லூரிகளும், ஓர் அரசு உதவி பெறும் தொழில்நுட்பக் கல்லூரியும் மற்றும் 10 சுயநிதி தொழில்நுட்பக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணவ/மாணவியர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டியில் புதியதாக ஒரு கலைக் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

42—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி

வினா எண் 9665—திரு. க. கணபதி: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மதுரவாயல் தொகுதியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரவாயல் தொகுதி, அமைந்துள்ள திருவள்ளூர் மாவட்டத்தில் தற்பொழுது மூன்று அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், ஓர் அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரியும் மற்றும் 33 சுயநிதி கலை மற்றும் அறிவியில் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இதைத் தவிர 38

2023 அக்டோபர் 11]

சுயநிதி பொறியியல் கல்லூரிகளும், ஓர் அரசு தொழில்நுட்பக் கல்லூரியும், இரண்டு அரசு உதவி பெறும் தொழில்நுட்பக் கல்லூரிகளும் மற்றும் 19 சுயநிதி தொழில்நுட்பக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணவ/மாணவியர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால் மதுரவாயல் தொகுதியில் புதியதாக ஒரு கலைக் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

43—

தொழில்நுட்பக் கல்லூரி

வினா எண் 9682—திரு. N. அசோக்குமார்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பேராவூரணி தொகுதி, பேராவூரணியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பேராவூரணி தொகுதி அமைந்திருக்கும் தஞ்சாவூர் மாவட்டத்தில் ஓர் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி, 2 அரசு உதவி பெறும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் 15 சுயநிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணாக்கர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால் தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

44—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி

வினா எண் 11976—திரு. அம்மன் K. அர்ச்சுணன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[*2023 அக்டோபர் 11*

(அ) கோயம்புத்தூர் வடக்கு தொகுதி, வடவள்ளி மாநகராட்சி, வடவள்ளியில் புதிய பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வடவள்ளி மாநகராட்சி அமைந்துள்ள கோயம்புத்தூர் மாவட்டத்தில் தற்பொழுது ஆறு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், ஏழு அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் மற்றும் 58 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இதைத் தவிர ஓர் அரசு பொறியியல் கல்லூரியும், இரண்டு அரசு உதவி பெறும் பொறியியல் கல்லூரிகளும், 62 சுயநிதி பொறியியல் கல்லூரிகளும், ஒரு பல்கலைக்கழக பொறியியல் கல்லூரியும் மற்றும் மூன்று அரசு தொழில்நுட்பக் கல்லூரிகளும், ஆறு அரசு உதவிபெறும் தொழில்நுட்பக் கல்லூரிகளும் மற்றும் 21 சுயநிதி தொழில்நுட்பக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணவ/மாணவியர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால் கோயம்புத்தூர் வடக்கு தொகுதி, வடவள்ளி மாநகராட்சி, வடவள்ளியில் புதியதாக ஒரு பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

45—

தொழில்நுட்பக் கல்லூரி

வினா எண் 12019—திரு. அ. பண்ணாரி: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானிசாகர் தொகுதியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 அக்டோபர் 11]

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பவானிசாகர் தொகுதி அமைந்திருக்கும் ஈரோடு மாவட்டத்தில் ஓர் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி, 2 அரசு உதவி பெறும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் 12 சுயநிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணாக்கர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், பவானிசாகர் தொகுதியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

46—

தங்கும் விடுதி

வினா எண் 12046—திரு. T.K. அமுல் கந்தசாமி: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வால்பாறை அரசு கலைக் கல்லூரியில் மாணவ, மாணவியர்களுக்கு தங்கும் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

வால்பாறை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியானது பல்கலைக்கழக உறுப்புக் கலை மற்றும் அறிவியல் கல்லூரியிலிருந்து 2020-2021 ஆம் கல்வியாண்டு முதல் அரசு கல்லூரியாக மாற்றம் செய்யப்பட்டுள்ள நிலையில், இக்கல்லூரியில் பயிலும் மாணவ/மாணவியர்களுக்கென தங்கும் விடுதிக் கட்டடம் கட்டுவது குறித்து ஆய்வு செய்து தேவை/முன்னுரிமை அடிப்படையில் பெருந்தலைவர் காமராஜர் கல்லூரி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

47—

கல்வியியல் கல்லூரி

வினா எண் 14296—திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் தொகுதியில் கல்வியியல் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் தொகுதி அமைந்துள்ள இராமநாதபுரம் மாவட்டத்தில் தற்பொழுது எட்டு சுயநிதி கல்வியியல் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. இதைத் தவிர எட்டு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், ஓர் அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரியும், 13 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், ஒரு பல்கலைக்கழக பொறியியல் கல்லூரியும், மூன்று சுயநிதி பொறியியல் கல்லூரிகளும் ஓர் அரசு உதவி பெறும் தொழில்நுட்பக் கல்லூரியும் மற்றும் இரண்டு சுயநிதி தொழில்நுட்பக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணவ/மாணவியர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருகின்றன. மேலும், கல்வியியல் கல்லூரி தொடங்குவதற்கு தேசிய ஆசிரியர் கல்விக் குழுமத்தின் இசைவு பெற்ற பின்னரே தொடங்கிட இயலும் என்பதால் இராமநாதபுரம் தொகுதியில் கல்வியியல் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

48—

கலைக் கல்லூரி

வினா எண் 15238—திரு. ம. பிரபாகரன்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2023 அக்டோபர் 11]

(அ) பெரம்பலூர் தொகுதி, ஆலந்தூர் ஊராட்சி, செட்டிகுளம் பகுதியில் கலைக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெரம்பலூர் தொகுதி, ஆலந்தூர் ஊராட்சி அமைந்துள்ள பெரம்பலூர் மாவட்டத்தில் தற்பொழுது மூன்று அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், ஒன்பது சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இதைத் தவிர 5 சுயநிதி பொறியியல் கல்லூரிகளும் மற்றும் ஓர் அரசு தொழில்நுட்பக் கல்லூரியும் மற்றும் ஒன்பது சுயநிதி தொழில்நுட்பக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணவ/மாணவியரின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் தொகுதி, ஆலந்தூர் ஊராட்சி, செட்டிகுளம் பகுதியில் புதியதாக ஒரு கலைக் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

49—

தொழில்நுட்பக் கல்லூரி

வினா எண் 15568—திருமதி கு. மரகதம் குமரவேல்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் தொகுதியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுராந்தகம் தொகுதி அமைந்திருக்கும் செங்கல்பட்டு மாவட்டத்தில் 14 சுயநிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் இயங்கிவருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி

மாணாக்கர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், மதுராந்தகம் தொகுதியில், பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

50—

தொழில்நுட்பக் கல்லூரி

வினா எண் 17785—திரு. செ. கிருஷ்ணமுரளி: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடையநல்லூர் தொகுதி, செங்கோட்டை வட்டம், சாம்பவர் வடகரையில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடையநல்லூர் தொகுதி அமைந்திருக்கும் தென்காசி மாவட்டத்தில் 11 சுயநிதி பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் இயங்கிவருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணாக்கரின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்துவருவதால், கடையநல்லூர் தொகுதியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

51—

தொழில்நுட்பக் கல்லூரி

வினா எண் 18403—திரு. பி. அய்யப்பன்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டி தொகுதியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 அக்டோபர் 11]

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உசிலம்பட்டி தொகுதி அமைந்திருக்கும் மதுரை மாவட்டத்தில் 5 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள், ஓர் அரசு உதவி பெறும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் 11 சுயநிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணாக்கர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால் உசிலம்பட்டி தொகுதியில் புதிய பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

52—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி

வினா எண் 18422—திரு. இ. கருணாநிதி: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லாவரம் தொகுதியில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பல்லாவரம் தொகுதி அமைந்துள்ள செங்கல்பட்டு மாவட்டத்தில் தற்பொழுது மூன்று அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், நான்கு அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் மற்றும் மூன்று சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இதைத் தவிர 36 சுயநிதி பொறியியல் கல்லூரிகளும், ஒரு பல்கலைக்கழக பொறியியல் கல்லூரியும் மற்றும் 15 சுயநிதி தொழில்நுட்பக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணவ/மாணவியர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால் செங்கல்பட்டு மாவட்டம், பல்லாவரம் தொகுதியில் புதியதாக ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

53—

பொறியியல் கல்லூரி

வினா எண் 18454—திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலத்தை தலைமையிடமாகக் கொண்டு பொறியியல் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருமங்கலம் தொகுதி அமைந்துள்ள மதுரை மாவட்டத்தில், ஓர் அண்ணா பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியும், ஓர் அரசு உதவிபெறும் பொறியியல் கல்லூரியும், 9 சுயநிதி பொறியியல் கல்லூரிகளும், 5 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளும், ஓர் அரசு உதவிபெறும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரியும், 11 சுயநிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளும், 3 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 21 அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 48 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அம்மாவட்ட மாணாக்கர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால் மதுரை மாவட்டம், திருமங்கலம் தொகுதியில் புதியதாக ஒரு பொறியியல் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

54—

தொழில்நுட்பக் கல்லூரி

வினா எண் 29314—திரு. இரா. அருள்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மேற்கு தொகுதி, சூரமங்கலம் பகுதியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

2023 அக்டோபர் 11]

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

சேலம் மேற்கு தொகுதி, சூரமங்கலம் பகுதி அமைந்திருக்கும் சேலம் மாவட்டத்தில் ஓர் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியும், ஓர் அரசு உதவி பெறும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரியும் மற்றும் 22 சுயநிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணாக்கர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால் சேலம் மேற்கு தொகுதி, சூரமங்கலம் பகுதியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

55—

அறிவியல் மையம்

வினா எண் 45020—முனைவர் டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி நகரில் கோளரங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

மன்னார்குடி தொகுதி அமைந்திருக்கும் திருவாரூர் மாவட்டத்திற்கு மிக அருகில் அமைந்துள்ள திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அண்ணா அறிவியல் மையம் (கோளரங்கம்) தமிழக அரசால் நிறுவப்பட்டுள்ளது. திருவாரூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள மாவட்டங்களில் உள்ள மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் மேற்கண்ட அறிவியல் மையத்திற்குச் சென்று பயனடைந்து வருகின்றனர். எனவே, திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதியில் கோளரங்கத்துடன்கூடிய அறிவியல் மையம் துவக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

56—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி

வினா எண் 49575—திரு. இரா. அருள்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், பெத்தநாயகன்பாளையம் பகுதியில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

பெத்தநாயகன்பாளையம் அமைந்துள்ள சேலம் மாவட்டத்தில் தற்பொழுது ஐந்து அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், இரண்டு அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் மற்றும் 30 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இதைத் தவிர ஓர் அரசு பொறியியல் கல்லூரியும், 22 சுயநிதி பொறியியல் கல்லூரிகளும், ஓர் அரசு தொழில்நுட்பக் கல்லூரியும், ஓர் அரசு உதவிபெறும் தொழில்நுட்பக் கல்லூரியும் மற்றும் 20 சுயநிதி தொழில்நுட்பக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணவ/மாணவியர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால் சேலம் மாவட்டம், பெத்தநாயகன்பாளையம் பகுதியில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

57—

விளையாட்டு மைதானம்

வினா எண் 49746—திரு. K. மாரிமுத்து: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி தொகுதி, தண்டலச்சேரியில் உள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் விளையாட்டு மைதானம் அமைக்க அரசு முன்வருமா?

2023 அக்டோபர் 11]

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

திருத்துறைப்பூண்டி, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியானது பல்கலைக்கழக உறுப்புக் கலை மற்றும் அறிவியல் கல்லூரியிலிருந்து 2020-2021 ஆம் கல்வியாண்டு முதல் அரசுக் கல்லூரியாக மாற்றம் செய்யப்பட்டுள்ள நிலையில், இக்கல்லூரியில் விளையாட்டு மைதானம் அமைப்பது குறித்து ஆய்வு செய்து தேவை/ முன்னுரிமை அடிப்படையில் பெருந்தலைவர் காமராஜர் கல்லூரி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

58—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி

வினா எண் 51103—திரு. V.P. கந்தசாமி: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சூலூர் தொகுதி, சூலூரில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சூலூர் தொகுதி அமைந்துள்ள கோயம்புத்தூர் மாவட்டத்தில் தற்பொழுது ஆறு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், ஏழு அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் மற்றும் 58 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இதைத் தவிர ஓர் அரசு பொறியியல் கல்லூரியும், இரண்டு அரசு உதவி பெறும் பொறியியல் கல்லூரிகளும், ஓர் அண்ணா பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியும், 62 சுயநிதி பொறியியல் கல்லூரிகளும், மூன்று அரசு தொழில்நுட்பக் கல்லூரிகளும், ஆறு அரசு உதவிபெறும் தொழில்நுட்பக் கல்லூரிகளும் மற்றும் 20 சுயநிதி தொழில்நுட்பக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி

[*2023 அக்டோபர் 11*

மாணவ/மாணவியர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால் சூலூர் தொகுதி, சூலூரில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

59—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி

வினா எண் 51125—திரு. எம்.சி. சண்முகையா: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதியில் உள்ள புளியம்பட்டி, சவலாப்பேரி, தெய்வச்செயல்புரம் ஆகிய பகுதிகளில் ஏதேனும் ஓர் இடத்தில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒட்டப்பிடாரம் தொகுதி அமைந்துள்ள தூத்துக்குடி மாவட்டத்தில் தற்பொழுது மூன்று அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், ஒன்பது அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் மற்றும் 15 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இதைத் தவிர, ஓர் அண்ணா பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியும், 10 சுயநிதி பொறியியல் கல்லூரிகளும், நான்கு அரசு தொழில்நுட்பக் கல்லூரிகளும் மற்றும் எட்டு சுயநிதி தொழில்நுட்பக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணவ/மாணவியர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால் ஒட்டப்பிடாரம் தொகுதியில் உள்ள புளியம்பட்டி, சவலாப்பேரி, தெய்வச்செயல்புரம் ஆகிய பகுதிகளில் ஏதேனும் ஓர் இடத்தில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

2023 அக்டோபர் 11]

60—

கலைக் கல்லூரி

வினா எண் 51512—திரு. K. மாரிமுத்து: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டையில் கலைக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை அமைந்துள்ள திருவாரூர் மாவட்டத்தில் தற்பொழுது ஆறு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் மற்றும் ஏழு சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இதைத் தவிர இரண்டு சுயநிதி பொறியியல் கல்லூரிகளும், இரண்டு அரசு தொழில்நுட்பக் கல்லூரிகளும் மற்றும் ஏழு சுயநிதி தொழில்நுட்பக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணவ/மாணவியர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால் திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டையில் கலைக் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

61—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி

வினா எண் 54822—திரு. க. சுந்தர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

உத்திரமேரூர் தொகுதி, வாலாஜாபாத் பேரூராட்சியில் அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

வாலாஜாபாத் பேரூராட்சி அமைந்துள்ள காஞ்சிபுரம் மாவட்டத்தில் தற்பொழுது இரண்டு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், நான்கு அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் மற்றும் 34 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இதைத் தவிர, ஓர் அண்ணா பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியும், 33 சுயநிதி பொறியியல் கல்லூரிகளும், ஓர் அரசு உதவிபெறும் தொழில்நுட்பக் கல்லூரியும் மற்றும் ஆறு சுயநிதி தொழில்நுட்பக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணவ/மாணவியர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், உத்திரமேரூர் தொகுதி, வாலாஜாபாத் பேரூராட்சியில் அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

62—

கலைக் கல்லூரி

வினா எண் 59157—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டத்தில் மகளிர் கலைக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டத்தில் காரிமங்கலம் மகளிர் கல்லூரி உட்பட ஏழு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் மற்றும் 21 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இதைத் தவிர, ஓர் அரசு பொறியியல் கல்லூரியும், நான்கு சுயநிதி பொறியியல் கல்லூரிகளும், மூன்று அரசு தொழில்நுட்பக் கல்லூரிகளும் மற்றும் 17 சுயநிதி தொழில்நுட்பக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணவ/மாணவியர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு

2023 அக்டோபர் 11]

செய்து வருவதால் தருமபுரி மாவட்டத்தில் மகளிர் கலைக் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

63—

மகளிர் கலைக் கல்லூரி

வினா எண் 66480—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி மாவட்டம், பொம்மிடியில் மகளிர் கலைக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பொம்மிடி பகுதி அமைந்துள்ள தருமபுரி மாவட்டத்தில் தற்பொழுது ஏழு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் மற்றும் 21 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இதைத் தவிர, ஓர் அரசு பொறியியல் கல்லூரியும், நான்கு சுயநிதி பொறியியல் கல்லூரிகளும், மூன்று அரசு தொழில்நுட்பக் கல்லூரிகளும் மற்றும் 17 சுயநிதி தொழில்நுட்பக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணவ/மாணவியர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால் தருமபுரி மாவட்டம், பொம்மிடியில் மகளிர் கலைக் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

64—

கலைக் கல்லூரி

வினா எண் 78457—டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வாசுதேவநல்லூர் தொகுதியில் கலைக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வாசுதேவநல்லூர் தொகுதி அமைந்துள்ள தென்காசி மாவட்டத்தில் தற்பொழுது நான்கு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், மூன்று அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 10 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இதைத் தவிர, ஐந்து சுயநிதி பொறியியல் கல்லூரிகளும் மற்றும் 12 சுயநிதி தொழில்நுட்பக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணவ/மாணவியர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால் வாசுதேவநல்லூர் தொகுதியில் கலைக் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

65—

தொழில்நுட்பக் கல்லூரி

வினா எண் 80573—திரு. ஆ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூந்தமல்லி தொகுதி, திருவள்ளூர் ஒன்றியம், பெருமாள்பட்டு பகுதியில் கட்டப்பட்டுள்ள பலவகை தொழில்நுட்பக் கல்லூரியைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

பூந்தமல்லி தொகுதி, திருவள்ளூர் ஒன்றியம், பெருமாள்பட்டு பகுதியில் எந்தவொரு அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியும் இல்லை. திருவள்ளூர் மாவட்டம், பெருமாள்பட்டு பகுதிக்கு அருகாமையில் உள்ள செவ்வாப்பேட்டையில் ஓர் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி 2018-2019 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு, தற்போது நிரந்தர கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. மேலும், திருவள்ளூர் மாவட்டத்தில் 2 அரசு உதவிபெறும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளும், 17 சுயநிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளும் செயல்பட்டு வருகின்றன. இக்கல்லூரிகள் இத்தொகுதி மாணாக்கர்களின் உயர் கல்வித் தேவைகளை

2023 அக்டோபர் 11]

நிறைவு செய்து வருவதால், திருவள்ளூர் மாவட்டத்தில் பூந்தமல்லி தொகுதி, திருவள்ளூர் ஒன்றியம், பெருமாள்பட்டு பகுதியில் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

66—

நூலகம்

வினா எண் 82624—திரு. செ. கிருஷ்ணமுரளி: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கடையநல்லூர் தொகுதி, கடையநல்லூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு நூலக வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடையநல்லூர், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியானது பல்கலைக்கழக உறுப்புக் கலை மற்றும் அறிவியல் கல்லூரியிலிருந்து 2020-2021 ஆம் கல்வியாண்டு முதல் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியாக மாற்றம் செய்யப்பட்டுள்ள நிலையில், இக்கல்லூரிக்கு நூலகக் கட்டடம் கட்டுவது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

67—

விளையாட்டுத் திடல்

வினா எண் 82626—திரு. செ. கிருஷ்ணமுரளி: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கடையநல்லூர் தொகுதி, கடையநல்லூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு விளையாட்டுத் திடல் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடையநல்லூர், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியானது பல்கலைக்கழக உறுப்புக் கலை மற்றும் அறிவியல் கல்லூரியிலிருந்து 2020-2021 ஆம் கல்வியாண்டு முதல் அரசு கல்லூரியாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இக்கல்லூரிக்கு விளையாட்டுத் திடல் அமைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

68—

சாலையைச் சீரமைத்தல்

வினா எண் 1305—திரு. மா. செந்தில்குமார்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கள்ளக்குறிச்சி நகராட்சியில் உள்ள தேசிய நெடுஞ்சாலையைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி நகராட்சியில் உள்ள தேசிய நெடுஞ்சாலை சீரமைக்கப்பட்டுவிட்டது.

69—

சாலையைச் சீரமைத்தல்

வினா எண் 3868—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரமங்கலம் துணை மின் நிலைய கேபிள் பதிக்க தோண்டப்பட்ட மாங்குழி பிள்ளையார் கோவில் மாநில நெடுஞ்சாலையைச் செப்பனிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 அக்டோபர் 11]

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேரமங்கலம் துணை மின் நிலைய கேபிள் பதிக்க தோண்டப்பட்ட மாங்குழி பிள்ளையார் கோவில் மாநில நெடுஞ்சாலை, போக்குவரத்திற்கேற்ப சரி செய்யப்பட்டு நல்ல நிலையில் உள்ளது.

70—

சாலையைச் சீரமைத்தல்

வினா எண் 13034—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், மானியதள்ளி ஊராட்சி, வெள்ளக்கல் முதல் ஜருகு வரையுள்ள தார்ச் சாலையை சீரமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், மானியதள்ளி ஊராட்சி, வெள்ளக்கல் முதல் ஜருகு வரையுள்ள தார்ச் சாலையை பிரதம மந்திரியின் கிராமப்புற சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மேம்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

71—

அலுவலகக் கட்டடம்

வினா எண் 17520—திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) போளூர் நெடுஞ்சாலைத் துறை அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள போளூர் நெடுஞ்சாலைத் துறை அலுவலகம் தற்போது நல்ல நிலையில் உள்ளதால் புதிய கட்டடம் கட்டுவதற்கு அவசியம் எழவில்லை.

72—

நான்குவழிச் சாலை

வினா எண் 49299—திரு. இரா. அருள்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம்-உளுந்தூர்பேட்டை புறவழிச்சாலையை நான்கு வழிச்சாலையாக மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்:

சேலம்-உளுந்தூர்பேட்டை சாலையில் (தே.நெ.79) சுமார் 38.39 கி.மீ. நீளத்திற்குள்ள புறவழிச் சாலையை நான்கு வழிச் சாலையாக அகலப்படுத்தும் பணி தற்போது நடைபெற்று வருகிறது.

73—

நான்குவழிச் சாலை

வினா எண் 49300—திரு. இரா. அருள்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேச்சேரி-மேட்டூர் நெடுஞ்சாலையை நான்கு வழிச்சாலையாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்:

மேச்சேரி-மேட்டூர் நெடுஞ்சாலையானது தொப்பூர்-மேட்டூர்-பவானி-ஈரோடு சாலையில் (தே.நெ. 544H) கி.மீ. 0/0-49/8 வரை

2023 அக்டோபர் 11]

உள்ள இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தைச் சார்ந்த சாலையாகும். இச்சாலையில் 0/0-49/8 வரை 7.00 மீட்டர் அகலத்திலிருந்து 10.00 மீட்டர் அகலம் கொண்ட சாலையாக அகலப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

74—

நான்குவழிச் சாலை

வினா எண் 49306—திரு. இரா. அருள்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மேட்டூர்-பவானி நெடுஞ்சாலையை நான்குவழிச் சாலையாக மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்:

மேட்டூர்-பவானி நெடுஞ்சாலை கி.மீ. 0/0 முதல் 49/8 வரை 7.00 மீட்டர் அகலத்திலிருந்து 10.00 மீட்டர் அகலம் கொண்ட சாலையாக அகலப்படுத்தும் பணி இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் வைப்புத் தொகை பணியாக நடைபெற்று வருகிறது.

75—

நான்குவழிச் சாலை

வினா எண் 49310—திரு. இரா. அருள்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாவட்டம், அயோத்தியாபட்டினம்-திருப்பத்தூர் செல்லும் இருவழிச் சாலையை நான்குவழிச் சாலையாக மாற்ற அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், அயோத்தியாபட்டினம்-திருப்பத்தூர் தேசிய நெடுஞ்சாலையில் (தே.நெ.179ஏ) ஏ.பள்ளிப்பட்டி முதல்

திருப்பத்தூர் வரை (கி.மீ. 36/0–கி.மீ. 80/0) பாவுதளத்துடன்கூடிய நான்கு வழித்தடமாக அகலப்படுத்தும் பணி முடிவுறும் நிலையில் உள்ளது.

76—

குளிர்சாதனக் கிடங்கு

வினா எண் 1850—திரு. சபா. இராசேந்திரன்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெய்வேலி தொகுதியில் வேளாண் விளைபொருட்களைப் பாதுகாக்க குளிர்சாதனக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

நெய்வேலி தொகுதியில் வேளாண் விளைபொருட்களைப் பாதுகாக்க குளிர்சாதனக் கிடங்கு அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

77—

விவசாயிகளின் வருமானம் இரட்டிப்பாக்குதல்

வினா எண் 2196—திரு. இரா. அருள்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்க வேளாண் துறை பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது:

2023 அக்டோபர் 11]

I. *மண் வளம் பாதுகாத்தல்.*

II. *நீர் சேமிப்பு கட்டமைப்புகளை உருவாக்குதல் மற்றும் சொட்டு நீர்ப்பாசனம் மூலமாக குறைந்த நீரில் அதிக சாகுபடி செய்ய விவசாயிகளை ஊக்குவித்தல்*

III. *விதை, உரம் மற்றும் பூச்சிக்கொல்லிகளை சரியான அளவில் பயன்படுத்துதல்.*

IV. *உற்பத்தித் திறனை அதிகரிக்க தரமான விதைகள், உரங்கள், பூச்சிக் கொல்லிகள் போன்ற அனைத்து இடுபொருட்களை சரியான நேரத்திற்கு விவசாயிகளுக்குக் கிடைக்கச் செய்தல்.*

V. *மதிப்பு கூட்டல் மற்றும் அதிக வருமானம் பெற நேரடி சந்தைப்படுத்தல் முறையை ஊக்குவித்தல்.*

VI. *பயிர்க் காப்பீடு, பேரிடர் நிவாரணம்மூலம் பேரிடரின்போது விவசாயிகளின் நலன் காத்தல்.*

VII. *ஒருங்கிணைந்த வேளாண் திட்டத்தின்கீழ், தேனீ வளர்ப்பு, அதிக மதிப்புள்ள மரப் பயிர்கள்/பழப் பயிர்கள்/மரத்தில் பரவும் எண்ணெய் விதைகள் போன்றவற்றின்மூலம் கூடுதல் ஊதியத்தை உறுதி செய்தல்.*

78—

விவசாயம் மேம்படுத்துதல்

வினா எண் 2197—திரு. இரா. அருள்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

இயற்கை விவசாயத்தை மேம்படுத்த, அரசு வேளாண் வல்லுநர்கள் குழு அமைத்து, உரிய வழிகாட்டுதல்களை விவசாயிகளுக்கு வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

[*2023 அக்டோபர் 11*

தமிழ்நாடு அங்கக வேளாண்மைக் கொள்கை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 14-3-2023 அன்று வெளியிடப்பட்டது. இந்த அங்கக வேளாண்மைக் கொள்கை தயாரிப்பதற்காக அரசின் பல்வேறு துறைகளை உள்ளடக்கிய நிபுணர்கள் அடங்கிய ஒரு குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழு பல்வேறு அம்சங்களை அலசி ஆராய்ந்து, வரைவு அங்கக வேளாண்மைக் கொள்கையினை வழங்கியது. அதைத் தொடர்ந்து, இந்த வரைவு அங்கக வேளாண்மைக் கொள்கையினை மேலும் செம்மைப்படுத்துவதற்காக தலைமைச் செயலாளர் அவர்கள், தமிழ்நாடு அரசு வேளாண்மை பல்கலைக்கழகம், துறை அலுவலர்கள், இயற்கை விவசாய உற்பத்தியாளர்கள், அங்கக வேளாண்மை பொருட்களைச் சந்தைப்படுத்தும் வணிகர்கள், ஏற்றுமதியாளர்கள் ஆகியோரோடு இரண்டு முறை ஆலோசனைக் கூட்டம் நடத்தி, அதில் கிடைத்த கருத்துகளை எல்லாம் பரிசீலிக்கப்பட்டு சேர்க்கப்பட்டு, இந்த அங்கக வேளாண்மைக் கொள்கை உருவாக்கப்பட்டு வெளியிடப்பட்டது.

79—

ஆழ்துளை கிணறு

வினா எண் 2638—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, 5 ஏக்கர் மிகாமல் நிலமுள்ள குறு விவசாயிகளுக்கு 100% மானியத்தில் ஆழ்துளை கிணறு சோலார் மின் மோட்டார் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

ஐந்து ஆண்டுகளில் தமிழகம் முழுவதிலுமுள்ள அனைத்து கிராமங்களிலும் ஒட்டுமொத்த வேளாண் வளர்ச்சியை உருவாக்கிட, அனைத்து துறைகளின் ஒருங்கிணைப்புடன் கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தில், 2021-2022 ஆம் ஆண்டில் 1997 அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்மூலம் தேர்வு செய்யப்பட்ட

2023 அக்டோபர் 11]

கிராமங்களில், நிலையான பாசன வசதி இல்லாத தரிசு தொகுப்புகள் வேளாண் துறை மற்றும் தோட்டக்கலைத் துறை அலுவலர்களால் கண்டறியப்பட்டு, (குறைந்தது 8 விவசாயிகள் கொண்ட தொகுப்புகள்) பதிவு செய்யப்பட்ட தொகுப்புகளில் நில நீர் ஆய்வின் அடிப்படையில், வேளாண்மைப் பொறியியல் துறையின்மூலம் சமுதாய ஆழ்துளைக் கிணறு / குழாய்க் கிணறு போன்ற நீர் ஆதாரங்களை உருவாக்கி, மின்மோட்டார் (அ) சோலார் பம்புசெட்டுகள்மூலம் விவசாய நிலங்களை, ஒருங்கிணைத்து அமைத்து, நிலையான பாசன வசதியினை உருவாக்கிட 100% மானியத்திலும் நீரினை எடுத்துச் செல்லும் நீர் விநியோகக் குழாய்கள் அமைத்து, தரிசு தொகுப்பிலுள்ள ஒவ்வொரு விவசாய நிலத்திற்கும், நுண்ணீர் பாசனம் அமைத்துத் தரப்படுகிறது. மேலும் 2022-2023 ஆம் ஆண்டில், 3,204 கிராமங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வருகின்ற 2023-2024 ஆம் நிதியாண்டில், 2,504 கிராமங்களில் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படவுள்ளது.

80—

விவசாயிகளுக்குப் பயிற்சி

வினா எண் 3001—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, நாற்றாங்கால் நர்சரி விவசாயிகளுக்கு வேளாண் நிபுணர்கள்மூலம் பயிற்சி அளிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

நெய்வேலி தொகுதி அமைந்துள்ள கடலூர் மாவட்டத்தில், கரும்பு ஆராய்ச்சி நிலையமும், பாலூரில் காய்கறி ஆராய்ச்சி நிலையமும் மற்றும் வேளாண்மை அறிவியல் நிலையமும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் செயல்பட்டு வருகின்றன.

கடலூர் மாவட்டத்திற்கு அருகில் விழுப்புரம் மாவட்டம், திண்டிவனத்தில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் எண்ணெய்வித்து ஆராய்ச்சி நிலையம் மற்றும் வேளாண்மை அறிவியல் நிலையம் செயல்பட்டு வருகின்றன.

கடலூர் மாவட்டம், உளுந்தூர்பேட்டையில் தனியார் கல்லூரியான ஜே.எஸ்.ஏ. வேளாண்மை மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி செயல்பட்டு வருகின்றது. மேலும், பெரம்பலூர் மாவட்டம், வாலிகண்டபுரத்தில் தனியார் கல்லூரிகளான தந்தை ரோவர் வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி நிலையமும், துறையூரில் தனலெட்சுமி ஸ்ரீனிவாசன் வேளாண்மைக் கல்லூரியும் செயல்பட்டு வருகின்றன.

இதனைத் தவிர்த்து, பெரம்பலூர் மாவட்டம் வேப்பந்தட்டையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் பருத்தி ஆராய்ச்சி நிலையமும் செயல்பட்டு வருகின்றது.

எனவே, நெய்வேலி தொகுதி விவசாயிகள் மேற்கூறிய கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்களில் உள்ள வேளாண் நிபுணர்களைத் தொடர்பு கொண்டு நாற்றாங்கால் நர்சரி விவசாயிகள் பயிற்சிகளை மேற்கொண்டு பயன் பெறலாம் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

81—

மானியம் வழங்குதல்

வினா எண் 3002—திரு. சபா. இராசேந்திரன்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெய்வேலி தொகுதி, நாற்றாங்கால் நர்சரி விவசாயிகளுக்கு மருந்து தெளிப்பான் மற்றும் களை நீக்கும் இயந்திரம் இவைகளுக்கு மானியம் வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

வேளாண்மைப் பொறியியல் துறையின்மூலம் வேளாண்மை இயந்திரமயமாக்கும் துணை இயக்கத் திட்டத்தின்கீழ் நிலமுள்ள தனிப்பட்ட விவசாயிகளுக்கு மருந்து தெளிப்பான் மற்றும் களை நீக்கும் இயந்திரம் உட்பட பல்வேறு வகையான வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் சிறு, குறு, ஆதி திராவிட, பழங்குடியின மற்றும் பெண் விவசாயிகளுக்கு 50 சதவிகித

2023 அக்டோபர் 11]

மானியம் அல்லது அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட அதிகபட்ச மானியத் தொகை இவற்றில் எது குறைவோ அத்தொகை மானியமாகவும், இதர விவசாயிகளுக்கு 40 சதவிகித மானியம் அல்லது அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட அதிகபட்ச மானியத் தொகை இவற்றில் எது குறைவோ அத்தொகை மானியமாகவும், வேளாண் இயந்திரமயமாக்கும் துணை இயக்கத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

82—

மானியம் வழங்குதல்

வினா எண் 3004—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, வேகாக்கொல்லை நாற்றாங்கால் நர்சரி விவசாயிகள் உற்பத்தி செய்யும் கன்றுகளை வெளிமாநிலத்திற்குச் சென்று விற்பனை செய்ய வாகன மானியம் வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

வேகாக்கொல்லை நாற்றாங்கால் விவசாயிகள் உற்பத்தி செய்யும் நாற்றுகளை வெளி மாநிலங்களுக்கு எடுத்துச் சென்று விற்பனை செய்வதற்கு வாகன மானியம் ஏதும் தோட்டக்கலைத் துறைமூலம் வழங்கப்படுவதில்லை.

83—

நோய் கட்டுப்படுத்துதல்

வினா எண் 3569—திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வேதாரண்யம் தொகுதியில் தென்னை, வாழை, கொய்யா மற்றும் காய்கறிகளைத் தாக்கும் வெள்ளை நிற பூஞ்சை நோயைக் கட்டுப்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

2021-2022 ஆம் ஆண்டில், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளைப் பயன்படுத்தி தென்னையில் ரூகோஸ் சுருள் வெள்ளை ஈ தாக்குதலைக் கட்டுப்படுத்தும் பொருட்டு, நாகை மாவட்டத்தில் 600 எக்டர் பரப்பில் ரூ.6 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டது. மேலும், வேதாரண்யம் வட்டாரத்தில் 310 எக்டர் பரப்பில் ரூ.3.10 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. வாழை, கொய்யா மற்றும் காய்கறிகளைத் தாக்கும் வெள்ளை நிற பூச்சிகளைத் தோட்டக்கலை துறை அலுவலர்கள் மற்றும் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக விஞ்ஞானிகளுடன் இணைந்து நோய் கட்டுப்பாட்டு முறைகளைச் செயல் விளக்கம் மூலமாகவும், செய்தித்தாள் மற்றும் இதர ஊடகங்கள் மூலமாகவும் கட்டுப்பாட்டு முறைகள் தேவைப்படும் சமயங்களில் வழங்கப்பட்டு வருகின்றன.

84—

தோட்டக்கலைப் பண்ணை

வினா எண் 3570—திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேதாரண்யம் தொகுதி, தலைஞாயிறு ஒன்றியத்தில் வானவன் மகாதேவி கிராமத்தில் தோட்டக்கலை (கன்றுகள் பயிரிட) பண்ணைக்கு வழங்கப்பட்ட இடத்தில் தோட்டக்கலைப் பண்ணை தொடங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

வேதாரண்யம் சட்டமன்றத் தொகுதி, தலைஞாயிறு வட்டாரத்தில் வெள்ளப்பள்ளம், வானவன் மகாதேவி கிராமத்தில் வட்டார அளவிலான நாற்றங்கால் அமைப்பதற்கு முன் நுழைவு அனுமதி மாவட்ட நிர்வாகத்தால் வழங்கப்படவில்லை.

2023 அக்டோபர் 11]

மேலும், வானவன் மகாதேவியிலிருந்து 3 கி.மீ. தொலைவில் 25 ஏக்கர் பரப்பளவில் புஷ்பவனம் அரசு தோட்டக்கலைப் பண்ணை செயல்பட்டு வருகிறது. இப்பண்ணையின் மூலமாக அனைத்து நடவுப் பொருள்களும் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்படுவதால், தலைஞாயிறு ஒன்றியத்தில் வட்டார அளவிலான நாற்றங்கால் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

85—

விதைகள் வழங்குதல்

வினா எண் 3900—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வீடுகளில் மாடித் தோட்டம் அமைக்க தரமான காய்கறி விதைகள் மற்றும் உபகரணங்கள் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வீடுகளில் மாடித் தோட்டம் அமைப்பதற்காக தேவைப்படும் காய்கறி விதைகள், தென்னை நார் கட்டிகள், பைகள், நுண்ணுயிர் உரங்கள், உயிர்க்கட்டுப்பாட்டு காரணிகள், இயற்கை பூச்சிக் கொல்லிகள் அடங்கிய மாடித் தோட்டத் தொகுப்பு 75 சதவிகித மானியத்தில் தோட்டக்கலைத் துறையின் மூலமாக வழங்கப்பட்டு வருகிறது. இதற்குத் தேவையான தரமான காய்கறி விதைகள் அரசு தோட்டக்கலைப் பண்ணையிலேயே உற்பத்தி செய்து பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

86—

வேளாண்மைப் பல்கலைக்கழகம்

வினா எண் 4151—திரு. எம்.சி. சண்முகையா: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கருங்குளம் ஒன்றியம், மணகரை ஊராட்சி, கிள்ளிகுளத்தில் வேளாண்மைப் பல்கலைக்கழகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிள்ளிகுளத்தில் புதிய வேளாண்மைப் பல்கலைக்கழகம் அமைக்க கருத்துரு எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.

87—

கட்டடம்

வினா எண் 4201—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரம் தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் அலுவலகத்திற்கு கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் தொகுதியில் தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் அலுவலகத்தை உள்ளடக்கிய புதிய வேளாண்மை விரிவாக்க மையம் அமைப்பதற்கு தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் 2022-2023-ன்கீழ் நிருவாக ஒப்புதல் பெறப்பட்டு, கட்டடப் பணியானது தொடங்கப்பட்டுள்ளது.

88—

சிமென்ட் களம்

வினா எண் 4329—திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2023 அக்டோபர் 11]

(அ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், தென்றல் நகர், நங்கிலிகொண்டான் கிராமத்தில் சிமென்ட் களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், தென்றல் நகர், நங்கிலிகொண்டான் கிராமத்தில் சிமென்ட் களம் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

89—

தானியக் களம்

வினா எண் 4330—திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், குறிஞ்சிப்பை கிராமம், குளக்கரை தெருவில் சிமென்ட் தானியக்களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், குறிஞ்சிப்பை கிராமம், குளக்கரை தெருவில் சிமென்ட் தானியக்களம் அமைத்திட திட்டம் ஏதும் இல்லை.

90—

தானியக் களம்

வினா எண் 4331—திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், கனையூர் கிராமத்தில் தானியக் களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், கனையூர் கிராமத்தில் தானியக் களம் அமைத்திட திட்டம் ஏதும் இல்லை.

91—

தானியக் களம்

வினா எண் 4332—திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், கண்டமநல்லூர் கிராமத்தில் தானியக் களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், கண்டமநல்லூர் கிராமத்தில் தானியக் களம் அமைத்திட திட்டம் ஏதும் இல்லை.

92—

தானியக் களம்

வினா எண் 4333—திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2023 அக்டோபர் 11]

(அ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், நெகனூர் கிராமத்திற்கு தானியக் களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், நெகனூர் கிராமத்தில் தானியக் களம் அமைத்திட திட்டம் தற்போது ஏதும் இல்லை.

93—

தோட்டக்கலை பல்கலைக்கழகம்

வினா எண் 4371—திரு. கே.எஸ். சரவணக்குமார்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியகுளம் தொகுதி, பெரியகுளத்தில் தோட்டக்கலைப் பல்கலைக்கழகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெரியகுளம் தொகுதியில் தோட்டக்கலைப் பல்கலைக்கழகம் அமைக்க கருத்துரு எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.

94—

நெற்களம்

வினா எண் 5242—திரு. எஸ். சுதர்சனம்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாதவரம் தொகுதி, சோழவரம் ஒன்றியம், ஆங்காடு ஊராட்சியில் நெற்களம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாதவரம் தொகுதி, சோழவரம் ஒன்றியம், ஆங்காடு ஊராட்சியில் நெற்களம் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

95—

உழவர் சந்தை

வினா எண் 5499—திரு. பால் மனோஜ் பாண்டியன்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குளம் தொகுதி, ஆலங்குளம் பேரூராட்சியில் உழவர் சந்தை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆலங்குளம் தொகுதி, ஆலங்குளம் பேரூராட்சியில் உழவர் சந்தை அமைப்பதற்கு தகுதியான நிலம் கிடைக்கப்பெறாததால், அங்கு உழவர் சந்தை அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

96—

கதிரடிக்கும் களம்

வினா எண் 5502—திரு. பால் மனோஜ் பாண்டியன்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2023 அக்டோபர் 11]

(அ) ஆலங்குளம் தொகுதி, ஆலங்குளம் ஒன்றியம், வடக்கு கிடாரக்குளம் கிராமத்தில் கதிரடிக்கும் களம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆலங்குளம் தொகுதி, ஆலங்குளம் ஒன்றியம், வடக்கு கிடாரக்குளம் கிராமத்தில் கதிரடிக்கும் களம் அமைத்திட திட்டம் தற்போது ஏதும் இல்லை.

97—

கதிரடிக்கும் களம்

வினா எண் 5504—திரு. பால் மனோஜ் பாண்டியன்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குளம் தொகுதி, ஆலங்குளம் ஒன்றியம், கிடாரக்குளம் தெற்கு கிராமத்தில் கதிரடிக்கும் களம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆலங்குளம் தொகுதி, ஆலங்குளம் ஒன்றியம், கிடாரக்குளம் தெற்கு கிராமத்தில் கதிரடிக்கும் களம் அமைத்திட திட்டம் தற்போது ஏதும் இல்லை.

98—

கதிரடிக்கும் களம்

வினா எண் 5508—திரு. பால் மனோஜ் பாண்டியன்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குளம் வட்டம், ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம், மாயமான் குறிச்சி ஊராட்சி, குருவன்கோட்டை கிராமத்தில் கதிரடிக்கும் களம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆலங்குளம் வட்டம், ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம், குருவன்கோட்டை கிராமத்தில் கதிரடிக்கும் களம் அமைத்திட திட்டம் தற்போது ஏதும் இல்லை.

99—

கதிரடிக்கும் களம்

வினா எண் 5509—திரு. பால் மனோஜ் பாண்டியன்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குளம் தொகுதி, ஆலங்குளம் ஒன்றியம், நெட்டூர் கிராமத்தில் கதிரடிக்கும் களம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆலங்குளம் தொகுதி, ஆலங்குளம் ஒன்றியம், நெட்டூர் கிராமத்தில் கதிரடிக்கும் களம் அமைத்திட திட்டம் தற்போது ஏதும் இல்லை.

100—

தானியக் களம்

வினா எண் 5548—திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2023 அக்டோபர் 11]

(அ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், கல்லாளிப்பட்டு கிராமத்தில் தானியக் களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், கல்லாளிப்பட்டு கிராமத்தில் தானியக் களம் அமைத்திட திட்டம் தற்போது ஏதும் இல்லை.

பட்டியல்-25

1—

தானியக் களம்

வினா எண் 5550—திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், ஈச்சூர் கிராமத்தில் ஏரி கலிங்குகளுக்கு அருகே தானியக் களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், ஈச்சூர் கிராமத்தில் ஏரிக்கரை கலிங்குகளுக்கு தானியக் களம் அமைத்திட திட்டம் தற்போது ஏதும் இல்லை.

2—

தானியக் களம்

வினா எண் 5551—திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், வடதாரம் கிராமம், ஏரிக்கரை மற்றும் புதிய காலனி ஆகிய பகுதிகளில் தானியக் களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், வடதாரம் கிராமம், ஏரிக்கரை மற்றும் புதிய காலனி ஆகிய பகுதிகளில் தற்போது தானியக் களம் அமைத்திட திட்டம் ஏதும் இல்லை.

3—

தானியக் களம்

வினா எண் 5554—திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், கப்பை கிராமத்தில் தானியக் களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 அக்டோபர் 11]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், கப்பை கிராமத்தில் தற்போது தானியக் களம் அமைத்திட திட்டம் ஏதும் இல்லை.

4—

தானியக் களம்

வினா எண் 5555—திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், நெகனூர் கிராமத்தில் தானியக் களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், நெகனூர் கிராமத்தில் தற்போது தானியக் களம் அமைத்திட திட்டம் ஏதும் இல்லை.

5—

தானியக் களம்

வினா எண் 5556—திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், வடதாரம் பெரியாண்டவர் கோயில் அருகே தானியக் களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், வடதாரம் பெரியாண்டவர் கோயில் அருகில் தற்போது தானியக் களம் அமைத்திட திட்டம் ஏதும் இல்லை.

6—

தானியக் களம்

வினா எண் 5557—திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், தளவானூர் கிராமத்தில் தானியக் களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், தளவானூர் கிராமத்தில் தானியக் களம் அமைத்திட திட்டம் தற்போது ஏதும் இல்லை.

7—

தானியக் களம்

வினா எண் 5558—திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், கோனலூர் கிராமத்தில் புதியதாக தானியக் களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 அக்டோபர் 11]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், கோனலூர் கிராமத்தில் புதியதாக தானியக் களம் அமைத்திட திட்டம் தற்போது ஏதும் இல்லை.

8—

தானியக் களம்

வினா எண் 5559—திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலம் தொகுதி, மயிலம் ஒன்றியம், கொணக்கம்பட்டு கிராமத்தில் சிமென்ட் தானியக் களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலம் தொகுதி, மயிலம் ஒன்றியம், கொணக்கம்பட்டு கிராமத்திற்கு தானியக் களம் அமைத்திட திட்டம் தற்போது ஏதும் இல்லை.

9—

மானியம்

வினா எண் 5597—திரு. தி. ராமச்சந்திரன்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மூன்று ஏக்கர் நிலம் வைத்திருக்கும் மின் மோட்டார் வசதி இல்லாத விவசாயிகளுக்கு புதிய மின் மோட்டார் வாங்க ரூ.10,000 வரை மானியம் அளிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மின் இணைப்பு ஏற்கெனவே வைத்திருக்கும் குழாய் கிணறு/ஆழ்துளைக் கிணறு/திறந்தவெளி கிணறுமூலம் பாசனம் செய்யும் 3 ஏக்கர் வரை நிலமுள்ள அனைத்து குறு, சிறு விவசாயிகளுக்கும் புதிய மின் மோட்டார் பம்புசெட் வாங்க ரூ.10,000 அல்லது மின் மோட்டார் பம்புசெட் வாங்க ஆகும் மொத்த தொகையில் 50 விழுக்காடு இதில் எது குறைவோ அத்தொகை விவசாயிகளுக்கு மானியமாக வழங்கும் திட்டம் தற்பொழுது தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் வேளாண்மைப் பொறியியல் துறையின்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

10—

விதைப் பண்ணை

வினா எண் 7025—திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு தொகுதியில் அரசு நெல் விதைப் பண்ணை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இல்லை. தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டாரம், சாக்கோட்டையில் அமைந்துள்ள மாநில விதைப் பண்ணையானது 1951-ம் ஆண்டு துவங்கப்பட்டது. அரசு விதைப் பண்ணையின் மொத்த பரப்பளவு 83 ஏக்கராகும். தற்போது சாகுபடி செய்யப்படும் பரப்பளவானது 61 ஏக்கராகும். பயன் தரும் மரங்களான தென்னை, தேக்கு போன்ற மரங்கள் பண்ணையில் உள்ளன. மாநில அரசு விதைப் பண்ணையின் வளாகத்தின் உள்ளே அரசு விதை சுத்திகரிப்பு நிலையம் அமையப்பெற்று, வருடத்திற்கு சுமார் 1800 மெ.டன் சான்று விதைகள் சுத்திகரிப்புப்

2023 அக்டோபர் 11]

பணி மேற்கொள்ளப்பட்டு சான்றட்டை பொருத்தி கும்பகோணம் வட்டாரத்திற்கு சுற்றி அமைந்துள்ள 6 வட்டாரங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. மாநில அரசு விதைப் பண்ணையில் ஆண்டுதோறும் சராசரியாக 1,500 கிலோ வல்லுநர் விதை நெல் மற்றும் 250 கிலோ வல்லுநர் உளுந்து விதைகள் பெறப்பட்டு, 100 மெட்ரிக் டன் நெல் ஆதார நிலை விதைகள் மற்றும் 5 மெட்ரிக் டன் உளுந்து ஆதார நிலை விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு தஞ்சை மாவட்டத்திற்குத் தேவையான ஆதார நிலை விதைகள் விநியோகம் செய்யப்படுகின்றன.

11—

உழவர் சந்தை

வினா எண் 7049—டாக்டர் வை. முத்துராஜா: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புதுக்கோட்டை தொகுதி, புதுக்கோட்டை TVS நகர் பகுதியில் உழவர் சந்தை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை TVS நகர் பகுதியிலிருந்து இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள புதுக்கோட்டையில் ஏற்கெனவே உழவர் சந்தை அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. எனவே, புதுக்கோட்டை TVS நகர் பகுதியில் புதியதாக உழவர் சந்தை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

12—

உலர் களம்

வினா எண் 7107—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, கீழ்மாம்பட்டு ஊராட்சி, கானங்குப்பத்தில் உலர் களம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், கீழ்மாம்பட்டு ஊராட்சி, கானங்குப்பம் கிராமத்தில் உலர் களம் அமைக்கும் திட்டம் தற்போது எதுவும் இல்லை.

13—

ஆராய்ச்சி மையம்

வினா எண் 7113—திரு. சபா. இராசேந்திரன்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெய்வேலி தொகுதியில் மரவள்ளிக் கிழங்கு ஆராய்ச்சி மையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

நெய்வேலி தொகுதியில் மரவள்ளிக் கிழங்கு ஆராய்ச்சி மையம் அமைக்க கருத்துரு எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.

14—

வேளாண்மைக் கல்லூரி

வினா எண் 7147—திரு. அ.செ. வில்வநாதன்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆம்பூர் தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 அக்டோபர் 11]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம்பூர் தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி அமைக்க கருத்துரு எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.

15—

குளிர்பதனக் கிடங்கு

வினா எண் 7206—திரு. S. சந்திரன்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்தணி தொகுதி, திருத்தணி வட்டத்தில் மாம்பழத்திற்கான குளிர்பதனக் கிடங்கு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருத்தணி தொகுதி, திருத்தணி வட்டத்தில் மாம்பழத்திற்கான குளிர்பதன கிடங்கு அமைக்கும் திட்டம் தற்போது பரிசீலனையில் இல்லை.

16—

சேமிப்புக் கிடங்கு

வினா எண் 7208—திரு. S. சந்திரன்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்தணி தொகுதி, இரா.கி.பேட்டை வட்டத்தில் புதியதாக வேளாண்மை பயன்பாட்டிற்கு சேமிப்புக் கிடங்குகள் அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருத்தணி தொகுதி, இரா.கி.பேட்டை வட்டத்தில் புதியதாக வேளாண்மை பயன்பாட்டிற்கு சேமிப்புக் கிடங்குகள் அமைக்கும் திட்டம் தற்போது ஏதும் இல்லை.

17—

ஆராய்ச்சி மையம்

வினா எண் 7594—திரு. ஆ. வெங்கடேசன்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழவந்தான் தொகுதி, சோழவந்தானில் வெற்றிலை ஆராய்ச்சி மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சோழவந்தான் தொகுதி, சோழவந்தானில் வெற்றிலை ஆராய்ச்சி மையம் அமைக்க கருத்துரு எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.

18—

குளிர்பதனக் கிடங்கு

வினா எண் 7595—திரு. ஆ. வெங்கடேசன்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழவந்தான் தொகுதி, அலங்காநல்லூர் மற்றும் சுற்றுப்பகுதியில் அதிகளவில் விளையும் விவசாய காய், கனி, தானியங்கள் சேமிப்பதற்கு குளிர்பதனக் கிடங்கு கள்வேலிப்பட்டியில் அமைக்க அரசு முன்வருமா?

2023 அக்டோபர் 11]

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சோழவந்தான் தொகுதி, அலங்காநல்லூர் மற்றும் சுற்றுப்பகுதியில் அதிகளவில் விளையும் விவசாய காய், கனி, தானியங்கள் சேமிப்பதற்கு குளிர்பதனக் கிடங்கு அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

19—

தானியக் களம்

வினா எண் 7727—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, மாதேஅள்ளி ஊராட்சிக்குட்பட்ட மாதேஅள்ளி கிராமத்தில் காட்ராசம்மன் கோயில் அருகில் தானியக் களம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் தொகுதி, மாதேஅள்ளி ஊராட்சிக்குட்பட்ட மாதேஅள்ளி கிராமத்தில் காட்ராசம்மன் கோயில் அருகில் தானியக் களம் அமைப்பது தொடர்பாக திட்டம் தற்போது ஏதும் இல்லை.

20—

ஆராய்ச்சி நிலையம்

வினா எண் 7753—திரு. செ. ராஜேஷ்குமார்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் வட்டம், ஆலஞ்சி பகுதியில் தென்னை ஆராய்ச்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் வட்டம், ஆலஞ்சி பகுதியில் தென்னை ஆராய்ச்சி நிலையம் அமைக்க கருத்துரு எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.

21—

ஆராய்ச்சி நிலையம்

வினா எண் 7756—திரு. செ. ராஜேஷ்குமார்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், மருந்துக்கோட்டை பகுதியில் மூலிகை ஆராய்ச்சி மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், மருந்துக்கோட்டை பகுதியில் மூலிகை ஆராய்ச்சி மையம் அமைக்க கருத்துரு எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.

22—

உழவர் சந்தை

வினா எண் 7785—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2023 அக்டோபர் 11]

(அ) திங்கள்நகர் பேரூராட்சிக்குட்பட்ட திங்கள்நகர் சந்தை வளாகத்தில் உழவர் சந்தை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திங்கள்நகர் பேரூராட்சிக்குட்பட்ட திங்கள்நகர் சந்தை வளாகத்தில் பேரூராட்சியின் கட்டுப்பாட்டில் தினசரி சந்தை நடைபெற்று வருவதால் உழவர் சந்தை தற்போது அமைக்க இயலாத நிலை உள்ளது.

23—

வேளாண்மைக் கல்லூரி

வினா எண் 7807—திரு. கி. அசோக்குமார்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணகிரி தொகுதி, கிருஷ்ணகிரியில் வேளாண்மைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

கிருஷ்ணகிரி தொகுதி, கிருஷ்ணகிரியில் வேளாண்மைக் கல்லூரி அமைக்க கருத்துரு எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.

24—

உழவர் சந்தை

வினா எண் 7831—முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[*2023 அக்டோபர் 11*

(அ) திருவிடைமருதூர் தொகுதியில் உள்ள உழவர் சந்தையில் தரைமட்டத்தில் உள்ள கடைகளை உயர்த்தி அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவிடைமருதூர் வட்டாரத்தில் வாரச் சந்தைகள் மட்டுமே செயல்பட்டு வருகின்றன. உழவர் சந்தைகள் எதுவும் செயல்படவில்லை. வாரச் சந்தைகள் உள்ளாட்சிகளின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்படுவதால், சம்பந்தப்பட்ட உள்ளாட்சி மூலமே நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

25—

ஆராய்ச்சி மையம்

வினா எண் 11433—திரு. N. அசோக்குமார்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேராவூரணி தொகுதி, பேராவூரணி பகுதியில் தென்னை ஆராய்ச்சி மையம் மற்றும் நர்சரி பண்ணை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பேராவூரணி பகுதியில் தென்னை ஆராய்ச்சி மையம் அமைக்க கருத்துரு எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.

2023 அக்டோபர் 11]

26—

விலை நிர்ணயம்

வினா எண் 11573—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழ்நாட்டில் கொப்பரைத் தேங்காய்க்கு குறைந்தபட்ச ஆதார விலை நிர்ணயிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குறைந்தபட்ச ஆதரவு விலை ஒன்றிய அரசு ஒவ்வோர் ஆண்டும் பயிர்வாரியாக நிர்ணயிக்கும் விலை ஆகும். 2022 ஆம் ஆண்டில், அரவை கொப்பரை கிலோ ஒன்றிற்கு ரூ.105.90-ம் பந்து கொப்பரை கிலோ ஒன்றிற்கு ரூ.110/-ம் குறைந்தபட்ச ஆதார விலையாக அறிவித்துள்ளது. மேலும், 2023 ஆம் ஆண்டில் அரவை கொப்பரை கிலோ ஒன்றிற்கு ரூ.108.60-ம் பந்து கொப்பரை கிலோ ஒன்றிற்கு ரூ.117.50-ம் குறைந்தபட்ச ஆதரவு விலையாக அறிவித்துள்ளது. எனவே, குறைந்தபட்ச ஆதரவு விலை நிர்ணயம் அரசின் கொள்கை முடிவாகும்.

27—

மானியம்

வினா எண் 11580—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வத்தல்மலையில் உள்ள காபித் தோட்டங்களுக்கு வேளாண்மைத் துறைமூலம் தரமான காபிச் செடிகள் மற்றும் உரங்களை மானிய விலையில் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காபி வாரியம்மூலம் விதைக்கான காபிக் கொட்டைகளுக்கு 50 சதவீதம் மானியமாக ரூ.500/- வழங்கப்படுகிறது. காபி பயிரிடும் விவசாயிகள், மானியம் பெறுவதற்கு செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில் காபி வாரியத்தில் பதிவு செய்யவேண்டும். விண்ணப்பித்த விவசாயிகளுக்கு ஜனவரி மாதத்தில் விதைப்பதற்கு காபிக் கொட்டைகள் மானியத்தில் வழங்கப்படுகின்றன.

28—

தானியக் களம்

வினா எண் 11590—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, O.G.அள்ளி ஊராட்சி, தட்டாரப்பட்டி கிராமத்தில் புதிய தானியக் களம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் தொகுதி, O.G.அள்ளி ஊராட்சி, தட்டாரப்பட்டி கிராமத்தில் புதிய தானியக் களம் அமைப்பது தொடர்பான திட்டம் தற்போது ஏதும் இல்லை.

2023 அக்டோபர் 11]

29—

தானியக் களம்

வினா எண் 11630—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி தொகுதியிலுள்ள ஒவ்வொரு கிராமத்திலும் தானியக் களங்கள் (கதிர் அடிக்கும் களம்) அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

தருமபுரி தொகுதியிலுள்ள ஒவ்வொரு கிராமத்திலும் தானியக் களங்கள் (கதிர் அடிக்கும் களம்) அமைப்பது தொடர்பாக தற்போது திட்டம் ஏதும் இல்லை.

30—

விழிப்புணர்வு

வினா எண் 11634—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி தொகுதியில் நவீன வேளாண் இயந்திரங்களை விவசாயிகள் மானிய விலையில் பெற்று பயனடையும் வகையில் ஒவ்வொரு கிராமத்திலுள்ள விவசாயிகளிடமும் விழிப்புணர்வு ஏற்படுத்தவும் ஒவ்வொரு ஊராட்சிக்கும் ஒரு டிராக்டர் இலவசமாக வழங்கவும் அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

தருமபுரி தொகுதியில் நவீன வேளாண் இயந்திரங்களை விவசாயிகள் மானிய விலையில் பெற்று பயனடையும் வகையில் வேளாண் இயந்திரமயமாக்கும் திட்டத்தின்கீழ் வழங்கப்படும்

[*2023 அக்டோபர் 11*

வேளாண் இயந்திரங்கள், கருவிகளின் மானிய விவரங்கள் செயல்படுத்தும் வழிமுறைகள் உள்ளிட்டவை வேளாண்மைப் பொறியியல் துறையால், துண்டு பிரசுரங்கள் மூலமாகவும், வாட்ஸ் அப் செயலி மூலமாகவும், பத்திரிகைச் செய்தி மூலமாகவும் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவரால் நடத்தப்படுகின்ற விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டங்களிலும் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. நடப்பாண்டிலும் (2022-2023) இத்திட்டம் குறித்து இவ்வாறு விவசாயிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகின்றது.

மேலும், வேளாண்மைப் பொறியியல் துறையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வேளாண் இயந்திரங்கள், கருவிகளின் மாடல், விலை விவரங்கள், நிறுவனத்தின் முகவரி ஆகியவற்றை உள்ளடக்கிய பிரசுரம் செய்தித்தாள் வடிவில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

ஒவ்வோர் ஊராட்சிக்கும் ஒரு டிராக்டர் இலவசமாக வழங்கும் திட்டம் ஏதும் வேளாண்மைப் பொறியியல் துறையின்மூலம் செயல்படுத்தப்படவில்லை. வேளாண்மைப் பொறியியல் துறையில் டிராக்டர்கள் அதன் இணைப்புக் கருவிகளுடன் மணிக்கு ரூ.500/- என்ற குறைந்த வாடகை அடிப்படையில் தேவைப்படும் விவசாயிகளுக்கு முன்னுரிமையின்படி வழங்கப்படுகிறது. நடப்பாண்டிலும் இத்திட்டம் தருமபுரி உட்பட அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

31—

உழவர் சந்தை

வினா எண் 11635—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், இண்டூர் பகுதியை மையமாகக் கொண்டு உழவர் சந்தை அமைக்க அரசு முன்வருமா?

2023 அக்டோபர் 11]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், இண்டூரிலிருந்து முறையே 14 கி.மீ. தொலைவில் தருமபுரி மற்றும் பெண்ணாகரம் ஆகிய இரண்டு உழவர் சந்தைகள் செயல்பட்டு வருகின்றன. எனவே, தருமபுரி மாவட்டம், இண்டூரில் உழவர் சந்தை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

32—

உழவர் சந்தை

வினா எண் 11720—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விராலிமலை தொகுதி, விராலிமலையில் உழவர் சந்தையை புனரமைப்பு செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலையில் இயங்கி வரும் உழவர் சந்தையினை புனரமைப்பு செய்ய ரூ.49.18 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, புனரமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன.

33—

உழவர் சந்தை

வினா எண் 11730—திருமதி க. சிவகாமசுந்தரி: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் ஊராட்சி ஒன்றிய பகுதியில் உழவர் சந்தை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் ஊராட்சி ஒன்றிய பகுதியில் விவசாயிகளே நுகர்வோர்களாக இருப்பதால், கடவூர் ஊராட்சி ஒன்றிய பகுதியில் உழவர் சந்தை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

34—

வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்

வினா எண் 11732—திருமதி க. சிவகாமசுந்தரி: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணராயபுரம் தொகுதியில் இயற்கை வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

கிருஷ்ணராயபுரம் தொகுதியில் இயற்கை வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் அமைக்க கருத்துரு எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.

35—

விற்பனைக் கூடம்

வினா எண் 11735—திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், வல்லத்தில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 அக்டோபர் 11]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், வல்லத்தில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைத்திட திட்டம் தற்போது ஏதும் இல்லை.

36—

தானியக் களம்

வினா எண் 11736—திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், வல்லம் மற்றும் வில்மா தேவி கிராமத்தில் புதியதாக தானியக் களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், வல்லம் மற்றும் வில்மா தேவி கிராமத்தில் தற்போது தானியக் களம் அமைத்திட திட்டம் ஏதும் இல்லை.

37—

தானியக் களம்

வினா எண் 11738—திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், கடம்பூர் கிராமத்தில் உள்ள குளக்கரையின் அருகே புதியதாக தானியக் களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், கடம்பூர் கிராமத்தில் உள்ள குளக்கரையின் அருகே தானியக் களம் அமைத்திட திட்டம் தற்போது ஏதும் இல்லை.

38—

தானியக் களம்

வினா எண் 11739—திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், கல்லடிகுப்பம், மோழியனூர் மற்றும் சிவனந்தல் ஆகிய கிராமங்களில் சிமென்ட் தானியக் களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், கல்லடிகுப்பம், மோழியனூர் மற்றும் சிவனந்தல் கிராமங்களில் தானியக் களம் அமைத்திட திட்டம் தற்போது ஏதும் இல்லை.

39—

உழவர் சந்தை

வினா எண் 11783—திருமதி ம. வரலட்சுமி: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதி, செங்கல்பட்டு நகராட்சியில் செயல்படும் உழவர் சந்தையை முழுமையாகச் செயல்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 அக்டோபர் 11]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு தொகுதி, செங்கல்பட்டு நகராட்சியில் செயல்படும் செங்கல்பட்டு உழவர் சந்தையானது புதுப்பிக்கப்பட்டும், உழவர் சந்தையைச் சுற்றியுள்ள கிராமங்களில் விழிப்புணர்வு முகாம் நடத்தியும் தற்போது நன்றாகச் செயல்பட்டு வருகிறது.

40—

தினசரி சந்தை

வினா எண் 11798—திருமதி ம. வரலட்சுமி: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செங்கல்பட்டு தொகுதி, மறைமலை நகர் நகராட்சியில் தினசரி சந்தை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு தொகுதி, மறைமலை நகர் நகராட்சியில் தினசரி சந்தை அமைப்பது அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளின் முடிவுக்குட்பட்டது என்பதால் இவ்வினா குறித்து இத்துறையின்மூலம் நடவடிக்கை எடுக்க வழிவகை ஏதும் இல்லை.

41—

தானியக் களம்

வினா எண் 11803—திரு. க. கார்த்திகேயன்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ரிஷிவந்தியம் ஒன்றியம், மேலபழங்கூர் ஊராட்சியில் தானியக் களம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

ரிஷிவந்தியம் தொகுதி, ரிஷிவந்தியம் ஒன்றியம், மேலபழங்கூர் ஊராட்சியில் தானியக் களம் அமைத்திட திட்டம் தற்போது ஏதும் இல்லை.

42—

மானியம்

வினா எண் 11804—திரு. க. கார்த்திகேயன்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சங்கராபுரம் வடக்கு ஒன்றியம், வேளாண்மை துறையின்மூலம் வழங்கப்படும் டிராக்டர், கலப்பை, ரொட்டவேட்டர் மானிய முறையில் வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

ஒன்றிய அரசின் பங்களிப்புத் திட்டமான வேளாண்மை இயந்திரமயமாக்கும் துணை இயக்கத் திட்டத்தின்கீழ் டிராக்டர், பவர் டில்லர் உள்ளிட்ட வேளாண் இயந்திரங்கள் மற்றும் கலப்பை, ரொட்டவேட்டர் உள்ளிட்ட வேளாண் கருவிகள் வாங்குவதற்கு ஆதி திராவிடர், பழங்குடியினர், குறு, சிறு மற்றும் பெண் விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் மொத்த விலையில் 50 சதவீதம் அல்லது ஒன்றிய அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட அதிகபட்ச மானியத் தொகை இவற்றில் எது குறைவோ அத்தொகை மானியமாகவும், இதர விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் மொத்த விலையில் 40 சதவீதம் அல்லது ஒன்றிய அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட அதிகபட்ச மானியத் தொகை இதில் எது குறைவோ அத்தொகை மானியமாகவும் அனைத்து மாவட்டங்களிலும் தனிப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

2023 அக்டோபர் 11]

43—

விற்பனைக் கூடம்

வினா எண் 11867—திரு. க. கார்த்திகேயன்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சங்கராபுரம் வடக்கு ஒன்றியம், மூங்கில்துறைப்பட்டு ஊராட்சியில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

ரிஷிவந்தியம் தொகுதி, சங்கராபுரம் வடக்கு ஒன்றியம், மூங்கில்துறைப்பட்டு ஊராட்சியில் தற்பொழுது மூங்கில்துறைப்பட்டு ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

44—

தானியக் களம்

வினா எண் 11870—திரு. க. கார்த்திகேயன்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ரிஷிவந்தியம் ஒன்றியம், கடுவனூர் ஊராட்சியில் தானியக் களம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

ரிஷிவந்தியம் தொகுதி, ரிஷிவந்தியம் ஒன்றியம், கடுவனூர் ஊராட்சியில் தானியக் களம் அமைக்கும் திட்டம் தற்போது ஏதும் இல்லை.

45—

தானியக் களம்

வினா எண் 11871—திரு. க. கார்த்திகேயன்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ரிஷிவந்தியம் ஒன்றியம், சாத்தபுத்தூர் ஊராட்சியில் தானியக் களம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

ரிஷிவந்தியம் தொகுதி, ரிஷிவந்தியம் ஒன்றியம், சாத்தபுத்தூர் ஊராட்சியில் தானியக் களம் அமைக்கும் திட்டம் தற்போது ஏதும் இல்லை.

46—

விரிவாக்க மையம்

வினா எண் 11872—திரு. க. கார்த்திகேயன்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மணலூர்பேட்டை பேரூராட்சியில் வேளாண்மை விரிவாக்க மையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

ரிஷிவந்தியம் தொகுதி, மணலூர்பேட்டை பேரூராட்சியில் விதை சேமிப்புக் கிடங்குடன்கூடிய துணை வேளாண்மை விரிவாக்க மையம் ரூ.38.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் நபார்டு வங்கியின் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியுதவியுடன் கட்டப்பட்டுள்ளது.

2023 அக்டோபர் 11]

47—

தானியக் களம்

வினா எண் 11874—திரு. க. கார்த்திகேயன்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ரிஷிவந்தியம் ஒன்றியம், முட்டியம் ஊராட்சியில் ஊர் பகுதியில் தானியக் களம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

ரிஷிவந்தியம் தொகுதி, ரிஷிவந்தியம் ஒன்றியம், முட்டியம் ஊராட்சியில் தற்போது தானியக் களம் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

48—

தானியக் களம்

வினா எண் 11877—திரு. க. கார்த்திகேயன்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சங்கராபுரம் வடக்கு ஒன்றியம், புதுப்பட்டு ஊராட்சியில் தானியக் களம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

ரிஷிவந்தியம் தொகுதி, ரிஷிவந்தியம் ஒன்றியம், புதுப்பட்டு ஊராட்சியில் தானியக் களம் அமைக்கும் திட்டம் தற்போது ஏதும்க்ல்லை.

49—

பல்கலைக்கழகம்

வினா எண் 11886—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் வேளாண் பல்கலைக்கழகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் வேளாண் பல்கலைக்கழகம் அமைக்க கருத்துரு எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.

50—

விலை நிர்ணயம்

வினா எண் 12340—திரு. இரா. அருள்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேளாண் விளைபொருள் நிர்ணய ஆணையம் அமைத்து அனைத்து வகை உணவு தானியங்களுக்கும் விலை நிர்ணயம் செய்ய அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

வேளாண் விளைபொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்ய ஒன்றிய அளவில் ஆணையம் உள்ளது. (ஆணையம்-வேளாண் செலவுகள் மற்றும் விலை ஆணையம்- (CACP). இவ்வாணையம்

2023 அக்டோபர் 11]

ஒவ்வோர் ஆண்டும் குறுவை (காரீப்) மற்றும் சம்பா மற்றும் குளிர்கால (ராபி) பருவங்களுக்கு 24 வகையான வேளாண் விளைபொருட்களுக்கு மண்டல அளவில் ஆய்வு கூட்டங்கள் நடத்தி பயிர் சாகுபடி செலவினங்கள், (இடுபொருள் செலவு மற்றும் வேலை ஆட்கள் கூலி உட்பட) பயிர் உற்பத்தி அளவு மற்றும் நுகர்வோரின் தேவை போன்ற காரணிகளின் அடிப்படையில் குறைந்தபட்ச ஆதார விலையினை நிர்ணயம் செய்கின்றது. மாநில அரசு நெல், கரும்பு, கொப்பரை மற்றும் இதர தானியங்களுக்கு குறைந்தபட்ச ஆதார விலை நிர்ணயம் செய்ய தனது பரிந்துரையை அளிக்கிறது.

வேளாண் விளைபொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதார விலை செய்வது ஒன்றிய அரசின் கொள்கை முடிவாகும்.

51—

பொருளாதார மண்டலம்

வினா எண் 12468—திரு. இரா. அருள்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கடலூர் மாவட்டத்தை சிறப்பு வேளாண் பொருளாதார மண்டலமாக அறிவித்து முந்திரி, பலா, நெல் ஏற்றுமதிக்கான வழிவகைகளை உருவாக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டத்தை சிறப்பு வேளாண் பொருளாதார மண்டலமாக அறிவிக்கும் திட்டம் ஏதும் அரசிடம் தற்போது இல்லை. எனினும், முந்திரி, பலா, நெல் உள்ளிட்ட வேளாண் விளைபொருட்கள் ஏற்றுமதி தொடர்பாக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

52—

ஆராய்ச்சி மையம்

வினா எண் 12714—திரு. A.J. மணிக்கண்ணன்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உளுந்தூர்பேட்டை தொகுதி, திருநாவலூர் ஒன்றியத்தில் வேளாண் ஆராய்ச்சி மையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

உளுந்தூர்பேட்டை தொகுதி, திருநாவலூர் ஒன்றியத்தில் வேளாண் ஆராய்ச்சி மையம் அமைக்கும் கருத்துரு எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.

53—

பார்த்தீனியத் தாவரம்

வினா எண் 14362—திரு. இரா. அருள்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் மண்ணுக்கும், சூழலியலுக்கும் கேடு விளைவிக்கும் பார்த்தீனியத் தாவரத்தை ஒழிக்க உரிய செயல் திட்டங்களை உருவாக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த பார்த்தீனியம் ஒழிப்பு முகாம்கள் அனைத்து மாவட்டங்களிலும் நடைபெற்றன. மாவட்ட வேளாண் இணை இயக்குநர்களிடமிருந்து பெறப்பட்ட அறிக்கையின்படி தரிசு நிலங்கள் மற்றும் சாகுபடி நிலங்களில் உள்ள பார்த்தீனிய செடி பரப்பானது 23,585 எக்டர் ஆகும். பார்த்தீனிய ஒழிப்பு

2023 அக்டோபர் 11]

இயக்கம் முதல் கட்டமாக அக்டோபர் 2011-லும், இரண்டாம் கட்டமாக பிப்ரவரி 2012-லும் மேற்கொள்ளப்பட்டு முழுமையாக அழிக்கப்பட்டது.

54—

உழவர் சந்தை

வினா எண் 14363—திரு. இரா. அருள்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் (மேற்கு) தொகுதி, சர்க்கார் கொல்லப்பட்டியில் இருக்கும் வாரச் சந்தையை உழவர் சந்தையாக அமைத்துத்தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

சேலம் (மேற்கு) தொகுதி, சர்க்கார் கொல்லப்பட்டியிலிருந்து 4 கி.மீ. தொலைவில் சூரமங்கலம் உழவர் சந்தை செயல்படுவதால், சர்க்கார் கொல்லப்பட்டியில் இருக்கும் வாரச் சந்தையை உழவர் சந்தையாக அமைத்திட சாத்தியக்கூறுகள் இல்லை.

55—

விதைப் பண்ணை

வினா எண் 14388—திரு. வி.ஜி. இராஜேந்திரன்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *பூண்டி ஒன்றியத்தில் செயல்பட்டுவரும் கொழுந்தலூர் விதைப் பண்ணையைத் தரம் உயர்த்தி, மாதிரி விதைப் பண்ணையாக அமைத்திடவும், உரங்கள் மற்றும் விதைகள் தனியாருக்கு நிகராக மானிய விலையில் கிடைக்கவும் அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கொழுந்தலூர் அரசு விதைப் பண்ணை 1958-ல் துவக்கப்பட்டது. இவ்விதைப் பண்ணையானது தற்போது வேலி அமைத்து, சூரிய ஒளி மின்சக்தி மோட்டார் அமைக்கப்பட்டு, முன்னோடி விதைப் பண்ணையாகச் செயல்பட்டு, வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்களில் இருந்து பெறப்படும் வல்லுநர் விதையைக் கொண்டு திருவள்ளூர் மாவட்டத்திற்குத் தேவைப்படும் தரமான ஆதார விதை உற்பத்தி செய்யும் நோக்கில் செயல்பட்டு வருகிறது. இந்த அரசு விதைப் பண்ணை 50.72 ஏக்கர் பரப்பளவு கொண்டதாகும். இதிலுள்ள 42.50 ஏக்கர் நிகர சாகுபடி பரப்பில் தரமான நெல் மற்றும் பச்சை பயறு ஆதார விதை உற்பத்தி செய்யப்படுகிறது. இங்கு உற்பத்தி செய்யப்படும் ஆதார விதையானது திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களுக்கும் அனுப்பப்பட்டு, இந்த ஆதார விதையைக் கொண்டு முன்னோடி விவசாயிகள் வயலில் சான்று விதை உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. அது வேளாண்மை விரிவாக்க மையம் மூலமாக விவசாயிகளுக்கு காலத்தே விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

மேலும், விதைகளுக்கான மானியங்களானது ஒன்றிய அரசால் நிர்ணயிக்கப்படுகிறது. எனவே, விதைகளைத் தனியாருக்கு நிகராக மானிய விலையில் கிடைக்கச் செய்வது ஒன்றிய மற்றும் மாநில அரசின் கொள்கை முடிவாகும்.

56—

உழவர் சந்தை

வினா எண் 14389—திரு. வி.ஜி. இராஜேந்திரன்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடம்பத்தூர் ஒன்றியம், பேரம்பாக்கம் மற்றும் கடம்பத்தூரில் உழவர் சந்தை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 அக்டோபர் 11]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் தொகுதி, கடம்பத்தூர் ஒன்றியத்தின் எல்லைக்குள் ஏற்கெனவே பேரம்பாக்கம் உழவர் சந்தை செயல்பட்டு வருவதால், கடம்பத்தூரில் உழவர் சந்தை அமைத்திட சாத்தியக்கூறுகள் இல்லை.

57—

கதிரடிக்கும் களம்

வினா எண் 15129—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், எர்ரபையனள்ளி ஊராட்சி, பாலிகாடு சந்தாரப்பட்டி சின்னாகனள்ளி ஜீவா நகர், நெக்குந்தி முருகன் நகர் மற்றும் மெட்டுக்கல் கோம்பை ஆகிய கிராமங்களில் கதிரடிக்கும் களம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், எர்ரபையனள்ளி ஊராட்சி, பாலிகாடு சந்தாரப்பட்டி சின்னாகனள்ளி ஜீவா நகர், நெக்குந்தி முருகன் நகர் மற்றும் மெட்டுக்கல் கோம்பை ஆகிய கிராமங்களில் கதிரடிக்கும் களம் அமைக்கும் திட்டம் தற்போது ஏதும் இல்லை.

58—

சுற்றுச் சுவர்

வினா எண் 15274—திரு. அ. நல்லதம்பி: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் நகரம், சிவசக்தி நகரில் செயல்பட்டுவரும் வேளாண்மைப் பொறியியல் விரிவாக்க மைய அலுவலகக் கட்டடத்திற்கு சுற்றுச் சுவர் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் வேளாண்மைப் பொறியியல் விரிவாக்க மையமானது 2017-18 நபார்டு நிதியுதவி திட்டத்தின்கீழ் ரூ.75 இலட்சம் செலவில் 25-3-2019 அன்று கட்டி முடிக்கப்பட்டது. இக்கட்டடத்தினைச் சுற்றி முள்கம்பி வேலியும் கட்டடத்திற்கு ஒதுக்கப்பட்ட ரூ.75 இலட்சம் தொகைக்குள்ளேயே அமைக்கப்பட்டுள்ளது.

எனவே, திருப்பத்தூர் வேளாண்மைப் பொறியியல் விரிவாக்க மையத்திற்கு சுற்றுச் சுவர் அமைக்க வேண்டிய அவசியமில்லை.

59—

ஆராய்ச்சி மையம்

வினா எண் 15378—திரு. இரா. அருள்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் (மேற்கு) தொகுதி, பாகல்பட்டி பகுதியில் நிலக்கடலை ஆராய்ச்சி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

சேலம் (மேற்கு) தொகுதி, பாகல்பட்டி பகுதியில் நிலக்கடலை ஆராய்ச்சி மையம் அமைக்க கருத்துரு எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.

2023 அக்டோபர் 11]

60—

உலர்களம்

வினா எண் 15401—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, கீழ்க்குப்பம் ஊராட்சியில் விவசாய உலர்களம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

நெய்வேலி தொகுதி, கீழ்க்குப்பம் ஊராட்சியில் விவசாய உலர்களம் அமைப்பது தொடர்பாக தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

61—

உலர்களம்

வினா எண் 15402—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, மேலிருப்பு ஊராட்சி, மேலிருப்பு கிராமத்தில் விவசாய உலர்களம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

நெய்வேலி தொகுதி, மேலிருப்பு ஊராட்சி, மேலிருப்பு கிராமத்தில் உலர்களம் அமைப்பது தொடர்பாக தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

62—

விரிவாக்க மையம்

வினா எண் 17541—திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆழ்வார் திருநகரியில் வேளாண்மை விரிவாக்க மையம், தானியம் மற்றும் நெல் கிடங்கு, ஆதிநாதபுரம்-சமத்துவபுரம் அருகில் ஒதுக்கப்பட்ட இடத்தில் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

தூத்துக்குடி மாவட்டம், ஆழ்வார் திருநகரியில் விதை சேமிப்புக் கிடங்குடன்கூடிய துணை வேளாண்மை விரிவாக்க மையம் ரூ.38.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் நபார்டு வங்கியின் நிதியுதவியுடன் கட்டப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளது.

63—

கட்டடம்

வினா எண் 17659—திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதி, சேத்துப்பட்டில் ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க அலுவலகக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) போளூர் தொகுதி, சேத்துப்பட்டில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ.2.00 கோடி நிதி ஒதுக்கீட்டில் ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையம் கட்டப்பட்டு வருகிறது.

2023 அக்டோபர் 11]

64—

ஆராய்ச்சி மையம்

வினா எண் 17660—திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) போளூர் தொகுதி, வேளாண்மைத் துறை மற்றும் தோட்டக்கலைத் துறையின்மூலமாக சந்தவாசல் பகுதியில் வாழை ஆராய்ச்சி நிறுவனம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) போளூர் தொகுதி, சந்தவாசல் பகுதியில் வாழை ஆராய்ச்சி நிறுவனம் அமைக்க கருத்துரு எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.

65—

ஆராய்ச்சி மையம்

வினா எண் 17664—திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவண்ணாமலை மாவட்டத்தில் மரவள்ளிக் கிழங்கு ஆராய்ச்சி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டத்தில் மரவள்ளிக் கிழங்கு ஆராய்ச்சி மையம் அமைக்க கருத்துரு எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.

66—

குடோன்

வினா எண் 17670—திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டத்தில் மலர்களைப் பாதுகாக்க குளிர்பதன வசதியுடன்கூடிய குடோன் மற்றும் மலர் ஏற்றுமதி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டத்தில் மலர்களைப் பாதுகாக்க குளிர்பதன வசதியுடன்கூடிய குடோன் மற்றும் மலர் ஏற்றுமதி மையம் அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

67—

கிடங்கு

வினா எண் 17676—திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதி, களம்பூர் பேரூராட்சியில் கூடுதல் வேளாண்மை விரிவாக்கக் கிடங்கு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) போளூர் தொகுதி, களம்பூர் பேரூராட்சியில் விதை சேமிப்புக் கிடங்குடன்கூடிய துணை வேளாண்மை விரிவாக்க மையம் ரூ.38.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் நபார்டு வங்கியின் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியுதவியுடன் கட்டப்பட்டுள்ளது.

2023 அக்டோபர் 11]

68—

கட்டடம்

வினா எண் 17770—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரம் வேளாண்மைத் துறைக்கு கூடுதல் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரத்தில் புதிய வேளாண்மை விரிவாக்க மையம் அமைக்க தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் 2022-23-ன்கீழ் நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டு கட்டடப் பணியானது தொடங்கப்பட்டுள்ளது.

69—

விரிவாக்க துணை மையம்

வினா எண் 17774—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, பாப்பாரப்பட்டி பகுதியில் வேளாண் விரிவாக்க துணை மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் ஒரு வேளாண்மை விரிவாக்க மையமும் மற்றும்

பாப்பாரப்பட்டியில் ஒரு துணை வேளாண்மை விரிவாக்க மையமும் உள்ளன. இம்மையங்களில் விதைகள், உயிர் உரங்கள் உள்ளிட்ட இடுபொருட்கள், பயிர் சாகுபடி காலத்திற்கேற்ப இருப்பு வைக்கப்பட்டு, விவசாயப் பெருமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வரப்படுகிறது.

70—

துணை மையம்

வினா எண் 17777—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, புலிக்கரை ஊராட்சிக்குட்பட்ட புலிக்கரை பகுதியில் வேளாண் உதவி இயக்குநர் துணை மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகம் முழுவதும் வேளாண்மைத் துறையின்கீழ் 383 வேளாண்மை விரிவாக்க மையங்களும், 497 துணை வேளாண்மை விரிவாக்க மையங்களும் செயல்பட்டு வருகின்றன. தருமபுரி மாவட்டம், புலிக்கரை பகுதியில் ஒரு துணை வேளாண்மை விரிவாக்க மையம் செயல்பட்டு வருகிறது. இவ்வேளாண்மை விரிவாக்க மையத்தில் வேளாண்மை உதவி இயக்குநர் கட்டுப்பாட்டில் வேளாண்மை அலுவலர்கள், துணை வேளாண்மை அலுவலர்கள், உதவி வேளாண்மை அலுவலர்கள் மற்றும் உதவி விதை அலுவலர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இவ்விரிவாக்க மையத்தின்மூலம் பெண்ணாகரம் தொகுதி, புலிக்கரை ஊராட்சி மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளைச் சேர்ந்த அனைத்து விவசாயிகளுக்கும் அத்தியாவசியமான இடுபொருட்கள் இருப்பு வைக்கப்பட்டு காலத்தே விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

2023 அக்டோபர் 11]

71—

தானியக் களம்

வினா எண் 18121—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *பெண்ணாகரம் தொகுதி, வேப்பிலஅள்ளி ஊராட்சிக்குட்பட்ட சஜ்ஜலஅள்ளி கிராமத்தில் விவசாயிகளின் நலன் கருதி புதிய தானியக் களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) *பெண்ணாகரம் தொகுதி, வேப்பிலஅள்ளி ஊராட்சிக்குட்பட்ட சஜ்ஜலஅள்ளி கிராமத்தில் புதிய தானியக் களம் அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.*

72—

வேளாண்மைக் கல்லூரி

வினா எண் 18250—திரு. ஆ. அருண்மொழிதேவன்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *கடலூர் மாவட்டம், விருத்தாசலத்தில் வேளாண்மைக் கல்லூரி துவங்க அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) *கடலூர் மாவட்டம், விருத்தாசலத்தில் வேளாண்மைக் கல்லூரி அமைக்க கருத்துரு எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.*

73—

வேளாண்மைக் கல்லூரி

வினா எண் 18929—திரு. பெ. ராமலிங்கம்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் தொகுதி, நாமக்கல்லில் வேளாண்மைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் தொகுதி, நாமக்கல்லில் வேளாண்மைக் கல்லூரி அமைக்க கருத்துரு எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.

74—

தானியக் களம்

வினா எண் 21043—திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், இராஜாம்புலியூர் கிராமம், **ஸ்ரீ**கருப்பசாமி ஆலயத்தின் அருகில் தானியக் களம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், இராஜாம்புலியூர் கிராமம், ஸ்ரீகருப்பசாமி ஆலயத்தின் அருகில் தானியக் களம் அமைத்திட திட்டம் ஏதும் இல்லை.

2023 அக்டோபர் 11]

75—

தானியக் களம்

வினா எண் 21047—திரு. ச. சிவகுமார்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், பூபட்டி கிராமத்தில் புதியதாக சிமென்ட் தானியக் களம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், பூபட்டி கிராமத்தில் தானியக் களம் அமைத்திட திட்டம் தற்போது ஏதும் இல்லை.

76—

தானியக் களம்

வினா எண் 21048—திரு. ச. சிவகுமார்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், கடம்பூர் கிராமம், பொன்னியம்மன் கோயில் அருகே புதியதாக தானியக் களம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், கடம்பூர் கிராமம், பொன்னியம்மன் கோயில் அருகே புதியதாக தானியக் களம் அமைத்திட திட்டம் தற்போது ஏதும் இல்லை.

77—

தானியக் களம்

வினா எண் 21050—திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், நெகனூர்பட்டி கிராமம், அடுக்கங்கல் பாதை அருகில் தானியக் களம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், நெகனூர் அடுக்கங்கல் பாதை அருகில் தானியக் களம் அமைத்திட திட்டம் ஏதும் இல்லை.

78—

தானியக் களம்

வினா எண் 21051—திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், நெகனூர்பட்டி கிராமம், தாங்கல் கரைப்பகுதியில் தானியக் களம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், நெகனூர்பட்டி கிராமம், தாங்கல் கரைப்பகுதியில் தானியக் களம் அமைத்திட திட்டம் தற்போது ஏதும் இல்லை.

2023 அக்டோபர் 11]

79—

நெற்களம்

வினா எண் 21428—திரு. N. அசோக்குமார்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஊமத்தநாடு ஊராட்சியில் பெரிய கத்திக்கோட்டை, ஆலடிக்காடு, பெத்தநாச்சிவயல், உடையநாடு, கைவனவயல் ஆகிய பகுதிகளில் சிமென்ட் நெற்களம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஊமத்தநாடு ஊராட்சியில் பெரிய கத்திக்கோட்டை, ஆலடிக்காடு, பெத்தநாச்சிவயல், உடையநாடு, கைவனவயல் ஆகிய பகுதிகளில் சிமென்ட் நெற்களம் அமைத்திட திட்டம் ஏதும் இல்லை.

80—

சேமிப்புக் கிடங்கு

வினா எண் 22880—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலம் தொகுதி, கீழ்மாம்பட்டு ஊராட்சியில் குளிர்சாதன காய்கறி மற்றும் பழங்கள் சேமிப்புக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலம் தொகுதி, கீழ்மாம்பட்டு ஊராட்சியில் குளிர்சாதன காய்கறி மற்றும் பழங்கள் சேமிப்புக் கிடங்கு அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

81—

வேளாண்மைக் கல்லூரி

வினா எண் 22882—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலம் தொகுதியில் அரசு வேளாண்மைக் கல்லூரி துவங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலம் தொகுதியில் அரசு வேளாண்மைக் கல்லூரி அமைக்க கருத்துரு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

82—

வேளாண்மைக் கல்லூரி

வினா எண் 22892—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2023 அக்டோபர் 11]

(அ) கடலூர் மாவட்டம், விருத்தாசலம் தொகுதி, விருத்தாசலத்தில் அரசு வேளாண்மைக் கல்லூரி துவங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், விருத்தாசலம் தொகுதி, விருத்தாசலத்தில் அரசு வேளாண்மைக் கல்லூரி துவங்குவது குறித்த கருத்துரு எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.

83—

கல்லூரி

வினா எண் 22902—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பாலக்கோட்டில் அறிவிக்கப்பட்ட தோட்டக்கலை பட்டயக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், கும்மனூர் கிராமம், சிக்கதோரண பெட்டா என்னும் இடத்தில் புதிய வேளாண்மை மற்றும் தோட்டக்கலை பட்டயப் படிப்பு கல்லூரி அமைத்திட தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அந்தப் பகுதியில் உள்ள நிலமானது பாறைப்பாங்காக உள்ளதாலும், நகர்ப்புறத்திலிருந்து வெகுதொலைவில் உள்ளதாலும், இங்கு பட்டயக் கல்லூரி அமைத்திட ஏதுவான சூழ்நிலை இல்லாததால்,

[*2023 அக்டோபர் 11*

தருமபுரி தலைமை இடத்திற்கு மிக அருகாமையில் வேளாண்மை அறிவியல் நிலையம் மற்றும் மாநில அரசு விதைப் பண்ணை அமைந்துள்ள பாப்பாரப்பட்டி பகுதியில் மாதேஹள்ளி மற்றும் கொள்ளுப்பட்டி கிராமங்களில் அமைக்க பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

84—

உற்பத்தியாளர் நிறுவனம்

வினா எண் 22944—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, ஏரியூர் பகுதியில் நவதானிய உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் நபார்டு வங்கி உதவியுடன் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) பெண்ணாகரம் தொகுதி, ஏரியூர் பகுதியில் நவதானிய உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் நபார்டு வங்கி உதவியுடன் 14-7-2016 அன்று தொடங்கப்பட்டு 1001 உறுப்பினர்களுடன் செயல்பட்டு வருகிறது. அதன் பதிவு எண் U01110TZ2016PTC027774 ஆகும்.

மேற்படி உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் சிறுதானியம் மற்றும் பயறு வகைகள் மதிப்புக் கூட்டப்பட்டு வணிக செயல்பாடுகளுடன் செயல்பட்டு வருகிறது.

வணிக பரிவர்த்தனை (Turn Over) முறையே 2020-2021 ஆம் ஆண்டில் ரூ.39 இலட்சமும், 2021-2022 ஆம் ஆண்டில் ரூ.48 இலட்சமும், 2022-2023 ஆம் ஆண்டில் ரூ.20 இலட்சமும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ஆ) 14-7-2016 முதல் செயல்பட்டு வருகிறது.

2023 அக்டோபர் 11]

85—

உற்பத்தியாளர் நிறுவனம்

வினா எண் 22945—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, பிக்கிலி ஊராட்சிக்குட்பட்ட பகுதியில் நவதானிய உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் நபார்டு வங்கி உதவியுடன் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) பெண்ணாகரம் தொகுதி, பிக்கிலி ஊராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள விவசாயிகளை ஒருங்கிணைத்து நவதானிய உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் நபார்டு வங்கி உதவியுடன் 14-7-2016 அன்று தொடங்கப்பட்டு 1001 உறுப்பினர்களுடன் செயல்பட்டு வருகிறது. அதன் பதிவு எண் U01110TZ2016PTC027774 ஆகும்.

மேற்படி உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் சிறுதானியம் மற்றும் பயறு வகைகள் மதிப்புக் கூட்டப்பட்டு வணிக செயல்பாடுகளுடன் செயல்பட்டு வருகிறது.

வணிக பரிவர்த்தனை (Turn Over) முறையே 2020-2021 ஆம் ஆண்டில் ரூ.39 இலட்சமும், 2021-2022 ஆம் ஆண்டில் ரூ.48 இலட்சமும், 2022-2023 ஆம் ஆண்டில் ரூ.20 இலட்சமும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ஆ) 14-7-2016 முதல் செயல்பட்டு வருகிறது.

86—

தானியக் களம்

வினா எண் 23123—திரு. ச. சிவகுமார்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், கீழ்மாம்பட்டு கிராமம், வடதாரம் எல்லையில் அமைந்துள்ள அய்யனாரப்பன் ஆலயம் அருகில் தானியக் களம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், கீழ்மாம்பட்டு கிராமம், வடதாரம் எல்லையில் அமைந்துள்ள அய்யனாரப்பன் ஆலயம் அருகில் தானியக் களம் அமைத்திட திட்டம் தற்போது ஏதும் இல்லை.

87—

தானியக் களம்

வினா எண் 23124—திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், தென் ஆலப்பாக்கம் கிராமம் மேம்பாலம் அருகில் புதியதாக தானியக் களம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், தென் ஆலப்பாக்கம் கிராமம் மேம்பாலம் அருகில் தானியக் களம் அமைத்திட திட்டம் தற்போது ஏதும் இல்லை.

88—

தானியக் களம்

வினா எண் 23125—திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2023 அக்டோபர் 11]

(அ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், கீழ்பாப்பாம்பாடி கிராமம், நதியா நகர் பகுதியில் சிமென்ட் தானியக்களம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், கீழ்பாப்பாம்பாடி கிராமம், நதியா நகர் பகுதியில் சிமென்ட் தானியக்களம் அமைத்திட திட்டம் தற்போது ஏதும் இல்லை.

89—

கட்டடம்

வினா எண் 23162—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரத்தில் செயல்பட்டுவரும் தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

மேலும், தருமபுரி மாவட்டத்தில் தனிப்பட்ட விவசாயிகளுக்கு கிராம மற்றும் வட்டார அளவிலான வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாடகைக்கு வழங்கும் திட்டங்களின்கீழ் கடந்த 2002-03 ஆம் ஆண்டு முதல் இதுவரை 571 டிராக்டர்கள் விவசாயிகள் பயன்பெறும் வகையில் வேளாண்மைப் பொறியியல் துறையின்மூலம் மானியத்தில் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், விவசாயிகளுக்கு தொடர்ந்து டிராக்டர்கள் 50 சதவிகித மானியத்தில் அதிகபட்ச மானியமாக ரூ.5 இலட்சம் வரை வழங்கப்பட்டு வருகிறது.

விவசாயிகள் தங்களுக்குத் தேவையான வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை வேளாண்மைப் பொறியியல் துறை அலுவலகங்களுக்குச் செல்லாமலே, இ.வாடகை ஆன்லைன் செயலியின்மூலம் தங்கள் வீடு அல்லது வயல்களிலிருந்தே

2023 அக்டோபர் 11]

முன்பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம். விவசாயிகளிடம் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ள வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திரங்களை வாடகைக்கு வழங்கும் திட்டம் தொடர்ந்து செயலாக்கம் செய்யப்பட்டு வருகிறது.

48—

இடுபொருட்கள்

வினா எண் 58676—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி மாவட்டத்திலுள்ள ஏழ்மையான விவசாயிகள் அனைவருக்கும் விவசாய இடுபொருட்கள் இலவசமாக வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

தோட்டக்கலைத் துறையின்கீழ் செயல்படுத்தப்படும் அனைத்து திட்டங்களின் வாயிலாக விவசாயிகள் அனைவருக்கும் விவசாய இடுபொருட்கள் மானியத்தில் வழங்கப்படுகின்றன.

49—

பயிற்சி

வினா எண் 58677—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி மாவட்டத்தில் புதிய வகையான விவசாயத் தொழில்நுட்பத்தைப் பற்றி விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டத்தில் கடந்த ஆண்டுகளில் புதிய தொழில்நுட்பங்களான செம்மை கரும்பு சாகுபடி, தரிசு நில

[*2023 அக்டோபர் 11*

மேம்பாடு, ஒருங்கிணைந்த பண்ணையம், அங்கக வேளாண்மை, தரமான விதை உற்பத்தி தொழில்நுட்பம், சிறுதானியங்கள் உற்பத்தி மற்றும் மதிப்புக்கூட்டுதல், புதிய வகை பண்ணை இயந்திரங்கள் பராமரித்தல், தோட்டக்கலை பயிர்களுக்கான அடர்வு நடவு குறித்து பயிற்சிகள், நிழல் வகைக் குடிலில் உயர் மதிப்புள்ள காய்கறிகள் பூக்கள் வளர்த்தல் பயிற்சி, ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை, தேனி வளர்த்தல், பட்டுப்பூச்சி வளர்த்தல், மீன் வளர்ப்பில் உயர் தொழில்நுட்பங்கள், வேளாண் காடு வளர்ப்பு, நுண்ணீர் பாசனம் போன்ற பயிற்சிகள் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை-அட்மா திட்டத்தின்மூலம் வேளாண்மை-உழவர் நலத் துறை, கால்நடைப் பராமரிப்பு, பட்டுவளர்ப்பு, மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை, வனத்துறை ஆகிய துறைகளுடன் ஒருங்கிணைத்து மாவட்டம், மாநிலம் மற்றும் வெளிமாநில அளவில் வழங்கப்பட்டு வருகிறது.

50—

கண்காட்சி

வினா எண் 62722—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பிற மாநிலங்களில் நடைபெறும் மாநில அளவிலான வேளாண் கண்காட்சிகளுக்கு தமிழக விவசாயிகளை அழைத்துச் செல்ல அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அட்மா (ATMA) திட்டத்தில் ஒன்றிய அரசு மற்றும் பிற மாநில அரசுகள் நடத்தும் கண்காட்சிகளைப் பார்வையிட்டு பயன்பெற தமிழக விவசாயிகள் அழைத்து செல்லப்படுகின்றனர்.

2023 அக்டோபர் 11]

2019-20, 2020-21 ஆம் ஆண்டுகளில் கோவிட் பெருந்தொற்று காரணமாக பிற மாநிலங்களுக்கு கண்காட்சிக்கு விவசாயிகளை அழைத்துச் செல்ல இயலவில்லை. 2022-2023 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் ஒன்றிய அரசு சார்பில் பெங்களூருவில் நடைபெற்ற சர்வதேச வேளாண் இயந்திரமயமாக்குதல் கண்காட்சிக்கு 240 விவசாயிகள் அழைத்துச் செல்லப்பட்டு பயன் பெற்றனர்.

2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் நடைபெற்ற சிறு தானியங்கள் மற்றும் அங்கக வேளாண்மை குறித்து பெங்களூரில் நடைபெற்ற சர்வதேச வேளாண் கண்காட்சிக்கு 22 மாவட்டங்களில் இருந்து 240 விவசாயிகள் அழைத்துச் செல்லப்பட்டு பயனடைந்துள்ளனர்.

51—

தானியக் களம்

வினா எண் 63803—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, கோடிஅள்ளி ஊராட்சி, மந்தைமேடு கிராமத்தில் புதிய தானியக் களம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் தொகுதி, கோடிஅள்ளி ஊராட்சி, மந்தைமேடு கிராமத்தில் புதிய தானியக் களம் அமைக்கும் திட்டம் தற்போது ஏதும் இல்லை.

52—

தானியக் களம்

வினா எண் 64018—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, மாதேஅள்ளி ஊராட்சி, பில்லப்பநாயகனஅள்ளி, நான்கு ரோட்டின் அருகே தானியக் களம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் தொகுதி, மாதேஅள்ளி ஊராட்சி, பில்லப்பநாயகனஅள்ளி, நான்கு ரோட்டின் அருகே தானியக் களம் அமைக்கும் திட்டம் தற்போது ஏதும் இல்லை.

53—

தானியக் களம்

வினா எண் 64496—திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், கள்ளபுலியூர் காலனி தேவாலயம் அருகிலும் மற்றும் மேல்அத்திபாக்கம் கிராமத்தில் மெயின்ரோடு அத்தியம்மன் கோயில் எதிர்புறத்திலும் தானியக் களம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், கள்ளபுலியூர் காலனி தேவாலயம் அருகிலும் மற்றும் மேல்அத்திபாக்கம் கிராமத்தில் மெயின்ரோடு அத்தியம்மன் கோயில் எதிர்புறத்திலும் தானியக் களம் அமைத்திட திட்டம் தற்போது ஏதும் இல்லை.

2023 அக்டோபர் 11]

54—

தானியக் களம்

வினா எண் 64499—திரு. ச. சிவகுமார்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், கல்லாலில்பட்டு, மருதேரி, வல்லம் கிராமங்களிலும் மற்றும் இரும்புளி கிராமத்தில் காலனியில் மயானக் கொட்டகை அருகிலும் தானியக் களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், கல்லாலில்பட்டு, மருதேரி, வல்லம் கிராமங்களிலும் மற்றும் இரும்புளி கிராமத்தில் காலனி மயானக்கொட்டகை அருகிலும் தானியக் களம் அமைத்திட திட்டம் தற்போது ஏதும் இல்லை.

55—

தானியக் களம்

வினா எண் 64503—திரு. ச. சிவகுமார்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலம் தொகுதி, ஒலக்கூர் ஒன்றியம், வெள்ளிமேடு மற்றும் வெள்ளிமேடு பேட்டை கிராமத்தில் மேட்டுத் தெருவிலும் மற்றும் கல்பாக்கம் கிராமத்தில் பள்ளிக்குளம் அருகிலும் தானியக் களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலம் தொகுதி, ஒலக்கூர் ஒன்றியம், வெள்ளிமேடு பேட்டை கிராமத்தில் மேட்டுத் தெருவிலும் மற்றும் கல்பாக்கம் கிராமத்தில் பள்ளிக்குளம் அருகிலும் தானியக் களம் அமைத்திட திட்டம் தற்போது ஏதும் இல்லை.

56—

தானியக் களம்

வினா எண் 64566—திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலம் தொகுதி, ஒலக்கூர் ஒன்றியம், மேல்மாவிலங்கை கிராமத்தில் ஏரிக்கரை அருகில் தானியக் களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலம் தொகுதி, ஒலக்கூர் ஒன்றியம், மேல்மாவிலங்கை கிராமத்தில் ஏரிக்கரை அருகில் தானியக் களம் அமைத்திட திட்டம் தற்போது ஏதும் இல்லை.

57—

தானியக் களம்

வினா எண் 66124—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2023 அக்டோபர் 11]

(அ) பெண்ணாகரம் தொகுதி, பேகாரஅள்ளி ஊராட்சி, சுண்ணாம்பட்டி கிராமத்தில் தானியக் களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் தொகுதி, பேகாரஅள்ளி ஊராட்சி, சுண்ணாம்பட்டி கிராமத்தில் தானியக் களம் அமைக்கும் திட்டம் தற்போது ஏதும் இல்லை.

58—

தானியக் களம்

வினா எண் 66127—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, பாடி ஊராட்சி, கண்ணுகாரம்பட்டியில் புதிய தானியக் களம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் தொகுதி, பாடி ஊராட்சி, கண்ணுகாரம்பட்டியில் புதிய தானியக் களம் அமைக்கும் திட்டம் தற்போது ஏதும் இல்லை.

59—

புதிய நெற்களம்

வினா எண் 66380—திரு. க. அன்பழகன்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[*2023 அக்டோபர் 11*

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஒன்றியம், குமரங்குடி ஊராட்சி, குமரங்குடியில் புதிய நெற்களம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஒன்றியம், குமரங்குடி ஊராட்சி, குமரங்குடியில் புதிய நெற்களம் அமைக்கும் திட்டம் தற்போது ஏதும் இல்லை.

60—

உழவர் உற்பத்தியாளர் நிறுவனம்

வினா எண் 66811—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, பாலக்கோடு வட்டம், கம்மாளப்பட்டி ஊராட்சி, கம்மாளப்பட்டியில் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் (நவதானியம்) துவங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட பிக்கிலி, இண்டூர், பாப்பாரப்பட்டி, பெரும்பாலை பகுதிகளில் உள்ள விவசாயிகளை ஒருங்கிணைத்து, நவதானிய உழவர் உற்பத்தியாளர் நிறுவனம், நபார்டு வங்கி உதவியுடன் *14-7-2016* அன்று தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. அதன் பதிவு எண் U*01110*TZ*2016*PTC*027774* ஆகும். மேலும், புதியதாக கம்மாளப்பட்டியில் நவதானிய உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் துவக்க சாத்தியக்கூறு இல்லை.

2023 அக்டோபர் 11]

61—

தானியக் களம்

வினா எண் 67362—திரு. ச. சிவகுமார்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலம் தொகுதி, மயிலம் ஒன்றியம், ஆசூர் கிராமத்தில் ராயல் ஏரி, சமுத்திர ஏரி அருகிலும் மற்றும் இளமங்கலம் கிராமத்தில் சின்ன கிணறு அருகிலும் தானியக் களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலம் தொகுதி, மயிலம் ஒன்றியம், ஆசூர் கிராமத்தில் ராயல் ஏரி, சமுத்திர ஏரி அருகிலும் மற்றும் இளமங்கலம் கிராமத்தில் சின்ன கிணறு அருகிலும் தானியக் களம் அமைத்திட திட்டம் தற்போது ஏதும் இல்லை.

62—

தானியக் களம்

வினா எண் 67369—திரு. ச. சிவகுமார்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், கப்பை, காரியமங்கலம், கீழையூர் மற்றும் மணியம்பட்டு ஆகிய கிராமங்களில் தானியக் களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், கப்பை, காரியமங்கலம், கீழையூர் மற்றும் மணியம்பட்டு ஆகிய

[*2023 அக்டோபர் 11*

கிராமங்களில் தானியக் களம் அமைத்திட திட்டம் தற்போது ஏதும் இல்லை.

63—

வருவாய் வட்டம்

வினா எண் 147—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பாபநாசம் தொகுதி, பாபநாசம் வட்டத்தில் அம்மாப்பேட்டையைத் தனி வட்டமாக உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் தொகுதி, அம்மாப்பேட்டை ஒன்றியத்தில் புதிய வருவாய் வட்டம் உருவாக்கும்பட்சத்தில் எஞ்சியுள்ள பாபநாசம் வருவாய் வட்டத்தின் பரப்பளவு அரசாணை (நிலை) எண் 279, வருவாய்த் துறை, நாள் 9-6-2003-ன்படி நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்களில் பரப்பளவு பூர்த்தியாகாததால் அம்மாப்பேட்டையைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய் வட்டம் உருவாக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

64—

தனி வட்டம்

வினா எண் 2592—திரு. K. மாரிமுத்து: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டையைத் தனி வட்டமாக அறிவித்து 10 ஆண்டுகள் ஆகிறது. அதனைச் செயல்பாட்டிற்குக் கொண்டு வர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 அக்டோபர் 11]

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியில் முத்துப்பேட்டையைத் தலைமையிடமாகக் கொண்டு, புதிய வருவாய் வட்டம் அரசாணை (நிலை) எண் 162, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 28-3-2023-ன்படி ஆணையிடப்பட்டு, 6-4-2023 அன்று முற்பகல் முதல் செயல்பட்டு வருகிறது.

65—

பட்டா

வினா எண் 2784—திரு. ஜே.ஜே. எபினேசர் என்கிற ஜான் எபினேசர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஆர்.கே.நகர் தொகுதி, காசிபுரம் 'B' பிளாக் 10, 11-வது தெருவில் வசிப்பவர்களுக்குப் பட்டா வழங்கிட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

ராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, காசிபுரம் 'B' பிளாக் 10, 11-வது தெரு என்பது சென்னை மாநகராட்சிக்குட்பட்ட இடமாகும். மேற்கண்ட இடத்தில் குடியிருந்துவரும் தகுதியுள்ள நபர்களுக்கு விதிகளின்படி, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தினால் குடியிருப்பு கட்டித் தருவதற்கு அரசு கனிவுடன் நடவடிக்கை மேற்கொள்ளும்.

66—

வருவாய் வட்டம்

வினா எண் 4028—திரு. ரூபி ஆர். மனோகரன்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[*2023 அக்டோபர் 11*

(அ) நாங்குநேரி தொகுதி, களக்காட்டைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, களக்காட்டைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய் வட்டம் உருவாக்கும்பட்சத்தில், நாங்குநேரிக்கும் புதிதாக உத்தேசிக்கப்பட்டுள்ள களக்காடு வருவாய் வட்டத்திற்கும் சுமார் 12 கி.மீ. தூரம் மட்டுமே உள்ளதாலும், பெரும்பாலான சேவைகள் இணையவழியிலேயே வழங்கப்படுவதாலும், தற்போதைக்கு களக்காட்டைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய் வட்டம் உருவாக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

67—

கட்டடம்

வினா எண் 5630—திரு. மு. பன்னீர்செல்வம்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 158, வருவாய்த் துறை, நாள் 4-5-2017-ன்படி சீர்காழி வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு 2017-2018 ஆம்

2023 அக்டோபர் 11]

ஆண்டில் நிதி ஒதுக்கீடாக ரூ.2,34,30,000/- நிருவாக அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது. தற்போது மேற்படி கட்டடம் கட்டுவதற்கு ஏற்படும் கூடுதல் செலவினத் தொகையினையும் சேர்த்து திருத்திய நிருவாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு பொதுப் பணித் துறையிலிருந்து பெறப்பட்டு, கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரிடமிருந்து கருத்துரு பெறப்படும்போது நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

68—

கட்டடம்

வினா எண் 5757—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, மாதேஅள்ளி ஊராட்சியில் கிராம நிருவாக அலுவலர் (VAO) அலுவலகம் பழுதடைந்துள்ளதால் புதிய கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், பாப்பாரப்பட்டி உள்வட்டம், மாதேஅள்ளி கிராம நிருவாக அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவது தொடர்பாக கருத்துரு ஏதும் அரசளவில் நிலுவையில் இல்லை. எனினும், கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிர்வாக ஆணையரிடமிருந்து உரிய கருத்துரு பெறப்படும்போது நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

69—

கட்டடம்

வினா எண் 8232—திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[*2023 அக்டோபர் 11*

(அ) ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, சிவபுரம் ஊராட்சியில் கிராம நிருவாக அலுவலக கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, சிவபுரம் கிராமம், ஓரகட மகாதேவிமங்கலம் வருவாய் கிராமத்திற்குட்பட்ட உட்கிராமமாகும். எனவே, மேற்படி சிவபுரம் கிராமத்திற்கு தனியாக கிராம நிருவாக அலுவலர் அலுவலகம் கட்டுவதற்கு அவசியம் எழவில்லை.

70—

அலுவலகம்

வினா எண் 10734—திரு. துரை. சந்திரசேகர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னேரி தொகுதி, சோழவரம் ஒன்றியம், ஆண்டாள்குப்பம் ஊராட்சி, பெருஞ்சேரி கிராமத்தில் வட்டாட்சியர் அலுவலகம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 445, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் [வ.நி.2(1)] துறை, நாள் 27-8-2020-இல் ரூ.3,06,94,070/- மதிப்பீட்டில் திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், பொன்னேரி-2 கிராமம், புல எண் 529/2, விஸ்தீரணம் 0.78.53 ஏர்ஸ் மேய்க்கால் வகைப்பாடு கொண்ட நிலத்தில் பொன்னேரி வட்டாட்சியர் அலுவலக கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. பொதுமக்கள் நலன் கருதி கட்டடம் கட்டும் பணி

2023 அக்டோபர் 11]

விரைவில் முடிக்கப்பட்டு, பொதுமக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படும்.

71—

தனி வட்டம்

வினா எண் 10911—திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தளி தொகுதி, தேன்கனிக்கோட்டை வட்டத்தை இரண்டாகப் பிரித்து, இராயக்கோட்டையை மையமாகக் கொண்டு புதிய வட்டம் உருவாக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், இராயக்கோட்டை உள்வட்டத்திற்கு அருகில் உள்ள கெலமங்கலம் உள்வட்டத்தின் பெரும்பாலான பகுதிகள் தேன்கனிக்கோட்டை உள்வட்டத்தை ஒட்டியே உள்ளன. மேலும், குறைவான கட்டமைப்பு, போதிய சாலை வசதி மற்றும் வாகன வசதியற்ற அஞ்செட்டி பகுதி தற்போது தேன்கனிக்கோட்டை வருவாய் வட்டத்திலிருந்து தனி வட்டமாகப் பிரிக்கப்பட்டுள்ளது. எனவே, தேன்கனிக்கோட்டை வட்டத்திலிருந்து தனி வட்டமாக இராயக்கோட்டையை உருவாக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

72—

அலுவலகம்

வினா எண் 13235—திரு. ஐ.பி. செந்தில்குமார்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பழனி தொகுதி, பழனி வட்டம், நெய்க்காரப்பட்டி பேரூராட்சி கிராம நிருவாக அலுவலர் அலுவலகம் புதியதாக அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

பழனி தொகுதி, பழனி வட்டம், நெய்க்காரப்பட்டி பேரூராட்சி கிராம நிருவாக அலுவலர் அலுவலகக் கட்டடம் கட்டுவது தொடர்பான கருத்துரு ஏதும் அரசளவில் நிலுவையில் இல்லை. மேற்படி கட்டடம் கட்டுவது தொடர்பாக உரிய மதிப்பீட்டறிக்கை பொதுப் பணித் துறையிலிருந்து பெறப்பட்டு, கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரிடமிருந்து கருத்துரு பெறப்படும்போது மேற்படி கட்டடத்தைப் புதுப்பித்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

73—

கட்டடம்

வினா எண் 13856—திரு. S. ராஜகுமார்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை தொகுதி, மயிலாடுதுறை நகரப் பகுதியில் உள்ள கிராம நிருவாக அலுவலர்களுக்கு நிரந்தரக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலாடுதுறை தொகுதி, மயிலாடுதுறை நகரப் பகுதியில் கிராம நிருவாக அலுவலர் கட்டடம் கட்டுதல்/ புதுப்பித்தல் தொடர்பாக கருத்துரு ஏதும் அரசளவில் நிலுவையில்

2023 அக்டோபர் 11]

இல்லை. உரிய மதிப்பீட்டறிக்கை பொதுப் பணித் துறையிலிருந்து பெறப்பட்டு கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரிடமிருந்து கருத்துரு பெறப்படும்போது நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

74—

அலுவலகம்

வினா எண் 14111—திரு. க. கார்த்திகேயன்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ரிஷிவந்தியம் தொகுதி, ரிஷிவந்தியம் ஒன்றியம், தொழுவந்தாங்கல் ஊராட்சிக்கு கிராம நிருவாக அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

ரிஷிவந்தியம் தொகுதி, ரிஷிவந்தியம் ஒன்றியம், தொழுவந்தாங்கல் ஊராட்சிக்கு கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் கட்டுவது தொடர்பான கருத்துரு ஏதும் அரசளவில் நிலுவையில் இல்லை. மேற்படி கட்டடம் கட்டுவது தொடர்பாக உரிய மதிப்பீட்டறிக்கை பொதுப் பணித் துறையிலிருந்து பெறப்பட்டு கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரிடமிருந்து கருத்துரு பெறப்படும்போது மேற்படி கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

75—

அலுவலகம்

வினா எண் 14446—முனைவர் த. இனிகோ இருதயராஜ்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[*2023 அக்டோபர் 11*

(அ) திருச்சி கிழக்கு தொகுதி, ஏரிக்கரை சாலையில் செயல்படும் கிராம நிருவாக அலுவலர் அலுவலகத்தினை டி.வி.எஸ். டோல்கேட்டுக்கு அருகில் உள்ள சுற்றுலா மாளிகைக்கு அருகே உள்ள சொந்தக் கட்டடத்தில் இயங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருச்சிராப்பள்ளி மாவட்டம் மற்றும் திருச்சிராப்பள்ளி (கிழக்கு) வட்டம், கொட்டப்பட்டு கிராமத்தில் வார்டு AE, பிளாக்-23, நகரளவை எண் 7/1-ல் அரசு புறம்போக்கு நிலத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு அருகில் புதியதாக திருச்சிராப்பள்ளி (கிழக்கு) வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டப்பட்டுள்ளது. புதியதாக கட்டப்பட்டுள்ள திருச்சிராப்பள்ளி (கிழக்கு) வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு வளாகத்தில் திருச்சிராப்பள்ளி (கிழக்கு) சட்டமன்றத் தொகுதி கட்டடம் அமைக்க திட்டமிடப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதால், மேற்படி சுற்றுலா மாளிகைக்கு அருகாமையில், கொட்டப்பட்டு கிராம நிருவாக அலுவலர் அலுவலகம் அமைக்க வழிவகையில்லை.

76—

கட்டடம்

வினா எண் 14741—திரு. துரை. சந்திரசேகர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னேரி தொகுதி, சோழவரம் ஒன்றியம், பஞ்செட்டி ஊராட்சி, தச்சூர் கிராமத்தில் கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 அக்டோபர் 11]

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதி, சோழவரம் ஒன்றியம், பஞ்செட்டி ஊராட்சி, தச்சூர் கிராமத்தில் கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் கட்டுவது தொடர்பான கருத்துரு ஏதும் அரசளவில் நிலுவையில் இல்லை. மேற்படி அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டுவது தொடர்பாக உரிய மதிப்பீட்டறிக்கை பொதுப் பணித் துறையிலிருந்து பெறப்பட்டு கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரிடமிருந்து கருத்துரு பெறப்படும்போது நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

77—

கட்டடம்

வினா எண் 16088—திரு. ஆ. அருண்மொழிதேவன்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மாவட்டம், கீரப்பாளையம் ஒன்றியம், K.ஆடூர் ஊராட்சியில் பூங்குடி கிராமத்திற்கு கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், கீரப்பாளையம் ஒன்றியம், K.ஆடூர் ஊராட்சியில் பூங்குடி கிராமத்திற்கு கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் கட்டுவது தொடர்பான கருத்துரு ஏதும் அரசளவில் நிலுவையில் இல்லை. மேற்படி கட்டடம் புதுப்பித்தல் தொடர்பாக உரிய மதிப்பீட்டறிக்கை பொதுப் பணித் துறையிலிருந்து பெறப்பட்டு கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரிடமிருந்து கருத்துரு பெறப்படும்போது மேற்படி கட்டடத்தைப் புதுப்பித்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

78—

அலுவலகம்

வினா எண் 16334—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், நார்த்தம்பட்டி ஊராட்சி, நார்த்தம்பட்டி கிராமத்தில் புதிய கிராம நிருவாக அலுவலர் மற்றும் அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், நார்த்தம்பட்டி கிராமத்தில் புதிய கிராம நிருவாக அலுவலர் மற்றும் அலுவலகம் அமைக்கக் கோரும் நார்த்தம்பட்டி ஊராட்சியில், நார்த்தம்பட்டி கிராமம் இலளிகம் வருவாய் கிராமத்திற்குட்பட்டது ஆகும். இலளிகம் வருவாய் கிராமத்திற்கு கிராம நிருவாக அலுவலர் பணியிடம் உள்ளது. மேலும், இலளிகம் வருவாய் கிராமத்தில் கிராம நிருவாக அலுவலகமும் உள்ளது. எனவே, நார்த்தம்பட்டி கிராமம் தனி வருவாய் கிராமமாக இல்லாததால் அதற்கென தனி கிராம நிருவாக அலுவலகம் அமைப்பதற்கான அவசியம் எழவில்லை.

79—

கட்டடம்

வினா எண் 20805—திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஸ்ரீவைகுண்டம் தொகுதி, ஆழ்வார் திருநகரி பேரூராட்சிக்குத் தேவையான கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் அரசு இடத்தில் கட்ட அரசு ஆவன செய்யுமா?

2023 அக்டோபர் 11]

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

ஸ்ரீவைகுண்டம் தொகுதி, ஆழ்வார் திருநகரி பேரூராட்சிக்குத் தேவையான கிராம நிருவாக அலுவலக கட்டடம், அரசாணை (நிலை) எண் 287, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் [(வ.நி.2(1)] துறை, நாள் 24-2-2021 இல், ரூ.15,26,222/- ஒதுக்கீடு செய்யப்பட்டு, மேற்படி கட்டடம் கட்டும் பணி நிறைவு பெற்று 21-10-2022 இல் பொதுப் பணித் துறையினரால் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையில் ஒப்படைக்கப்பட்டு சட்டமன்ற உறுப்பினர் தலைமையில் 19-12-2022 அன்று பொதுமக்களின் பயன்பாட்டிற்குத் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

80—

அலுவலகம்

வினா எண் 20809—திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஸ்ரீவைகுண்டம் தொகுதி, ஆழ்வார் திருநகரியைத் தலைமையிடமாகக் கொண்ட வருவாய் குறுவட்டத்திற்கு வருவாய் ஆய்வாளர் அலுவலகம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

ஸ்ரீவைகுண்டம் தொகுதி, ஆழ்வார் திருநகரியைத் தலைமையிடமாகக் கொண்ட வருவாய் குறுவட்டத்திற்கு வருவாய் ஆய்வாளர் அலுவலகக் கட்டடம் மற்றும் குடியிருப்பு கட்டுவதற்கு அரசாணை (நிலை) எண் 240, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் [(வ.நி.2(1)] துறை, நாள் 9-2-2021 இல், ரூ.23,10,000/- ஒதுக்கீடு செய்யப்பட்டு, மேற்படி கட்டடம் கட்டும் பணி நிறைவு பெற்று, 23-5-2022 அன்று பொதுப் பணித் துறையினரால் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையில் ஒப்படைக்கப்பட்டு, மாண்புமிகு அமைச்சர் தலைமையில் 12-10-2022 அன்று திறக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டு, செயல்பட்டு வருகிறது.

81—

சாலை அமைத்தல்

வினா எண் 24141—திரு. பூண்டி கே. கலைவாணன்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் தொகுதி, திருவாரூர் ஒன்றியம், தண்டலை ஊராட்சி, கிராம நிருவாக அலுவலக சாலையைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் தொகுதி, திருவாரூர் ஒன்றியம், தண்டலை ஊராட்சி, கிராம நிருவாக அலுவலகச் சாலையைப் புதுப்பிக்க 2022-2023 ஆம் ஆண்டு ஒன்றியப் பொது நிதியில் தீர்மானம் எண் 353/27-7-2022-ன்படி தியாகராஜா நகர் ஆதிவராகம் சாலை 1, 2, 3 உடன் சேர்த்து இச்சாலையையும் அமைக்க ரூ.5.50 இலட்சம் மதிப்பீட்டில் நிருவாக அனுமதி வழங்கப்பட்டு வேலை நடைபெற்று வருகிறது. விரைவில் முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படும். எனவே, மேற்படி வினாவுக்கான அவசியம் எழவில்லை.

82—

கட்டடம்

வினா எண் 24147—திரு. பூண்டி கே. கலைவாணன்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் தொகுதி, திருவாரூர் ஒன்றியம், தப்பாளம்புலியூர் ஊராட்சி, கிராம நிருவாக அலுவலக கட்டடம் புதியதாகக் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 அக்டோபர் 11]

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் தொகுதி, திருவாரூர் ஒன்றியம், தப்பாளம்புலியூர் ஊராட்சி, கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் கட்டுவது தொடர்பான கருத்துரு அரசளவில் ஏதும் நிலுவையில் இல்லை. மேற்படி கட்டடம் கட்டுவது தொடர்பாக உரிய மதிப்பீட்டறிக்கை பொதுப் பணித் துறையிலிருந்து பெறப்பட்டு கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரிடமிருந்து கருத்துரு பெறப்படும்போது நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

83—

பட்டா

வினா எண் 25265—முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொள்ளாச்சி வட்டம், ஜமீன்முத்தூர் ஊராட்சி, சர்ச் காலனியில் உள்ள 32 நபர்களுக்கு பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பொள்ளாச்சி வட்டம், ஜமீன்முத்தூர் கிராமம், புல எண் 43/2C-ல் புன்செய் ஹெக்டேர் 0.41.50 விஸ்தீரணமுள்ள பூமியில் தமிழ் சுவிசேசலுத்திரன் திருச்சபைக்குச் சொந்தமான இடத்தில் 15 நபர்கள் வீடு கட்டிக் குடியிருந்து வருகின்றனர். மேலும், மேற்படி கிராம புல எண் 43/1A3 புலமானது புன்செய் ஹெக்டேர் 0.35.0 பரப்புள்ள பூமியில் 17 நபர்கள் வீடு கட்டி வசித்து வருகின்றனர். மேற்படி புன்செய் ஹெக்டேர் 0.35.0

[*2023 அக்டோபர் 11*

பூமியானது ரயத்து புன்செய் என்ற வகைப்பாட்டில் மயில்சாமி கவுண்டர் என்பவர் பெயரில் நில உடமை பதிவு மேம்பாட்டுத் திட்ட 'அ' பதிவேட்டில் பதிவாகியுள்ளது. மயில்சாமி கவுண்டர் காலமாகிவிட்டதால், மேற்படி பூமியானது தற்போது அவரது மகன் சின்னசாமி கவுண்டர் என்பவரது பெயரில் பட்டா எண் 258-ல் தாக்கலாகியுள்ளது. மேற்கண்ட பூமிகளானது ரயத்துவாரி புன்செய் பூமி என்று வருவாய் ஆவணங்களில் பதிவாகியுள்ளதாலும், குடியிருந்துவரும் 32 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க நில உரிமைதாரர்கள் உரிமையினை விட்டுக் கொடுக்க முன்வராத காரணத்தினாலும், மேற்படி புலத்தில் குடியிருந்துவரும் 32 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாத நிலை உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

84—

அலுவலகம்

வினா எண் 39823—திரு. ச. சிவகுமார்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், ஆணங்கூர் கிராமத்தில் கிராம நிருவாக அலுவலகம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், ஆணங்கூர் கிராமத்தில் கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் கட்டுவது தொடர்பான கருத்துரு அரசளவில் ஏதும் நிலுவையில் இல்லை. மேற்படி கட்டடம் கட்டுவது தொடர்பாக உரிய மதிப்பீட்டறிக்கை பொதுப் பணித் துறையிலிருந்து பெறப்பட்டு கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரிடமிருந்து கருத்துரு பெறப்படும்போது நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2023 அக்டோபர் 11]

85—

அலுவலகம்

வினா எண் 43502—திரு. K. மாரிமுத்து: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் ஒன்றியம், புழுதிக்குடி ஊராட்சியில் கிராம நிருவாக அலுவலர் அலுவலகம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் ஒன்றியம், புழுதிக்குடி ஊராட்சியில் கிராம நிருவாக அலுவலர் அலுவலகக் கட்டடம் கட்டுவது தொடர்பான கருத்துரு அரசளவில் எதும் நிலுவையில் இல்லை. மேற்படி கட்டடம் கட்டுவது தொடர்பாக உரிய மதிப்பீட்டறிக்கை பொதுப் பணித் துறையிலிருந்து பெறப்பட்டு, கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையரிடமிருந்து கருத்துரு பெறப்படும்போது நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

86—

அலுவலகம்

வினா எண் 48357—முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கோவை மாவட்டம், கிணத்துக்கடவு வட்டம், கிணத்துக்கடவு கிராமம் புல எண் 40 அருள்மிகு கரியகாளியம்மன் கோயில் நிலத்தில் வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் குடியிருப்புகள் கட்டப்பட்டு செயல்பாட்டிற்கு வராமல் உள்ளதை செயல்பாட்டிற்குக் கொண்டுவர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[*2023 அக்டோபர் 11*

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பொள்ளாச்சி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கிணத்துக்கடவு வட்டாட்சியர் அலுவலகம், கிணத்துக்கடவு கிராமம், புல எண் 40-ல் இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடத்தில் கட்டப்பட்டுவந்த நிலையில், திரு. சிவக்குமார், திரு. சத்தியபிரகாஷ் ஆகியோரால் மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனு எண் 6229/2016 வழக்கு தொடரப்பட்டு இடைக்கால தடை உத்தரவு பெறப்பட்டு நாளது தேதி வரை நிலுவையில் உள்ளது. மேலும், திரு. சிவக்குமார் என்பவரால் மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தில் மற்றொரு நீதிப்பேராணை மனு எண் 25067/2019, நில மதிப்பு நிர்ணயம் செய்தது தவறுதலாக உள்ளது என்று வழக்கு தொடரப்பட்டு நிலுவையில் உள்ளது. தற்போது, அரசாணை எண் 147, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் [*வ.நி.2(1)*] துறை, நாள் 28-3-2022-ன்படி மாண்பமை சென்னை உயர் நீதிமன்ற கூடுதல் தலைமை அரசு வழக்குரைஞர் திரு. S. சிலம்பண்ணன் என்பவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். மேற்படி வழக்குகளின் முக்கியத்துவம் கருதி, வழக்குகளை முடிவுக்குக் கொண்டுவந்து கிணத்துக்கடவு வட்டாட்சியர் அலுவலகம் திறக்கும் பொருட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

87—

கட்டடம்

வினா எண் 53209—திருமதி கு. மரகதம் குமரவேல்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் தொகுதி, அச்சிறுபாக்கம் ஒன்றியம், எல்.எண்டத்தூர் ஊராட்சியில் கிராம நிருவாக அலுவலர் அலுவலகக் கட்டடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 அக்டோபர் 11]

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுராந்தகம் தொகுதி, அச்சிறுபாக்கம் ஒன்றியம், எல்.எண்டத்தூர் ஊராட்சியில் உள்ள கிராம நிருவாக அலுவலக கட்டடத்தின் மேற்கூரை மட்டும் பழுதடைந்துள்ளது. தற்போது, 2022-2023 ஆம் ஆண்டிற்கான பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு பணிக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

88—

கட்டடம்

வினா எண் 53241—திருமதி கு. மரகதம் குமரவேல்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் தொகுதி, அச்சிறுபாக்கம் ஒன்றியம், கரிக்கிலி ஊராட்சியில் கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுராந்தகம் தொகுதி, அச்சிறுபாக்கம் ஒன்றியம், கரிக்கிலி ஊராட்சியில் கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் கட்டுவது தொடர்பான கருத்துரு அரசளவில் ஏதும் நிலுவையில் இல்லை. மேற்படி கட்டடம் கட்டுவது தொடர்பாக உரிய மதிப்பீட்டறிக்கை பொதுப் பணித் துறையிலிருந்து பெறப்பட்டு, கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரிடமிருந்து கருத்துரு பெறப்படும்போது நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

89—

கட்டடம்

வினா எண் 53414—திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் தொகுதி, திருமருகல் ஒன்றியம், கோட்டூர் ஊராட்சியில் வாடகை கட்டடத்தில் செயல்பட்டுவரும் கிராம நிருவாக அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் தொகுதி, திருமருகல் ஒன்றியம், கோட்டூர் கிராம நிருவாக அலுவலக புதிய கட்டடம் கட்டுவது தொடர்பான கருத்துரு ஏதும் அரசளவில் நிலுவையில் இல்லை. மேற்படி கட்டடம் கட்டுவது தொடர்பாக உரிய மதிப்பீட்டறிக்கை பொதுப் பணித் துறையிலிருந்து பெறப்பட்டு, கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரிடமிருந்து கருத்துரு பெறப்படும்போது நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

90—

கட்டடம்

வினா எண் 71129—திரு. க.சொ.க. கண்ணன்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜெயங்கொண்டம் தொகுதி, உடையார்பாளையம் வட்டம், இறவாங்குடி வருவாய் கிராமத்தில் கிராம நிருவாக அலுவலர் அலுவலகக் கட்டடம் புதிதாக அமைத்துத் தருவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 அக்டோபர் 11]

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஜெயங்கொண்டம் தொகுதி, உடையார்பாளையம் வட்டம், இறவாங்குடி வருவாய் கிராமத்தில் கிராம நிருவாக அலுவலர் அலுவலகக் கட்டடம் கட்டுவது தொடர்பான கருத்துரு ஏதும் அரசளவில் நிலுவையில் இல்லை. மேற்படி அலுவலகம் கட்டுவதற்கு உரிய மதிப்பீட்டறிக்கை பொதுப் பணித் துறையிலிருந்து பெறப்பட்டு, கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரிடமிருந்து கருத்துரு பெறப்படும்போது நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

91—

கட்டடம்

வினா எண் 71131—திரு. க.சொ.க. கண்ணன்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜெயங்கொண்டம் தொகுதி, உடையார்பாளையம் வட்டம், தண்டலை வருவாய் கிராமத்திற்கு புதிய கிராம நிருவாக அலுவலர் அலுவலகக் கட்டடம் புதிதாக அமைத்துத் தருவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஜெயங்கொண்டம் தொகுதி, உடையார்பாளையம் வட்டம், தண்டலை வருவாய் கிராமத்தில் கிராம நிருவாக அலுவலர் அலுவலகக் கட்டடம் கட்டுவது தொடர்பான கருத்துரு ஏதும் அரசளவில் நிலுவையில் இல்லை. மேற்படி அலுவலகம் கட்டுவதற்கு உரிய மதிப்பீட்டறிக்கை பொதுப் பணித் துறையிலிருந்து பெறப்பட்டு, கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரிடமிருந்து கருத்துரு பெறப்படும்போது நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

92—

கட்டடம்

வினா எண் 71132—திரு. க.சொ.க. கண்ணன்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜெயங்கொண்டம் தொகுதி, உடையார்பாளையம் வட்டம், உட்கோட்டை (வடக்கு) வருவாய் கிராமத்தில் கிராம நிருவாக அலுவலர் அலுவலகக் கட்டடம் புதிதாக அமைத்துத் தருவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஜெயங்கொண்டம் தொகுதி, உடையார்பாளையம் வட்டம், உட்கோட்டை (வடக்கு) வருவாய் கிராமத்தில் கிராம நிருவாக அலுவலர் அலுவலகக் கட்டடம் கட்டுவது தொடர்பான கருத்துரு ஏதும் அரசளவில் நிலுவையில் இல்லை. மேற்படி அலுவலகம் கட்டுவதற்கு உரிய மதிப்பீட்டறிக்கை பொதுப் பணித் துறையிலிருந்து பெறப்பட்டு, கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரிடமிருந்து கருத்துரு பெறப்படும்போது நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

93—

கட்டடம்

வினா எண் 71133—திரு. க.சொ.க. கண்ணன்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜெயங்கொண்டம் தொகுதி, உடையார்பாளையம் வட்டம், பெரியவளையம் வருவாய் கிராமத்தில் கிராம நிருவாக அலுவலர் அலுவலகக் கட்டடம் புதிதாக அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 அக்டோபர் 11]

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஜெயங்கொண்டம் தொகுதி, உடையார்பாளையம் வட்டம், பெரியவளையம் வருவாய் கிராமத்தில் கிராம நிருவாக அலுவலர் அலுவலகக் கட்டடம் கட்டுவது தொடர்பான கருத்துரு ஏதும் அரசளவில் நிலுவையில் இல்லை. மேற்படி அலுவலகம் கட்டுவதற்கு உரிய மதிப்பீட்டறிக்கை பொதுப் பணித் துறையிலிருந்து பெறப்பட்டு, கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரிடமிருந்து கருத்துரு பெறப்படும்போது நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

94—

கட்டடம்

வினா எண் 71388—திரு. பூண்டி கே. கலைவாணன்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் தொகுதி, திருவாரூர் ஒன்றியம், ஆழூர் ஊராட்சி, வடவோடை கிராமத்தில் கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் தொகுதி, திருவாரூர் ஒன்றியம், ஆழூர் ஊராட்சி, வடவோடை கிராமமானது, ஆழூர் வருவாய் கிராமத்தின் உட்கிராமமாகும். வடவோடை உட்கிராமத்தில் 118 குடும்பங்கள் உள்ளன. வடவோடை உட்கிராமமானது, ஆழூர் வருவாய் கிராமத்திலிருந்து சுமார் 2 கி.மீ. தொலைவில் உள்ளது. ஆழூர் வருவாய் கிராமத்திற்கு ஏற்கெனவே, ஆழூர் கிராமம், புல எண் 74/12B2-ல் கிராம நிருவாக அலுவலகம் அமைந்துள்ளது. வடவோடை கிராமமானது ஆழூர் வருவாய்

கிராமத்தின் உட்கிராமம் என்பதாலும், ஏற்கெனவே, ஆமூர் வருவாய் கிராமத்தில் கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் அமைந்துள்ளதாலும், வடவோடை உட்கிராமத்திற்கு தனியாக கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

95—

கட்டடம்

வினா எண் 71393—திரு. பூண்டி கே. கலைவாணன்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் தொகுதி, திருவாரூர் ஒன்றியம், புலிவலம் ஊராட்சி, புலிவலத்தில் புதிய கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் தொகுதி, திருவாரூர் ஒன்றியம், புலிவலம் ஊராட்சி, புலிவலத்தில் புதிய கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் கட்டுவது தொடர்பான கருத்துரு ஏதும் அரசளவில் நிலுவையில் இல்லை. மேற்படி அலுவலகம் கட்டுவதற்கு உரிய மதிப்பீட்டறிக்கை பொதுப் பணித் துறையிலிருந்து பெறப்பட்டு, கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரிடமிருந்து கருத்துரு பெறப்படும்போது நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

96—

கட்டடம்

வினா எண் 71394—திரு. பூண்டி கே. கலைவாணன்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2023 அக்டோபர் 11]

(அ) திருவாரூர் தொகுதி, திருவாரூர் ஒன்றியம், திருவாதிரைமங்கலம் ஊராட்சி, எழுமுக்கால் கிராமத்தில் கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் தொகுதி, திருவாரூர் ஒன்றியம், திருவாதிரைமங்கலம் ஊராட்சி, எழுமுக்கால் கிராமமானது, திருவாதிரைமங்கலம் வருவாய் கிராமத்தின் உட்கிராமமாகும். எழுமுக்கால் உட்கிராமத்தில் தோராயமாக 60 குடும்பங்கள் உள்ளன. திருவாதிரைமங்கலம் வருவாய் கிராமத்திற்குரிய கிராம நிருவாக அலுவலகம், திருவாதிரைமங்கலம் கிராமம், புல எண் 197/33, நத்தம் வகைப்பாட்டில் அமைந்துள்ளது. எழுமுக்கால் கிராமமானது, திருவாதிரைமங்கலம் வருவாய் கிராமத்திலிருந்து சுமார் 500 மீ. தொலைவில் அமைந்துள்ளதாலும் மற்றும் திருவாதிரைமங்கலம் வருவாய் கிராமத்தில் ஏற்கெனவே கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் உள்ளதாலும், எழுமுக்கால் கிராமத்திற்கு தனியாக கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

97—

கட்டடம்

வினா எண் 71408—திரு. பூண்டி கே. கலைவாணன்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், களத்தூர் ஊராட்சியிலுள்ள கிராம நிருவாக அலுவலகக் கட்டடத்தைப் புதுப்பிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், களத்தூர் கிராம நிருவாக அலுவலகக் கட்டடம்

[*2023 அக்டோபர் 11*

புதுப்பிப்பது தொடர்பான கருத்துரு ஏதும் அரசளவில் நிலுவையில் இல்லை. மேற்படி கிராம நிருவாக அலுவலகம் புதுப்பிப்பது தொடர்பான உரிய மதிப்பீட்டறிக்கை பொதுப் பணித் துறையிலிருந்து பெறப்பட்டு, கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையரிடமிருந்து கருத்துரு பெறப்படும்போது நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

98—

கட்டடம்

வினா எண் 71412—திரு. பூண்டி கே. கலைவாணன்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *திருவாரூர் தொகுதி, தப்பளாம்புலியூர் ஊராட்சி, காரியாங்குடியில் கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் தொகுதி, தப்பளாம்புலியூர் ஊராட்சி, காரியாங்குடி கிராம நிருவாக அலுவலகக் கட்டடம் கட்டுவது தொடர்பான கருத்துரு ஏதும் அரசளவில் நிலுவையில் இல்லை. மேற்படி கிராம நிருவாக அலுவலகம் கட்டுவது தொடர்பாக உரிய மதிப்பீட்டறிக்கை பொதுப் பணித் துறையிலிருந்து பெறப்பட்டு, கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையரிடமிருந்து கருத்துரு பெறப்படும்போது நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

99—

கட்டடம்

வினா எண் 71434—திரு. பூண்டி கே. கலைவாணன்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2023 அக்டோபர் 11]

(அ) திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், திருக்கண்ணமங்கை ஊராட்சியில் கிராம நிர்வாக அலுவலகக் கட்டடத்தைப் புதுப்பிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், திருக்கண்ணமங்கை ஊராட்சியில் உள்ள திருக்கண்ணமங்கை கிராம நிர்வாக அலுவலகக் கட்டடத்தினைப் புதுப்பிப்பது தொடர்பான கருத்துரு ஏதும் அரசளவில் நிலுவையில் இல்லை. மேற்படி கிராம நிர்வாக அலுவலகத்தை புதுப்பிப்பதற்கு உரிய மதிப்பீட்டறிக்கை பொதுப் பணித் துறையிலிருந்து பெறப்பட்டு, கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரிடமிருந்து கருத்துரு பெறப்படும்போது நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

100—

அலுவலகம்

வினா எண் 72412—திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், கடுகப்பட்டு கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், வல்லம் ஒன்றியம், மயிலம் தொகுதிக்குட்பட்ட மேல்ஒலக்கூர்

[*2023 அக்டோபர் 11*

பொறுப்பு கிராமமாகவும், கடுகப்பட்டு மதுரா கிராமமாகவும் உள்ளது. கடுகப்பட்டு கிராமத்திலிருந்து மேல்ஒலக்கூர் கிராமம் 2 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. மேல்ஒலக்கூர் மற்றும் கடுகப்பட்டு கிராமங்களுக்கென பொதுவாக மேல்ஒலக்கூர் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலகக் கட்டடம் அமைந்துள்ளது. எனவே, மேற்படி கிராம நிர்வாக அலுவலகக் கட்டடம் கட்ட வழிவகை இல்லை.

பட்டியல்-27

1—

அரச மரத்தை அகற்றுதல்

வினா எண் 29291—திரு. இரா. அருள்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சட்டமன்ற உறுப்பினர் குடியிருப்பு B-8-வது மாடியில் மின்தூக்கி முன்பு உள்ள கண்ணாடியையொட்டிய பகுதியில் அரசமரம் வளர்வதை அப்புறப்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்:

சட்டமன்ற உறுப்பினர் குடியிருப்பின் சுவர்களில் வளரும் மரங்கள் மற்றும் செடிகள் குறிப்பிட்ட கால இடைவெளியில் அகற்றப்பட்டு வருகின்றன. அவ்வாறு சட்டமன்ற உறுப்பினர் குடியிருப்பு 'B' தொகுப்பில் உள்ள 8-வது மாடியில் மின்தூக்கி முன்பு உள்ள கண்ணாடியை ஒட்டிய பகுதியில் வளர்ந்து வந்த அரச மரமானது முழுமையாக அகற்றப்பட்டுவிட்டது.

2023 அக்டோபர் 11]

2—

கான்கிரீட் தளம்

வினா எண் 29292—திரு. இரா. அருள்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சட்டமன்ற உறுப்பினர் விடுதி நுழைவாயில் முன்பு தரம் குறைந்த கான்கிரீட் தளம் கலவையால் பரவியிருப்பதை ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்:

சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சட்டமன்ற உறுப்பினர் விடுதி நுழைவாயில் முன்பு போடப்பட்டுள்ள கான்கிரீட் தளம் தேய்மானத்தின் காரணமாக சேதமடைந்துள்ளது. அதை உரிய முறையில் சரிசெய்து, புதிய கான்கிரீட் தளம் அமைக்கப்பட்டது.

3—

நியாய விலைக் கடை

வினா எண் 4359—திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மாதவரம் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-3, வார்டு 22, சிவராஜ் மெயின் தெருவில் அமைந்துள்ள நியாய விலைக் கடை எண் 02F013NT-ல் 1450 குடும்ப அட்டைகள் உள்ளன. இதைப் பிரித்து சக்திவேல் நகரில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாதவரம் தொகுதி, புழல் 1 (2)F013NT) நியாய விலைக் கடையானது தற்போது சக்திவேல் நகர் மெயின்

[*2023 அக்டோபர் 11*

ரோடு என்ற முகவரிக்கு மாற்றப்பட்டு தொடர்ந்து செயல்பட்டு வருவதால், சக்திவேல் நகரில் தனியாக பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

4—

நியாய விலைக் கடை

வினா எண் 6912—திரு. மு.பெ. கிரி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செங்கம் தொகுதி, தண்டராம்பட்டு ஒன்றியம், கீழ்வணக்கம்பாடி ஊராட்சி, துல்லுகுட்டிபாளையம் கிராமத்தில் புதிய நியாய விலைக் கடை கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் தொகுதி, தண்டராம்பட்டு ஒன்றியம், கீழ்வணக்கம்பாடி ஊராட்சி, தண்டாரம்பட்டு வட்டத்திலுள்ள எச்.எச்.546 இராதாபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் செயல்பட்டுவரும் தேசூர்பாளையம் பகுதி நேர நியாய விலைக் கடை 419 குடும்ப அட்டைகளுடன் தேசூர்பாளையம் கிராமத்தில் உள்ள மகளிர் சுய உதவிக் குழு கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது.

சட்டமன்றப் பேரவை வினாவில் புதிய நியாய விலைக் கடை கட்டடம் கோரும் துல்லுகுட்டிபாளையம் கிராமத்தில் தனியாக நியாய விலைக் கடை ஏதும் செயல்படவில்லை. துல்லுகுட்டிபாளையம் கிராமத்தில் உள்ள 170 குடும்ப அட்டைதாரர்களும் தேசூர்பாளையம் பகுதி நேர நியாய விலைக் கடையுடன் இணைந்து அத்தியாவசியப் பொருட்களைப் பெற்று வருகின்றனர்.

2023 அக்டோபர் 11]

எனவே, துல்லுகுட்டிபாளையம் கிராமத்தில் தனியாக நியாய விலைக் கடை ஏதும் செயல்படாததால், புதிய கட்டடம் கட்ட வேண்டிய நிலை எழவில்லை.

5—

நியாய விலைக் கடை

வினா எண் 7675—திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) **ஸ்ரீ***பெரும்புதூர் தொகுதி, ஏகனாபுரம் ஊராட்சி கிராமத்தில் நியாய விலைக் கடை புதியதாக திறக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) *மற்றும்* (ஆ) *காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் ஒன்றியத்தில் உள்ள மதுரமங்கலம் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் ஏகனாபுரம் ஊராட்சி, ஏகனாபுரம் கிராமத்தில் ஏற்கெனவே முழுநேர நியாய விலைக் கடை (03*BP*021*PY*), 461 குடும்ப அட்டைகளுடன் அரசு கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. அப்பகுதி குடும்ப அட்டைதாரர்கள் அனைவரும் இந்நியாய விலைக் கடையில் அத்தியாவசியப் பொருட்களைப் பெற்று வருகின்றனர்.*

எனவே, ஏகனாபுரம் ஊராட்சி, ஏகனாபுரம் கிராமத்தில் ஏற்கெனவே முழுநேர நியாய விலைக் கடை இயங்கிவரும் நிலையில், புதியதாக நியாய விலைக் கடை அமைக்க அவசியம் எழவில்லை.

6—

நியாய விலைக் கடை

வினா எண் 7676—திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, சிங்கிலிபாடி ஊராட்சியில் நியாய விலைக் கடை புதியதாக திறக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் ஒன்றியத்தில் உள்ள மதுரமங்கலம் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் சிங்கிலிபாடி ஊராட்சியில், ஏற்கெனவே சிங்கிலிபாடி முழுநேர நியாய விலைக் கடை (03BP021P1), 233 குடும்ப அட்டைகளுடன் அரசு கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. அப்பகுதி குடும்ப அட்டைதாரர்கள் அனைவரும் இந்நியாய விலைக் கடையில் அத்தியாவசியப் பொருட்கள் பெற்று வருகின்றனர்.

எனவே, சிங்கிலிபாடி ஊராட்சியில், ஏற்கெனவே முழுநேர நியாய விலைக் கடை இயங்கிவரும் நிலையில், புதியதாக நியாய விலைக் கடை அமைக்க அவசியம் எழவில்லை.

7—

நியாய விலைக் கடை

வினா எண் 7677—திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, குணகரம்பாக்கம் ஊராட்சியில் புதியதாக நியாய விலைக் கடை அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 அக்டோபர் 11]

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் ஒன்றியத்தில் உள்ள மதுரமங்கலம் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் குணகரம்பாக்கம் ஊராட்சியில், ஏற்கெனவே குணகரம்பாக்கம் முழுநேர நியாய விலைக் கடை (03BP022PY), 455 குடும்ப அட்டைகளுடன் அரசு கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. அப்பகுதி குடும்ப அட்டைதாரர்கள் அனைவரும் இந்நியாய விலைக் கடையில் அத்தியாவசியப் பொருட்கள் பெற்று வருகின்றனர்.

எனவே, குணகரம்பாக்கம் ஊராட்சியில், ஏற்கெனவே முழுநேர நியாய விலைக் கடை இயங்கிவரும் நிலையில், புதியதாக நியாய விலைக் கடை அமைக்க அவசியம் எழவில்லை.

8—

நியாய விலைக் கடை

வினா எண் 10238—திரு. S.S. பாலாஜி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்போரூர் தொகுதி, மானாம்பதி ஊராட்சி, பெரியார் நகரில் புதிய நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் ஒன்றியத்தில் உள்ள மானாம்பதி தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் மானாம்பதி ஊராட்சி, பெரியார் நகரில் ஏற்கெனவே பகுதி நேர கூட்டுறவு நியாய விலைக் கடையில் (03HP138P1), 291 குடும்ப அட்டைதாரர்கள் அத்தியாவசியப் பொருட்கள் பெற்று வருகின்றனர்.

[*2023 அக்டோபர் 11*

எனவே, மானாம்பதி ஊராட்சி பெரியார் நகரில் ஏற்கெனவே பகுதி நேர நியாய விலைக் கடை அரசுக் கட்டடத்தில் இயங்கிவருவதால், புதியதாக நியாய விலைக் கடை அமைக்க அவசியம் எழவில்லை.

9—

கட்டடம்

வினா எண் 15281—திரு. அ. நல்லதம்பி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் ஒன்றியம், அகரம் ஊராட்சி, அகரம்புதூர் கிராமத்திலுள்ள நியாய விலைக் கடைக்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், கூடப்பட்டு தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டுவரும் கூடப்பட்டு (தாய்கடை) முழுநேர நியாய விலைக் கடை, 615 குடும்ப அட்டைகளுடன் அரசு கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இதில், அகரம்புதூர் கிராமத்தைச் சேர்ந்த 150 குடும்ப அட்டைகளும் அடங்கும்.

அகரம்புதூர் கிராமத்திற்கென தனியாக நியாய விலைக் கடை ஏதும் செயல்படவில்லை. அகரம்புதூர் கிராமத்தில் உள்ள குடும்ப அட்டைதாரர்கள் தாய்கடையான கூடப்பட்டு முழுநேர நியாய விலைக் கடையில் அத்தியாவசியப் பொருட்கள் பெற்று வருவதால், அகரம்புதூர் கிராமத்திற்கு தனியாக புதிய கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

2023 அக்டோபர் 11]

10—

நியாய விலைக் கடை

வினா எண் 15347—திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *போளூர் தொகுதி, சேத்துப்பட்டு ஒன்றியம், இந்திரவனம் ஊராட்சி, வில்வராயநல்லூர் கிராமத்தில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் தொகுதி, சேத்துப்பட்டு ஒன்றியத்தில் எச்.எச்.549, சேத்துப்பட்டு தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கம் செயல்பட்டு வருகிறது. மேற்படி சங்கத்தின் கட்டுப்பாட்டின்கீழ் 10 முழுநேர நியாய விலைக் கடைகளும் 2 பகுதி நேர நியாய விலைக் கடைகளும் என ஆக மொத்தம் 12 நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன.

இந்நேர்வில், வில்வராயநல்லூர் கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடையானது 2010-ல் துவக்கப்பட்டு தற்போது வரை தொடர்ந்து செயல்பட்டுவரும் நிலையில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க அவசியம் எழவில்லை.

11—

கட்டடம்

வினா எண் 15354—திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *போளூர் தொகுதி, செம்மியமங்கலம் ஊராட்சியில் உள்ள நியாய விலைக் கடைக்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் தொகுதி, சேத்துப்பட்டு ஒன்றியம், எச்.எச்.523, ஆத்துரை தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் செயல்படும் செம்மியமங்கலம் முழுநேர நியாய விலைக் கடை 599 குடும்ப அட்டைகளுடன் அரசு கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது.

இந்நேர்வில், செம்மியமங்கலம் முழுநேர நியாய விலைக் கடை ஏற்கெனவே அரசு கட்டடத்தில் செயல்பட்டு வருவதாலும், அக்கட்டடம் நல்ல நிலையில் உள்ளதாலும், புதிய கட்டடம் கட்ட வேண்டிய நிலை எழவில்லை.

12—

கட்டடம்

வினா எண் 15477—திருமதி கு. மரகதம் குமரவேல்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் தொகுதி, அச்சிறுபாக்கம் ஒன்றியம், மாதூர் ஊராட்சியில் நியாய விலைக் கடை கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் ஒன்றியம், முனியந்தாங்கல் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டுவரும் மாதூர் (03FP113P1) பகுதி நேர நியாய விலைக் கடை 393 குடும்ப அட்டைகளுடன் அரசு கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது.

2023 அக்டோபர் 11]

மேற்படி, மாதூர் பகுதி நேர நியாய விலைக் கடை ஏற்கெனவே அரசு கட்டடத்தில் செயல்பட்டு வருவதாலும், அக்கட்டடம் நல்ல நிலையில் உள்ளதாலும், மாதூர் பகுதி நேர நியாய விலைக் கடைக்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டிய நிலை எழவில்லை.

13—

நியாய விலைக் கடை

வினா எண் 17686—திரு. சீ. கதிரவன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மண்ணச்சநல்லூர் தொகுதி, திருவெள்ளறை ஊராட்சிக்குப் புதியதாக நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் தொகுதி, திருப்பஞ்சீலி தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தின்கீழ் திருவெள்ளறை (13EP027PN) முழுநேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. இந்நியாய விலைக் கடையில் 617 குடும்ப அட்டைதாரர்கள் அத்தியாவசியப் பொருட்களைப் பெற்று வருகின்றனர்.

மேலும், இக்கடை தற்போது பஞ்சாயத்தால் கட்டப்பட்ட மகளிர் சுய உதவிக் குழு கட்டடத்தில் வாடகையின்றி செயல்பட்டு வருகிறது. எனவே, தற்பொழுது இக்கடைக்கு புதிய கட்டடம் தேவையில்லை.

14—

உரக்கிடங்கு

வினா எண் 21535—திரு. கி. அசோக்குமார்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கிருஷ்ணகிரி ஒன்றியம், பெல்லாரம்பள்ளி, கே.கே.115 தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு விவசாயிகளுக்கான உரங்களை இருப்பு வைக்க கிடங்கு கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:

பெல்லாரம்பள்ளி ஊராட்சிக்குட்பட்டு செயல்படும் கே.கே.115 தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு சொந்தமாக உள்ள இடத்தில் சங்க அலுவலகக் கட்டடம் மற்றும் உரக்கிடங்கு நல்ல நிலையில் பயன்பாட்டில் உள்ளன. புதியதாக உரக்கிடங்கு கட்டடம் கட்ட வேண்டிய தேவை எழவில்லை.

15—

நியாய விலைக் கடை

வினா எண் 37980—திரு. கி. அசோக்குமார்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணகிரி ஒன்றியம், பெல்லாரம்பள்ளி ஊராட்சி, பாறையூர் கிராமத்தில் பொதுமக்கள் 2 கி.மீ. வரை நியாய விலைக் கடைக்குச் சென்றுவர சிரமப்படுவதால், பாறையூர் கிராமத்தில் நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:

கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதி, கிருஷ்ணகிரி ஒன்றியம், பெல்லாரம்பள்ளி ஊராட்சி, எஸ்.115, பெல்லாரம்பள்ளி தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் செயல்படும் வெங்கிலிகானப்பள்ளி (30AP005PY) முழுநேர நியாய விலைக் கடையானது அரசு கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது.

வெங்கிலிகானப்பள்ளி முழுநேர நியாய விலைக் கடையில் 444 குடும்ப அட்டைகள் உள்ளன. இதில் முதல் பகுதிநேர

2023 அக்டோபர் 11]

நியாய விலைக் கடையான பெல்லாரம்பள்ளி 440 குடும்ப அட்டைகளுடனும், இரண்டாவது பகுதிநேர நியாய விலைக் கடையான சின்னபெல்லாரம்பள்ளி 201 குடும்ப அட்டைகளுடனும், மூன்றாவது பகுதிநேர நியாய விலைக் கடையான பச்சிகானப்பள்ளி 174 குடும்ப அட்டைகளுடனும், நான்காவது பகுதிநேர நியாய விலைக் கடையான பழைய பையனப்பள்ளி 303 குடும்ப அட்டைகளுடனும் செயல்பட்டு வருகின்றன.

இந்நேர்வில், எஸ்.115, பெல்லாரம்பள்ளி தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தின்கீழ் வெங்கிலிகானப்பள்ளி (30AP005PY) முழு நேர நியாய விலைக் கடையிலிருந்து ஏற்கெனவே நான்கு பகுதி நேர நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருவதால், புதியதாக மேலும் ஒரு பகுதி நேர நியாய விலைக் கடையினைத் துவக்க வழிவகையில்லை.

16—

நியாய விலைக் கடை

வினா எண் 37988—திரு. கி. அசோக்குமார்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கிருஷ்ணகிரி தொகுதி, கிருஷ்ணகிரி ஒன்றியம், திப்பனப்பள்ளி ஊராட்சி, திப்பனப்பள்ளி கிராமத்தில் நடமாடும் நியாய விலைக் கடையை பகுதிநேர நியாய விலைக் கடையாக மாற்றித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:

கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதி, கிருஷ்ணகிரி ஒன்றியம், திப்பனப்பள்ளி ஊராட்சி, கே.கே.303, பில்லனக்குப்பம் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் செயல்படும் ஜிஞ்சுப்பள்ளி (30AP018PY) முழுநேர நியாய விலைக் கடையானது அரசு கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது.

[*2023 அக்டோபர் 11*

ஜிஞ்சுப்பள்ளி முழுநேர நியாய விலைக் கடையில் 615 குடும்ப அட்டைகள் உள்ளன. இதில் முதல் பகுதிநேர நியாய விலைக் கடையான பந்தாரப்பள்ளி கடையில் 472 குடும்ப அட்டைகள் உள்ளன.

இந்நேர்வில், தாய் நியாய விலைக் கடைக்கும் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை கோரும் திப்பனப்பள்ளி கிராமத்திற்கும் இடைப்பட்ட தூரம் 0.75 கி.மீ. மட்டுமே உள்ளதால் திப்பனப்பள்ளி கிராமத்தில் உள்ள 312 குடும்ப அட்டைதாரர்களுக்கு நகரும் நியாய விலைக் கடையின்மூலம் பிரதிமாதம்தோறும் மூன்றாவது வாரம் செவ்வாய்க்கிழமையில் குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

எனவே, திப்பனப்பள்ளி கிராமத்தில் உள்ள நடமாடும் நியாய விலைக் கடையை பகுதிநேர நியாய விலைக் கடையாக மாற்ற வழிவகையில்லை.

17—

நியாய விலைக் கடை

வினா எண் 38460—திரு. A.P. நந்தகுமார்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அணைக்கட்டு தொகுதி, வேலூர் ஒன்றியம், சிறுங்காஞ்சி ஊராட்சியில் புதியதாக நியாய விலைக் கடை அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:

வேலூர் மாவட்டம், வேலூர் ஒன்றியம், அணைக்கட்டு தொகுதி, சி.1246 வேலூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் செயல்பட்டு வருகிறது. இச்சங்கத்தின்கீழ் 34 முழுநேர நியாய விலைக் கடைகளும், 11 பகுதி நேர நியாய விலைக் கடைகளும் செயல்பட்டு வருகின்றன.

2023 அக்டோபர் 11]

இதில், அணைக்கட்டு சட்டமன்றத் தொகுதியில் 3 முழுநேர நியாய விலைக் கடைகளும், 4 பகுதி நேர நியாய விலைக் கடைகளும் செயல்பட்டு வருகின்றன. இந்நேர்வில், சிறுகாஞ்சி பகுதியில் சிறுகாஞ்சி (04AC016PN) என்ற முழுநேர நியாய விலைக் கடை 342 குடும்ப அட்டைகளுடன் ஏற்கெனவே செயல்பட்டு வருவதால், இப்பகுதியில் புதியதாக நியாய விலைக் கடை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

18—

நியாய விலைக் கடை

வினா எண் 38551—திரு. J.L. ஈஸ்வரப்பன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திமிரி ஒன்றியம், தாமரைப்பாக்கம் ஊராட்சியில், நங்கமங்கலம் பகுதியில் நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:

ராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடு வட்டம், தாமரைப்பாக்கம் ஊராட்சியில் V.L.SPL.107. தாமரைப்பாக்கம் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கம் செயல்பட்டு வருகிறது. இச்சங்கத்தின்கீழ் 5 முழுநேர நியாய விலைக் கடைகளும், 1 பகுதி நேர நியாய விலைக் கடையும் செயல்பட்டு வருகின்றன. இதில் 04DP078PY தாமரைப்பாக்கம் முழுநேர நியாய விலைக் கடையில் 789 குடும்ப அட்டைகள் உள்ளன. இக்கடையிலிருந்து ஏற்கெனவே 71 குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்டு நங்கமங்கலம் பகுதியில் பகுதிநேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது.

நங்கமங்கலம் பகுதியில் ஏற்கெனவே பகுதிநேர கடை செயல்பட்டு வருவதால் புதிய நியாய விலைக் கடை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

19—

நியாய விலைக் கடை

வினா எண் 39088—திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், மேல்ஆத்திப்பாக்கம் கிராமத்தில் நியாய விலைக் கடை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், வல்லம் ஒன்றியம், செஞ்சி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் கட்டுப்பாட்டில் செயல்படும் மேல்ஆத்திப்பாக்கம் முழுநேர நியாய விலைக் கடையானது 406 குடும்ப அட்டைகளுடன் அரசு பஞ்சாயத்து கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இந்நியாய விலைக் கடையுடன் இணைக்கப்பட்டுள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் முறையாக வழங்கப்பட்டு வருகின்றன.

ஏற்கெனவே, மேல்ஆத்திப்பாக்கம் நியாய விலைக் கடையானது முழுநேர நியாய விலைக் கடையாக செயல்பட்டு வருவதால் புதியதாக நியாய விலைக் கடை அமைக்க தேவை எழவில்லை.

20—

கட்டடம்

வினா எண் 45035—திரு. S.S. பாலாஜி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்போரூர் தொகுதி, முள்ளிப்பாக்கம் ஊராட்சியில் ராயமங்கலம் பகுதியில் புதிய நியாய விலைக் கடை கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 அக்டோபர் 11]

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் வட்டம், முள்ளிப்பாக்கம் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டுவரும் ராயமங்கலம் (03HP117PN) முழுநேர நியாய விலைக் கடை 360 குடும்ப அட்டைகளுடன் அரசு கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது.

மேற்படி, ராயமங்கலம் முழுநேர நியாய விலைக் கடை ஏற்கெனவே அரசு கட்டடத்தில் செயல்பட்டு வருவதால், புதிய கட்டடம் கட்ட வேண்டிய நிலை எழுவில்லை.

21—

கட்டடம்

வினா எண் 50110—திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலம் தொகுதி, மயிலம் ஒன்றியம், கூட்டேரிப்பட்டு கிராமத்தில் புதிய நியாய விலைக் கடை கட்டடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், மயிலம் ஒன்றியம், கூட்டேரிப்பட்டு தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் செயல்பட்டுவரும் கூட்டேரிப்பட்டு முழுநேர நியாய விலைக் கடை 1002 குடும்ப அட்டைகளுடன் அரசு கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இந்நியாய விலைக் கடையுடன் இணைக்கப்பட்டுள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கான அத்தியாவசியப் பொருட்கள் முறையாக வழங்கப்பட்டு வருகின்றன.

மேற்படி, கூட்டேரிப்பட்டு முழுநேர நியாய விலைக் கடை ஏற்கெனவே அரசு கட்டடத்தில் செயல்பட்டு வருவதாலும், அக்கட்டடம் நல்ல நிலையில் உள்ளதாலும் புதிய கட்டடம் கட்ட வேண்டிய நிலை எழவில்லை.

22—

வங்கி துவக்குதல்

வினா எண் 52627—திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டத்தில் புதிதாக ஏற்படுத்தப்பட்ட வட்டங்களின் அடிப்படையில் தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டத்தில் எட்டு வருவாய் வட்டங்கள் உள்ளன. இந்த எட்டு வருவாய் வட்டங்களில் ஆறு தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. இந்த ஆறு வங்கிகளும் திருவாரூர் மாவட்டம் முழுவதும் உள்ள விவசாயிகளுக்கும் மத்திய காலக் கடன்களை சிறப்பாக வழங்கி வருகின்றன. இவற்றில் திருவாரூர் மற்றும் குடவாசல் தவிர இதர நான்கு தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் குவிப்பு நட்டத்தில் செயல்பட்டு வருகின்றன. புதிதாக தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி துவங்கினால் ஏற்கெனவே செயல்பட்டுவரும் தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளின் வாழ்திறன் பாதிக்கப்படும் என்பதால் புதிதாக தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி துவங்க வழிவகை இல்லை.

2023 அக்டோபர் 11]

23—

நியாய விலைக் கடை

வினா எண் 52671—திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வேப்பனஹள்ளி தொகுதி, வேப்பனஹள்ளி ஒன்றியம், குப்புச்சிபாறை ஊராட்சியிலுள்ள குந்தப்பள்ளி கடையிலிருந்து கார்டுகளை பிரித்து லக்கபத்தனப்பள்ளியில் புதிய நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:

வேப்பனஹள்ளி சட்டமன்றத் தொகுதி, வேப்பனஹள்ளி ஒன்றியம், குப்புச்சிபாறை ஊராட்சி, எஸ்.421, சென்னசமுத்திரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் செயல்படும் குப்புச்சிபாறை (30AP094PN) முழுநேர நியாய விலைக் கடையானது அரசு கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது.

குப்புச்சிபாறை முழுநேர நியாய விலைக் கடையில் 561 குடும்ப அட்டைகள் உள்ளன. இதில் முதல் பகுதிநேர நியாய விலைக் கடையான குந்தப்பள்ளி கடையில் 247 குடும்ப அட்டைகள் உள்ளன.

குந்தப்பள்ளி நியாய விலைக் கடையானது பகுதிநேர நியாய விலைக் கடையாகும். எனவே, ஒரு பகுதிநேர நியாய விலைக் கடையிலிருந்து புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க வழிவகையில்லை.

24—

நியாய விலைக் கடை

வினா எண் 52680—திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[*2023 அக்டோபர் 11*

வேப்பனஹள்ளி தொகுதியிலுள்ள சூளகிரி ஒன்றியத்திற்குட்பட்ட பெத்தசிகரலப்பள்ளி கிராமத்திலுள்ள பட்டாகுருபர பள்ளியில் புதிய நியாய விலைக் கடை துவக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:

கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி வட்டாரத்தில், எஸ்.334, அத்திமுகம் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கம் செயல்பட்டு வருகிறது. இச்சங்கத்தின் கட்டுப்பாட்டில் செயல்பட்டுவரும் பெத்தசிகரலப்பள்ளி (30GP067PY) முழுநேர நியாய விலைக் கடையில் 445 குடும்ப அட்டைகள் உள்ளன. இதில் முதல் பகுதிநேர நியாய விலைக் கடையான திராடி கடை 448 குடும்ப அட்டைகளுடனும், இரண்டாவது பகுதிநேர நியாய விலைக் கடையான கொட்டவூர் நியாய விலைக் கடை 253 குடும்ப அட்டைகளுடனும், மூன்றாவது பகுதிநேர நியாய விலைக் கடையான ஆலுசோணை நியாய விலைக் கடை 222 குடும்ப அட்டைகளுடனும் செயல்பட்டு வருகின்றன.

பெத்தசிகரலப்பள்ளி கிராமத்தில் முழுநேர நியாய விலைக் கடை வாடகை கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது.

எஸ்.334, அத்திமுகம் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தின்கீழ் பெத்தசிகரலப்பள்ளி (30GP067PY) முழுநேர நியாய விலைக் கடையிலிருந்து ஏற்கெனவே மூன்று பகுதிநேர நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருவதால், புதியதாக நான்காவது பகுதிநேர நியாய விலைக் கடையினைத் துவங்கவும் இந்நேர்வில் பகுதிநேர நியாய விலைக் கடையினை முழுநேர நியாய விலைக் கடையாக மாற்றவும் வழிவகையில்லை.

25—

உறுப்பினர்கள் சேர்த்தல்

வினா எண் 52984—திரு. ஐ.பி. செந்தில்குமார்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2023 அக்டோபர் 11]

பழனி தொகுதி, தேர்தல் நடைபெறாத கூட்டுறவு சங்கங்களில் தனி அலுவலர் அவர்கள் உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:

பழனி தொகுதியில் தேர்தல் நடைபெறாத கூட்டுறவுச் சங்கங்களில் தனி அலுவலர் யாரும் நியமிக்கப்படவில்லை. அச்சங்கங்களில் செயலாட்சியர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். பழனி தொகுதிக்குட்பட்ட 2 கூட்டுறவுச் சங்கங்களில் செயலாட்சியர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். செயலாட்சியர்களால் புதிய உறுப்பினர்களைச் சேர்க்க சாத்தியக்கூறுகள் இல்லை.

26—

கூட்டுறவு வங்கி

வினா எண் 58125—திரு. க.சொ.க. கண்ணன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஜெயங்கொண்டம் தொகுதி, ஜெயங்கொண்டம் ஒன்றியம், வாணதிரையன்பட்டினம் ஊராட்சியில் புதிய தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (டி) எண் 376, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 3-10-2006-ல் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் பூர்த்தியாகாததால் வாணதிரையன்பட்டினம் ஊராட்சியில் புதிய தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி அமைத்திட சாத்தியக்கூறுகள் இல்லை.

27—

நியாய விலைக் கடை

வினா எண் 62657—திரு. க.சொ.க. கண்ணன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜெயங்கொண்டம் தொகுதி, ஜெயங்கொண்டம் ஒன்றியம், இளவாங்குடி ஊராட்சி, மாதாபுரத்தில் புதியதாக நியாய விலைக் கடை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் ஒன்றியத்தில் TYSL95 வங்குடி தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தின்கீழ் 7 முழுநேர நியாய விலைக் கடைகளும் 2 பகுதிநேர நியாய விலைக் கடைகளும் செயல்பட்டு வருகின்றன.

ஜெயங்கொண்டம் ஒன்றியத்தில் TYSL95 வங்குடி தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கம் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வரும் குமிழங்குழி முழுநேர நியாய விலைக் கடையிலிருந்து மாதாபுரம் பகுதியைச் சேர்ந்த 299 குடும்ப அட்டைகளைப் பிரித்து மாதாபுரம் பகுதியில் 28-1-1998 முதல் பகுதிநேர நியாய விலைக் கடை வாடகையில்லாக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது.

எனவே, புதியதாக மாதாபுரம் பகுதியில் நியாய விலைக் கடை அமைக்க அவசியம் எழவில்லை.

28—

குடியிருப்புகள்

வினா எண் 51215—திரு. செ. முருகேசன்: மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2023 அக்டோபர் 11]

(அ) பரமக்குடி தொகுதி, அபிராமம் பேரூராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புகள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பரமக்குடி தொகுதி, அபிராமம் பேரூராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புகள் கட்டும் திட்டம் ஏதும் இல்லை.

29—

முதியோர் இல்லம்

வினா எண் 29373—திரு. இரா. அருள்: மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மேற்கு தொகுதி, சூரமங்கலம் பகுதியில் முதியோர் இல்லம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

தற்போது சேலம் மேற்கு தொகுதி, சூரமங்கலம் பகுதியில் முதியோர் இல்லம் அமைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் பரிசீலனையில் இல்லை.

30—

கட்டடம்

வினா எண் 38336—திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[*2023 அக்டோபர் 11*

(அ) திருவையாறு தொகுதி, திருவையாறு ஊராட்சி ஒன்றியம், பொன்னாவரை கிராமத்தில் அங்கன்வாடி மையக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதி, திருவையாறு ஊராட்சி ஒன்றியம், பொன்னாவரை கிராமத்தில் செயல்பட்டுவரும் குழந்தைகள் மையத்திற்கு *2016-2017* ஆம் ஆண்டு ஊராட்சி நிதியிலிருந்து ரூ.*6.00* இலட்சம் செலவில் புதிய கட்டடம் கட்டப்பட்டு குழந்தைகள் மையம் செயல்பட்டு வருகிறது. எனவே, மேற்கண்ட குழந்தைகள் மையத்திற்கு புதிய கட்டடம் கட்ட வேண்டியதில்லை.

31—

குழந்தைகள் மையம்

வினா எண் 55024—திரு. A.P. நந்தகுமார்: மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அணைக்கட்டு தொகுதி, வேலூர் மாநகரம், வார்டு எண் *57*, எம்.ஜி.ஆர். நகரில் அங்கன்வாடி மையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

வேலூர் மாவட்டம், அணைக்கட்டு தொகுதி, கணியம்பாடி வட்டாரம், வேலூர் மாநகரம், வார்டு எண் *57*, எம்.ஜி.ஆர். நகரில் ஏற்கெனவே குழந்தைகள் மையம் செயல்பட்டு வருகிறது. இம்மையத்திற்கு *2009-2010* ஆம் ஆண்டு ஊரக உட்கட்டமைப்பு (வட்டார ஊராட்சி) திட்டத்தின்கீழ் ரூ.*2.50* இலட்சம் மதிப்பில் கட்டடம் கட்டப்பட்டுள்ளது. இம்மையக் கட்டடம் சம்பந்தப்பட்ட

2023 அக்டோபர் 11]

உள்ளாட்சித் துறைமூலம் அவ்வப்போது உரிய கட்டடப் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு நல்ல நிலையில் உள்ளது. மேற்கண்டுள்ள குழந்தைகள் மையம், சமையல் அறை மற்றும் கழிவறை வசதியுடன் செயல்பட்டு வருகிறது. எனவே, இப்பகுதியில் குழந்தைகள் மையம் ஏற்கெனவே செயல்பட்டு வருவதால் புதியதாக குழந்தைகள் மையம் இப்பகுதிக்கு அமைக்க வேண்டிய தேவை எழவில்லை.

32—

உதவித் தொகை

வினா எண் 59169—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி மாவட்டத்திலுள்ள மாற்றுத் திறனாளிகள் அனைவருக்கும் உதவித்தொகை வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டத்திலுள்ள மாற்றுத் திறனாளிகள் அனைவருக்கும் உதவித்தொகைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

33—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 3671—திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மாதவரம் தொகுதி, சோழவரம் ஊராட்சி ஒன்றியம், நெற்குன்றம் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

அரசு வரையறைகளின்படி, கால்நடை மருத்துவமனை துவக்குவதற்கு, ஏற்கெனவே கால்நடை மருந்தகம் செயல்பட்டு வரும்பட்சத்தில், அதனை கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த இயலும். மேலும், கால்நடை அலகுகள் 5,000-க்கும் அதிகமாகவும், அக்கிராமத்தைச் சுற்றியுள்ள கால்நடை நிலையங்களின் தூரம் 5 கி.மீ.-க்கு மேல் இருக்கும்பட்சத்தில், புதியதாக கால்நடை மருந்தகம் அமைக்கப்படும். நெற்குன்றம் ஊராட்சியில் கால்நடை கிளை நிலையம் ஏதும் இதுவரை தோற்றுவிக்கப்படாதநிலையிலும்,நெற்குன்றம் கிராமத்தில் கால்நடை அலகுகள் 3,000-க்கும் அதிகமாக (அதாவது 3,667) உள்ளதாலும், அக்கிராமத்தைச் சுற்றியுள்ள கால்நடை நிலையங்களின் தூரம் 3 கி.மீ.-க்கு மேல் உள்ளதாலும், புதிய கால்நடை கிளை நிலையம் துவக்கிட இயலும். இது அரசின் கொள்கை முடிவிற்குட்பட்டு பரிசீலிக்கப்படும்.

34—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 5360—திரு. சபா. இராசேந்திரன்: மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெய்வேலி தொகுதி, கீழ்மாம்பட்டு ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

அரசு வரையறைகளின்படி, கால்நடை கிளை நிலையம்தான் முதலில் துவக்கப்படுகிறது. பின்னர், தகுதிக்கேற்ப அக்கிளை நிலையம், கால்நடை மருந்தகமாகவும், அதன் பின்னர்

2023 அக்டோபர் 11]

கால்நடை மருத்துவமனையாகவும் தரம் உயர்த்தப்படுகிறது. கால்நடை கிளை நிலையம் அமைக்கக்கோரும் கிராமத்தில்/பகுதியில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 3,000-த்திற்கு அதிகமாகவும், அப்பகுதியைச் சுற்றி செயல்பட்டுவரும் கால்நடை கிளை நிலையங்களுக்கும் இடைப்பட்ட தொலைவு 3 கி.மீ.-க்கு அதிகமாக இருக்குமானால், அங்கு ஒரு கால்நடை கிளை நிலையம் அமைக்கப்படும். பின்னர், அங்குள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 5,000-த்திற்கும் மேல் அதிகரிக்கும்பட்சத்தில், அப்பகுதியைச் சுற்றி செயல்பட்டுவரும் கால்நடை நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 5 கி.மீ.-க்கு மேல் இருந்தால் அக்கிளை நிலையம் கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்படும். அந்த கால்நடை மருந்தகம், கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட வேண்டுமானால், அங்கு தினசரி சிகிச்சைக்கு வரும் கால்நடைகளின் எண்ணிக்கை 40-க்கும் மேலாக இருக்க வேண்டும்.

நெய்வேலி தொகுதி, கீழ்மாம்பட்டு ஊராட்சியில் கால்நடைகளின் எண்ணிக்கை 3,000-க்கும் குறைவாக (அதாவது 1,430 மட்டுமே) உள்ளதால், அங்கு கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

35—

மருத்துவமனை

வினா எண் 6721—திரு. S. சந்திரன்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு வட்டம், புண்ணியம் ஊராட்சியில் உள்ள கால்நடை மருந்தகத்தை கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு வரையறைகளின்படி, கால்நடைகளின் எண்ணிக்கை 3,000-த்திற்கும் அதிகமாகவும், 3 கி.மீ. சுற்றுப்புறத்தில்

கால்நடை நிலையம் ஏதும் இல்லை என்றால் கால்நடை கிளை நிலையம் முதலில் துவக்கப்படுகிறது. பின்னர், தகுதிக்கேற்ப அக்கிளை நிலையம், கால்நடை மருந்தகமாகவும், கால்நடை மருத்துவமனையாகவும் தரம் உயர்த்தப்படுகிறது. அதன் பின்னர், அங்குள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 5,000-த்திற்கும் மேல் அதிகரிக்கும்பட்சத்தில், அப்பகுதியைச் சுற்றி செயல்பட்டுவரும் கால்நடை நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 5 கி.மீ.-க்கு மேல் இருந்தால் அக்கிளை நிலையம் கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்படும். அந்த கால்நடை மருந்தகம், கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட வேண்டுமானால், அங்கு தினசரி சிகிச்சைக்கு வரும் கால்நடைகளின் எண்ணிக்கை 40-க்கும் மேலாக இருக்க வேண்டும்.

திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு ஊராட்சி ஒன்றியம், புண்ணியம் கிராம ஊராட்சி கால்நடை மருந்தகத்தில் தினசரி சிகிச்சைக்கு வரும் கால்நடைகளின் எண்ணிக்கை 40-க்கும் குறைவாக உள்ளதால், கால்நடை மருந்தகத்தை கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த சாத்தியம் இல்லை.

36—

மருத்துவமனை

வினா எண் 7559—திரு. கி. அசோக்குமார்: மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணகிரி தொகுதி, கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியம், சோக்காடி ஊராட்சி, துடுக்கனஹள்ளி மற்றும் பெத்தனப்பள்ளி ஊராட்சி, பெத்தனப்பள்ளி ஆகிய பகுதிகளில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

அரசு வரையறைகளின்படி, கால்நடை மருத்துவமனை துவக்குவதற்கு, ஏற்கெனவே கால்நடை மருந்தகம்

2023 அக்டோபர் 11]

செயல்பட்டுவரும்பட்சத்தில், அதனைக் கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த இயலும். மேலும், கால்நடை அலகுகள் 5,000-க்கும் அதிகமாகவும், அக்கிராமத்தைச் சுற்றியுள்ள கால்நடை நிலையங்களின் தூரம் 5 கி.மீ.-க்கு மேல் இருக்கும்பட்சத்தில், புதியதாக கால்நடை மருந்தகம் அமைக்கப்படும்.

கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியம், சோக்காடி ஊராட்சி, துடுக்கனஹள்ளி மற்றும் பெத்தனப்பள்ளி ஊராட்சி, பெத்தனப்பள்ளி ஆகிய பகுதிகளில் கால்நடை கிளை நிலையம் ஏதும் இதுவரை தோற்றுவிக்கப்படாத நிலையிலும், கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியம், சோக்காடி ஊராட்சி, துடுக்கனஹள்ளியில் 1,023 கால்நடை அலகுகளும், பெத்தனப்பள்ளி ஊராட்சி, பெத்தனப்பள்ளியில் 3,000-க்கும் அதிகமாக கால்நடை அலகுகள் உள்ளதாலும், அதாவது 3,814 கால்நடை அலகுகள் உள்ளதாலும், கால்நடை நிலையங்களின் தூரம் 3 கி.மீ.-க்கு மேல் உள்ளதாலும், பெத்தனப்பள்ளி ஊராட்சி, பெத்தனப்பள்ளியில் புதிய கால்நடை கிளை நிலையம் மட்டும் துவக்கிட சாத்தியக்கூறுகள் உள்ளன.

37—

மீன் இறங்குதளம்

வினா எண் 8074—திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிள்ளியூர் தொகுதி, தேயுபுரம் பகுதியில் மீன் இறங்குதளம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் தொகுதி, தேயுபுரம் மீனவ கிராமத்தில் சிறிய நாட்டுப்படகுகள் நிறுத்த கடற்கரையை உருவாக்கும் வகையில் நேர்கல்சுவர் அமைக்க ரூ.36.50 கோடிக்கு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு

[*2023 அக்டோபர் 11*

*சாகர்மாலா (*Sagarmala*) திட்டத்தின்கீழ் நிதியுதவி கோரி அரசின் கருத்துரு ஒன்றிய அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளது. அக்கருத்துரு தற்பொழுது ஒன்றிய அரசின் பரிசீலனையில் உள்ளது. எனவே, கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் தொகுதி, ததேயுபுரம் மீனவ கிராமத்தில் மீன் இறங்குதளம் அமைக்கும் திட்டம் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.*

38—

தூண்டில் வளைவு

வினா எண் 8076—திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *கிள்ளியூர் தொகுதி, இரையுமன்துறை கடற்கரை கிராமத்தைப் பாதுகாக்க 6 எண்ணிக்கை கொண்ட தொடர் தூண்டில் வளைவு அமைக்க அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) *கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் தொகுதி, இரையுமன்துறை மீனவ கிராமத்தில் 3 நேர்கல் சுவர்களுடன்கூடிய மீன் இறங்குதளம் மேம்படுத்தும் பணி ரூ.750.00 இலட்சம் மதிப்பீட்டில் நபார்டு* XX *திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளது. தற்பொழுது தேசிய பசுமை தீர்ப்பாயத்தால் கடலில் கடினமான பொருட்களை உபயோகித்து கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளக்கூடாது என தடையாணை வழங்கப்பட்டுள்ளதால், மேற்படி பணிகளை மேற்கொள்ள இயலாத நிலை உள்ளது. எனவே, தடை நீக்கப்பட்ட பின்னர் கிள்ளியூர் தொகுதி, இரையுமன்துறை மீனவ கிராமத்தில் தூண்டில் வளைவு அமைக்கத் தேவையான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.*

2023 அக்டோபர் 11]

39—

மீன் இறங்குதளம்

வினா எண் 8077—திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிள்ளியூர் தொகுதி, இணையம்புத்தன்துறை ஊராட்சி, புத்தன்துறை கிராமத்தில் மீன் இறங்குதளம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் தொகுதி, இணையம்புத்தன்துறை மீனவ கிராமத்தில் ரூ.240.00 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் நபார்டு XVIII திட்டத்தின்கீழ் மீன் இறங்குதளம் அமைக்கப்பட்டு மீனவர்களின் பயன்பாட்டில் இருந்து வருகிறது.

40—

கால்நடை கிளை நிலையம்

வினா எண் 9715—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, காட்டம்பட்டி ஊராட்சி, குத்தலள்ளி கிராமத்தில் புதிய கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் தொகுதி, காட்டம்பட்டி ஊராட்சி, குத்தலள்ளி கிராமத்தில் புதிய கால்நடை கிளை நிலையம் அமைக்க சாத்தியக் கூறுகள் உள்ளன. அரசின் கொள்கை முடிவிற்குட்பட்டு பரிசீலிக்கப்படும்.

41—

மருத்துவமனை

வினா எண் 9924—திரு. பூண்டி கே. கலைவாணன்: மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் தொகுதி, மன்னார்குடி ஊராட்சி ஒன்றியம், வக்ராநல்லூர் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு வரையறைகளின்படி, கால்நடைகளின் எண்ணிக்கை 3,000-த்திற்கும் அதிகமாகவும், 3 கி.மீ. சுற்றுப்புறத்தில் கால்நடை நிலையம் ஏதும் இல்லை என்றால் கால்நடை கிளை நிலையம் முதலில் துவக்கப்படுகிறது. பின்னர், தகுதிக்கேற்ப அக்கிளை நிலையம், கால்நடை மருந்தகமாகவும், கால்நடை மருத்துவமனையாகவும் தரம் உயர்த்தப்படுகிறது. அங்குள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 5,000-த்திற்கும் மேல் அதிகரிக்கும்பட்சத்தில், அப்பகுதியைச் சுற்றி செயல்பட்டுவரும் கால்நடை நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 5 கி.மீ.-க்கு மேல் இருந்தால் அக்கிளை நிலையம் கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்படும். அந்த கால்நடை மருந்தகம், கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட வேண்டுமானால்,

2023 அக்டோபர் 11]

அங்கு தினசரி சிகிச்சைக்கு வரும் கால்நடைகளின் எண்ணிக்கை 40-க்கும் மேலாக இருக்க வேண்டும்.

திருவாரூர் தொகுதி, மன்னார்குடி ஊராட்சி ஒன்றியம், வக்ராநல்லூர் ஊராட்சியில் 3,000-க்கும் குறைவான (அதாவது 299) கால்நடை அலகுகள் மட்டுமே உள்ளதால், அங்கு கால்நடை மருத்துவமனை துவக்கிட சாத்தியக் கூறுகள் இல்லை.

42—

மீன் விற்பனை வளாகம்

வினா எண் 10386—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சென்னையில் உலகத் தரம் வாய்ந்த மொத்த மீன் விற்பனை வளாகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னையில் மொத்த மீன் விற்பனை நிலையம் அமைத்திட இடம் தேர்வு செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

43—

ஹெலிகாப்டர்கள்

வினா எண் 10401—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருநெல்வேலி விஜய நாராயணத்திலுள்ள ஐஎன்எஸ் கட்டபொம்மன் கடற்கரை தகவல் தொடர்பு தளத்தில், காணாமல்போகும் தமிழக மீனவர்களைக் கண்டுபிடிக்க இரண்டு

[*2023 அக்டோபர் 11*

ஹெலிகாப்டர்களை நிறுத்த ஒன்றிய அரசை மாநில அரசு வலியுறுத்துமா?

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) *கடலோர காவற்படை தளங்களிலிருந்து கப்பல்கள் மற்றும் ஹெலிகாப்டர்கள் தேவையின் அடிப்படையிலும், மீனவர்கள் கடலில் ஆபத்தில் இருக்கும் இடத்தின் அடிப்படையிலும் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், கடலில் மீன்பிடிப்பில் ஈடுபடும் மீனவர்கள் காணாமல்போகும் நிகழ்வுகளில் இந்திய கடலோர காவற்படை மற்றும் கடலோர பாதுகாப்பு குழுமம் ஆகியவற்றிற்கு துறைமூலம் தகவல் தெரிவிக்கப்பட்டு உடனடியாக ஆகாய மார்க்கம் மற்றும் கடல் மார்க்கமாக தீவிர தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. திருநெல்வேலி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் அருகாமையிலுள்ள தூத்துக்குடி மற்றும் விழிஞ்சம் கடலோர காவற்படை தளங்களிலிருந்து கப்பல்கள் மற்றும் ஹெலிகாப்டர்கள் தேவையின் அடிப்படையிலும், மீனவர்கள் கடலில் ஆபத்தில் இருக்கும் இடத்தின் அடிப்படையிலும் இயக்கப்பட்டு வருகின்றன. மீனவர்களின் உயிர் மற்றும் உடைமைகளைப் பாதுகாக்கும்பொருட்டு இந்திய கடலோர காவற்படை மற்றும் இந்திய கடற்படைமூலம் மீன்வளத் துறை உரிய தேடுதல் மற்றும் மீட்பு பணிகளை மேற்கொண்டு வருகிறது. தற்போது மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்திடவும், கரையிலுள்ளவர்களிடமும் அவசர தகவல்களைப் பரிமாறவும் ஒரு குழுவாக மீன்பிடிப்பில் ஈடுபடும் 80 குழுக்களைக் கொண்ட ஆழ்கடல் மீன்பிடி படகுகள் தெரிவு செய்யப்பட்டு, 160 செயற்கைக்கோள் தொலைபேசி, 200 நேவிக் மற்றும் 30 நேவ்டெக்ஸ் சாதனங்கள் 100 விழுக்காடு மானியத்திலும், 438 செயற்கைக்கோள் தொலைபேசிகள் 75 விழுக்காடு மானியத்திலும் ஆழ்கடல் மீன்பிடி படகுகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.*

2023 அக்டோபர் 11]

44—

கட்டடம்

வினா எண் 11939—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *விராலிமலை தொகுதி, விராலிமலை ஒன்றியம், அத்திபள்ளத்தில் கால்நடை மருத்துவமனைக்கு கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) *விராலிமலை தொகுதி, விராலிமலை ஒன்றியம், அத்திபள்ளத்தில் கால்நடை மருத்துவமனை ஏதும் செயல்படவில்லை. கால்நடை கிளை நிலையம் மட்டுமே செயல்பட்டு வருகிறது. அக்கால்நடை கிளை நிலையம் வாடகையில்லா கட்டடத்தில் இயங்கி வருகிறது. கால்நடை கிளை நிலையங்களுக்குக் கட்டடம் கட்ட தற்போது அரசிடம் திட்டம் ஏதும் இல்லை.*

45—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 11996—திரு. பெ. ராமலிங்கம்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நாமக்கல் தொகுதி, புதுச்சத்திரம் ஒன்றியத்தில் உள்ள கால்நடை மருத்துவமனையைத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

[*2023 அக்டோபர் 11*

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

நாமக்கல் தொகுதி, புதுச்சத்திரம் ஒன்றியத்தில் உள்ள கால்நடை மருத்துவமனைக்கு நாளொன்றுக்கு சிகிச்சைக்கு வரும் கால்நடைகளின் எண்ணிக்கை 40-க்கு அதிகமாக உள்ளதாலும், கால்நடை மருத்துவமனை தோற்றுவிப்பதற்கான உட்கட்டமைப்புகள் ஏற்படுத்திட இட வசதி உள்ளதாலும் மேற்படி கால்நடை மருந்தகம் கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்படுவதற்கு வாய்ப்பு உள்ளது. இது அரசின் கொள்கை முடிவிற்குட்பட்டு பரிசீலிக்கப்படும்.

46—

மருத்துவமனை

வினா எண் 12013—திரு. ஆ. அருண்மொழிதேவன்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கடலூர் மாவட்டம், புவனகிரி வட்டம், சாத்தப்படியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

அரசு வரையறைகளின்படி, கால்நடை கிளை நிலையம்தான் முதலில் துவக்கப்படுகிறது. பின்னர், தகுதிக்கேற்ப அக்கிளை நிலையம், கால்நடை மருந்தகமாகவும், அதன் பின்னர் கால்நடை மருத்துவமனையாகவும் தரம் உயர்த்தப்படுகிறது. அங்குள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 5,000-த்திற்கும் மேல் அதிகரிக்கும்பட்சத்தில், அப்பகுதியைச் சுற்றி செயல்பட்டுவரும் கால்நடை நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 5 கி.மீ.-க்கு மேல் இருந்தால் அக்கிளை நிலையம் கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்படும். அந்த கால்நடை மருந்தகம், கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட வேண்டுமானால்,

2023 அக்டோபர் 11]

அங்கு தினசரி சிகிச்சைக்கு வரும் கால்நடைகளின் எண்ணிக்கை 40-க்கும் மேலாக இருக்க வேண்டும்.

கடலூர் மாவட்டம், புவனகிரி வட்டம், சாத்தப்படியில் கால்நடை அலகுகளின் எண்ணிக்கை 3,000-க்கும் குறைவாக (அதாவது 323 மட்டுமே) உள்ளதால், அங்கு கால்நடை மருத்துவமனை அமைக்க தற்சமயம் சாத்தியக்கூறுகள் இல்லை.

47—

மருத்துவமனை

வினா எண் 12056—திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலம் தொகுதி, மயிலம் ஒன்றியம், ஆசூர் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு வரையறைகளின்படி, கால்நடைகளின் எண்ணிக்கை 3,000-த்திற்கும், மேலும், 3 கி.மீ. சுற்றுப்புறம் கால்நடை நிலையம் ஏதும் இல்லை என்றால் கால்நடை கிளை நிலையம்தான் முதலில் துவக்கப்படுகிறது. பின்னர், தகுதிக்கேற்ப அக்கிளை நிலையம், கால்நடை மருந்தகமாகவும், அதன் பின்னர் கால்நடை மருத்துவமனையாகவும் தரம் உயர்த்தப்படுகிறது. அங்குள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 5,000-த்திற்கும் மேல் அதிகரிக்கும்பட்சத்தில், அப்பகுதியைச் சுற்றி செயல்பட்டுவரும் கால்நடை நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 5 கி.மீ.-க்கு மேல் இருந்தால் அக்கிளை நிலையம் கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்படும். அந்த கால்நடை மருந்தகம், கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட வேண்டுமானால், அங்கு தினசரி சிகிச்சைக்கு வரும் கால்நடைகளின் எண்ணிக்கை 40-க்கும் மேலாக இருக்க வேண்டும்.

[*2023 அக்டோபர் 11*

மயிலம் தொகுதி, மயிலம் ஒன்றியம், ஆசூர் கிராமத்தில் கால்நடை அலகுகளின் எண்ணிக்கை 3,000-க்கும் அதிகமாக (அதாவது 6,479) உள்ளதால், அப்பகுதியில் கால்நடை கிளை நிலையம் துவக்கிட அரசின் கொள்கை முடிவிற்குட்பட்டு பரிசீலிக்கப்படும்.

48—

துறைமுகம்

வினா எண் 12136—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குளச்சல் தொகுதி, வானியக்குடி கடற்கரை பகுதியில் மீன்பிடி துறைமுகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் தொகுதியில், வானியக்குடி மீனவ கிராமத்தில் புதிய மீன்பிடி துறைமுகம் அமைப்பது தொடர்பாக பல்வேறு ஆய்வுப் பணிகள் மேற்கொண்டு அதற்கான விரிவான தொழில்நுட்ப, பொருளாதார சாத்தியக்கூறு மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் ஆலோசனை பணிகளுக்கு மாநில அரசின் நிதியின்கீழ் 2021-2022 ஆம் நிதியாண்டில் ரூ.1.00 கோடிக்கு நிருவாக ஒப்புதல் அளித்து அரசு ஆணையிட்டுள்ளது.

49—

மருத்துவமனை

வினா எண் 12153—திரு. க. கார்த்திகேயன்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2023 அக்டோபர் 11]

ரிஷிவந்தியம் தொகுதி, ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியம், கடம்பூர் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

தற்போது நடைமுறையில் உள்ள அரசு வரையறைகளின்படி, கடம்பூர் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை துவக்குவதற்கு சாத்தியக் கூறுகள் இல்லை. ரிஷிவந்தியம் தொகுதி, கடம்பூர் ஊராட்சியில் 4,770 கால்நடை அலகுகள் உள்ளதால், அங்கு முதற்கட்டமாக கால்நடை கிளை நிலையம் துவக்கிட சாத்தியக்கூறு உள்ளது. எனவே, இது அரசின் கொள்கை முடிவிற்குட்பட்டு பரிசீலிக்கப்படும்.

50—

கால்நடை மருந்தகம்

வினா எண் 13144—திரு. A.J. மணிக்கண்ணன்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

உளுந்தூர்பேட்டை தொகுதி, திருநாவலூர் ஊராட்சி ஒன்றியம், கூவாக பகுதியில் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

தற்போது நடைமுறையில் உள்ள அரசு வரையறைகளின்படி, கூவாக பகுதியில் கால்நடை மருந்தகம் துவக்குவதற்கு சாத்தியக் கூறுகள் இல்லை. உளுந்தூர்பேட்டை தொகுதி, திருநாவலூர் ஊராட்சி ஒன்றியம், கூவாக பகுதியில் 3,152 கால்நடை அலகுகள் உள்ளதால், அங்கு முதற்கட்டமாக கால்நடை கிளை நிலையம் துவக்கிட சாத்தியக் கூறுகள் உள்ளன. எனவே, இது அரசின் கொள்கை முடிவிற்குட்பட்டு பரிசீலிக்கப்படும்.

51—

மீன் பதனிடும் நிலையம்

வினா எண் 14302—திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம்: மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் தொகுதி, கீழக்கரை பகுதியில் அரசு சார்பில் மீன் பதனிடும் நிலையம் மற்றும் படகு கட்டும் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் தொகுதி, கீழக்கரை பகுதியில் மீன் இறங்குதளம் அமைக்கும் பணி ரூ.5.31 கோடி செலவில் TRP திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டு தற்பொழுது பயன்பாட்டில் உள்ளது. இராமநாதபுரம் தொகுதி, கீழக்கரை பகுதியில் மீன்பதனிடும் நிலையம் மற்றும் படகு கட்டும் தொழிற்சாலை அமைக்க மீனவ பிரதிநிதிகளிடமிருந்து கோரிக்கை மனு ஏதும் பெறப்படவில்லை. கோரிக்கை மனு பெறப்பட்டு, மீனவ மக்களின் தேவைக்கேற்ப காலிமனை இருக்கும்பட்சத்தில் மீன் பதனிடும் நிலையம் மற்றும் படகு கட்டும் தொழிற்சாலை அமைக்க திட்ட கருத்துருவின் மீது அரசின் நிர்வாக அனுமதி பெறப்பட்டதும் பணிகள் துவக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

52—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 14469—திரு. மு. பன்னீர்செல்வம்: மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2023 அக்டோபர் 11]

சீர்காழி நகரிலுள்ள கால்நடை மருத்துவமனையை தரம் உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

ஒரு கால்நடை மருத்துவமனையை தரம் உயர்த்தி கால்நடை பிரதம மருத்துவமனை துவக்குவதற்கு ஏற்கெனவே கால்நடை மருத்துவமனை செயல்பட்டு வரும்பட்சத்திலும், சிகிச்சைக்கு வரும் கால்நடைகளின் எண்ணிக்கை நாள் ஒன்றுக்கு 60-க்கும் மேல் வரும்பட்சத்திலும் அதனை கால்நடை பிரதம மருத்துவமனையாகத் தரம் உயர்த்த இயலும். சீர்காழியில் நாளொன்றுக்கு சிகிச்சைக்கு வரும் கால்நடைகளின் எண்ணிக்கை 60-க்கும் மேல் உள்ளதால் அதனை தரம் உயர்த்தி பிரதம மருத்துவமனை துவக்குவதற்கு அரசின் கொள்கை முடிவிற்குட்பட்டு பரிசீலிக்கப்படும்.

53—

கால்நடை கிளை நிலையம்

வினா எண் 14470—திரு. மு. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், வடரெங்கம் கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், வடரெங்கம் கிராமத்திற்கு 3 கி.மீ. அருகில் அகரஎலத்தூரில் கால்நடை கிளை நிலையம் செயல்பட்டுவரும் நிலையில் மேற்படி வடரெங்கம் கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் அமைக்க அவசியம் இல்லை.

54—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 15231—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி வட்டம், எர்ரபையனள்ளி ஊராட்சி, நெக்குந்தி கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

அரசு வரையறைகளின்படி, கால்நடை மருத்துவமனை துவக்குவதற்கு, ஏற்கெனவே கால்நடை மருந்தகம் செயல்பட்டு வரும்பட்சத்தில் அதனை கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த இயலும். மேலும், கால்நடை அலகுகள் 5,000-க்கும் அதிகமாகவும், அக்கிராமத்தைச் சுற்றியுள்ள கால்நடை நிலையங்களின் தூரம் 5 கி.மீ.-க்கு மேல் இருக்கும்பட்சத்தில், புதியதாக கால்நடை மருந்தகம் அமைக்கப்படும். கால்நடை மருந்தகத்தை கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த வேண்டுமானால் அங்கு தினசரி சிகிச்சைக்கு வரும் கால்நடைகளின் எண்ணிக்கை 40-க்கும் மேல் இருக்க வேண்டும். தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி வட்டம், எர்ரபையனள்ளி ஊராட்சி, நெக்குந்தி கிராமத்தில் கால்நடை அலகுகளின் எண்ணிக்கை 3,000-க்கும் அதிகமாக அதாவது, 3,558 உள்ளதாலும், அக்கிராமத்தைச் சுற்றியுள்ள கால்நடை நிலையங்களின் தூரம் 3 கி.மீ.-க்கு மேல் உள்ளதாலும், முதற்கட்டமாக புதிய கால்நடை கிளை நிலையம் துவக்கிட இயலும்.

55—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 17900—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை

2023 அக்டோபர் 11]

பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) *தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், மாதேமங்கலம் ஊராட்சி, குட்டூர் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) *அரசு வரையறைகளின்படி, கால்நடைகளின் எண்ணிக்கை 3,000-த்திற்கும் அதிகமாகவும், 3 கி.மீ. சுற்றுப்புறத்தில் கால்நடை நிலையம் ஏதும் இல்லை என்றால் கால்நடை கிளை நிலையம் முதலில் துவக்கப்படுகிறது. பின்னர், தகுதிக்கேற்ப அக்கிளை நிலையம், கால்நடை மருந்தகமாகவும், அதன் பின்னர் கால்நடை மருத்துவமனையாகவும் தரம் உயர்த்தப்படுகிறது. அங்குள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 5,000-த்திற்கும் மேல் அதிகரிக்கும்பட்சத்தில் அப்பகுதியைச் சுற்றி செயல்பட்டு வரும் கால்நடை நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 5 கி.மீ.-க்கு மேல் இருந்தால் அக்கிளை நிலையம் கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்படும். அந்த கால்நடை மருந்தகம், கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட வேண்டுமானால், அங்கு தினசரி சிகிச்சைக்கு வரும் கால்நடைகளின் எண்ணிக்கை 40-க்கும் மேலாக இருக்க வேண்டும்.*

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், மாதேமங்கலம் ஊராட்சி, குட்டூர் கிராமத்தில் கால்நடை அலகுகளின் எண்ணிக்கை 3,000-த்திற்கும் அதிகமாக (அதாவது 3,166) உள்ளதாலும், அக்கிராமத்தைச் சுற்றியுள்ள கால்நடை நிலையங்களின் தூரம் 3 கி.மீ.-க்கு மேல் உள்ளதாலும், அங்கு முதலில் கால்நடை கிளை நிலையம் மட்டுமே அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளன. இது அரசின் கொள்கை முடிவிற்குட்பட்டு பரிசீலிக்கப்படும்.

56—

ஆராய்ச்சிக் கூடம்

வினா எண் 18427—திரு. பெ. ராமலிங்கம்: மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் தொகுதி, நாமக்கல்லில் கோழிகள் நோய் ஆய்வகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், நாமக்கல் தொகுதியில் தமிழ்நாடு கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் இயங்கி வருகிறது. கோழியின வளர்ப்போர் பயன்பெறும் வண்ணம் அனைத்து விதமான கோழி நோய்கள் சம்பந்தமான பரிசோதனை ஆய்வுகள் அந்நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே, நாமக்கல் தொகுதியில் தனியாக கோழி நோய் ஆராய்ச்சிக் கூடம் அமைக்க அவசியம் எழாது.

57—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 18485—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, மஞ்சாரஅள்ளி ஊராட்சி, மஞ்சாரஅள்ளி பகுதியில் புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 அக்டோபர் 11]

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு வரையறைகளின்படி, கால்நடை மருத்துவமனை துவக்குவதற்கு, ஏற்கெனவே கால்நடை மருந்தகம் செயல்பட்டு வரும்பட்சத்தில் அதனை கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த இயலும். மேலும், கால்நடை அலகுகள் 5,000-த்திற்கும் அதிகமாகவும், அக்கிராமத்தைச் சுற்றியுள்ள கால்நடை நிலையங்களின் தூரம் 5 கி.மீ.-க்கு மேல் இருக்கும்பட்சத்தில், புதியதாக கால்நடை மருந்தகம் அமைக்கப்படும். பெண்ணாகரம் தொகுதி, மஞ்சாரஅள்ளி கிராமத்தில் கால்நடை அலகுகளின் எண்ணிக்கை 3,000-த்திற்கும் அதிகமாக அதாவது, 3,020 உள்ளதாலும், அருகிலுள்ள கால்நடை நிலையங்களின் தூரம் 3 கி.மீ.-க்கு மேல் உள்ளதாலும், அங்கு முதற்கட்டமாக புதிய கால்நடை கிளை நிலையம் மட்டுமே அமைத்திட சாத்தியக்கூறுகள் உள்ளன.

58—

கால்நடை கிளை நிலையம்

வினா எண் 21782—திரு. ஜி.கே. மணி: மண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, பாப்பாரப்பட்டி பகுதி, கிட்டம்பட்டி கிராமத்தில் புதிய கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் தொகுதி, பாப்பாரப்பட்டி பகுதி, கிட்டம்பட்டி கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளன.

[*2023 அக்டோபர் 11*

அரசு கொள்கை முடிவுகள் அடிப்படையில் கால்நடை கிளை நிலையம் அமைக்க கிட்டம்பட்டி கிராமம் பரிசீலிக்கப்படும்.

59—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 26662—திரு. செ. சுந்தரராஜன்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *சங்கரி தொகுதி, மோரூர் கிழக்கு புள்ளிபாளையத்தில் புதிய கால்நடை மருத்துவமனை கட்ட அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) *அரசு வரையறைகளின்படி, கால்நடை கிளை நிலையம்தான் முதலில் துவக்கப்படுகிறது. பின்னர், தகுதிக்கேற்ப அக்கிளை நிலையம், கால்நடை மருந்தகமாகவும், அதன் பின்னர் கால்நடை மருத்துவமனையாகவும் தரம் உயர்த்தப்படுகிறது. அங்குள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 5,000-த்திற்கும் மேல் அதிகரிக்கும்பட்சத்தில் அப்பகுதியைச் சுற்றி செயல்பட்டு வரும் கால்நடை நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 5 கி.மீ.-க்கு மேல் இருந்தால் அக்கிளை நிலையம் கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்படும். அந்த கால்நடை மருந்தகம், கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட வேண்டுமானால், அங்கு தினசரி சிகிச்சைக்கு வரும் கால்நடைகளின் எண்ணிக்கை 40-க்கும் மேலாக இருக்க வேண்டும்.*

சங்கரி தொகுதி, மோரூர் கிழக்கு புள்ளிபாளையத்தில் அரசு வரையறைகளின்படி, கால்நடை அலகுகளின் எண்ணிக்கை 3,000-த்திற்கும் குறைவாக (அதாவது 1,575 மட்டுமே) உள்ளதால், அங்கு கால்நடை மருத்துவமனை அமைக்க தற்சமயம் சாத்தியக்கூறுகள் இல்லை.

2023 அக்டோபர் 11]

60—

கால்நடை மருந்தகம்

வினா எண் 28230—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *பெண்ணாகரம் தொகுதி, பாப்பாரப்பட்டி பகுதியில் உள்ள கால்நடை கிளை நிலையத்தை மருந்தகமாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) *அரசாணை (நிலை) எண் 2159, வேளாண்மைத் துறை, நாள் 19-10-1992-ன்படி பாப்பாரப்பட்டியில் உள்ள கால்நடை கிளை நிலையம் கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்பட்டு 18-7-1994 முதல் செயல்பட்டு வருகிறது.*

61—

கால்நடை கிளை நிலையம்

வினா எண் 28233—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *பெண்ணாகரம் தொகுதி, சத்தியநாதபுரம் ஊராட்சி, கொட்டாவூர் கிராமம் 4-வது மைலில் கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) *பெண்ணாகரம் தொகுதி, சத்தியநாதபுரம் ஊராட்சி, கொட்டாவூர் கிராமம் 4-வது மைலில் கால்நடை கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளன.*

(ஆ) அரசு கொள்கை முடிவுகள் அடிப்படையில், எதிர்காலத்தில் கால்நடை கிளை நிலையம் அமைக்க கொட்டாவூர் கிராமம் பரிசீலிக்கப்படும்.

62—

கால்நடை மருந்தகம்

வினா எண் 28235—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, சின்னம்பள்ளி பகுதியில் உள்ள கால்நடை கிளை நிலையத்தை மருந்தகமாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு ஆணை எண் 137, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை, நாள் 4-11-2011-ன்படி சின்னம்பள்ளியில் உள்ள கால்நடை கிளை நிலையம், கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்பட்டு 23-5-2012 முதல் செயல்பட்டு வருகிறது.

63—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 38051—திரு. ம. பிரபாகரன்: மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பலூர் தொகுதி, நாரணமங்கலம் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

அரசு வரையறைகளின்படி, கால்நடை கிளை நிலையம்தான் முதலில் துவக்கப்படுகிறது. பின்னர், தகுதிக்கேற்ப அக்கிளை

2023 அக்டோபர் 11]

நிலையம், கால்நடை மருந்தகமாகவும், அதன் பின்னர் கால்நடை மருத்துவமனையாகவும் தரம் உயர்த்தப்படுகிறது. அங்குள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 5,000-த்திற்கும் மேல் அதிகரிக்கும்பட்சத்தில் அப்பகுதியைச் சுற்றி செயல்பட்டு வரும் கால்நடை நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 5 கி.மீ.-க்கு மேல் இருந்தால் அக்கிளை நிலையம் கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்படும். அந்த கால்நடை மருந்தகம், கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட வேண்டுமானால், அங்கு தினசரி சிகிச்சைக்கு வரும் கால்நடைகளின் எண்ணிக்கை 40-க்கும் மேலாக இருக்க வேண்டும்.

நாரணமங்கலம் ஊராட்சியில் கால்நடை கிளை நிலையம் ஏதும் இதுவரை தோற்றுவிக்கப்படாத நிலையிலும், நாரணமங்கலம் ஊராட்சியில் கால்நடை அலகுகள் 3,000-த்திற்கும் அதிகமாக (அதாவது 5,062) உள்ளதாலும், அக்கிராமத்தைச் சுற்றியுள்ள கால்நடை நிலையங்களின் தூரம் 3 கி.மீ.-க்கு மேல் இருப்பதாலும் அரசு வரையறைகளின்படி முதலில் புதிய கால்நடை கிளை நிலையம் மட்டுமே துவக்கிட இயலும். இது அரசின் கொள்கை முடிவிற்குட்பட்டு பரிசீலிக்கப்படும்.

64—

பயிற்சி நிலையம்

வினா எண் 38106—திரு. A.P. நந்தகுமார்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அணைக்கட்டு தொகுதியில் கால்நடை பயிற்சி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

வேலூர் மாவட்டம், வேலூரில் பல்கலைக்கழகத்தின் கால்நடை மருத்துவ பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் ஒன்று செயல்பட்டு

வருவதால், வேலூர் மாவட்டம், அணைக்கட்டு தொகுதியில் புதிய கால்நடை பயிற்சி மையம் அமைக்க அவசியம் ஏதும் எழவில்லை.

65—

கால்நடை கிளை நிலையம்

வினா எண் 38339—திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு தொகுதி, அய்யனாபுரம் கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) திருவையாறு தொகுதி, அய்யனாபுரம் கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

66—

கால்நடை கிளை நிலையம்

வினா எண் 38341—திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு தொகுதி, சிதம்பரபட்டி கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) திருவையாறு தொகுதி, சிதம்பரபட்டி கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளன.

2023 அக்டோபர் 11]

(ஆ) அரசின் கொள்கை முடிவிற்குட்பட்டு பரிசீலிக்கப்படும்.

67—

கால்நடை கிளை நிலையம்

வினா எண் 38342—திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு தொகுதி, செல்லப்பன்பேட்டை ஊராட்சியில் கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) திருவையாறு தொகுதி, செல்லப்பன்பேட்டை ஊராட்சியில் கால்நடை கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளன.

(ஆ) அரசின் கொள்கை முடிவிற்குட்பட்டு பரிசீலிக்கப்படும்.

68—

கால்நடை கிளை நிலையம்

வினா எண் 38344—திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு தொகுதி, அகரப்பேட்டை ஊராட்சியில் கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவையாறு தொகுதி, அகரப்பேட்டை ஊராட்சியில் புதிய கால்நடை கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

69—

கால்நடை கிளை நிலையம்

வினா எண் 38345—திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு தொகுதி, ஆச்சாம்பட்டி ஊராட்சியில் கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) திருவையாறு தொகுதி, ஆச்சாம்பட்டி ஊராட்சியில் புதிய கால்நடை கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

70—

கால்நடை கிளை நிலையம்

வினா எண் 38346—திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு தொகுதி, ஓரத்தூர் ஊராட்சியில் கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 அக்டோபர் 11]

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) திருவையாறு தொகுதி, ஒரத்தூர் ஊராட்சியில் கால்நடை கிளை நிலையம் தோற்றுவிக்கப்பட்டு தற்போது செயல்பட்டு வருகிறது.

(ஆ) கேள்வி எழாது.

71—

கால்நடை கிளை நிலையம்

வினா எண் 38349—திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு தொகுதி, 70 பெரமூர் ஊராட்சியில் புதிய கால்நடை கிளை நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) திருவையாறு தொகுதி, 70 பெரமூர் ஊராட்சியில் புதிய கால்நடை கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

72—

கால்நடை கிளை நிலையம்

வினா எண் 38350—திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு தொகுதி, மருதகுடி ஊராட்சியில் புதிய கால்நடை கிளை நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) திருவையாறு தொகுதி, மருதகுடி ஊராட்சியில் புதிய கால்நடை கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

73—

கட்டடம்

வினா எண் 38383—திரு. J.L. ஈஸ்வரப்பன்: மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியம், வரகூர் ஊராட்சியில் உள்ள கால்நடை மருத்துவமனைக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியம், வரகூர் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை ஏதும் செயல்படவில்லை. கால்நடை கிளை நிலையம் மட்டுமே செயல்பட்டு வருகிறது. அக்கிளை நிலையம் வாடகையில்லா பஞ்சாயத்துக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. கால்நடை கிளை நிலையங்களுக்கு புதிய கட்டடம் கட்டுவதற்கு தற்போது அரசிடம் திட்டம் ஏதும் இல்லை.

எனவே, உள்ளாட்சி/தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு பெறும்பட்சத்தில் ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியம், வரகூர் ஊராட்சியில் கால்நடை கிளை நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்ட பரிசீலிக்கப்படும்.

2023 அக்டோபர் 11]

74—

கட்டடம்

வினா எண் 38384—திரு. J.L. ஈஸ்வரப்பன்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியம், வரகூர் ஊராட்சியில் கால்நடை மருந்தக அலுவலகக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியம், வரகூர் ஊராட்சியில் கால்நடை கிளை நிலையம் வாடகையில்லா பஞ்சாயத்துக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. கால்நடை கிளை நிலையம் கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்படும்போது கால்நடை மருந்தகத்திற்கு நிரந்தர கட்டடம் கட்ட பரிசீலிக்கப்படும்.

75—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 38825—திரு. K. மாரிமுத்து: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்துறைப்பூண்டி தொகுதி, ஒவரூர் ஊராட்சி, ஒவரூர் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

அரசு வரையறைகளின்படி, கால்நடை கிளை நிலையம்தான் முதலில் துவக்கப்படுகிறது. பின்னர், தகுதிக்கேற்ப அக்கிளை நிலையம், கால்நடை மருந்தகமாகவும், அதன் பின்னர்

கால்நடை மருத்துவமனையாகவும் தரம் உயர்த்தப்படுகிறது. கால்நடை கிளை நிலையம் அமைக்கக் கோரும் கிராமத்தில்/பகுதியில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 3,000-த்திற்கும் அதிகமாகவும், அப்பகுதியைச் சுற்றி செயல்பட்டு வரும் கால்நடை கிளை நிலையங்களுக்கும் இடைப்பட்ட தொலைவு 3 கி.மீ.-க்கு அதிகமாக இருக்குமானால், அங்கு ஒரு கால்நடை கிளை நிலையம் அமைக்கப்படும். அங்குள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 5,000-த்திற்கும் மேல் அதிகரிக்கும்பட்சத்தில் அப்பகுதியைச் சுற்றி செயல்பட்டு வரும் கால்நடை நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 5 கி.மீ.-க்கு மேல் இருந்தால் அக்கிளை நிலையம் கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்படும். அந்த கால்நடை மருந்தகம், கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட வேண்டுமானால், அங்கு தினசரி சிகிச்சைக்கு வரும் கால்நடைகளின் எண்ணிக்கை 40-க்கும் மேலாக இருக்க வேண்டும்.

தற்போது நடைமுறையில் உள்ள அரசு வரையறைகளின்படி, திருத்துறைப்பூண்டி தொகுதி, ஓவரூர் ஊராட்சி, ஓவரூர் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. திருத்துறைப்பூண்டி தொகுதி, ஓவரூர் கிராமத்தில் 3,005 கால்நடை அலகுகள் உள்ளதால், அங்கு முதற்கட்டமாக கால்நடை கிளை நிலையம் மட்டுமே துவக்கிட சாத்தியக்கூறுகள் உள்ளன. இது அரசின் கொள்கை முடிவிற்குட்பட்டு பரிசீலிக்கப்படும்.

76—

மீன்பிடித் துறைமுகம்

வினா எண் 38827—திரு. K. மாரிமுத்து: மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி தொகுதி, தொண்டியக்காடு ஊராட்சி, முனாங்காட்டில் நிரந்தர மீன்பிடித் துறைமுகம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, தொண்டியக்காடு ஊராட்சி, முனாங்காட்டில் மீன்பிடித்

2023 அக்டோபர் 11]

துறைமுகம் அமைக்க தல ஆய்வு செய்ததில் போதிய இடவசதி இல்லாத காரணத்தினாலும், போதிய எண்ணிக்கையில் இயந்திர மீன்பிடி படகுகள் (MFB) இல்லாததாலும் இங்கு மீன்பிடித் துறைமுகம் அமைக்க வழிவகை இல்லை.

77—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 38893—திரு. ச. சிவகுமார்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *மயிலம் தொகுதி, ஒலக்கூர் ஒன்றியம், வெண்மணியாத்தூர் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) *அரசு வரையறைகளின்படி, கால்நடை மருத்துவமனை துவக்குவதற்கு, ஏற்கெனவே கால்நடை மருந்தகம் செயல்பட்டு வரும்பட்சத்தில் அதனை கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த இயலும். மேலும், கால்நடை அலகுகள் 5,000-க்கும் அதிகமாகவும், அக்கிராமத்தைச் சுற்றியுள்ள கால்நடை நிலையங்களின் தூரம் 5 கி.மீ.-க்கு மேல் இருக்கும்பட்சத்தில், புதியதாக கால்நடை மருந்தகம் அமைக்கப்படும்.*

வெண்மணியாத்தூர் கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் ஏதும் இதுவரை தோற்றுவிக்கப்படாத நிலையிலும், வெண்மணியாத்தூர் கிராமத்தில் கால்நடை அலகுகள் 3,000-க்கும் அதிகமாக அதாவது, 6,048 உள்ளதாலும், அக்கிராமத்தைச் சுற்றியுள்ள கால்நடை நிலையங்களின் தூரம் 3 கி.மீ.-க்கு மேல் உள்ளதாலும், புதிய கால்நடை கிளை நிலையம் துவக்கிட இயலும். இது அரசின் கொள்கை முடிவிற்குட்பட்டு பரிசீலிக்கப்படும்.

78—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 51113—திரு. V.P. கந்தசாமி: மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சூலூர் தொகுதி, சுல்தான்பேட்டை, சூலூர் ஒன்றியங்களில் நடமாடும் கால்நடை மருத்துவமனைகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சுல்தான்பேட்டையில் 7 கால்நடை மருந்தகங்கள் மற்றும் சூலூர் ஒன்றியத்தில் 7 கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றின்மூலம் கால்நடை வளர்ப்போர் மற்றும் விவசாயிகள் பயன்பெறும் வகையில் தேவையான அனைத்து சேவைகளும் அளிக்கப்பட்டு வருகின்றன. எனவே, சூலூர் மற்றும் சுல்தான்பேட்டை ஒன்றியங்களில் தனியாக நடமாடும் கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

79—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 51124—திரு. எம்.சி. சண்முகையா: மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம், அயிரவன்பட்டி கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 அக்டோபர் 11]

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு வரையறைகளின்படி, கால்நடை கிளை நிலையம்தான் முதலில் துவக்கப்படுகிறது. பின்னர், தகுதிக்கேற்ப அக்கிளை நிலையம், கால்நடை மருந்தகமாகவும், அதன் பின்னர் கால்நடை மருத்துவமனையாகவும் தரம் உயர்த்தப்படுகிறது. அங்குள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 5,000-த்திற்கும் மேல் அதிகரிக்கும்பட்சத்தில் அப்பகுதியைச் சுற்றி செயல்பட்டு வரும் கால்நடை நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 5 கி.மீ.-க்கு மேல் இருந்தால் அக்கிளை நிலையம் கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்படும். அந்த கால்நடை மருந்தகம், கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட வேண்டுமானால், அங்கு தினசரி சிகிச்சைக்கு வரும் கால்நடைகளின் எண்ணிக்கை 40-க்கும் மேலாக இருக்க வேண்டும்.

ஒட்டப்பிடாரம் தொகுதி, ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம், அயிரவன்பட்டி கிராமத்தில் கால்நடை அலகுகளின் எண்ணிக்கை 3,000-த்திற்கும் குறைவாக அதாவது, 2,151 மட்டுமே உள்ளதால், அங்கு கால்நடை மருத்துவமனை அமைத்திட சாத்தியக்கூறுகள் இல்லை.

80—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 51159—திருமதி கு. மரகதம் குமரவேல்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மதுராந்தகம் தொகுதி, மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியம், அரையப்பாக்கம் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு வரையறைகளின்படி, கால்நடைகளின் எண்ணிக்கை 3,000-த்திற்கும் அதிகமாகவும், 3 கி.மீ. சுற்றுப்புறத்தில் கால்நடை நிலையம் ஏதும் இல்லை என்றால் கால்நடை கிளை நிலையம் முதலில் துவக்கப்படுகிறது. பின்னர், தகுதிக்கேற்ப அக்கிளை நிலையம், கால்நடை மருந்தகமாகவும், அதன் பின்னர் கால்நடை மருத்துவமனையாகவும் தரம் உயர்த்தப்படுகிறது. அதன் பின்னர் அங்குள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 5,000-த்திற்கும் மேல் அதிகரிக்கும்பட்சத்தில் அப்பகுதியைச் சுற்றி செயல்பட்டு வரும் கால்நடை நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 5 கி.மீ.-க்கு மேல் இருந்தால் அக்கிளை நிலையம் கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்படும். அந்த கால்நடை மருந்தகம், கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட வேண்டுமானால், அங்கு தினசரி சிகிச்சைக்கு வரும் கால்நடைகளின் எண்ணிக்கை 40-க்கும் மேலாக இருக்க வேண்டும்.

மதுராந்தகம் தொகுதி, மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியம், அரையப்பாக்கம் ஊராட்சியில் கால்நடை அலகுகளின் எண்ணிக்கை 3,000-த்திற்கும் குறைவாக (அதாவது 1,943 மட்டுமே) உள்ளதால், அரையப்பாக்கம் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை தோற்றுவிக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

81—

மருத்துவமனை

வினா எண் 51160—திருமதி கு. மரகதம் குமரவேல்: மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் தொகுதி, மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியம், புதுப்பட்டு ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 அக்டோபர் 11]

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு வரையறைகளின்படி, கால்நடைகளின் எண்ணிக்கை 3,000-த்திற்கும் அதிகமாகவும், 3 கி.மீ. சுற்றுப்புறத்தில் கால்நடை நிலையம் ஏதும் இல்லை என்றால் கால்நடை கிளை நிலையம் முதலில் துவக்கப்படுகிறது. பின்னர், தகுதிக்கேற்ப அக்கிளை நிலையம், கால்நடை மருந்தகமாகவும், கால்நடை மருத்துவமனையாகவும் தரம் உயர்த்தப்படுகிறது. அங்குள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 5,000-த்திற்கும் மேல் அதிகரிக்கும்பட்சத்தில் அப்பகுதியைச்சுற்றி செயல்பட்டு வரும் கால்நடை நிலையத்திற்கு இடைப்பட்ட தூரம் 5 கி.மீ.-க்கு மேல் இருந்தால் அக்கிளை நிலையம் கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்படும். அந்த கால்நடை மருந்தகம், கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட வேண்டுமானால், அங்கு தினசரி சிகிச்சைக்கு வரும் கால்நடைகளின் எண்ணிக்கை 40-க்கும் மேலாக இருக்க வேண்டும்.

மதுராந்தகம் தொகுதி, மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியம், புதுப்பட்டு ஊராட்சியில் கால்நடை அலகுகளின் எண்ணிக்கை 3,000-த்திற்கும் குறைவாக (அதாவது 689 மட்டுமே) உள்ளதால், புதுப்பட்டு ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

82—

மருத்துவமனை

வினா எண் 51660—திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்: மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் தொகுதி, திருமருகல் ஊராட்சி ஒன்றியம், கிடாமங்கலம் ஊராட்சியில் புதியதாக கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

அரசு வரையறைகளின்படி, கால்நடை கிளை நிலையம்தான் முதலில் துவக்கப்படுகிறது. பின்னர், தகுதிக்கேற்ப அக்கிளை நிலையம், கால்நடை மருந்தகமாகவும், அதன் பின்னர் கால்நடை மருத்துவமனையாகவும் தரம் உயர்த்தப்படுகிறது. கால்நடை கிளை நிலையம் அமைக்க கோரும் கிராமத்தில்/பகுதியில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 3,000-த்திற்கு அதிகமாகவும், அப்பகுதியைச் சுற்றி செயல்பட்டு வரும் கால்நடை கிளை நிலையங்களுக்கும் இடைப்பட்ட தொலைவு 3 கி.மீ.-க்கு அதிகமாக இருக்குமானால், அங்கு ஒரு கால்நடை கிளை நிலையம் அமைக்கப்படும். பின்னர், அங்குள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 5,000-த்திற்கும் மேல் அதிகரிக்கும்பட்சத்தில், அப்பகுதியைச்சுற்றி செயல்பட்டு வரும் கால்நடை நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 5 கி.மீ.-க்கு மேல் இருந்தால் அக்கிளை நிலையம் கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்படும். அந்த கால்நடை மருந்தகம், கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட வேண்டுமானால், அங்கு தினசரி சிகிச்சைக்கு வரும் கால்நடைகளின் எண்ணிக்கை 40-க்கும் மேலாக இருக்க வேண்டும்.

நாகப்பட்டினம் தொகுதி, திருமருகல் ஊராட்சி ஒன்றியம், கிடாமங்கலம் ஊராட்சியில் கால்நடை அலகுகளின் எண்ணிக்கை 3,000-த்திற்கும் குறைவாக 667 மட்டுமே உள்ளதால், அங்கு கால்நடை மருத்துவமனை அமைத்திட சாத்தியக்கூறுகள் இல்லை.

83—

மீன் விற்பனை அங்காடி

வினா எண் 53158—திரு. ச. அரவிந்த் ரமேஷ்: மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழிங்கநல்லூர் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி, அக்கரை பகுதியில் வலைகளை பின்னும் கூடம் மற்றும் நவீன முறையில் மீன் விற்பனை அங்காடி கட்ட அரசு ஆவன செய்யுமா?

2023 அக்டோபர் 11]

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

சோழிங்கநல்லூர் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி, அக்கரை பகுதியில் மீனவ கிராமங்கள் ஏதும் இல்லை என்பதால் அப்பகுதியில் மீன் வலைப்பின்னும் கூடம் மற்றும் நவீன மீன் விற்பனை அங்காடி கட்ட அவசியம் எழவில்லை.

84—

நாட்டுக் கோழி

வினா எண் 54744—டாக்டர் வை. முத்துராஜா: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புதுக்கோட்டை தொகுதி, கால்நடைப் பண்ணையில் கிராமப்புற வேலைவாய்ப்பை பெருக்க நாட்டுக் கோழி வளர்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2020-2021 ஆம் ஆண்டில் தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ், நாட்டுக்கோழி வளர்ப்பின்மூலம் தொழில்முனைவோரை ஊக்குவிக்கும் திட்டம் தொடங்கப்பட்டு சென்னை நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், இத்திட்டத்தில் புதுக்கோட்டை மாவட்டத்திற்கு ஓர் ஒன்றியத்திற்கு 5 பயனாளிகள் வீதம் 13 ஒன்றியங்களுக்கு 65 பயனாளிகள் மாவட்ட ஆட்சியர்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு 1,000 எண்ணம் நாட்டுக் கோழிக்குஞ்சுகள், அதற்குண்டான தீவனம் மற்றும் குஞ்சு பொரிப்பான் கொள்முதல் செய்ய 50 சதவீத மானியம் வழங்கப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

85—

மீன் உலர்த்தும் தளம்

வினா எண் 55004—திரு. தி. ராமச்சந்திரன்: மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறந்தாங்கி தொகுதியில் உள்ள மீனவ கிராமங்களில் மீன் உலர்த்தும் தளம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மீனவ கிராமங்களான கோட்டைப்பட்டினத்தில் இரண்டு மீன் உலர்த்தும் தளங்கள், வடக்கம்மாபட்டினம் மற்றும் புதுக்குடியில் தலா ஒரு மீன் உலர்த்தும் தளங்களுடன் மீன் இறங்குதளங்கள் அமைக்க ரூ.6.00 கோடி திட்ட மதிப்பீட்டில் மத்திய அரசின் மீன்வளம் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பு உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி திட்டத்தின்கீழ் அரசாணை எண் 120, கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் (மீன்.1) துறை, நாள் 25-2-2021 வாயிலாக நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

86—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 58827—திரு. க.சொ.க. கண்ணன்: மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2023 அக்டோபர் 11]

(அ) ஜெயங்கொண்டம் தொகுதி, ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியம், தண்டலை ஊராட்சியில் புதியதாக கால்நடை மருத்துவமனை துவக்க செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு வரையறைகளின்படி, கால்நடைகளின் எண்ணிக்கை 3,000-த்திற்கும் அதிகமாகவும், 3 கி.மீ. சுற்றுப்புறத்தில் கால்நடை நிலையம் ஏதும் இல்லை என்றால் கால்நடை கிளை நிலையம் முதலில் துவக்கப்படுகிறது. பின்னர், தகுதிக்கேற்ப அக்கிளை நிலையம், கால்நடை மருந்தகமாகவும், அதன் பின்னர் கால்நடை மருத்துவமனையாகவும் தரம் உயர்த்தப்படுகிறது. அங்குள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 5,000-த்திற்கும் மேல் அதிகரிக்கும்பட்சத்தில் அப்பகுதியைச்சுற்றி செயல்பட்டு வரும் கால்நடை நிலையத்திற்கு இடைப்பட்ட தூரம் 5 கி.மீ.-க்கு மேல் இருந்தால் அக்கிளை நிலையம் கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்படும். அந்த கால்நடை மருந்தகம், கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட வேண்டுமானால், அங்கு தினசரி சிகிச்சைக்கு வரும் கால்நடைகளின் எண்ணிக்கை 40-க்கும் மேலாக இருக்க வேண்டும்.

ஜெயங்கொண்டம் தொகுதி, ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியம், தண்டலை ஊராட்சியில் கால்நடை அலகுகளின் எண்ணிக்கை 3,000-க்கும் குறைவாக (அதாவது 2,983 மட்டும்) உள்ளதால், அங்கு கால்நடை கிளை நிலையம் துவக்கிட சாத்தியக்கூறுகள் இல்லை.

87—

கால்நடை மருந்தகம்

வினா எண் 58829—திரு. க.சொ.க. கண்ணன்: மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[*2023 அக்டோபர் 11*

(அ) ஜெயங்கொண்டம் தொகுதி, ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியம், கழுவன்தோண்டி ஊராட்சி, கழுவன்தோண்டில் கால்நடை மருந்தகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு வரையறைகளின்படி, கால்நடைகளின் எண்ணிக்கை 3,000-த்திற்கும் அதிகமாகவும், 3 கி.மீ. சுற்றுப்புறத்தில் கால்நடை நிலையம் ஏதும் இல்லை என்றால் கால்நடை கிளை நிலையம் முதலில் துவக்கப்படுகிறது. பின்னர், தகுதிக்கேற்ப அக்கிளை நிலையம், கால்நடை மருந்தகமாகவும், அதன் பின்னர் கால்நடை மருத்துவமனையாகவும் தரம் உயர்த்தப்படுகிறது. அதன் பின்னர் அங்குள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 5,000-த்திற்கும் மேல் அதிகரிக்கும்பட்சத்தில் அப்பகுதியைச்சுற்றி செயல்பட்டு வரும் கால்நடை நிலையத்திற்கு இடைப்பட்ட தூரம் 5 கி.மீ.-க்கு மேல் இருந்தால் அக்கிளை நிலையம் கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்படும். அந்த கால்நடை மருந்தகம், கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட வேண்டுமானால், அங்கு தினசரி சிகிச்சைக்கு வரும் கால்நடைகளின் எண்ணிக்கை 40-க்கும் மேலாக இருக்க வேண்டும்.

ஜெயங்கொண்டம் தொகுதி, ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியம், கழுவன்தோண்டி ஊராட்சி, கழுவன்தோண்டில் கால்நடை அலகுகளின் எண்ணிக்கை 3,000-க்கும் குறைவாக (அதாவது 856 மட்டும்) உள்ளதால், அங்கு கால்நடை மருந்தகம் துவக்கிட செயற்குறிப்பு ஏதும் இல்லை.

88—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 58831—திரு. க.சொ.க. கண்ணன்: மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2023 அக்டோபர் 11]

(அ) ஜெயங்கொண்டம் தொகுதி, ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியம், பிச்சனூர் ஊராட்சியில் புதியதாக கால்நடை மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு வரையறைகளின்படி, கால்நடைகளின் எண்ணிக்கை 3,000-த்திற்கும் அதிகமாகவும், 3 கி.மீ. சுற்றுப்புறத்தில் கால்நடை நிலையம் ஏதும் இல்லை என்றால் கால்நடை கிளை நிலையம் முதலில் துவக்கப்படுகிறது. பின்னர், தகுதிக்கேற்ப அக்கிளை நிலையம், கால்நடை மருந்தகமாகவும், அதன் பின்னர் கால்நடை மருத்துவமனையாகவும் தரம் உயர்த்தப்படுகிறது. அங்குள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 5,000-த்திற்கும் மேல் அதிகரிக்கும்பட்சத்தில் அப்பகுதியைச்சுற்றி செயல்பட்டு வரும் கால்நடை நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 5 கி.மீ.-க்கு மேல் இருந்தால் அக்கிளை நிலையம் கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்படும். அந்த கால்நடை மருந்தகம், கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட வேண்டுமானால், அங்கு தினசரி சிகிச்சைக்கு வரும் கால்நடைகளின் எண்ணிக்கை 40-க்கும் மேலாக இருக்க வேண்டும்.

ஜெயங்கொண்டம் தொகுதி, ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியம், பிச்சனூர் ஊராட்சியில் கால்நடை அலகுகளின் எண்ணிக்கை 3,000-க்கும் குறைவாக (அதாவது 2,338) உள்ளதால், அங்கு கால்நடை மருத்துவமனை துவக்கிட சாத்தியக் கூறுகள் இல்லை.

89—

கால்நடை மருந்தகம்

வினா எண் 59049—திரு. பெ. ராமலிங்கம்: மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[*2023 அக்டோபர் 11*

(அ) நாமக்கல் தொகுதி, புதுச்சத்திரம் ஒன்றியம், கரடிப்பட்டி ஊராட்சி, கொளத்துபாளையம், சேந்தமங்கலம் ஒன்றியம், பொட்டணம் ஊராட்சி ஆகிய பகுதிகளில் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு வரையறைகளின்படி, கால்நடைகளின் எண்ணிக்கை 3,000-த்திற்கும் அதிகமாகவும், 3 கி.மீ. சுற்றுப்புறத்தில் கால்நடை நிலையம் ஏதும் இல்லை என்றால் கால்நடை கிளை நிலையம் முதலில் துவக்கப்படுகிறது. பின்னர், தகுதிக்கேற்ப அக்கிளை நிலையம், கால்நடை மருந்தகமாகவும், அதன் பின்னர் கால்நடை மருத்துவமனையாகவும் தரம் உயர்த்தப்படுகிறது. அங்குள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 5,000-த்திற்கும் மேல் அதிகரிக்கும்பட்சத்தில் அப்பகுதியைச்சுற்றி செயல்பட்டு வரும் கால்நடை நிலையத்திற்கு இடைப்பட்ட தூரம் 5 கி.மீ.-க்கு மேல் இருந்தால் அக்கிளை நிலையம் கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்படும். அந்த கால்நடை மருந்தகம், கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட வேண்டுமானால், அங்கு தினசரி சிகிச்சைக்கு வரும் கால்நடைகளின் எண்ணிக்கை 40-க்கும் மேலாக இருக்க வேண்டும்.

கொளத்துபாளையம் மற்றும் பொட்டணம் கிராமங்களில் கால்நடை அலகுகளின் எண்ணிக்கை 3,000-க்கும் அதிகமாக (அதாவது 3,800) உள்ளதாலும், அருகிலுள்ள கால்நடை நிலையங்களின் தூரம் 3 கி.மீ.-க்கும் அதிகமாக உள்ளதாலும், அங்கு முதலில் கால்நடை கிளை நிலையம் மட்டுமே அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளன. இது அரசின் கொள்கை முடிவிற்குட்பட்டு பரிசீலிக்கப்படும்.

90—

மருத்துவமனை

வினா எண் 62241—திரு. T.M. தமிழ்செல்வம்: மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2023 அக்டோபர் 11]

ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியம், மேட்டுத்தாங்கல் ஊராட்சி, M.வெள்ளாளபட்டியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

அரசு வரையறைகளின்படி, கால்நடைகளின் எண்ணிக்கை 3,000-த்திற்கும் மேலும், 3 கி.மீ. சுற்றுப்புறத்தில் கால்நடை நிலையம் ஏதும் இல்லை என்றால் கால்நடை கிளை நிலையம்தான் முதலில் துவக்கப்படுகிறது. பின்னர், தகுதிக்கேற்ப அக்கிளை நிலையம், கால்நடை மருந்தகமாகவும், அதன் பின்னர் கால்நடை மருத்துவமனையாகவும் தரம் உயர்த்தப்படுகிறது. அங்குள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 5,000-த்திற்கும் மேல் அதிகரிக்கும்பட்சத்தில் அப்பகுதியைச்சுற்றி செயல்பட்டு வரும் கால்நடை நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 5 கி.மீ.-க்கு மேல் இருந்தால் அக்கிளை நிலையம் கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்படும். அந்த கால்நடை மருந்தகம், கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட வேண்டுமானால், அங்கு தினசரி சிகிச்சைக்கு வரும் கால்நடைகளின் எண்ணிக்கை 40-க்கும் மேலாக இருக்க வேண்டும்.

ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியம், மேட்டுத்தாங்கல் ஊராட்சி, M.வெள்ளாளபட்டியில் கால்நடை அலகுகளின் எண்ணிக்கை 3,000-த்திற்கும் குறைவாக (அதாவது 2,350 மட்டுமே) உள்ளதால், M.வெள்ளாளபட்டியில் கால்நடை கிளை நிலையம் துவக்கிட சாத்தியக்கூறுகள் இல்லை.

91—

மருத்துவமனை

வினா எண் 62242—திரு. T.M. தமிழ்செல்வம்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியம், பெரிய தள்ளபாடி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

அரசு வரையறைகளின்படி, கால்நடைகளின் எண்ணிக்கை 3,000-த்திற்கும் அதிகமாகவும், 3 கி.மீ. சுற்றுப்புறத்தில் கால்நடை நிலையம் ஏதும் இல்லை என்றால் கால்நடை கிளை நிலையம் முதலில் துவக்கப்படுகிறது. பின்னர், தகுதிக்கேற்ப அக்கிளை நிலையம், கால்நடை மருந்தகமாகவும், அதன் பின்னர் கால்நடை மருத்துவமனையாகவும் தரம் உயர்த்தப்படுகிறது. அங்குள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 5,000-த்திற்கும் மேல் அதிகரிக்கும்பட்சத்தில் அப்பகுதியைச்சுற்றி செயல்பட்டு வரும் கால்நடை நிலையத்திற்கு இடைப்பட்ட தூரம் 5 கி.மீ.-க்கு மேல் இருந்தால் அக்கிளை நிலையம் கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்படும். அந்த கால்நடை மருந்தகம், கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட வேண்டுமானால், அங்கு தினசரி சிகிச்சைக்கு வரும் கால்நடைகளின் எண்ணிக்கை 40-க்கும் மேலாக இருக்க வேண்டும்.

ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியம், பெரிய தள்ளபாடி ஊராட்சியில், கால்நடை அலகுகளின் எண்ணிக்கை 3,000-த்திற்கும் குறைவாக (அதாவது 1,293 மட்டுமே) உள்ளதால், அப்பகுதியில் கால்நடை மருத்துவமனை துவக்கிட சாத்தியக்கூறுகள் இல்லை.

92—

மருத்துவமனை

வினா எண் 62276—திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் தொகுதி, குடவாசல் வட்டம், பரவாக்கரை ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 அக்டோபர் 11]

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நன்னிலம் தொகுதி, குடவாசல் வட்டம், பரவாக்கரை ஊராட்சியில் கால்நடை கிளை நிலையம் செயல்பட்டு வருகிறது. அது கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்படும்போது நபார்டு ஆர்ஐடிஎப் திட்டத்தின்கீழ் கட்டடம் கட்டுவதற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

93—

கால்நடை கிளை நிலையம்

வினா எண் 62448—திரு. ஈ. ராஜா: மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரன்கோவில் தொகுதி, குருவிகுளம் ஒன்றியம், அழகுநேரி கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) சங்கரன்கோவில் தொகுதி, குருவிகுளம் ஒன்றியம், அழகுநேரி கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் அமைக்க சாத்தியகூறுகள் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

94—

மருத்துவமனை

வினா எண் 62734—திரு. S. பழனி நாடார்: மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, கீழப்பாவூர் ஒன்றியம், அரியப்பபுரம் ஊராட்சியில் உள்ள கால்நடை மருத்துவமனைக்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி தொகுதி, கீழப்பாவூர் ஒன்றியம், அரியப்பபுரம் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை ஏதும் செயல்படவில்லை. கால்நடை கிளை நிலையம் மட்டுமே செயல்பட்டு வருகிறது.

அரியப்பபுரம் கால்நடை கிளை நிலையத்திற்கு தென்காசி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின்மூலம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு புதிய கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

95—

மருத்துவமனை

வினா எண் 68237—திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், இரும்புளி கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு வரையறைகளின்படி, கால்நடைகளின் எண்ணிக்கை 3,000-த்திற்கும் மேலும், 3 கி.மீ. சுற்றுப்புறம் கால்நடை நிலையம் ஏதும் இல்லை என்றால் கால்நடை கிளை நிலையம்தான் முதலில் துவக்கப்படுகிறது. பின்னர், தகுதிக்கேற்ப அக்கிளை நிலையம், கால்நடை மருந்தகமாகவும், அதன் பின்னர்

2023 அக்டோபர் 11]

கால்நடை மருத்துவமனையாகவும் தரம் உயர்த்தப்படுகிறது. அங்குள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 5,000-த்திற்கும் மேல் அதிகரிக்கும்பட்சத்தில் அப்பகுதியைச்சுற்றி செயல்பட்டு வரும் கால்நடை நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 5 கி.மீ.-க்கு மேல் இருந்தால் அக்கிளை நிலையம் கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்படும். அந்த கால்நடை மருந்தகம், கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட வேண்டுமானால், அங்கு தினசரி சிகிச்சைக்கு வரும் கால்நடைகளின் எண்ணிக்கை 40-க்கும் மேலாக இருக்க வேண்டும்.

மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், இரும்புளி கிராமத்தில் கால்நடை அலகுகளின் எண்ணிக்கை 3,000-த்திற்கும் குறைவாக (அதாவது 2,925 மட்டுமே) உள்ளதால், அப்பகுதியில் கால்நடை மருத்துவமனை துவக்கிட சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, கால்நடை விவசாயிகள் அருகில் உள்ள கால்நடை கிளை நிலையங்களின் சேவையை பயன்படுத்திக்கொள்ளலாம்.

96—

மருத்துவமனை

வினா எண் 68255—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், சாமிசெட்டிப்பட்டியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு வரையறைகளின்படி, கால்நடை மருத்துவமனை துவக்குவதற்கு, ஏற்கெனவே கால்நடை மருந்தகம் செயல்பட்டு வரும்பட்சத்தில் அதனை கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த இயலும். மேலும், கால்நடை

அலகுகள் 5,000-க்கும் அதிகமாகவும், அக்கிராமத்தைச் சுற்றியுள்ள கால்நடை நிலையங்களின் தூரம் 5 கி.மீ.-க்கு மேல் இருக்கும்பட்சத்தில், புதியதாக கால்நடை மருந்தகம் அமைக்கப்படும்.

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், சாமிசெட்டிப்பட்டியில் கால்நடை மருத்துவமனை துவக்குவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை. தருமபுரியிலுள்ள கால்நடை அலகுகளின் எண்ணிக்கை 3,000-த்திற்கும் அதிகமாக அதாவது 3,097 உள்ளதாலும், அக்கிராமத்தைச் சுற்றியுள்ள கால்நடை நிலையங்களின் தூரம் 3 கி.மீ.-க்கு மேல் உள்ளதாலும், முதற்கட்டமாக புதிய கால்நடை கிளை நிலையம் துவக்கிட இயலும்.

97—

கல்லூரி

வினா எண் 75699—திரு. ரூபி ஆர். மனோகரன்: மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, களக்காட்டில் புதிய கால்நடை மருத்துவ அறிவியல் கல்லூரி துவங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாங்குநேரி தொகுதி, களக்காடு பகுதியில் புதிய கால்நடை மருத்துவ அறிவியல் கல்லூரி அமைக்க அவசியம் ஏதும் தற்போது எழவில்லை.

98—

கால்நடை கிளை நிலையம்

வினா எண் 75952—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2023 அக்டோபர் 11]

(அ) பெண்ணாகரம் தொகுதி, அரகாசனஅள்ளி ஊராட்சி, ஏர்ரபட்டியில் கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) பெண்ணாகரம் தொகுதி, அரகாசனஅள்ளி ஊராட்சி, ஏர்ரபட்டியில் கால்நடை கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளன.

(ஆ) அரசின் கொள்கை முடிவிற்குட்பட்டு பரிசீலிக்கப்படும்.

99—

பட்டு உற்பத்தி நிலையம்

வினா எண் 45016—முனைவர் டி.ஆர்.பி. ராஜா: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மன்னார்குடி தொகுதியில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தில் பட்டு உற்பத்தி நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

தற்போது மாநிலம் முழுவதும் 8 பட்டு உற்பத்தி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த மையங்களில் உற்பத்தி செய்யப்படும் பட்டு இரகங்கள் விற்பனை தேவைக்கு போதுமானதாக இருக்கின்றன. ஆதலால், மன்னார்குடி தொகுதியில் தற்சமயம் பட்டு உற்பத்தி நிலையம் அமைக்க அவசியம் ஏதுமில்லை.

100—

நூற்பு நிலையங்கள்

வினா எண் 45018—முனைவர் டி.ஆர்.பி. ராஜா: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மன்னார்குடி தொகுதியில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தில் கிராமிய நூற்பு நிலையங்கள் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

தற்போது மாநிலம் முழுவதும் 31 கதர் நூற்பு நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இங்கு உற்பத்தி செய்யப்படும் நூல்கள் கதர் நெசவுப் பணிக்கு போதுமானதாக உள்ளன. எனவே, மன்னார்குடி தொகுதியில் தற்சமயம் கிராமிய நூற்பு நிலையம் அமைக்க வழிவகை ஏதுமில்லை.

பட்டியல்-28

1—

படகு குழாம்

வினா எண் 7739—திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிள்ளியூர் தொகுதி, மாங்காடு முதல் பரக்கானி வரை படகு சவாரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 அக்டோபர் 11]

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிள்ளியூர் தொகுதி, மாங்காடு முதல் பரக்கானி வரை படகு சேவை இயக்குவது குறித்து ஆய்வு செய்யப்பட்டது. இங்கு சுற்றுலா பயணிகளின் வருகை குறைவாகவுள்ளதாலும், அருகில் சுற்றுலா சார்ந்த வேறு முக்கிய சுற்றுலாத் தலங்கள் இல்லாத காரணத்தினாலும் படகு குழாம் அமைக்க சாத்தியக்கூறுகள் ஏதுமில்லை.

2—

படகு சேவை

வினா எண் 10264—திரு. ச. அரவிந்த் ரமேஷ்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள பக்கிங்ஹாம் கால்வாயில் SRP Tools முதல் முட்டுக்காடு வரை படகு குழாம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

பக்கிங்ஹாம் கால்வாய் பகுதிக்கு சுற்றுலா பயணிகளின் வருகை குறைவாக உள்ள காரணத்தினாலும், படகு சவாரி செய்வதற்கு போதுமான அளவு நீர் இல்லாததாலும், SRP Tools முதல் முட்டுக்காடு வரை படகு சேவை அமைக்க சாத்தியக்கூறுகள் ஏதுமில்லை.

3—

வாழ்வாதாரம்

வினா எண் 14422—திரு. இரா. அருள்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் சுற்றுலாத் துறையை உரிய வழிகாட்டுதல், நெறிப்படுத்துதலுடன் மேம்படுத்தி, சுற்றுலாத் துறை சார்ந்தோரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

சுற்றுலா செயல்பாட்டாளர்களின் செயல்பாடுகளை ஒழுங்குபடுத்தவும், பாதுகாப்பான சுற்றுலா நடைமுறைகளை மேம்படுத்தவும் மற்றும் பதிவுகள் மேற்கொள்வதற்கும் புதிய திட்டத்தை சுற்றுலாத் துறை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தத் திட்டங்கள் சுற்றுலாத் தொழிலில் பாதுகாப்பான அணுகுமுறையை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டு சுற்றுலா செயல்பாட்டாளர்களுக்கு பின்வரும் பிரிவுகளில் வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளன:

1. சாகச சுற்றுலா (காற்று, நிலம் மற்றும் நீர் சார்ந்த செயல்பாடுகள்)

2. கேரவன் சுற்றுலா மற்றும் கேரவன் பூங்காக்கள்

3. முகாம் தலங்கள்

4. தங்கும் விடுதிகள், படுக்கை மற்றும் காலை உணவு வழங்கும் ஓய்விடங்கள்

சுற்றுலா பங்குதாரர்கள் எளிதில் இத்திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு ஏதுவாக செயல்முறை திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இதில் இணையதளம்மூலம் பதிவுகளை மேற்கொள்ளவும் மற்றும் வெளிமுகமைமூலம் ஆய்வுகள் செய்வதும் அடங்கும். 2022-2023 ஆம் ஆண்டில், 350-க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் பதிவு செய்யப்பட்டு, 160-க்கும் மேற்பட்ட சுற்றுலா தொழில்முனைவோர்களுக்கு பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

4—

மீட்புப் பணி

வினா எண் 18123—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெண்ணாகரம் தொகுதி, கூத்தப்பாடி ஊராட்சிக்குட்பட்ட ஒகேனக்கல் சுற்றுலாத் தலப் பகுதி என்பதால் அடிக்கடி ஆற்றில்

2023 அக்டோபர் 11]

படகு விபத்து ஏற்படுவதை கருத்தில் கொண்டு மீட்புப் பணிகளுக்கு நவீன யுக்திகளை கொண்டுவர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

தருமபுரியிலிருந்து சுமார் 47 கி.மீ. தொலைவில் ஒகேனக்கல் அமைந்துள்ளது. 2021-2022 ஆம் ஆண்டு மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களால், "தருமபுரி மாவட்டத்தில் ஒகேனக்கல் சுற்றுலாத் தலம் பல்வேறு வசதிகளுடன் மேம்படுத்தப்படும்" என அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதன்படி, மேற்காண் அறிவிப்பினை நிறைவேற்றும் பொருட்டு, அரசுக்கு கருத்துரு மற்றும் திட்ட மதிப்பீடுகள் சமர்ப்பிக்கப்பட்டு, அரசால் ரூ.1,757.65 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஒகேனக்கல் ஆற்றில் படகு சவாரி செய்யும் சுற்றுலாப் பயணிகளை கண்காணித்து அவர்களுக்கு உதவும் வகையில் நான்கு படகில் 16 வீரர்களை கொண்ட மீட்புப் பணிக் குழுவும் மற்றும் தீயணைப்புத் துறையும் ஈடுபட்டு வருகிறது. மேலும், சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பின் அவசியத்தை கருத்தில் கொண்டும், படகு விபத்து ஏற்படுவதைக் கருத்தில் கொண்டும், மாவட்ட நிர்வாகம், தீயணைப்புத் துறை மற்றும் காவல் துறை ஆகியவற்றை ஒருங்கிணைந்து புதிய மீட்புப் பணிகள் குறித்து ஆராயப்படும்.

5—

சுற்றுலாத் தலம்

வினா எண் 21173—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி மாவட்டத்திலுள்ள வத்தல்மலையில் சுற்றுலாத் தலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரியிலிருந்து சுமார் 25 கி.மீ. தொலைவில் வத்தல்மலை அமைந்துள்ளது. இங்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகளுக்கு பல்வேறு வசதிகள் ஏற்படுத்துவதற்கு ஏதுவாக 2021-2022 ஆம் ஆண்டில் சட்டமன்ற கூட்டத் தொடரில் சுற்றுலாத் துறை மானியக் கோரிக்கையின்போது, "சுற்றுச்சூழல் தங்கும் முகாம் தளங்கள் திட்டம்" என்ற சுற்றுலாத் துறை அறிவிப்பின்படி ரூ.223.00 இலட்சம் இந்திய சிறுதொழில் மேம்பாட்டு வங்கியில் கடன் பெற்று வத்தல்மலையில் பணிகள் மேற்கொள்ள அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

6—

படகுக் குழாம்

வினா எண் 21528—திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூரில் சுற்றுலாத் துறையின் சார்பில் படகுக் குழாம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) போளூர் ஏரியில் சுற்றுலா பயணிகளின் வருகை ஏதுமில்லை. மேலும், இங்கு சுற்றுலா பயணிகளைக் கவரும் விதமாக எந்தவொரு செயல்பாடுகளும் இல்லை. இந்த ஏரி நீர் சேமிப்பதற்காகப் பயன்படுத்தப்படுகிறது.

இந்தப் பகுதியை மேம்படுத்துவதற்கு பெரிய அளவிலான தொகை முதலீடு செய்யப்பட வேண்டியுள்ளது. ஆகையால், இங்கு படகுக் குழாம் அமைக்க சாத்தியக்கூறுகள் ஏதுமில்லை.

2023 அக்டோபர் 11]

7—

ஹெலிகாப்டர் இறங்குதளம்

வினா எண் 48855—திரு. இரா. அருள்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழக சுற்றுலாத் துறையை மேம்படுத்தவும், அயல்நாட்டினர் விரைந்து சுற்றுலாத் தலங்களை காணவும், சுற்றுலாவிற்கென தனி ஹெலிகாப்டர் (Helicopter) வாங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

2021-2022 ஆம் ஆண்டு மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, தமிழ்நாட்டின் முக்கிய சுற்றுலாத் தலங்களை இணைக்கும் விதமாக கொடைக்கானல் மற்றும் இராமேஸ்வரம் ஆகிய இடங்களில் ஹெலிகாப்டர் இறங்குதளம் (Helipad) அமைக்க ரூ.112.10 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு, விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் சாகச சுற்றுலாவை மேம்படுத்த சுற்றுலாப் பயணிகள் வருகை எண்ணிக்கையை கருத்தில்கொண்டு, சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிக்கும்பட்சத்தில் அயல்நாட்டினர் மற்றும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் விரைந்து சுற்றுலாத் தலங்களை காணும் வகையில், பொது மற்றும் தனியார் பங்களிப்புடன் ஹெலிகாப்டர் இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

8—

படகு சவாரி

வினா எண் 52641—திரு. N. அசோக்குமார்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், பேராவூரணி அருகேயுள்ள புதுப்பட்டினம் முதல் மனோரா வரை படகு சவாரி சுற்றுலா வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுப்பட்டினத்திலிருந்து மனோரா வரை கடல் வழிபாதை மட்டுமே உள்ளது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின்மூலம் கடலில் படகு போக்குவரத்து இயக்க இயலாது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஏரிகளில் மற்றும் அணைகளில் மட்டுமே படகு இயக்க அனுபவம் பெற்றுள்ளது. ஆகையால், பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், பேராவூரணி அருகேயுள்ள புதுப்பட்டினம் முதல் மனோரா வரை படகு சவாரி சுற்றுலா வசதி செய்து தர சாத்தியக்கூறுகள் இல்லை.

9—

படகுப் போக்குவரத்து

வினா எண் 54697—திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை, கோடியக்கரை சூழலியல் சுற்றுலா படகுப் போக்குவரத்து அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) முத்துப்பேட்டை, அலையாத்தி காடு பகுதிகளில் சுற்றுலாத் தலமாக மேம்படுத்த வரவேற்பு அறை, கழிப்பறை, படகுத்தளம் மற்றும் கண்காணிப்பு கோபுரம் அமைக்க ரூ.4.00 கோடி, அரசாணை எண் 59, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (சு3-1) துறை, நாள் 13-2-2023 வாயிலாக நிதியொதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2023 அக்டோபர் 11]

10—

பயணியர் மாளிகை

வினா எண் 75426—திரு. எம்.ஆர். காந்தி: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாகர்கோவில் தொகுதியில் சுற்றுலாத் துறை சார்பில் பயணியர் மாளிகை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சுற்றுலாத் துறை சார்பில் பயணியர் மாளிகை கட்டப்படுவது இல்லை. இப்பொருண்மை பொதுப் பணித் துறை சார்ந்ததாகும்.

கன்னியாகுமரி மாவட்டத்தின் தலைநகரான நாகர்கோவிலில் உள்ள அரசு விருந்தினர் மாளிகையில் 2 முக்கிய பிரமுகர் அறைகள் மற்றும் 2 சாதாரண அறைகள் மட்டுமே உள்ளன. மிக முக்கிய பிரமுகர்கள் வருகையின்போது தேவையான தங்குமிட வசதிகளை வழங்குவதில் சிரமம் உள்ளது. எனவே, புதிய விருந்தினர் மாளிகை கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழுந்துள்ளது. மேலும், பொதுப் பணித் துறை அரசு முதன்மைச் செயலாளர் அவர்களின் கடிதஎண் 7358/Y2/2022-1, நாள் 17-10-2022-ன்படி கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் அமைந்துள்ள அரசு விருந்தினர் மாளிகை வளாகத்தில் புதிதாக அரசு விருந்தினர் மாளிகை கட்டடம் கட்ட ரூ.1,144.00 இலட்சத்திற்கு விரிவான திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. மேலும், அவ்வளாகத்தில் ஏற்கெனவே உள்ள இணைப்புக் கட்டடத்தை நவீனப்படுத்தி சிறப்பு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ரூ.250.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன என்ற தகவல் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

11—

நியாய விலைக் கடை

வினா எண் 5529—திரு. பால் மனோஜ் பாண்டியன்: மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குளம் தொகுதி, கடையம் ஒன்றியம், கேளையாபிள்ளையூர் கிராமத்திற்கு புதிய நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி மாவட்டம், தென்காசி வட்டம், கடையம் ஒன்றியம், கேளையாபிள்ளையூர் கிராமத்தில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை 14-6-2022 முதல் செயல்பட்டு வருகிறது.

12—

நூற்பாலை

வினா எண் 54790—திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் தொகுதி, குடவாசலில் பருத்தி நூற்பாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் பின்வரும் ஆறு கூட்டுறவு நூற்பாலைகள் அரசால் தொடங்கப்பட்டு, துணிநூல் துறையின்கீழ் இயங்கி வருகின்றன:

1. அண்ணா கூட்டுறவு நூற்பாலை, ஆண்டிப்பட்டி, தேனி

2023 அக்டோபர் 11]

2. பாரதி கூட்டுறவு நூற்பாலை, எட்டயபுரம், தூத்துக்குடி

3. கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, ஆரல்வாய்மொழி

4. கிருஷ்ணகிரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, ஊத்தங்கரை

5. புதுக்கோட்டை மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, அறந்தாங்கி

6. இராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, அச்சங்குளம்

இக்கூட்டுறவு நூற்பாலைகள் அரசின் முக்கிய திட்டங்களான வேட்டி சேலை வழங்கும் திட்டம் மற்றும் பள்ளி குழந்தைகளுக்கு சீருடை வழங்கும் திட்டம் ஆகிய திட்டங்களின்கீழ் துணிகள் விநியோகம் செய்ய தேவையான நூலை உற்பத்தி செய்கின்றன. எனவே, நன்னிலம் தொகுதி, குடவாசல் பகுதியில் பருத்தி நூற்பாலை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

13—

மூலிகைப் பண்ணை

வினா எண் 235—திரு. S.S. பாலாஜி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்போரூர் தொகுதி, தண்டரை, புல்லேரி பகுதியில் மூலிகைச் செடிகள் பகுதியை மேம்படுத்தி, மூலிகைப் பண்ணையை செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு தோட்டக்கலைத் துறையின்கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள தமிழ்நாடு தோட்டக்கலை மேம்பாடு முகமை வாயிலாக பரிந்துரைக்கப்படும் மூலிகைப் பயிர் வளர்ப்பு தொடர்பான கருத்துருக்களுக்கு அரசு நிதியுதவி செய்யப்படுகின்றன. புல்லேரி பகுதியில் மூலிகைச் செடிகள் பகுதியை மேம்படுத்தி, மூலிகைப் பண்ணையைச் செயல்படுத்தும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

14—

குடியிருப்பு கட்டுதல்

வினா எண் 1284—திரு. மா. செந்தில்குமார்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சின்னசேலம் ஒன்றியம், அம்மகளத்தூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவர் மற்றும் செவிலியருக்கான குடியிருப்பு கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம் ஊராட்சி ஒன்றியத்தில் அம்மகளத்தூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. அம்மகளத்தூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவ அலுவலர் குடியிருப்பு மற்றும் செவிலியர் குடியிருப்பு கட்ட தற்போது நிதி ஒதுக்கீடு இல்லை.

15—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 1860—திரு. சபா. இராசேந்திரன்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெய்வேலி தொகுதி, குறிஞ்சிப்பாடி ஒன்றியம், வடக்குத்து ஊராட்சி நகர பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப்

2023 அக்டோபர் 11]

பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும் இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

வடக்குத்து ஊராட்சியில் துணை சுகாதார நிலையம் ஒன்று செயல்பட்டு வருகிறது. வடக்குத்து ஊராட்சி, குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றிய மக்கள்தொகை 2,44,293 ஆகும். இவ்வூராட்சி ஒன்றியத்தில் ஏற்கெனவே 8 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. எனவே, மக்கள்தொகை அடிப்படையில் வடக்குத்து கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வழிவகையில்லை.

16—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 2501—திரு. V.P. கந்தசாமி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சூலூர் தொகுதி, சுல்தான்பேட்டை ஒன்றியம், மலையடிபாளையத்திலுள்ள மருந்தகத்தை ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரமுயர்த்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும் இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

[*2023 அக்டோபர் 11*

மலையடிபாளையம் கிராமத்திலுள்ள மருந்தகம், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்ககத்தின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளது. மலையடிபாளையம் கிராமத்திலிருந்து 8 கிலோ மீட்டர் தொலைவில் சின்னவதம்பச்சேரி ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதால், கோயம்புத்தூர் மாவட்டம், சுல்தான்பேட்டை ஊராட்சி ஒன்றியம், மலையடிபாளையம் கிராமத்திலுள்ள மருந்தகத்தை ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரமுயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

17—

கட்டடம்

வினா எண் 3386—திரு. S. ராஜகுமார்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலாடுதுறை தொகுதி, மணல்மேட்டில் இயங்கிவரும் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புறநோயாளிகள் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 378, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 12-11-2008-ன்படி மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறை ஊராட்சி ஒன்றியத்தில், மணல்மேடு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கை வசதிகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரமுயர்த்தப்பட்டு அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது.

மணல்மேடு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் புறநோயாளிகள் பிரிவு கட்டடம் நல்ல முறையில் உள்ளது. எனவே, மணல்மேடு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் கூடுதலாக புறநோயாளிகள் பிரிவு கட்டடம் கட்ட தற்போது அவசியம் எழவில்லை.

2023 அக்டோபர் 11]

18—

கட்டடம்

வினா எண் 3605—திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நன்னிலம் தொகுதி, குடவாசல் வட்டம், அதம்பார் கிராமத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், குடவாசல் ஊராட்சி ஒன்றியத்தில் திருவீழிமிழலை பிரதானமேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ் அதம்பார் துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. அதம்பார் துணை சுகாதார நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் இல்லை. எனினும், அதம்பார் துணை சுகாதார நிலையம் தற்போது கால்நடை மருத்துவமனையின் ஒரு பகுதியில் நல்ல முறையில் இயங்கி வருகிறது.

19—

குடியிருப்பு

வினா எண் 3606—திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நன்னிலம் தொகுதி, நன்னிலம் அரசு மருத்துவமனை மருத்துவர்களுக்கு நன்னிலத்தில் குடியிருப்பு கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2023 அக்டோபர் 11

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நன்னிலம் தொகுதியில் நன்னிலம், குடவாசல் மற்றும் வலங்கைமான் வட்ட அரசு மருத்துவமனைகள் செயல்பட்டு வருகின்றன. திருவாரூர் மாவட்டம், நன்னிலம் அரசு மருத்துவமனை 82 படுக்கை வசதிகள் கொண்ட அரசு வட்ட மருத்துவமனையாகச் செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையில் சராசரியாக நாள் ஒன்றுக்கு 491 நபர்கள் வெளிநோயாளிகளாகவும், 80 நபர்கள் உள்நோயாளிகளாகவும் சிகிச்சை பெறுகின்றனர். திருவாரூர் மாவட்டம், குடவாசல் அரசு மருத்துவமனை 56 படுக்கை வசதிகள் கொண்ட அரசு வட்ட மருத்துவமனையாகச் செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையில் சராசரியாக நாள் ஒன்றுக்கு 324 நபர்கள் வெளிநோயாளிகளாகவும், 33 நபர்கள் உள்நோயாளிகளாகவும் சிகிச்சை பெறுகின்றனர். திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் அரசு மருத்துவமனை 32 படுக்கை வசதிகள் கொண்ட அரசு வட்ட மருத்துவமனையாகச் செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையில் சராசரியாக நாள் ஒன்றுக்கு 338 நபர்கள் வெளிநோயாளிகளாகவும், 20 நபர்கள் உள்நோயாளிகளாகவும் சிகிச்சை பெறுகின்றனர். இம்மருத்துவமனைகளுக்கு சிகிச்சைக்கு வரும் நோயாளிகளின் எண்ணிக்கை மிக குறைவாக உள்ளது. அரசு மருத்துவமனைகளில் பணிபுரியும் மருத்துவர்கள் தாங்கள் பணிபுரியும் அரசு மருத்துவமனைகளின் அருகிலேயே வசித்து வருகின்றனர். மேலும், அவசர காலங்களில் தொலைபேசி/கைப்பேசி அழைப்பின் பேரில் மருத்துவர்கள் மருத்துவமனைக்கு வந்து நோயாளிகளுக்குத் தேவையான சிகிச்சை வழங்குகிறார்கள். மேலும், 24 மணி நேரமும் சுழற்சி முறையில் செவிலியர் மற்றும் பணியாளர்கள் மருத்துவமனையிலேயே தங்கி பொது மக்களுக்கு எவ்வித தடையுமின்றி சிறந்த மருத்துவ சிகிச்சை வழங்கி வருகிறார்கள். எனவே, நன்னிலம் தொகுதியில் உள்ள அரசு மருத்துவமனைகளில் பணிபுரியும் மருத்துவர்களுக்கு நன்னிலத்தில் பிரத்யேகமான குடியிருப்பு கட்டித்தர தற்சமயம் அவசியம் எழவில்லை.

20—

மருத்துவ கருவிகள்

வினா எண் 3608—திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2023 அக்டோபர் 11]

(அ) நன்னிலம் தொகுதி, நன்னிலம் அரசு மருத்துவமனைக்கு Digital X-Ray, Ultra Sonogram *வசதி ஏற்படுத்த அரசு முன்வருமா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், நன்னிலம் அரசு மருத்துவமனை 82 படுக்கை வசதிகள் கொண்ட அரசு வட்ட மருத்துவமனையாகச் செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையில் சராசரியாக நாளொன்றுக்கு 600 நபர்கள் வெளிநோயாளிகளாகவும், 65 நபர்கள் உள் நோயாளிகளாகவும் சிகிச்சை பெறுகின்றனர்.

இம்மருத்துவமனையில் எக்ஸ்ரே மற்றும் USG Scan *எடுக்கும் வசதிகள் உள்ளன. மாதமொன்றுக்கு சராசரியாக 355* Ultra X-Ray *மற்றும் 90* Sonogram *ஆகியவை எடுக்கப்படுகின்றன.*

மேலும், டிஜிட்டல் எக்ஸ்ரே கருவி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளுக்கும், தேவையின் அடிப்படையில் சில பெரிய வட்ட அரசு மருத்துவமனைகளுக்கும் வழங்கப்பட்டு வருகின்றது. டிஜிட்டல் எக்ஸ்ரே கருவி தேவைப்படும் நோயாளிகளின் எண்ணிக்கை மிக, மிக குறைவாகவே உள்ளதால், டிஜிட்டல் எக்ஸ்ரே கருவி தேவைப்படும் நோயாளிகள் இம்மருத்துவமனைக்கு அருகிலுள்ள மாவட்ட தலைமை மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

21—

மருத்துவமனை

வினா எண் 3652—திரு. கா. அண்ணாதுரை: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பட்டுக்கோட்டை மருத்துவமனையை மாவட்ட அரசு மருத்துவமனைக்கு நிகராக தரமுயர்த்த அரசு முன்வருமா?

[2023 அக்டோபர் 11

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனை 202 படுக்கை வசதிகளுடன்கூடிய வட்ட மருத்துவமனையாக இயங்கி வருகிறது. இம்மருத்துவமனையில் நாளொன்றுக்கு சராசரியாக 977 வெளிநோயாளிகள் 200 உள்நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகிறார்கள். மாதமொன்றுக்கு சராசரியாக 96,190 ஆய்வகப் பரிசோதனைகளும், 663 எக்ஸ்ரேக்களும், 760 ECG, 690 USG மற்றும் 717 சிடி ஸ்கேன் ஆகியவை எடுக்கப்பட்டு வருகின்றன. இங்கு மாதமொன்றுக்கு சராசரியாக 239 பெரிய அறுவை சிகிச்சைகளும், 795 சிறிய அறுவை சிகிச்சைகளும் 292 பிரசவங்களும், 149 அறுவை சிகிச்சை பிரசவங்களும் நடைபெறுகின்றன. இம்மருத்துவமனையில் ஆண்கள், பெண்கள், குழந்தைகள், மகப்பேறு, பிரசவ, தீவிர இருதய சிகிச்சை பிரிவு, தொற்றா நோய் சிகிச்சை, சித்தா பிரிவு, தொழுநோய் பிரிவு, டயாலிசிஸ், வெளிநோயாளிகள் பிரிவு, சமையல் அறை, அறுவை சிகிச்சைக்கு முன் மற்றும் பின் கவனிப்பு பிரிவு, குளிர்சாதன வசதியுடன்கூடிய அறுவை அரங்கம், 2 மின்னாக்கிகள் மற்றும் போதிய அளவில் குடிநீர் வசதி, இரத்த வங்கி போன்ற வசதிகள் உள்ளன. தமிழ்நாடு சுகாதார திட்டத்தின்கீழ் ரூ.53.34 இலட்சம் செலவில் புறநோயாளிகள் பிரிவு தேசிய ஊரக நலத் திட்டத்தின்கீழ் ரூ.106.65 இலட்சத்தில் 12 படுக்கை வசதிகள் கொண்ட மகப்பேறு பிரிவு, குழந்தைகள் பிரிவு, புறநோயாளிகள் பிரிவு ஆகியவை கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. Programme Implementation Plan (PIP) திட்டத்தின்கீழ் இம்மருத்துவமனைக்கு முதன்மை சிகிச்சை பிரிவிற்கு (First Referral Unit) ரூ.220.00 இலட்சமும், அறுவை அரங்குடன்கூடிய சீமாங் பிரிவிற்கு ரூ.120.00 இலட்சமும், இளஞ்சிசு (SNCU) பராமரிப்பு பிரிவுக்கு ரூ.12.00 இலட்சமும், Hub and Spoke for STEMI ரூ.15.95 இலட்சமும், DNB படிப்பிற்கு ரூ.16.98 இலட்சம் ஆகியவை ஒப்பளிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், Programme Implementation Plan (PIP) திட்டத்தின்கீழ் சீமாங் பிரிவிற்கான கருவிகளுக்கு ரூ.49.00 இலட்சம், Provision of T-piece Resuscitator to SNCU ரூ.1.5 இலட்சம் ஆகியவை ஒப்பளிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. தற்போது இம்மருத்துவமனையில் உள்ள வசதிகளைக் கொண்டு

2023 அக்டோபர் 11]

இப்பகுதி மக்களுக்கு சிறப்பான சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது. எனவே, பட்டுக்கோட்டை மருத்துவமனையை மேலும் தரமுயர்த்த தற்சமயம் அவசியம் எழவில்லை.

22—

மருத்துவமனை

வினா எண் 4179—திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கன்னியாகுமரி மாவட்டம், ஆறுதேசம் ஆரம்ப சுகாதார நிலையத்தை தரமுயர்த்தி படுக்கை வசதியுடன்கூடிய 24 மணிநேர மருத்துவமனையாக செயல்படுத்திட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கிள்ளியூர் தொகுதி, ஆறுதேசம் ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து 6 கி.மீ. தொலைவில் குழித்துறை அரசு மருத்துவமனை 131 படுக்கைகள் கொண்ட வட்ட மருத்துவமனையாகச் செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையில் நாளொன்றுக்கு சராசரியாக 575 வெளிநோயாளிகள் 102 உள்நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகிறார்கள். மாதமொன்றுக்கு சராசரியாக 28,647 ஆய்வக பரிசோதனை, 191 எக்ஸ்ரே, 411 இசிஜி, 100 யு.எஸ்.ஜி. ஸ்கேன் ஆகியவை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், மாதமொன்றுக்கு 150 பிரசவங்கள், 73 அறுவை சிகிச்சை பிரசவங்கள், 165 பெரிய மற்றும் 303 சிறிய வகை அறுவை சிகிச்சைகளும் நடைபெறுகின்றன. இம்மருத்துவமனையில் ஆண்கள், பெண்கள், மகப்பேறு, தொற்றா நோய் சிகிச்சைப் பிரிவு, விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு, முதலமைச்சரின் மருத்துவக் காப்பீட்டுத் திட்ட பிரிவு, NICU போன்ற பிரிவுகள் உள்ளன. மேலும், குளிர்சாதன வசதியுடன்கூடிய 2 அறுவை அரங்கங்கள் மின்னாக்கி வசதி, சமையல் அறை போன்றவை உள்ளன. மேலும் இரத்த வங்கி, குடிநீர் வசதி போன்றவை உள்ளன. எனவே, ஆறுதேசம் ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக தற்போது தரமுயர்த்த அவசியம் எழவில்லை.

[*2023 அக்டோபர் 11*

23—

குழந்தை பராமரிப்பு மையம்

வினா எண் 4258—திரு. ரூபி ஆர். மனோகரன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி மருத்துவமனையில் பச்சிளம் குழந்தைகள் பராமரிப்பு மையங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி அரசு மருத்துவமனை 52 படுக்கைகள் கொண்ட வட்ட மருத்துவமனையாகச் செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையில் நாளொன்றுக்கு சராசரியாக 357 வெளிநோயாளிகள், 22 உள்நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகிறார்கள். இம்மருத்துவமனையில் ஆண்கள், பெண்கள், குழந்தைகள், மகப்பேறு, அவசர சிகிச்சை, காது மூக்கு தொண்டை சிகிச்சை, தொற்றா நோய் சிகிச்சை, அறுவை சிகிச்சைக்கு முன் மற்றும் பின் கவனிப்பு, வெளிநோயாளிகள் பிரிவு, சித்தா, சீமாங் போன்ற பிரிவுகள் உள்ளன. இம்மருத்துவமனையில் 2 மகப்பேறு மருத்துவர், 1 குழந்தைகள் நல மருத்துவர் உட்பட மொத்தம் 13 மருத்துவர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். மாதமொன்றுக்கு சராசரியாக 40 பிரசவங்கள், 31 அறுவை சிகிச்சை பிரசவங்கள் நடைபெறுகின்றன. மேலும், 12 படுக்கைகள் கொண்ட குழந்தைகள் பிரிவு, சீமாங் மற்றும் SNCU பிரிவு செயல்பட்டு வருகின்றன. இங்கு மகப்பேறுக்காக வரும் தாய்மார்களுக்கும், அவசர கால மகப்பேறு மற்றும் பச்சிளங் குழந்தைகளுக்கும், இங்குள்ள குழந்தைகள் நல மருத்துவர் மற்றும் இங்குள்ள வசதிகளைக் கொண்டு உரிய முறையில் சிறப்பான சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகின்றன. மாதமொன்றுக்கு சராசரியாக 1 அல்லது 2 குழந்தைகள் மட்டுமே மிக உயர் சிகிச்சைக்காக திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குப் பரிந்துரைக்கப்படுகிறார்கள். எனவே, நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி மருத்துவமனையில் பச்சிளம் குழந்தைகள் பராமரிப்பு மையங்கள் அமைக்க தற்சமயம் அவசியம் எழவில்லை.

2023 அக்டோபர் 11]

24—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 4326—திரு. ச. சிவகுமார்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், மேல்சேவூர் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் இலக்கின்படி 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டுமென்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

மேல்சேவூர் கிராமத்தில் துணை சுகாதார நிலையம் ஒன்று இயங்கி வருகிறது. மேல்சேவூர் ஊராட்சியிலிருந்து 7 கிலோ மீட்டர் தொலைவில் கீழ்மாம்பட்டு ஆரம்ப சுகாதார நிலையமும் 8 கிலோ மீட்டர் தொலைவில் திருவம்பட்டு ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருவதால், விழுப்புரம் மாவட்டம், வல்லம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள மேல்சேவூர் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

25—

மருத்துவமனை

வினா எண் 5297—திரு. இ.மா. மான்ராஜ்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[*2023 அக்டோபர் 11*

ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதிக்குட்பட்ட வத்திராயிருப்பு மருத்துவமனையினை நவீனப்படுத்தி போதிய பணியாளர்களை நியமிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதிக்குட்பட்ட வத்திராயிருப்பு அரசு மருத்துவமனை 92 படுக்கை வசதிகள் கொண்ட வட்டம் சாரா அரசு மருத்துவமனையாகும். இம்மருத்துவமனையில் நாளொன்றுக்கு சராசரியாக 236 வெளிநோயாளிகளும், 25 உள்நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகிறார்கள். இம்மருத்துவமனையில் ஆண்கள், பெண்கள், அறுவை சிகிச்சை பின் கவனிப்பு, மகப்பேறு, குழந்தைகள், தொற்று நோய் ஆகிய பிரிவுகள் குளிரூட்டப்பட்ட அறுவை அரங்கம், மின்னாக்கி, எக்ஸ்ரே, இ.சி.ஜி. ஆகிய வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. தேவையான மருத்துவக் கருவிகள் உள்ளன. இம்மருத்துவமனையின் செயல்பாட்டினைக் கருத்தில் கொண்டு 10 மருத்துவர்கள், 14 செவிலியர்கள், 2 மருந்தாளுநர்கள், 1 ஆய்வக நுட்புனர், 2 செவிலிய கண்காணிப்பாளர் நிலை-II பணியிடம், மருத்துவம் சாரா மற்றும் இதர பணியிடங்கள் உட்பட தேவையான அனைத்து பணியிடங்களும் ஒப்பளிக்கப்பட்டு போதுமான பணியாளர்கள் பணியில் உள்ளனர். அவ்வப்போது பதவி உயர்வு மற்றும் பணி ஓய்வினால் ஏற்படும் காலிப்பணியிடங்கள் எதிர்வரும் பணி நியமனம் மற்றும் பதவி உயர்வு கலந்தாய்வுகளின்மூலம் பணி நிரப்பப்படும். எனவே, ஸ்ரீவில்லிபுத்தூர் வத்திராயிருப்பு மருத்துவமனை போதுமான வசதிகள் மற்றும் பணியாளர்களுடன் தற்சமயம் இயங்கி வருகிறது.

26—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 5510—திரு. பால் மனோஜ் பாண்டியன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2023 அக்டோபர் 11]

(அ) ஆலங்குளம் தொகுதி, கடையம் ஒன்றியம், மேல ஆம்பூர் ஊராட்சி, கருத்தப்பிள்ளையூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப்பகுதியில் 20,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையில் இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் (Norms) ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. கருத்தப்பிள்ளையூர் கிராமம், கடையம் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றிய மக்கள் தொகை 1,10,718 ஆகும். இவ்வூராட்சி ஒன்றியத்தில் ஏற்கெனவே 3 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. எனவே, தென்காசி மாவட்டம், கடையம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கருத்தப்பிள்ளையூர் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வழிவகை இல்லை.

27—

கட்டடம்

வினா எண் 5511—திரு. பால் மனோஜ் பாண்டியன்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குளம் தொகுதி, கீழப்பாவூர் பேரூராட்சிக்குட்பட்ட, அடைக்கலப்பட்டணம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆலங்குளம் தொகுதி, கீழப்பாவூர் பேரூராட்சிக்குட்பட்ட அடைக்கலப்பட்டணம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் துணை சுகாதார நிலையம் எதுவும் செயல்படவில்லை.

தென்காசி மாவட்டம், கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம், மாடியனூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ் செயல்படும் பெத்தநாடார்பட்டி துணை சுகாதார நிலையத்தின்கீழ் அடைக்கலப்பட்டணம் கிராமம் உள்ளது.

பெத்தநாடார்பட்டி துணை சுகாதார நிலைய கிராம சுகாதார செவிலியர்மூலம் தாய் சேய் நல சேவைகள், சிறு நோய் சிகிச்சை உட்பட பிற சேவைகள் அடைக்கலப்பட்டணம் கிராமத்தில் உள்ள பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும், பெத்தநாடார்பட்டி துணை சுகாதார நிலையம் சொந்த கட்டடத்தில் நல்ல முறையில் இயங்கி வருகிறது. எனவே, புதிய கட்டடம் கட்ட தற்போது அவசியம் எழவில்லை.

28—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 6883—திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, ஓ.எம்.மங்கலம் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் இலக்கின்படி 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும்

2023 அக்டோபர் 11]

இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. ஓ.எம். மங்கலம் ஊராட்சியிலிருந்து 5 கிலோ மீட்டர் தொலைவில் பேரம்பாக்கம் (திருவள்ளூர் மாவட்டம்) ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதால், காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ஓ.எம். மங்கலம் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

29—

கட்டடம்

வினா எண் 6906—திரு. M. ராஜமுத்து: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம், ஆத்தூர் சுகாதார மாவட்டம், பனமரத்துப்பட்டி மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பெரமனூர், கோணமடுவு, தம்மநாயக்கன்பட்டி, வேங்காம்பட்டி, நெய்க்காரப்பட்டி மற்றும் செவந்தாம்பட்டி ஆகிய துணை சுகாதார நிலையங்களுக்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஆத்தூர் சுகாதார மாவட்டம், பனமரத்துப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் கீழ்க்கண்ட துணை சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

பெரமனூர்

பனமரத்துப்பட்டி பிரதான/மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ் பெரமனூர் துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

கோணமடுவு

தும்பல்பட்டி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ் கோணமடுவு துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

தம்மநாயக்கன்பட்டி, நெய்க்காரப்பட்டி

கொண்டலாம்பட்டி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ் தம்மநாயக்கன்பட்டி மற்றும் நெய்க்காரப்பட்டி ஆகிய துணை சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

செவந்தாம்பட்டி, வேங்காம்பட்டி

மல்லூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ் செவந்தாம்பட்டி மற்றும் வேங்காம்பட்டி ஆகிய துணை சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

மேற்கண்ட துணை சுகாதார நிலைய கட்டடங்கள் முற்றிலும் பழுதடைந்துள்ளன. தற்போது நெய்க்காரப்பட்டி துணை சுகாதார நிலையம் சமுதாய நலக் கூடத்திலும் மற்றும் பெரமனூர், கோணமடுவு, தம்மநாயக்கன்பட்டி செவந்தாம்பட்டி, வேங்காம்பட்டி ஆகிய துணை சுகாதார நிலையங்கள் அருகிலுள்ள சத்துணவு கூடங்களிலும் இயங்கி வருகின்றன.

மேற்கண்ட துணை சுகாதார நிலைய கட்டடங்களுக்கு பொதுப் பணித் துறையிடமிருந்து தகுதி நீக்கச் சான்றிதழ் கோரப்பட்டுள்ளது. தகுதி நீக்கச் சான்றிதழ் பெறப்பட்ட பின்னர் முன்னுரிமை அடிப்படையில் நிதி ஒதுக்கப்பட்டு மேற்கண்ட துணை சுகாதார நிலையங்களுக்கு புதிய கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

30—

மருத்துவமனை

வினா எண் 7040—திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருச்செங்கோடு தொகுதி, மல்லசமுத்திரம் ஒன்றியத்திற்கு உட்பட்ட மருத்துவமனையை தரம் உயர்த்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 அக்டோபர் 11]

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு தொகுதி, மல்லசமுத்திரம் ஒன்றியத்தில் 30 படுக்கை வசதிகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. மல்லசமுத்திரம் ஒன்றியத்திலேயே பாலமேடு, வையப்பமலை மற்றும் ராமாபுரம் கூடுதல் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும், மல்லசமுத்திரம் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து 20 கி.மீ.-ல் 84 படுக்கை வசதிகள் கொண்ட திருச்செங்கோடு வட்ட மருத்துவமனை சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. எனவே, திருச்செங்கோடு தொகுதி, மல்லசமுத்திரம் ஒன்றியத்திற்குட்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த தற்சமயம் அவசியம் எழவில்லை.

31—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 7076—திரு. J.L. ஈஸ்வரப்பன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஆற்காடு தொகுதி, திமிரி ஊராட்சி ஒன்றியம், விளாப்பாக்கம் ஊராட்சிக்குட்பட்ட அரசு சுகாதார நிலையத்தில் கூடுதல் படுக்கை வசதிகள் ஏற்படுத்தவும் மற்றும் அடிப்படை வசதிகள் செய்து தரவும் அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

ராணிப்பேட்டை மாவட்டம், திமிரி ஊராட்சி ஒன்றியத்தின்கீழ் விளாப்பாக்கம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் 6 படுக்கை வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. விளாப்பாக்கம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து 30 படுக்கை வசதிகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட திமிரி ஆரம்ப சுகாதார நிலையம்

4 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளதால், விளாப்பாக்கம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் கூடுதலாக படுக்கை வசதிகள் ஏற்படுத்த சாத்தியக்கூறுகள் இல்லை.

விளாப்பாக்கம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் குடிநீர் தொட்டி வசதி மற்றும் கழிப்பிட வசதிகள் போன்ற அடிப்படை தேவைகள் நோயாளிகள் பயன்படுத்தும் வகையில் நல்ல முறையில் உள்ளன.

32—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 7097—திரு. மு. பன்னீர்செல்வம்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, காத்திருப்பு (செம்பதனிருப்பு) ஆரம்ப சுகாதார நிலையத்தை 24 மணி நேரமும் இயங்கும் ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி ஊராட்சி ஒன்றியத்தில் காத்திருப்பு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. காத்திருப்பு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் 3 செவிலியர்கள் நியமனம் செய்யப்பட்டு, 24 மணி நேர பிரசவ கவனிப்பு சேவை வழங்கப்பட்டு வருகிறது.

33—

பல்நோக்கு மருத்துவமனை

வினா எண் 7098—திரு. மு. பன்னீர்செல்வம்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, சீர்காழியில் சிறப்பு பல்நோக்கு மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

2023 அக்டோபர் 11]

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி அரசு மருத்துவமனை 272 படுக்கைகள் கொண்ட வட்ட அரசு மருத்துவமனையாகச் செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனை ஆண்கள் பிரிவு, பெண்கள் பிரிவு, மகப்பேறு பிரிவு, குழந்தைகள், தொற்றா நோய் சிகிச்சை பிரிவு, முதலமைச்சரின் காப்பீட்டு திட்டம், சித்தா, குடும்ப நலம், சீமாங், விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு, வெளிநோயாளிகள் பிரிவு, அறுவை சிகிச்சை பிரிவு மற்றும் X-Ray, ECG, USG Scan மற்றும் முழுமையான ஆய்வகம், இரத்த வங்கி, குளிர்சாதன வசதியுடன்கூடிய அறுவை அரங்கம், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி, 108 அவசர ஊர்தி ஆகிய வசதிகளுடன் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இங்கு நாளொன்றுக்கு சராசரியாக 1815 வெளிநோயாளிகளும், 170 உள்நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகிறார்கள். மாதமொன்றுக்கு சராசரியாக 81,557 ஆய்வகப் பரிசோதனைகளும், 1,398 எக்ஸ்ரேக்களும், 730 ECG, 282 USG எடுக்கப்பட்டு வருகின்றன. இங்கு மாதமொன்றுக்கு சராசரியாக 253 பெரிய அறுவை சிகிச்சைகளும், 832 சிறிய அறுவை சிகிச்சைகளும், 122 பிரசவங்களும், 54 அறுவை சிகிச்சை பிரசவங்களும் நடைபெறுகின்றன. இம்மருத்துவமனைக்கு Pradhan Mantri Ayushman Bharat Health Infrastructure Mission (PMABHIM) திட்டத்தின்கீழ் 50 படுக்கை வசதிகளுடன்கூடிய Critical Care Block கட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இம்மருத்துவமனை தற்போதுள்ள வசதிகளைக் கொண்டு இப்பகுதி மக்களுக்குச் சிறப்பாக சேவையை வழங்கி வருகிறது. இம்மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்ட படுக்கை எண்ணிக்கையை விட குறைவான எண்ணிக்கையிலேயே உள்நோயாளிகள் சிகிச்சைக்கு வருகின்றனர். எனவே, சீர்காழியில் பல்நோக்கு மருத்துவமனை அமைக்க தற்சமயம் அவசியம் எழவில்லை.

34—

கட்டடம்

வினா எண் 7102—திரு. மு. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[*2023 அக்டோபர் 11*

சீர்காழி தொகுதிக்குட்பட்ட சீர்காழி நகர ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டடம் கட்ட நிலம் கையகப்படுத்திட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் தற்போது முனிசிபாலிட்டியின் வாடகையில்லா கட்டடத்தில் இயங்கி வருகிறது.

சீர்காழி நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சொந்த கட்டடம் கட்ட செயல்முறை ஆணை எண் 1869/NUHM/SHS/2015, நாள் 13-10-2021-ன்படி, ரூ.75.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. சீர்காழி நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டடம் கட்டுவதற்கு சீர்காழி நகராட்சி ஆணையர்மூலம் சீர்காழி நகராட்சி பகுதியில் உள்ள Ward No. C-*ல்* Block No. *13* T.S. No. *3 அரசு நிலங்கள் கண்டறியப்பட்டுள்ளன. மேலும், அந்த இடத்தில் சீர்காழி நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலைய கட்டடம் கட்டுவதற்கு உரிய ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் சீர்காழி நகராட்சிமூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

35—

குளிர் சாதன வசதி

வினா எண் 7132—திரு. அ.செ. வில்வநாதன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆம்பூர் தொகுதி, ஆம்பூர் அரசு மருத்துவமனையில் உள்ள பிரேதப் பரிசோதனை அறைக்கு குளிர்சாதன வசதி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 அக்டோபர் 11]

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம்பூர் தொகுதி, ஆம்பூர் அரசு மருத்துவமனை 258 படுக்கை வசதிகள் கொண்ட வட்ட மருத்துவமனையாகச் செயல்பட்டு வருகிறது. இங்கு நாளொன்றுக்கு சராசரியாக 2,417 வெளிநோயாளிகளும், 194 உள்நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகிறார்கள். இங்கு குளிர்சாதன வசதியுடன்கூடிய அறுவை அரங்கு, மருத்துவ உபகரணங்கள் மற்றும் போதுமான குடிநீர் வசதிகள் உள்ளன. அனைத்து நவீன வசதிகளுடன் இம்மருத்துவமனை செயல்பட்டு வருகின்றது. இம்மருத்துவமனையில் பிணவறை வசதி உள்ளது. இங்கு மாதமொன்றுக்கு சராசரியாக 9 பிரேதங்கள் பரிசோதனைக்காக கொண்டு வரப்படுகின்றன. இவை உடனுக்குடன் பிரேத பரிசோதனை செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட உறவினர்களிடம் ஒப்படைக்கப்படுகிறது. மேலும், பிரேதப் பரிசோதனை கிடங்கிற்கு குளிரூட்டும் பெட்டி (Freezer Box) வழங்கப்பட்டுள்ளது. எனவே, பிரேத பரிசோதனை கிடங்கில் குளிர்சாதன வசதி செய்ய அவசியம் எழவில்லை.

36—

சிகிச்சைப் பிரிவு

வினா எண் 7196—திரு. S. சந்திரன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு வட்டம், கோனெடம்பேட்டை அரசு மருத்துவமனையில் பாம்புக் கடிக்கான சிகிச்சைப் பிரிவு துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு வட்டம், கோனெடம்பேட்டை (பள்ளிப்பட்டு) அரசு மருத்துவமனை

[*2023 அக்டோபர் 11*

38 படுக்கை வசதிகள் கொண்ட வட்ட மருத்துவமனையாகச் செயல்பட்டு வருகிறது. இங்கு நாளொன்றுக்கு சராசரியாக 189 வெளிநோயாளிகளும், 14 உள்நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகிறார்கள். கோனெடம்பேட்டை (பள்ளிப்பட்டு) அரசு மருத்துவமனையில் கடந்த ஐந்து மாதங்களில் 2 நோயாளிகள் மட்டுமே பாம்புக் கடி சிகிச்சைக்காக சிகிச்சை பெற்றனர். அவர்களுக்கு பாம்புக் கடிக்கான ASV *மருந்து செலுத்தப்பட்டு அருகில் உள்ள மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்கு பரிந்துரைக்கப்பட்டார்கள். இம்மருத்துவமனையில் பாம்புக் கடிக்கான* ASV *மருந்து போதுமான அளவில் இருப்பில் உள்ளது. எனவே, பாம்புக் கடிக்கான சிகிச்சைப் பிரிவு தனியாக துவங்க அவசியம் எழவில்லை.*

37—

கட்டடம்

வினா எண் 7204—திரு. S. சந்திரன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *திருத்தணி தொகுதி, திருத்தணி ஒன்றியம், பீரகுப்பத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை விரிவுபடுத்தி புதிய கட்டடம் கட்டவும், கூடுதல் படுக்கை வசதி ஏற்படுத்தித் தரவும் அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) *திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி ஊராட்சி ஒன்றியத்தில் பீரகுப்பம் பிரதான/மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.*

2012-2013 ஆம் நிதியாண்டில் பீரகுப்பம் பிரதான/மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் தேசிய ஊரக நல குழுமத்தின்கீழ் ரூ.17.00 இலட்சம் மதிப்பீட்டில் மகப்பேறு பிரிவு கட்டடம் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

2023 அக்டோபர் 11]

திருத்தணி ஊராட்சி ஒன்றியத்தில் பீரகுப்பம் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் அரசாணை (நிலை) எண் 52, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 21-2-2014-ன்படி 30 படுக்கை வசதிகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தப்பட்டு அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது.

38—

அலுவலகம்

வினா எண் 7340—திரு. ஈ. ராஜா: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சங்கரன்கோவில் நகரில் இயங்கி வந்த துணை சுகாதார இயக்குநர் அலுவலகத்தை மீண்டும் சங்கரன்கோவிலில் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சங்கரன்கோவில் நகரில் இயங்கி வந்த துணை இயக்குநர் அலுவலகம் தென்காசியை தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் உதயமானதால் தென்காசிக்கு மாற்றப்பட்டுவிட்டது. சங்கரன்கோவிலையும் உள்ளடக்கிய தென்காசி மாவட்டம் முழுமைக்கும் இந்த சுகாதார மாவட்ட அலுவலகம் அனைத்து பணிகளையும் ஒருங்கிணைப்பதால் மீண்டும் சங்கரன்கோவில் துணை இயக்குநர் அலுவலகம் அமைத்திட தற்போது சாத்தியக் கூறுகள் இல்லை.

[*2023 அக்டோபர் 11*

39—

தலைமை மருத்துவமனை

வினா எண் 7342—திரு. ஈ. ராஜா: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சங்கரன்கோவில் மருத்துவமனைக்கு கூடுதல் மருத்துவர் மற்றும் செவிலியர்களை நியமிக்கவும் இதனை மாவட்ட தலைமை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தவும் அரசு அவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

*(அ) மற்றும் (ஆ) தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில் அரசு மருத்துவமனை 186 படுக்கை வசதிகள் கொண்ட வட்ட மருத்துவமனையாகச் செயல்பட்டு வருகிறது. இங்கு நாளொன்றுக்கு சராசரியாக 880 வெளிநோயாளிகளும், 112 உள்நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகிறார்கள். இம்மருத்துவமனையின் செயல்பாட்டினைக் கருத்தில்கொண்டு, 19 மருத்துவர் பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டு, தற்சமயம் 14 மருத்துவர்கள் பணிபுரிந்து வருகின்றனர். தற்போது காலியாக உள்ள மருத்துவர் பணியிடங்கள் நடப்பாண்டில் முதுநிலை பட்டம் முடித்த, பணிசார்ந்த பட்டதாரி மருத்துவர்கள் (*Service PG*) மற்றும் பணிசாரா பட்டதாரி மருத்துவர்கள் (*Non Service PG*) மூலமும் நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், 33 செவிலியர் பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டு அனைத்து செவிலியர்களும் பணிபுரிந்து வருகின்றனர். மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்கக கட்டுப்பாட்டின்கீழ் ஒரு மாவட்டத்திற்கு ஒரு மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை மட்டுமே தற்போது செயல்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் தென்காசி மாவட்டத்திற்கான மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை தென்காசியில் செயல்பட்டு வருகிறது. மேலும், சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்ட படுக்கை எண்ணிக்கையைவிட மிக குறைவான எண்ணிக்கையில் உள்நோயாளிகள் மற்றும் வெளிநோயாளிகள் சிகிச்சைக்கு*

2023 அக்டோபர் 11]

வருகின்றனர். எனவே, இம்மருத்துவமனைக்கு கூடுதல் மருத்துவர் மற்றும் செவிலியர்களை நியமிக்கவும், மாவட்ட தலைமை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தவும் தற்சமயம் அவசியம் எழவில்லை.

40—

கட்டடம்

வினா எண் 7599—திரு. N. அசோக்குமார்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பேராவூரணி தொகுதி, பேராவூரணி அரசு மருத்துவமனையில் 150 படுக்கைகள் கொண்ட நவீன வசதிகளுடன்கூடிய புதிய கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பேராவூரணி தொகுதி, பேராவூரணி அரசு மருத்துவமனை 70 படுக்கை வசதிகளுடன் வட்ட அரசு மருத்துவமனையாகச் செயல்பட்டு வருகிறது. இங்கு நாளொன்றுக்கு சராசரியாக 535 வெளிநோயாளிகளும், 29 உள்நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இம்மருத்துவமனையில் மாதமொன்றுக்கு சராசரியாக 4 பிரசவங்கள், 3 அறுவை சிகிச்சை பிரசவங்கள் 10 பெரிய மற்றும் 155 சிறிய வகை அறுவை சிகிக்சைகளும் நடைபெறுகின்றன. மாதமொன்றுக்கு சராசரியாக 15,338 ஆய்வக பரிசோதனைகள், 97 எக்ஸ்ரே, 84 யுஎஸ்ஜி மற்றும் 340 இசிஜி ஆகியவை எடுக்கப்பட்டு வருகின்றன.

மேலும், இங்கு ஆண்கள், பெண்கள், குழந்தைகள், மகப்பேறு, விஷமுறிவு, சீமாங் மற்றும் NBSU உள்ளிட்ட சிறப்பு பிரிவுகள் உள்ளன. இம்மருத்துவமனையில் ஸ்கேன், எக்ஸ்ரே, இசிஜி, Ventilator போன்ற மருத்துவ கருவிகளுடன் மின்னாக்கி, குளிரூட்டப்பட்ட அறுவை அரங்கம், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி ஆகியவையும் உள்ளன. 108 அவசர சிகிச்சை ஊர்தி வசதி உள்ளது.

[*2023 அக்டோபர் 11*

இம்மருத்துவமனையில் ஒப்பளிக்கப்பட்ட படுக்கை எண்ணிக்கையை விட குறைவான எண்ணிக்கையிலே உள்நோயாளிகள் மற்றும் குறைந்த எண்ணிக்கையிலே வெளிநோயாளிகள் சிகிச்சைக்கு வருவதால் தற்போதுள்ள மருத்துவர்கள், மருத்துவம் சாரா மற்றும் இதர பணியாளர்களைக் கொண்டும் பிற வசதிகளைக் கொண்டும் நோயாளிகளுக்கு 24 மணி நேரமும் அவசர சிகிச்சை உட்பட சிறப்பான சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. எனவே, பேராவூரணி தொகுதி, பேராவூரணி அரசு மருத்துவமனையில் 150 படுக்கைகள் கொண்ட நவீன வசதிகளுடன்கூடிய புதிய கட்டடம் கட்ட தற்சமயம் அவசியம் எழவில்லை.

41—

கட்டடம்

வினா எண் 7608—திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஒன்றியம், ஆலாடு ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியம், காட்டூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ் ஆலாடு ஊராட்சியில் அ.ரெட்டிபாளையம் துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

அ.ரெட்டிபாளையம் துணை சுகாதார நிலைய கட்டடம் முற்றிலும் பழுதடைந்துள்ளது. தற்போது அ.ரெட்டிபாளையம் துணை சுகாதார நிலையம் அங்கன்வாடி மைய கட்டடத்தில் இயங்கி வருகிறது. பழுதடைந்த கட்டடத்திற்கு பொதுப் பணித் துறையிடமிருந்து தகுதி நீக்கச் சான்றிதழ் கோரப்பட்டது. பொதுப்

2023 அக்டோபர் 11]

பணித் துறையிடமிருந்து தகுதி நீக்க சான்றிதழ் பெறப்பட்ட பின்னர், முன்னுரிமை அடிப்படையில் நிதி ஒதுக்கப்பட்டு, அ.ரெட்டிபாளையம் துணை சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

42—

குளிர்சாதனப் பெட்டி

வினா எண் 7609—திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஒன்றியம், பழவேற்காடு அரசு மருத்துவமனை மருந்தகத்தில் குளிர்சாதனப் பெட்டி வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஒன்றியம், பழவேற்காடு அரசு மருத்துவமனை 32 படுக்கை வசதிகளுடன் வட்டம் சாரா அரசு மருத்துவமனையாகச் செயல்பட்டு வருகிறது. இங்கு நாளொன்றுக்கு சராசரியாக 418 வெளிநோயாளிகளும், 29 உள்நோயாளிகளும் சிசிச்சை பெற்று வருகிறார்கள்.

மேலும், பழவேற்காடு அரசு மருத்துவமனையில் உள்ள மருந்தகத்தில் மருந்துகளைச் சேகரித்து வைப்பதற்கான குளிர்சாதனப்பெட்டி வசதி உள்ளது.

43—

ஓய்வு அறை

வினா எண் 7614—திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[*2023 அக்டோபர் 11*

(அ) பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஒன்றியம், பழவேற்காடு அரசு மருத்துவமனையில் செவிலியர்கள், மருத்துவர்களுக்கு ஓய்வு அறை அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஒன்றியம், பழவேற்காடு அரசு மருத்துவமனை 32 படுக்கை வசதிகள் கொண்ட அரசு வட்டம் சாரா மருத்துவமனையாகும். இம்மருத்துவமனையில் 4 மருத்துவர்கள், 6 செவிலியர்கள், 2 தொகுப்பூதிய செவிலியர்கள், 1 செவிலிய கண்காணிப்பாளர் நிலை-2, 1 ANM, 1 ஆய்வக நுட்புனர், 2 மருந்தாளுநர், 1 செவிலிய உதவியாளர், 2 மருத்துவமனை பணியாளர், 2 துப்புரவுப் பணியாளர், 2 பல்நோக்கு மருத்துவமனை பணியாளர் போன்ற பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டு, இப்பணியிடங்களில் 4 மருத்துவர்கள், 4 செவிலியர்கள், 2 தொகுப்பூதிய செவிலியர்கள், 1 செவிலிய கண்காணிப்பாளர் நிலை-2, 1 ஆய்வக நுட்புனர், 2 துப்புரவுப் பணியாளர், 1 பல்நோக்கு மருத்துவமனை பணியாளர் போன்றோர் பணிபுரிந்து வருகின்றனர். மேலும், இம்மருத்துவமனையில் செவிலியர்கள் மற்றும் மருத்துவர்கள் ஓய்வு எடுப்பதற்காக போதுமான ஓய்வு அறைகள் உள்ளன. எனவே, மேற்காணும் மருத்துவமனைக்கு கூடுதலாக ஓய்வறை ஏற்படுத்த வேண்டிய அவசியம் எழவில்லை.

44—

கட்டடம்

வினா எண் 7799—திரு. சி. மகேந்திரன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மடத்துக்குளம் தொகுதி, உடுமலை ஒன்றியம், ஜல்லிபட்டி அரசு மருத்துவமனையில் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 அக்டோபர் 11]

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மடத்துக்குளம் தொகுதி, உடுமலை ஒன்றியம், ஜல்லிபட்டி அரசு மருத்துவமனை 12 படுக்கை வசதிகள் கொண்ட அரசு வட்டம் சாரா மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது. இங்கு நாளொன்றுக்கு சராசரியாக 140 வெளிநோயாளிகள், 6 உள்நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகிறார்கள். மாதமொன்றுக்கு சராசரியாக 871 ஆய்வக பரிசோதனை மற்றும் 15 இ.சி.ஜி. ஆகியவை எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும், 48 சிறிய வகை அறுவை சிகிச்சைகளும் நடைபெறுகின்றன. மேலும், ஜல்லிபட்டி அரசு மருத்துவமனையிலிருந்து 11 கி.மீ. தொலைவில் 224 படுக்கைகள் மற்றும் அனைத்து வசதிகளுடன்கூடிய உடுமலைப்பேட்டை அரசு வட்ட மருத்துவமனை சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இங்கு நாளொன்றுக்கு சராசரியாக 865 வெளிநோயாளிகளும், 115 உள்நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகிறார்கள். எனவே, இந்நிலையில் மடத்துக்குளம் தொகுதி, உடுமலை ஒன்றியம், ஜல்லிபட்டி அரசு மருத்துவமனையில் புதிய கட்டடம் கட்ட தற்சமயம் அவசியம் எழவில்லை.

45—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 7806—திரு. கி. அசோக்குமார்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணகிரி தொகுதி, கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியம், மல்லிநாயனப்பள்ளி ஊராட்சி, மல்லிநாயனப்பள்ளி கிராமத்தில் உள்ள துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மத்திய அரசின் இலக்கின்படி 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார

[2023 அக்டோபர் 11

மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோமீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

மல்லிநாயனப்பள்ளி கிராமத்தில் துணை சுகாதார நிலையம் ஒன்று இயங்கி வருகிறது. மல்லிநாயனப்பள்ளி கிராமத்திலிருந்து 7 கிலோ மீட்டர் தொலைவில் மேகலசின்னம்பள்ளி ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதால் கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மல்லிநாயனப்பள்ளி கிராமத்தில் உள்ள துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

46—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 7856—திரு. சீ. கதிரவன்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மண்ணைச்சநல்லூர் தொகுதி, வாளவந்தி ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் இலக்கின்படி 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோமீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

வாளவந்தி ஊராட்சியில் துணை சுகாதார நிலையம் ஒன்று இயங்கி வருகிறது. வாளவந்தி ஊராட்சி தாத்தையங்கார்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றிய மக்கள் தொகை 1,10,225 ஆகும். இவ்வூராட்சி ஒன்றியத்தில் 3 ஆரம்ப

2023 அக்டோபர் 11]

சுகாதார நிலையங்கள் ஏற்கெனவே இயங்கி வருவதால், திருச்சி மாவட்டம், தாத்தையங்கார்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள வாளவந்தி ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

47—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 7860—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, பெருங்களத்தூர் பேரூராட்சிக்குட்பட்ட சமத்துவ பெரியார் நகரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நால்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் இலக்கின்படி 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

சமத்துவ பெரியார் நகர் கிராமத்திலிருந்து 6 கிலோ மீட்டர் தொலைவில் திருநீர்மலை ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதால், செங்கல்பட்டு மாவட்டம் புனித தோமையார்மலை ஊராட்சி ஒன்றியம் சமத்துவ பெரியார் நகரில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

48—

குடியிருப்புகள்

வினா எண் 7877—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[*2023 அக்டோபர் 11*

(அ) கன்னியாகுமரி மாவட்டம், கோதநல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பழுதடைந்துள்ள பணியாளர் குடியிருப்புகளை அகற்றி, புதிய பணியாளர் குடியிருப்புகள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நால்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் சுகாதார மாவட்டம், தக்கலை ஊராட்சி ஒன்றியத்தில் கோதநல்லூர் பிரதான/மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

கோதநல்லூர் பிரதான/மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் மொத்தம் 16 பணியாளர் குடியிருப்புகள் உள்ளன. 16 பணியாளர் குடியிருப்புகளிலுள்ள பழுதுபார்ப்பு பணிகளை முன்னுரிமை அடிப்படையில் சரிபார்த்து சீரமைக்க பொதுப் பணித் துறையிடமிருந்து மதிப்பீடு பட்டியல் பெறப்பட்ட பின்னர் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும். பழுதடைந்துள்ள பணியாளர் குடியிருப்புகளை அகற்றி, புதியதாக பணியாளர் குடியிருப்பு கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

49—

சுற்றுச் சுவர்

வினா எண் 10222—திரு. பூண்டி கே. கலைவாணன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாரூர் தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், பழையனூர் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச் சுவர் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 அக்டோபர் 11]

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி ஊராட்சி ஒன்றியம், பழையனூர் ஊராட்சியில் சாத்தனூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

சாத்தனூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச் சுவர் இல்லை. சுற்றுச் சுவர் கட்ட தற்போது நிதி ஒதுக்கீடு எதுவும் இல்லை. எனவே, சாத்தனூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச் சுவர் கட்ட தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

50—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 10223—திரு. பூண்டி கே. கலைவாணன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாரூர் தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், புள்ளமங்கலம் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் இலக்கின்படி 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

புள்ளமங்கலம் ஊராட்சியில் துணை சுகாதார நிலையம் ஒன்று இயங்கி வருகின்றது. புள்ளமங்கலம் ஊராட்சியிலிருந்து 5 கிலோ மீட்டர் தொலைவில் சாத்தனூர் ஆரம்ப சுகாதார நிலையம்

செயல்பட்டு வருவதால், திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள புள்ளமங்கலம் ஊராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

51—

மருத்துவமனை

வினா எண் 10248—திரு. கடம்பூர் ராஜூ: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவில்பட்டி தொகுதி, கயத்தாரில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி தொகுதி, கயத்தார் கூடுதல் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. கயத்தார் ஒன்றியத்திலேயே கடம்பூர் மற்றும் கழுகுமலை மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களும், வெள்ளாளன் கோட்டை கூடுதல் அரசு ஆரம்ப சுகாதார நிலையமும் இயங்கி வருகின்றன. மேலும், கயத்தார் கூடுதல் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து உயர்சிகிச்சை தேவைப்படும் நோயாளிகள் அருகில் உள்ள வட்ட மருத்துவமனை மற்றும் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளுக்குப் பரிந்துரைக்கப்படுகிறார்கள். எனவே, தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி தொகுதி, கயத்தார் கூடுதல் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த தற்சமயம் அவசியம் எழவில்லை.

52—

குடியிருப்பு

வினா எண் 11322—திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2023 அக்டோபர் 11]

(அ) தளி தொகுதி, கெலமங்கலம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவர் மற்றும் செவிலியர் சுகாதார வளாகத்தை பழுதுநீக்கி, புதுப்பித்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், கெலமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் கெலமங்கலம் பிரதான/மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

கெலமங்கலம் பிரதான / 3 மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஒரு மருத்துவ அலுவலர் குடியிருப்பும் மற்றும் ஒரு செவிலியர் குடியிருப்பும் உள்ளன.

செவிலியர் குடியிருப்பு நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. பழுது எதுவும் இல்லாததால், புதுப்பிக்க அவசியம் எழவில்லை. மருத்துவ அலுவலர் குடியிருப்பு முற்றிலும் பழுதடைந்துள்ளது. பொதுப் பணித் துறையிடமிருந்து தகுதி நீக்கச் சான்றிதழ் கோரப்பட்டுள்ளது. தகுதி நீக்கச் சான்றிதழ் பெறப்பட்டபின் முன்னுரிமை அடிப்படையில் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு புதியதாக மருத்துவ அலுவலர் குடியிருப்பு கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

53—

சுற்றுச் சுவர்

வினா எண் 11375—திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, உரிகம் ஊராட்சி, உரிகம் துணை சுகாதார நிலையத்திற்கு சுற்றுச் சுவர் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், தளி ஊராட்சி ஒன்றியம், உரிகம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ் உரிகம் துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மட்டுமே சுற்றுச் சுவர் கட்ட முன்னுரிமை அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. துணை சுகாதார நிலையங்களுக்கு சுற்றுச் சுவர் கட்ட தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

54—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 11392—திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதியில் கெலமங்கலம் ஊராட்சி ஒன்றியம், கண்டகானப்பள்ளி ஊராட்சி, கண்டகானப்பள்ளி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

கண்டகானப்பள்ளி கிராமத்திலிருந்து 3 கிலோ மீட்டர் தொலைவில் பாலதொட்டனப்பள்ளி ஆரம்ப சுகாதார நிலையமும், 5 கிலோ மீட்டர் தொலைவில் தேன்கனிக்கோட்டை அரசு மருத்துவமனையும் செயல்பட்டு வருவதால், கிருஷ்ணகிரி

2023 அக்டோபர் 11]

மாவட்டம் கெலமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கண்டகானப்பள்ளி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

55—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 11424—திரு. N. அசோக்குமார்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பேராவூரணி தொகுதி, ஆவணம் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

ஆவணம் கிராமத்திலிருந்து 3 கிலோ மீட்டர் தொலைவில் நெடுவாசல் ஆரம்ப சுகாதார நிலையமும் (அறந்தாங்கி சுகாதார மாவட்டம்), 8 கிலோ மீட்டர் தொலைவில் செருவாவிடுதி ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருவதால், தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ஆவணம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

56—

சித்த மருத்துவப் பிரிவு

வினா எண் 11464—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[*2023 அக்டோபர் 11*

(அ) பெண்ணாகரம் தொகுதி, புலிக்கரை ஊராட்சிக்குட்பட்ட புலிக்கரை கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையத்தில் சித்த மருத்துவப் பிரிவு துவங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டத்தில் தற்போது 22 இந்திய மருத்துவ பிரிவுகளும், 15 நலவாழ்வு மையங்களும் ஆக மொத்தம் 37 இந்திய மருத்துவப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. இதில் செயல்பட்டு வரும் 26 சித்த பிரிவுகள் இம்மாவட்டத்தில் தற்போது உள்ள சித்த மருத்துவ சிகிச்சைக்கான தேவையை பூர்த்தி செய்ய போதுமானதாக உள்ளது. எனவே, தருமபுரி மாவட்டத்தில் பெண்ணாகரம் தொகுதி, புலிக்கரை ஊராட்சிக்குட்பட்ட புலிக்கரை கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையத்தில் புதியதாக சித்த மருத்துவப் பிரிவை துவங்குவதற்கான தேவை தற்போது எழவில்லை.

57—

மருத்துவமனை

வினா எண் 11594—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், பாளையம்புதூரில் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்தி 30 படுக்கை வசதிகளுடன் 24 மணி நேரமும் இயங்கும் மருத்துவமனையாக அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியத்தில் பாளையம்புதூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு

2023 அக்டோபர் 11]

வருகிறது. ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலும் இயங்கி வரும் ஆரம்ப சுகாதார நிலையங்களில், ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தினை தரம் உயர்த்துவது என்பது அரசின் கொள்கை முடிவாகும். அரசாணை (நிலை) எண் 320, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 29-9-2003-ன்படி நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியத்தில் தொப்பூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்கெனவே 30 படுக்கை வசதிகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தப்பட்டு அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. எனவே, இதே ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பாளையம்புதூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கை வசதிகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை. அரசாணை (நிலை) எண் 396, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 23-8-1999-ன்படி, பாளையம்புதூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையத்தில் 3 செவிலியர்கள் நியமிக்கப்பட்டு 24 மணி நேர பிரசவ கவனிப்பு சேவை வழங்கப்பட்டு வருகிறது.

58—

மருத்துவமனை

வினா எண் 11651—திரு. A.J. மணிக்கண்ணன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

உளுந்தூர்பேட்டை மாவட்ட அரசு பொது மருத்துவமனையை தரம் உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனை 136 படுக்கை வசதிகளுடன்கூடிய அரசு வட்ட மருத்துவமனையாகச் செயல்பட்டு வருகிறது. நாளொன்றுக்கு சராசரியாக 1,117 வெளிநோயாளிகளும். 68 உள்நோயாளிகளும்

[*2023 அக்டோபர் 11*

சிகிச்சை பெறுகின்றனர். இம்மருத்துவமனையில் ஆண்கள் பிரிவு, பெண்கள் பிரிவு, மகப்பேறு பிரிவு, அறுவை சிகிச்சை பிரிவு, குழந்தைகள் பிரிவு, பச்சிளங் குழந்தைகள் பிரிவு, அவசரம் மற்றும் விபத்து பிரிவு, தொற்று நோய் பிரிவு, அறுவை சிகிச்சைக்கு முன் மற்றும் பின் கவனிப்பு பிரிவு, வெளிநோயாளிகள் பிரிவு, நுண்கதிர் பிரிவு, சித்தா பிரிவு, தலைக்காய சிகிச்சை பிரிவு, தனிமைப்படுத்தப்பட்ட பிரிவு, முதலமைச்சரின் காப்பீட்டுத் திட்ட பிரிவு போன்ற பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. இம்மருத்துவமனைக்கு 2022-2023 நிதியாண்டில், Pradhan Mantri Ayushman Bharat Health Infrastructure Mission *(*PMABHIM*) திட்டத்தின்மூலம் 100 படுக்கை வசதிகளுடன்கூடிய* Critical Care Block *கட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்சமயம் இம்மருத்துவமனையில் உள்ள வசதிகளைக் கொண்டு இப்பகுதி மக்களுக்குச் சிறப்பாக சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது. எனவே, உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனையை தற்சமயம் தரம் உயர்த்த வேண்டிய அவசியம் எழவில்லை.*

59—

அவசர சிகிச்சைப் பிரிவு

வினா எண் 11657—திரு. T.K. அமுல் கந்தசாமி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*வால்பாறை அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவு (*ICU*) துவக்க அரசு முன்வருமா?*

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை அரசு மருத்துவமனை 62 படுக்கை வசதிகள் கொண்ட வட்ட மருத்துவமனையாகச் செயல்பட்டு வருகிறது. இங்கு நாளொன்றுக்கு சராசரியாக 398 வெளிநோயாளிகளும், 14 உள்நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகிறார்கள். இம்மருத்துவமனையில் 4 படுக்கை வசதிகளுடன் அவசர சிகிச்சைப் பிரிவு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. மேலும், இம்மருத்துவமனையினை தரம் உயர்த்தும் பொருட்டு, Programme Implementation Plan *(*PIP*) 2021-2022 நிதியாண்டில்*

2023 அக்டோபர் 11]

ரூ.900.00 இலட்சத்தில் கூடுதல் கட்டடம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

60—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 11670—திரு. கே. பொன்னுசாமி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேந்தமங்கலம் தொகுதி, எருமப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்தி விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

நாமக்கல் மாவட்டம், எருமப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில், எருமப்பட்டி பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் 2001 ஆம் ஆண்டுக்கு முன்னரே 30 படுக்கை வசதிகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தப்பட்டு அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது.

61—

கட்டடம்

வினா எண் 11680—திரு. ஆ. அருண்மொழிதேவன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கடலூர் மாவட்டம், கீரப்பாளையம் ஒன்றியம், கீரப்பாளையத்தில் பழுதடைந்துள்ள தாய்-சேய் நல விடுதியை புதுப்பித்து அல்லது புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், கீரப்பாளையம் ஊராட்சி ஒன்றியத்தில் ஓரத்தூர் பிரதான/மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார

[*2023 அக்டோபர் 11*

நிலையத்தின்கீழ் கீரப்பாளையம் துணை சுகாதார நிலையம் (தாய்-சேய் நல விடுதி) செயல்பட்டு வருகிறது.

கீரப்பாளையம் துணை சுகாதார நிலைய (தாய்-சேய் நல விடுதி) கட்டடம் முற்றிலும் பழுதடைந்துள்ளதால், தற்போது, துணை சுகாதார நிலையம் (தாய்-சேய் நல விடுதி) அங்கன்வாடி மையக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. மேலும், பழுதடைந்துள்ள துணை சுகாதார நிலையக் கட்டடத்திற்கு பொதுப் பணித் துறையிடமிருந்து தகுதி நீக்கச் சான்றிதழ் கோரப்பட்டுள்ளது. பொதுப் பணித் துறையிடமிருந்து தகுதி நீக்க சான்றிதழ் பெறப்பட்ட பின்னர், முன்னுரிமை அடிப்படையில் நிதி ஒதுக்கப்பட்டு, கீரப்பாளையம் துணை சுகாதார நிலையத்திற்கு (தாய்-சேய் நல விடுதி) புதிய கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

62—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 11723—திரு. செ. கிருஷ்ணமுரளி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *கடையநல்லூர் தொகுதி, அச்சன்புதூரில் இயங்கி வரும் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்த அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) *30 படுக்கை வசதிகள் இல்லாத ஊராட்சி ஒன்றியத்தில், ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தினை தரம் உயர்த்துதல் என்பது அரசின் கொள்கை முடிவாகும். அரசாணை (நிலை) எண் 142, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 30-4-2007-ன்படி, செங்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் இலத்தூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கை வசதிகள்*

2023 அக்டோபர் 11]

கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தப்பட்டு அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருவதால், இதே ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள அச்சன்புதூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கை வசதிகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

63—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 11772—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, பெருங்களத்தூர் பேரூராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 50,000 மக்கள் தொகைக்கு ஒரு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

பெருங்களத்தூர் பேரூராட்சியிலிருந்து 8 கிலோ மீட்டர் தொலைவில் பீர்க்கன்கரணை ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதால், செங்கல்பட்டு மாவட்டம் புனிததோமையார் மலை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பெருங்களத்தூர் பேரூராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

64—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 11788—திருமதி ம. வரலட்சுமி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[*2023 அக்டோபர் 11*

(அ) செங்கல்பட்டு தொகுதி, மறைமலைநகரில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டம், காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் மறைமலைநகர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

30 படுக்கை வசதிகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையம் இல்லாத ஊராட்சி ஒன்றியத்தில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தினை தரம் உயர்த்துதல் என்பது அரசின் கொள்கை முடிவாகும். அரசாணை (நிலை) எண் 106, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 7-6-2002-ன்படி காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் நந்திவரம் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்கெனவே 30 படுக்கை வசதிகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தப்பட்டு அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருவதால், இதே ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மறைமலைநகர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கை வசதிகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

65—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 11855—திரு. க. கார்த்திகேயன்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருக்கோவிலூர் மேற்கு ஒன்றியம், கீழத்தாழனூர் ஊராட்சியில் துணை சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

2023 அக்டோபர் 11]

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கீழத்தாழனூர் துணை சுகாதார நிலையம் அரசு கட்டடடத்தில் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது.

66—

மருத்துவமனை

வினா எண் 11864—திரு. க. கார்த்திகேயன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ரிஷிவந்தியம் ஒன்றியம், வாணாபுரம் ஊராட்சி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட பொது மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் ஒன்றியம், வாணாபுரம் ஊராட்சியில் வாணாபுரம் கூடுதல் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. ரிஷிவந்தியம் ஒன்றியத்தில், மணிமுத்தாறு திட்டம், சீர்பானந்தல், மணலூர்பேட்டை கூடுதல் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. ரிஷிவந்தியம் ஒன்றியத்திலேயே, 30 படுக்கை வசதிகள் கொண்ட ரிஷிவந்தியம் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதால், ரிஷிவந்தியம் ஒன்றியம், வாணாபுரம் ஊராட்சி, வாணாபுரம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட பொது மருத்துவமனையாகத் தரம் உயர்த்த தற்சமயம் அவசியம் எழவில்லை.

67—

மருத்துவமனை

வினா எண் 12406—திரு. இரா. அருள்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் ஒன்றியம், தளவாப்பட்டி பஞ்சாயத்து, திருப்பதி கவுண்டனூர் பகுதிக்கு சிறிய அளவிலான மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

சேலம் ஒன்றியம், தளவாப்பட்டி பஞ்சாயத்து, திருப்பதி கவுண்டனூர் பகுதியிலிருந்து 13 கி.மீ.-ல் 120 படுக்கை வசதிகள் கொண்ட ஓமலூர் அரசு வட்ட மருத்துவமனை சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இங்கு நாளொன்றுக்கு சராசரியாக 489 வெளிநோயாளிகளும், 102 உள்நோயாளிகளும் சிகிச்சை பெறுகின்றனர்.

இம்மருத்துவமனையில் உள்நோயாளிகள் பிரிவு, வெளிநோயாளிகள் பிரிவு, பிரசவ பிரிவு, பிரசவ பின் கவனிப்பு பிரிவு, சீமாங் பிரிவு, பச்சிளங் குழந்தை பராமரிப்பு மையம் (NBSU), ஆண்கள் பிரிவு, பெண்கள் பிரிவு, தொற்றா நோய் பிரிவு, சித்தா பிரிவு, தொழுநோயாளிகள் பிரிவு ஆகிய பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. மேலும், பொது அறுவை அரங்கம், விபத்து மற்றும் எலும்பு முறிவு அரங்கம், RO Plant, 108 அவசர ஊர்தி வசதி ஆகிய வசதிகள் உள்ளன. தேசிய சுகாதார திட்டத்தின்மூலம் ரூ.5.16 கோடி செலவில் கட்டடம் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

எனவே, சேலம் ஒன்றியம், தளவாப்பட்டி பஞ்சாயத்து, திருப்பதி கவுண்டனூர் பகுதிக்கு புதியதாக மருத்துவமனை அமைக்க தற்சமயம் அவசியம் எழவில்லை.

2023 அக்டோபர் 11]

68—

சுகாதார நிலையம்

வினா எண் 12436—திரு. இரா. அருள்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் (மேற்கு) தொகுதி, ஓமலூர் ஒன்றியம், பாகல்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகளுடன்கூடிய மேம்படுத்தப்பட்ட சுகாதார நிலையமாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியத்தில் பாகல்பட்டி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று செயல்பட்டு வருகிறது. ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலும் இயங்கி வரும் ஆரம்ப சுகாதார நிலையங்களில், ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தினை தரம் உயர்த்துதல் என்பது அரசின் கொள்கை முடிவாகும். அரசாணை (நிலை) எண் 338, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 11-12-2012-ன்படி, ஓமலூர் ஊராட்சி ஒன்றியத்தில் சரக்கப்பிள்ளையூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்கெனவே 30 படுக்கை வசதிகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தப்பட்டு அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. எனவே, இதே ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பாகல்பட்டி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகளுடன்கூடிய மேம்படுத்தப்பட்ட சுகாதார நிலையமாக மாற்ற சாத்தியக்கூறுகள் இல்லை.

69—

மருத்துவமனை

வினா எண் 12595—திரு. ஐ.பி. செந்தில்குமார்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[*2023 அக்டோபர் 11*

பழனி தொகுதி, கொடைக்கானல் வட்டம், பண்ணைக்காடு பேரூராட்சியில் இயங்கிவரும் அண்ணா அரசு மருத்துவமனையை அவசரகால உயர் சிகிச்சை பெறும் மருத்துவமனையாக நவீனப்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

பழனி தொகுதி, கொடைக்கானல் வட்டம், பண்ணைக்காடு பேரூராட்சியில், பண்ணைக்காடு அரசு மருத்துவமனை 42 படுக்கை வசதிகள் கொண்ட வட்டம் சாரா அரசு மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது. இங்கு நாளொன்றிற்கு சராசரியாக 4 உள்நோயாளிகள் மற்றும் 213 வெளிநோயாளிகளும் சிகிச்சைப் பெற்று வருகின்றனர். மாதமொன்றுக்கு சராசரியாக 449 ஆய்வக பரிசோதனை, 6 USG ஸ்கேன் மற்றும் 14 இசிஜி ஆகியவை மேற்கொள்ளப்படுகின்றன. மாதமொன்றுக்கு சராசரியாக 45 சிறிய அறுவை சிகிச்சைகளும் நடைபெறுகின்றன. இம்மருத்துவமனைக்கு அவசரகால உயர் சிகிச்சைக்காக வரும் நோயாளிகளின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது. இம்மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவு 24 மணி நேரமும் செயல்பட்டு வருகிறது. அவசரகால உயர் சிகிச்சைக்கு வருபவர்களுக்கு இங்குள்ள அவசர சிகிச்சைப் பிரிவில் உரிய சிகிச்சை வழங்கப்படுகிறது. இப்பகுதியில் 108 அவசர ஊர்தி வசதி உள்ளது. எனவே, உயர் சிகிச்சை தேவைப்படும் நோயாளிகள் அருகில் உள்ள வட்ட அரசு மருத்துவமனைக்குப் பரிந்துரைக்கப்படுகிறார்கள். மேலும், இம்மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்ட படுக்கை எண்ணிக்கையை விட மிகக் குறைவான எண்ணிக்கையிலே உள்நோயாளிகள் மற்றும் வெளிநோயாளிகள் சிகிச்சைக்கு வருவதால் இம்மருத்துவமனையை மேலும் நவீனப்படுத்த தற்போது அவசியம் எழவில்லை.

70—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 12597—திரு. ஐ.பி. செந்தில்குமார்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2023 அக்டோபர் 11]

பழனி தொகுதி, கொடைக்கானல் வட்டம், கூக்கால் ஊராட்சி, பழம்புத்தூர் கிராமத்திற்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப்பகுதியில் 20,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. பழம்புத்தூர் கிராமம் கூக்கால் துணை சுகாதார நிலையத்தையும் மன்னவனூர் ஆரம்ப சுகாதார நிலையத்தையும் சார்ந்தது. பழம்புத்தூர் கிராமம் கொடைக்கானல் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றிய மக்கள் தொகை 86,730 ஆகும். இவ்வூராட்சி ஒன்றியத்தில் 5 ஆரம்ப சுகாதார நிலையங்கள் முறையே மன்னவனூர், பெருமாள்மலை, பூலத்தூர், பூம்பாறை மற்றும் பெரும்பள்ளம் ஆகியன செயல்பட்டு வருகின்றன. எனவே, திண்டுக்கல் மாவட்டம், பழனி சுகாதார மாவட்டம், கொடைக்கானல் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பழம்புத்தூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

71—

மருத்துவமனை

வினா எண் 12599—திரு. ஐ.பி. செந்தில்குமார்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பழனி தொகுதி, பழனி அரசு மருத்துவமனைக்கு புதிய CT Scan *இயந்திரம் வழங்க அரசு முன்வருமா?*

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திண்டுக்கல் மாவட்டம், பழனி அரசு மருத்துவமனை 207 படுக்கை வசதிகள் கொண்ட வட்ட அரசு மருத்துவமனையாகும். இம்மருத்துவமனையில் நாளொன்றுக்கு சராசரியாக 1,117 வெளிநோயாளிகளும், 180 உள்நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகின்றனர். தற்சமயம், பழனி அரசு மருத்துவமனையில் உள்ள சிடி-ஸ்கேன் நன்றாக இயங்கி வருகிறது. இவ்வசதியினைப் பயன்படுத்தி மாதமொன்றுக்கு சராசரியாக 366 சிடி ஸ்கேன்கள் எடுக்கப்படுகின்றன.

72—

பிணவறை

வினா எண் 12601—திரு. ஐ.பி. செந்தில்குமார்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பழனி தொகுதி, பழனி அரசு மருத்துவமனையில் முழுவதும் குளிரூட்டப்பட்ட பிணவறை அமைத்துத்தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திண்டுக்கல் மாவட்டம், பழனி அரசு மருத்துவமனை 207 படுக்கை வசதிகள் கொண்ட வட்ட மருத்துவமனையாகும். இம்மருத்துவமனையில் நாளொன்றுக்கு சராசரியாக 1,117 வெளிநோயாளிகளும், 180 உள்நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இம்மருத்துவமனையில் பிணவறை வசதி உள்ளது. இங்குள்ள பிரேதப் பரிசோதனைக் கிடங்கிற்கு 2 பிரேதங்கள் வைக்கக் கூடிய அளவில் குளிரூட்டும் பெட்டி (Freezer Box) வழங்கப்பட்டுள்ளது. மேலும், நாளொன்றுக்கு சராசரியாக 2 முதல் 3 பிரேதங்களே பரிசோதனைக்காக கொண்டு வரப்படுகின்றன. இவை உடனுக்குடன் பிரேதப் பரிசோதனை செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டு வருவதால்,

2023 அக்டோபர் 11]

இம்மருத்துவமனையில் தற்சமயம் முழுவதும் குளிரூட்டப்பட்ட பிணவறை அமைத்துத் தர வேண்டிய அவசியம் எழவில்லை.

73—

மருத்துவமனை

வினா எண் 12645—திரு. பெ. ராமலிங்கம்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நாமக்கல் தொகுதி, புதன் சந்தை ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசினர் மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

நாமக்கல் தொகுதி, புதன் சந்தை ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து 15 கி.மீ. தொலைவில் அனைத்து வசதிகளுடன்கூடிய நாமக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. மேலும், 9 கி.மீ. தொலைவில் 84 படுக்கை வசதிகள் கொண்ட சேந்தமங்கலம் வட்ட அரசு மருத்துவமனை சிறப்பாக செயல்பட்டு வருகிறது. எனவே, நாமக்கல் தொகுதி, புதன் சந்தை ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்திட தற்போது அவசியம் எழவில்லை.

74—

சுற்றுச் சுவர்

வினா எண் 12711—திரு. A. நல்லதம்பி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *திருப்பத்தூர் தொகுதி, ஜவ்வாதுமலை, புங்கம்பட்டுநாடு ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச் சுவர் கட்ட அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் ஜவ்வாதுமலையில் புங்கம்பட்டுநாடு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

அரசாணை (நிலை) எண் 467, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 11-12-2017-ன்படி புங்கம்பட்டுநாடு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் தோற்றுவிக்கப்பட்டது. தற்போது சேர்கானூர் துணை சுகாதார நிலையக் கட்டடத்தின் ஒரு பகுதியில் புங்கம்பட்டுநாடு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. புங்கம்பட்டுநாடு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் ரூ.60.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேலும், இச்சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச் சுவர் கட்ட பொதுப் பணித் துறையிடமிருந்து மதிப்பீடு பட்டியல் கோரப்பட்டுள்ளது. மதிப்பீடு பட்டியல் பெறப்பட்ட பின்னர் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு முன்னுரிமை அடிப்படையில் சுற்றுச் சுவர் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

75—

கட்டடம்

வினா எண் 12722—திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் தொகுதி, திருப்புல்லாணி ஊராட்சி ஒன்றியம், வேளானூர் ஊரில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்புல்லாணி ஊராட்சி ஒன்றியத்தில் வேளானூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

2023 அக்டோபர் 11]

வேளானூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் சொந்த கட்டடத்தில் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. எனவே, கூடுதலாக புதிய கட்டடம் கட்ட தற்போது அவசியம் எழவில்லை.

76—

கட்டடம்

வினா எண் 12723—திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) இராமநாதபுரம் தொகுதிக்குட்பட்ட திருஉத்திரகோசமங்கை மருத்துவமனைக்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம். திருப்புல்லாணி ஊராட்சி ஒன்றியத்தில் திருஉத்திரகோசமங்கை பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

திருஉத்திரகோசமங்கை பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் சொந்தக் கட்டடத்தில் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. எனவே, கூடுதலாக புதிய கட்டடம் கட்ட தற்போது அவசியம் எழவில்லை.

77—

கட்டடம்

வினா எண் 12725—திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

இராமநாதபுரம் தொகுதி, மண்டபம் ஊராட்சி ஒன்றியம், வேதாளை கிராமத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் ஊராட்சி ஒன்றியம், வேதாளை ஊராட்சியில் அரசாணை (நிலை) எண் 91, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 20-3-2018-ன்படி ஆரம்ப சுகாதார நிலையம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. தற்சமயம் வாடகையில்லா கட்டடத்தில் வேதாளை ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கி வருகிறது. கட்டடம் கட்டும் பணிகளுக்காக ரூ.60.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. வக்ஃப் வாரியத்திற்கு சொந்தமான நிலம் கண்டறியப்பட்டுள்ளது. நிலம் பெறுவது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

78—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 12802—திரு. க.சொ.க. கண்ணன்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜெயங்கொண்டம் தொகுதி, ஜெயங்கொண்டம் ஒன்றியம், கங்கைகொண்டசோழபுரம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப்பகுதியில் 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப

2023 அக்டோபர் 11]

சுகாதார நிலையம் மற்றும் இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. கங்கைகொண்டசோழபுரம் கிராமத்திலிருந்து 5 கிலோ மீட்டர் தொலைவில் மீன்சுருட்டி ஆரம்ப சுகாதார நிலையமும் 6 கிலோ மீட்டர் தொலைவில் உட்கோட்டை ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருவதால், அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கங்கைகொண்டசோழபுரம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

79—

கட்டடம்

வினா எண் 12992—திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டையில் சீமாங் (CEMONC) திட்டத்தில் ஒதுக்கீடு செய்த அரசு மருத்துவமனைக்கு புதியதாக கூடுதல் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை அரசு மருத்துவமனை 52 படுக்கை வசதிகளுடன்கூடிய அரசு வட்ட மருத்துவமனையாகச் செயல்பட்டு வருகிறது. நாளொன்றுக்கு சராசரியாக 543 வெளிநோயாளிகளும், 34 உள்நோயாளிகளும் சிகிச்சை பெறுகின்றனர். கந்தர்வகோட்டை அரசு மருத்துவமனையில் 10 படுக்கை வசதிகள் கொண்ட மகப்பேறு பிரிவு செயல்பட்டு வருகிறது. இங்கு பணிபுரியும் 3

[*2023 அக்டோபர் 11*

மகப்பேறு மருத்துவர்கள், 1 மயக்கவியல் மருத்துவரைக் கொண்டு பிரசவத்திற்கு வரும் தாய்மார்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. மாதமொன்றுக்கு சராசரியாக 8 பிரசவங்களும், 3 அறுவை சிகிச்சை பிரசவங்களும் நடைபெறுகின்றன. பிரசவத்திற்கு வரும் தாய்மார்களின் எண்ணிக்கை மிக குறைவாகவே உள்ளதால், கந்தர்வகோட்டை அரசு மருத்துவமனைக்கு புதியதாக கூடுதல் கட்டடம் கட்டித் தர தற்சமயம் அவசியம் எழவில்லை.

80—

காலிப் பணியிடங்கள்

வினா எண் 12993—திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *கந்தர்வகோட்டை தொகுதி, கந்தர்வகோட்டை கறம்பக்குடி மற்றும் கீரனூரில் உள்ள அரசு மருத்துவமனைகளில் மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவ உதவியாளர்கள் மற்றும் பணியாளர்கள் காலிப் பணியிடங்களை நிரப்ப அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) *கந்தர்வகோட்டை தொகுதி, கந்தர்வகோட்டை அரசு மருத்துவமனை 52 படுக்கை வசதிகளுடன் அரசு வட்ட மருத்துவமனையாகச் செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையில் நாளொன்றுக்கு சராசரியாக 543 வெளிநோயாளிகளும், 34 உள்நோயாளிகளும் சிகிச்சை பெறுகிறார்கள்.*

தற்போது இம்மருத்துவமனையில் 14 மருத்துவர், 11 செவிலியர், 1 செவிலிய கண்காணிப்பாளர் நிலை-II பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டு அவற்றில் முறையே 11 மருத்துவர்கள்,

2023 அக்டோபர் 11]

11 செவிலியர்கள் மற்றும் 1 செவிலிய கண்காணிப்பாளர் நிலை-II பணிபுரிந்து வருகிறார்கள். மேலும், இம்மருத்துவமனைக்கு மருத்துவம் மற்றும் மருத்துவம் சாரா என மொத்தம் 39 பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டு போதுமான பணியாளர்கள் பணியில் உள்ளனர்.

கறம்பக்குடி அரசு மருத்துவமனை

கறம்பக்குடி அரசு மருத்துவமனை 36 படுக்கை வசதிகளுடன் அரசு வட்ட மருத்துவமனையாகச் செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையில் நாளொன்றுக்கு சராசரியாக 502 வெளிநோயாளிகளும், 23 உள்நோயாளிகளும் சிகிச்சை பெறுகிறார்கள்.

தற்போது இம்மருத்துவமனையில் 3 மருத்துவர், 6 செவிலியர், 1 செவிலிய கண்காணிப்பாளர் நிலை-II பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டு அனைத்து பணியிடங்களும் நிரப்பப்பட்டு அனைவரும் பணிபுரிந்து வருகிறார்கள். மேலும், இம்மருத்துவமனைக்கு மருத்துவம் மற்றும் மருத்துவம் சாரா என மொத்தம் 23 பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டு போதுமான பணியாளர்கள் பணியில் உள்ளனர்.

கீரனூர் அரசு மருத்துவமனை

கீரனூர் அரசு மருத்துவமனை, 56 படுக்கை வசதிகள் கொண்ட வட்ட அரசு மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையில் நாளொன்றுக்கு சராசரியாக 529 வெளிநோயாளிகளும், 18 உள்நோயாளிகளும் சிகிச்சை பெறுகிறார்கள்.

தற்போது இம்மருத்துவமனையில் 5 மருத்துவர் பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டு 4 மருத்துவர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். மேலும், 13 செவிலியர், 1 செவிலிய கண்காணிப்பாளர் நிலை-II பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டு அனைத்து பணியிடங்களும் நிரப்பப்பட்டு அனைவரும் பணிபுரிந்து வருகிறார்கள். மேலும், இம்மருத்துவமனைக்கு மருத்துவம் மற்றும் மருத்துவம் சாரா என மொத்தம் 37 பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டு போதுமான பணியாளர்கள் பணியில் உள்ளனர்.

[*2023 அக்டோபர் 11*

மேற்காணும் அரசு மருத்துவமனைகளில், அவ்வப்போது பணி ஓய்வு மற்றும் பதவி உயர்வினால் ஏற்படும் காலிப்பணியிடங்கள் எதிர்வரும் கலந்தாய்வின்மூலம் நிரப்பப்படும்.

81—

அறுவை சிகிச்சை மையம்

வினா எண் 13014—திரு. S. ராஜகுமார்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் இருதய அறுவை சிகிச்சை மையம் துவங்கிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

*(அ) மற்றும் (ஆ) மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறை அரசு மருத்துவமனை 612 படுக்கை வசதிகளுடன்கூடிய அரசு வட்ட மருத்துவமனையாகச் செயல்பட்டு வருகிறது. நாளொன்றுக்கு சராசரியாக 1,943 வெளிநோயாளிகளும், 320 உள்நோயாளிகளும் சிகிச்சை பெறுகின்றனர். மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநரக கட்டுப்பாட்டில் இயங்கும் அரசு மருத்துவமனைகள் இரண்டாம் நிலை மருத்துவமனைகள் ஆகும். இருதய அறுவை சிகிச்சை என்பது உயர் சிறப்பு மருத்துவ வகையைச் சார்ந்ததாகும். இருதய அறுவை சிகிச்சை செய்யும் மருத்துவர்கள் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் பணியமர்த்தப்படுகிறார்கள். இருதய அறுவை சிகிச்சைக்கான அனைத்து வசதிகளும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் உள்ளன. மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் தொற்றா நோய் சிகிச்சை பிரிவு (*NCD*) சிறப்பாகச் செயல்படுகிறது. மேலும், 6 படுக்கை வசதிகள் கொண்ட* ICCU *தீவிர இருதய சிகிச்சை பிரிவு செயல்பட்டு வருகிறது. மேலும், எக்கோ கார்டியோகிராம் (*Echocardiogram*), வெண்டிலேட்டர் போன்ற வசதிகள் உள்ளன. இம்மருத்துவமனையில் தற்சமயம் 4 எம்.டி. பொது மருத்துவர்கள் பணியில் உள்ளனர். இவர்களைக் கொண்டு இருதய நோய் சிகிச்சைக்கு வரும் நோயாளிகளுக்கு*

2023 அக்டோபர் 11]

முதற்கட்ட சிகிச்சை அளிக்கப்படுகிறது. மேலும், உயர் சிகிச்சை தேவைப்படும் நோயாளிகள் அருகில் உள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்குப் பரிந்துரை செய்யப்படுகிறார்கள்.

82—

எய்ட்ஸ் மையம்

வினா எண் 13015—திரு. S. ராஜகுமார்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் எய்ட்ஸ் மையம் தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலாடுதுறை மாவட்டத்திலுள்ள சீர்காழியில் அமைந்துள்ள அரசு மருத்துவமனையில் ஏற்கெனவே இணைப்பு கூட்டு மருந்து சிகிச்சை மையம் செயல்பட்டு வருவதால், மயிலாடுதுறை மாவட்டத்தில் எச்.ஐ.வி./எய்ட்ஸால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாடு நிறுவனத்தின் (NACO) வழிகாட்டுதலின்படி அந்நிறுவனத்தின் அனுமதியை பெற்று, எய்ட்ஸ் மையம் (கூட்டு மருந்து சிகிச்சை மையம் (ART Centre)) அமைக்க வருங்காலங்களில் தேவைக்கேற்ப பரிசீலிக்கப்படும்.

83—

மருத்துவர்கள்

வினா எண் 14322—முனைவர் த. இனிகோ இருதயராஜ்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருச்சிராப்பள்ளி (கிழக்கு) தொகுதி, வரகனேரியில் செயல்படும் மருத்துவமனையை தரம் உயர்த்தி போதுமான மருத்துவர்களை நியமனம் செய்ய அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திருச்சி மாவட்டம், திருச்சிராப்பள்ளி (கிழக்கு) தொகுதியில் வரகனேரியில் மருந்தகம் செயல்பட்டு வருகிறது.

தற்போது 15 ஆம் நிதிக் குழுவின் (15th Finance Commission) மூலம் வரகனேரியில் செயல்பட்டு வரும் மருந்தகத்தை ஆரோக்கிய மையமாக (Health and Wellness Centre) தரம் உயர்த்த ரூ.25 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கட்டுமானப் பணிகள் முடிவுற்றதும், வரகனேரி ஆரோக்கிய மையத்தில் போதுமான மருத்துவர்களை நியமிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

84—

மருத்துவமனை

வினா எண் 14390—திரு. வி.ஜி. இராஜேந்திரன்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாலங்காடு ஒன்றியம், கனகம்மாசத்திரம் ஆரம்ப சுகாதார நிலையத்தை 40 படுக்கை கொண்ட வட்டார மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், திருவாலங்காடு ஒன்றியம், கனகம்மாசத்திரம் கூடுதல் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. மேலும், திருவாலங்காடு ஒன்றியத்தில் திருவாலங்காடு மற்றும் பூனிமாங்காடு மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களும்

2023 அக்டோபர் 11]

செயல்பட்டு வருகின்றன. கனகம்மாசத்திரம் ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து 16 கி.மீ. தொலைவில் 20.5 படுக்கை வசதிகள் கொண்ட திருத்தணி அரசு வட்ட மருத்துவமனையும், 20 கி.மீ. தொலைவில் திருவள்ளூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை உயர் சிகிச்சை வசதிகளுடன் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. எனவே, திருவாலங்காடு ஒன்றியம், கனகம்மாசத்திரம் ஆரம்ப சுகாதார நிலையத்தை 40 படுக்கைகள் கொண்ட வட்டார மருத்துவமனையாகத் தரம் உயர்த்த தற்சமயம் அவசியம் எழவில்லை.

85—

மருத்துவமனை

வினா எண் 14402—திரு. மு. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சீர்காழி அரசு மருத்துவமனையில் MRI SCAN கருவியை பொருத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி அரசு மருத்துவமனை 272 படுக்கை வசதிகள் கொண்ட வட்ட மருத்துவமனையாகச் செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையில் சராசரியாக நாள் ஒன்றுக்கு 970 நபர்கள் வெளிநோயாளிகளாகவும், 133 நபர்கள் உள்நோயாளிகளாகவும் சிகிச்சை பெறுகின்றனர். MRI ஸ்கேன் கருவி தற்போது அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கும், தேவையின் அடிப்படையில் சில மாவட்ட தலைமை மருத்துவமனைகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது. மயிலாடுதுறை மாவட்டத்தில் இயங்கும் மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவி வழங்குவதற்காக, தேசிய நலத் திட்டம் 2021-2022 நிதியாண்டு PIP (Programme Implementation Plan) திட்டத்தின்கீழ், ரூ.650.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எம்.ஆர்.ஐ. ஸ்கேன் தேவைப்படும் நோயாளிகள் மிக, மிக குறைவாகவே உள்ளனர். எம்.ஆர்.ஐ.

[*2023 அக்டோபர் 11*

ஸ்கேன் தேவைப்படும் நோயாளிகள் தற்சமயம் அருகில் உள்ள மருத்துவமனைகளுக்கும் மற்றும் மாவட்ட தலைமை மருத்துவமனைக்கும் பரிந்துரைக்கப்படுகிறார்கள். தற்போது, சீர்காழி அரசு மருத்துவமனையில் அனைத்து வசதிகளுடன்கூடிய ஆய்வகம், எக்ஸ்ரே, இ.சி.ஜி., ஸ்கேன்., சிடி-ஸ்கேன் போன்ற வசதிகள் உள்ளன. இவற்றைக் கொண்டு நோயாளிகளுக்கு தேவையான பரிசோதனைகள் இலவசமாக செய்யப்பட்டு உரிய சிகிச்சைகள் வழங்கப்பட்டு, இப்பகுதி மக்களுக்கு சிறப்பான சேவை வழங்கப்பட்டு வருகிறது.

86—

மருத்துவமனை

வினா எண் 15101—திரு. ம. பிரபாகரன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *பெரம்பலூர் தொகுதி, கிருஷ்ணாபுரம் வட்டார அரசு தலைமை மருத்துவமனையை அனைத்து மருத்துவக் கருவிகளுடன்கூடிய முழுநேர மருத்துவப் பணியாளர்களுடன்கூடிய முழு நேர மருத்துவமனையாகச் செயல்பட அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) *பெரம்பலூர் மாவட்டம், கிருஷ்ணாபுரம் அரசு மருத்துவமனை 36 படுக்கை வசதிகள் கொண்ட அரசு வட்ட மருத்துவமனையாகச் செயல்பட்டு வருகிறது. தற்போது, நாளொன்றிற்கு சராசரியாக 176 வெளிநோயாளிகளும், 12 உள்நோயாளிகளும் சிகிச்சைப் பெற்று வருகிறார்கள். இம்மருத்துவமனையில் எக்ஸ்ரே,* USG, Multipara Meter, ECG, Boyles Apparatus, Baby Warmer, Suction apparatus *போன்ற மருத்துவ உபகரணங்கள் உள்ளன. தற்போது, இம்மருத்துவமனைக்கு 4 மருத்துவர் பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டு, 3 மருத்துவர்கள் பணிபுரிந்து வருகின்றனர். மேலும், 7 நிரந்தர செவிலியர்கள், 2 தொகுப்பூதிய செவிலியர்கள் ஒப்பளிக்கப்பட்டு, அனைத்து*

2023 அக்டோபர் 11]

செவிலியர்களும் பணிபுரிந்து வருகின்றனர். மேலும், 2 மருந்தாளுநர், 1 செவிலிய கண்காணிப்பாளர் நிலை-2, 2 ஆய்வக நுட்புனர் நிலை-2 ஆகிய பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டு அனைத்து பணியாளர்களும் பணிபுரிந்து வருகின்றனர். இத்துடன் போதுமான அளவு மருத்துவம் சாரா மற்றும் இதர பணியாளர் பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டு, போதுமான பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். தற்போது இம்மருத்துவமனை முழு நேர மருத்துவமனையாகச் செயல்பட்டு வருகிறது. பணியாளர்கள் பதவி உயர்வு, பணியிட மாறுதல், பணிமூப்பு அடிப்படையில் ஓய்வு பெறுதல், விருப்பத்தின் பேரில் ஓய்வு பெறுவதால் அவ்வப்போது ஏற்படும் காலிப்பணியிடங்கள், எதிர்வரும் கலந்தாய்வு நிகழ்வுகள்மூலம் உடனுக்குடன் நிரப்பப்பட்டு பொது மக்களுக்கு, காலதாமதம் இன்றி குறித்த காலத்தில் உரிய சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

87—

மருத்துவமனை

வினா எண் 15105—திரு. ம. பிரபாகரன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெரம்பலூர் தொகுதி, எசனை கிராமத்திலுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை அனைத்து வசதிகளுடன்கூடிய மருத்துவமனையாக தரம் உயர்த்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் தொகுதி, எசனை ஆரம்ப சுகாதார நிலையம் கூடுதல் அரசு ஆரம்ப சுகாதார நிலையமாகச் செயல்பட்டு வருகிறது. மேலும், பெரம்பலூர் ஒன்றியத்தில் அம்மாப்பாளையம் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமும், கல்பாடி, குரும்பலூர், வேலூர், லாடபுரம் மற்றும் எளம்பலூர் ஆகிய பகுதிகளில் கூடுதல் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களும் இயங்கி வருகின்றன. எசனை ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து 10 கி.மீ. தொலைவில் 477

[*2023 அக்டோபர் 11*

படுக்கை வசதிகள் கொண்ட பெரம்பலூர் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை பல்வேறு உயர் சிகிச்சை வசதிகளுடன் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. மேலும், 9.5 கி.மீ. தொலைவில் 36 படுக்கை வசதிகள் கொண்ட கிருஷ்ணாபுரம் அரசு வட்ட மருத்துவமனையும் செயல்பட்டு வருகிறது. எனவே, பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் தொகுதி எசனை ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்த தற்சமயம் அவசியம் எழவில்லை.

88—

கூட்ட அரங்கம்

வினா எண் 15190—திரு. ஆர். கணேஷ்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) உதகமண்டலம் தொகுதி, பாலாகொலா ஊராட்சி, தங்காடு தலைமை ஆரம்ப சுகாதார நிலையத்தில் Review Meeting *நடத்த கூட்ட அரங்கம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டம், உதகமண்டலம் சுகாதார மாவட்டம், பாலாகொலா ஊராட்சி, உதகமண்டலம் ஊராட்சி ஒன்றியத்தில் தங்காடு ஓரநள்ளி பிரதான/மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

தங்காடு ஓரநள்ளி பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் அரசாணை (நிலை) எண் 65, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 18-2-2016-ன்படி 30 படுக்கை வசதிகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தப்பட்டு அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது.

*தங்காடு ஓரநள்ளி பிரதான/மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஏற்கெனவே கூட்ட அரங்க (*Review Meeting Hall*) வசதி உள்ளது.*

2023 அக்டோபர் 11]

89—

மருத்துவமனை

வினா எண் 15262—திரு. மு. சக்ரபாணி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வானூர் தொகுதி, கண்டமங்கலம் ஒன்றியத்தில் பாக்கம் காட்டுபாதை ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு பொது மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

வானூர் தொகுதி, கண்டமங்கலம் ஒன்றியத்தில் சிறுவந்தாடு மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. மேலும், கண்டமங்கலம், கோண்டூர், புரசிங்கணபாளையம் மற்றும் ராம்பாக்கம் ஆகிய பகுதிகளில் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

வானூர் தொகுதியில் 42 படுக்கை வசதிகள் கொண்ட வானூர் வட்ட அரசு மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. மேலும், இங்கிருந்து 27 கி.மீ.-ல் அனைத்து உயர்தர சிறப்பு சிகிச்சை வசதிகளைக் கொண்ட விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

எனவே, வானூர் தொகுதி, கண்டமங்கலம் ஒன்றியத்தில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு பொது மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அவசியம் எழவில்லை.

90—

மருத்துவமனை

வினா எண் 15268—திரு. A. நல்லதம்பி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் அரசு மருத்துவமனை படுக்கை எண்ணிக்கையினை 250-லிருந்து 500 படுக்கைகளாக மேம்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் அரசு மருத்துவமனை 440 படுக்கை வசதிகள் மற்றும் பல்வேறு சிறப்பு பிரிவுகளுடன் செயல்பட்டு வருகிறது. இங்கு நாளொன்றுக்கு சராசரியாக 2,423 வெளிநோயாளிகளும், 237 உள்நோயாளிகளும் சிகிச்சை பெறுகின்றனர். இம்மருத்துவமனையில் ஆண்கள், பெண்கள், பிரசவ சிகிச்சைப் பிரிவுகள், விஷமுறிவு சிகிச்சை மையம், விரிவான அவசரகால மகப்பேறு மற்றும் பச்சிளங் குழந்தை பராமரிப்பு மையம் (CEmONC), பச்சிளங் குழந்தை தீவிர சிகிச்சை பிரிவு (NICU), அவசர சிகிச்சைப் பிரிவு, தொற்றா நோய் பிரிவு ஆகிய பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. மேலும், எக்ஸ்ரே, இரத்த வங்கி, சிடி-ஸ்கேன், டிஜிட்டல் எக்ஸ்ரே, வெண்டிலேட்டர், எலிசா ரீடர், மின்னாக்கி, குளிரூட்டப்பட்ட 4 அறுவை அரங்குகள் ஆகிய வசதிகள் உள்ளன. திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு, Programme Implementation Plan (PIP) 2021-2022 நிதியாண்டின்கீழ், ரூ.6.5 கோடி செலவில் MRI ஸ்கேன் கருவி வழங்குவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் அரசு மருத்துவமனை 440 படுக்கை வசதிகள் மற்றும் பல்வேறு சிறப்புப் பிரிவுகளுடன் செயல்பட்டு வருகிறது. மானியக் கோரிக்கை விவாதத்தின்போது மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் 2022-2023 ஆம் ஆண்டிற்கான அறிவிப்பின்படி மக்களின் நலனுக்காக திருப்பத்தூர் அரசு மருத்துவமனை மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையாக ஏற்கெனவே தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

91—

சமையல் கூடம்

வினா எண் 15270—திரு. A. நல்லதம்பி: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2023 அக்டோபர் 11]

(அ) திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் நவீன சமையல் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் அரசு மருத்துவமனை 440 படுக்கை வசதிகள் மற்றும் பல்வேறு சிறப்புப் பிரிவுகளுடன் செயல்பட்டு வருகிறது. இங்கு நாளொன்றுக்கு சராசரியாக 2,423 வெளிநோயாளிகளும், 237 உள்நோயாளிகளும் சிகிச்சை பெறுகின்றனர். திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் நவீன சமையல் கூடம் செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையிலுள்ள உள்நோயாளிகளுக்கு உணவு பொருட்கள் தற்சமயம் வழங்கப்பட்டு வருகின்றன.

92—

சமையல் கூடம்

வினா எண் 15271—திரு. A. நல்லதம்பி: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் நவீன சமையல் கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் அரசு மருத்துவமனை 440 படுக்கை வசதிகள் மற்றும் பல்வேறு சிறப்புப் பிரிவுகளுடன் செயல்பட்டு வருகிறது. இங்கு நாளொன்றுக்கு சராசரியாக 2,423 வெளிநோயாளிகளும், 237 உள்நோயாளிகளும்

[*2023 அக்டோபர் 11*

சிகிச்சை பெறுகின்றனர். திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் நவீன சமையல் கூடம் செயல்பட்டு வருகிறது. தற்சமயம் இம்மருத்துவமனையிலுள்ள உள்நோயாளிகளுக்கு உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

93—

மருத்துவமனை

வினா எண் 15272—திரு. A. நல்லதம்பி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் முதலமைச்சரின் விரிவான காப்பீட்டு திட்டத்தின் (*CMCHIS*) 30 ஆக உள்ள படுக்கை எண்ணிக்கையை 100 படுக்கையாக உயர்த்திட அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) *திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் அரசு மருத்துவமனை 440 படுக்கை வசதிகள் மற்றும் பல்வேறு சிறப்பு பிரிவுகளுடன் செயல்பட்டு வருகிறது. இங்கு நாளொன்றுக்கு சராசரியாக 2,423 வெளிநோயாளிகளும், 237 உள்நோயாளிகளும் சிகிச்சை பெறுகின்றனர். இம்மருத்துவமனையில் முதலமைச்சரின் விரிவான காப்பீட்டு திட்டப் பிரிவு 30 படுக்கை வசதிகளுடன் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. மாதமொன்றுக்கு சராசரியாக 150 நோயாளிகள் முதலமைச்சரின் விரிவான காப்பீடு திட்டத்தின்மூலம் சிகிச்சை பெறுகின்றனர். மேலும், தற்போது மருத்துவமனை கட்டமைப்புகள் தேசிய நலக் குழுமத்தின்மூலம் சுமார் 56 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட உள்ளது. புதிய கட்டமைப்புகள் பயன்பாட்டிற்கு வரும்போது தேவைக்கேற்ப கூடுதல் படுக்கை வசதிகள் முதலமைச்சரின் விரிவான காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் செயல்பாட்டிற்காக ஏற்படுத்தப்படும் என்று தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.*

2023 அக்டோபர் 11]

94—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 15317—திரு. இரா. அருள்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாவட்டம், அயோதியாபட்டிணத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

அயோதியாபட்டிணம் கிராமத்தில் துணை சுகாதார நிலையம் ஒன்று இயங்கி வருகிறது.

அயோதியாபட்டிணம் கிராமத்திலிருந்து 1.5 கிலோ மீட்டர் தொலைவில் மாசிநாயக்கன்பட்டி ஆரம்ப சுகாதார நிலையமும், 6 கிலோ மீட்டர் தொலைவில் காரிப்பட்டி மற்றும் வலசையூர் ஆரம்ப சுகாதார நிலையங்களும் செயல்பட்டு வருவதால், சேலம் மாவட்டம் ஆத்தூர் சுகாதார மாவட்டம் அயோதியாபட்டிணம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள அயோதியாபட்டிணம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

95—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 15442—திரு. சி. மகேந்திரன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மடத்துக்குளம் தொகுதி, உடுமலை ஒன்றியம், பெரியபாப்பனூத்து ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

பெரியபாப்பனூத்து ஊராட்சியிலிருந்து 6 கிலோ மீட்டர் தொலைவில் எரிசனம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதால், திருப்பூர் மாவட்டம் உடுமலைபேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பெரியபாப்பனூத்து ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

96—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 15446—திரு. சி. மகேந்திரன்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மடத்துக்குளம் தொகுதி, உடுமலை ஊராட்சி ஒன்றியம், கொடுங்கியம் ஊராட்சி, கொடுங்கியம் ஆதி திராவிடர் காலனியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

2023 அக்டோபர் 11]

கொடுங்கியம் கிராமத்திலிருந்து 2 கிலோ மீட்டர் தொலைவில் எரிசனம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதால் திருப்பூர் மாவட்டம், உடுமலைபேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் கொடுங்கியம் ஆதி திராவிடர் காலனியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

97—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 15448—திரு. சி. மகேந்திரன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மடத்துக்குளம் தொகுதி, உடுமலை ஊராட்சி ஒன்றியம், தேவனூர்புதூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் இலக்கின்படி 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

தேவனூர்புதூர் கிராமத்திலிருந்து 2 கிலோ மீட்டர் தொலைவில் செல்லப்பம்பாளையம் ஆரம்ப சுகாதார நிலையமும், 4 கிலோ மீட்டர் தொலைவில் எரிசனம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருவதால், திருப்பூர் மாவட்டம் உடுமலைபேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள தேவனூர்புதூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

98—

மருத்துவமனை

வினா எண் 15464—திரு. ஈ. ராஜா: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரன்கோவில் தொகுதி, குருவிகுளம் ஆரம்ப சுகாதார நிலையத்தை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி மாவட்டத்தில் உள்ள குருவிகுளம் ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கை வசதிகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையமாக இயங்கி வருகிறது. குருவிகுளம் ஒன்றியத்தில் களிங்கப்பட்டி, சையமாலை மற்றும் திருவெங்கடம் கூடுதல் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களும் இயங்கி வருகின்றன. மேலும், குருவிகுளத்திலிருந்து 16 கி.மீ. அருகில் 186 படுக்கை மற்றும் அனைத்து வசதிகளுடன்கூடிய சங்கரன்கோவில் அரசு வட்ட மருத்துவமனை சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இங்கு நாளொன்றுக்கு சராசரியாக 880 வெளிநோயாளிகளும், 112 உள்நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகிறார்கள். எனவே, குருவிகுளம் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தை பொது மருத்துவமனையாக தரம் உயர்த்த தற்சமயம் அவசியம் எழவில்லை.

99—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 15467—திருமதி கு. மரகதம் குமரவேல்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2023 அக்டோபர் 11]

(அ) மதுராந்தகம் தொகுதி, அச்சிறுபாக்கம் ஊராட்சி ஒன்றியம், எலப்பாக்கம் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் இலக்கின்படி 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் தொகுதி, அச்சிறுபாக்கம் ஊராட்சி ஒன்றியம், எலப்பாக்கம் ஊராட்சியில் ஆனைகுன்றம் துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. ஆனைகுன்றம் கிராமத்திலிருந்து 3 கிலோ மீட்டர் தொலைவில் ராமபுரம் மற்றும் லா.எண்டத்தூர் ஆகிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருவதால், செங்கல்பட்டு மாவட்டம் அச்சிறுப்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்தில் எலப்பாக்கம் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

100—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 15468—திருமதி கு. மரகதம் குமரவேல்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் தொகுதி, மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியம் மற்றும் அச்சிறுபாக்கம் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள கிராமங்களில் செயல்படும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களை தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியத்தில் கீழ்க்கண்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன:—

1. ஜி.ஜி.பேட்டை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம்

2. நல்லாமூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம்

3. படாளம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம்

4. இரும்பேடு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம்

5. ஜமீன்எண்டத்தூர் பிரதான/மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம்

செங்கல்பட்டு மாவட்டம் அச்சிறுபாக்கம் ஊராட்சி ஒன்றியத்தில் கீழ்க்கண்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன:—

1. அச்சிறுபாக்கம் பிரதான / மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம்

2. ஒரத்தி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம்

3. ராமபுரம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம்

4. லா.எண்டத்தூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம்

ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்தில் இயங்கி வரும் ஆரம்ப சுகாதார நிலையங்களில், ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தினை தரம் உயர்த்துவது என்பது அரசின் கொள்கை முடிவாகும். அரசாணை (நிலை) எண் 52, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 21-2-2014-ன்படி மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியத்தில் ஜமீன்எண்டத்தூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கை வசதிகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தப்பட்டு அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது.

2023 அக்டோபர் 11]

அரசாணை (நிலை) எண் 106, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 7-6-2002-ன்படி, அச்சிறுபாக்கம் ஊராட்சி ஒன்றியத்தில் அச்சிறுபாக்கம் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கை வசதிகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தப்பட்டு அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது.

எனவே, செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் மற்றும் அச்சிறுபாக்கம் ஊராட்சி ஒன்றியங்களில் செயல்பட்டு வரும் ஆரம்ப சுகாதார நிலையங்களை தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

பட்டியல்-29

1—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 17540—திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சாத்தான்குளம் வட்டம், அரசூர், நடுவக்குறிச்சி, புத்தன்தருவை, கொம்மடிக்கோட்டை ஆகிய ஊராட்சிகளை உள்ளடக்கி, புதியதாக தட்டார்மடத்தில் தரம் உயர்த்தப்பட்ட 30 படுக்கைகள் கொண்ட புதிய அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

[*2023 அக்டோபர் 11*

தட்டார்மடம் கிராமத்திலிருந்து 4 கிலோ மீட்டர் தொலைவில் முதலூர் ஆரம்ப சுகாதார நிலையமும், 5 கிலோ மீட்டர் தொலைவில் படுக்கப்பத்து ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருவதால், தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் ஊராட்சி ஒன்றியத்தில் சாத்தான்குளம் வட்டம், அரசூர், நடுவக்குறிச்சி, புத்தன்தருவை மற்றும் கொம்மடிக்கோட்டை ஆகிய ஊராட்சிகளை உள்ளடக்கி, தட்டார்மடம் கிராமத்தில் 30 படுக்கைகள் கொண்ட புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

2—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 17577—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி மாவட்டம், காரிமங்கலம் ஊராட்சி ஒன்றியம், மல்லிக்குட்டை ஊராட்சி, இராமியம்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

இராமியம்பட்டி கிராமத்திலிருந்து 3 கிலோ மீட்டர் தொலைவில் கோணங்கிநாயக்கனஅள்ளி ஆரம்ப சுகாதார நிலையமும், 4 கிலோ மீட்டர் தொலைவில் பெரியாம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருவதால், தருமபுரி மாவட்டம், காரிமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள இராமியம்பட்டி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

2023 அக்டோபர் 11]

3—

மருத்துவமனை

வினா எண் 17638—திரு. செ. கிருஷ்ணமுரளி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கடையநல்லூர் தொகுதி, செங்கோட்டை வட்டம், சாம்பவர்வடகரையில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை பொது மருத்துவமனையாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடையநல்லூர் தொகுதி, செங்கோட்டை வட்டம், சாம்பவர்வடகரையில் கூடுதல் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

மேலும், சாம்பவர்வடகரையிலிருந்து 16 கி.மீ.-ல் 557 படுக்கை வசதிகள் கொண்ட தென்காசி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை மற்றும் 13 கி.மீ.-ல் 107 படுக்கை வசதிகள் கொண்ட கடையநல்லூர் அரசு வட்ட மருத்துவமனை சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. எனவே, சாம்பவர்வடகரை கூடுதல் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்த தற்சமயம் அவசியம் எழவில்லை.

4—

தரைத்தளம்

வினா எண் 17640—திரு. செ. கிருஷ்ணமுரளி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கடையநல்லூர் தொகுதி, செங்கோட்டை வட்டம், இலத்தூர் ஆரம்ப சுகாதார நிலையத்தின் முன் பகுதிகளில்

[*2023 அக்டோபர் 11*

சிமெண்ட் கற்களால் ஆன தரைத்தளம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி மாவட்டம், செங்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் இலத்தூர் பிரதான/மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

2021-2022 ஆம் நிதியாண்டில் இலத்தூர் பிரதான/மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தின் முன்பகுதியில் சிமெண்ட் கற்களால் ஆன தரைத்தளம் ரூ.10.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் பொதுப் பணித் துறைமூலம் அமைக்கப்பட்டுள்ளது.

5—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 17694—திரு. சீ. கதிரவன்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மண்ணச்சநல்லூர் தொகுதி, தீராம்பாளையம் ஊராட்சி, செங்குளிப்பட்டியில் இயங்கிவரும் ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் இலக்கின்படி *30,000* மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படுகின்றன.

2023 அக்டோபர் 11]

செங்குளிப்பட்டி கிராமத்திலிருந்து 7 கிலோ மீட்டர் தொலைவில் மண்ணச்சநல்லூர் அரசு மருத்துவமனை செயல்பட்டு வருவதால், திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள செங்குளிப்பட்டி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

6—

சித்த மருத்துவப் பிரிவு

வினா எண் 17736—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, மஞ்சநாயக்கனஅள்ளி ஊராட்சிக்குட்பட்ட பெண்ணாகரம் தொகுதி பெரியகடமடை கிராமத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் சித்த மருத்துவப் பிரிவை தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டத்தில், தற்போது 22 இந்திய மருத்துவப் பிரிவுகளும், 15 நலவாழ்வு மையங்களும் ஆக மொத்தம் 37 இந்திய மருத்துவப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. இதில் செயல்பட்டு வரும் 26 சித்த பிரிவுகள் இம்மாவட்டத்தில் தற்போது உள்ள சித்த மருத்துவச் சிகிச்சைக்கான தேவையைப் பூர்த்தி செய்ய போதுமானதாக உள்ளன. எனவே, தருமபுரி மாவட்டத்தில் மஞ்சநாயக்கனஅள்ளி ஊராட்சிக்குட்பட்ட பெண்ணாகரம் தொகுதி பெரியகடமடை கிராமத்தில் இயங்கி வரும் ஆரம்ப சுகாதார நிலையத்தில் புதிதாக சித்த மருத்துவப் பிரிவை துவங்குவதற்கான தேவை தற்போது எழவில்லை.

7—

சுகாதார நிலையம்

வினா எண் 17739—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[*2023 அக்டோபர் 11*

(அ) பெண்ணாகரம் தொகுதி, பிக்கிலி பகுதியில் இயங்கிவரும் ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தப்பட்ட சுகாதார நிலையமாக தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியத்தில் பிக்கிலி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

அரசாணை (நிலை) எண் 43, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 3-2-2011-ன்படி பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியத்தில், ஏரியூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கை வசதி கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. தற்போது பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியத்திலிருந்து ஏரியூர் என்ற புதிய ஊராட்சி ஒன்றியம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. எனவே, பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியத்தில் தற்போது மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் எதுவும் செயல்படவில்லை. இனிவருங்காலங்களில் பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியத்தில் தகுதிவாய்ந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்த பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

8—

சுகாதார நிலையம்

வினா எண் 17740—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, பேகாரஅள்ளி ஊராட்சியில் இயங்கி வரும் ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தப்பட்ட சுகாதார நிலையமாக தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 அக்டோபர் 11]

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், காரிமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் பேகாரஅள்ளி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் இயங்கி வரும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தினை தரம் உயர்த்துவது அரசின் கொள்கை முடிவாகும். காரிமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில், காரிமங்கலம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் அரசாணை (நிலை) எண் 210, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 24-10-2002-ன்படி ஏற்கெனவே 30 படுக்கை வசதிகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தப்பட்டு அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருவதால், இதே ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பேகாரஅள்ளி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தப்பட்ட சுகாதார நிலையமாக தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

9—

சுகாதார நிலையம்

வினா எண் 17741—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, பெரும்பாலை பகுதியில் இயங்கி வரும் ஆரம்ப சுகாதார நிலையத்தை சித்த மருத்துவப் பிரிவுடன்கூடிய மேம்படுத்தப்பட்ட சுகாதார நிலையமாக தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டத்தில் தற்போது 22 இந்திய மருத்துவப் பிரிவுகளும், 15 நலவாழ்வு மையங்களும்

[*2023 அக்டோபர் 11*

ஆகமொத்தம் 37 இந்திய மருத்துவப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. இதில் 26 சித்த மருத்துவப் பிரிவுகளாகும். இவை இம்மாவட்டத்தில் தற்போது உள்ள சித்த மருத்துவ சிகிச்சைக்கான தேவையை பூர்த்தி செய்ய போதுமானதாக உள்ளன. எனவே, தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெரும்பாலை பகுதியில் புதிதாக சித்த மருத்துவப் பிரிவைத் துவங்குவதற்கான தேவை தற்போது எழவில்லை.

10—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 17746—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, நாகதாசம்பட்டி பகுதியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தப்பட்ட சுகாதார நிலையமாக தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியத்தில், நாகதாசம்பட்டி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

அரசாணை (நிலை) எண் 43, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 3-2-2011-ன்படி பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியத்தில், ஏரியூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கை வசதி கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. தற்போது பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியத்திலிருந்து ஏரியூர் என்ற புதிய ஊராட்சி ஒன்றியம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. எனவே, பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியத்தில் தற்போது மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் எதுவும் செயல்படவில்லை. இனிவருங்காலங்களில்

2023 அக்டோபர் 11]

பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியத்தில் தகுதிவாய்ந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்த பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

11—

சுகாதார நிலையம்

வினா எண் 17747—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, பாப்பாரப்பட்டி பேரூராட்சியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தப்பட்ட சுகாதார நிலையமாக தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியத்தில் பாப்பாரப்பட்டி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. அரசாணை (நிலை) எண் 43, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 3-2-2011-ன்படி, பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியத்தில், ஏரியூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கை வசதி கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. தற்போது பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியத்திலிருந்து ஏரியூர் என்ற புதிய ஊராட்சி ஒன்றியம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. எனவே, பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியத்தில் தற்போது மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் எதுவும் இல்லை.

12—

சித்த மருத்துவப் பிரிவு

வினா எண் 17748—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, புலிக்கரை ஊராட்சிக்குட்பட்ட புலிக்கரை கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையத்தில் சித்த மருத்துவப் பிரிவு துவங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டத்தில் தற்போது 22 இந்திய மருத்துவப் பிரிவுகளும், 15 நல்வாழ்வு மையங்களும் ஆகமொத்தம் 37 இந்திய மருத்துவப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. இதில் செயல்பட்டு வரும் 26 சித்த மருத்துவப் பிரிவுகள் இம்மாவட்டத்தில் தற்போது உள்ள சித்த மருத்துவ சிகிச்சைக்கான தேவையைப் பூர்த்தி செய்ய போதுமானதாக உள்ளன. எனவே, தருமபுரி மாவட்டத்தில் பெண்ணாகரம் தொகுதி புலிக்கரை ஊராட்சிக்குட்பட்ட புலிக்கரை கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையத்தில் புதிதாக சித்த மருத்துவப் பிரிவைத் துவங்குவதற்கான தேவை தற்போது எழவில்லை.

13—

சித்த மருத்துவப் பிரிவு

வினா எண் 18114—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, பிக்கிலி ஊராட்சிக்குட்பட்ட பிக்கிலி கிராமத்தில், இயங்கி வரும் ஆரம்ப சுகாதார நிலையத்தில் சித்த மருத்துவப் பிரிவு துவங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டத்தில் தற்போது செயல்பட்டு வரும் 26 சித்த மருத்துவப் பிரிவுகள் இம்மாவட்டத்தில் தற்போது உள்ள சித்த மருத்துவ சிகிச்சைக்கான தேவையைப்

2023 அக்டோபர் 11]

பூர்த்தி செய்ய போதுமானதாக உள்ளன. எனவே, தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பிக்கிலி கிராமத்தில் இயங்கி வரும் ஆரம்ப சுகாதார நிலையத்தில் சித்த மருத்துவப் பிரிவை துவங்குவதற்கான தேவை தற்போது எழவில்லை.

14—

சித்த மருத்துவப் பிரிவு

வினா எண் 18117—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி மாவட்டத்தில் பெண்ணாகரம் தொகுதி, பெரும்பாலை பகுதியில் இயங்கி வரும் ஆரம்ப சுகாதார நிலையத்தை சித்த மருத்துவப் பிரிவுடன்கூடிய மேம்படுத்தப்பட்ட சுகாதார நிலையமாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டத்தில் தற்போது 22 இந்திய மருத்துவப் பிரிவுகளும், 15 நலவாழ்வு மையங்களும் ஆகமொத்தம் 37 இந்திய மருத்துவப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. இதில் செயல்பட்டு வரும் 26 சித்த மருத்துவப் பிரிவுகள் இம்மாவட்டத்தில் தற்போது உள்ள சித்த மருத்துவ சிகிச்சைக்கான தேவையைப் பூர்த்தி செய்ய போதுமானதாக உள்ளன. எனவே, தருமபுரி மாவட்டத்தில் பெண்ணாகரம் தொகுதி கூத்தப்பாடி ஊராட்சிக்குட்பட்ட ஒகேனக்கல் கிராமத்தில் இயங்கி வரும் ஆரம்ப சுகாதார நிலையத்தில் புதிதாக சித்த மருத்துவப் பிரிவை துவங்குவதற்கான தேவை தற்போது எழவில்லை.

15—

சித்த மருத்துவப் பிரிவு

வினா எண் 18124—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, மஞ்சாரஅள்ளி ஊராட்சிக்குட்பட்ட செல்லமுடி கிராமத்தில் இயங்கி வரும் ஆரம்ப சுகாதார நிலையத்தில் புதியதாக சித்த மருத்துவப் பிரிவு துவங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டத்தில் தற்போது 22 இந்திய மருத்துவப் பிரிவுகளும், 15 நலவாழ்வு மையங்களும் ஆகமொத்தம் 37 இந்திய மருத்துவப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. இதில் செயல்பட்டு வரும் 26 சித்த மருத்துவப் பிரிவுகள் இம்மாவட்டத்தில் தற்போது உள்ள சித்த மருத்துவ சிகிச்சைக்கான தேவையைப் பூர்த்தி செய்ய போதுமானதாக உள்ளன. எனவே, தருமபுரி மாவட்டம் பெண்ணாகரம் தொகுதி மஞ்சாரஅள்ளி ஊராட்சிக்குட்பட்ட செல்லமுடி கிராமத்தில் இயங்கி வரும் ஆரம்ப சுகாதார நிலையத்தில் சித்த மருத்துவப் பிரிவை துவங்குவதற்கான தேவை தற்போது எழவில்லை.

16—

சித்த மருத்துவப் பிரிவு

வினா எண் 18125—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, கூத்தப்பாடி ஊராட்சிக்குட்பட்ட ஒகேனக்கல் கிராமத்தில் இயங்கி வரும் ஆரம்ப சுகாதார நிலையத்தில் சித்த மருத்துவப் பிரிவு துவங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 அக்டோபர் 11]

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டத்தில் தற்போது 22 இந்திய மருத்துவப் பிரிவுகளும், 15 நலவாழ்வு மையங்களும் ஆக மொத்தம் 37 இந்திய மருத்துவப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. இதில் செயல்பட்டு வரும் 26 சித்த மருத்துவப் பிரிவுகள் இம்மாவட்டத்தில் தற்போது உள்ள சித்த மருத்துவ சிகிச்சைக்கான தேவையைப் பூர்த்தி செய்ய போதுமானதாக உள்ளன. எனவே, தருமபுரி மாவட்டத்தில் பெண்ணாகரம் தொகுதி கூத்தப்பாடி ஊராட்சிக்குட்பட்ட ஒகேனக்கல் கிராமத்தில் இயங்கி வரும் ஆரம்ப சுகாதார நிலையத்தில் புதிதாக சித்த மருத்துவப் பிரிவை துவங்குவதற்கான தேவை தற்போது எழவில்லை.

17—

கூடுதல் மருத்துவ வசதிகள்

வினா எண் 18259—திரு. இ.மா. மான்ராஜ்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வத்திராயிருப்பு அரசு பொது மருத்துவமனையில் X-Ray, CT Scan மற்றும் கூடுதல் படுக்கை வசதி ஏற்படுத்திட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு அரசு மருத்துவமனை 92 படுக்கை வசதிகள் கொண்ட வட்டம் சாரா அரசு மருத்துவமனையாகும். இங்கு நாளொன்றிற்கு சராசரியாக 28 உள்நோயாளிகளும் மற்றும் 387 வெளிநோயாளிகளும் சிகிக்சை பெற்று வருகின்றனர். மேலும், முழுமையான ஆய்வக வசதி, இசிஜி, எக்ஸ்ரே, USG ஸ்கேன் போன்ற வசதிகளும், போதிய அளவில் மருத்துவ உபகரணங்களும் உள்ளன. சிடி ஸ்கேன் தற்போது மாவட்ட அரசு தலைமை மருத்துமனைகளுக்கும் தேவையின்

அடிப்படையில் சில பெரிய வட்ட மருத்துவமனைகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது. இம்மருத்துவமனையில் ஒப்பளிக்கப்பட்ட படுக்கை எண்ணிக்கையைவிட குறைவான எண்ணிக்கையிலேயே உள்நோயாளிகள் மற்றும் குறைவான எண்ணிக்கையிலேயே வெளிநோயாளிகள் சிகிச்சை பெற்று வருவதால் கூடுதல் படுக்கை வசதி ஏற்படுத்த தற்சமயம் அவசியம் எழவில்லை. இங்குள்ள வசதிகளைப் பயன்படுத்தி மாதமொன்றுக்கு சராசரியாக 22 எக்ஸ்ரே, 18 USG ஸ்கேன் ஆகியவை மேற்கொள்ளப்படுகின்றன. வத்திராயிருப்பு அரசு மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளில் சிடி ஸ்கேன் தேவைப்படும் நோயாளிகள் மிக மிகக் குறைவாகவே உள்ளதால் சிடி ஸ்கேன் வழங்க தற்சமயம் அவசியம் எழவில்லை. மேலும், இம்மருத்துவமனையில் தற்போதுள்ள மருத்துவம், மருத்துவம் சாரா மற்றும் இதர பணியாளர்கள் மற்றும் இதர வசதிகளைக் கொண்டு இப்பகுதி மக்களுக்குச் சிறப்பான சேவை வழங்கி வருகிறது.

18—

தரமுயர்த்துதல்

வினா எண் 18323—திரு. க. செல்வராஜ்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் வடக்கு தொகுதியில் உள்ள கந்தசாமி செட்டியார் மகப்பேறு மருத்துவமனை, வேலம்பாளையம், பெருமாநல்லூர் ஆரம்ப சுகாதார நிலையங்களை தரம் உயர்த்தித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் வடக்கு தொகுதியில் உள்ள கந்தசாமி செட்டியார் மகப்பேறு மருத்துவமனை, திருப்பூர் மாநகராட்சியின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்படுகிறது. இம்மருத்துவமனையிலிருந்து

2023 அக்டோபர் 11]

5 கி.மீ.-ல் அனைத்து உயர்தர வசதிகளையும் உள்ளடக்கிய திருப்பூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

திருப்பூர் வடக்கு தொகுதியில் உள்ள வேலம்பாளையத்தில் அரசு மருத்துவமனை ஏற்படுத்துவதற்காக கட்டடடப் பணிகளுக்காக ரூ.27.00 கோடி நிதி மற்றும் மருத்துவ உபகரணங்களுக்காக நிதி ரூ.4,88,97,000/– ஒதுக்கீடு செய்யப்பட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திருப்பூர் வடக்கு தொகுதியில் உள்ள பெருமாநல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து 12 கி.மீ.-ல் படுக்கை வசதிகள் கொண்ட அவினாசி வட்ட அரசு மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. எனவே, திருப்பூர் வடக்கு தொகுதியில் உள்ள கந்தசாமி செட்டியார் மகப்பேறு மருத்துவமனை மற்றும் பெருமாநல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்த அவசியம் எழவில்லை.

19—

CT **ஸ்கேன் வசதி**

வினா எண் 18325—திரு. க. செல்வராஜ்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *திருப்பூர் மாவட்டம், ஊத்துக்குளி அரசு மருத்துவமனையில் CT ஸ்கேன் வசதி ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) *திருப்பூர் மாவட்டம், ஊத்துக்குளி அரசு மருத்துவமனை 60 படுக்கை வசதிகள் கொண்ட வட்ட அரசு மருத்துவமனையாகச் செயல்பட்டு வருகிறது. இங்கு நாளொன்றுக்கு சராசரியாக 133 வெளிநோயாளிகள் மற்றும் 3 உள்நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகிறார்கள். மேலும், முழுமையான ஆய்வக வசதி, இசிஜி, எக்ஸ்ரே, USG ஸ்கேன் போன்ற வசதிகளும்,*

[*2023 அக்டோபர் 11*

போதிய அளவில் மருத்துவ உபகரணங்களும் உள்ளன. சிடி ஸ்கேன் தற்போது மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளுக்கும், தேவையின் அடிப்படையில் சில பெரிய வட்ட மருத்துவமனைகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது. ஊத்துக்குளி அரசு மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளில் சிடி ஸ்கேன் தேவைப்படும் நோயாளிகள் அருகில் உள்ள திருப்பூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரைக்கப்படுகிறார்கள்.

20—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 18332—திரு. இ. கருணாநிதி: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லாவரம் தொகுதி, திரிசூலத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) *30,000* மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. திரிசூலம் கிராமத்தில் துணை சுகாதார நிலையம் ஒன்று இயங்கி வருகிறது. திரிசூலம் கிராமத்திலிருந்து *3* கிலோ மீட்டர் தொலைவில் ஜமீன் பல்லாவரம் மற்றும் கீழ்கட்டளை நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களும், *3* கிலோ மீட்டர் தொலைவில் மூவரசம்பேட்டை ஆரம்ப சுகாதார நிலையமும், *4* கிலோ மீட்டர் தொலைவில் ஜமீன் ராயப்பேட்டை (குளக்கரை) நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையமும், *6* கிலோ மீட்டர் தொலைவில் பம்மல் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையமும், *6.5* கிலோ மீட்டர் தொலைவில் பொழிச்சலூர் ஆரம்ப சுகாதார நிலையமும், *7* கிலோ மீட்டர் தொலைவில் திருநீர்மலை ஆரம்ப

2023 அக்டோபர் 11]

சுகாதார நிலையமும், 8 கிலோ மீட்டர் தொலைவில் தாம்பரம் அரசு மருத்துவமனையும் செயல்பட்டு வருவதால், செங்கல்பட்டு மாவட்டம், புனித தோமையார் மலை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள திரிசூலம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

21—

அலுவலகம்

வினா எண் 18371—திரு. பி. அய்யப்பன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) உசிலம்பட்டி தொகுதி, ஏழுமலை, தொட்டப்பநாயக்கனூர், செல்லம்பட்டி, T.கல்லுப்பட்டி, கள்ளிக்குடி, செக்காணூரணி (Block PHC) மற்றும் திருமங்கலம், பேரையூர், உசிலம்பட்டி (GH) ஆகிய பகுதிகளை உள்ளடக்கி உசிலம்பட்டியை தலைமையிடமாக கொண்டு துணை இயக்குநர் சுகாதார பணிகள் அலுவலகம் (DDHS) அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரையை தலைமையிடமாக கொண்டு உசிலம்பட்டியையும் உள்ளடக்கி மதுரை சுகாதார மாவட்டம் இயங்கி வருகிறது.

அலங்காநல்லூர்,செல்லம்பட்டி,கள்ளிக்குடி,கொட்டாம்பட்டி, மதுரை கிழக்கு, மதுரை மேற்கு, மேலூர், சேடப்பட்டி, T.கல்லுப்பட்டி, T.வாடிப்பட்டி, திருமங்கலம், திருப்பரங்குன்றம் மற்றும் உசிலம்பட்டி ஆகிய 13 வட்டங்களைக் கொண்டு மதுரை சுகாதார மாவட்டம் சிறப்பாக இயங்கி வருவதால், உசிலம்பட்டியை தலைமையிடமாகக் கொண்டு புதிதாக துணை இயக்குநர் சுகாதார பணிகள் அலுவலகம் அமைத்திட சாத்தியமில்லை.

[*2023 அக்டோபர் 11*

22—

சுற்றுச் சுவர்

வினா எண் 18372—திரு. பி. அய்யப்பன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், தொட்டப்பநாயக்கனூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் சுற்றுச் சுவர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) *மதுரை மாவட்டம், உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில், தொட்டப்பநாயக்கனூர் பிரதான/மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.*

தொட்டப்பநாயக்கனூர் பிரதான/மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் தெற்கு பக்கம் சுற்றுச் சுவர் உள்ளது. மீதமுள்ள வடக்கு, மேற்கு மற்றும் கிழக்கு பக்கங்களில் சுற்றுச் சுவர் இல்லை.

மீதமுள்ள வடக்கு, மேற்கு மற்றும் கிழக்கு பக்கங்களில் சுற்றுச் சுவர் கட்ட பொதுப் பணித் துறையிடமிருந்து மதிப்பீடு பட்டியல் கோரப்பட்டுள்ளது. தற்பொழுது, மூன்று பக்கங்களுக்கும், சுற்றுச் சுவர் கட்ட நிதி ஒதுக்கீடு இல்லை.

23—

சுற்றுச் சுவர்

வினா எண் 18373—திரு. பி. அய்யப்பன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், விக்கிரமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் சுற்றுச் சுவர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

2023 அக்டோபர் 11]

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில், விக்கிரமங்கலம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

விக்கிரமங்கலம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் மேற்கு பக்கம் சுற்றுச் சுவர் உள்ளது. மீதமுள்ள வடக்கு, தெற்கு மற்றும் கிழக்கு பக்கங்களில் சுற்றுச் சுவர் இல்லை.

மீதமுள்ள வடக்கு, தெற்கு மற்றும் கிழக்கு பக்கங்களில் சுற்றுச் சுவர் கட்ட பொதுப் பணித் துறையிடமிருந்து மதிப்பீடு பட்டியல் கோரப்பட்டுள்ளது. தற்பொழுது, மூன்று பக்கங்களுக்கும், சுற்றுச் சுவர் கட்ட நிதி ஒதுக்கீடு இல்லை.

24—

சுற்றுச் சுவர்

வினா எண் 18374—திரு. பி. அய்யப்பன்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், செல்லம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தில் சுற்றுச் சுவர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில், செல்லம்பட்டி பிரதான/மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

[*2023 அக்டோபர் 11*

செல்லம்பட்டி பிரதான/மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் வடக்கு பக்கம் 315 அடி முழுமையாகவும், கிழக்கு பக்கம் 200 அடி பகுதியாகவும் மற்றும் மேற்கு பக்கம் 180 அடி பகுதியாகவும் சுற்றுச் சுவர் உள்ளது.

மீதமுள்ள கிழக்கு பக்கம் 299 அடி பகுதியாகவும், மேற்கு பக்கம் 200 அடி பகுதியாகவும் மற்றும் தெற்கு பக்கம் 315 அடி முழுமையாகவும் சுற்றுச் சுவர் இல்லை.

மேற்கண்ட விடுப்பட்ட பகுதிகளுக்கு சுற்றுச் சுவர் கட்ட பொதுப் பணித் துறையிடமிருந்து மதிப்பீடு பட்டியல் கோரப்பட்டுள்ளது. விடுபட்ட பகுதிகள் அனைத்திற்கும் சுற்றுச் சுவர் கட்ட தற்போது நிதி ஒதுக்கீடு இல்லை.

25—

சுற்றுச் சுவர்

வினா எண் 18375—திரு. பி. அய்யப்பன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி நகராட்சியில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் சுற்றுச் சுவர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் உசிலம்பட்டி நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. உசிலம்பட்டி நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் நான்கு பக்கமும் சுற்றுச் சுவர் உள்ளது.

2023 அக்டோபர் 11]

26—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 18727—திரு. பூண்டி கே. கலைவாணன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *திருவாரூர் தொகுதி, திருவாரூர் ஒன்றியம், புலிவலம் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) *30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.*

புலிவலம் ஊராட்சியில் துணை சுகாதார நிலையம் ஒன்று இயங்கி வருகிறது. புலிவலம் ஊராட்சியிலிருந்து 6 கிலோ மீட்டர் தொலைவில் அடியக்கமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையமும், 3 கிலோ மீட்டர் தொலைவில் விஜயபுரம் அரசு மருத்துவமனையும் செயல்பட்டு வருவதால், திருவாரூர் மாவட்டம், திருவாரூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள புலிவலம் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

27—

கட்டடம்

வினா எண் 18856—திரு. பூண்டி கே. கலைவாணன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *திருவாரூர் தொகுதி, திருவாரூர் நகராட்சி, விஜயபுரம் அரசு தாய் சேய் மருத்துவமனைக்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் தொகுதி, திருவாரூர் நகராட்சி, விஜயபுரம் அரசு மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல மருத்துவமனைக்கு ரூ.6.00 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்ட 18-4-2023 அன்று நடைபெற்ற மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் 2023-2024 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின்போது மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு புதிய கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

28—

கட்டடம்

வினா எண் 21062—திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், மேல்சித்தாமூர் கிராமத்தில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதியதாக OP கட்டடம் மற்றும் மருத்துவர்கள், செவிலியர்கள் தங்குவதற்கு கட்டடம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், வல்லம் ஊராட்சி ஒன்றியத்தில், மேல்சித்தாமூர் பிரதான/மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

மேல்சித்தாமூர் பிரதான/மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் புறநோயாளிகள் பிரிவு நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. எனவே, புதியதாக புறநோயாளிகள் பிரிவு கட்டடம் கட்ட அவசியம் எழவில்லை.

2023 அக்டோபர் 11]

மேல்சித்தாமூர் பிரதான/மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் 2 செவிலியர் குடியிருப்புகள் பயன்பாட்டில் உள்ளன. மருத்துவர் குடியிருப்பு மட்டும் பழுதடைந்த நிலையில் உள்ளது. மருத்துவர் குடியிருப்பு கட்ட தற்போது நிதி ஒதுக்கீடு எதுவும் இல்லாததால், அதனைக் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

29—

பிரேதப் பரிசோதனை கூடம்

வினா எண் 21071—திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) போளூர் வட்ட மருத்துவமனையில் உள்ள பிரேதப் பரிசோதனை கூடத்தை உடனடியாகச் செயல்பாட்டிற்குக் கொண்டு வர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் அரசு மருத்துவமனை, 78 படுக்கை வசதிகளுடன்கூடிய அரசு வட்ட மருத்துவமனையாகச் செயல்பட்டு வருகின்றது. நாளொன்றுக்கு சராசரியாக 1315 வெளிநோயாளிகளும், 38 உள்நோயாளிகளும் சிகிச்சை பெறுகின்றனர். இம்மருத்துவமனையில் பிரேதப் பரிசோதனை கூடம் தற்சமயம் செயல்பாட்டில் உள்ளது. மேலும், மாதமொன்றுக்கு சராசரியாக 5 முதல் 7 பிரேத பரிசோதனைகள் செய்யப்பட்டு வருகின்றன.

30—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 21073—திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[*2023 அக்டோபர் 11*

(அ) போளூர் சந்தவாசல் ஆரம்ப சுகாதார நிலையத்தை செயல்பாட்டிற்கு கொண்டு வர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 91, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 20-3-2018-ன்படி திருவண்ணாமலை மாவட்டம், போளூர் ஊராட்சி ஒன்றியத்தில் சந்தவாசல் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் தோற்றுவிக்கப்பட்டது. தேசிய ஊரக நல குழும நிதி உதவியின்கீழ் சந்தவாசல் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சொந்த கட்டடம் ரூ.60.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு 14-3-2022 அன்று முதல் பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

31—

தரமுயர்த்துதல்

வினா எண் 18375—திரு. டி.ஜெ. கோவிந்தராஜன்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்மிடிப்பூண்டி தொகுதி, கும்மிடிப்பூண்டி, கவரைப்பேட்டை ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்தில் கவரைப்பேட்டை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் இயங்கி வரும் ஆரம்ப சுகாதார நிலையங்களில், ஓர் ஆரம்ப

2023 அக்டோபர் 11]

சுகாதார நிலையத்தினை தரம் உயர்த்துதல் என்பது அரசின் கொள்கை முடிவாகும். அரசாணை (நிலை) எண் 52, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 21-2-2014-ன்படி, கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்தில் ஈகுவார்பாளையம் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்கெனவே, 30 படுக்கை வசதிகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தப்பட்டு அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. எனவே, இதே ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கவரைப்பேட்டை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

32—

தரமுயர்த்துதல்

வினா எண் 21461—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *குளச்சல் தொகுதியிலுள்ள சைமன் காலனி, துணை ஆரம்ப சுகாதார நிலையத்தை அனைத்து அடிப்படை வசதியுடன் ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்த அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) *மத்திய அரசின் இலக்கின்படி 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.*

[*2023 அக்டோபர் 11*

சைமன் காலனியில் துணை சுகாதார நிலையம் எதுவும் செயல்படவில்லை. சைமன் காலனி கிராம பஞ்சாயத்திலிருந்து 1 கிலோ மீட்டர் தொலைவில் குளச்சல் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையமும், 2 கிலோ மீட்டர் தொலைவில் குளச்சல் அரசு மருத்துவமனையும், 4 கிலோ மீட்டர் தொலைவில் சேனம்விளை அரசு மருத்துவமனையும் செயல்பட்டு வருவதால், கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் சுகாதார மாவட்டம் குருந்தன்கோடு ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள சைமன் காலனி கிராம பஞ்சாயத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

33—

குடியிருப்புகள்

வினா எண் 21513—திரு. N. அசோக்குமார்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஊமத்தநாடு ஊராட்சியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணிபுரியும் மருத்துவர்கள், செவிலியர்கள் உள்ளிட்ட பிற பணியாளர்களுக்கு குடியிருப்பு கட்ட அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) *தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில் ஊமத்தநாடு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.*

ஊமத்தநாடு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவர் குடியிருப்பு, செவிலியர் குடியிருப்பு மற்றும் பிற பணியாளர் குடியிருப்பு கட்ட தற்போது நிதி ஒதுக்கீடு இல்லை.

எனவே, ஊமத்தநாடு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவர் குடியிருப்பு, செவிலியர் குடியிருப்பு மற்றும் பிற பணியாளர் குடியிருப்பு கட்ட தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

2023 அக்டோபர் 11]

34—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 21514—திரு. N. அசோக்குமார்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், மணக்காடு ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) *மத்திய அரசின் இலக்கின்படி 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.*

மணக்காடு ஊராட்சியிலிருந்து 8 கிலோ மீட்டர் தொலைவில் பெருமகளூர் ஆரம்ப சுகாதார நிலையமும், பேராவூரணி அரசு மருத்துவமனையும் செயல்பட்டு வருவதால், தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மணக்காடு ஊராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

35—

அவசர சிகிச்சைப் பிரிவு

வினா எண் 21515—திரு. N. அசோக்குமார்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், அழகியநாயகிபுரம் ஊராட்சியில் உள்ள அழகியநாயகிபுரம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 24 மணி நேரமும் செயல்படக்கூடிய*

[*2023 அக்டோபர் 11*

நவீன அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்தி அதில் அவசர ஊர்தியுடன்கூடிய அவசர சிகிச்சைப் பிரிவையும் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், அழகியநாயகிபுரம் ஊராட்சியில் உள்ள அழகியநாயகிபுரம் ஆரம்ப சுகாதார நிலையம், 30 படுக்கை வசதிகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையமாகச் செயல்பட்டு வருகிறது.

சேதுபாவாசத்திரம் ஒன்றியத்திலேயே, குருவிகரம்பை, பெருமகளூர் மற்றும் உமதநாடு ஆகிய பகுதிகளில் கூடுதல் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன.

மேலும், அழகியநாயகிபுரத்திலிருந்து 14 கி.மீ.-ல் 70 படுக்கை வசதிகள் கொண்ட பேராவூரணி வட்ட அரசு மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. எனவே, பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், அழகியநாயகிபுரம் ஊராட்சியில் உள்ள அழகியநாயகிபுரம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 24 மணி நேரமும் செயல்படக்கூடிய நவீன அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்த தற்சமயம் அவசியம் எழவில்லை.

36—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 21565—திரு. எம்.சி. சண்முகையா: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, ஒட்டப்பிடாரம் ஒன்றியம், புளியம்பட்டி அருகே ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 அக்டோபர் 11]

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் இலக்கின்படி *30,000* மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. புளியம்பட்டி கிராமத்திலிருந்து *7* கிலோ மீட்டர் தொலைவில் சிங்கத்தான்குறிச்சி ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதால், தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி சுகாதார மாவட்டம், ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள புளியம்பட்டி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

37—

தரமுயர்த்துதல்

வினா எண் 22983—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, ஓகேனக்கல் சுற்றுலா தளத்தில் அமைந்துள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தப்பட்ட அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் தொகுதி, ஓகேனக்கல் பகுதியில் கூடுதல் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. மேலும், பெண்ணாகரம் தொகுதியிலேயே ஏரியூர் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

[*2023 அக்டோபர் 11*

மேலும், ஒகேனக்கல் பகுதியிலிருந்து 17 கி.மீ. தொலைவில் பெண்ணாகரம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை 152 படுக்கை வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. நாளொன்றுக்கு சராசரியாக 684 வெளிநோயாளிகளும், 91 உள்நோயாளிகளும் சிகிச்சை பெறுகின்றனர்.

எனவே, ஒகேனக்கல் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்த தற்சமயம் அவசியம் எழவில்லை.

38—

தரமுயர்த்துதல்

வினா எண் 23101—திரு. பூண்டி கே. கலைவாணன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாரூர் தொகுதி, கூத்தாநல்லூர் அரசு மருத்துவமனையை 24 மணிநேரம் செயல்படும் வட்ட மருத்துவமனையாக தரம் உயர்த்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், கூத்தாநல்லூர் அரசு மருத்துவமனை 12 படுக்கை வசதிகள் கொண்ட வட்ட மருத்துவமனையாகச் செயல்பட்டு வருகிறது. நாளொன்றுக்கு சராசரியாக 371 வெளிநோயாளிகளும், 11 உள்நோயாளிகளும் சிகிச்சை பெறுகின்றனர்.

இம்மருத்துவமனையில் உள்நோயாளிகள் பிரிவு கட்டடம், வெளிநோயாளிகள் பிரிவு கட்டடம், யுனானி மருத்துவப் பகுதி, அறுவை சிகிச்சைப் பகுதி, மகப்பேறு பிரிவு கட்டடம் மற்றும் 108 பிரிவு போன்ற வசதிகள் உள்ளன. மேலும், 1 குளிர்சாதன வசதியுடன்கூடிய அறுவை அரங்கு, மின்னாக்கி வசதி, குடிநீர் வசதி, சுற்றுச் சுவர் போன்ற வசதிகள் உள்ளன.

2023 அக்டோபர் 11]

இம்மருத்துவமனையிலிருந்து 12 கி.மீ.-ல் 354 படுக்கை வசதிகள் கொண்ட மன்னார்குடி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை மற்றும் 18 கி.மீ.-ல் அனைத்து உயர்தர வசதிகளையும் கொண்ட திருவாரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை சிறப்பாக இயங்கி வருகின்றன.

மேலும், இம்மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்ட படுக்கை எண்ணிக்கையைவிட குறைவான உள்நோயாளிகள் மற்றும் குறைந்த எண்ணிக்கையிலேயே வெளிநோயாளிகள் சிகிச்சைக்கு வருகின்றனர். எனவே, தற்போதுள்ள வசதிகளைக் கொண்டும், மருத்துவம், மருத்துவம் சாரா மற்றும் இதர பணியாளர்களைக் கொண்டும் இப்பகுதி மக்களுக்கு சிறப்பான சிகிச்சையை 24 மணிநேரமும் கூத்தாநல்லூர் அரசு வட்ட மருத்துவமனை வழங்கி வருகிறது.

39—

கட்டடம்

வினா எண் 23102—திரு. பூண்டி கே. கலைவாணன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாரூர் தொகுதி, விஜயபுரம் தாய்-சேய் நல மருத்துவமனையில் பழைய பழுதடைந்துள்ள கட்டடத்திற்கு பதிலாக புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், விஜயபுரம் அரசு மருத்துவமனை 40 படுக்கை வசதிகள் கொண்ட தாய்-சேய் நல மருத்துவமனையாகச் செயல்பட்டு வருகிறது. நாளொன்றுக்கு சராசரியாக 260 வெளிநோயாளிகளும், 36 உள்நோயாளிகளும் சிகிச்சை பெறுகின்றனர்.

இம்மருத்துவமனை போதுமான கட்டட வசதிகளுடன் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. மேலும், இங்குள்ள

[*2023 அக்டோபர் 11*

வசதிகளைக் கொண்டும், மருத்துவம், மருத்துவம் சாரா மற்றும் இதர பணியாளர்களைக் கொண்டும், மாதமொன்றுக்கு சராசரியாக 51 பிரசவங்களும், 35 அறுவை சிகிச்சை பிரசவங்களும் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், மாதமொன்றுக்கு சராசரியாக 7,284 ஆய்வக பரிசோதனை, 125 USG Scan *மற்றும் 209 இசிஜி ஆகியவை எடுக்கப்பட்டு வருகின்றன.*

திருவாரூர் தொகுதி, திருவாரூர் நகராட்சி, விஜயபுரம் அரசு மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல மருத்துவமனைக்கு ரூ.6.00 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்ட, 18-4-2023 அன்று நடைபெற்ற மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் 2023-2024 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின்போது மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு புதிய கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

40—

கட்டடம்

வினா எண் 23122—திரு. ச. சிவகுமார்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *வல்லம் ஒன்றியம், நெகனூர் ஊராட்சியில் சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட துணை சுகாதார நிலையத்தின் கட்டடம் இடியும் நிலையில் உள்ளது. இதனை அகற்றி புதிய கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) *விழுப்புரம் மாவட்டம், வல்லம் ஊராட்சி ஒன்றியம், மேல்சித்தாமூர் பிரதான/மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ் நெகனூர் துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.*

2023 அக்டோபர் 11]

நெகனூர் துணை சுகாதார நிலைய கட்டடம் முற்றிலும் பழுதடைந்துள்ளது. தற்போது பழுதடைந்துள்ள நெகனூர் துணை சுகாதார நிலையம் அதே கட்டடத்தில் நல்ல நிலையில் உள்ள ஓர் அறையில் இயங்கி வருகிறது.

நெகனூர் துணை சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்ட பொதுப் பணித் துறையிடமிருந்து தகுதி நீக்கச் சான்றிதழ் கோரப்பட்டுள்ளது. தகுதி நீக்கச் சான்றிதழ் பெறப்பட்ட பின்னர் முன்னுரிமை அடிப்படையில் நிதி ஒதுக்கப்பட்டு, நெகனூர் துணை சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்ட உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

41—

சுற்றுச் சுவர்

வினா எண் 23395—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி கடமடை ஆரம்ப சுகாதார நிலையத்தில் 500 மீட்டர் சுற்றுப்புற சுவர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியத்தில் கடமடை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

கடமடை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் மேற்கு பக்கம் சுற்றுச் சுவர் உள்ளது. மீதமுள்ள வடக்கு, தெற்கு மற்றும் கிழக்கு பக்கங்களில் கம்பிவேலி போடப்பட்டு பாதுகாப்பாக உள்ளது.

மீதமுள்ள வடக்கு, தெற்கு மற்றும் கிழக்கு பக்கங்களில் சுற்றுச் சுவர் கட்ட பொதுப் பணித் துறையிடமிருந்து மதிப்பீடு பட்டியல் கோரப்பட்டுள்ளது. மீதமுள்ள மூன்று பக்கங்களுக்கும் சுற்றுச் சுவர் கட்ட தற்போது நிதி ஒதுக்கீடு இல்லை.

42—

தரமுயர்த்துதல்

வினா எண் 25772—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட செல்லமுடி பகுதியில் இயங்கி வரும் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், ஏரியூர் ஊராட்சி ஒன்றியத்தில் செல்லமுடி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் இயங்கி வரும் ஆரம்ப சுகாதார நிலையங்களில், ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தினை தரம் உயர்த்துதல் என்பது அரசின் கொள்கை முடிவாகும். அரசாணை (நிலை) எண் 43, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை நாள் 3-2-2011-ன்படி, ஏரியூர் ஊராட்சி ஒன்றியத்தில் ஏரியூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்கெனவே, 30 படுக்கை வசதிகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தப்பட்டு அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. எனவே, இதே ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள செல்லமுடி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தப்பட்ட சுகாதார நிலையமாக தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

43—

தரமுயர்த்துதல்

வினா எண் 25778—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2023 அக்டோபர் 11]

(அ) பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட பிக்கிலி பகுதியில் இயங்கி வரும் ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம் பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியத்தில் பிக்கிலி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

அரசாணை (நிலை) எண் 43, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 3-2-2011-ன்படி, பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியத்தில், ஏரியூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கை வசதி கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. தற்போது பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியத்திலிருந்து ஏரியூர் என்ற புதிய ஊராட்சி ஒன்றியம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. எனவே, பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியத்தில் தற்போது மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் எதுவும் தோற்றுவிக்கப்படவில்லை.

44—

நரம்பியல் துறை

வினா எண் 25869—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் நரம்பியல் துறை துவங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் அரசு மருத்துவமனை 152 படுக்கை வசதிகளுடன்கூடிய அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையாகச் செயல்பட்டு வருகிறது. நாளொன்றுக்கு சராசரியாக 684 வெளிநோயாளிகளும், 91 உள்நோயாளிகளும் சிகிச்சை பெறுகின்றனர். மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநரக கட்டுப்பாட்டில் இயங்கும் அரசு மருத்துவமனைகள் இரண்டாம் நிலை மருத்துவமனைகள் ஆகும். இம்மருத்துவமனையில் MD பொது மருத்துவர், பொது அறுவை சிகிச்சை நிபுணர் மற்றும் மயக்கவியல் நிபுணர், (MBBS) பொது மருத்துவர் உட்பட 21 மருத்துவர் பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டு 19 மருத்துவர்கள் பணியில் உள்ளனர். மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநரகத்தின்கீழ் இரண்டாம் நிலை அரசு மருத்துவமனைகள் மட்டுமே செயல்பட்டு வருகின்றன. நரம்பியல் தொடர்பான சிறப்பு சிகிச்சை போன்ற பிரிவு மூன்றாம் நிலை அரசு மருத்துவமனையான மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு மட்டுமே ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், இம்மருத்துவமனையில் தொற்றா நோய் சிகிச்சை பிரிவு (NCD) சிறப்பாகச் செயல்படுகிறது. மேலும், 16 படுக்கை வசதிகள் கொண்ட ICU பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், எக்கோ கார்டியோகிராம் (Echocardiaogram) வெண்டிலேட்டர் போன்ற வசதிகள் உள்ளன. இந்த வசதிகளைக் கொண்டு நரம்பியல் தொடர்பான சிகிச்சைக்கு வரும் நோயாளிகளுக்கு உயர் சிகிச்சை தேவைப்படும் நோயாளிகள் அருகில் உள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்குப் பரிந்துரை செய்யப்படுகிறார்கள்.

45—

இருதயப் பிரிவு

வினா எண் 25870—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2023 அக்டோபர் 11]

(அ) பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் இருதயப் பிரிவு துவங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் அரசு மருத்துவமனை 152 படுக்கை வசதிகளுடன்கூடிய அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையாகச் செயல்பட்டு வருகிறது. நாளொன்றுக்கு சராசரியாக 684 வெளிநோயாளிகளும், 91 உள்நோயாளிகளும் சிகிச்சை பெறுகின்றனர். மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநரக கட்டுப்பாட்டில் இயங்கும் அரசு மருத்துவமனைகள் இரண்டாம் நிலை மருத்துவமனைகள் ஆகும். இம்மருத்துவமனையில் MD பொது மருத்துவர், பொது அறுவை சிகிச்சை நிபுணர் மற்றும் மயக்கவியல் நிபுணர், (MBBS) பொது மருத்துவர் உட்பட 21 மருத்துவர் பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டு 19 மருத்துவர்கள் பணியில் உள்ளனர். மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநரகத்தின்கீழ் இரண்டாம் நிலை அரசு மருத்துவமனைகள் மட்டுமே செயல்பட்டு வருகின்றன. இருதயம் தொடர்பான சிறப்புச் சிகிச்சை போன்ற பிரிவு மூன்றாம் நிலை அரசு மருத்துவமனையான மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு மட்டுமே ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், இம்மருத்துவமனையில் தொற்றா நோய் சிகிச்சை பிரிவு (NCD) சிறப்பாகச் செயல்படுகிறது. இதில் இரத்த அழுத்தம் மற்றும் சர்க்கரை நோயாளிகளுக்கு ஆரம்ப நிலையில் நோய் கண்டறியப்பட்டு, உரிய சிகிச்சை வழங்கப்படுகிறது. மேலும், 16 படுக்கை வசதிகள் கொண்ட ICU பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், எக்கோ கார்டியோகிராம் (Echocardiogram), வெண்டிலேட்டர் போன்ற வசதிகள் உள்ளன. இந்த வசதிகளைக் கொண்டு நோயாளிகளுக்கு முதற்கட்ட சிகிச்சை அளிக்கப்படுகிறது. உயர் சிகிச்சை தேவைப்படும் நோயாளிகள் அருகில் உள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்குப் பரிந்துரை செய்யப்படுகிறார்கள்.

[*2023 அக்டோபர் 11*

46—

தரமுயர்த்துதல்

வினா எண் 25892—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட நல்லம்பள்ளி ஒன்றியம், பாளையம்புதூர் அரசு மருத்துவமனையை 30 படுக்கை வசதிகள் கொண்டதாக தரம் உயர்த்தி 24 மணிநேரமும் இயங்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியத்தில் பாளையம்புதூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் இயங்கி வரும் ஆரம்ப சுகாதார நிலையங்களில், ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தினை தரம் உயர்த்துதல் என்பது அரசின் கொள்கை முடிவாகும். அரசாணை (நிலை) எண் 320, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 29-9-2003-ன்படி, தருமபுரி மாவட்டம் நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியத்தில் தொப்பூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்கெனவே, 30 படுக்கை வசதிகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தப்பட்டு அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. எனவே, இதே ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பாளையம்புதூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கை வசதிகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரமுயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை. அரசாணை (நிலை) எண் 396, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 23-8-1999-ன்படி, பாளையம்புதூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையத்தில் 3 செவிலியர்கள் நியமிக்கப்பட்டு 24 மணிநேர பிரசவ கவனிப்பு சேவை வழங்கப்பட்டு வருகிறது.

2023 அக்டோபர் 11]

47—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 26076—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேப்பனப்பள்ளி தொகுதி, வேப்பனப்பள்ளி ஒன்றியம், தீர்த்தம் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் இலக்கின்படி 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. தீர்த்தம் ஊராட்சியிலிருந்து 7 கிலோ மீட்டர் தொலைவில் நாச்சிக்குப்பம் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதால், கிருஷ்ணகிரி மாவட்டம் வேப்பனப்பள்ளி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள தீர்த்தம் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

48—

விஷமுறிவு மருந்து

வினா எண் 26504—திரு. இரா. அருள்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் ஏற்காடு அரசு மருத்துவமனையில் பாம்புக் கடியால் அதிகம் பாதிக்கப்படும் பொதுமக்கள் நலன் கருதி கூடுதல் விஷமுறிவு மருந்துகள் கையிருப்பு வைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஏற்காடு அரசு மருத்துவமனை, 25 படுக்கை வசதிகளுடன்கூடிய அரசு வட்ட மருத்துவமனையாக இயங்கி வருகிறது.

மேற்படி மருத்துவமனையில், மாதமொன்றுக்கு சராசரியாக 2 முதல் 3 நபர்கள் வரை பாம்புக்கடிக்கான சிகிச்சை பெறுகிறார்கள். மாதமொன்றுக்கு சராசரியாக 16 vials பாம்புக்கடி மருந்து உபயோகிக்கப்படுகிறது. பாம்புக்கடி விஷத்தின் தன்மையைப் பொறுத்து சராசரியாக 8 vials மருந்து வரை 1 நபருக்கு வழங்கப்படுகிறது. தற்போது பாம்புக்கடிக்கான 24 vials மருந்து கையிருப்பில் உள்ளது.

பாம்புக்கடிக்கு உரிய விஷமுறிவு மருந்து, அரசு மருத்துவமனைகளுக்கு போதுமான அளவு விநியோகிக்கப்பட்டு எந்நேரமும் இருப்பில் வைத்து நோயாளிகளுக்கு உரிய சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது.

49—

சுற்றுச் சுவர்

வினா எண் 26573—திரு. செ. சுந்தரராஜன்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரி தொகுதி, இடங்கனசாலை பேரூராட்சி, இ.காட்டூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 அக்டோபர் 11]

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியத்தில், இ.காட்டூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

இ.காட்டூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில், சுற்றுச் சுவர் கட்ட பொதுப் பணித் துறையிடமிருந்து மதிப்பீடு பட்டியல் கோரப்பட்டுள்ளது. தற்போது, சுற்றுச் சுவர் கட்ட நிதி ஒதுக்கீடு இல்லை.

50—

தரமுயர்த்துதல்

வினா எண் 26574—திரு. செ. சுந்தரராஜன்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரி தொகுதி, தாரமங்கலம் பேரூராட்சி, தாரமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்திக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், சங்கரி தொகுதி, தாரமங்கலம் பகுதியில் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. மேலும், தாரமங்கலம் ஒன்றியத்திலேயே கே.ஆர். தொப்பூர், சேடப்பட்டி மற்றும் மட்டியம்பட்டி ஆகிய பகுதிகளில் கூடுதல் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

மேலும், தாரமங்கலம் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து 11 கி.மீ.-ல் ஓமலூர் அரசு வட்ட

[*2023 அக்டோபர் 11*

மருத்துவமனை 120 படுக்கை வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. எனவே, தாரமங்கலம் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்த தற்சமயம் அவசியம் எழவில்லை.

51—

சுற்றுச் சுவர்

வினா எண் 37710—டாக்டர் A.R.R. ரகுராமன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சாத்தூர் தொகுதி, கல்லமநாயக்கன்பட்டியிலுள்ள தரம் உயர்த்தப்பட்ட மருத்துவமனையைச் சுற்றி சுற்றுச் சுவர் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டம், சாத்தூர் தொகுதி, கல்லமநாயக்கன்பட்டி அரசு மருத்துவமனை 60 படுக்கை வசதிகளுடன்கூடிய அரசு வட்ட மருத்துவமனையாகச் செயல்பட்டு வருகிறது. இங்கு நாளொன்றுக்கு சராசரியாக 276 வெளிநோயாளிகளும், 13 உள்நோயாளிகளும் சிகிச்சை பெறுகின்றனர்.

இம்மருத்துவமனையைச் சுற்றி தற்சமயம் கம்பி வேலி அமைக்கப்பட்டு, எவ்வித அத்துமீறல்களும் நடைபெறாமல் மருத்துவமனை பாதுகாப்புடன் செயல்பட்டு வருகிறது.

52—

மருத்துவமனை

வினா எண் 37712—டாக்டர் A.R.R. ரகுராமன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2023 அக்டோபர் 11]

(அ) சாத்தூர் தொகுதி, கல்லமநாயக்கன்பட்டியிலுள்ள தரம் உயர்த்தப்பட்ட மருத்துவமனையில் வெளிப்புற நோயாளிப் பிரிவு வசதியை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டம், சாத்தூர் தொகுதி, கல்லமநாயக்கன்பட்டி அரசு மருத்துவமனை 60 படுக்கை வசதிகளுடன்கூடிய அரசு வட்ட மருத்துவமனையாகச் செயல்பட்டு வருகிறது.

இம்மருத்துவமனையில் வெளிநோயாளிகள் பிரிவு தனிக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இங்கு நாளொன்றுக்கு சராசரியாக 276 வெளிநோயாளிகள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

53—

கட்டடம்

வினா எண் 37825—திரு. க.சொ.க. கண்ணன்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜெயங்கொண்டம் தொகுதி, ஆண்டிமடம் வட்டாரம், இடையக்குறிச்சி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மகப்பேறு பிரசவ கட்டடம் மற்றும் சுற்றுச் சுவர் புதியதாக அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியத்தில் இடையக்குறிச்சி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

இடையக்குறிச்சி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் 6 படுக்கை வசதிகள் கொண்டு நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது.

இடையக்குறிச்சி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் தற்போது தேவைக்கேற்ப மகப்பேறு பிரிவு போதுமான வசதிகளுடன் செயல்பட்டு வருவதால் மகப்பேறு பிரிவுக்கென கூடுதல் கட்டடம் கட்ட தற்போது அவசியம் எழவில்லை.

இடையக்குறிச்சி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் வடக்கு பகுதியில் சுற்றுச் சுவர் உள்ளது. மீதமுள்ள கிழக்கு, மேற்கு மற்றும் தெற்கு ஆகிய பகுதிகளில் சுற்றுச் சுவர் கட்ட பொதுப் பணித் துறையிடமிருந்து மதிப்பீடு பட்டியல் கோரப்பட்டுள்ளது. மதிப்பீடு பட்டியல் பெறப்பட்டவுடன், முன்னுரிமை அடிப்படையில் நிதி ஒதுக்கப்பட்டு இடையக்குறிச்சி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் மீதமுள்ள கிழக்கு, மேற்கு மற்றும் தெற்கு ஆகிய பகுதிகளில் சுற்றுச் சுவர் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

54—

கட்டடம்

வினா எண் 37827—திரு. க.சொ.க. கண்ணன்:: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜெயங்கொண்டம் தொகுதி, ஜெயங்கொண்டம் வட்டாரம், உட்கோட்டை, வாடிப்பள்ளம், மீன்சுருட்டி, வானதிராயன்பட்டிணம், தத்தனூர், பொட்டக்கொல்லை மற்றும் வெத்தியார்வெட்டு ஆகிய பகுதிகளில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் புதிய மகப்பேறு பிரசவ கட்டடம் மற்றும் சுற்றுச் சுவர் அமைத்துத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

2023 அக்டோபர் 11]
(அ) மற்றும் (ஆ)

உட்கோட்டை

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியத்தில், உட்கோட்டை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் 6 படுக்கை வசதிகள் கொண்டு நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. எனவே, கூடுதலாக மகப்பேறு பிரிவு கட்டடம் கட்ட தற்போது அவசியம் எழவில்லை. உட்கோட்டை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச் சுவர் இல்லை. சுற்றுச் சுவர் கட்ட தற்போது நிதி ஒதுக்கீடு எதுவும் இல்லை.

விழாப்பள்ளம்

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியத்தில் விழாப்பள்ளம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் 6 படுக்கை வசதிகள் கொண்டு நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. எனவே, கூடுதலாக மகப்பேறு பிரிவு கட்டடம் கட்ட தற்போது அவசியம் எழவில்லை. விழாப்பள்ளம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச் சுவர் இல்லை. சுற்றுச் சுவர் கட்ட தற்போது நிதி ஒதுக்கீடு எதுவும் இல்லை.

மீன்சுருட்டி

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியத்தில், மீன்சுருட்டி பிரதான/மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கை வசதிகள் கொண்டு நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. எனவே, கூடுதலாக மகப்பேறு பிரிவு கட்டடம் கட்ட தற்போது அவசியல் எழவில்லை.

மீன்சுருட்டி பிரதான/மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் மேற்கு பகுதியில் சுற்றுச் சுவர் உள்ளது. மீதமுள்ள வடக்கு, கிழக்கு மற்றும் தெற்கு பகுதிகளில் சுற்றுச் சுவர் கட்ட தற்போது நிதி ஒதுக்கீடு எதுவும் இல்லை.

வானதிராயன்பட்டினம்

அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியத்தில், வானதிராயன்பட்டினம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் 6 படுக்கை வசதிகள் கொண்டு நல்ல முறையில்

செயல்பட்டு வருகிறது. எனவே, கூடுதலாக மகப்பேறு பிரிவு கட்டடம் கட்ட தற்போது அவசியம் எழவில்லை. வானதிராயன்பட்டினம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் வடக்கு, கிழக்கு மற்றும் தெற்கு பகுதிகளில் சுற்றுச் சுவர் உள்ளது. மேற்குப் பகுதியில் சுற்றுச் சுவர் கட்ட தற்போது நிதி ஒதுக்கீடு இல்லை.

தத்தனூர்

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியம், த.பொட்டக்கொல்லை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ் தத்தனூர் துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

தத்தனூர் துணை சுகாதார நிலைய கட்டடம் முற்றிலும் பழுதடைந்துள்ளது. எனினும், தற்போது பழுதடைந்துள்ள கட்டடத்தின் நல்ல நிலையில் உள்ள ஒரு அறையில் இயங்கி வருகிறது. பழுதடைந்த கட்டடத்திற்கு பொதுப் பணித் துறையிடமிருந்து தகுதி நீக்கச் சான்றிதழ் கோரப்பட்டுள்ளது. தகுதி நீக்கச் சான்றிதழ் பெறப்பட்ட பின்னர் முன்னுரிமை அடிப்படையில் புதிய கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

அரசு நியதிகளின்படி ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மட்டுமே மகப்பேறு பிரிவுகள் முன்னுரிமை அடிப்படையில் கட்டப்படுகின்றன. எனவே, துணை சுகாதார நிலையங்களுக்கு மகப்பேறு பிரிவுகள் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மட்டுமே சுற்றுச் சுவர் கட்ட முன்னுரிமை அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. துணை சுகாதார நிலையங்களுக்கு சுற்றுச் சுவர் கட்ட தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

த. பொட்டக்கொல்லை

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியத்தில் த.பொட்டக்கொல்லை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் 6 படுக்கை வசதிகள் கொண்டு நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. எனவே, கூடுதலாக மகப்பேறு பிரிவு கட்டடம் கட்ட தற்போது அவசியம் எழவில்லை. த.பொட்டக்கொல்லை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச் சுவர் இல்லை. சுற்றுச் சுவர் கட்ட தற்போது நிதி ஒதுக்கீடு எதுவும் இல்லை.

2023 அக்டோபர் 11]

வெட்டியார் வெட்டு

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியத்தில் வெட்டியார் வெட்டு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் 6 படுக்கை வசதிகள் கொண்டு நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. எனவே, கூடுதலாக மகப்பேறு பிரிவுக் கட்டடம் கட்ட தற்போது அவசியம் எழவில்லை.

வெட்டியார் வெட்டு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச் சுவர் இல்லை. சுற்றுச் சுவர் கட்ட தற்போது நிதி ஒதுக்கீடு எதுவும் இல்லை.

55—

கட்டடம்

வினா எண் 37833—திரு. க.சொ.க. கண்ணன்:: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஜெயங்கொண்டம் தொகுதி, ஆண்டிமடம் வட்டாரம், வாரியங்காவல் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மகப்பேறு பிரசவ கட்டடம் அமைத்துத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியத்தில், வாரியங்காவல் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

வாரியங்காவல் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் 6 படுக்கை வசதிகள் கொண்டு நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது.

வாரியங்காவல் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் தற்போது தேவைக்கேற்ப மகப்பேறு பிரிவு போதுமான வசதிகளுடன் செயல்பட்டு வருவதால், மகப்பேறு பிரிவுக்கென கூடுதல் கட்டடம் கட்ட தற்போது அவசியம் எழவில்லை.

56—

மருத்துவமனை

வினா எண் 38448—திரு. A.P. நந்தகுமார்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அணைக்கட்டு தொகுதி, அணைக்கட்டில் அமைந்துள்ள அரசு மருத்துவமனையை வட்ட மருத்துவமனையாக தரம் உயர்த்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

அணைக்கட்டு தொகுதி, அணைக்கட்டு அரசு ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கை வசதிகளுடன் இயங்கி வந்தது. அணைக்கட்டு தனி வட்டமாக வருவாய்த் துறையால் அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து, மேற்குறிப்பிட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையம், அரசாணை (நிலை) எண் 233, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 23-9-2016-ன்படி 60 படுக்கை வசதிகள் கொண்ட வட்ட மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டு, தற்சமயம் அத்தொகுதி மக்களின் பயன்பாட்டிற்காக செயல்பட்டுக் கொண்டு வருகிறது.

57—

சுற்றுச் சுவர்

வினா எண் 38449—திரு. A.P. நந்தகுமார்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அணைக்கட்டு தொகுதி, வேலூர் ஒன்றியம், செம்பேடு ஊராட்சி, செம்பேட்டில் உள்ள மருத்துவமனைக்கு சுற்றுச் சுவர் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

2023 அக்டோபர் 11]

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

வேலூர் மாவட்டம், வேலூர் ஊராட்சி ஒன்றியத்தில் செம்பேடு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

செம்பேடு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச் சுவர் இல்லை. சுற்றுச் சுவர் கட்ட தற்போது நிதி ஒதுக்கீடு எதுவும் இல்லை. இனிவருங்காலங்களில் பொதுப் பணித் துறையிடமிருந்து மதிப்பீடு பட்டியல் பெறப்பட்டு, முன்னுரிமை அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, செம்பேடு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச் சுவர் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

58—

மருத்துவமனை

வினா எண் 38450—திரு. A.P. நந்தகுமார்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அணைக்கட்டு தொகுதி, ஒடுகத்தூர் பேரூரில் மருத்துவமனை அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

அணைக்கட்டு தொகுதி, ஒடுகத்தூரில் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. மேலும், அணைக்கட்டு தொகுதியிலேயே பள்ளிக்கொண்டா, பொய்கை, பீஞ்சமந்தை, மறதி பாளையம் மற்றும் சின்னப்பள்ளிக் குப்பம் ஆகிய பகுதிகளில் கூடுதல் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. மேலும், ஒடுகத்தூரிலிருந்து 18 கி.மீ. தொலைவில் 60 படுக்கை வசதிகள் கொண்ட அணைக்கட்டு அரசு வட்ட மருத்துவமனை மற்றும் 24 கி.மீ. தொலைவில் 190 படுக்கை வசதிகள் கொண்ட குடியாத்தம் அரசு மருத்துவமனையும் சிறப்பாக

செயல்பட்டு வருவதால், ஒடுகத்தூர் பேரூரில் மருத்துவமனை அமைத்திட தற்சமயம் அவசியம் எழவில்லை.

59—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 38656—திரு. ம. பிரபாகரன்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பலூர் தொகுதி, சிறுவயலூர் ஊராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

சிறுவயலூர் ஊராட்சியில் துணை சுகாதார நிலையம் ஒன்று இயங்கி வருகிறது.

சிறுவயலூர் ஊராட்சியிலிருந்து 4 கிலோமீட்டர் தொலைவில் அடைக்கம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையமும், 8 கிலோ மீட்டர் தொலைவில் செட்டிக்குளம் ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருவதால், பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள சிறுவயலூர் ஊராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

60—

கட்டடம்

வினா எண் 39242—திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2023 அக்டோபர் 11]

(அ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், முக்குணம் கிராமத்தில் செவிலியர்கள் குடியிருப்புக்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், வல்லம் ஊராட்சி ஒன்றியம் மேலஒலக்கூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ் செயல்படும் மேலஒலக்கூர் துணை சுகாதார நிலையத்தின்கீழ் முக்குணம் கிராமம் உள்ளது.

மேலஒலக்கூர் துணை சுகாதார நிலையம் சொந்தக் கட்டடத்தில் நல்ல முறையில் இயங்கி வருகிறது. மேலஒலக்கூர் துணை சுகாதார நிலைய கிராம சுகாதார செவிலியர்மூலம் தாய்-சேய் நல சேவைகள், சிறு நோய் சிகிச்சை உட்பட்ட பிற சேவைகள் முக்குணம் கிராமத்தில் உள்ள பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

அரசு நியதிகளின்படி ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மட்டுமே செவிலியர் குடியிருப்புகள் முன்னுரிமை அடிப்படையில் கட்டப்படுகின்றன. எனவே, துணை சுகாதார நிலையங்களுக்கு செவிலியர் குடியிருப்புகள் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

61—

கட்டடம்

வினா எண் 39243—திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலம் தொகுதி, ஒலக்கூர் ஒன்றியம், ஊரல் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், ஒலக்கூர் ஊராட்சி ஒன்றியம், சாரம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ் ஊரல் துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

ஊரல் துணை சுகாதார நிலைய கட்டடம் முற்றிலும் பழுதடைந்துள்ளதால், பழுதடைந்துள்ள கட்டடத்தின் நல்ல நிலையில் உள்ள ஓர் அறையில் இயங்கி வருகிறது.

ஊரல் துணை சுகாதார நிலையக் கட்டடத்திற்கு, பொதுப் பணித் துறையிடமிருந்து தகுதி நீக்கச் சான்றிதழ் கோரப்பட்டுள்ளது. தகுதி நீக்கச் சான்றிதழ் பெறப்பட்ட பின்னர், முன்னுரிமை அடிப்படையில் ஊரல் துணை சுகாதார நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

62—

தரமுயர்த்துதல்

வினா எண் 43139—திரு. ரூபி ஆர். மனோகரன்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, களக்காடு நகராட்சி, பிரிடா மோனியர் (பெல்ஜியம்) அரசு மருத்துவமனையை தரம் உயர்த்தி கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, பிரிடா மோனியர் (பெல்ஜியம்) அரசு மருத்துவமனை 30 படுக்கை வசதிகள் கொண்ட வட்டம் சாரா மருத்துவமனையாக சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையில் சராசரியாக நாளொன்றுக்கு 15 உள்நோயாளிகளும் 362 வெளிநோயாளிகளும் சிகிச்சை பெறுகின்றனர்.

2023 அக்டோபர் 11]

இம்மருத்துவமனையில் ஆண்கள், பெண்கள், மகப்பேறு பிரிவுகள், வெளிநோயாளிகள் பிரிவு, தொற்றா நோய் சிகிச்சை பிரிவு மற்றும் போதுமான குடிநீர் வசதி (RO Plant) உள்ளது.

ஆண்டுதோறும் கட்டட பராமரிப்பு நிதியின்கீழ் உரிய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டடம் மற்றும் மின்சாரம் பாதுகாக்கப்படுகிறது. சுற்றுச் சுவர் வசதி உள்ளது. மேலும், நோயாளிகள் உடன் தங்குவோர் காத்திருப்பதற்கான வசதி ஏற்படுத்தப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

இம்மருத்துவமனையில் ஒப்பளிக்கப்பட்ட படுக்கை எண்ணிக்கையை விட குறைவான உள்நோயாளிகள் மற்றும் குறைந்த எண்ணிக்கையிலே வெளிநோயாளிகள் சிகிச்சைக்கு வருகின்றனர். தற்போதுள்ள வசதிகளைக்கொண்டு நோயாளிகளுக்கு உரிய முறையில் சிகிச்சை அளிக்கப்படுகிறது. உயர் சிகிச்சை தேவைப்படும் நோயாளிகள் இங்கிருந்து 12 கி.மீ. தொலைவிலுள்ள 52 படுக்கை வசதிகள் கொண்ட நாங்குநேரி அரசு மருத்துவமனைக்குப் பரிந்துரைக்கப்படுகிறார்கள். எனவே இம்மருத்துவமனையை மேலும் தரம் உயர்த்த தற்போது அவசியம் எழவில்லை.

63—

சுற்றுச் சுவர்

வினா எண் 45040—திரு. S.S. பாலாஜி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்போரூர் தொகுதி, மானாம்பதி ஊராட்சியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச் சுவர் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம், மானாம்பதி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

மானாம்பதி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குரிய நிலம், பொது சுகாதாரத் துறைக்கு பெயர் மாற்றம் செய்ய மற்றும் முன் நுழைவு அனுமதி கோரி மாவட்ட ஆட்சியருக்குக் கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

பொது சுகாதாரத் துறைக்கு பெயர் மாற்றம் மற்றும் முன் நுழைவு அனுமதி ஆகியவை பெறப்பட்ட பின்னரே அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

64—

கட்டடம்

வினா எண் 45043—திரு. S.S. பாலாஜி: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) திருப்போரூர் தொகுதி, சதுரங்கப்பட்டினம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் எக்ஸ்ரே பிரிவு, பிஸியோதெரபி பிரிவு இயங்கி வருவதால் இதற்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியத்தில், சதுரங்கப்பட்டினம் பிரதான/மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

சதுரங்கப்பட்டினம் பிரதான/மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் எக்ஸ்ரே பிரிவும் மற்றும் பிஸியோதெரபி பிரிவும் நல்ல முறையில் இயங்கி வருகிறது.

ஆரம்ப சுகாதார நிலையங்களில் எக்ஸ்ரே மற்றும் பிஸியோதெரபி பிரிவுகளுக்கென தனியாக கட்டடம் கட்டப்படுவதில்லை.

2023 அக்டோபர் 11]

65—

கட்டடம்

வினா எண் 45044—திரு. S.S. பாலாஜி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *திருப்போரூர் தொகுதி, கானத்தூர் ரெட்டிகுப்பம் பகுதியில் அனைத்து மருத்துவ உபகரணங்களுடன் 24 மணிநேரமும் இயங்கக்கூடிய பொது சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) *மத்திய அரசின் இலக்கின்படி 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. கானத்தூர் ரெட்டிகுப்பம் கிராமம் திருப்போரூர் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றிய மக்கள் தொகை 2,25,213 ஆகும். இவ்வூராட்சி ஒன்றியத்தில் 4 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.*

66—

குடிநீர்

வினா எண் 48061—முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *பொள்ளாச்சி தொகுதி, நெகமம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குத் தேவையான மருத்துவ உபகரணங்கள் வழங்கவும் மருத்துவர்கள் பணியாளர்களை நியமிக்கவும் மற்றும் குடிநீர் இணைப்புகள் ஏற்படுத்தவும் அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வடக்கு ஊராட்சி ஒன்றியத்தில், நெகமம் பிரதான/மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

நெகமம் பிரதான/மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்திற்கென ஐந்து மருத்துவ அலுவலர்கள், நடமாடும் மருத்துவக் குழுவிற்கு ஒரு மருத்துவ அலுவலர் மற்றும் பள்ளி நலக் குழுவிற்கு இரண்டு மருத்துவ அலுவலர்கள் என மொத்தம் எட்டு மருத்துவ அலுவலர் பணியிடங்கள் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளன. அந்த எட்டு மருத்துவ அலுவலர் பணியிடங்களும் நிரப்பப்பட்டு, பணிபுரிந்து வருகின்றனர். மேலும், இவ்வாரம்ப சுகாதார நிலையத்திற்குத் தேவையான உபகரணங்கள் போதுமான அளவில் உள்ளன. இவ்வாரம்ப சுகாதார நிலையத்திற்கு பஞ்சாயத்துமூலம் குடிநீர் வசதி பெறப்பட்டு வருகிறது. ஆழ்துளை கிணறு மூலமும் தண்ணீர் வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும், 500 லிட்டர் கொள்ளளவு கொண்ட சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதியும் செய்யப்பட்டுள்ளது. தண்ண

67—

விஷமுறிவு மருந்து

வினா எண் 48064—முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொள்ளாச்சி தொகுதி, விஷபாம்புக் கடிக்கு உரிய விஷமுறிவு மருந்து கண்டுபிடித்து அனைத்து அரசு மாவட்ட மருத்துவமனைகளுக்கும் வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 அக்டோபர் 11]

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி அரசு மருத்துவமனை, 462 படுக்கை வசதிகளுடன்கூடிய அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையாக இயங்கி வருகிறது.

மேற்படி மருத்துவமனையில், மாதமொன்றுக்கு சராசரியாக 20 முதல் 25 நபர்கள் வரை பாம்புக்கடிக்கான சிகிச்சை பெறுகிறார்கள். மாதமொன்றுக்கு சராசரியாக 120 Vial பாம்புக்கடி மருந்து உபயோகிக்கப்படுகிறது. பாம்புக்கடி விஷத்தின் தன்மையை பொறுத்து சராசரியாக 8 Vial மருந்து வரை 1 நபருக்கு வழங்கப்படுகிறது. தற்போது பாம்புக்கடிக்கான 259 Vial மருந்து கையிருப்பில் உள்ளது.

பாம்புக் கடிக்கு உரிய விஷமுறிவு மருந்து, அனைத்து அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகளுக்கும் போதுமான அளவு விநியோகிக்கப்பட்டு எந்நேரமும் இருப்பில் வைத்து நோயாளிகளுக்கு உரிய சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது.

68—

வாகனங்கள் வழங்குதல்

வினா எண் 50422—திரு. S. ஜெயக்குமார்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை அரசு மருத்துவமனை வளாகத்தில் நோயாளிகள் சென்றுவர கூடுதல் பேட்டரி வாகனங்களை வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பெருந்துறை அரசு மருத்துவமனை 54 படுக்கை வசதிகளுடன் செயல்படும் வட்ட அரசு மருத்துவமனையாகும். இங்கு நாளொன்றுக்கு சராசரியாக 241 வெளிநோயாளிகளும், 10 உள்நோயாளிகளும் சிகிச்சை பெறுகின்றனர்.

[*2023 அக்டோபர் 11*

இம்மருத்துவமனையில், மாதமொன்றுக்கு சராசரியாக 1,378 ஆய்வக பரிசோதனைகள் 16 USG Scan *மற்றும் 35* ECG *ஆகியவை எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும், மாதமொன்றுக்கு சராசரியாக 3 பிரசவங்களும், 3 அறுவை சிகிச்சை பிரசவங்களும், 10 பெரிய மற்றும் 4 சிறிய வகை அறுவை சிகிச்சைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.*

*இம்மருத்துவமனை வளாகத்தில் உள்ள கட்டடங்கள் ஒவ்வொன்றும் அருகாமையிலேயே அமைந்துள்ளதால் பேட்டரி வாகனங்கள் வழங்குவதற்கான அவசியம் எழவில்லை. நோயாளிகளை அழைத்துச் செல்ல ஏதுவாக சக்கர நாற்காலி (*Wheel Chair*) வசதி உள்ளது. எனவே, பெருந்துறை அரசு மருத்துவமனைக்கு பேட்டரி வாகனங்களை வழங்க அவசியம் எழவில்லை.*

69—

சீமாங் சென்டர்

வினா எண் 50587—திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *கந்தர்வகோட்டை 2017-ல் உருவாக்கப்பட்ட (*CEmONC*) சீமாங் சென்டர் மருத்துவமனையை மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வர அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) *புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை அரசு மருத்துவமனை 52 படுக்கை வசதிகளுடன்கூடிய அரசு வட்ட மருத்துவமனையாகச் செயல்பட்டு வருகிறது. நாளொன்றுக்கு சராசரியாக 47 வெளிநோயாளிகளும், 33 உள் நோயாளிகளும் சிகிச்சை பெறுகின்றனர்.*

2023 அக்டோபர் 11]

அரசாணை (2டி) எண் 84 மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (அஎதி1-I) துறை, 17-7-2008-ன்படி, கந்தர்வகோட்டை அரசு மருத்துவமனையானது சீமாங் சென்டராக தரம் உயர்த்தப்பட்டது. இதன்படி, 2 மகப்பேறு மருத்துவர் 1 குழந்தை நல மருத்துவர் மற்றும் 1 மயக்கவியல் மருத்துவர் பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டு அனைத்து பணியிடங்களும் நிரப்பப்பட்டுள்ளன. தற்சமயம், கந்தர்வகோட்டை அரசு மருத்துவமனையில் 20 படுக்கை வசதிகள் கொண்ட மகப்பேறு பிரிவு செயல்பட்டு வருகிறது. மேற்குறிப்பிட்ட மருத்துவர்களைக் கொண்டும் மற்றும் இம்மருத்துவமனையில் பணிபுரியும் மருத்துவம் மற்றும் மருத்துவம் சாரா பணியாளர்களைக் கொண்டும் பிரசவத்திற்கு வரும் தாய்மார்களுக்கு உரிய முறையில் சிகிச்சை அளிக்கப்படுகிறது. மேலும், மாதமொன்றுக்கு சராசரியாக 7 பிரசவங்களும், 2 அறுவை சிசிக்சை பிரசவங்களும் நடைபெறுகின்றன.

70—

காப்பீட்டுத் திட்டம்

வினா எண் 50604—திரு. S. சதாசிவம்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அனைத்து பொதுமக்களுக்கும் முதலமைச்சர் காப்பீடு அட்டை வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

உயிர்காக்கும் மருத்துவ சிகிச்சைகளை கட்டணமில்லாமல் ஏழைகள் மற்றும் குறைந்த வருவாய் பெறும் பொதுமக்கள், அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் பெறவேண்டும் என்ற உயரிய நோக்குடன் தமிழக அரசால் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 1.37 கோடி குடும்பங்கள் பயனாளிகளாக உள்ளனர். மேலும், ஒவ்வொரு பயனாளியின் குடும்பத்திற்கும் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில் ஒரு வருடத்திற்கு ரூபாய் ஐந்து இலட்சம் வரை இலவசமாக சிகிச்சை பெற காப்பீடு செய்யப்பட்டுள்ளது.

71—

துணை சுகாதார நிலையம்

வினா எண் 50876—திரு. செ. முருகேசன்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி தொகுதி, பரமக்குடி ஒன்றியம், நென்மேனியில் துணை சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சமவெளி பகுதிகளில் 5,000 மக்கள் தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதிகளில் 3,000 மக்கள் தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையம் என்ற விகிதத்தில் துணை சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி ஒன்றியத்தில் வெங்கட்டான் குறிச்சி ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ் நென்மேனி துணை சுகாதார நிலையம் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது.

72—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 51806—திரு. இரா. மாணிக்கம்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை தொகுதி, கொசூர் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 அக்டோபர் 11]

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் இலக்கின்படி *30,000* மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. கொசூர் ஊராட்சியில் துணை சுகாதார நிலையம் ஒன்று இயங்கி வருகிறது. கொசூர் ஊராட்சி கிருஷ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றிய மக்கள் தொகை *1,43,214* ஆகும். இவ்வூராட்சி ஒன்றியத்தில் *4* ஆரம்ப சுகாதார நிலையங்கள் முறையே கள்ளப்பள்ளி, பஞ்சப்பட்டி, சேங்கல் மற்றும் வேப்பங்குடி ஆகியன செயல்பட்டு வருகின்றன. எனவே, மக்கள் தொகை அடிப்படையில் கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கொசூர் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

73—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 51841—திரு. மா. செந்தில்குமார்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சி ஒன்றியம், புக்கிரவாரி ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் இலக்கின்படி *30,000* மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி

[*2023 அக்டோபர் 11*

எட்டு கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. புக்கிரவாரி ஊராட்சியில் துணை சுகாதார நிலையம் ஒன்று இயங்கி வருகிறது. புக்கிரவாரி ஊராட்சியிலிருந்து 8 கிலோ மீட்டர் தொலைவில் மேலூர் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதால், கள்ளக்குறிச்சி மாவட்டம், கள்ளக்குறிச்சி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள புக்கிரவாரி ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

74—

சுற்றுச் சுவர்

வினா எண் 51842—திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கள்ளக்குறிச்சி தொகுதி, பொற்படாகுறிச்சி கிராமத்தில் இயங்கி வரும் துணை சுகாதார நிலையத்திற்கு சுற்றுச் சுவர் அமைத்துத் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி மாவட்டம், கள்ளக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், மேலூர் பிரதான/மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ் பொற்படாகுறிச்சி துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

பொற்படாகுறிச்சி துணை சுகாதார நிலையத்திற்கு சுற்றுச் சுவர் இல்லை. ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மட்டுமே சுற்றுச் சுவர் கட்ட முன்னுரிமை அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

75—

கட்டடம்

வினா எண் 51856—திரு. K. மாரிமுத்து: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2023 அக்டோபர் 11]

திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் ஒன்றியம், சித்தமல்லி ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியத்தில் சித்தமல்லி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. சித்தமல்லி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடத்தில் சிறு, சிறு பழுதுபார்ப்பு பணிகள் மேற்கொள்ள பொதுப் பணி துறையிடமிருந்து மதிப்பீடு பட்டியல் கோரப்பட்டுள்ளது. மதிப்பீடு பட்டியல் பெறப்பட்டவுடன் முன்னுரிமை அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். சித்தமல்லி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி உதவியின்கீழ் ரூ.1.20 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு புறநோயாளிகள் பிரிவுக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

76—

மருத்துவமனை

வினா எண் 52389—திரு. பொ. அர்ஜுனன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிழக்கு கடற்கரை சாலையில் அமைந்துள்ள மரக்காணம் அரசு மருத்துவமனை நெடுஞ்சாலையில் விபத்துகள் அதிகம் நடைபெறுவதால் சிறப்பு மருத்துவமனையாக (Trauma Care) தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் அரசு மருத்துவமனை 60 படுக்கை வசதிகள் கொண்ட

[*2023 அக்டோபர் 11*

அரசு வட்ட மருத்துவமனையாகச் செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையில் சராசரியாக நாளொன்றுக்கு 698 நபர்கள் வெளிநோயாளிகளாகவும், 16 நபர்கள் உள் நோயாளிகளாகவும் சிகிச்சை பெறுகின்றனர். இம்மருத்துவமனைக்கு விபத்து சிகிச்சைக்காக வரும் நோயாளிகளின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது. இம்மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவு 24 மணி நேரமும் செயல்பட்டு வருகிறது. விபத்து சிகிச்சைக்கு வருபவர்களுக்கு இங்குள்ள அவசர சிகிச்சைப் பிரிவில் உரிய சிகிச்சை வழங்கப்படுகிறது. இப்பகுதியில் 108 அவசர ஊர்தி வசதி உள்ளது. எனவே, உயர் சிகிச்சை தேவைப்படும் நோயாளிகள், 197 படுக்கை வசதிகள், தலைக்காய சிகிச்சை பிரிவு, விபத்து மற்றும் அறுவை சிகிச்சை பிரிவு உட்பட பல வசதிகளைக் கொண்ட திண்டிவனம் அரசு மருத்துவமனைக்குப் பரிந்துரைக்கப்படுகிறார்கள். மேலும், இன்னுயிர் காப்போம் திட்டம் செயல்பட்டு வருகிறது. எனவே, மரக்காணம் அரசு மருத்துவமனையை சிறப்பு மருத்துவமனையாக தரம் உயர்த்த தற்சமயம் அவசியம் எழவில்லை.

77—

கட்டடங்கள்

வினா எண் 52389—திரு. பொ. அர்ஜுனன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *நன்னிலம் தொகுதி, நன்னிலம், குடவாசல் மற்றும் வலங்கைமான் மருத்துவமனைகளில் கூடுதல் படுக்கை வசதிகள் ஏற்படுத்தி கட்டடங்கள் கட்ட அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) *திருவாரூர் மாவட்டம், நன்னிலம் அரசு மருத்துவமனை 82 படுக்கை வசதிகள் கொண்ட அரசு வட்ட மருத்துவமனையாகச் செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையில் சராசரியாக நாளொன்றுக்கு 491 நபர்கள் வெளிநோயாளிகளாகவும், 80 நபர்கள் உள்நோயாளிகளாகவும்*

2023 அக்டோபர் 11]

சிகிச்சை பெறுகின்றனர். இம்மருத்துவமனையில் ஆண்கள் பிரிவு, பெண்கள் பிரிவு, மகப்பேறு பிரிவு மற்றும் தொற்றா நோய் பிரிவு போன்ற பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. மேலும், ஆய்வக வசதி, எக்ஸ்ரே, இசிஜி, USG ஸ்கேன், மின்னாக்கி வசதி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி ஆகியவை உள்ளன. இம்மருத்துவமனை மேற்குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து வசதிகளுடன் போதுமான கட்டட வசதிகளுடன் இயங்கி வருகிறது.

குடவாசல் அரசு மருத்துவமனை

திருவாரூர் மாவட்டம், குடவாசல் அரசு மருத்துவமனை 56 படுக்கை வசதிகள் கொண்ட அரசு வட்ட மருத்துவமனையாகச் செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையில் சராசரியாக நாளொன்றுக்கு 324 நபர்கள் வெளிநோயாளிகளாகவும், 33 நபர்கள் உள்நோயாளிகளாகவும் சிகிச்சை பெறுகின்றனர். இம்மருத்துவமனையில் ஆண்கள் பிரிவு, பெண்கள் பிரிவு, குழந்தைகள் பிரிவு மகப்பேறு பிரிவு, அவசர சிகிச்சைப் பிரிவு, அறுவை சிகிச்சை முன் மற்றும் பின் கவனிப்பு பிரிவு, வெளிநோயாளிகள் பிரிவு, நுண்கதிர் பிரிவு, தொற்றா நோய் பிரிவு மற்றும் அறுவை அரங்குகள் ஆகிய வசதிகள் உள்ளன. மேலும், ஆய்வக வசதி, எக்ஸ்ரே, இசிஜி, USG ஸ்கேன், மின்னாக்கி வசதி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி ஆகியவை உள்ளன.

வலங்கைமான் அரசு மருத்துவமனை

திருவாரூர் மாவட்டம், நன்னிலம் தொகுதி, வலங்கைமான் அரசு மருத்துவமனை 32 படுக்கை வசதிகள் கொண்ட அரசு வட்ட மருத்துவமனையாகச் செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையில் சராசரியாக நாளொன்றுக்கு 338 நபர்கள் வெளிநோயாளிகளாகவும், 20 நபர்கள் உள் நோயாளிகளாகவும் சிகிச்சை பெறுகின்றனர். இம்மருத்துவமனையில் ஆண்கள் பிரிவு, பெண்கள் பிரிவு, மகப்பேறு பிரிவு மற்றும் முதியோர்கள் பிரிவு, தொற்றா நோய் பிரிவு போன்ற பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. மேலும், ஆய்வக வசதி, எக்ஸ்ரே, இசிஜி, USG ஸ்கேன், மின்னாக்கி வசதி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி ஆகியவை உள்ளன. இம்மருத்துவமனை மேற்குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து வசதிகளுடனும் போதுமான கட்டட வசதிகளுடனும் இயங்கி வருகிறது.

மேலும், மேற்காணும் மருத்துவமனைகளில் ஒப்பளிக்கப்பட்ட படுக்கை எண்ணிக்கையைவிட குறைவான எண்ணிக்கையிலேயே உள்நோயாளிகள் மற்றும் வெளிநோயாளிகள் சிகிச்சைக்கு வருகின்றனர். நன்னிலம் தொகுதி, நன்னிலம், குடவாசல் மற்றும் வலங்கைமான் ஆகிய அரசு மருத்துவமனைகளில் உள்ள பிரிவுகள் போதுமான கட்டட வசதிகளுடன் செயல்பட்டு வருவதால் இம்மருத்துவமனைகளில் கூடுதல் படுக்கை வசதிகள் ஏற்படுத்தி புதிய கட்டடங்கள் கட்ட தற்சமயம் அவசியம் எழவில்லை.

78—

கட்டடம்

வினா எண் 54662—திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், ஸ்ரீவாஞ்சியம் கிராமத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், நன்னிலம் ஊராட்சி ஒன்றியத்தில் ஸ்ரீவாஞ்சியம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. ஸ்ரீவாஞ்சியம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் தற்போது ஊராட்சி மன்ற மருந்தகக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. ஸ்ரீவாஞ்சியம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டடம் கட்ட தகுதியான நிலத்தைத் தேர்வு செய்து தருமாறு மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் கோரப்பட்டுள்ளது.

நிலம் கிடைக்கப்பெற்றவுடன் முன்னுரிமை அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஸ்ரீவாஞ்சியம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் பொதுப் பணித் துறைமூலம் கட்டடம் கட்ட உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

2023 அக்டோபர் 11]

79—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 54675—திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நன்னிலம் தொகுதி, நன்னிலம் வட்டம், அன்னதானபுரம் ஊராட்சிக்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

அன்னதானபுரம் ஊராட்சியிலிருந்து 2 கிலோ மீட்டர் தொலைவில் பாவட்டக்குடி ஆரம்ப சுகாதார நிலையமும், 6 கிலோ மீட்டர் தொலைவில் வேலங்குடி ஆரம்ப சுகாதார நிலையமும், 8 கிலோ மீட்டர் தொலைவில் பேரளம் ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருவதால், திருவாரூர் மாவட்டம் நன்னிலம் ஊராட்சி ஒன்றியம் அன்னதானபுரம் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

80—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 54676—திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நன்னிலம் தொகுதி, நன்னிலம் வட்டம், பில்லூர் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[*2023 அக்டோபர் 11*

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) *30,000* மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

பில்லூர் ஊராட்சியில் துணை சுகாதார நிலையம் ஒன்று இயங்கி வருகிறது.

பில்லூர் ஊராட்சி, நன்னிலம் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. பில்லூர் ஊராட்சியிலிருந்து *3* கிலோ மீட்டர் தொலைவில் பேரளம் ஆரம்ப சுகாதார நிலையமும், *5* கிலோ மீட்டர் தொலைவில் பாவட்டக்குடி ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருவதால், திருவாரூர் மாவட்டம் நன்னிலம் ஊராட்சி ஒன்றியம், பில்லூர் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

81—

அடிப்படை தேவைகள்

வினா எண் 54829—திரு. தி. ராமச்சந்திரன்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறந்தாங்கி தொகுதி, அறந்தாங்கியில் உள்ள அரசு பொது மருத்துவமனை மாவட்ட மருத்துவமனையாக அறிவிக்கப்பட்டுள்ளதால், இம்மருத்துவமனைக்குத் தேவையான புதிய கட்டடங்கள், தேவையான மருத்துவர்கள், மருத்துவ உபகரணங்கள் அனைத்தையும் உடனடியாக வழங்கி மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி *233* படுக்கை வசதி கொண்ட அரசு மருத்துவமனையாகச்

2023 அக்டோபர் 11]

செயல்பட்டு வருகிறது. இங்கு நாளொன்றுக்கு சராசரியாக 1,350 வெளிநோயாளிகள் மற்றும் 190 உள்நோயாளிகள் சிகிச்சை பெறுகிறார்கள்.

ஒரு மாவட்டத்தில் உள்ள அரசு தலைமை மருத்துவமனை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையாக மாற்றப்படும்போது, அரசின் வழிகாட்டு நெறிமுறையின்படி, அம்மாவட்டத்தில் உள்ள வேறு ஒரு மருத்துவமனை மாவட்ட தலைமை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்படும். அதன் அடிப்படையில், மக்களின் நலனுக்காக, அரசு ஆணை (நிலை) எண் 18, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, நாள் 10-1-2023-ல் அறந்தாங்கி அரசு வட்ட மருத்துவமனையை மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டது. மேலும், அரசு ஆணை (நிலை) எண் 27, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் (EAPII-2) துறை, நாள் 24-1-2023-ல் அறந்தாங்கி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையின் கட்டமைப்பை மேம்படுத்த ரூ.46.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், இக்கட்டடம் பல்வேறு வசதிகளுடன் முழுமை பெற்றவுடன் மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டு உரிய சிகிச்சைகள் வழங்கப்படும்.

82—

TAEI மையம்

வினா எண் 58047—திரு. மு. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சீர்காழி தொகுதி, சீர்காழி அரசு மருத்துவமனையில் TAEI மையத்தை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி அரசு மருத்துவமனை 272 படுக்கை வசதிகள் கொண்ட வட்ட மருத்துவமனையாகச் செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையில் சராசரியாக

[*2023 அக்டோபர் 11*

நாளொன்றுக்கு 1006 நபர்கள் வெளிநோயாளிகளாகவும், 157 நபர்கள் உள்நோயாளிகளாகவும் சிகிச்சை பெறுகின்றனர்.

*தற்போது, இம்மருத்துவமனையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு, பொது அறுவை சிகிச்சைப் பிரிவு, அறுவை அரங்குகள், தொற்றா நோய் சிகிச்சைப் பிரிவு (*NCD*) ஆகியவை சிறப்பாக செயல்படுகின்றன.*

மேலும், Pradhan Mantri Ayushman Bharat Health Infrastructure Mission *(*PM ABHIM*) திட்டத்தின்மூலம், சீர்காழி அரசு மருத்துவமனைக்கு 50 படுக்கை வசதிகளுடன்கூடிய தீவிர சிகிச்சைப் பிரிவு (*Critical Care Block*) கட்டுவதற்காக அரசு ஆணை (நிலை) எண் 16, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் (*EAPII-2*) துறை, நாள் 9-1-2023-ன்படி ரூ.23.75 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

83—

108 அவசர ஊர்தி

வினா எண் 66602—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *தருமபுரி மாவட்டம், பொம்மிடி மல்லாபுரம் பேரூராட்சியில் 108 அவசர ஊர்தியை நிரந்தரமாக நிறுத்த அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) *தருமபுரி மாவட்டம், பொம்மிடி மல்லாபுரம் பேரூராட்சிக்கு 108 அவசர ஊர்தி* TN *20-G-1919 என்ற பதிவெண் கொண்ட வாகனம் ஏற்கெனவே வழங்கப்பட்டு அப்பகுதியின் தேவைக்கேற்ப சிறப்பாகச் சேவை செய்து வருகிறது.*

2023 அக்டோபர் 11]

84—

தரமுயர்த்துதல்

வினா எண் 67638—திரு. ஆ.மு. முனிரத்தினம்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சோளிங்கர் அரசு மருத்துவமனையினை வட்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தி ICU-*வுடன்கூடிய 24 மணிநேர அவசரப் பிரிவு ஏற்படுத்திடவும், நெமிலி புன்னை ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்தவும் அரசு முன்வருமா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சோளிங்கர் அரசு மருத்துவமனை 96 படுக்கை வசதிகளுடன் செயல்பட்டு வரும் அரசு வட்டம் சாரா மருத்துவமனையாகும். இம்மருத்துவமனையில் நாளொன்றுக்கு சராசரியாக 1,097 வெளிநோயாளிகளும், 45 உள்நோயாளிகளும் சிகிச்சை பெறுகின்றனர்.

இம்மருத்துவமனையில் நாளொன்றுக்கு சராசரியாக 30,577 ஆய்வகப் பரிசோதனைகள், 329 இசிஜி, 581 எக்ஸ்ரே ஆகியவை எடுக்கப்படுகின்றன. மேலும், மாதமொன்றுக்கு சராசரியாக 13 பிரசவங்களும், 25 பெரிய மற்றும் 838 சிறிய அறுவை சிகிச்சைகளும் நடைபெறுகின்றன.

தற்போது இம்மருத்துவமனைக்கு குறைந்த எண்ணிக்கையிலேயே வெளிநோயாளிகள் மற்றும் உள்நோயாளிகள் வருகின்றனர். எனவே, இம்மருத்துவமனையில் தற்போதுள்ள, மருத்துவம், மருத்துவம் சாரா மற்றும் இதர பணியாளர்களைக் கொண்டும், வசதிகளைக் கொண்டும் 24 மணி நேரமும் சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது. எனவே, சோளிங்கர் மருத்துவமனையைத் தரம் உயர்த்த தற்சமயம் அவசியம் எழவில்லை.

நெமிலி-புன்னை ஆரம்ப சுகாதார நிலையம்

சோளிங்கர் தொகுதி, நெமிலி பேரூராட்சி, நெமிலியிலிருந்து 2.5 கி.மீ.-ல் புன்னை அரசு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

வருவாய்த் துறையினரால் புதிய வட்டங்கள் உருவாக்கப்படும்போது ஏற்கெனவே அந்த பகுதியில் செயல்பட்டு வரும் அரசு ஆரம்ப சுகாதார நிலையம், அரசு வட்டம் சாரா மருத்துவமனையைத் தரம் உயர்த்துவதன்மூலம் புதியதாக அரசு வட்ட மருத்துவமனை அரசால் மக்களின் தேவைக்கேற்ப படிப்படியாக ஒப்பளிக்கப்படுகிறது.

மக்கள் தொகை பெருக்கம் மற்றும் மக்களின் அதிகப்படியான பயன்பாட்டின் அடிப்படையிலும் மற்றும் அரசின் கொள்கை முடிவின்படி, உரிய நேரத்தில் தேவையின் அடிப்படையில் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களை படிப்படியாகத் தரம் உயர்த்த உரிய நடவடிக்கைகள் அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

85—

பத்திரப் பதிவு கட்டணம்

வினா எண் 7326—திரு. S.R. இராஜா: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பத்திரப்பதிவு கட்டணத்தை 1 சதவீதமாகவும் முத்திரைத்தாள் கட்டணத்தை 4 சதவீதமாகவும் குறைத்து ரியல் எஸ்டேட் தொழில் வளர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அனைத்துத் தரப்பினரின் நலன் கருதி அரசால் பதிவுக் கட்டணத்தை குறைத்திட உத்தேசிக்கப்பட்டு 20-3-2023 அன்று சட்டப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட

2023 அக்டோபர் 11]

2023-2024 நிதிநிலை அறிக்கையில் கிரையம், தானம், பரிமாற்றம் மற்றும் குடும்ப நபர்களுக்கிடையில் அல்லாத ஏற்பாடு ஆவணங்களுக்கு பதிவுக் கட்டணத்தினை 4 சதவீதத்தில் இருந்து 2 சதவீதமாக குறைக்கப்படும் என அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. இவ்வறிவிப்பு விரைவில் நடைமுறைப்படுத்தப்படும் எனவும், தமிழ்நாட்டில் தற்போது கிரைய ஆவணங்களுக்கு 1-4-2012 முதல் சொத்தின் சந்தை மதிப்பின்மீது முத்திரைத் தீர்வை 6 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாகவும் 8 சதவீத முத்திரைத்தீர்வை விதிக்கப்பட்ட குறிப்பிட்ட சில ஆவணங்களுக்கு பொதுமக்களின் நலன் கருதி 8-6-2016 முதல் முத்திரைத்தீர்வை 7 சதவீதமாகவும் குறைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், பதிவுக் கட்டணம் மற்றும் முத்திரைத்தீர்வையினை மேலும் குறைத்திட முகாந்திரம் ஏதும் இல்லை.

86—

கட்டடம்

வினா எண் 11440—திரு. K. மாரிமுத்து: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டி நகரத்தில் வணிக வரி அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

திருத்துறைப்பூண்டி வணிக வரி அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

87—

மாவட்டப் பதிவாளர் அலுவலகம்

வினா எண் 18862—திரு. பூண்டி கே. கலைவாணன்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[*2023 அக்டோபர் 11*

(அ) திருவாரூர் தொகுதி, திருவாரூர் நகராட்சியில் மாவட்டப் பதிவாளர் அலுவலகம் துவங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) *2021-2022* ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையின்போது திருவாரூரில் புதிய பதிவு மாவட்டம் அமைப்பது குறித்து அறிவிப்பு வெளியிடப்பட்டு, அரசாணை (நிலை) எண் *46*, வணிக வரி மற்றும் பதிவு (ஜி) துறை, நாள் *25-3-2022*-ன்படி திருவாரூர் பதிவு மாவட்டம் செயல்படுவதற்கான அறிவிக்கை (Notification) அரசாணை (நிலை) எண் *62*, வணிக வரி மற்றும் பதிவுத் (ஜி) துறை, நாள் *26-4-2022*-ல் வெளியிடப்பட்டது. திருவாரூர் பதிவு மாவட்டம் *26-4-2022* அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.

88—

பத்திரப் பதிவுக் கட்டணம்

வினா எண் 18955—திரு. மு. பாபு: மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முத்திரைத்தாள் கட்டணம், பத்திரப் பதிவுக் கட்டணம் ஆகியவற்றில் மாற்றம் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அனைத்துத் தரப்பினரின் நலன் கருதி அரசால் பதிவுக் கட்டணத்தை குறைத்திட உத்தேசிக்கப்பட்டு *20-3-2023*-ல் சட்டப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட *2023-2024* நிதிநிலை அறிக்கையில் கிரையம், நன்கொடை பரிமாற்றம் மற்றும்

2023 அக்டோபர் 11]

குடும்ப நபர்களுக்கிடையில் அல்லாத ஏற்பாடு ஆவணங்களுக்கு பதிவுக் கட்டணத்தினை 4 சதவீதத்தில் இருந்து 2 சதவீதமாகக் குறைக்கப்படும் என அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் தற்போது கிரைய ஆவணங்களுக்கு அரசாணை (நிலை) எண் 46, வணிக வரி மற்றும் பதிவுத் துறை, நாள் 27-3-2012-ன்படி 1-4-2012 முதல் சொத்திற்கான சந்தை மதிப்புமீது விதிக்கப்படும் முத்திரைத் தீர்வை 6 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. மேலும், 21-1-2003 முதல் உள்ளாட்சி அமைப்புகளுக்கான மிகுவரியும் 5 சதவீதத்திலிருந்து 2 சதவீதமாகக் குறைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

பொதுமக்களின் நலன் கருதி அரசாணை (நிலை) எண் 94, வணிக வரி மற்றும் பதிவுத் (ஜே1) துறை, நாள் 7-6-2016-ன்படி, சில வகை ஆவணங்களுக்கான முத்திரைத் தீர்வை 8 சதவீதத்திலிருந்து 7 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், தற்போது மேலும் முத்திரைத் தீர்வை மற்றும் பத்திரப்பதிவுக் கட்டணத்தைக் குறைத்திடும் எண்ணம் அரசிடம் இல்லை.

89—

அலுவலகம்

வினா எண் 21181—திரு. ஈ. இராஜா: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரன்கோவில் தொகுதி, திருவேங்கடத்தில் இயங்கி வந்த சார்-பதிவாளர் அலுவலகத்தை மீண்டும் திருவேங்கடத்திற்கு மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவேங்கடம் சார்-பதிவகம், ஆவண பதிவுகளின் எண்ணிக்கை குறைவு மற்றும் வருவாய் குறைவு காரணமாக 2003 ஆம் ஆண்டில் அரசினால் முடிவுக்குக் கொண்டு

வரப்பட்டுள்ளது. தற்போது திருவேங்கடம், தனி வருவாய் வட்டமாக அமைந்துள்ளதால் வருவாய் வட்டங்களின் அடிப்படையில் சார்-பதிவக எல்லைகளை சீரமைக்கும்போது, திருவேங்கடத்தில் புதியதாக சார்-பதிவாளர் அலுவலகம் துவக்குவது குறித்து அரசு பரிசீலிக்கும்.

90—

பத்திரப் பதிவு அலுவலகம்

வினா எண் 39224—திரு. சி. மகேந்திரன்: மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மடத்துக்குளம் தொகுதி, மடத்துக்குளத்தில் பத்திரப் பதிவு அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கணியூர் சார்-பதிவகம் வருவாய் வட்ட தலைமையிடமான மடத்துக்குளத்திலிருந்து சுமார் 5 கி.மீ. தொலைவிலேயே மடத்துக்குளம்-காரத்தொழுவு பிரதான சாலையில் அமைந்துள்ள கணியூர் கிராமத்தில் அமைந்துள்ளது. கணியூர் சார்-பதிவகமானது புதியதாக கட்டப்பட்ட அனைத்து வசதிகளும் அமையப்பெற்ற அரசுக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. பொதுமக்கள் ஆவணப் பதிவிற்கு மேற்கண்ட சார்-பதிவகம் சென்று வருவதற்கு எவ்வித இடையூறும் இல்லை. எனவே, கணியூர் சார்-பதிவகம் ஆட்சி எல்லையில் மாற்றம் செய்து மடத்துக்குளம் பகுதியில் சார்-பதிவாளர் அலுவலகம் புதியதாக அமைக்கும் நிலை எழவில்லை.

91—

அலுவலகம்

வினா எண் 52666—திரு. N. அசோக்குமார்: மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2023 அக்டோபர் 11]

(அ) தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு பத்திரப் பதிவு அலுவலகம் மேற்கூரை இடிந்து விழும் நிலையில் உள்ளது. மேலும், மேற்கூரை பகுதியில் மழைக்காலங்களில் தார்ப்பாய் போட்டு மூடி வைக்கப்பட்டுள்ளதால், பத்திரப் பதிவு அலுவலக மேற்கூரையை செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பட்டுக்கோட்டை பதிவு மாவட்டத்தில் இயங்கி வரும் ஒரத்தநாடு சார்பதிவாளர் அலுவலகம் பழுதடைந்து பயன்பாட்டிற்கு உகந்த நிலையில் இல்லாத காரணத்தால் தற்பொழுது வாடகைக் கட்டடத்தில் 7-11-2022 முதல் இயங்கி வருகிறது. புதிய கட்டடம் கட்ட பொதுப் பணித் துறை செயற்பொறியாளரிடமிருந்து விரிவான திட்ட மதிப்பீட்டறிக்கை (Detailed Cost Estimation) பெறப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.

92—

அலுவலகம்

வினா எண் 52711—திரு. ஐட்ரீம் இரா. மூர்த்தி: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராயபுரம் தொகுதி, இராயபுரம் பத்திரப் பதிவு அலுவலகத்திற்கு அனைத்து வசதிகளையும் கொண்ட சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராயபுரம் சார்-பதிவாளர் அலுவலகம், வட சென்னை பதிவு மாவட்டத்தில் அமைந்துள்ளது.

[*2023 அக்டோபர் 11*

இராயபுரம் சார்-பதிவாளர் அலுவலகம் ஏற்கெனவே சென்னை இராஜாஜி சாலையில் உள்ள பதிவுத் துறைக்குச் சொந்தமான 150 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமை வாய்ந்த கட்டடத்தில் இயங்கி வந்தது. இந்நிலையில் கட்டடம் சீரமைப்புப் பணிக்காக 2019-2020 ஆம் நிதியாண்டில் ரூ.9.70 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, புனரமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு முடியும் தருவாயில் உள்ளது. மேற்படி இராயபுரம் சார்-பதிவாளர் அலுவலகம் தற்போது தனியார் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. புனரமைக்கும் பணி நிறைவடைந்தவுடன் மாவட்டப் பதிவாளர் அலுவலகம் வட சென்னை, 1 எண் இணை சார்-பதிவாளர் அலுவலகம் மற்றும் இராயபுரம் சார்-பதிவாளர் அலுவலகம் ஆகிய அலுவலகங்கள் ஒருங்கிணைந்த பதிவுத் துறை வளாகத்தில் இயங்கும்.

93—

அலுவலகம்

வினா எண் 52717—திரு. ஆ. அருண்மொழிதேவன்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கடலூர் மாவட்டம், சேத்தியாதோப்பு பத்திரப் பதிவு அலுவலகக் கட்டடம் பழுதாகி உள்ளதால் பழுது நீக்கம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிதம்பரம் பதிவு மாவட்டத்தில், சேத்தியாதோப்பு சார்-பதிவாளர் அலுவலகம் 1991 ஆம் ஆண்டு முதல் அரசுக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. மேற்படி கட்டடத்திற்கு 2021-2022 ஆம் நிதியாண்டில் பராமரிப்பு மற்றும் மராமத்துப் பணிகள் மேற்கொள்ள ரூ.5,00,000/- (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு பொதுப் பணித் துறையினரால் பழுது பார்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 1-3-2022 முதல் சேத்தியாதோப்பு சார்-பதிவாளர் அலுவலகம் நல்ல நிலையில் செயல்பட்டு வருகிறது.

2023 அக்டோபர் 11]

94—

ஓய்வு அறை

வினா எண் 3330—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் விரைவு போக்குவரத்துக் கழக பணிமனையிலுள்ள தொழிலாளர்களின் ஓய்வு அறை கட்டடத்தைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் விரைவு போக்குவரத்துக் கழக பணிமனையிலுள்ள தொழிலாளர்களின் ஓய்வு அறை 29-12-2021 அன்று சீரமைக்கப்பட்டுள்ளது.

95—

இலவசப் பயணம்

வினா எண் 3888—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் இயக்கப்படும் அனைத்து நகரப் பேருந்துகளிலும் மகளிர் இலவசப் பயணம் செய்ய அனுமதிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (திருநெல்வேலி) லிமிடெட், நாகர்கோவில் மண்டலத்தில்

[*2023 அக்டோபர் 11*

தற்போது 444 நகரப் பேருந்துகளும், 316 புறநகரப் பேருந்துகளும் இயக்கப்பட்டு வருகின்றன. இவற்றில் 314 சாதாரண நகரப் பேருந்துகளில் அனைத்து மகளிரும் 8-5-2021 முதல் கட்டணம் இல்லாமல் பயணம் செய்ய உத்தரவு வழங்கப்பட்டு அதன்படி செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேற்கண்ட சாதாரண நகரப் பேருந்துகள் கன்னியாகுமரி மாவட்ட அனைத்துப் பகுதி மகளிரும் பயன்பெறும் வண்ணம் அனைத்துப் பகுதிகளையும் உள்ளடக்கி இயக்கப்பட்டு வருகின்றன. இயக்கப்பட்டு வரும் மொத்த நகரப் பேருந்துகளில் 71 சதவிகித நகரப் பேருந்துகள் மகளிர் கட்டணமில்லாமல் பயணம் செய்யும் வகையில் அமைந்துள்ளன. மீதமுள்ள 29 சதவிகித நகரப் பேருந்துகள் மட்டுமே பயணிகளின் நலன் மற்றும் நேரத்தை கருத்தில் கொண்டு விரைவு மற்றும் சொகுசு வகைகளில் அன்றாடப் பயணிகள் தேவைக்கேற்ப இயக்கப்படுகின்றன.

96—

பணிமனை

வினா எண் 4153—திரு. எம்.சி. சண்முகையா: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *ஓட்டப்பிடாரம் தொகுதி, ஓட்டப்பிடாரத்தில் போக்குவரத்துக் கழக பணிமனை அமைத்திட அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், ஓட்டப்பிடாரத்திலிருந்து 24 கிலோ மீட்டர் தொலைவில் தூத்துக்குடி நகர் மற்றும் தூத்துக்குடி புறநகர் என இரு பணிமனைகள் இயங்கி வருகின்றன. எனவே, ஓட்டப்பிடாரத்தில் போக்குவரத்துப் பணிமனை அமைக்கவேண்டிய அவசியம் எழவில்லை.

2023 அக்டோபர் 11]

97—

பேருந்து

வினா எண் 4381—திரு. கே.எஸ். சரவணகுமார்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெரியகுளம் தொகுதி, பெரியகுளத்திலிருந்து அடுக்கம் வழியாக கொடைக்கானலுக்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெரியகுளம்-கொடைக்கானல் (வழி) அடுக்கம் ஒரு புதிய வழித்தடமாகும். இதன் தூரம் சுமார் 49 கி.மீ. ஆகும். இவ்வழித்தடத்தில் சில இடங்களில் மண் சரிந்து செப்பனிடும் பணி நடைபெற்று வருகிறது. மேலும், அடுக்கம் பிரிவிலிருந்து பெருமாள் மலை வரை சுமார் 20 குறுகிய வளைவுகள் உள்ளன. இவற்றில் சில வளைவுகளில் பேருந்துகள் செல்ல முடியாத நிலை உள்ளது. மேலும் வளைவு பகுதிகளில் தடுப்புச் சுவர், எச்சரிக்கை மற்றும் போக்குவரத்து சமிக்ஞை பொறிக்கப்படாமல் உள்ளது. தற்போது இவ்வழித்தடத்தில் இருசக்கர வாகனம் மற்றும் இலகுரக வாகனங்கள் மட்டுமே செல்ல முடியும். எனவே, இவ்வழித்தடத்தில் தற்போது பேருந்து இயக்க இயலாது.

98—

பயிற்சி நிலையங்கள்

வினா எண் 7030—திரு. S.S. பாலாஜி: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கட்டுமான இயந்திரம் மற்றும் தளவாடங்கள் இயக்க பயிற்சி நிலையங்களை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் கனரக வாகனம் ஓட்டுவதற்கு, பயிற்சி அளிக்கத் தேவையான ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகள் உள்ளன. எனவே, தனியாக கட்டுமான இயந்திரம் மற்றும் தளவாடங்களை இயக்க பயிற்சி நிலையங்கள் ஏற்படுத்தும் தேவை எழாது.

99—

பேருந்து

வினா எண் 7081—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, கெண்டயனள்ளி ஊராட்சிக்குட்பட்ட வெள்ளமண்காடு கிராமத்திற்கு பெண்ணாகரத்திலிருந்து பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (சேலம்) வரையறுக்கப்பட்டது வாயிலாக, பேருந்து வசதி கோரியுள்ள வெள்ளமண்காடு கிராமத்திற்கு கடந்த 18-5-2022 அன்று முதல் பெண்ணாகரம் கிளை தடம் எண் 741D மூலம் பெண்ணாகரத்திலிருந்து காலை 6-30 மணிக்கு புறப்பட்டு 8-30 மணிக்கு வெள்ளமண்காடு வழியாக மேச்சேரிக்கு ஒரு நடையும்,

2023 அக்டோபர் 11]

*தடம் எண் 742*B *பேருந்தின்மூலம் மேச்சேரியிலிருந்து 17-00 மணிக்கு புறப்பட்டு 17-20 மணிக்கு வெள்ளமண்காடு வழியாக ஏரியூருக்கு ஒரு நடையும் என பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்களின் நலன்கருதி இயக்கப்பட்டு வருகின்றன.*

100—

பேருந்து

வினா எண் 7191—திரு. S. சந்திரன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *திருத்தணி தொகுதி, பொதட்டூர்பேட்டை பேரூராட்சி-சென்னை கோயம்பேடு வரை புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

*(அ) மற்றும் (ஆ) பேருந்து வசதி கோரப்பட்டுள்ள பொதட்டூர்பேட்டை பேரூராட்சி சென்னை கோயம்பேடு வரையிலான வழித்தடமானது ஒரு புதிய வழித்தடமாகும். தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) வரையறுக்கப்பட்டது வாயிலாக பேருந்து தடம் எண் 212*A*-ன் மூலமாக பொதட்டூர்பேட்டையிலிருந்து பூந்தமல்லிக்கு 2 நடைகள் இயக்கப்படுகின்றன. பேருந்து தடம் எண் 97-ன்மூலம் பள்ளிப்பட்டிலிருந்து பூந்தமல்லிக்கு 2 நடைகள் இயக்கப்படுகின்றன. எனவே, பொதட்டூர்பேட்டை பயணிகள் சுமார் 10 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள பள்ளிப்பட்டுக்கு சென்றடைந்து மேற்கூறிய பேருந்து வசதியைப் பயன்படுத்திக்கொள்ளலாம். மாநகரப் போக்குவரத்துக் கழகத்தால் பூந்தமல்லியிலிருந்து கோயம்பேட்டிற்கு மிகக் குறைந்த கால இடைவெளியில் அதிக பேருந்துகள் இயக்கப்படுகின்றன. எனவே, கோரப்பட்டுள்ள வழித்தடத்திற்கு பகுதிவாரியாக பேருந்து வசதிகள் செய்யப்பட்டுள்ளன.*

பட்டியல்-30

1—

பேருந்து

வினா எண் 7192—திரு. S. சந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி தொகுதி, R.K.பேட்டை வட்டம், அம்மையார்குப்பம்-சென்னை கோயம்பேடு வரை புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) வரையறுக்கப்பட்டது வாயிலாக திருத்தணி தொகுதி, R.K.பேட்டை வட்டம், அம்மையார்குப்பத்திலிருந்து கோயம்பேடு வரை தடம் எண் 97S/B-ல் ஒரு பேருந்து தினசரி இயக்கப்பட்டு வருகிறது.

2—

பேருந்து

வினா எண் 7195—திரு. S. சந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி தொகுதி, இரா.கி.பேட்டை முதல் தேவலாம்பாபுரம் வழியாக பொன்னை செல்ல புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்கிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 அக்டோபர் 11]

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருத்தணி தொகுதி, இரா.கி.பேட்டை முதல் தேவலாம்பாபுரம் வழியாக பொன்னை வரையிலான வழித்தடமானது புதிய வழித்தடமாகும். அரசின் புதிய வழித்தடக் கொள்கை வரும்போது பரிசீலிக்கப்படும். தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) வரையறுக்கப்பட்டது வாயிலாக தடம் எண்கள் 164A மற்றும் 164B மூலம் இரா.கி.பேட்டையிலிருந்து பொன்னைக்கு தினசரி 4 நடைகள் இயக்கப்படுகின்றன.

3—

பேருந்து

வினா எண் 7349—திரு. ஈ. ராஜா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரன்கோவிலிலிருந்து சென்னை, கோயம்புத்தூர்-சேலம் வழியாக பெங்களூர் செல்ல குளிர்சாதன வசதி கொண்ட பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் மூலமாக சங்கரன்கோவிலிலிருந்து சென்னைக்கும், சென்னையிலிருந்து சங்கரன்கோவிலுக்கும் தலா ஒரு பேருந்து வீதம் 2 குளிர்சாதனப் பேருந்துகளும், சங்கரன்கோவிலிலிருந்து சேலம் வழியாக பெங்களூருக்கு ஓர் அதிநவீன சொகுசு பேருந்தும் தினசரி

[*2023 அக்டோபர் 11*

இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், சங்கரன்கோவிலிலிருந்து பெங்களூருக்கு கோயம்புத்தூர்-சேலம் வழியாக குளிர்சாதன பேருந்துகள் இயக்க சாத்தியமில்லை.

4—

பணிமனை

வினா எண் 7811—திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிள்ளியூர் தொகுதிக்குட்பட்ட தொலையாவட்டத்தில் போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (திருநெல்வேலி) லிமிடெட், நாகர்கோவில் மண்டலத்தில் தற்போதைய இயக்க தேவைக்கேற்ப மாவட்டத்திற்குள் 12 பணிமனைகள் அமைந்துள்ளன. இப்பணிமனைகளிலிருந்து 444 நகர பேருந்துகளும், 316 புறநகர் பேருந்துகளும் இயக்கப்பட்டு வருகின்றன. இவற்றில் கிள்ளியூர் தொகுதிக்குட்பட்ட தொலையாவட்டத்திற்கு அருகில், குழித்துறை-1, குழித்துறை-2, மார்த்தாண்டம், குளச்சல், திங்கள் நகர் ஆகிய 5 பணிமனைகள் முறையே சுமார் 8 கிலோ மீட்டர், 8.4 கிலோ மீட்டர், 14 கிலோ மீட்டர், 15 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளன. மேற்படி பணிமனைகள் பேருந்துகள் நிறுத்துவதற்கும், பராமரிப்புக்கும் போதிய இடவசதியுடன் அமைந்துள்ளன. இப்பணிமனைகளிலிருந்து இயக்கப்பட்டுவரும் பேருந்துகள், கிள்ளியூர் தொகுதி மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளின் தேவைக்கு ஏற்றவாறு அமைந்துள்ளன. மேலும், அரசாணை (ப) எண் 61, போக்குவரத்துத் துறை, நாள் 9-9-1992-ல் இரண்டு பணிமனைகளுக்கு இடையேயான தூரம் 40 கிலோ மீட்டருக்கு மேல் இருக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளதால், கிள்ளியூர் தொகுதியில் உள்ள தொலையாவட்டத்தில் கூடுதல் பணிமனைகள் ஏற்படுத்த வேண்டிய தேவை எழவில்லை.

2023 அக்டோபர் 11]

5—

பணிமனை

வினா எண் 7812—திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) *கிள்ளியூர் தொகுதியில் போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைக்க அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) *கன்னியாகுமரி மாவட்டத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (திருநெல்வேலி) லிமிடெட், நாகர்கோவில் மண்டலத்தில் தற்போதைய இயக்க தேவைக்கேற்ப மாவட்டத்திற்குள் 12 பணிமனைகள் அமைந்துள்ளன. இப்பணிமனைகளிலிருந்து 444 நகர பேருந்துகளும், 316 புறநகர் பேருந்துகளும் இயக்கப்பட்டு வருகின்றன. இவற்றில் கிள்ளியூர் தொகுதிக்கு அருகில் சுமார் 8 கிலோ மீட்டர் தொலைவில் குழித்துறை-1, குழித்துறை-2 மற்றும் மார்த்தாண்டம் ஆகிய மூன்று பணிமனைகள் உள்ளன. இந்த மூன்று பணிமனைகளிலிருந்து முறையே 59, 56 மற்றும் 68 பேருந்துகள் இயக்கப்படுகின்றன. இப்பணிமனைகளிலிருந்து இயக்கப்பட்டுவரும் பேருந்துகள், கிள்ளியூர் தொகுதி சுற்று வட்டாரப் பகுதிகளின் இயக்கங்களுக்கு ஏற்றவாறு அமைந்துள்ளன. அரசாணை (ப) எண் 61, போக்குவரத்துத் துறை, நாள் 9-9-1992-ல் இரண்டு பணிமனைகளுக்கு இடையேயான தூரம் 40 கிலோ மீட்டருக்கு மேல் இருக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளதால், கிள்ளியூர் தொகுதியில் கூடுதல் பணிமனைகள் ஏற்படுத்த வேண்டிய தேவை எழவில்லை.*

6—

பணிமனை

வினா எண் 10170—திரு. எ.எம்.வி. பிரபாகரராஜா: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும்*

[*2023 அக்டோபர் 11*

வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்பேடு அரசு விரைவு போக்குவரத்துப் பணிமனையின் பழுதடைந்திருக்கும் மேற்கூரையை சீரமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

அரசு விரைவு போக்குவரத்துக் கழக கோயம்பேடு பணிமனையின் மேற்கூரை சரி செய்யப்பட்டு தற்போது நல்ல நிலையில் உள்ளது.

7—

பேருந்து

வினா எண் 11439—திரு. K. மாரிமுத்து: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டியிலிருந்து கும்பகோணம் வழியாக சென்னைக்கு மீண்டும் விரைவுப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு அரசு விரைவு போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு வரையறுக்கப்பட்டது வாயிலாக சென்னையிலிருந்து திருத்துறைப்பூண்டிக்கு 6 பேருந்துகளின் (தடம் எண் 340) மூலம் 8 நடைகள் ECR, திண்டிவனம் மற்றும் புதுச்சேரி வழியாக இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், கும்பகோணத்திலிருந்து தடம் எண் 303 கொண்ட பேருந்துகள் அதிகளவில் சென்னைக்கு இயக்கப்படுகின்றன. எனவே, திருத்துறைப்பூண்டி மற்றும் கும்பகோணம் பகுதிகளைச் சார்ந்த பயணிகள் சென்னை வந்தடைய மேற்கூறிய பேருந்து வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

2023 அக்டோபர் 11]

8—

பேருந்து

வினா எண் 11880—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தூத்துக்குடி விமான நிலையத்திற்கு திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் நாகர்கோவிலிலிருந்து அதிநவீன பேருந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி-இராமேஸ்வரம் நீண்டதூர வழித்தடத்தில் இரண்டு குளிர்சாதன வசதி கொண்ட பேருந்துகளும், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மண்டலத்திலிருந்து திருநெல்வேலி-தூத்துக்குடி வழித்தடத்தில் 4 குளிர்சாதன பேருந்துகளும், திருநெல்வேலி-தூத்துக்குடி முக்கிய சாலையில் உள்ள வாகைகுளத்தில் அமைந்துள்ள விமான நிலையம் வழியாக இயக்கப்படுகின்றன.

9—

பேருந்து

வினா எண் 12900—திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், மின்னாத்தூர் ஊராட்சி, நரங்கியம்பட்டி கிராமத்திற்கு புதிய பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 16-5-2022 அன்று முதல் கந்தர்வகோட்டையிலிருந்து வளவம்பட்டி, சோத்துபாளை,

[*2023 அக்டோபர் 11*

நரங்கியம்பட்டி தொட்டு வந்து ஆதனக்கோட்டை வழியாக புதுக்கோட்டைக்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் கும்பகோணம் லிமிடெட், புதுக்கோட்டை மண்டலம் அரசு நகர் பேருந்து தடம் எண் P2C06(4) மூலம் தினசரி 2 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன.

10—

பேருந்து

வினா எண் 12901—திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கந்தர்வகோட்டை தொகுதி, தஞ்சாவூர் புதிய பேருந்து நிலையத்திலிருந்து மருங்குளம், குளத்தூர் நாயக்கர்பட்டி, பகட்டுவான்பட்டி, கந்தர்வகோட்டை வழியாக புதுக்கோட்டை வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 24-3-2023 அன்று முதல் கந்தர்வகோட்டையிலிருந்து பகட்டுவான்பட்டி, குளத்தூர் நாயக்கர்பட்டி, மருங்குளம் வழியாக தஞ்சாவூருக்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், புதுக்கோட்டை மண்டலம்மூலம் கந்தர்வகோட்டை கிளை அரசு நகர பேருந்து தடம் எண் GKT03(E60), தினசரி 2 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன.

11—

பேருந்து

வினா எண் 15117—திரு. ம. பிரபாகரன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2023 அக்டோபர் 11]

(அ) பெரம்பலூரிலிருந்து நக்கசேலம், புதுஅம்மாபாளையம், ஈச்சம்பட்டி, கண்ணப்பாடி, தேனூர் வழியாக திருச்சி செல்ல புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோரிக்கையிலுள்ள வழித்தடத்தின் மொத்த நீளம் 71 கி.மீ. ஆகும். இவ்வழித்தடம் பெரம்பலூரிலிருந்து திருச்சி செல்வதற்கு சுற்று வழித்தடம் என்பதால் நேரடி பயணிகள் பயணம் செய்ய வாய்ப்பில்லை. கோரிக்கையின் வழித்தடம் முழுவதும் பகுதி பகுதியாக நகர மற்றும் புறநகரப் பேருந்துகள்மூலம் இணைக்கப்பட்டுள்ளது. பெரம்பலூர்-நக்கசேலம் வழித்தடம் பெரம்பலூர்-துறையூர் பேருந்து இயங்கும் பிரதான சாலையாகும். இவ்வழித்தடத்தில் 5 முதல் 10 நிமிட இடைவெளியில் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. மேலும், துறையூர்-எதுமலை வழித்தடத்தில் கண்ணப்பாடி வழியாக 14 நடைகள், துறையூர்-திருச்சி வழித்தடத்தில் கண்ணப்பாடி, தேனூர் வழியாக 2 நடைகள், பெரம்பலூர் – தேனூர் வழித்தடத்தில் நக்கசேலம், கண்ணப்பாடி வழியாக 2 நடைகள், பெரம்பலூர் – நக்கசேலம் வழித்தடத்தில் புதுஅம்மாபாளையம் வழியாக 8 நடைகள், திருச்சி சத்திரம் பேருந்து நிலையம்-தேனூர் வழித்தடத்தில் மண்ணச்சநல்லூர் வழியாக 3 பேருந்துகள் மூலம் 2 நடைகளும் இயக்கப்படுகின்றன.

12—

பேருந்து

வினா எண் 15423—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளச்சல் பணிமனையை விரிவுபடுத்தி கூடுதல் வழித்தடங்களில் பேருந்துகள் இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குளச்சல் பணிமனையில் தரைதளம் கான்கிரீட் அமைக்கும் பொருட்டு குளச்சல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின்மூலம் 2011-2012 ஆம் ஆண்டு ரூ.20.00 இலட்சம் பெறப்பட்டு தரைதள கான்கிரீட் பணிகள் செய்யப்பட்டன. இப்பணிமனையில் சுற்றுச் சுவர் அமைக்காத பகுதியில் சுற்றுச் சுவர் எழுப்பும் பொருட்டு மேற்கண்ட சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின்மூலம் 2017-2018 ஆம் ஆண்டில் ரூ.5.00 இலட்சம் பெறப்பட்டு சுற்றுச் சுவர் எழுப்பப்பட்டது. தற்போதைய தேவைக்கேற்ப இப்பகுதியில் பேருந்து இயக்கம் நடைபெற்றுவரும் நிலையில் குளச்சல் பணிமனையிலிருந்து 43 நகரப் பேருந்துகளும், 21 புறநகர் பேருந்துகளும் இயக்கப்பட்டு வருகின்றன. தற்போது இயங்கி வரும் பேருந்துகளுக்குத் தேவையான கட்டமைப்பு வசதிகள் இப்பணிமனையில் உள்ளன.

13—

பேருந்து

வினா எண் 20977—திரு. இரா. அருள்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலத்திலிருந்து திருப்பதிக்குச் செல்லும் பக்தர்கள் நலன் கருதி கூடுதல் பேருந்துகள் இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு வரையறுக்கப்பட்டது வாயிலாக சேலத்திலிருந்து திருப்பதிக்கு 5 பேருந்துகள் தினசரி இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், கரூரிலிருந்து திருப்பதிக்கு சேலம் வழியாக ஒரு பேருந்தும், கோயம்புத்தூரிலிருந்து திருப்பதிக்கு திருப்பூர், சேலம் வழியாக ஒரு

2023 அக்டோபர் 11]

பேருந்தும், கோயம்புத்தூரிலிருந்து திருப்பதிக்கு சேலம் வழியாக 3 பேருந்துகளும் தினசரி இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, பேருந்து வசதி கோரியுள்ள பகுதிக்கு தற்போதுள்ள பேருந்து வசதிகளே போதுமானதாகக் கருதப்படுகிறது.

14—

பேருந்து

வினா எண் 21557—திரு. எம்.சி. சண்முகையா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதிக்கு, திருநெல்வேலி-சீவலப்பேரி-புளியம்பட்டி-கடம்பூர் வரை புதிய வழித்தடத்தில் நகரப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலியிலிருந்து சீவலப்பேரி, புளியம்பட்டி வழியாக கடம்பூர் வரை உள்ள தூரம் 44.5 கி.மீ. ஆகும். இது அரசு நகரப் பேருந்திற்கு அனுமதித்துள்ள தூரத்தை (35 கி.மீ.) விட கூடுதலாகும் என்பதால் நகரப் பேருந்து இயக்கிட வாய்ப்பில்லை. எனினும், தற்போது கோரிக்கை வழித்தடத்தில் திருநெல்வேலியிலிருந்து சீவலப்பேரி, புளியம்பட்டி, கடம்பூர் வழியாக கோவில்பட்டி வரை நாளொன்றுக்கு 2 சுற்றுகளும், திருநெல்வேலியிலிருந்து சீவலப்பேரி, புளியம்பட்டி, கயத்தார் வழியாக கோவில்பட்டி வரை நாளொன்றுக்கு 2 சுற்றுகளும் கோவில்பட்டி கிளையைச் சார்ந்த புறநகர் பேருந்து தடம் எண் 158 B மூலம் இயக்கப்பட்டு வருகிறது. தற்போது இயக்கப்படும் இச்சுற்றுகளே குறைவான பயணிகள் அடர்வுடன் இயக்கப்பட்டு வருவதால், தற்போது இருக்கும் பேருந்து வசதியே போதுமானதாக உள்ளது.

15—

பேருந்து

வினா எண் 21559—திரு. எம்.சி. சண்முகையா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதிக்கு, ஒட்டப்பிடாரம் குறுக்குச்சாலை-புளியம்பட்டி வரை நகரப்பேருந்தினை புதிய வழித்தடத்தில் இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒட்டப்பிடாரம் குறுக்குச் சாலையிலிருந்து ஒட்டப்பிடாரம் வழியாக புளியம்பட்டி வரை உள்ள தூரம் 43.8 கி.மீ. ஆகும். இது அரசு நகரப் பேருந்திற்கு அனுமதித்துள்ள 35 கி.மீ. தூரத்தை விட கூடுதலாகும் என்பதால் நகரப் பேருந்து இயக்கிட வாய்ப்பில்லை. எனினும், தற்போது தூத்துக்குடியிலிருந்து குறுக்குச்சாலை வழியாக ஒட்டப்பிடாரம் வரை தடம் எண் 55A நகரப் பேருந்துமூலம் நாளொன்றுக்கு 8 சுற்றுகள் இயக்கப்பட்டு வருகிறது. இப்பேருந்தைப் பயன்படுத்தி பயணிகள் ஒட்டப்பிடாரம் வந்தடைந்தால், தூத்துக்குடியிலிருந்து புதியம்புத்தூர், ஒட்டப்பிடாரம், ஓசனூத்து, பாண்டியாபுரம், மணியாச்சி வழியாக புளியம்பட்டிக்கு இயக்கப்படும் தடம் எண் 169A புறநகர் பேருந்து (நாளொன்றுக்கு 2 சுற்றுகள்) மற்றும் தூத்துக்குடியிலிருந்து புதியம்புத்தூர், ஒட்டப்பிடாரம், ஓசனூத்து, பாண்டியாபுரம், வடமலாபுரம், மணியாச்சி, அக்கநாயக்கன்பட்டி, புளியம்பட்டி, கொடியன்குளம், கைலாசபுரம் வழியாக வேப்பன்குளம் வரை இயக்கப்படும் தடம் எண் 553DLX-O (நாளொன்றுக்கு 2 சுற்றுகள்) பேருந்துகளைப் பயன்படுத்தி புளியம்பட்டி சென்றடையலாம்.

2023 அக்டோபர் 11]

16—

பேருந்து

வினா எண் 21560—திரு. எம்.சி. சண்முகையா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓட்டப்பிடாரம் தொகுதி, தூத்துக்குடி புதியம்புத்தூர்-ஓட்டப்பிடாரம்-ஓட்டநத்தம்-கடம்பூர்-கோவில்பட்டி வரை புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோரிக்கை வழித்தடத்தில் தடம் எண் 149A மூலம் கோவில்பட்டியிலிருந்து ஓட்டப்பிடாரம் வழியாக புதியம்புத்தூர் வரை மற்றும் தடம் எண் 105A மூலம் தூத்துக்குடியிலிருந்து புதியம்புத்தூர், ஓட்டப்பிடாரம், ஓட்டநத்தம், மலைப்பட்டி வழியாக பரிவல்லிக்கோட்டை வரை 4 சுற்றுகளும், தடம் எண் 149B மூலம் கோவில்பட்டியிலிருந்து பசுவந்தனை, ஓட்டப்பிடாரம், புதியம்புத்தூர் வழியாக தூத்துக்குடி வரை 2 சுற்றுக்களும், இதே தடத்தில் பசுவந்தனை, ஓட்டப்பிடாரம் வழியாக புதியம்புத்தூர் வரை 6 சுற்றுக்களும், தடம் எண் 149C மூலம் கோவில்பட்டியிலிருந்து பசுவந்தனை, ஓட்டப்பிடாரம், புதியம்புத்தூர் வழியாக தூத்துக்குடி வரை, தடம் எண் 149D மூலம் கோவில்பட்டியிலிருந்து கடம்பூர், புளியம்பட்டி வழியாக தூத்துக்குடி வரை மற்றும் தடம் எண் 149E மூலம் கோவில்பட்டியிலிருந்து பசுவந்தனை, ஓட்டப்பிடாரம், புதியம்புத்தூர் வழியாக தூத்துக்குடி வரை 2 சுற்றுக்கள் இயக்கப்பட்டு வருகின்றன. இது தவிர, தடம் எண் 169A மூலம் தூத்துக்குடியிலிருந்து கடம்பூர் வழியாக கயத்தார் வரை 6 சுற்றுகளும், கோவில்பட்டியிலிருந்து கடம்பூர் வழியாக புளியம்பட்டி வரை புறநகர் பேருந்து தடம் எண் 158A மூலம் நாளொன்றுக்கு 8 சுற்றுக்களும் இயக்கப்பட்டு வருகின்றன. தற்போது

இயக்கப்படும் இச்சுற்றுகளே குறைவான பயணிகள் அடர்வுடன் இயக்கப்பட்டு வருவதால், தற்போது இருக்கும் பேருந்து வசதியே போதுமானதாக உள்ளது.

17—

பேருந்து

வினா எண் 21561—திரு. எம்.சி. சண்முகையா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, திருநெல்வேலி-சீவலப்பேரி-புளியம்பட்டி-கடம்பூர்-கயத்தார்-கோவில்பட்டி வரை புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலியிலிருந்து சீவலப்பேரி, புளியம்பட்டி, கடம்பூர் வழியாக கோவில்பட்டி வரை நாளொன்றுக்கு 2 சுற்றுக்களும், திருநெல்வேலியிலிருந்து சீவலப்பேரி, புளியம்பட்டி, கயத்தார் வழியாக கோவில்பட்டி வரை நாளொன்றுக்கு 2 சுற்றுக்களும், கோவில்பட்டி கிளையைச் சார்ந்த புறநகர் பேருந்து தடம் எண் 158B மூலம் இயக்கப்பட்டு வருகிறது. மேலும் கோவில்பட்டியிலிருந்து கடம்பூர் வழியாக புளியம்பட்டி வரை கோவில்பட்டி கிளையைச் சார்ந்த புறநகர் பேருந்து தடம் எண் 158A மூலம் நாளொன்றுக்கு 8 சுற்றுக்கள் இயக்கப்பட்டு வருகிறது. இப்பேருந்துகளில் பயணிகளின் பயன்பாடு குறைவாக உள்ளதால் தற்போது இருக்கும் வசதியே போதுமானதாக உள்ளது.

18—

பேருந்து

வினா எண் 22952—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2023 அக்டோபர் 11]

(அ) பெண்ணாகரம் தொகுதி, பிக்கிலி ஊராட்சிக்குட்பட்ட பெரியூர் கிராமத்திலிருந்து, பூதிநத்தம், சக்கிலிநத்தம், சீரியம்பட்டி வழியாக புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பேருந்து வசதி கோரியுள்ள பெரியூர் கிராமத்திலிருந்து பூதிநத்தம், சக்கிலிநத்தம், சீரியம்பட்டி வழியாக பாலக்கோடு வழித்தடத்தின் நீளம் 21.0 கிலோ மீட்டர் ஆகும். இதில் பெரியூரிலிருந்து பூதிநத்தம் வரை 2.0 கிலோ மீட்டர் தொலைவிற்கு 4 நகரப் பேருந்துகளின்மூலம் 24 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. பூதிநத்தத்திலிருந்து சீரியம்பட்டி வரையுள்ள 7.0 கிலோ மீட்டர் சாலையில் 2 கொண்டைஊசி வளைவுகள் உள்ளன. இந்த கொண்டைஊசி வளைவுகளில் சாலை குறுகலாகவும், வளைவுகளில் சரியான சரிவு இல்லாமலும், தடுப்புச் சுவர்கள் இல்லாமலும், அபாயகரமாகவும் எதிரே வரும் வாகனங்கள் ஒன்றையொன்று கடந்து செல்ல இயலாத நிலையுள்ளது. மேலும், பாலக்கோட்டிலிருந்து சீரியம்பட்டி வரை 12.0 கிலோ மீட்டர் தொலைவிற்கு 7 நகரப் பேருந்துகளின்மூலம் 38 நடைகள் தினசரி தொடர்ந்து இயக்கப்பட்டு வருகின்றன.

19—

பேருந்து

வினா எண் 37731—திரு. S. பழனி நாடார்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, தென்காசி-சேலம் பேருந்து வழித்தடத்தை மீண்டும் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் (தமிழ்நாடு) வரையறுக்கப்பட்டது வாயிலாக செங்கோட்டையிலிருந்து பெங்களூருக்கு தடம் எண் 881 Ultra Deluxe இல் 2 பேருந்துகள் மற்றும் செங்கோட்டையிலிருந்து ஓசூருக்கு தடம் எண் 772 Ultra Deluxe இல் ஒரு பேருந்தும் தென்காசி, சேலம் வழியாக இயக்கப்படுகின்றன. இப்பேருந்துகள் தினமும் தென்காசியில் நின்று பயணிகளை ஏற்றிக்கொண்டு சேலம் வழியாக பெங்களூருக்குச் சென்றடைகின்றன. எனவே, தென்காசி பயணிகள் மேற்கூறிய பேருந்துகளில் முன்பதிவு செய்து பயணம் மேற்கொள்ளலாம்.

20—

பேருந்து

வினா எண் 37890—திரு. க.சொ.க. கண்ணன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜெயங்கொண்டம் தொகுதி, ஆண்டிமடம், தென்னூர் கிராம மக்கள் பயன்பெறும் வகையில் தென்னூர் முதல் சேலம் வரை புதிய பேருந்து வழித்தடம் அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்னூர்-சேலம் (வழி) ஆண்டிமடம், விருத்தாசலம், வேப்பூர், ஆத்தூர் வழித்தடத்தின் மொத்த நீளம் 167 கி.மீ. ஆகும். தென்னூர்-ஆண்டிமடம் வரை அரசு நகர மற்றும் புறநகரப் பேருந்துகள்மூலம் தினசரி 16 நடைகளும், தனியார் பேருந்துகள்மூலம் தினசரி 10 நடைகளும் ஆக மொத்தம் தினசரி 26 நடைகள் இயக்கப்படுகின்றன. மேலும், ஆண்டிமடம்-விருத்தாசலம்

2023 அக்டோபர் 11]

மற்றும் விருத்தாசலம்-சேலம் வழித்தடத்தில் ஒவ்வொரு 10 முதல் 20 நிமிட இடைவெளியில் புறநகரப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. எனவே, தென்னூர் பகுதி மக்கள் மேற்கண்ட பேருந்துகள்மூலம் ஆண்டிமடம் வந்து அங்கிருந்து விருத்தாசலம் வழியாக சேலம் செல்வதற்கு போதிய பேருந்து வசதி உள்ளது.

21—

பேருந்து

வினா எண் 37891—திரு. க.சொ.க. கண்ணன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஜெயங்கொண்டம் தொகுதி, விருத்தாசலம் முதல் தஞ்சாவூர் வரை வழி (ஆண்டிமடம்-ஜெயங்கொண்டம்-கீழப்பழூர்-திருமானூர்-திருவையாறு) புதிய பேருந்து வழித்தடம் அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விருத்தாசலம்-தஞ்சாவூர் (வழி) ஆண்டிமடம், ஜெயங்கொண்டம், கீழப்பழூர், திருமானூர், திருவையாறு வழியாக புதியதாக பேருந்து இயக்கக் கோரும் வழித்தடத்தின் மொத்த நீளம் 127 கி.மீ. ஆகும். விருத்தாசலம்-ஜெயங்கொண்டம் வழித்தடத்தில் ஒவ்வொரு 10 முதல் 20 நிமிட இடைவெளியிலும், ஜெயங்கொண்டம்-கீழப்பழூர் வழித்தடத்தில் ஒவ்வொரு 10 முதல் 15 நிமிட இடைவெளியிலும், கீழப்பழூர்-தஞ்சாவூர் (வழி) திருமானூர், திருவையாறு வழித்தடத்தில் ஒவ்வொரு 10 முதல் 15 நிமிட இடைவெளியிலும் புறநகரப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. அதன்படி, இவ்வழித்தடத்தில் 239 அரசு பேருந்துகள்மூலம் தினசரி 411 நடைகளும், 40 தனியார் பேருந்துகள்மூலம் தினசரி 103 நடைகளும் இயக்கப்படுகின்றன. எனவே, கோரிக்கையின் வழித்தடம் முழுவதும் மேற்கண்டுள்ளவாறு பகுதி, பகுதியாக புறநகரப் பேருந்துகள்மூலம் போதிய பேருந்து வசதி பெற்றுள்ளது.

22—

பேருந்து

வினா எண் 38043—திரு. க. செல்வராஜ்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாநகரத்தில் இரவு நேர சிறப்பு மாநகரப் பேருந்துகள் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோயம்புத்தூர்) வரையறுக்கப்பட்டது வாயிலாக திருப்பூர் மாநகரில் இரவு நேரப் பேருந்துகள் இரவு 10 மணி முதல் அதிகாலை வரை மற்ற பேருந்துகள் இயக்கத்திற்கு வரும் வரை கோவில்வழி பேருந்து நிலையத்திலிருந்து புதிய பேருந்து நிலையம் வரை மொத்தம் 4 பேருந்துகளின்மூலம் 38 நடைகள் இரவு முழுவதும் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், அவ்வப்போது பயணிகளின் தேவைக்கேற்ப பண்டிகை நாட்களில் கூடுதல் பேருந்துகளும் இயக்கப்பட்டு வருகின்றன.

23—

பேருந்து

வினா எண் 48226—முனைவர் T.R.B. ராஜா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மன்னார்குடி தொகுதிக்குட்பட்ட மன்னார்குடி நகரத்திலிருந்து பைங்காநாடு-இராதாநரசிம்மபுரம்-தென்பரை தோணித்துறை வழியாக முத்துப்பேட்டைக்கு புதிய பேருந்து இயக்க அரசு முன்வருமா?

2023 அக்டோபர் 11]

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

மன்னார்குடி தொகுதிக்குட்பட்ட தென்பரை கிராமத்தில் தென்பரை வடக்கு, தென்பரை தெற்கு, தோணித்துறை பாலம் ஆகிய பேருந்து நிறுத்தங்கள் அமைந்துள்ளன. மன்னார்குடியிலிருந்து பைங்காநாடு, இராதாநரசிம்மபுரம், தென்பரை, புதுக்குடி மற்றும் தோணித்துறை பகுதிக்கு மூன்று நகரப் பேருந்துகள்மூலம் நாளொன்றுக்கு 24 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. இப்பேருந்துகளைப் பயன்படுத்தி தென்பரை கிராமத்தில் அமைந்துள்ள தோணித்துறைப் பாலம் வந்தடைந்தால், மன்னார்குடி-முத்துப்பேட்டை (வழி: பெருகவாழ்ந்தான்) பிரதான வழித்தடத்தில் அமைந்துள்ள தோணித்துறை பாலம் பேருந்து நிறுத்தம் வழியாக இயக்கப்படும் 112 அரசு மற்றும் தனியார் பேருந்து நடைகளைப் பயன்படுத்தி முத்துப்பேட்டை சென்றடையலாம். கோரிக்கை வழித்தடம், மேற்கண்டுள்ளவாறு பகுதி பகுதியாக போதுமான அளவு பேருந்து வசதி பெற்றுள்ளது.

24—

பேருந்து

வினா எண் 48230—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடியிலிருந்து திருப்பூர் மற்றும் கோயம்புத்தூருக்கு S.E.T.C. பேருந்து தினசரி இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

அரசு உத்தரவின்படி அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் மூலமாக 300 கிலோ மீட்டருக்கு மேல் உள்ள தொலைதூரங்களுக்கு மட்டுமே பேருந்துகள் இயக்கப்பட்டு

[*2023 அக்டோபர் 11*

வருகின்றன. மன்னார்குடியிலிருந்து திருப்பூருக்கு மொத்த தூரம் 263 கிலோ மீட்டர் மற்றும் மன்னார்குடியிலிருந்து கோயம்புத்தூருக்கு மொத்த தூரம் 297 கிலோ மீட்டர் மட்டுமே உள்ளது. ஆகையால், திருவாரூர் மாவட்டம், மன்னார்குடியிலிருந்து திருப்பூர் மற்றும் கோயம்புத்தூருக்கு அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் மூலமாக தினசரி பேருந்து இயக்க சாத்தியமில்லை. இருப்பினும், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கும்பகோணம் மூலமாக மன்னார்குடியிலிருந்து திருப்பூருக்கு 2 பேருந்துகளும், திருத்துறைப்பூண்டியிலிருந்து மன்னார்குடி வழியாக திருப்பூருக்கு 3 பேருந்துகளும் மற்றும் வேதாரண்யத்திலிருந்து திருத்துறைப்பூண்டி, மன்னார்குடி வழியாக திருப்பூருக்கு தினசரி 2 பேருந்துகள் இயக்கப்படுகின்றன மற்றும் மன்னார்குடியிலிருந்து கோயம்புத்தூருக்கு 1 பேருந்தும், திருத்துறைப்பூண்டியிலிருந்து கோயம்புத்தூருக்கு மன்னார்குடி வழியாக 2 பேருந்துகளும் தினசரி இயக்கப்படுகின்றன. மேலும், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கோயம்புத்தூர் மூலமாக கோயம்புத்தூரிலிருந்து திருத்துறைப்பூண்டிக்கு மன்னார்குடி வழியாக 1 பேருந்தும் மற்றும் திருப்பூரிலிருந்து மன்னார்குடிக்கு 1 பேருந்தும் தினசரி இயக்கப்படுகிறது. எனவே, மன்னார்குடி பயணிகள் மேற்கூறிய பேருந்து வசதியினைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

25—

பேருந்து

வினா எண் 52096—திரு. இரா. அருள்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வீரபாண்டி தொகுதி, ஐருகு மலைப் பகுதிக்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

ஐருகு மலை அடிவாரத்திலிருந்து ஐருகுமலை வரையிலான வழித்தட நீளம் 7.0 கிலோ மீட்டர் ஆகும். இதில் 2 கிலோ மீட்டர் தூர சாலையானது மிகவும் செங்குத்தாகவும், பாதுகாப்புச் சுவர் இன்றியும் உள்ளது. இவ்வழித்தடத்தில் 26 கொண்டை

2023 அக்டோபர் 11]

ஊசி வளைவுகள் உள்ளன. இவ்வளைவுகளில் பேருந்துகள் திரும்புவதற்குப் போதுமான இடவசதி மற்றும் சுற்றுச் சுவர் இன்றியும் உள்ளதால், தற்போதைய சூழலில் ஜருகு மலை அடிவாரத்திலிருந்து ஜருகுமலைக்கு அரசு பேருந்து இயக்க இயலாத நிலை உள்ளது.

26—

பேருந்து

வினா எண் 52448—டாக்டர் நா. எழிலன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆயிரம் விளக்கு தொகுதி வழியாக இயக்கப்பட்ட தடம் எண் 10A பேருந்துகளை மீண்டும் இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தடம் எண் 10A தி.நகர்-பிராட்வே வரை இயக்கப்பட்ட ஒரு பேருந்து பயணிகளின் வசதிக்காக மேற்கு சைதாப்பேட்டையிலிருந்து தி.நகர் மற்றும் பிராட்வே வழியாக சுங்கச்சாவடி வரை தட நீட்டிப்பு செய்யப்பட்டு தற்போதும் தொடர்ந்து இயக்கப்படுகிறது.

27—

பணிமனை

வினா எண் 52910—திரு. S. சந்திரன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்தணி தொகுதி, இரா.கி.பேட்டை வட்டத்திற்கு புதிய பேருந்து நிலையம் மற்றும் புதிய பேருந்து பணிமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருத்தணி தொகுதி, இரா.கி.பேட்டை வட்டத்தில் புதிய பேருந்து நிலையம் அமைப்பது உள்ளாட்சித் துறையின் முடிவாகும். அரசாணை (ப) எண் 61, போக்குவரத்துத் துறை, நாள் 9-9-1992-ன்படி, ஒரு பணிமனைக்கும், மற்றொரு பணிமனைக்கும் இடையே குறைந்தபட்ச தூரம் 40.0 கிலோ மீட்டர் இருக்க வேண்டும். தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட், திருவள்ளூர் மண்டலத்தின்கீழ் இயங்கும் திருத்தணி பணிமனையிலிருந்து இரா.கி.பேட்டை 22.0 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. எனவே, இரா.கி.பேட்டையில் புதிய போக்குவரத்து பணிமனை துவங்கும் திட்டம் தற்போது இல்லை.

28—

பேருந்து

வினா எண் 54689—திரு. க. சுந்தர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உத்திரமேரூர் மற்றும் வாலாஜாபாத் பகுதியில் இருந்து திருப்பதிக்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) வரையறுக்கப்பட்டது வாயிலாக உத்திரமேரூரிலிருந்து திருப்பதிக்கு பேருந்து தட எண் 212H மூலம் தினசரி 2 நடைகளும், செங்கல்பட்டிலிருந்து வாலாஜாபாத் வழியாக 8 பேருந்துகளின் (தட எண்கள் 212HB, 212HH, 212HN, 212HO, 212HC, 212HD, 212HH மற்றும் 212HK) மூலம் 16 நடைகளும் திருப்பதிக்கு தினசரி இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, உத்திரமேரூர், வாலாஜாபாத் வாழ் பயணிகள் திருப்பதிக்குச் செல்ல மேற்கூறிய பேருந்து வசதியினைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

2023 அக்டோபர் 11]

29—

பேருந்து

வினா எண் 54707—திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம்மூலம் நன்னிலத்திலிருந்து திருப்பதிக்கு சொகுசு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு வரையறுக்கப்பட்டது வாயிலாக, பட்டுக்கோட்டை மற்றும் தஞ்சாவூரிலிருந்து கும்பகோணம் வழியாக 2 பேருந்துகளும், நாகப்பட்டினத்திலிருந்து கும்பகோணம் வழியாக ஒரு பேருந்தும் திருப்பதிக்கு தினசரி இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், இப்பேருந்துகளில் கும்பகோணத்திலிருந்து திருப்பதிக்கு முன்பதிவு செய்து பயணிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே, நன்னிலம் பயணிகள் சுமார் 29 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள கும்பகோணத்திற்கு வந்தடைந்து மேற்கூறிய பேருந்து வசதிகளைப் பயன்படுத்தி திருப்பதியைச் சென்றடையலாம்.

30—

பேருந்து

வினா எண் 54723—திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தஞ்சாவூர் பழைய பேருந்து நிலையத்திலிருந்து TB சானடோரியம் வரை செல்லும் பேருந்தை குரும்பூண்டி வரை இயக்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 26-6-2022 அன்று முதல் தஞ்சாவூர் பழைய பேருந்து நிலையத்திலிருந்து T.B.சானடோரியம் வழியாக குரும்பூண்டி வரை தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், கும்பகோணம் மண்டலம் சார்பாக தஞ்சாவூர் நகர்-2 கிளையிலிருந்து நகரப் பேருந்து தடம் எண் A30 மூலம் தினசரி 4 நடைகள் காலை 9.20 மற்றும் மாலை 2.10 மணிக்கு இயக்கப்பட்டு வருகிறது.

31—

சிற்றுந்து

வினா எண் 54930—திரு. கோ. செந்தில் குமார்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாணியம்பாடி தொகுதி, வாணியம்பாடியிலிருந்து உதயேந்திரம் பேரூராட்சிக்கு சிற்றுந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) வரையறுக்கப்பட்டது, வேலூர் மண்டலத்தில் தற்போது சிற்றுந்து இல்லாததால் வாணியம்பாடியிலிருந்து உதயேந்திரம் பேரூராட்சிக்கு சிற்றுந்துகள் தற்போது இயக்க சாத்தியமில்லை.

32—

பேருந்து

வினா எண் 54932—திரு. கோ. செந்தில்குமார்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2023 அக்டோபர் 11]

(அ) வாணியம்பாடி தொகுதி, வாணியம்பாடியிலிருந்து ஜமுனாமாத்தூர் வழியாக போளூர், வந்தவாசி, திண்டிவனம் வழியாக புதுச்சேரிக்கு பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வாணியம்பாடி தொகுதி, வாணியம்பாடியிலிருந்து ஜமுனாமாத்தூர் வழியாக போளூர், வந்தவாசி, திண்டிவனம் வழியாக புதுச்சேரி வழித்தடமானது மலை பிரதேச வழித்தடம் ஆகும். மேலும், இது ஒரு அண்டை மாநில இயக்கப்பகுதி என்பதால், இரண்டு மாநிலங்களுக்கு இடையே இயக்க ஒப்பந்தம் மேற்கொள்ள வேண்டும். ஆகையால், கோரப்பட்ட வழித்தடத்தில் தற்போது பேருந்து இயக்க சாத்தியமில்லை.

33—

பேருந்து

வினா எண் 58111—திரு. S. அம்பேத்குமார்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதி, வந்தவாசி-நல்லூர் (செம்பூர்-தெய்யார்) வழி சென்றிருந்த அரசு பேருந்தினை மறுபடியும் அதே வழித் தடத்தில் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) வரையறுக்கப்பட்டது திருவண்ணாமலை மண்டலம் வாயிலாக வந்தவாசி-II பணிமனையிலிருந்து பேருந்து தடம் எண் W13A-ல் ஒரு பேருந்து வந்தவாசியிலிருந்து செம்பூர், நல்லூர்

[*2023 அக்டோபர் 11*

வழியாக தெய்யாருக்கு தினசரி 2 நடைகள் இயக்கப்படுகின்றன. மேலும், திண்டிவனம் பணிமனையிலிருந்து தடம் எண் T-29 இல் ஒரு நகரப் பேருந்து திண்டிவனத்திலிருந்து தெய்யார் வழியாக வந்தவாசிக்கு தினசரி 6 நடைகள் இயக்கப்படுகின்றன. இதுவே, தற்போதுள்ள பயணிகளுக்கு போதுமானதாக கருதப்படுகிறது.

34—

பேருந்து

வினா எண் 58114—திரு. S. அம்பேத்குமார்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வந்தவாசி தொகுதியில் வந்தவாசி-குறிப்பேடு வழித்தடத்தில் அரசுப் பேருந்தை இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) வரையறுக்கப்பட்டது வாயிலாக திருவண்ணாமலை மண்டலம் வந்தவாசி பணிமனையிலிருந்து தடம் எண் W8A-ல் ஒரு பேருந்து வந்தவாசியிலிருந்து குறிப்பேட்டிற்கு அதியனூர் வழியாக தினசரி 4 நடைகளும், தடம் எண் W3B-ல் ஒரு பேருந்து வந்தவாசியிலிருந்து குறிப்பேடு வழியாக எலப்பாக்கத்திற்கு தினசரி 14 நடைகளும் இயக்கப்படுகின்றன. இவ்வழித்தடத்தில் பயணிக்கும் பயணிகளின் அடர்வு 33 சதவீதமே உள்ளதால் இப்பேருந்து வசதிகளே போதுமானதாகக் கருதப்படுகிறது.

35—

பேருந்து

வினா எண் 58115—திரு. S. அம்பேத்குமார்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வந்தவாசி தொகுதியில், வந்தவாசி-சேத்பட் வழித்தடத்தில் பேருந்தை இயக்க அரசு ஆவன செய்யுமா?

2023 அக்டோபர் 11]

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) வரையறுக்கப்பட்டது வாயிலாக போளூரிலிருந்து வந்தவாசி சேத்பட் வழியாக சென்னைக்கு 40 பேருந்துகளும், காஞ்சிபுரத்திலிருந்து வந்தவாசி, சேத்பட் வழியாக சேலத்திற்கு 7 பேருந்துகளும், திருவண்ணாமலையிலிருந்து காஞ்சிபுரம், வந்தவாசி, சேத்பட் வழியாக சென்னைக்கு 7 பேருந்துகளும் இயக்கப்படுகின்றன. வந்தவாசி-சேத்பட் வழித்தடத்தில் குறைந்தகால இடைவெளியில் மேற்கூறிய பேருந்துகள் இயக்கப்படுகின்றன. பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் இப்பேருந்துகளில் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர். ஆகையால் வந்தவாசி, சேத்பட் என தனிப்பேருந்து இயக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

36—

பேருந்து

வினா எண் 58293—திரு. V.P. கந்தசாமி: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சூலூர் தொகுதி, செஞ்சேரி புத்தூர் முதல் சூலூர் பிரிவு வரை மற்றும் வதம்பச்சேரி முதல் வாகராயம்பாளையம் வரை இயக்கப்பட்ட பேருந்துகளை மீண்டும் இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோயம்புத்தூர்) வரையறுக்கப்பட்டது வாயிலாக செஞ்சேரிமலையிலிருந்து சுல்தான்பேட்டை, சந்திராபுரம், செலக்கரச்சல் மற்றும் சூலூர் வழியாக ஒரு புறநகர்ப் பேருந்து கோவைக்கு இயக்கப்பட்டு வருகிறது. மேலும், வதம்பச்சேரியிலிருந்து காமநாயக்கன்பாளையம், கரடிவாலி, காரணம்பேட்டை, சோமனூர் மற்றும் கருமத்தம்பட்டி வழியாக வாகராயம்பாளையத்திற்கு நகரப் பேருந்து ஒன்றின்மூலம் 4 நடைகள் போக வர இயக்கப்பட்டதில்

வருவாய் மிகவும் குறைவாக இருந்த காரணத்தால் பயணிகள் அடர்வுள்ள பெரும்பான்மை மக்கள் பயன்பெறும் வகையில் வழித்தட மாறுதல் செய்து இயக்கப்பட்டு வருகிறது. மேலும், காமநாயக்கன்பாளையத்திலிருந்து கருமத்தம்பட்டி வரை ஒரு பேருந்தின்மூலம் 12 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. கோரப்பட்ட வழித்தடத்தில் இணைப்புப் பேருந்துகள் பயணிகள் அடர்விற்கேற்ப இயக்கப்பட்டு வருகின்றன.

37—

பேருந்து

வினா எண் 62012—திரு. பொ. அர்ஜுனன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் தொகுதி, கீழ்பாசார் கிராமத்திற்குள் திண்டிவனம் நகரப் பேருந்து தடம் எண்கள் 6A, 6, 6B, 23 இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திண்டிவனம், கீழ்பாசார் கூட்டுச் சாலையிலிருந்து கீழ்பாசார் கிராமத்தின் வழித்தட நீளம் சுமார் 1.8 கிலோ மீட்டராகும். கோரப்பட்டுள்ளவாறு பேருந்துகளை கீழ்பாசார் கிராமத்திற்குள் சென்று வரும் வகையில் இயக்கினால் ஏற்கெனவே சேவை பெற்றுவரும் கிராமங்களின் நடை நேரம் பாதிப்படையும். எனவே, இவ்வழித்தடத்தில் கூடுதல் பேருந்து இயக்கிட அனுமதி அளிக்கும்பட்சத்தில், மேற்படி இயக்கம் குறித்து பரிசீலிக்கப்படும்.இருப்பினும்,தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (விழுப்புரம்) வரையறுக்கப்பட்டது வாயிலாக திண்டிவனம் கிளையைச் சார்ந்த நகரப் பேருந்து தடம் எண்கள் T6C, T6G, T23B-களின் மூலம் திண்டிவனத்திலிருந்து கீழ்பாசார் கூட்டுச் சாலை வழியாக தினசரி சுமார் 44 நடைகள் பல்வேறு கிராமங்களுக்கு பல்திசை வழித்தட திட்டத்தின்படி இயக்கப்பட்டு வருகின்றன.

2023 அக்டோபர் 11]

38—

பேருந்து

வினா எண் 62626—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, ஒகேனக்கல் முதல் கோயம்புத்தூர் வரை புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பேருந்து வசதி கோரப்பட்டுள்ள ஒகேனக்கல்-கோயம்புத்தூர் ஒரு புதிய வழித்தடமாகும். தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (சேலம்) வரையறுக்கப்பட்டது வாயிலாக ஒகேனக்கல்லிலிருந்து தருமபுரிக்கு 23 பேருந்துகளின்மூலம் 28 நடைகளும், தருமபுரியிலிருந்து கோயம்புத்தூருக்கு பேருந்து தட எண்கள் 457C, 257C, 457I, 457A, 350A, 457J, 457D என 7 நகர் (ம) புறநகர் பேருந்துகளின் மூலம் 7 நடைகள் தினசரி இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, பேருந்து வசதி கோரப்பட்டுள்ள வழித்தடத்திற்கு பகுதிவாரியாக பேருந்து வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

39—

பேருந்து

வினா எண் 64013—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரம் முதல் பாண்டிச்சேரி செல்லும் வழித்தடப் பேருந்தை சனி, ஞாயிறு தினங்களில் வழித்தடத்தில் இயக்குவதை தடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) வரையறுக்கப்பட்டது வாயிலாக பெண்ணாகரம் கிளை தடம் எண் 776A பேருந்து பெண்ணாகரம்-பாண்டிச்சேரிக்கும், பாண்டிச்சேரி பெண்ணாகரத்துக்கும் தருமபுரி ஊத்தங்கரை, திருவண்ணாமலை வழியாக தினசரி தொடர்ந்து இயக்கப்பட்டு வருகிறது. மேலும், பெண்ணாகரம் கிளை தடம் எண் 778G பேருந்து ஒகேனக்கல் பாண்டிச்சேரிக்கும், பாண்டிச்சேரி ஒகேனக்கலுக்கும், பெண்ணாகரம், தருமபுரி, ஊத்தங்கரை, திருவண்ணாமலை வழியாக தினசரி தொடர்ந்து இயக்கப்பட்டு வருகிறது. மேலும், பெண்ணாகரம் முதல் பாண்டிச்சேரி செல்லும் பேருந்துகள் சனி மற்றும் ஞாயிறு தினங்களில் மாற்று வழித்தடத்தில் இயக்கப்படுவதில்லை.

40—

பேருந்து

வினா எண் 66376—திரு. க. அன்பழகன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணத்திலிருந்து சேலத்திற்கு (கும்பகோணம்-ஜெயங்கொண்டம், விருத்தாசலம், ஆத்தூர் வழியாக) தமிழ்நாடு அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம்மூலம் புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருச்சி மண்டலம் ஜெயங்கொண்டம் கிளையிலிருந்து தடம் எண் 556J மூலம் கும்பகோணத்திலிருந்து மதனத்தூர், ஜெயங்கொண்டம், அரியலூர், பெரம்பலூர், ஆத்தூர்

2023 அக்டோபர் 11]

வழியாக சேலம் வரை காலை 6-50 மணிக்கு இயக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் கும்பகோணம் கோட்டம்மூலம் தினசரி 40 நடைகள் கும்பகோணத்திலிருந்து மதனத்தூர், T. பழூர் வழியாக ஜெயங்கொண்டம் வரையிலும், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் கும்பகோணம் மற்றும் விழுப்புரம் கோட்டம்மூலம் தினசரி 18 நடைகள் கும்பகோணத்திலிருந்து அணைக்கரை, ஜெயங்கொண்டம் X-ரோடு ஜெயங்கொண்டம் வழியாக விருத்தாசலம் வரையிலும் இயக்கப்பட்டு வருகின்றன. விருத்தாசலத்திலிருந்து வேப்பூர் கூட்ரோடு, நயினார்பாளையம், தலைவாசல், ஆத்தூர் வழியாக சேலம் வரை தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் விழுப்புரம் கோட்டம்மூலம் 10 நிமிடத்திற்கு ஒரு பேருந்து இயக்கப்படுகிறது. எனவே, கோரிக்கை வழித்தடத்தில் பகுதி பகுதியாக பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

41—

பேருந்து

வினா எண் 66378—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணத்திலிருந்து பெங்களூருக்கு (கும்பகோணம்-விருதாசலம், சேலம் வழியாக) தமிழ்நாடு அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம்மூலம் புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் (தமிழ்நாடு) வரையறுக்கப்பட்டது வாயிலாக கும்பகோணத்திலிருந்து தஞ்சை, விருத்தாசலம் திருச்சி வழியாக பெங்களூருக்கு தினசரி ஒரு குளிர்சாதன பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. இதில் பயணிகளின் பயன்பாடு 60% மட்டுமே உள்ளது. இந்நிலையில் கும்பகோணத்திலிருந்து பெங்களூருக்கு தஞ்சை, விருத்தாசலம், சேலம் சென்று சுற்று வழியாக பேருந்து இயக்க சாத்தியமில்லை.

42—

பேருந்து

வினா எண் 66534—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி நகரிலிருந்து காலை, மாலை பள்ளி நேரங்களில் நல்லம்பள்ளி, சாமிசெட்டிப்பட்டி ஏலகிரி, கமலநத்தம் வரை அரசுப் பேருந்துகளை இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) வரையறுக்கப்பட்டது பேருந்து வசதி கோரியுள்ள வழித்தடத்தில் தருமபுரி நகரிலிருந்து நல்லம்பள்ளி, சாமிசெட்டிப்பட்டி, ஏலகிரி வழியாக கமலநத்தத்திற்கு தருமபுரி நகர் கிளை தடம் எண் D10B பேருந்தின்மூலம் காலை 7-45 மணிக்கும், தருமபுரி நகர் கிளை தடம் எண் D46 பேருந்தின்மூலம் மாலை 6-25 மணிக்கும் நேரடி பேருந்து பள்ளி மாணவ, மாணவியரின் வசதிக்காக இயக்கப்படுகிறது.

43—

பேருந்து

வினா எண் 66535—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, ஒகேனக்கல் முதல் நாமக்கல் வழியாக கொல்லிமலைக்கு புதிய வழித்தடப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 அக்டோபர் 11]

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) வரையறுக்கப்பட்டது வாயிலாக பேருந்து வசதி கோரியுள்ள வழித்தடத்தில் ஒகேனக்கல்லிலிருந்து தருமபுரிக்கு 16 பேருந்துகளின்மூலம் 23 நடைகளும், தருமபுரியிலிருந்து சேலத்திற்கு 140 பேருந்துகளின்மூலம் 196 நடைகளும், சேலத்திலிருந்து நாமக்கல்லிற்கு 200 பேருந்துகளின்மூலம் 306 நடைகளும் மற்றும் நாமக்கல்லிலிருந்து கொல்லிமலைக்கு 9 பேருந்துகளின்மூலம் 32 நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன. பேருந்து வசதி கோரியுள்ள வழித்தடத்தில் உள்ள அனைத்து ஊர்களுக்கும் பகுதி வாரியாக பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. எனவே, இப்பேருந்து வசதிகளே போதுமானதாகக் கருதப்படுகிறது.

44—

பேருந்து

வினா எண் 66544—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி நகரிலிருந்து காலை, மாலை பள்ளி நேரத்தில் நல்லம்பள்ளி, வெள்ளக்கல், கீழ்பூரிக்கல், மேல்பூரிக்கல் வழியாக தொப்பூர் வரை நகரப் பேருந்துகளை இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) வரையறுக்கப்பட்டது வாயிலாக தருமபுரி நகரிலிருந்து நல்லம்பள்ளி, வெள்ளக்கல், கீழ்பூரிக்கல், மேல்பூரிக்கல் வழியாக

[*2023 அக்டோபர் 11*

தொப்பூருக்கு தருமபுரி நகர் கிளை தடம் எண் DO5B பேருந்தின்மூலம் காலை 7-12 மணிக்கும் மற்றும் தொப்பூரிலிருந்து தருமபுரிக்கு மேல்பூரிக்கல், கீழ்பூரிக்கல், வெள்ளக்கல், நல்லம்பள்ளி வழியாக தருமபுரி நகர் கிளை தடம் எண் D11A பேருந்தின்மூலம் மாலை 5-25 மணிக்கும் நேரிடை பேருந்து பள்ளி மாணவ, மாணவியரின் வசதிக்காக காலை மற்றும் மாலை பள்ளி நேரங்களில் தொடர்ந்து இயக்கப்பட்டு வருகிறது.

45—

பேருந்து

வினா எண் 66735—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரம் முதல் சிதம்பரம் வரை கல்லூரி மாணவர்களின் நலன் கருதி புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பேருந்து வசதி கோரப்பட்டுள்ள பெண்ணாகரம் முதல் சிதம்பரம் வரையிலான வழித்தடம் ஒரு புதிய வழித்தடமாகும். இந்த வழித்தடத்தில் புதிய வழித்தடக் கொள்கை குறித்து அரசால் அறிவிக்கும் போது நேரிடை பேருந்து இயக்குவது குறித்து பரிசீலிக்கலாம். இருப்பினும், கோரப்பட்டுள்ள வழித்தடத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) வரையறுக்கப்பட்டது வாயிலாக பேருந்து தடம் எண் 300K இன்மூலம் பெண்ணாகரத்திலிருந்து சேலத்திற்கு இயக்கப்படுகிறது. சேலத்திலிருந்து சிதம்பரத்திற்கு 36 பேருந்துகளின் மூலம் 72 நடைகள் தினசரி இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, பேருந்து வசதி கோரப்பட்டுள்ள வழித்தடத்திற்கு பகுதிவாரியாகப் பேருந்து வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

2023 அக்டோபர் 11]

46—

வசந்த மண்டபம்

வினா எண் 521—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, திருவேதகுடி அருள்மிகு வேதபுரீஸ்வரர் கோயிலில் பழுதடைந்துள்ள வசந்த மண்டபத்திற்கு மாற்றாக புதிய வசந்த மண்டபம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், திருவேதகுடி, அருள்மிகு வேதபுரீஸ்வரர் திருக்கோயிலில் பழுதடைந்துள்ள வசந்த மண்டபத்தைப் புதுப்பிக்கும் பொருட்டு, இந்து சமய அறநிலையத் துறையின் திருப்பணி நடைமுறைகளின்படி தொல்லியல் துறை வல்லுநர் கருத்துரு பெறப்பட்டு, அதனடிப்படையில் மண்டல அளவிலான வல்லுநர் குழுக் கூட்டத்தின் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து மாநில அளவிலான வல்லுநர் குழு மற்றும் மாண்பமை உயர் நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவின் கருத்துரு பெற்று அதனடிப்படையில் மதிப்பீடு தயார் செய்து, அனுமதி பெற்று பணி மேற்கோள்ளப்படும். மேலும், இத்திருக்கோயிலில் போதிய நிதி வசதி இல்லாத காரணத்தினால் வசந்தமண்டபம் சீரமைக்கும் பணியினை மேற்கோள்ள அரசு நிதி மற்றும் உபயதாரர் நிதி எதிர்நோக்கப்படுகிறது.

47—

சுற்றுச் சுவர்

வினா எண் 689—திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[*2023 அக்டோபர் 11*

சின்னசேலம் ஒன்றியம், நல்லாத்தூர் ஊராட்சியில் உள்ள புத்துப்பட்டு மாரியம்மன் கோயிலுக்கு சுற்றுச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி மாவட்டம் மற்றும் வட்டம், நல்லாத்தூர், அருள்மிகு புத்துப்பட்டு மாரியம்மன் திருக்கோயிலில் தெற்கு மற்றும் மேற்கு மதில்சுவர்கள் கட்டப்பட்டுள்ளன. வடக்கு மற்றும் கிழக்கு பகுதியில் மதில்சுவர் புதிதாக கட்டப்பட வேண்டியுள்ளது.

எனவே, இத்திருக்கோயிலுக்கு சுற்றுச் சுவர் கட்டும் பணி குறித்து இந்து சமய அறநிலையத் துறையின் திருப்பணி நடைமுறைகளின்படி தொல்லியல் துறை வல்லுநரின் கருத்துரு பெற விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி கருத்துரு வரப்பெற்றவுடன் மண்டல, மாநில அளவிலான "Heritage Screening Committee" மற்றும் மாண்பமை உயர் நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவின் பரிசீலனைக்கு உட்படுத்தி பெறப்படும் கருத்துருவின் அடிப்படையில் மதிப்பீடு தயார் செய்து உரிய அனுமதி பெற்று பணியினை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

48—

குளம் சீரமைத்தல்

வினா எண் 728—திரு. JMH. அசன் மௌலானா: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேளச்சேரி தொகுதியில் உள்ள அருள்மிகு தண்டீஸ்வரர் கோயில் குளத்தைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 அக்டோபர் 11]

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை, வேளச்சேரி, அருள்மிகு தண்டீஸ்வரர் திருக்கோயில் திருக்குளம் திருக்கோயிலுக்கு வெளிப்புறத்தில் மேற்கு பகுதியில் அமைந்துள்ளது. இக்குளம் யமதீர்த்த குளம் என்று அழைக்கப்படும். இத்திருக்குளம் *151* அடி நீளமும், *115* அடி அகலமும் கொண்ட *17,365* ச.அடி பரப்பில் அமைந்துள்ளது. இத்திருக்குளத்தின் நான்கு புறங்களிலும் *5* அடி உயரத்திற்கு தடுப்புச் சுவரும் அதன்மீது *3* அடி உயரத்திற்கு இரும்பு கிரில்களும் அமைக்கப்பட்டுள்ளன. கோயிலில் சுவாமிக்கு அபிஷேகம் செய்யும் நீர் இத்திருக்குளத்தில் கலப்பதால் பாசிகள் உருவாகின்றன. மாதம் ஒருமுறை இக்குளம் சுத்தம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் அபிஷேக நீர் Bio-Tank மூலம் சுத்திகரிக்கப்படுவதற்கு திருக்கோயில் நிர்வாகத்தின்மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

49—

பணி நிரந்தரம்

வினா எண் 1961—திரு. க. அன்பழகன்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் தொகுதி, திருநாகேஸ்வரம் அருள்மிகு நாகநாதசுவாமி கோயிலில் தினக்கூலி அடிப்படையில் பணிபுரிபவர்களை பணி நிரந்தரம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம் வட்டம், திருநாகேஸ்வரம், அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயிலில் தினக்கூலி அடிப்படையில் தொடர்ந்து ஐந்து வருடங்கள் பணிபுரிந்த *12* பணியாளர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட்டுள்ளனர்.

50—

குடமுழுக்கு

வினா எண் 6726—திரு. S. சந்திரன்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு வட்டம், மேலப்பூடி ஊராட்சியிலுள்ள அருள்மிகு ஸ்ரீவேணுகோபால சுவாமி திருக்கோயிலின் கோபுரம் (விமானம்) மற்றும் அலங்கார மண்டபத்தைச் சீரமைத்து குடமுழுக்கு நடத்தவும் மற்றும் அன்னதானத் திட்டத்தைச் செயல்படுத்தவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டம், மேலப்பூடி கிராமம், அருள்மிகு ஸ்ரீவேணுகோபால சுவாமி திருக்கோயிலின் கோபுரம் (விமானம்) மற்றும் அலங்கார மண்டபத்தைச் சீரமைக்கும் திருப்பணிகள் மேற்கொள்ள மாநில அளவிலான வல்லுநர் குழுவின் அனுமதியின்பேரில் ரூ.14.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி திருக்கோயிலில் நிதி வசதியில்லாத காரணத்தால் பொதுநல நிதிமூலம் திருக்கோயிலின் கோபுரம் (விமானம்) மற்றும் அலங்கார மண்டபத்தைச் சீரமைக்கும் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு குடமுழுக்கு நடத்தப்படும்.

51—

அன்னதானம்

வினா எண் 6727—திரு. S. சந்திரன்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2023 அக்டோபர் 11]

(அ) திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு வட்டம், கரிம்பேடு ஊராட்சியில் உள்ள அருள்மிகு நாதாதீஸ்வரர் திருக்கோயிலில் அன்னதானத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கரிம்பேடு, அருள்மிகு நாதாதீஸ்வரசுவாமி திருக்கோயிலின் அமைவிடம் ஒரு சிறிய கிராமம் ஆகும். இத்திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்கள் மிகவும் குறைவு என்பதுடன் வெளியூர் பக்தர்கள் எவரும் வருகை புரிவதில்லை. மேலும், இத்திருக்கோயிலுக்கு போதிய வருமானம் இல்லை. எனவே இத்திருக்கோயிலில் அன்னதானத் திட்டத்தைச் செயல்படுத்தும் நிலை எழவில்லை.

52—

குடமுழுக்கு

வினா எண் 7525—திரு. சீ. கதிரவன்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மண்ணச்சநல்லூர், கோவத்தகுடி ஊராட்சி, மேற்கு கோவத்தக்குடியில் உள்ள அம்மன் கோயிலுக்கு திருப்பணி செய்து குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டம், கோவத்தக்குடி அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் நேரடி கட்டுப்பாட்டில் இல்லாத ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதியில் உள்ள திருக்கோயிலாகும். மேற்படி திருக்கோயிலுக்கு

[*2023 அக்டோபர் 11*

2021-2022 ஆம் ஆண்டு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதியிலுள்ள திருக்கோயிலுக்கு திருப்பணி செய்ய நிதியுதவி வழங்கும் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மதிப்பீடு தயார் செய்ய துறை பொறியாளர்கள் திருக்கோயிலுக்குச் சென்றபோது இத்திருக்கோயிலில் திருப்பணி முழுவதுமாக முடிக்கப்பட்டு 23-1-2022 அன்று குடமுழுக்கு நடைபெற்றுள்ளது தெரியவரப்பெற்றது. எனவே, மேற்படி திருக்கோயிலுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையானது மண்ணச்சநல்லூர் வட்டம், வயல் நெய்வேலி மகா அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலுக்கு மாற்றி வழங்கப்பட்டுள்ளது.

53—

குடமுழுக்கு

வினா எண் 7526—திரு. சீ. கதிரவன்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாத்தையங்கார்பேட்டை, மங்கலம் ஊராட்சி, கஸ்தூரிப்பட்டியில் உள்ள அருள்மிகு வேப்பிலை மாரியம்மன் திருக்கோயிலுக்கு திருப்பணி செய்து, குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருச்சி மாவட்டம், முசிறி வட்டம். மங்கலம் கஸ்தூரிப்பட்டியில் உள்ள அருள்மிகு வேப்பிலை மாரியம்மன் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் நேரடி கட்டுப்பாட்டில் இல்லாத திருக்கோயிலாகும். மேற்படி திருக்கோயிலுக்கு ஊர் பொதுமக்கள் ஒருங்கிணைந்து திருப்பணிகளை மேற்கொண்டு 15-5-2022 அன்று குடமுழுக்கு நடத்தி முடிக்கப்பட்டது.

2023 அக்டோபர் 11]

54—

சமுதாயக் கூடம்

வினா எண் 9831—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திங்கள் சந்தை பேருந்து நிலையம் அருகே உள்ள இராதாகிருஷ்ணன் கோயிலுக்கு சொந்தமான இடத்தில் சமுதாயக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்ட திருக்கோயில்கள் நிருவாகத்திற்குட்பட்ட திங்கள்சந்தை, அருள்மிகு இராதாகிருஷ்ணன் திருக்கோயிலுக்கு சொந்தமான இடத்தில் சமுதாயக் கூடம் கட்டுவதற்கு திருக்கோயிலில் போதிய நிதி வசதி இல்லை. எனவே, சமுதாயக் கூடம் கட்டுவதற்கு வழிவகை இல்லை.

55—

சமுதாயக் கூடம்

வினா எண் 9911—திரு. பூண்டி கே. கலைவாணன்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாரூர் தொகுதி, மன்னார்குடி ஊராட்சி ஒன்றியம், அரிச்சந்திராபுரம் ஊராட்சி அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயில் வளாகத்தில் புதிய சமுதாயக் கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி ஊராட்சி ஒன்றியம், அரிச்சந்திராபுரம் ஊராட்சி, அருள்மிகு

அங்காளம்மன் திருக்கோயிலுக்கு சொந்தமான இடத்தில் சமுதாயக்கூடம் கட்டுவதற்கு திருக்கோயிலில் போதிய நிதி வசதி இல்லை என்பதால், சமுதாயக் கூடம் கட்டுவதற்கு வழிவகை இல்லை.

56—

குடமுழுக்கு

வினா எண் 11992—திரு. பெ. ராமலிங்கம்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் தொகுதி, புதுச்சத்திரம் ஒன்றியம், நைனாமலை அருள்மிகு வரதராஜப் பெருமாள் திருக்கோயிலை புனரமைத்து, குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

நாமக்கல் மாவட்டம் மற்றும் வட்டம், மின்னாம்பள்ளி அருள்மிகு நைனாமலை வரதராஜப்பெருமாள் திருக்கோயில் மலை உச்சியில் அமைந்துள்ளதால் மலை அடிவாரத்திலிருந்து திருக்கோயிலுக்குச் செல்ல தற்போது படிக்கட்டு வசதி மட்டுமே உள்ள நிலையில், மேற்படி திருக்கோயிலைப் புனரமைத்து குடமுழுக்கு நடத்த ஏதுவாக முதற்கட்டமாக ரூ.13 கோடி சுற்றுலாத் துறை நிதியில் மேற்படி திருக்கோயிலுக்கு மலைப்பாதை அமைக்கும் பணியினை மேற்கொள்ள சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (சு3) துறை, அரசாணை (நிலை) எண் 181, நாள் 21-12-2020-ன்படி ரூ.13.06 கோடி மதிப்பீட்டிற்கு திருத்திய நிருவாக அனுமதி வழங்கப்பட்டு, 17-12-2021 அன்று பணி ஆணை வழங்கப்பட்டு பணி துவங்கப்படும்பொழுது ஆத்தூர் வன எல்லை, நிர்ணய அலுவலர் அவர்களின் வழக்கு எண் 1141/83/அ, நாள் 28-9-2005-ன்படி வழங்கப்பட்ட அளவுகள் மாறுபட்டதால் மீண்டும் முன்மொழிவுகள் 23-3-2022 அன்று ஈரோடு மண்டல இணை ஆணையர் மூலம் நாமக்கல் மாவட்ட வன அலுவலர் அவர்களுக்கு விண்ணப்பிக்கப்பட்டது. நாமக்கல் மாவட்ட வன அலுவலரால் விண்ணப்பிக்கப்பட்டதற்கு

2023 அக்டோபர் 11]

ஆத்தூர் வன எல்லை நிர்ணய அலுவலர் அவர்களின் வழக்கு எண் 225/2022, மாறுபட்ட அளவுகளுக்கான தீர்ப்பு 13-7-2022 அன்று வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது. சென்னை தலைமை வன பாதுகாப்பு அலுவலகத்திலிருந்து அரசாணை பெறப்பட்டவுடன் நெடுஞ்சாலைத் துறையின்மூலம் மலைப்பாதை அமைக்கும் பணி முழுமையாக முடிக்கப்பட்ட பின்பு திருக்கோயில் திருப்பணி வேலைகளை விரைந்து முடித்து திருக்குடமுழுக்கு நடத்தப்படும்.

57—

திருத்தேர்

வினா எண் 12124—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான அருள்மிகு காசி விஸ்வநாதர் திருக்கோயிலுக்கு புதியதாக திருத்தேர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2021-2022 ஆம் ஆண்டு சட்டமன்ற அறிவிப்பில் தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம் மற்றும் நகர், அருள்மிகு காசி விஸ்வநாதசுவாமி திருக்கோயிலுக்கு புதிய திருத்தேர் செய்யப்படும் என அறிவிப்பு வெளியிடப்பட்டு மேற்படி பணிக்கு ரூ.43.60 இலட்சத்திற்கு மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்ட நிலையில் 3-3-2023 அன்று ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட்டுள்ளது. விரைவில் பணியினை முடித்து திருத்தேர் வெள்ளோட்டம் நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

58—

அன்னதானம்

வினா எண் 12263—திரு. மா. சின்னதுரை: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கந்தர்வகோட்டை தொகுதி, மங்களாகோவில் அருள்மிகு ஆதிமத்யார்ஜுனேஸ்வரர் சமேத மருத பெரிய நாயகி அம்மன் திருக்கோயிலில் அன்னதானத் திட்டத்தை செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை வட்டம், மங்களாகோவில், அருள்மிகு ஆதிமத்யார்ஜுனேஸ்வரர் திருக்கோயிலில் போதிய நிதி வசதி இல்லாத காரணத்தினால் அன்னதானத் திட்டத்தினை செயல்படுத்த இயலவில்லை.

59—

குடமுழுக்கு

வினா எண் 15493—திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதி, இந்திரவனம் அருள்மிகு பச்சியம்மன் திருக்கோயிலை புனரமைத்து குடமுழுக்கு நடத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், இந்திரவனம், அருள்மிகு பச்சியம்மன் திருக்கோயில்

2023 அக்டோபர் 11]

இந்து சமய அறநிலையத் துறையின் நேரடி ஆளுகையின்கீழ் இல்லாத திருக்கோயில் ஆகும். ஆகையால் இத்துறையின்மூலம் மேற்படி திருக்கோயிலுக்கு திருப்பணிகள் செய்திட சாத்தியக்கூறுகள் இல்லை.

60—

குடமுழுக்கு

வினா எண் 15494—திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் வட்டம், படவேடு அருள்மிகு ரேணுகாம்பாள் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், அ.கோ.படைவீடு, அருள்மிகு ரேணுகாம்பாள் திருக்கோயில் சட்டப்பிரிவு 46(iii)-ன்கீழ் விளம்புகை செய்யப்பட்ட பட்டியலைச் சேர்ந்த திருக்கோயில் ஆகும். இத்திருக்கோயில் நிலை-1 செயல் அலுவலராலும், திருவண்ணாமலை உதவி ஆணையரால் தக்கார் நிலையிலும் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலில் திருப்பணிகள் நிறைவுபெற்று 6-2-2022 அன்று குடமுழுக்கு நடைபெற்றுள்ளது.

61—

மரத்தேர்

வினா எண் 15496—திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதி, அத்திமூர் கிராமத்தில் உள்ள அருள்மிகு காளியம்மன் திருக்கோயிலுக்கு புதிய மரத்தேர் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், அத்திமூர், அருள்மிகு காளியம்மன் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் நேரடி ஆளுகையின்கீழ் இல்லாத திருக்கோயில் என்பதால் இந்து சமய அறநிலையத் துறையின்மூலம் இத்திருக்கோயிலுக்கு புதிய மரத்தேர் செய்திட சாத்தியக்கூறுகள் இல்லை.

62—

ரோப் கார்

வினா எண் 18424—திரு. இ. கருணாநிதி: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லாவரம் தொகுதி, திருநீர்மலை கோயிலுக்கு பக்தர்கள் செல்ல ரோப் கார் வசதியும், பட்டாச்சாரியார்களுக்கு புதிய வீடுகள் கட்டவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2021-2022 சட்டமன்ற அறிவிப்பு எண் 12-ல் அருள்மிகு அரங்கநாதபெருமாள் திருக்கோயிலுக்கு ரோப் கார் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளதாக இட்காட் நிறுவனத்தின் வல்லுநர் குழு அறிக்கை அளித்துள்ளது. அதனை தொடர்ந்து இப்பணியினை செயல்படுத்திடும் பொருட்டு இட்காட் நிறுவனம் ரூ.8.17 கோடிக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அரசு நிதியில் மேற்கொள்ள மதிப்பீடு பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

2023 அக்டோபர் 11]

2021-2022 சட்டமன்ற அறிவிப்பு எண் 34-ல் திருக்கோயிலில் பணிபுரிந்துவரும் பணியாளர்களுக்கு குடியிருப்பு கட்டுவதற்கு ரூ.1,90,00,000/- மதிப்பீட்டிற்கு அரசாணை பெறப்பட்டு தற்போது 30% பணிகள் நடைபெற்று வருகின்றன. பணிகள் விரைவில் முடிக்கப்பட்டவுடன் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

63—

குடமுழுக்கு

வினா எண் 18463—திரு. தி. ராமச்சந்திரன்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் வட்டம், பரமந்தூரில் உள்ள அருள்மிகு ஸ்ரீஆதிகேசவப்பெருமாள் திருக்கோயிலைப் புனரமைத்து குடமுழுக்கு நடத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டம், பரமந்தூர் கிராமம், அருள்மிகு ஸ்ரீஆதிகேசவப்பெருமாள் திருக்கோயிலில் திருப்பணி செய்வது தொடர்பாக 2021-2022 ஆம் ஆண்டின் சட்டமன்றப் பேரவை அறிவிப்பாக வெளியிடப்பட்டு அரசால் நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டு, திருப்பணி வேலைகள் துவங்கப்பட்டு, முடிவுபெற்ற பின்னர் குடமுழுக்கு நடத்தப்படும்.

64—

கட்டடம்

வினா எண் 21231—திரு. பூண்டி கே. கலைவாணன்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[*2023 அக்டோபர் 11*

(அ) திருவாரூர் தொகுதி, திருவாரூர் நகராட்சியில் இந்து சமய அறநிலையத் துறை இணை ஆணையர் அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூரைவிட நாகப்பட்டினம் மாவட்டத்தில் புகழ்பெற்ற திருக்கோயில்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால், நாகப்பட்டினம் மாவட்டத்தை தலைமையிடமாகக் கொண்டு நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களை ஆட்சி எல்லையாக கொண்டு புதியதாக இணை ஆணையர் மண்டலம் 2021 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. மேற்படி இணை ஆணையர் மண்டலத்தில் திருவாரூர் உதவி ஆணையர் அலுவலகம் உள்ளடக்கியுள்ள நிலையில், திருவாரூர் மாவட்டத்தை தலைமையிடமாகக் கொண்டு புதியதாக இணை ஆணையர் மண்டலம் ஏற்படுத்த வேண்டிய அவசியம் எழவில்லை.

65—

திருப்பணி

வினா எண் 21350—திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு தொகுதி, மாத்தூர் மேற்கு அருள்மிகு மருந்தீஸ்வரர் உடனுறை பெரியநாயகி அம்மன் திருக்கோயிலுக்கு திருப்பணி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவையாறு தொகுதி, மாத்தூர் மேற்கு அருள்மிகு மருந்தீஸ்வரர் உடனுறை பெரியநாயகி அம்மன்

2023 அக்டோபர் 11]

திருக்கோயிலுக்கு உபயதாரர்மூலம் திருப்பணி முடிக்கப்பட்டு 12-9-2022 அன்று குடமுழுக்கு நடைபெற்றது.

66—

குடமுழுக்கு

வினா எண் 21983—திரு. எம்.சி. சண்முகையா: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, கருங்குளம் ஒன்றியம், முறப்பநாடு அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயிலை புனரமைத்து குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் தொகுதி, கருங்குளம் ஒன்றியம், முறப்பநாடு அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயிலுக்கு திருப்பணி செய்வதற்கு தொல்லியல் கருத்துரு பெறப்பட்டு மண்டல மற்றும் மாநில அளவிலான வல்லுநர் குழுக்களின் பரிசீலனைக்கு வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி குழுக்களின் ஒப்புதல் பெறப்பட்ட உடன் அதனடிப்படையில் மதிப்பீடு தயார் செய்து உரிய அலுவலர்களிடம் நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி பெற்று திருப்பணி வேலைகள் துவங்கப்படவுள்ளன. திருப்பணிகள் முடிவுபெற்றதும் குடமுழுக்கு நடத்தப்படும்.

67—

குடமுழுக்கு

வினா எண் 21984—திரு. எம்.சி. சண்முகையா: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[*2023 அக்டோபர் 11*

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, கருங்குளம் ஒன்றியம், வட வல்லநாடு அருள்மிகு திருமூலநாதர் திருக்கோயிலைப் புனரமைத்து குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) *2022-2023* ஆம் ஆண்டு சட்டமன்ற அறிவிப்பில் ஒட்டப்பிடாரம் தொகுதி, கருங்குளம் ஒன்றியம், வடவல்லநாடு அருள்மிகு திருமூலநாதர் திருக்கோயிலில் திருப்பணி மேற்கொள்ள அறிவிப்பு வெளியிடப்பட்டு மேற்படி திருக்கோயிலில் திருப்பணி மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, அரசாணை வெளியிடப்பட்டு உரிய நிருவாக அனுமதி பெறப்பட்டுள்ளது. விரைவில் திருப்பணி வேலைகள் துவங்கப்பட்டு பணிகள் முடிவுற்றதும் குடமுழுக்கு நடத்தப்படும்.

68—

குடமுழுக்கு

வினா எண் 26645—திரு. க. அன்பழகன்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்பகோணம் உதவி ஆணையர் நிர்வாக எல்லையில் உள்ள கிருஷ்ணாபுரம் அருள்மிகு காரணீஸ்வரர் சுவாமி திருக்கோயிலுக்கு திருப்பணி செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

கும்பகோணம் தொகுதி, கிருஷ்ணாபுரம், அருள்மிகு காரணீஸ்வரர்சுவாமி திருக்கோயிலுக்கு திருப்பணி வேலைகள் முடிக்கப்பட்டு *24-2-2023* அன்று திருக்குடமுழுக்கு நடைபெற்றது.

2023 அக்டோபர் 11]

69—

குடமுழுக்கு

வினா எண் 27999—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, P. கொல்லஅள்ளி ஊராட்சி, பொடுத்தம்பட்டி கிராமத்தில் உள்ள அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலைப் புனரமைத்து குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, P. கொல்லஅள்ளி ஊராட்சி பொடுத்தம்பட்டி கிராமத்தில் உள்ள அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் நேரடி ஆளுகையின்கீழ் இல்லாத திருக்கோயில் ஆகும். எனவே, இத்திருக்கோயிலை இந்து சமய அறநிலையத் துறையின் மூலம் புனரமைத்து குடமுழுக்கு நடத்த வழிவகை இல்லை.

70—

குடமுழுக்கு

வினா எண் 28000—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, புலிக்கரை ஊராட்சி, கோயிலூர் கிராமத்தில் உள்ள அருள்மிகு திரௌபதி அம்மன் திருக்கோயிலை புனரமைத்து குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, புலிக்கரை ஊராட்சி, கோவிலூர் கிராமத்தில் உள்ள அருள்மிகு திரௌபதியம்மன் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் ஆளுகையின்கீழ் இல்லாத திருக்கோயில் ஆகும். எனவே, மேற்படி திருக்கோயிலினை இந்து சமய அறநிலையத் துறையின்மூலம் புனரமைத்து குடமுழுக்கு நடத்த வழிவகை இல்லை.

71—

குடமுழுக்கு

வினா எண் 28326—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரம் பேரூர் பகுதியில் உள்ள அருள்மிகு ஸ்ரீபெரிய மாரியம்மன் கோயிலை புனரமைத்து குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், எட்டியாம்பட்டி, இந்திராநகர், அருள்மிகு ஸ்ரீபெரிய மாரியம்மன் திருக்கோயிலுக்கு 2017-2018 ஆம் ஆண்டு கிராமப்புற திருப்பணி நிதியுதவி திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு 27-11-2020 அன்று திருக்குடமுழுக்கு நடைபெற்று தற்போது திருக்கோயில் நல்ல நிலையில் உள்ளது.

2023 அக்டோபர் 11]

72—

குடமுழுக்கு

வினா எண் 28340—திரு. ஜி.கே.மணி: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, கூத்தப்பாடி ஊராட்சி, அளேபுரம் கிராமத்தில் உள்ள அருள்மிகு ஸ்ரீஇலட்சுமி நரசிம்ம சுவாமி திருக்கோயிலை புனரமைத்து குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், அளேபுரம், அருள்மிகு ஸ்ரீஇலட்சுமி நரசிம்ம சுவாமி திருக்கோயிலில் கோபுர புனரமைப்பு பணிகள் நிறைவுற்று 25-5-2014 அன்று திருக்குடமுழுக்கு நடைபெற்றது. தற்போது இத்திருக்கோயிலில் மேற்கொள்ளப்பட வேண்டிய புனரமைப்பு பணிகள் ஏதுமில்லை. 25-5-2014-ல் திருக்குடமுழுக்கு நடைபெற்றதால் 12 ஆண்டுகள் நிறைவடைந்த பின் மராமத்து பணிகள் மேற்கொண்டு திருக்குடமுழுக்கு நடத்தப்படும்.

73—

கலைக் கல்லூரி

வினா எண் 38149—திரு. ரூபி ஆர். மனோகரன்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாங்குநேரி தொகுதி, மூலக்கரைப்பட்டி பேரூராட்சி, செட்டியார்பட்டி, விஜயநாராயணம் சாலையில் பருத்திப்பட்டு கிராமத்தில் இந்து சமய அறநிலையத் துறை சார்பாக கலைக் கல்லூரி துவங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி இணை ஆணையர் மண்டலத்தில் சட்டப்பிரிவு 46(iii)-ன்கீழ் மொத்தம் 20 திருக்கோயில்கள் மட்டுமே உள்ளன. இம்மண்டலத்திலுள்ள ஒரே ஒரு முதுநிலை திருக்கோயிலான கன்னியாகுமரி மாவட்ட திருக்கோயில்கள் சார்பாக ஏற்கெனவே குழித்துறையில் ஸ்ரீதேவி குமாரி மகளிர் கல்லூரி இயங்கி வருகிறது. கொரோனா காலத்தில் திருக்கோயிலுக்கு பக்தர்கள் வருகை குறைந்து நிதி வசதி இன்றியும் இம்மண்டலத்திலுள்ள திருக்கோயில்களில் கல்லூரி கட்டுவதற்கு தேவையான பெரிய முதலீடுகள் இல்லாததாலும், தற்போது பருத்திப்பட்டு கிராமத்தில் கல்லூரி துவங்குவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

74—

குடமுழுக்கு

வினா எண் 38425—திரு. க. அன்பழகன்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் அருகாமையில் உள்ள தாராசுரம் அருள்மிகு ஐராவதீஸ்வரர் திருக்கோயிலுக்கு திருப்பணி செய்து குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், தாராசுரம் அருள்மிகு ஐராவதீஸ்வரர் திருக்கோயிலுக்கு 22-8-2004 அன்று குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது. இத்திருக்கோயிலுக்கு திருப்பணிகள் மேற்கொள்ள தஞ்சாவூர் தேவஸ்தான அரண்மனை அலுவலகத்திலிருந்து மத்திய

2023 அக்டோபர் 11]

தொல்லியல் துறைக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மேலும், தஞ்சாவூர் மண்டல தொல்லியல் ஆலோசகரால் 7-3-2023 அன்று தள ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்திய தொல்லியல் துறை அனுமதி கிடைக்கப் பெற்றவுடன் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு குடமுழுக்கு நடத்தப்படும்.

75—

குடமுழுக்கு

வினா எண் 44955—முனைவர் டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், பட்டியலைச் சேர்ந்த திருக்கோயிலான எடஅன்னவாசல் அருள்மிகு நாகநாதசுவாமி மற்றும் ஓலைக்கொண்ட அய்யனார் திருக்கோயிலுக்கு திருப்பணிகள் செய்து, குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், எடஅன்னவாசல், அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில் மற்றும் எடக்கீழையூர், அருள்மிகு ஓலைக்கொண்ட அய்யனார் திருக்கோயில்களுக்கு திருப்பணி வேலைகள் மேற்கொண்டு குடமுழுக்கு நடத்திட ஏதுவாக தொல்லியல் வல்லுநர் கருத்துரு பெற்று திருக்கோயிலில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருப்பணி வேலைகள் குறித்து மண்டல அளவிலான வல்லுநர் குழு கூட்ட பரிசீலனைக்கு வைக்கப்பட்டு அனுமதி பெறப்பட்டுள்ளது. மாநில அளவிலான வல்லுநர் குழுவில் வைக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டவுடன் திருப்பணி வேலைகள் துவங்கப்படவுள்ளன. திருப்பணி முடிவுற்ற பின்னர் விரைவில் குடமுழுக்கு நடத்தப்படும்.

76—

குடமுழுக்கு

வினா எண் 44963—முனைவர் டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[*2023 அக்டோபர் 11*

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், பட்டியலைச் சேர்ந்த திருக்கோயிலான, ஆலங்கோட்டை அருள்மிகு மகாமழை மாரியம்மன் மற்றும் கணபதி கூத்தப் பிள்ளையார் திருக்கோயில்களுக்கு திருப்பணிகள் செய்து குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

மன்னார்குடி வட்டம், ஆலங்கோட்டை கிராமத்திலுள்ள அருள்மிகு கணபதி கூத்தப்பிள்ளையார் மற்றும் மகாமழை மாரியம்மன் குடமுழுக்கு விழா 10-2-2016 அன்று நடைபெற்று 7 ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ளன என்ற விவரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. மேலும், 12 ஆண்டுகள் நிறைவு பெற்றவுடன் திருப்பணி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

77—

குடமுழுக்கு

வினா எண் 44969—முனைவர் டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் வட்டம், எடமேலையூர் நடுத்தெரு ஊராட்சி, அருள்மிகு அய்யனார் திருக்கோயிலை புனரமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் வட்டம் அருள்மிகு எடமேலையூர் அருள்மிகு அய்யனார் திருக்கோயிலுக்கு திருப்பணி வேலைகள் மேற்கொண்டு குடமுழுக்கு நடத்திட ஏதுவாக தொல்லியல் வல்லுநரால் திருக்கோயில் ஆய்வு செய்யப்பட்டு

2023 அக்டோபர் 11]

திருக்கோயிலில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருப்பணி வேலைகள் பரிந்துரை செய்யப்பட்டு மண்டல அளவிலான வல்லுநர் குழுவின் அனுமதி 1-3-2023 அன்று பெறப்பட்டுள்ளது. மாநில அளவிலான வல்லுநர் குழுக்கூட்டத்தில் ஒப்புதல் பெற்று மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு மதிப்பீட்டிற்கு உரிய அலுவலர்களிடம் நிர்வாக மற்றும் தொழில்நுட்ப அனுமதி பெற்று திருப்பணி வேலைகள் துவங்கப்பட்டு பணிகள் நிறைவு பெற்ற பின்னர் குடமுழுக்கு நடத்தப்படும்.

78—

குடமுழுக்கு

வினா எண் 49013—திரு. இரா. அருள்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் சஞ்சீவராயன்பேட்டை (தாதகாப்பட்டி) அருள்மிகு ஸ்ரீமுனியப்பன் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

சேலம், சஞ்சீவராயன்பேட்டை (தாதகாப்பட்டி) அருள்மிகு ஸ்ரீமுனியப்பன் திருக்கோயில் சர்வே எண் 59/1-ல் 516 சதுரடியில் அமைந்துள்ளது. இத்திருக்கோயிலுக்கு அமைவிடம் தவிர இதர சொத்துகள் ஏதுமில்லை. இத்திருக்கோயிலில் உபயதாரர் நிதிமூலம் திருப்பணிகள் முடிக்கப்பட்டு, 26-3-2022 அன்று மூலவர் முனியப்பன் கற்சிலா விக்கிரகம் மற்றும் வடிவமில்லா மூன்று சுயம்பு கல் மூர்த்திகளை பிரதிஷ்டை செய்து 27-3-2022 அன்று குடமுழுக்கு நடைபெற்றது.

79—

சுற்றுலாத் தலம்

வினா எண் 51053—டாக்டர் சி. சரஸ்வதி: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[*2023 அக்டோபர் 11*

(அ) மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடியில் உள்ள அருள்மிகு மகுடேஸ்வரர் திருக்கோயில் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளை சீரமைத்து, ஆன்மீக சுற்றுலாத் தலமாக உருவாக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கொடுமுடி, அருள்மிகு மகுடேஸ்வரர் மற்றும் வீரநாரயணப் பெருமாள் திருக்கோயில் ஈரோடு மாவட்டத்தில் மிகவும் சிறப்புமிக்க ஸ்தலமாகவும் மூவரால் பாடல் பெற்ற மும்மூர்த்திகள் ஸ்தலமாகவும் விளங்குவதால், இத்திருக்கோயிலுக்கு பல மாநிலங்களிலிருந்தும், பல மாவட்டங்களிலிருந்தும் தினசரி ஆயிரக்கணக்கான பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் வந்த வண்ணம் உள்ளனர்.

2. எனவே, இத்திருக்கோயிலுக்கு வரும் பக்தர்கள் தங்கிச் செல்ல போதிய வசதி இல்லாத காரணத்தால் பக்தர்களின் நலனை கருத்தில் கொண்டு சுற்றுலாத் துறை நிதியுடன் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதி மற்றும் திருக்கோயில் நிதியும் சேர்த்து ரூ.45,00,000/– மதிப்பீட்டில் திருக்கோயிலுக்கு முன்புறம் தங்கும் விடுதி கட்டப்பட்டு 1-11-2006 முதல் பக்தர்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது. சுற்றுலாத் துறை மற்றும் திருக்கோயில் நிதியிலிருந்து திருக்கோயில் முன்புறம் புதியதாக படித்துறை கட்டி விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

3. மேலும் புராதன நகரமாக அறிவிக்கப்பட்டு ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் காவிரிக்கரையில் பேவர் பிளாக் பதிக்கப்பட்டும் படித்துறையில் பக்தர்கள் பாதுகாப்பிற்கு கம்பி வேலி அமைத்து சீரமைக்கப்பட்டும் ஆன்மீக சுற்றுலாத் தலமாக விளங்கி வருகிறது.

80—

கல்லூரி

வினா எண் 51640—திரு. வி.ஜி. இராஜேந்திரன்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2023 அக்டோபர் 11]

திருவள்ளூர் தொகுதி, கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், பேரம்பாக்கம் ஊராட்சியில் உள்ள சிவன் கோயிலுக்குச் சொந்தமான காலியாக உள்ள நிலத்தில் இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம் மற்றும் வட்டம், பேரம்பாக்கம் கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு சோளீஸ்வரர் திருக்கோயிலின் அமைவிடத்திலிருந்து சுமார் 25 கிலோ மீட்டர் தொலைவில் திருத்தணி அரசு கலைக் கல்லூரி அமைந்துள்ளதாலும், திருக்கோயில்மூலம் கல்லூரி துவங்கிட போதுமான நிதி வசதி இல்லை என்பதாலும், மேற்படி திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் இந்து சமய அறநிலையத் துறை சார்பில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவங்கிட சாத்தியக்கூறுகள் ஏதுமில்லை.

81—

குடமுழுக்கு

வினா எண் 52504—திரு. ஆ. அருண்மொழிதேவன்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

புவனகிரி தொகுதி, புவனகிரி பேரூராட்சியில் உள்ள அருள்மிகு அங்காள பரமேஸ்வரி திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், புவனகிரி வட்டம், மேல்புவனகிரி அருள்மிகு அங்காள பரமேஸ்வரியம்மன் திருக்கோயில் திருப்பணிக்காக மாநில அளவிலான வல்லுநர் குழுவின் ஒப்புதலின்

[*2023 அக்டோபர் 11*

அடிப்படையில் ரூ.9,70,000/-க்கு மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டு திருப்பணி நடைபெற்று வருகிறது. திருப்பணி முடிவுற்றவுடன் விரைவில் குடமுழுக்கு நடத்தப்படும்.

82—

தங்கும் விடுதி

வினா எண் 54759—திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாரூர் மாவட்டம், நன்னிலம் வட்டம், ஸ்ரீவாஞ்சியம் அருள்மிகு வாஞ்சியநாத சுவாமி திருக்கோயிலுக்கு தங்கும் விடுதி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், நன்னிலம் வட்டம், திருவாஞ்சியம், அருள்மிகு வாஞ்சியநாதசுவாமி திருக்கோயிலுக்கு 2015-ம் ஆண்டு ரூ.52.00 இலட்சம் மதிப்பீட்டில் சுமார் 100 நபர்கள் தங்கும் வகையில் ஆண் மற்றும் பெண் பக்தர்களுக்கு தனித்தனியாக குளியலறை மற்றும் கழிப்பிட வசதியுடன் தங்கும் விடுதி கட்டப்பட்டு தற்போது பக்தர்களின் பயன்பாட்டில் இருந்து வருகிறது. எனவே, பக்தர்கள் தங்கும் விடுதி புதிதாக கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

83—

வாகன நிறுத்துமிடம்

வினா எண் 54817—திருமதி வானதி சீனிவாசன்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கோயம்புத்தூர் தெற்கு தொகுதி, வார்டு எண் 83-ல் உள்ள வேணுகோபால கிருஷ்ண சுவாமி தெப்பக்குளம் கோயில் உட்புறத்தில் உள்ள வாகன நிறுத்தத்தை மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவர அரசு ஆவன செய்யுமா?

2023 அக்டோபர் 11]

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

கோவை பேரூர் தொகுதி, வார்டு எண் 83-ல் உள்ள கோவை ராஜவீதி, சலீவன் சாலை, பகுதியில் டி.எஸ்.எண் 18-ல் அருள்மிகு வேணுகோபால கிருஷ்ண சுவாமி திருக்கோயில் அன்னதானக்கூடம் திருக்கோயில் அலுவலகம் மற்றும் வாகன நிறுத்துமிடம் ஆகியவை திருக்கோயிலின் உட்புறத்தில் அமைந்துள்ளன. திருக்கோயிலின் உட்புறத்தில் உள்ள இந்த வாகன நிறுத்தம் 2010 முதல் பொதுமக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டு தற்போது வரை பொதுமக்கள் பயன்பாட்டிலேயே இருந்து வருகிறது.

84—

இராஜகோபுரம்

வினா எண் 55030—திரு. அ. பண்ணாரி: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பவானிசாகர் தொகுதி, பு.புளியம்பட்டி பகுதியில் உள்ள அருள்மிகு ஸ்ரீசுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு இராஜகோபுரம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், புஞ்சை புளியம்பட்டி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் எற்கெனவே மூன்று நிலை இராஜகோபுரம் உள்ளதால் தற்போது இராஜகோபுரம் கட்டும் திருப்பணி மேற்கொள்ள அவசியம் எழவில்லை.

85—

தங்கும் விடுதி

வினா எண் 61746—திரு. T.K. அமுல் கந்தசாமி: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் உள்ள அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு தங்கும் விடுதி கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், ஆனைமலை வட்டம் மற்றும் நகர், அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோயில் சட்டப்பிரிவு 46(ii)-ன்கீழ் உதவி ஆணையர்/செயல் அலுவலர் நிலையிலான பட்டியலைச் சேர்ந்த முதுநிலைத் திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலின் பசலி 1429-க்கான உதவித் தொகை நிர்ணயம் வருவாய் ரூ.18,13,199/– ஆகும். மேலும், அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோயிலில் போதுமான இடவசதி இல்லாததால் தற்போது திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு தங்கும் விடுதி அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

86—

குடமுழுக்கு

வினா எண் 64609—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரம் பேரூராட்சியில் உள்ள அருள்மிகு ஈஸ்வரன் திருக்கோயிலை புனரமைத்து, குடமுழுக்கு செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 அக்டோபர் 11]

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம் மற்றும் நகர், அருள்மிகு ஈஸ்வரன் திருக்கோயில் சட்டப்பிரிவு 49 (i)-ன்கீழ் வகைப்படுத்தப்பட்ட பட்டியலைச் சேராத திருக்கோயில் ஆகும். இத்திருக்கோயில் ஒருக்காமலை அருள்மிகு வரதராஜ பெருமாள் திருக்கோயில் செயல் அலுவலரால் தக்கார் நிலையில் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலுக்கு திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு 2018 ஆம் ஆண்டு குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. திருக்கோயில் நல்ல நிலையில் உள்ளதாலும், குடமுழுக்கு நடைபெற்று 12 ஆண்டுகள் நிறைவு பெறாததாலும், தற்பொழுது இத்திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்திட அவசியம் எழவில்லை.

87—

திருப்பணி

வினா எண் 64850—திரு க.சொ.க. கண்ணன்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜெயங்கொண்டம் தொகுதி, ஜெயங்கொண்டம் நகரத்தில் உள்ள அருள்மிகு கழுமலைநாத சுவாமி திருக்கோயிலுக்கு திருப்பணி செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டம், ஜெயங்கொண்டம், அருள்மிகு கழுமலைநாத சுவாமி திருக்கோயில் திருப்பணி மேற்கொள்ளும் பொருட்டு தொல்லியல் வல்லுநர் கருத்துரு பெறப்பட்டு, மண்டல மற்றும் மாநில அளவிலான வல்லுநர் குழுவிலும் கருத்துரு பெறப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் இந்து சமய அறநிலையத் துறை இலாகா பொறியாளர்களால் மதிப்பீடு தயார் செய்யப்பட உள்ளது. மதிப்பீட்டிற்கு உரிய அலுவலர்களிடம் நிர்வாக மற்றும் தொழில்நுட்ப அனுமதி பெற்று திருப்பணி வேலைகள் துவங்கப்படவுள்ளன. திருப்பணிகள் முடிவுபெற்ற பின்னர் குடமுழுக்கு நடத்தப்படும்.

88—

திருப்பணி

வினா எண் 64851—திரு. க.சொ.க. கண்ணன்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜெயங்கொண்டம் தொகுதி, ஜெயங்கொண்டம் நகரத்தில் உள்ள அருள்மிகு சோளீஸ்வரர் திருக்கோயிலுக்கு திருப்பணி செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டம், ஜெயங்கொண்டம் அருள்மிகு சோளீஸ்வரர் திருக்கோயிலில் திருப்பணி செய்வதற்கு தொல்லியல் துறையின் கருத்துரு பெறப்பட்டு, மண்டல மற்றும் மாநில அளவிலான வல்லுநர் குழுவின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், மதிப்பீடு தயார் செய்து நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி பெற்று திருப்பணி வேலைகள் துவக்கப்படும், திருப்பணி முடிவுபெற்ற பின்னர் குடமுழுக்கு நடத்தப்படும்.

89—

திருப்பணி

வினா எண் 64852—திரு. க.சொ.க. கண்ணன்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2023 அக்டோபர் 11]

(அ) ஜெயங்கொண்டம் தொகுதி, ஜெயங்கொண்டம் நகரத்தில் உள்ள அருள்மிகு காட்டுப்பழனியாண்டவர் திருக்கோயிலுக்கு திருப்பணி செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டம், ஜெயங்கொண்டம், அருள்மிகு காட்டுப்பழனியாண்டவர் திருக்கோயில் திருப்பணி மேற்கொள்ளும் பொருட்டு தொல்லியல் வல்லுநர் கருத்துரு பெறப்பட்டு, மண்டல மற்றும் மாநில அளவிலான வல்லுநர் குழுவில் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. அதனடிப்படையில் இந்து சமய அறநிலையத் துறை இலாகா பொறியாளர்களால் மதிப்பீடு தயார் செய்யப்பட உள்ளது. மதிப்பீட்டிற்கு உரிய அலுவலர்களிடம் நிர்வாக மற்றும் தொழில்நுட்ப அனுமதி பெற்று திருப்பணி வேலைகள் துவங்கப்படவுள்ளன. திருப்பணிகள் முடிவுபெற்ற பின்னர் குடமுழுக்கு நடத்தப்படும்.

90—

திருப்பணி

வினா எண் 64853—திரு. க.சொ.க. கண்ணன்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜெயங்கொண்டம் தொகுதி, ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியம், அழகாபுரம் ஊராட்சியில் உள்ள அருள்மிகு அழகேஸ்வரர் திருக்கோயிலுக்கு திருப்பணி செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் வட்டம், அழகாபுரம், அருள்மிகு அழகேஸ்வரர் திருக்கோயிலில் திருப்பணி

[*2023 அக்டோபர் 11*

செய்வதற்கு தொல்லியல் துறையின் கருத்துரு பெறப்பட்டு, மண்டல மற்றும் மாநில அளவிலான வல்லுநர் குழுவின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மதிப்பீடு தயார் செய்து நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி பெற்று திருப்பணி வேலைகள் துவக்கப்படும். திருப்பணி முடிவு பெற்ற பின்னர் குடமுழுக்கு நடத்தப்படும்.

91—

குடமுழுக்கு

வினா எண் 64854—திரு. க.சொ.க. கண்ணன்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஜெயங்கொண்டம் தொகுதி, ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியம், இலையூர் ஊராட்சியில் உள்ள அருள்மிகு செல்லியம்மன் திருக்கோயிலுக்கு திருப்பணி செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

2023 அக்டோபர் 11]

மேலும், இம்மாவட்ட நூலக ஆணைக் குழுவில் போதுமான நிதி ஆதாரம் இல்லாததால், தற்போது பழுதடைந்த நூலகக் கட்டடத்தை இடித்துவிட்டு, புதிய கட்டடம் கட்டுவதற்கான வழிவகையில்லை.

53—

கட்டடம்

வினா எண் 57838—திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், பெருகவாழ்ந்தானில் பழுதடைந்துள்ள கிளை நூலகத்திற்கு புதிய கட்டடம் கட்டவும், அதுவரை நூலகத்தை வேறு கட்டடத்தில் செயல்படுத்தவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், பெருகவாழ்ந்தானில் கிளை நூலகம் 17-11-1966-ல் துவங்கப்பட்டு, மொத்த காலிமனையான 1,200 சதுரடி பரப்பளவில் 600 சதுரடி தரைத்தள சொந்த கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இந்நூலக கட்டடத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகள் தனிநபர் நன்கொடைமூலம் சரிசெய்யப்பட்டு, அதே கட்டடத்தில் நூலகம் செயல்பட்டு வருகிறது. எனவே, இக்கிளை நூலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட அவசியம் எழவில்லை.

54—

கட்டடம்

வினா எண் 57839—திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், ஜாம்பவானோடையில் பழுதடைந்துள்ள கிளை நூலகத்திற்கு புதிய கட்டடம் கட்டவும், அதுவரை நூலகத்தை வேறு கட்டடத்தில் செயல்படுத்தவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், ஜாம்பவானோடையில் கிளை நூலகம் ஏதும் செயல்படவில்லை. ஜாம்பவானோடை ஊர்ப்புற நூலகம் 24-9-1997-ல் துவங்கப்பட்டு, 200 சதுரடி பரப்பளவு கொண்ட சொந்தக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. தற்போது இந்நூலகக் கட்டடத்தில் பழுது ஏற்பட்டுள்ளதால் வாசகர்கள்/பொதுமக்கள் நலன் கருதி, நூலகத்தினை இலவச/வாடகை கட்டடங்களில் மாற்றம் செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், இம்மாவட்ட நூலக ஆணைக் குழுவில் போதுமான நிதி ஆதாரம் இல்லாததால், தற்போது புதிய நூலகக் கட்டடம் கட்டுவதற்கான வழிவகையில்லை.

55—

தரம் உயர்த்துதல்

வினா எண் 57846—திரு. K.N. விஜயகுமார்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் வடக்கு தொகுதி, காளிபாளையம் ஊராட்சி, குருவாயூரப்பன் நகர் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துவது குறித்து அரசால் நெறிமுறைகள்

2023 அக்டோபர் 11]

வகுக்கப்பட்டுள்ளன. இந்நெறிமுறைகளை திருப்பூர் வடக்கு தொகுதி, காளிபாளையம் ஊராட்சி, குருவாயூரப்பன் நகரில் உள்ள உயர்நிலைப் பள்ளி நிறைவு செய்யாததால், தற்போது இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலாத சூழல் உள்ளது.

56—

கட்டடம்

வினா எண் 57891—திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலம் தொகுதி, ஓலக்கூர் ஒன்றியம், தாதாபுரம் கிராமத்தில் நூலகக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், மயிலம் தொகுதி, ஓலக்கூர் ஒன்றியம், தாதாபுரம் கிராமத்தில் தாதாபுரம் கிளை நூலகம் 2-3-1966-ல் துவங்கப்பட்டு மொத்த 600 சதுரடி பரப்பளவு கொண்ட சொந்தக் கட்டடத்தில் தரைத் தளத்தில் நூலகம் செயல்பட்டு வந்தது. இக்கிளை நூலகக் கட்டடம் மிகவும் பழுதடைந்து பயன்படுத்த இயலாததால் வாசகர்களின் பாதுகாப்பு நலன் கருதி ரூ.700/ – மாத வாடகைக் கட்டடத்தில் 21-1-2021 முதல் நூலகம் மாற்றம் செய்து செயல்பட்டு வருகிறது. இம்மாவட்ட நூலக ஆணைக் குழுவில் போதுமான நிதி ஆதாரம் இல்லாததால், தற்போது இந்நூலகத்திற்கு புதிய கட்டடம் கட்டுவதற்கு வழிவகையில்லை.

57—

கட்டடம்

வினா எண் 57909—திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலம் தொகுதி, மயிலம் ஒன்றியம், ரெட்டணை கிராமத்தில் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறை கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், மயிலம் தொகுதி, மயிலம் ஒன்றியம், ரெட்டணை அரசு மேல்நிலைப் பள்ளியில் 729 மாணவ/மாணவியர்கள் பயின்று வருகின்றனர். 30 ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகின்றனர். 18 வகுப்பறைகள் மற்றும் 2 ஆய்வகம் உள்ளன. தற்போது உள்ள மாணவர்கள் எண்ணிக்கைக்கேற்ப வகுப்பறைகள் போதுமானதாக உள்ளன.

58—

பள்ளி துவக்குதல்

வினா எண் 58798—திரு. ஈ. ராஜா: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரன்கோவில் வடக்கு அழகுநாச்சியாபுரம் கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 அக்டோபர் 11]

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சங்கரன்கோவில் வடக்கு அழகுநாச்சியாபுரம் கிராமத்தில் நிதி உதவிபெறும் இந்து தொடக்கப் பள்ளி செயல்படுகிறது. மேலும், இப்பள்ளிக்கு 2 கி.மீ. தொலைவில் ரெங்கசமுத்திரம் அமலி அன்னை உயர்நிலைப் பள்ளி செயல்பட்டு வருகிறது. எனவே, சங்கரன்கோவில் வடக்கு அழகுநாச்சியாபுரம் கிராமத்தில் புதிதாக ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி தொடங்குவதற்கான சூழல் தற்போது எழவில்லை.

59—

நூலகம்

வினா எண் 58913—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, மல்லிக்குட்டை ஊராட்சி, நிம்மாங்கரை கிராமத்தில் நூலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பொது நூலக இயக்ககத்தால், 1,000 எண்ணிக்கை மக்கள் தொகை உள்ள கிராமங்களில், நூலகம் அமைப்பதற்காக நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டால், முதற்கட்டமாக பகுதிநேர நூலகங்கள் திறக்கப்பட்டு வருகின்றன. தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, மல்லிக்குட்டை ஊராட்சி, நிம்மாங்கரை கிராமத்தின் மொத்த மக்கள் தொகை 340 ஆகும். எனவே, நிம்மாங்கரை கிராமத்தின் மொத்த மக்கள் தொகை மிகக் குறைவாக உள்ளதால், அப்பகுதியில் தற்போது நூலகம் அமைக்க வழிவகையில்லை.

60—

நூலகம்

வினா எண் 58914—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, மல்லிக்குட்டை ஊராட்சி, ராமியம்பட்டி கிராமத்தில் நூலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பொது நூலக இயக்ககத்தால், 1,000 எண்ணிக்கை மக்கள் தொகை உள்ள கிராமங்களில், நூலகம் அமைப்பதற்காக நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டால், முதற்கட்டமாக பகுதிநேர நூலகங்கள் திறக்கப்பட்டு வருகின்றன. தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, மல்லிக்குட்டை ஊராட்சி, ராமியம்பட்டி கிராமத்தின் மொத்த மக்கள் தொகை 740 ஆகும். எனவே, ராமியம்பட்டி கிராமத்தின் மொத்த மக்கள் தொகை மிகக் குறைவாக உள்ளதால், அப்பகுதியில் தற்போது நூலகம் அமைக்க வழிவகையில்லை.

61—

கட்டடம்

வினா எண் 59148—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், தருமபுரி வட்டம், நூலஅள்ளி ஊராட்சி, உழவன் கொட்டாய்க்கு புதிய நூலகக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

2023 அக்டோபர் 11]

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், தருமபுரி வட்டம், நூலஅள்ளி ஊராட்சி, உழவன்கொட்டாயில் பொது நூலக இயக்ககத்தின்கீழ் நூலகம் ஏதும் செயல்படவில்லை. பொது நூலக இயக்ககத்தால் 1,000 எண்ணிக்கை மக்கள் தொகை உள்ள கிராமங்களில் நூலகம் அமைப்பதற்காக நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டால், முதற்கட்டமாக பகுதிநேர நூலகங்கள் திறக்கப்பட்டு வருகின்றன. தருமபுரி மாவட்டம், தருமபுரி வட்டம், நூலஅள்ளி ஊராட்சி, உழவன்கொட்டாய் பகுதியில் மொத்த மக்கள் தொகை 481 ஆகும், எனவே, உழவன்கொட்டாய் கிராமத்தில் மொத்த மக்கள் தொகை மிகக் குறைவாக உள்ளதால், அப்பகுதியில் தற்போது நூலகம் அமைக்க வழிவகையில்லை.

62—

தரம் உயர்த்துதல்

வினா எண் 59149—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், பாலவாடி மற்றும் கொமத்தம்பட்டி ஆகிய கிராமங்களிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துவது குறித்து அரசால் நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. இந்நெறிமுறைகளை தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், பாலவாடி மற்றும் கொமத்தம்பட்டி ஆகிய கிராமங்களிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளிகள் நிறைவு செய்யாததால், தற்போது இப்பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளகத் தரம் உயர்த்த இயலாத சூழல் உள்ளது.

63—

நூலகம்

வினா எண் 59208—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, மல்லிக்குட்டை ஊராட்சி, மேடுஅள்ளி கிராமத்தில் நூலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பொது நூலக இயக்ககத்தால் 1,000 எண்ணிக்கை மக்கள் தொகை உள்ள கிராமங்களில் நூலகம் அமைப்பதற்காக நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டால், முதற்கட்டமாக பகுதிநேர நூலகங்கள் திறக்கப்பட்டு வருகின்றன. தருமபுரி மாவட்டம். பெண்ணாகரம் தொகுதி, மல்லிக்குட்டை ஊராட்சி, மேடுஅள்ளி கிராமத்தின் மொத்த மக்கள் தொகை 520 ஆகும். எனவே, மேடுஅள்ளி கிராமத்தின் மொத்த மக்கள் தொகை மிகக் குறைவாக உள்ளதால், அப்பகுதியில் தற்போது நூலகம் அமைக்க வழிவகையில்லை.

64—

கட்டடம்

வினா எண் 61712—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், பண்டஅள்ளி ஊராட்சி, பண்டஅள்ளி கிராமத்தில் உள்ள ஊர்ப்புற நூலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

2023 அக்டோபர் 11]

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பண்டஅள்ளி ஊர்ப்புற நூலகம் 15-2-2008-ல் துவங்கப்பட்டு, 320 சதுரடி பரப்பளவில் ஊராட்சி மன்ற கட்டடத்தில் நாளிதழ்/பருவஇதழ் பிரிவு, குறிப்புதவிப் பிரிவு மற்றும் நூல் இரவல் பிரிவு ஆகிய பிரிவுகளுடன் வாடகையில்லா இலவசக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இந்நூலகத்திற்கு காலிமனை கிடைக்கப்பெறாத நிலையில், தற்போது இந்நூலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட வழிவகையில்லை.

65—

நூலகம்

வினா எண் 62294—திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, மாங்காடு, கூட்டுரோடு தெற்கு காமாட்சி நகரில் நூலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நூலகம் அமைப்பதற்காக வரையறுக்கப்பட்ட விதிகளின்படி, முதலில் பகுதி நேர நூலகம் மட்டுமே அமைக்க இயலும். பொது மக்களின் பயன்பாடு மற்றும் உறுப்பினர்களின் எண்ணிக்கை அடிப்படையில் பகுதி நேர நூலகமானது, ஊர்ப்புற நூலகம்/கிளை நூலகம்/முழுநேர கிளை நூலகமாகத் தரம் உயர்த்தப்படும். எனவே, காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, மாங்காடு, கூட்டுரோடு தெற்கு காமாட்சி நகரில் பகுதி நேர நூலகம் அமைப்பதற்குத் தேவையான நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில், அப்பகுதியில் தற்போது நூலகம் அமைக்க வழிவகையில்லை.

66—

நூலகம்

வினா எண் 62462—திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் மாநகராட்சி, 45-வது வார்டில் பொது நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நூலகம் அமைப்பதற்காக வரையறுக்கப்பட்ட விதிகளின்படி, முதலில் பகுதிநேர நூலகம் மட்டுமே அமைக்க இயலும். பொதுமக்களின் பயன்பாடு மற்றும் உறுப்பினர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பகுதிநேர நூலகமானது, ஊர்ப்புற நூலகம்/கிளை நூலகம்/முழுநேர நூலகமாக தரம் உயர்த்தப்படும். எனவே, கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் மாநகராட்சி, 45-வது வார்டில் பொது நூலகம் அமைப்பதற்குத் தேவையான நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில், அப்பகுதியில் தற்போது நேரடியாக நூலகம் அமைக்க வழிவகையில்லை.

67—

கட்டடம்

வினா எண் 62740—திரு. K. மாரிமுத்து: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், உதயமார்த்தாண்டபுரம் ஊராட்சியில் சேதமடைந்துள்ள கிளை நூலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

2023 அக்டோபர் 11]

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை ஒன்றியம், உதயமார்த்தாண்டபுரம் கிளை நூலகம் 24-9-1997-ல் துவங்கப்பட்டு, 750 சதுரடி பரப்பளவு கொண்ட காலிமனையில் 330 சதுரடி பரப்பளவு கொண்ட தரைத்தள சொந்தக் கட்டடத்தில் நாளிதழ்/பருவஇதழ் பிரிவு, சிறுவர் பிரிவு மற்றும் மகளிர் பிரிவு ஆகிய பிரிவுகளுடன் செயல்பட்டு வருகிறது. தற்போது இந்நூலகக் கட்டடத்தில் பழுது ஏற்பட்டுள்ளதால் வாசகர்கள்/பொதுமக்கள் நலன் கருதி, நூலகத்தினை இலவச, வாடகைக் கட்டடங்களில் மாற்றம் செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், இம்மாவட்ட நூலக ஆணைக் குழுவில் போதுமான நிதி ஆதாரம் இல்லாததால், தற்போது இக்கிளை நூலகத்திற்கு புதிய கட்டடம் கட்டுவதற்கான வழிவகையில்லை.

68—

கட்டடம்

வினா எண் 64843—திரு. ச. சிவகுமார்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், வல்லம் கிராமத்தில் உள்ள நூலகக் கட்டடத்தை புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், வல்லம் கிராமத்தில், வல்லம் கிளை நூலகம் 24-8-1997 முதல் 1,000 சதுரடி பரப்பளவு கொண்ட காலிமனையில் 600 சதுரடி பரப்பளவு கொண்ட தரைத்தள சொந்தக் கட்டடத்தில்,

நாளிதழ்/பருவஇதழ் பிரிவு, நூல் இரவல் பிரிவு மற்றும் குறிப்புதவிப் பிரிவு ஆகிய பிரிவுகளுடன் செயல்பட்டு வருகிறது. மேலும் இம்மாவட்ட நூலக ஆணைக் குழுவிற்கு போதுமான நிதி ஆதாரம் இல்லாததால், தற்போது இக்கிளை நூலகக் கட்டடத்தினைப் புதுப்பிக்க வழிவகையில்லை.

69—

நூலகம்

வினா எண் 64858—திரு. க.சொ.க. கண்ணன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜெயங்கொண்டம் தொகுதி, ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியம், ஆண்டிமடம் ஊராட்சி, சூரக்குழி கிராமத்தில் கிளை நூலகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நூலகம் அமைப்பதற்காக வரையறுக்கப்பட்ட விதிகளின்படி, முதலில் பகுதிநேர நூலகம் மட்டுமே அமைக்க இயலும். பொதுமக்களின் பயன்பாடு மற்றும் உறுப்பினர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பகுதிநேர நூலகமானது, ஊர்ப்புற நூலகம்/கிளை நூலகம்/முழுநேர நூலகமாகத் தரம் உயர்த்தப்படும். எனவே, அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் தொகுதி, ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியம், ஆண்டிமடம் ஊராட்சி, சூரக்குழி கிராமத்தில் நூலகம் அமைப்பதற்குத் தேவையான நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில், அப்பகுதியில் தற்போது கிளை நூலகம் அமைக்க வழிவகையில்லை.

70—

கட்டடம்

வினா எண் 66452—திரு. பூண்டி கே. கலைவாணன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2023 அக்டோபர் 11]

(அ) திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், ஆய்குடி ஊராட்சி வளர்புற நூலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், ஆய்குடி ஊராட்சி, வளர்புற நூலகம் என்ற பெயரில் நூலகம் இல்லை. அங்கு ஆய்குடி ஊர்ப்புற நூலகம் செயல்பட்டு வருகிறது.

திருவாரூர் மாவட்டம், ஆய்குடியில் 21-5-2011-ல் துவங்கப்பட்ட ஊர்ப்புற நூலகம் ஊராட்சி மன்றக் கட்டடத்தில் 300 சதுரடி பரப்பளவு கொண்ட வாடகையில்லா இலவசக் கட்டடத்தில் நாளிதழ்/பருவஇதழ் பிரிவு மற்றும் நூல் இரவல் பிரிவு ஆகிய பிரிவுகளுடன் செயல்பட்டு வருகிறது. இந்நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு காலிமனை கிடைக்கப்பெறாத நிலையில், தற்போது ஆய்குடி ஊர்ப்புற நூலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட வழிவகையில்லை.

71—

நூலகம்

வினா எண் 66490—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி வட்டம், வெள்ளோலை ஊராட்சி, வெள்ளோலை கிராமத்தில் நூலகம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

நூலகம் அமைப்பதற்காக வரையறுக்கப்பட்ட விதிகளின்படி, முதலில் பகுதிநேர நூலகம் மட்டுமே அமைக்க இயலும்.

பொதுமக்களின் பயன்பாடு மற்றும் உறுப்பினர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பகுதிநேர நூலகமானது, ஊர்ப்புற நூலகம்/கிளை நூலகம்/முழுநேர நூலகமாகத் தரம் உயர்த்தப்படும். எனவே, தருமபுரி மாவட்டம், தருமபுரி வட்டம், வெள்ளோலை ஊராட்சி, வெள்ளோலை கிராமத்தில் நூலகம் அமைப்பதற்குத் தேவையான நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில், அப்பகுதியில் தற்போது நேரடியாக நூலகம் அமைக்க வழிவகையில்லை.

72—

நூலகம்

வினா எண் 66492—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி வட்டம், இலக்கியம்பட்டி ஊராட்சி, இலக்கியம்பட்டி கிராமத்தில் நூலகத்திற்குத் தேவையான புத்தகங்கள் வழங்கி பயன்பாட்டிற்கு கொண்டுவர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், தருமபுரி வட்டம், இலக்கியம்பட்டி ஊராட்சி, இலக்கியம்பட்டி கிராமத்தில் உள்ள கிளை நூலகத்தில் 18,928 நூல்கள் இருந்தன. அதன் பின்னர் வாசகர்களின் நலன் கருதி, 21-12-2021 அன்று 954 தமிழ் நூல்களும், 29-1-2022 அன்று 275 ஆங்கில நூல்களும் புதிதாக வழங்கப்பட்டு, மாணவ/மாணவியர்கள், வாசகர்கள் மற்றும் பொதுமக்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

73—

கிளை நூலகம்

வினா எண் 66513—திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2023 அக்டோபர் 11]

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஊராட்சி ஒன்றியம், சாக்கோட்டை ஊராட்சி, சாக்கோட்டையில் கிளை நூலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நூலகம் அமைப்பதற்காக வரையறுக்கப்பட்ட விதிகளின்படி, முதலில் பகுதிநேர நூலகம் மட்டுமே அமைக்க இயலும். தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஊராட்சி ஒன்றியம், சாக்கோட்டை ஊராட்சி, சாக்கோட்டை கிராமத்தில் நூலகம் அமைப்பதற்குத் தேவையான நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில் அப்பகுதியில் தற்போது கிளை நூலகம் அமைக்க வழிவகையில்லை.

74—

கட்டடம்

வினா எண் 68226—திரு. இரா. மாணிக்கம்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை தொகுதி, குளித்தலை நகரம், காவேரி நகரில் பழுதடைந்துள்ள நூலகக் கட்டடத்தை இடித்து புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கரூர் மாவட்டம், குளித்தலை தொகுதி, காவேரி நகரில் அமைந்துள்ள குளித்தலை கிளை நூலகம் 11-7-1984-ல் துவங்கப்பட்டு, 7,848 சதுரடி பரப்பளவு கொண்ட காலிமனையில் 2,128 சதுரடி பரப்பளவு கொண்ட சொந்தக்

[*2023 அக்டோபர் 11*

கட்டடத்தில் நூலகம் செயல்பட்டு வருகிறது. இந்நூலகக் கட்டடத்தில் ஏற்பட்ட பழுதைச் சரிசெய்ய, இம்மாவட்ட நூலக ஆணைக் குழுவில் போதுமான நிதியாதாரம் இல்லை.

மேலும், இந்நூலகத்திற்கு 2018-2019 ஆம் நிதியாண்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி வாயிலாக ரூ.25.00 இலட்சம் மதிப்பில் 1,332 சதுரடி பரப்பளவில் கூடுதல் கட்டடம் கட்டப்பட்டு 7-9-2022 முதல் நூலகம் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. எனவே, தற்போது இந்நூலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட அவசியம் எழவில்லை.

75—

வகுப்பறைகள்

வினா எண் 75390—திரு. கா. அண்ணாதுரை: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பட்டுக்கோட்டை தொகுதி, ஆலத்தூர் ஊராட்சியில் உள்ள அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை தொகுதி, ஆலத்தூர் ஊராட்சியில் உள்ள அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் 194 மாணவியர்கள் கல்வி பயின்று வருகின்றனர். ஆசிரியர்கள் 9 பேர் பணிபுரிந்து வருகின்றனர். 7 வகுப்பறைகள் மற்றும் ஓர் ஆய்வகம் உள்ளது. இப்பள்ளி அருள்மிகு அழகியநாத சுவாமி கோயில் நிலத்தில் உள்ளது. எனவே, கூடுதல் வகுப்பறைகள் கட்ட வழிவகை இல்லை.

2023 அக்டோபர் 11]

76—

தரம் உயர்த்துதல்

வினா எண் 75533—திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மாதவரம் தொகுதி, மண்டலம்-3, வார்டு 24-ல் சூரப்பட்டு, பாரதிதாசன் நகரில் செயல்பட்டு வரும் அரசு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை மாதவரம் தொகுதி, மண்டலம்-3, வார்டு 24-ல் சூரப்பட்டு, பாரதிதாசன் நகரில் செயல்பட்டுவரும் அரசு நடுநிலைப் பள்ளி பூர்த்தி செய்யாததால் இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வழிவகை இல்லை.

77—

தரம் உயர்த்துதல்

வினா எண் 75577—திரு. பி. அய்யப்பன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி ஒன்றியம், அல்லிகுண்டத்தில் உள்ள அரசு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள

[*2023 அக்டோபர் 11*

நிபந்தனைகளை உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி ஒன்றியம், அல்லிகுண்டம் அரசு நடுநிலைப் பள்ளி பூர்த்தி செய்யாததால் இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வழிவகை இல்லை.

78—

நூலகம்

வினா எண் 75605—திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, சிக்கராயபுரம் ஊராட்சியில் நூலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நூலகம் அமைப்பதற்காக வரையறுக்கப்பட்ட விதிகளின்படி முதலில் பகுதிநேர நூலகம் மட்டுமே அமைக்க இயலும். பொது மக்களின் பயன்பாடு மற்றும் உறுப்பினர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பகுதிநேர நூலகமானது ஊர்ப்புற நூலகம்/கிளை நூலகம்/முழுநேர நூலகமாகத் தரம் உயர்த்தப்படும். எனவே, காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, சிக்கராயபுரம் ஊராட்சியில் நூலகம் அமைப்பதற்குத் தேவையான நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில், அப்பகுதியில் தற்போது நேரடியாக நூலகம் அமைக்க வழிவகையில்லை.

79—

தரம் உயர்த்துதல்

வினா எண் 75726—திரு. ரூபி ஆர். மனோகரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2023 அக்டோபர் 11]

(அ) நாங்குநேரி தொகுதி, மறுகால்குறிச்சி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாங்குநேரி தொகுதி, மறுகால்குறிச்சி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் 37 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். இப்பள்ளியிலிருந்து 2.5 கி.மீ. தொலைவிற்குள் புனிதவளனார் நடுநிலைப் பள்ளி, தம்புபரம் மற்றும் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, நாங்குநேரி ஆகியன செயல்பட்டு வருகின்றன. எனவே, மேற்கண்ட பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தும் சூழல் தற்போது எழவில்லை.

80—

நூலகம்

வினா எண் 75757—திரு. மு. பாபு: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செய்யூர் தொகுதி, சித்தாமூர் ஊராட்சி ஒன்றியம், கயநல்லூர் ஊராட்சியில் நூலகம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் தொகுதி, சித்தாமூர் ஊராட்சி ஒன்றியம், கயநல்லூர் கிராமத்தில் பொது நூலக இயக்ககத்தின்கீழ் நூலகம் ஏதும் செயல்படவில்லை. மேலும், கயநல்லூர் ஊராட்சியில் புதியதாக நூலகம் அமைப்பதற்குத் தேவையான நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில், அப்பகுதியில் தற்போது நூலகம் கட்டுவதற்கு வழிவகையில்லை.

81—

கட்டடம்

வினா எண் 75897—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளச்சல் தொகுதி, கொடுப்பைக்குழி அரசு மேல்நிலைப் பள்ளியில் கூடுதல் வகுப்பறைக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் தொகுதி, கொடுப்பைக்குழி அரசு மேல்நிலைப் பள்ளியில் 186 மாணவ/மாணவியர்கள் கல்வி பயின்று வருகின்றனர். 13 ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகின்றனர். 10 வகுப்பறைகள் மற்றும் 4 ஆய்வகங்கள் உள்ளன. இப்பள்ளியில் மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப போதுமான வகுப்பறைகள் உள்ளன.

82—

கட்டடம்

வினா எண் 75898—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளச்சல் தொகுதி, கட்டியப்பட்டணம் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் இரண்டு வகுப்பறைக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் தொகுதி கட்டியப்பட்டணம் அரசு மகளிர் மேல்நிலைப்

2023 அக்டோபர் 11]

பள்ளியில் 647 மாணவியர்கள் கல்வி பயின்று வருகின்றனர். 16 ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர். இப்பள்ளியில் 25 வகுப்பறைகள் மற்றும் 4 ஆய்வகங்கள் உள்ளன. இப்பள்ளிக்கு மாணவியர்களின் எண்ணிக்கைக்கேற்ப போதுமான வகுப்பறை வசதி உள்ளது.

83—

தரம் உயர்த்துதல்

வினா எண் 79002—திரு. தி. ராமச்சந்திரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் வட்டம், அரிமளம் ஊராட்சி ஒன்றியம், இரும்பாநாடு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் வட்டம், அரிமளம் ஊராட்சி ஒன்றியம், இரும்பாநாடு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி பூர்த்தி செய்யாததால் இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வழிவகை இல்லை.

84—

தரம் உயர்த்துதல்

வினா எண் 79003—திரு. தி. ராமச்சந்திரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அறந்தாங்கி தொகுதி, அறந்தாங்கி ஒன்றியம், மேல்மங்கலம் ஊராட்சி, மேல்மங்கலத்தில் உள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை அறந்தாங்கி தொகுதி அறந்தாங்கி ஒன்றியம், மேல்மங்கலம் ஊராட்சி, மேல்மங்கலத்தில் உள்ள நடுநிலைப் பள்ளி பூர்த்தி செய்யாததால் இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வழிவகை இல்லை.

85—

கட்டடம்

வினா எண் 79626—திரு. வி.பி. நாகைமாலி: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கீழ்வேளூர் தொகுதி, ஒரத்தூர் ஊராட்சி, ஒரத்தூரில் நூலகக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் தொகுதி, ஒரத்தூர் ஊராட்சி, ஒரத்தூரில் 15-6-1997-ல் துவங்கப்பட்ட ஊர்ப்புற நூலகம் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் கட்டப்பட்டுள்ள கட்டடத்தில் 375 சதுரடி பரப்பளவு கொண்ட வாடகையில்லா இலவசக் கட்டடத்தில் நூலகம் செயல்பட்டு வருகிறது. இந்நூலகத்திற்கு காலிமனை கிடைக்கப்பெறாத நிலையில், தற்போது நூலகக் கட்டடம் கட்ட வழிவகையில்லை.

2023 அக்டோபர் 11]

86—

தொடக்கப் பள்ளி

வினா எண் 79640—திரு. மு. பாபு: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியம், லட்டூர் கிராமத்திற்கு புதியதாகத் தொடக்கப் பள்ளி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியம், லட்டூர் கிராமத்தில் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி செயல்பட்டு வருகிறது. இப்பள்ளிக்கு 1 கி.மீ. தொலைவில் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி, கோட்டைமேடு மற்றும் 2 கி.மீ. தொலைவில் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி, பைராசிமடம் செயல்பட்டு வருவதால் மேற்காண் கிராமத்தில் புதிய தொடக்கப் பள்ளி துவங்க வேண்டிய நிலை எழவில்லை.

87—

தரம் உயர்த்துதல்

வினா எண் 80574—திரு. ஆ. கிருஷ்ணசாமி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பூந்தமல்லி தொகுதி, பூந்தமல்லி ஒன்றியம், ராஜாங்குப்பம் தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

பூந்தமல்லி தொகுதி, பூந்தமல்லி ஒன்றியம், ராஜாங்குப்பம் தொடக்கப் பள்ளிக்கு 3 கி.மீ. சுற்றளவிற்குள் அரசு உயர்நிலைப்

பள்ளி, கொட்டாமேடு மற்றும் அரசு மேல்நிலைப் பள்ளி, திருநின்றவூர் ஆகியவை செயல்பட்டு வருகின்றன. எனவே, மேற்கண்ட பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தும் சூழல் தற்போது எழவில்லை.

88—

தரம் உயர்த்துதல்

வினா எண் 80575—திரு. ஆ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூந்தமல்லி தொகுதி, பூந்தமல்லி ஒன்றியம், கண்ணம்பாளையம் ஊராட்சியில் உள்ள தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

பூந்தமல்லி தொகுதி, பூந்தமல்லி ஒன்றியம், கண்ணம்பாளையம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு 2 கி.மீ. தொலைவில் ஆவடி காமராஜர் நகர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, 2.5 கி.மீ. தொலைவில் ஆவடி காமராஜர் நகர் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி மற்றும் ஆவடி காமராஜர் நகர் நடுநிலைப் பள்ளி ஆகியவை செயல்பட்டு வருகின்றன. எனவே மேற்கண்ட தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தும் சூழல் தற்போது எழவில்லை.

89—

மேல்நிலைப் பள்ளி

வினா எண் 82192—திரு. மா. சின்னதுரை: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கந்தர்வகோட்டை தொகுதி, அண்டக்குளம் ஊராட்சி, அரசு மேல்நிலைப் பள்ளியை ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப் பள்ளிகளாகப் பிரிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 அக்டோபர் 11]

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது உள்ள நெறிமுறைகளின்படி, இருபாலர் மேல்நிலைப் பள்ளியிலிருந்து முதலில் மகளிர் உயர்நிலைப் பள்ளியாக மட்டுமே பிரிப்பதற்கு வழிவகை உள்ளது. அரசினர் இருபாலர் மேல்நிலைப் பள்ளியைப் பிரித்து நேரடியாக தனியாக பெண்கள் மேல்நிலைப் பள்ளி மற்றும் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி என அமைக்க வழிவகை இல்லை. எனவே, கந்தர்வகோட்டை தொகுதி, அண்டக்குளம் ஊராட்சி, அரசு மேல்நிலைப் பள்ளியை ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப் பள்ளிகளாகப் பிரிக்க இயலாத நிலை உள்ளது.

90—

தரம் உயர்த்துதல்

வினா எண் 82631—திரு. செ. கிருஷ்ணமுரளி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கடையநல்லூர் தொகுதி, சொக்கம்பட்டி, அரசு உதவிபெறும் தொடக்கப் பள்ளியை அரசு நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி மாவட்டம், கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சொக்கம்பட்டி கிராமத்தில் இந்து தொடக்கப் பள்ளி, இந்து வலையர் தொடக்கப் பள்ளி, ஆர். சி. தொடக்கப் பள்ளி மற்றும் அரிசன் தொடக்கப் பள்ளி என நான்கு பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. இக்கிராமத்திற்கு 1 கி.மீ. தொலைவில் திரிகூடபுரம் இந்து நடுநிலைப் பள்ளி செயல்பட்டு வருகிறது. எனவே, சொக்கம்பட்டி கிராமத்திற்கு அருகாமையில்

[*2023 அக்டோபர் 11*

1 கி.மீ. தொலைவில் இந்து நடுநிலைப்பள்ளி திரிகூடபுரம் செயல்பட்டு வருவதால், சொக்கம்பட்டியில் செயல்பட்டு வரும் மேற்படி நிதியுதவி பெறும் துவக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டிய அவசியம் எழவில்லை.

91—

அனல் மின் நிலையம்

வினா எண் 51036—திரு. S. சதாசிவம்: *மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மேட்டூர் அனல் மின் நிலையத்திலிருந்து வெளியேறும் சாம்பல் புகையைக் கட்டுப்படுத்த புதிய நவீன உபகரணங்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர்:

- *மேட்டூர் அனல் மின் நிலையம் (*Plant-I*) 1987 ஆம் ஆண்டு முதல் 840 மெகா வாட் (4 அலகுகள் ஒவ்வொன்றும் 210 மெகா வாட்) மின்சாரம் உற்பத்தி செய்யும் திறனுடன் செயல்பட்டு வருகிறது. மேலும் 600 மெகா வாட் உற்பத்தி திறன் கொண்ட மேட்டூர் அனல் மின் நிலையம் (*Plant-II*) 2013 ஆம் ஆண்டு முதல் இயக்கத்தில் உள்ளது.*

- *மேட்டூர் அனல்மின் நிலையம் பிளாண்ட் 1 தொழிற்சாலைக்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் இசைவாணையானது 31-3-2022 வரைக்கும், மேட்டூர் அனல் மின் நிலையம் பிளாண்ட் 2 தொழிற்சாலைக்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் இசைவாணையானது 31-3-2022 வரைக்கும் செல்லத்தக்கதாக புதுப்பிக்கப்பட்டுள்ளது. மேட்டூர் அனல் மின் நிலையம் I-லிருந்து கனிமம் அகற்றும் நீர் சுத்திகரிப்பு நிலையம், கொதிகலன் வடிநீர், குளிருட்டும் கோபுரம் ஆகிய செயல்பாடுகளிலிருந்து தொழிற்சாலைக் கழிவுநீர் உற்பத்தியாகிறது. அவ்வாறு*

2023 அக்டோபர் 11]

உற்பத்தியாகும் கழிவுநீர் சுத்திகரிக்கப்பட்ட பின்பு சாம்பல் தேக்கி வைக்கும் குளங்களிலிருந்து வெளியேறும் நீருடன் சேர்த்து மேட்டூர் அணை உபரி நீர் கால்வாயில் விடப்படுகிறது. பிளாண்ட்-II-ல் உற்பத்தியாகும் தொழிற்சாலை கழிவுநீர் சுத்திகரிக்கப்பட்ட பின்பு காடு வளர்ப்பு மற்றும் தீ பாதுகாப்பு தேவைக்கும் பயன்படுத்தப்படுகிறது.

- அனல் மின் நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள அனைத்து கொதிகலன்களின் புகைபோக்கியில் இருந்து வெளியேறும் சாம்பலின் அளவைக் கட்டுக்குள் வைக்க எலக்ட்ரோ ஸ்டேடிக் பிரிசிபிடேட்டர் (Electro Static Precipitator) என்ற காற்று மாசு தடுப்பு சாதனம் அமைக்கப்பட்டுள்ளது. அனல் மின் நிலைய புகை போக்கிகளிலிருந்து வெளியேறும் சாம்பல் புகை அளவானது தொடர் காற்று மாசு தர கண்காணிப்பு அமைப்புகள்மூலம் கண்காணிக்கப்படுகிறது. இந்த கண்காணிப்பு அமைப்புகள் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் நிறுவப்பெற்ற கேர் ஏர் சென்டர் என்ற இணையதளத்தில் இணைக்கப்பட்டுள்ளன. கொதிகலன்களிலிருந்து வெளியேறும் உலர் சாம்பல் சிமென்ட் தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கு அவ்வப்போது விற்பனை செய்யப்படுகிறது. கொதிகலனில் அடுப்பு பகுதிகளிலிருந்து வெளிப்படும் சாம்பல், செங்கல் உற்பத்தியாளர்களுக்கு சாம்பல் குளம் (Ash Dyke) மூலம் வடிகட்டிய பிறகு அவ்வப்போது விற்பனை செய்யப்படுகிறது.

- மேட்டூர் அனல் மின் நிலையம்-பிளான்ட்–I-ல் அமைந்துள்ள அலகு IV-ல் பொருத்தப்பட்டுள்ள புகை போக்கியிலிருந்து வெளியேறும் சாம்பல் புகையை கட்டுப்படுத்த தொழிற்சாலையில் அமைக்கப்பட்டுள்ள எலக்ட்ரோ ஸ்டேடிக் பிரிசிபிடேட்டரை (Electro Static Precipitator) ரூ.48.75 கோடி மதிப்பீட்டில் புதுப்பித்து நவீனமயமாக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், மேட்டூர் அனல் மின் நிலையம் பிளான்ட்-I-ல் அமைந்துள்ள I, II, III அலகுகளில் பொருத்தப்பட்டுள்ள புகை போக்கிகளில் இருந்து வெளியேறும் சாம்பல் புகையைக் கட்டுப்படுத்த

புதிய நவீன உபகரணங்கள் பொருத்துவதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளதாகவும், அந்த புதிய நவீன உபகரணங்கள் டிசம்பர் 2024-க்குள் அமைக்கப்பட்டுவிடும் எனவும் தொழிற்சாலை நிர்வாகத்தினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

- மேட்டூர் அனல் மின் நிலையம் பிளாண்ட்-II-ல் (Plant-II) பொருத்தப்பட்டுள்ள புகைபோக்கியிலிருந்து வெளியேறும் சாம்பல் புகையைக் கட்டுப்படுத்த புதிய தொழில்நுட்பங்களுடன்கூடிய எலக்ட்ரோ ஸ்டேடிக் பிரிசிபிடேட்டர் (Electro Static Precipitator) ஏற்கெனவே நிறுவப்பட்டுள்ளது. அதைப் புதுப்பித்து நவீனப்படுத்தும் பணிகள் 27-6-2022 அன்று தொடங்கப்பட்டு நடைபெற்றுக் கொண்டுள்ளதாகவும், மேலும் எதிர்வரும் 24-10-2022-க்குள் பணிகள் முழுவதும் முடிவடைந்து புகைபோக்கியிலிருந்து வெளியேறும் சாம்பல் புகை முழுவதும் கட்டுப்படுத்தப்படும் எனவும் தொழிற்சாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

- மேலும், உலர் சாம்பல் வெளியேற்றும் அமைப்பு Pressurized Dense Phase Pneumatic Fly Ash Conveying System (PDFACS) எனும் புதிய நவீன தொழில்நுட்பம் கூடுதலாக அமைப்பதன்மூலம் உலர்சாம்பல் முழுவதும் சைலோ (Silo)-ல் சேகரிக்கப்பட்டு 100 விழுக்காடு உலர் சாம்பலும் பயன்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

- மேலே குறிப்பிடப்பட்டுள்ள PDFACS என்னும் அமைப்பை அமைப்பதற்கான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, அந்த ஒப்பந்தப்புள்ளி 12-7-2022 அன்று திறக்கப்பட்டு, விலைப்பட்டியல் திறப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விலைப்பட்டியல் திறக்கப்பெற்றபின், மேற்கண்ட பணிகள் தொடங்குவதற்கான ஆணைகள் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

- மேலும், கொள்முதல் ஆணை வழங்கப்பட்டபின் PDFACS அமைப்பின் வேலைகள் விரைவாக தொடங்கப்பட்டு எதிர்வரும் ஜூன் 2023-க்குள் பணிகள் முடிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2023 அக்டோபர் 11]

92—

மாசு கட்டுப்படுத்துதல்

வினா எண் 52508—திரு. ஆ. அருண்மொழிதேவன்: *மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

புவனகிரி தொகுதி, வடக்கு வெள்ளூர் ஊராட்சி, வேப்பங்குறிச்சியில் உள்ள நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்திற்குச் சொந்தமான நிலக்கரி சேமிப்புக் கிடங்கினால் ஏற்படும் மாசுப்பாட்டினைக் கட்டுப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர்:

திருவாளர்கள் என்.எல்.சி இந்தியா நிறுவனத்தில் செயல்படும் பழுப்பு நிலக்கரி (லிக்னைட்) சுரங்கங்களில் இருந்து வெட்டி எடுக்கப்படும் பழுப்பு நிலக்கரியானது சுரங்கம்-II-ல் சேமித்து வைக்கப்பட்டு தேவைப்படும் பழுப்பு நிலக்கரி மின்சார உற்பத்திக்காக மின் நிலையங்களுக்கு அனுப்பப்படுகிறது.

இங்கு அமைந்துள்ள லிக்னைட் சேமிப்பு கிடங்கைச் சுற்றிலும் அழுத்தமேற்றப்பட்ட நீர் தெளிப்பான்கள் பொருத்தப்பட்டு நீர்தாரைகள் விடும் முறை செயல்பாட்டில் உள்ளது. இந்தக் கிடங்கைச் சுற்றியுள்ள சாலைகளில் நீர் தெளிக்கும் லாரிகளைக் கொண்டு நீர் தெளிக்கப்பட்டு நிலக்கரி தூசு பரவாமல் தடுக்கப்பட்டு வருகிறது.

மேலும், இந்தக் கிடங்கைச் சுற்றிலும் 3 மீட்டர் உயரத்திற்கு சுற்றுச் சுவர் எழுப்பப்பட்டு நிலக்கரி மாசு வெளியில் பரவாவண்ணம் தடுக்கப்பட்டுள்ளது.

மேலும், சுற்றுச்சூழலைப் பாதுகாக்க இக்கிடங்கைச் சுற்றிலும் 10,400 மரக்கன்றுகள் நடப்பட்டு பராமரிக்கப்பட்டுள்ளது.

மேலும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் இந்நிறுவனத்தின் செயல்பாடுகளைத் தொடர்ந்து கண்காணித்து வருகிறது.

93—

மாசு கட்டுப்படுத்துதல்

வினா எண் 52509—திரு. ஆ. அருண்மொழிதேவன்: மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மாவட்டம், வெள்ளாற்றில் ஏற்படும் நீர் மாசுப்பாட்டினைக் கட்டுப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், வெள்ளாற்றின் அருகில் அதிக மாசு ஏற்படுத்தும் தொழிற்சாலைகள் எதுவும் இயங்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியமும் வெள்ளாற்றில் தொழிற்சாலை கழிவுநீர் வெளியேற்றப்படாமல் இருப்பதை உறுதி செய்ய தொடர்ந்து கண்காணித்து வருகிறது.

94—

மருத்துவக் காப்பீடு

வினா எண் 37838—திரு. க. செல்வராஜ்: மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) டாஸ்மாக் பணியாளர்களுக்கு ESI மருத்துவ காப்பீடு திட்டத்தை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாநில அரசு காப்பீட்டாளர்கள் மற்றும் அவர்களை சார்ந்தவர்களுக்கு மருத்துவ சேவையை மட்டுமே வழங்கி வருகிறது. கட்டடம் கட்டுதல், விரிவாக்கம், பராமரித்தல் மற்றும் அனைத்து முக்கிய கொள்கை முடிவுகளும் தொழிலாளர்

2023 அக்டோபர் 11]

அரசு ஈட்டுறுதி கழகத்தைச் சார்ந்ததாகும். டாஸ்மாக் பணியாளர்கள் தொடக்கத்தில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி சட்டத்தின்கீழ் 29-11-2003 வரை காப்பீடு செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டனர். பின்னர், தமிழக அரசு டாஸ்மாக் நிறுவனத்திற்கு இன்றுவரை தொ.அ.ஈ. சட்டத்தில் இருந்து விலக்கு அளித்து அரசாணை பிறப்பித்துள்ளது. எனவே, அதன் பணியாளர்கள் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டத்தின்கீழ் இல்லை.

ESI மருத்துவக் காப்பீடு திட்டத்தினை அனைத்து மாவட்டங்களிலும் ESI நிறுவனத்தால் செயல்படுத்தப்படாத காரணத்தாலும், டாஸ்மாக் சில்லறை விற்பனைக் கடைப் பணியாளர்களுக்கு டாஸ்மாக் நிறுவனத்தால் செயல்படுத்தப்பட்டுவரும் மருத்துவ சிகிச்சை உதவிகள் மற்றும் இதர திட்டங்களினால் கிடைக்கப் பெறும் பலன்கள் மிகவும் பயனுள்ளதாக இருக்கிற காரணத்தினாலும், ESI திட்டத்திலிருந்து டாஸ்மாக் நிறுவனத்திற்கு 2003-ம் ஆண்டு முதல் தொடர்ந்து தமிழக அரசு விலக்களித்து வருகிறது.

டாஸ்மாக் கடைகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு மருத்துவச் செலவுத் தொகையாக மருத்துவ நிதி மற்றும் விபத்து/காயம்/ஊனம் நிவாரண நிதி திட்டத்தின்கீழ் மருத்துவச் செலவு ரூ.5.00 இலட்சம் தொகுப்பாக நான்கு ஆண்டு காலத்திற்கு அரசால் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளிலும் பிற மருத்துவமனைகளிலும் பெறப்படும் சிகிச்சைக்கான மருத்துவச் செலவினை உயர்த்தி பெற்றுக் கொள்ளுமாறு நடைமுறைப்படுத்தி உள்ளது. உயர்த்தப்பட்ட மருத்துவச் செலவிற்கான தொகை பெற பணியாளர்கள் தங்களது ஊதியத்திலிருந்து ஒவ்வொரு மாதமும் பங்களிப்பை ரூ.200/– என 1-7-2021 முதல் உயர்த்தி வழங்க சம்மதித்துள்ளனர். எனவே, டாஸ்மாக் பணியாளர்களுக்கு ESI மருத்துவக் காப்பீடு திட்டத்தை ஏற்படுத்த வேண்டிய அவசியம் எழவில்லை.

95—

தொழிற்பயிற்சி

வினா எண் 61439—திரு. K. மாரிமுத்து: *மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை ஒன்றியம், தில்லைவிளாகத்தில் அரசு தொழிற்பயிற்சி நிறுவனம் துவங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை ஒன்றியம், தில்லைவிளாகம் அமைந்துள்ள திருவாரூர் மாவட்டத்தில் ஏற்கெனவே இரண்டு அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் 11 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் ஒப்பளிக்கப்பட்ட 1,452 இருக்கைகளுடன் (2021-ன்படி) செயல்பட்டு வருகின்றன. இத்தொழிற்பயிற்சி நிலையங்களில் ஒப்பளிக்கப்பட்ட 1,452 இருக்கைகளில், 43% இருக்கைகள் மட்டுமே நிரப்பப்பட்டுள்ளன. இந்நிலையில், இப்பகுதியில் உள்ள மாணவர்களுக்கு தற்போது செயல்பட்டுவரும் தொழிற்பயிற்சி நிலையங்களில் ஒப்பளிக்கப்பட்டுள்ள இருக்கைகளே போதுமானதாக உள்ளதால் திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை ஒன்றியம், தில்லைவிளாகத்தில் புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க தற்போது அவசியம் எழவில்லை.

96—

தொழிற்பயிற்சி

வினா எண் 65293—திரு. ரூபி ஆர். மனோகரன்: மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, நாங்குநேரியில் பெண்களுக்கு தொழிற்பயிற்சி அளிக்க தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாங்குநேரி தொகுதி அமைந்துள்ள திருநெல்வேலி மாவட்டத்தில் மூன்று அரசு தொழிற்பயிற்சி

2023 அக்டோபர் 11]

*நிலையங்கள் ஒப்பளிக்கப்பட்ட மொத்தம் 820 இருக்கைகளுடன், (2021-ன்படி) செயல்பட்டு வருகின்றன. அவற்றுள், இந்திய அரசு தொழிலாளர் துறை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி இயக்குநரகத்தின் (*Directorate General of Employment and Training, Delhi*) அறிவுரையின்படி (*DGE&T-*19(12)/2002*-CD, dated *15-11-2002*), ஒவ்வொரு பிரிவிலும் பெண்களுக்கான 30% கிடைமட்ட இட ஒதுக்கீட்டில் ஒதுக்கப்பட்டுள்ள 245 இருக்கைகளில் 18 இருக்கைகள் மட்டுமே நிரப்பப்பட்டுள்ளன. இந்நிலையில், இப்பகுதியில் உள்ள பெண்களுக்கு தற்போது இயங்கிவரும் தொழிற்பயிற்சி நிலையங்களில் ஒப்பளிக்கப்பட்டுள்ள இருக்கைகளே போதுமானதாக உள்ளதால், திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, நாங்குநேரியில் பெண்களுக்கென தனியே அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க தற்போது அவசியம் எழவில்லை.*

97—

சிப்காட் தொழிற்பேட்டை

வினா எண் 54820—திரு. க. சுந்தர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

உத்திரமேரூர் தொகுதி, திருப்புலிவனம் பகுதியில் சிப்காட் தொழிற்பேட்டை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்:

உத்திரமேரூர் தொகுதி, திருப்புலிவனம் பகுதியில் தனியாக சிப்காட் தொழிற்பூங்கா அமைக்கும் உத்தேசம் தற்போது அரசிடம் இல்லை.

98—

உணவுத் தொகை

வினா எண் 1956—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழகத்தில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதியில் உள்ள மாணவ, மாணவியருக்கு உணவிற்காக

[*2023 அக்டோபர் 11*

வழங்கப்படும் தொகையை உயர்த்தி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

விடை—

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) *அரசாணை (நிலை) எண் 130, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 22-12-2020-ல் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகள் மற்றும் உண்டி உறைவிடப் பள்ளிகளில் தங்கி, கல்வி பயிலும் பள்ளி விடுதி மாணாக்கர்களுக்கான உணவுத் தொகை ரூ.900/-லிருந்து ரூ.1,000/- ஆகவும், கல்லூரி விடுதி மாணாக்கர்களுக்கான உணவுத் தொகை ரூ.1000/-லிருந்து ரூ.1,100/- ஆகவும் உயர்த்தி ஜனவரி 2021 ஆம் ஆண்டு முதல் வழங்கிட ஆணை வெளியிடப்பட்டுள்ளது.*

99—

ஆணையம்

வினா எண் 3207—திருமதி வானதி சீனிவாசன்: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழ்நாட்டில் பட்டியல் இனத்தவருக்கு ஆணையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மாநில ஆணையச் சட்டம், 2021 (தமிழ்நாடு சட்டம் 17/2021) இயற்றப்பட்டு, அரசாணை (நிலை) எண் 71, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 13-10-2021-ன்படி, 13-10-2021 முதல் இச்சட்டம் அமலுக்கு வந்துள்ளது. மேலும், அரசாணை (நிலை)

2023 அக்டோபர் 11] [*2023 அக்டோபர் 11*

எண் 73, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 15-10-2021-ல் தமிழ்நாடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மாநில ஆணையத்திற்கான தலைவர், துணைத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

100—

சமுதாயக் கூடம்

வினா எண் 7570—திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், சூரக்குப்பம் ஊராட்சி ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் சமுதாயக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆதி திராவிடர் மக்களின் எண்ணிக்கை, சமுதாயக் கூடம் கட்ட கிடைக்கும் இடம் மற்றும் தேவையான நிதி ஒதுக்கீடு ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு சமுதாயக் கூடங்கள் படிப்படியாக ஆண்டுதோறும் கட்டப்பட்டு வருகின்றன. பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், சூரக்குப்பம் ஊராட்சி, ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் புதிய சமுதாயக் கூடம் கட்டுவது குறித்து ஆதி திராவிட மக்கள்தொகை, அருகிலுள்ள சமுதாயக் கூடங்களின் எண்ணிக்கை, போதுமான இடம் மற்றும் முன்னுரிமையின் அடிப்படையில் பரிசீலனை செய்யப்படும்.

Copies can be had from the Assistant Director, Government Publication Depot, 110, Anna Salai, Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Commissioner of Stationery and Printing, Chennai-600 002.